215251

to

215263

215251

[illegible]

26-10.1938

அ 23

ல 39

215251

537

215251

OFFICE OF THE ... 28 OCT 1933 MADRAS

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 23 — கும்பகோணம் கலி5040 பகுதான்ய௵ புரட்டாசி௴ 20௳ 1938௵ அக்டோபர்௴ 6௳ — வ 39

ஆர்யதர்மம்.

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு. 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

காந்தியின் கோட்டையில் தீண்டாமை,

பள்ளிக்கூடம் மூடப்பட்டது.

காந்தியின் கோட்டையாகக் கருதப்படும் கெய்ராஜில்லா, போர்ஸாத் தாலூகாவிலுள்ள பன்ரோல் கிராமத்தில் ஜில்லாபோர்டு பள்ளிக்கூடத்தில் தீண்டாத ஜாதி மாணவர்களையும் சேர்த்ததை ஜாதி ஹிந்துக்கள் ஆக்ஷேபித்துத் தடுத்தனர். ஆசாரத்திருத்த வாதிகளும், காந்தி சிஷ்யர்களும் எவ்வளவோ பாடுபட்டும் ஜாதி ஹிந்துக்கள் தீண்டாதாருடன் சேர்ந்து படிக்க இணங்கவில்லை. இதனால் பள்ளிக்கூடம் மூடப்பட்டது

இம்மாதிரி இன்னும் சிலவிடங்களிலும் நடந்ததாம்.

பர்மாவில் இந்தியர் துன்பம்

அதிகரிக்கரிக்கிறது.

பர்மாவிலுள்ள இந்தியர்களிடம் பர்மியர்களுக்கு துவேஷம் முற்றி விஷமம் அதிகரிக்கிறது. ஸமீபத்தில் நடந்த கலகத்தால் இந்தியர்களின் சொத்துக்களுக்கும், உயிருக்கும் ஏராளமான சேதம் விளைவித்தார்கள். இதனால் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் பர்மாவை விட்டு ஓடிவந்து விட்டனர்.

இப்போது அங்கு இந்தியர்களின் கடைகளில் ஸாமான் வாங்கக்கூடாதென்று பர்மியர்கள் மறியல் செய்வதாயும், எந்த ஸாமான்களையும் பர்மியர் கடையிலேயே வாங்கவேண்டுமென்று கட்டுப்பாடு செய்வதாயும் தெரிகிறது.

காங்கிரஸ் தலைவர்களுக்கு உபசாரம்.

முனிஸிபாலிடி பணம் செலவிடக்கூடாது.

சென்னை கவர்ன்மெண்டார் வெளியிட்டுள்ள ஓர் உத்தரவில், முனிஸிபாலிடிகளோ, ஜில்லா போர்டுகளோ சொந்தச்செலவிலிருந்து பணம் கொடுத்து எந்தத் தலைவருக்கும் உபசாரம் நடத்தக்கூடாதென்று சொல்லியிருக்கிறார்கள்-

காரே, ஸி. ஆர். தகராறு.

மத்யமாகாண பிரதம மந்திரியாயிருந்த டாக்டர் காரே, ஸ்ரீமான் ஸி ராஜகோபாலாசாரியாரைப் பற்றி சில தோஷங்களை வெளியிட்டார். ஸ்ரீமான் ஆசாரியார், காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாக நடப்பதாயும், சென்னை கவர்னருடன் ரஹஸ்யமாக சில ஸங்கேதங்களை அவர் செய்துகொண்டிருப்பதாயும், கவர்னர் இஷ்டப்படியே அவர் ஆடிவருவதாயும் காரே சொன்னார். இவைகளை மறுத்து "சுத்தப்பொய்" என்று ஸ்ரீமான். ஸி. ஆர். அகில இந்திய கமிட்டியில் பேசினார்.

ஆயினும் மீண்டும் டாக்டர் காரே தாம் சொல்லியவை உண்மை யென்று ஸ்தாபித்து ஓர் பதில் வெளியிட்டிருக்கிறார். சென்னை ஸர்க்கார், இந்திய கவர்ன்மெண்டுக்கு எழுதியுள்ள யாதாஸ்தைப் பார்த்தால் தமது கூற்றுஉண்மையாகுமென்றும், ஸி. ஆர். தெய்வத்தைக்கூட ஏமாற்ற முடியாதென்றும், இத்தகையவர் காந்திஜியின் பரம சிஷ்யர்களாக இருப்பது ஆச்சர்யமென்றும் டாக்டர் காரே கண்டிக்கிறார்.

காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறல்.

சென்னையில் தகராறு.

காங்கிரஸ் சார்பாக சட்ட ஸபையிலும், கார்ப்பரேஷனிலும் மெம்பராயிருந்து வரும் தொழிலாளர் பிரதிநிதி ஸ்ரீ செல்வபதி செட்டியார் என்பவர், இப்போது தம்மை கார்ப்பரேஷனுக்கு ஒரு அபேக்ஷகராக நியமிக்காத காரணத்தால் காங்கிரஸ் ஆக்ஞையை மீறி நியமனச்சீட்டு தாகல் செய்து விட்டார். இது விஷயமாக தகாராறு நடக்கிறது.

தேர் நிக்கிரையாயிற்று.

திருச்சேரை ஸ்ரீ ஸாரத நாதஸ்வாமி கோவில் திருத்தேர், தீ பிடித்து எரிந்து போய்விட்டதாகத் தெரிகிறது. இது விஷமிகளுடைய செய்கையாயிருக்குமென நினைக்கப்படுகிறது. தேவஸ்தானக்கமிட்டி தலைவரும், போலீஸாரும் விசாரணை செய்கிறார்களாம்.

கடன் நிவாரணச் சட்டத்தால் வந்த நன்மையா?

மன்னார்குடி தாலூகாவில் ஒருவர் தமக்கு வரவேண்டிய தொகைக்காக டிக்ரி பெற்றிருந்தும், அதை வஸூலிக்க முடியவில்லையாம். கடன் காரர்களுடைய துஷ்டத்தனமே இதற்கு காரணம்.

இதனால் அவர் தமது டிக்ரியை சென்னை பிரதம மந்திரி பெயருக்கு மாற்றி மேடோவர் செய்து விட்டாராம். கடன் சட்டமே இந்த நிலைமைக்குக் காரணமென வெளிப்படுத்துவது அவர் உத்தேசம் போலும்?

காங்கிரஸ்காரர் தீ வைத்தார்?

பஸ்தியில் ஜமீந்தார் வீடு நாசம்.

ஐக்ய மாகாணத்திலுள்ள பஸ்தியில் ஜமீன்தார்களுக்கு விரோதமாக காங்கிரஸ் வேலை அதிகரிக்கிறது. அங்கு ஒரு ஜமீன்தார் வீட்டை கிருஷிகர்கள் கொளுத்தி விட்டார்கள். காங்கிரஸ் கமிட்டி உபதலைவரும் இதில் ஸம்பந்தப்பட்டிருப்பதாகக் கைது செய்யப்பட்டார்.

மந்திரிகளிடம் விரோதம்.

திருவண்ணாமலை முனிஸிபாலிடியில் புதிதாக ஏற்பட்டுள்ள சில கட்டிடங்களைத் திறந்து வைக்க சென்னை மந்திரிகளில் ஒருவரை கூப்பிடவேண்டுமென்று ஓர் தீர்மானம் வந்தது ஆனால் பலர் அதை எதிர்த்தார்கள். மந்திரிகளை கூப்பிடக்கூடாதென்று முடிவில் தீர்மானிக்கப்பட்டது.

பூஜகர் கைது.

டில்லி சிவன் கோவில் ஸத்யாக்ரஹ விஷயமாக ஒரு துஷ்டனால் குத்தப்பட்ட கோவில் பூஜகர் குணமடைந்து விட்டார். அவர் மீண்டும் உத்தரவை மீறி பூஜை செய்யப் போனார். அதனால் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T.B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரிதெரு, கும்பகோணம்.

தேசிகன் தேன் மொழிகள்.

விவாஹச் சீர்திருத்தம்.

3. சரியான திருத்தம்.

மஹாஸ்வாமிகள்: பர்த்தாக்களை சாகாமல் இருக்கச்சொல்லமுடியுமா என்று கேட்டீர்களே. கல்யாணம் செய்துகொள்ள ஸம்மதிக்கிற புருஷர்களின்எண்ணிக்கையை ஜாஸ்திப்படுத்துவது மாத்திரம் ஸாத்தியமாகுமா?

பிரபு: ஆகாது.

ம: உங்கள் சட்டத்தினால் கல்யாணம் செய்துகொள்ள ஸித்தமாயிருக்கிற புமான்களின் எண்ணிக்கையை ஜாஸ்திப்படுத்த முடியாததினால் அவ்வெண்ணிக்கை முன்போல் அப்படியே இருக்கும்.

பி: ஆம்.

ம: அவ்வெண்ணிக்கையில் அகப்பட்ட சிலர்களை வயதான விதவைகளை விவாஹம் செய்துகொள்ளும்படிக்கும், அநேகம் பெயர்களை பாலிகா விதவைகளை விவாஹம் செய்துகொள்ளும் படிக்கும், உங்கள் சீர்திருத்தக்காரர் தூண்டுகிறாரல்லவா?

பி: ஆம்.

ம: இவர்கள் போக மிதமுள்ள புமான்கள் தான் கன்யைகளை விவாஹம் செய்துகொள்ள அகப்படுவார்கள்.

பி: ஆம்.

ம: இவ்விதமாகக் கன்யைகளை விவாஹம் செய்துகொள்ளக்கூடிய புமான்களின் எண்ணிக்கை குறையுமல்லவா?

பி: ஆம்.

ம: கன்யைகளின் எண்ணிக்கை குறைந்திராது.

பி: அதெப்படிக்குறையும்?

ம: இச்சட்டத்தினால் பால விதவைகளாக ஏற்படவொட்டாமல் "காப்பாற்ற"ப்பட்டிருக்கிற சிறு பெண்களும் கன்யா ஜாபிதாவில் சேருமாதலால், கன்யைகளின் எண்ணிக்கை ஜாஸ்தியாகுமல்லவா?

பி: வாஸ்தவம்.

ம: ஆகையால், இச்சட்டத்தினாலும் இதைப் போன்ற ப்ரயத்தனங்களினாலும், கன்யைகளை விவாஹம் செய்துகொள்ளக்கூடிய புமான்களின் எண்ணிக்கை குறைந்தும், விவாஹத்திற்கு ஸித்தமாயிருக்கிற கன்யைகளின் எண்ணிக்கை ஜாஸ்தியாகவுமே ஏற்படுமல்லவா?

பி: ஆம்.

ம: அதாவது, இனிமேல் விவாஹம் செய்துகொள்ள புருஷர்கள் அகப்படாமல் கன்யைகள் வெகு ஜாஸ்தியாக இருந்து வருவார்கள்.

பி: அப்படித்தான் ஆகுமென்று தோன்றுகிறது.

ம: பர்த்தாக்களின் ஸங்க்யை அப்படியே இருப்பதால், பர்த்தாக்களில்லாத பெண்களின் ஸங்க்யையும் அப்படியேதான் இருக்க வேண்டும்.

பி: ஆம்.

ம: ஆகையால்இச்சீர்திருத்தம் ஸந்தோஷமாக தாம்பத்யம் செய்து வரும் ஸ்திரீ புமான்களின் எண்ணிக்கையை ஜாஸ்திப்படுத்த உபயோகப்படாது. விதவைகளின் எண்ணிக்கையை குறைக்கலாம். விவாஹமாகாத கன்யைகளின் எண்ணிக்கையை எப்படியும் ஜாஸ்திப்படுத்தும். எவ்விதத்திலும் பர்த்தா இல்லாத பெண்டுகளின் ஸங்க்யை அப்படியே இருக்குமானால், அவர்கள் பர்த்தாவை இழந்த விதவைகளாயிருந்தால் என்ன, பர்த்தாவையே அடையாத கன்யைகளாயிருந்தால் என்ன? இரண்டு விதமாயுமவள் தன் பர்த்தா இல்லாத "அதவை"கள் தானே — மேலும், கன்யைகளுக்கு பர்த்தாக்கள் அகப்படுவதை துர்லபமாகச்செய்தால், அவர்களுக்கு தாம்பத்யஸுகம் அனுபவிக்க இடமில்லாமல் போகிறது என்பது மாத்திரமில்லை. விவாஹமென்ற அவச்யமான ஸம்ஸ்காரமே அவர்களுக்குஏற்படவிடமில்லாமல்போய்விடுகிறது. த்விஜர்களான பையன்களுக்கு உபநயனம் எப்படி அவசியமோ, அப்படியே எல்லா ஜாதிப்பெண்களுக்கும், அதிலும் த்விஜர்களான பெண்களுக்கு, விவாஹம் அவசியமே. பாலிகா விதவையாயிருந்தாலும் இத்தஸம்ஸ்காரம் அவளுக்குநடந்து விடுகிறபடியால், தன் ஜாதி அந்தஸ்தை நன்கு அடைந்தவளாகிறாள். விவாஹமாகாத பெண்ணுக்கு, ஸரியான காலத்தில் இந்தஸம்ஸ்காரம் ஏற்படாத காரணத்தினால், இத்தன்மை ஸித்திக்காது. இந்த ஸம்ஸ்காரம் ஏற்படவே வழியில்லாமல் சீர்திருத்தக்காரர் செய்வதிலிருந்து, ஜாதியில்பிறந்தும் ஜாதி அந்தஸ்தையடைந்து மதஸம்பந்தமான கார்யங்களில் பிரவிருத்திக்கவோ கலந்துகொள்ளவோ யோக்கியதையற்றவர்களாக ஜாஸ்தியாகப்பெண்கள் ஏற்படுவது தான் மிச்சம். நம் மத ரீதியாக, அவசியமான ஸம்ஸ்காரம் ஏற்படாமலிருப்பது பெரிய தோஷமாகும்: நிரபராதிகளான அநேகம் பெண்கள் இத்தோஷத்திற்கு உட்படவேண்டுமென்று சீர்திருத்தக்காரர் நிர்ப்பந்தம் செய்கிறதாகிறது. இவர்கள் வெளிக்கிளம்பும் முன், நம் தேசத்தில் ஸேது முதல் ஹிமாசலம் வரையில் இந்தஸம்ஸ்காரம் அடையாத பெண்ணே இருந்திருப்பதில்லை. ஒவ்வொருவளுடைய அத்யாத்ம ஸ்ரேயஸ்ஸும் பாதுகாக்கப்பட்டிருந்தது. இப்பொழுது விதவாரக்ஷணம் என்று சொல்லிக்கொண்டு இதை வேண்டுமென்று புறக்கணித்து உதாஸீனம் செய்கிறார்கள்.

பி: பால்யத்திலேயே பர்த்தாக்களை இழக்கும்படி ஏற்படும் சில பெண்களின் பரிதாப நிலையைக்கண்டு விசேஷ அனுதாபம், மற்றவர்களுக்குக்குறையாமல், தங்களுக்கும் இருக்குமென்பதை நன்குஅறிவேன். ஆனால் இதற்கு ஒரு பரிஹாரமும் செய்யாமல் நடக்கிறபடி நடக்கட்டுமென்று சும்மாவிருந்துவிட வேண்டுமென்பதா தங்கள் அபிப்பிராயம்?

ம: பெண்கள் ஏன் விதவைகளாகிறார்கள்?

பி: இது அவர்களுடைய கர்மபலன், அவர்கள் அனுபவித்தே தீரவேண்டுமென்று தாங்கள் சொல்வதாகத்தோன்றுகிறது.

ம: இது வரை பேசி வந்ததில் கர்மம் என்பதை இழுக்காமலே, வேண்டுமென்று ஜாக்ரதையாய், பேசி வந்திருக்கிறேன். சுத்த லௌகிக வியவஹாரத்தில் இதைதாங்களும் இழுத்துக்கொள்ள வேண்டாம். ஆகையால், கர்மம் என்பதை தூரவைத்து விட்டு, நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்கள்.

பி: பெண்கள் ஏன் விதவைகளாகிறார்கள் என்ற கேள்விக்கா?

ம: ஆம்.

பி: இதற்குப்பதில் எப்படிச்சொல்கிறது? பர்த்தாக்கள் இறந்து போவதினால் விதவைகள் ஏற்படுகிறார்கள்.

ம: இதுவேதான்ஸரியான பதில். இன்னு ஒரு கேள்வி, இனிமேல் விதவைகளின் எண்ணிக்கை குறையவேண்டுமானால், அதற்கு எந்த வழி தான் யுக்திக்கும் பொருந்தும்?

பி: சாகிற பர்த்தாக்களின் எண்ணிக்கை குறையவேண்டும் என்று நான் சொல்ல வேண்டுமென்று தாங்கள் எதிர்பார்ப்பதாக தோன்றுகிறது.

ம: அப்படியே. இதைத்தவிர வேறு வழியாவது உபயோகப்படக்கூடிய பரிஹாரமாவது கிடையாது.

பி: மனிதர்கள் சாகிறதை எப்படித்தடுக்க முடியும்?

ம: அதிருஷ்டம், கர்மம் இவைகளைத்தூர வைத்துப்பேசினால், ஏன் முடியாது? தேசத்தில் சாவு குறையவேண்டுமென்றும்ஸுகாதாரமும் ஆரோக வாழ்க்கையும் ஜாஸ்தியாக வேண்டுமென்றும் வேண்டிய ப்ரயத்தனங்கள் எடுத்துக்கொள்வதில்லையா? பர்த்தாக்களை அகாலமரணத்திலிருந்து பாதுகாக்க மாத்திரம் ஏன் ப்ரயத்தனம் செய்யக்கூடாது?

பி: பையன்களுக்கு வயதான பிறகு விவாஹம் செய்தாலே அகால ம்ருத்யு தடுக்கப்பட்டதாகாதா?

ம: அதெப்படி? ஸரியானபடி ப்ரஹ்மசர்யம் அனுஷ்டானம் செய்யாமல் போனால் எது தான் பலன் படும்? நவீன வித்யாப்யாஸம் என்ற வியாஜத்தில் நம் சிறுவர்களுக்கு அனாவசியமாய் ஏற்படும்பளுவை நீக்காமலும் அவர்கள் ரத்தத்தை உறிஞ்சுகிற நவீன மனோபாவங்களையும் ஆசாரங்களையும் ஒழிக்காமலும்,விவாஹத்திற்கு முன்னால் ஸரியானபடி காயிக மானஸிக ஆத்யாத்மிக பயிற்சியைக் கொடுக்காமலும், இருந்துவிட்டு விவாஹத்தை மாத்திரம் வயதான பிறகு செய்துவைத்தால் அவர்களை ஒரு விதத்திலும் காப்பாற்றினதாகாது. மேலும், தாம்பத்ய வாழ்க்கையிலும் கூட அவசியமாய் அனுஷ்டிக்க வேண்டியதான பலவித ப்ரஹ்மசர்ய நியமங்கள் இருக்கின்றன. ஆகையால் பாலிகா விதவைகளை நீங்கள் கவனிக்க வேண்டாம். பர்த்தாவாக வேற்பட்டு அகால ம்ருத்யுவை அடைகிற நம் பையன்களையே கவனியுங்கள். உங்கள் அனுதாபமும் உதவியும் அவர்களுக்கே தற்காலம் வேண்டியிருக்கிறது. அவர்களுக்குக் கைகொடுத்து எல்லா விதத்திலும் ஆரோக த்ருடகாத்ரர்களாக இருக்கச்செய்யுங்கள். அவர்களை அகால ம்ருத்யு பாதிக்காமல் பார்த்துக்கொண்டால் பாலிகாவிதவைகளைப்பற்றிய விசாரம் தானே தீர்ந்து விடும். இதற்காக சாஸ்திரத்தின் பேரில் குற்றம் சொல்லவாவது, அவைகளை மாற்றிவிட முயலவாவது, எவ்வித அவசியமும் கிடையாது. கவனித்துப் பார்த்தால் இப்பொழுது தோன்றியிருக்கும் இந்த அனர்த்தங்கள் எல்லாம் சாஸ்திரங்களை மீறினதினால் தான் ஏற்பட்டவையென்று நன்கு விளங்கும். அவைகளே ஸரியான ப்ரமாணங்கள் என்பதைத்தெரிந்து கொண்டு அவைகள் சொல்லியபடி நடவுங்கள். எல்லாம் சுபமே.

ப்ரும்மஸ்ரீ குகதாஸ் S. V. நடராஜய்யர் ப்ரசுரங்கள்.

அத்யாத்மயோகம் or ஆத்மபயிற்சி ராப்பர்	2	8	0
காலிகோ	3	0	0
சுப்ரமண்ய ப்ரஸன்ன மாலாமந்த்ரம்	0	2	0

Books by Dewan Bahadur K. S. Ramasami Sastrigal, B.A., B.L.

		Rs.	A.	P.
1.	Kalidasa's Heroes	0	6	0
2.	The science of the soul	1	8	0
3.	Manu, the friend of Man	0	8	3
4.	Sandilya Bakthi Sutras	0	4	0
5.	The Gospel of Gita	0	3	0
6.	The future of Brahmin	0	2	0
7.	The Gita ideal of devotion	0	4	0
8.	நாரத பக்தி ஸூத்ரம்	0	2	0

கிடைக்குமிடம்:— ஸனாதன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல் கும்பகோணம்.

Hindu Temples and Pseudo-Hindu Wardens.

(Contributed)

The amount of light talk that is going on regarding the temple-institution does not permit any self respecting believer to stand by and look on without passion or emotion. In the first place, let governments remember that the Hindu temple is a denominational institution belonging, of right solely to the people who have so long been using them and exercising property usufructory right over them, and *not* an institution belonging to all and sundry which a secular executive government can interfere with, simply because of the physical forces vested in them for another purpose, viz., protecting the people, their person, their property and their occupation or means of livelihood against injurp, form within and without, directly or indirectly inflicted—a function, by the way, which is not fully done by any government in the world to-day.

In the second place, it has to be noted, and the Hon. Dr. *T.* S. S. Rajan of the Government of Madras has particularly to note, that if a minister or government representative in charge of Hiudu religious institutions and endownments *to-day* is a "Hindu" as the term goes, it does not mean that he holds such charge by *virtue* of being a Hindu or that no non-Hindu can, under the constitution, hold that charge. If this is true, I should like to know from Dr. Rajan what he means by saying that the non-interference by Government so far was due to the fact that India was till now under alien rulers and that now interference quite justified. Is it not absurd?

In this connection, I would respectfully beg to bring to his notice that a non-Hindu Indian or even non-Indian, provided he feels pledged to a policy of loyalty to the genius and traditions of the institutions for whose management he has made himself responsible, is not worse, perhaps even better, than a born Hindu who for whatever reason may lack that loyalty and takes pride in it.

Again, a temple owes its sanctity and value, not to the number of people that go to it, but to the power that has been infused into the *Vigrahas* by the original founders and to the care with which that power has been maintained though not enhanced by the people who have come after them, and also to the observance of the injunctions and prohibitions laid down for the temple's effective functioning. In this view, what is the meaning of the impious gibes of ministers, like Mr. Giri, that, if certain classes of people are not allowed to go to particular classes of temples those temples are not temples of god but temples of the devil. What again is the meaning of their impertinent threats that they will not go into a temple if classes which they specially specify are not to go into it. The temples will gain, rather than lose if that threat is carried out. Anyhow it does not show a state of mind consistent with either decency or a sense of responsibility.

As for temples being houses of God, they are admittedly not so, the sense of God being an extra cosmic dispenser of gifts and mercies, if approached in a particular manner or through a medium of particular persons, the temple being in that case, but the place of congregation. But they *are* houses of god in the sense of houses of power installed for the good of the locality and the believers in the first instance, and for the good of the whole world in the ultimate resort. The processes amongst which this result is brought about, may not be understandable by the multitude, but all the same, it has a rationale based on experience and unerring testimony, which should compel the respect of all fairminded men.

Speaking again at a Young Men's Association, the Prime Minister of the Madras Government made the most amusing statement that faith in temples was fast waning and that before it goes out absolutely, temples should be made common to all who call themselves Hindus! It is strange that he—confessedly a Hindu and a Brahmin—should not have felt it his duty to diagnose the *cause* of the declining faith, should not have asked himself whether the conditions prescribed by the temple founders for the continued efficiency of the temples are still being honoured by the wardens, rather, pseudo-wardens, and if not, what steps he would suggest to restore the right situation.

I know that with decline of the entire Indian nation, the temple as a part of its national religion has ceased to be a live institution. I also know that the measure of vitality of a country's institutions depend on the vitality of the people, and that so judged, Hindu institution cannot have the same vitality as the institution of religions patronised and practised by countries better placed than India. I am further aware that, in the velocity with which faith in temples is declining, it will not be long before they get wholly deserted. If that is to be even by the existing congregations, must it not be much more so in the case of the congregations seeking admission into them, rather driven into them, not under the force of faith, but under the politically engineered goad of false equalitarianism? In fact, the term "temple entry" is a misleading term, because it suggests that the several Hindu communities have not got their own temples and that if the particular temples against which the crusade is now going on are not made common property, large sections of the Hind population will go without any temples at all. That term should, therefore, be did off. At the same time, it is unfair for Hindu ministers to make light-headed remarks or start vandalistic policies in regard to Hindu institution which no government, native or foreign, would dare to do if the Hindu community had been an organised community capable of making its resentment felt, like the Christian or the Moslem.

கும்பகோணம்.

ஸரஸ்வதி பூஜை.

நமது நகர் டபீர் கீழத்தெருவிலிருப்பவரும் நமது நகர் கௌரவ மாஜிஸ்டிரேட் அவர்களுமான ஸ்ரீமான் வி. கணபதி சாஸ்திரிகள் மானேஜிங்குள்பட்ட, ஸ்ரீ கல்யாணராம அய்யர், வேதபாடசாலை மாணவர்களால் வழக்கம் போல ஷை உத்ஸவம் கொண்டாடப்பட்டது. அன்று காலையில் விசேஷ பூஜைகள் நடந்தது. மாலையில் ஸ்ரீ அய்யாவய்யர் வேதாந்த பாடசாலை ஆசிரியர் பிரும்மஸ்ரீ வேதாந்தாலங்கார வேப்பத்தூர் வைத்தியநாத சாஸ்திரிகளால் மாணவர்களும், வித்யாப்யாஸமும் பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. பல ஆஸ்திகர்கூடி ஆனந்தித்தனர். பல வேலைகளிருந்த போதிலும் வித்யார்த்திகளின் வேண்டுகோளுக்கிணங்கி கூடவே இருந்து சகல கார்யங்களையும் நடத்திக்கொடுத்துதவிய ஸ்ரீ மானேஜிங் டிரஸ்டி அவர்களின் உதவியை போற்றாதவரில்லை. கல்வி வாழ்க. காப்பவர் வாழ்க.

(நேரில் கண்டவன்.)

இலந்துறை.

(கும்பகோணம் தாலூகா.)

"பதரீவன" மென்றும், "வ்யாஸாச்ரம" மென்றும், ப்ரதாபஸிம்ஹபுர மென்றும், பிரஸித்திபெற்ற இந்த புராதனமும் ஸர்வமான்ய திவ்ய க்ஷேத்ரத்தில் அநவரத ஸாந்நித்யமாய் விளங்கிக்கொண்டிருக்கிற மஹா வரப்ரஸாத மூர்த்திகளாகிற ஸ்ரீ அபிராமி ஸுந்தரேச்வர மூர்த்திகளுக்கு வழக்கம் போல் ஸ்ரீநவராத்ரி உத்ஸவம் ஒன்பது தினங்களும், ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு விதமான திவ்யாலங்காரத்துடன் சந்தனக்காப்பு முதலிய அலங்காரங்களுடனும் அம்பாள் கொலு மண்டபத்தில் வீற்றிருந்த காக்ஷியும் ப்ரதிதினமும் பல ஸஹஸ்ரநாமார்ச்சனைகள் நடந்த வைபவமும், வினியோகாதிகளும் ஸமஸ்த பக்தர்களையும் ஆனந்த பரிதர்களாக்கி ஈச்வர பக்தியில் மிகவும் ஈடுபடச்செய்தது.

உள்ளூர் "வ்யாஸ குடீரம்" ப்ரம்மஸ்ரீ கங்கா ஜடேசசர்மா அவர்கள் மேற்கண்ட விஷயங்களை மிகுந்த பக்திச்ரத்தையுடன் நடத்தி வந்ததன்றி லோகத்தில் தற்காலம் பல அனாசாரங்களும் அதன் மூலமும் துர்பிக்ஷமும் ஏற்பட்டுள்ள துரிதங்கள் விலகி ஸமஸ்த ஜனங்களும் க்ஷேமமடைவதற்காக விசேஷ நியமத்துடன் பல ஜப பூஜா பாராயணங்களும் (ஸ்ரீ தேவீ பாகவதம் 12 ஸ்கந்தங்கள் 318, அத்யாயங்கள் 18477, ச்லோகங்கள் பாராயணமும்) நன்கு நடைபெற்றதைப் பலரும் பாராட்டுகிறார்கள்.

ஆனந்த பரிதன்.

டாக்டர் காரே தண்டிக்கப்பட்டார்.

காங்கிரஸிலிருந்து பஹிஷ்காரம்.

மத்யமாகாண ப்ரதம மந்திரியாயிருந்த டாக்டர் காரே காங்கிரஸ் நியமங்களை மீறிய காரணமாக இரண்டு வருஷ காலத்திற்கு காங்கிரஸிலிருந்து விலக்கப்பட்டிருப்பதாக கார்யக்கமிட்டி ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. இதனால் அவர் சட்ட ஸபை மெம்பர் பதவியையும் ராஜினாமா செய்யவேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது.

கும்பகோணத்தில் வெடி விபத்து.

அரசலாற்றங்கரையிலுள்ள வாணக்கிடங்கில் செவ்வாய் கிழமை 12 மணி சுமாருக்கு பெரிய வெடி விபத்து ஏற்பட்டது. அந்தக்கட்டிடம் நாசமானதுடன் அங்கு வேலை செய்து வந்தவர்கள் பலத்த சேதமடைந்தார்கள். ஒரு ஸ்திரீ மாண்டாள். இன்னும் பலருடைய நிலைமை அபாயமாயிருக்கிறது. ஏராளமான ஜனக்கூட்டம் வந்து போகிறது.

பிரிடிஷ் பார்லிமெண்டில் அமளி.

மிஸ்டர் சேம்பர்லேனுக்கு எதிர்ப்பு.

ஹிட்லரிடம் பணிந்துவிட்டதற்காக மிஸ்டர் சேம்பர்லேனை தீவ்ரவாதிகள் கண்டித்து பார்லிமெண்டில் அமளி செய்தார்கள். கடற்படை மந்திரியான மிஸ்டர் கூப்பர் என்பவர் சேம்பர்லேன் மந்திரி ஸபையின் அந்நியநாட்டுக்கொள்கையைக் கண்டிக்கும் சின்னமாகத் தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

மீண்டும் ஸமஷ்டி யோஜனை.

ஸிம்லாவில் மந்திரிகள் கூட்டம்.

ஸமஷ்டி விஷயமாக சுதேச அரசர்களின் அபிப்ராயத்தை திட்டமாக உருவாக்கவும், வேறு பல ஆலோசனைகளைச் செய்யவும் ஸமஸ்தான மந்திரிகளின் மஹாநாடு ஸிம்லாவில் நடைபெற்று வருகிறது. ஸர். ஸி. பி. யும் அவிடம் போயிருக்கிறார். ஸமஷ்டி ஸரியாக நடைபெறவேண்டுமானால் ராணுவச் செலவில் 20 கோடியைக் குறைக்கவேணுமென்று ஆலோசனை சொல்லப்படுகிறது. 1940-ல் ஸமஷ்டி ஏற்படலாமாம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்

பகுதான்ய-௵ புரட்டாசி-௴ 20௳

காந்திஜியின் பிறந்த தினம்.

இந்தியாவின் ஒப்பற்ற ராஜ்ய ஸமூஹத் தலைவராக மதிக்கப்படும் காந்திஜியின் 70வது பிறந்த தினக்கொண்டாட்டமானது இந்தியா வெங்கும் விசேஷமாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. காந்திஜியுடன் அபிப்பிராய பேதமுள்ளவர்கள் கூட இந்தக் கொண்டாட்டத்தில் கலந்து அவரை வாழ்த்தியிருக்கிறார்கள். எல்லாப் பத்திரிகைகளும் அவரைப் பாராட்டிக் கட்டுரைகள் வரைந்துள்ளன. இப்படி தேசமெங்கும் கொண்டாடப்படுகிற பெரியார் ஒருவரைப்பற்றி தார்மிகப் பிரிவினரின் அபிப்பிராயமென்ன? காந்திஜியிடம் அவர்களுக்கு அன்பு கிடையாதா? இவ்விஷயமாகப் பலர் பலமாதிரியாகப் பேசலாம்.

தார்மிகர்கள், காந்திஜியைக்கண்டிக்கும் மனப்போக்கையே எப்போதும் காட்டி வருவதால் அவர்களுக்கு காந்திஜியிடம் விரோதமே அதிக மென்று தோன்றுவதும் இயற்கையே. சிற்சில முக்ய விஷயங்களில் காந்திஜியை தார்மிகர்கள் எதிர்ப்பது வாஸ்தவமாயினும், பொதுவாக அவருடைய குணங்களையும், ஆத்ம சக்தியையும், நம்தேசத்திற்கு அவர் செய்துள்ள ஊழியங்களையும் ஸநாதனிகள் கூடக்குறைத்துப் பேசியது கிடையாது. வேதம், ஜாதி பேதம் போன்ற விஷயங்களில் அவர் விபரீத அபிப்ராயம் கொண்டிருப்பது தவிர அவருடைய மற்ற அபிப்ராயங்களையோ கார்யங்களையோ தேசத்தில் பலரும் மதித்தே வருகிறார்கள்.

விசேஷ தர்மங்களைப்பற்றிய வரையில் அவர் விபரீத நோக்கமுள்ளவராயினும், ஸத்யம், அஹிம்ஸை, பூததயை, வைராக்யம் போன்ற ஸாமான்ய தர்மங்களில் அவர் விசேஷ சிரத்தையும், பிடிவாதமும் காட்டி அநுஷ்டித்து வருவதை ஒருவரும் குறைத்துச் சொல்லமுடியாது. மேலும் அவர் ஜனங்களுக்கு ஆஸ்திக புத்தியையும், தெய்வ நம்பிக்கையையும் வளர்த்து வருகிற விஷயத்தில் நம்தேசத்திற்குப் பெரிய உபகாரமே செய்திருக்கிறாரென்று சொல்ல வேணும் மற்ற தேசங்களில் நடக்கும் ராஜ்யக்கிளர்ச்சியின் கோரமான போக்கையும், இந்தியாவில் காந்திஜியின் தலைமையில் நடக்கும் ஸாத்விகமான ராஜ்யக்கிளர்ச்சியின் போக்கையும் ஒப்பிட்டுப்பார்த்தால் நிலைமை நன்கு விளங்கும். காங்கிரஸ் வாதிகளிலேயே தெய்வ நம்பிக்கையற்றவர்களும், நாஸ்திகர்களும் பலர் இருந்தும் அவர்கள் காந்திஜியின் செல்வாக்கால் தான் தலை கிளப்ப முடியாமல் மறைந்து கிடக்க நேர்ந்திருக்கிறது. காந்திஜி இல்லாவிட்டால் காங்கிரஸில்நாஸ்திகர்களின் ஆதிக்யம் என்ன விபரீதத்தை விளைத்திருக்குமென்பதை யோஜிக்க வேணும். க்லுப்தமாக மௌனம்போன்ற நியமங்களை அவர் கொண்டிருக்கிறார்.

எங்கு போனாலும், என்னகார்யமிருந்தாலும் பகவந்நாம பஜனை செய்வதை நிறுத்துவது இல்லை. ஏராளமான ஜனங்களைக் கூட்டிக்கொண்டு வாய்விட்டுச் சொல்லி பகவானை ஸ்துதிக்கிறார். "தாம் செய்யும் எக்கார்யத்தையும் ஈச்வரார்ப்பணம் செய்து அவருடைய நியமனத்திலேயே செய்வதாகச் சொல்லுகிறார். இப்போது இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான ஜனங்கள் காந்திஜி காட்டிய வழியில் அவரைப்பின்பற்றி நிற்கத்தயாராக இருக்கிறார்களென்பதிலிருந்தும் அவருடைய கௌரவம் அதிகரிக்கக்கூடியது. அவரிடம் க்ரியாசக்தியானது அதிசயிக்கத்தக்க முறையில் மிளிர்கிறது. இந்த குணங்களையெல்லாம் தார்மிகப் பிரிவினர் நன்கு அறிந்தவர்களே. ஆயினும் நல்ல வஸ்துக்களிலும் சிறிது தோஷமிருப்பது உலக இயற்கை. அப்படியிருந்தும் தோஷத்தை நீக்கி குணபாகத்தைக் கொண்டாடுவது ஹிந்துக்களின் பெரிய குணம். இதை காந்திஜி விஷயத்தில் தார்மிகர்கள் கைவிட நியாயமில்லை.

மற்றொரு விஷயத்திலும் காந்திஜியின் செல்வாக்கை மதிக்கவேண்டியிருக்கிறது. உலகம் முழுவதும் பொதுவுடமை ஆபத்து அதிகரித்து நிற்கிறது. இந்தியாவில் இந்த விஷத்தை ஸ்ரீமான் ஜவஹர் போன்றவர்கள் பரவச்செய்துவிட்டார்கள். காங்கிரஸில் பொது உடமைக் கொள்கையைப் புகவிட்டு [illegible]பிடித்துக்கொள்ள வெகுவாகத் தீவிரவாதிகள் பாடுபடுகிறார்கள். நேருஜியே இதில் பாடுபட்டுப் பார்த்தார். ஆயினும் காந்திஜியின் செல்வாக்கினால்தான் இன்று காங்கிரஸில் பொதுவுடமை ஆபத்து நுழைய இட மகப்படவில்லை. பொதுவுடமை அபாயத்தை காந்திஜி எதிர்க்கிறார். அவரால் தான் இன்று சொத்துரிமையும் பண உரிமையும் நம்மவர்களுக்கு தங்கி நிற்கிறது. அவருடைய காலத்திற்கு பிறகு பொதுவுடமை நம் தேசத்தில் காங்கிரஸில் புகுந்து பெரிய தீங்கு செய்யுமென்பதை நினைக்கும்போது காந்திஜியின் ஆயுள்காலம் இன்னும் நீடிக்க வேண்டியது அவச்யமென்பதைப் பலரும் உணருவார்கள்.

குறிப்புகள்.

ஜர்மனியின் ஜயபேரிகை.

ஸெகஸ்லவேகியா விஷயமாக ஜர்மனியானது பெரிய வெற்றியை அடைந்து விட்டது ஹிட்லர் தமது பிடிவாதத்தை நிறைவேற்றிக் கொண்டு விட்டார். அவர் தமது மனோரதத்தை பூர்த்தி செய்து கொண்ட விதம் தான் இதில் கவனிக்கத்தக்கது. 30 லக்ஷம் ஜர்மனியர்கள் வாழும் ஸுடேடன் பிரதேசத்தை எவ்வித ஊறுதலும் செய்யாமல் அப்படியே ஜர்மனி வசப்படுத்திக் கொள்வதற்கு பிரான்ஸையும், பிரிட்டனையும் ஸம்மதிக்கும்படி ஹிட்லர் செய்ததுதான் விசேஷமாகும். ஜர்மன் கோரிக்கைக்கு இணங்க முடியாதென்று வீர்யம் பேசி வந்த பிரான்ஸ் ஒரு நொடியில் ஹிட்லர் இறுதிக்கடிதத்திற்கு இணக்கம் காட்டி விட்டது. ஜர்மனியானது ஆஸ்டிரியாவை வசப்படுத்திக்கொண்ட பிறகு அடுத்தபடியாகப் போட்டிருந்த திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டு விட்டது. இதற்கு மேல் அது ஹங்கேரியின் மீது கண்வைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வெற்றியில் ஜர்மனியர்களன்றி உலகத்தாரே ஹிட்லரைப் பாராட்டுவது இயற்கையே.

ஸர்வாதிகாரி ஆக்ஷியின் வெற்றி.

இந்தப் போராட்டமானது மேலுக்கு ஒரு மாதிரியாகத் தோன்றினாலும், உண்மையில் ஸர்வாதிகார ஆக்ஷிக்கொள்கைக்கும், ஜனநாயக ஆக்ஷிக்கொள்கைக்கும் ஏற்பட்ட போராட்டமென்றே நினைக்க வேண்டும். ஐரோப்பாவில், ஹிட்லரும், முஸோலினியும், குடியரசு அல்லது ஜனநாயகம், போல்ஷ்விஸம்போன்ற ஆக்ஷிமுறைகளை அழித்திடக் கங்கணம் கட்டியுள்ளார்கள். பொதுவுடமை தத்வம் பரவியுள்ள தேசங்களையெல்லாம் எப்படியாவது ஸர்வாதிகாரி ஆக்ஷிக்கு உட்படுத்திவிட அவர்கள் பல வழிகளிலும் தீவிர முயற்சி எடுத்து வெற்றியும் பெற்று வருகிறார்கள். இதன் பலனாக ஐரோப்பாவில் ஜனநாயகத்தின் கௌரவம் குறைந்துவருகிறது கிரீஸ்போன்ற நாடுகள்கூட ஸர்வாதிகார ஆக்ஷிக்குத் திரும்பி வருகின்றதைப் பார்க்கிறோம். பொதுவுடமை தத்வமுள்ள தேசங்களில் அதை எப்படியாவது அழித்துவிடுவதற்காக ஹிட்லரும், முஸோலினியும், 'தங்கள் ராணுவ பலத்தையும் கொடுத்து உதவத் தயாராக இருக்கிறார்கள். ஸ்பெயினில் நடக்கும் உள்நாட்டுக் கலஹத்தின் உண்மையென்ன? அங்கு பொது உடமைக் கொள்கையை அழித்து ஸர்வாதிகாரி ஆக்ஷியை ஸ்தாபிக்கவே கலஹம் நடக்கிறது. இதில் இடாலியும், ஜர்மனியும் வேண்டியவளவு உதவி புரிவதின் தாத்பர்யமும் இதுதான். கீழ் தேசங்களில், சைனா, ஜப்பான் யுத்தத்திலும் இந்த நோக்கம் இருந்துவருகிறது.

ஆகவே பொது உடமையை நசுக்கிவிட வேண்டுமென்ற ஹிட்லர் எண்ணமானது பிரகிருதத்தில் வெற்றிபெற்றது. குடியரசுநாடாகிய ஸெகஸ்லவேகியாவைவிட்டு ஸுடேடனை ஜர்மனி ஆக்ரமித்துக் கொண்டதன்மூலம் அங்கு பொதுவுடமைஆக்ஷி பலஹீனமடைந்து சிதறிவிட்டது நிச்சயம். பிரான்ஸு தேசம் குடியரசுக் கொள்கையுள்ளதாயினும் ஸெகஸ்லவேகியாவுக்கு உதவிபுரிந்து குடியரசுதத்வத்தைஆதரித்து நிற்கச் சக்தியற்று விட்டது. அரைகுறையான ஜனநாயகஆக்ஷி நடத்தும் பிரிட்டனும் ஹிட்லரை எதிர்க்க முடியவில்லை. இதிலிருந்து ஜனநாயகஆக்ஷியைவிட ஸர்வாதிகார ஆக்ஷியே வலுவுள்ளதென்பதும் ராஜ்யவாதிகளுக்கு புலப்படக்கூடியது. ஸரியோ, தப்போ, ஒரு காரியத்தை நினைத்தபடி நிறைவேற்ற ஸர்வாதிகாரி ஆக்ஷியில் ஸௌகர்யமுண்டு. பிரான்ஸ் தேசத்தில் குடியரசு நடக்கிறதாயினும் நிமிஷத்திற்கு ஒருமந்திரிஸபை மரிப்பதும், மற்றொன்று முளைப்பதாயுமிருக்கிறது. நிர்வாஹ வேலைத்திட்டமும், மந்திரிகளின் கொள்கைக்குத் தக்கபடி க்ஷணத்திற்கு க்ஷணம்மாறுபடுகிறது. இன்றுஒருமந்திரி செய்ததை நாளைக்கொருமந்திரி மாற்றி விடுகிறார். இம்மாதிரி எவ்வளவோ தீமைகளால் குடியரசு நாடுகளின்ஆக்ஷி நன்குநடைபெறவில்லை யென்பது ருஜுவானவிஷயம். அதிகமேன்? ஜனநாயகச் சாயைநடக்கும் நிலைமையிலேயே இந்தியாவில் எவ்வளவு சிக்கல்களையும், கக்ஷிச்சண்டைகளையும் பார்க்கிறோம்? ஹிட்லர் வெற்றியானது ஸர்வாதிகாரஆக்ஷியின் வெற்றியென்பதும், அந்த ஸர்வாதிகாரஆக்ஷி வலுவுள்ளதென்பதும், அதை எதிர்த்து நிற்பது சிரமமென்பதும் இந்தஸம்பவத்தால் நிச்சயப்படுகிறது. இதாலி, அபிஸீனியாவை பிடித்துக்கொண்டது. ஜர்மனியோ, ஆஸ்டிரியா, ஸுடேடன் தேசங்களை வசப்படுத்தியது. ஐரோப்பியநாடுகள் சக்தியற்றவாய் பொத்தி நின்றன. இதற்கு ஸர்வாதிகார ஆக்ஷியின்பலமே காரணம். ஜர்மனியின் இந்தவெற்றியானது, பொதுவுடமை காரர்களுக்கு, விசேஷமாக நேருஜிபோன்ற இந்தியர்களுக்கும், காங்கிரஸ் மஹாஸபைக்கும் ஏமாற்றத்தையே கொடுக்கும். என்ன செய்வது?

மீண்டும் ஸமரஸப் பேச்சு?

காங்கிரஸுக்கும், ஜின்னாவுக்கும் நடந்த ஸமரஸப்பேச்சு அடியோடு முறிந்து விட்டதாக நினைக்கப்பட்டது. ஆயினும் அதற்கு இன்னும் உயிர் இருப்பதாகத் தெரிகிறது. காங்கிரஸ் காரியக்கமிட்டியானது மறுபடியும் பேச்சுவார்த்தையை ஜின்னாவுடன் ஆரம்பிக்கலாமென்று தீர்மானித்திருக்கிறது. காங்கிரஸ் பிரதிநிதிகளாகச்சிலரையும், லீக் அல்லது ஜின்னா கக்ஷியைச்சேர்ந்த சிலரையும் பிரதிநிதிகளாகக்கொண்ட ஸபையில் ஸமரஸ பேச்சைத் தொடங்க வேண்டுமென்று காரியகமிட்டி முடிவு செய்திருக்கிறது.

முஸ்லீம் லீக் ஸபையை ஓர் முக்ய பிரதிநிதி ஸபையாக அங்கீகரிக்க வேண்டுமென்று ஏற்கனவே ஜனாப் ஜின்னா கூறிய நிபந்தனையை அவர் இப்போது வற்புறுத்த வில்லையென்று தெரிகிறது. அதனால் தான் மறுபடியும் பேச்சுவார்த்தை நடத்த இடமேற்பட்டுவிட்டதாகத்தெரிகிறது,

எப்படியும் காங்கிரஸானது இவ்வளவு ஆதுரம் காட்டுவது அதன் கௌரவத்திற்கு ஏற்றதாயில்லாதது ஓர் முக்கிய விஷயம். இதை காங்கிரஸ் கவனிக்கவில்லை. சென்னைத் தலைவர் ஒருவர் இதை கிருஷ்ணன் தூதுக்கு ஸமமாக வர்ணிப்பதும் பொருத்தமாயில்லை. கிருஷ்ணன் தூதானது சரணாகதி நோக்கம் கொண்டதல்ல. வீர்யம் பொருந்தியதாயும், எச்சரிக்கை நோக்கமு[illegible]ருந்தது. காந்திஜி, ஜின்னா வீட்டுவாசலில் நின்றதோ, காங்கிரஸ் சார்பாக அவர் பேசியதோ தன் மதிப்பு நிறைந்ததென்று சொல்லமுடியுமா?

மேலும் கிருஷ்ணன் தூது பொதுஜன அபிப்பிராயத்தை, தர்மத்தையும் தழுவியதாகும். காங்கிரஸ் தூதோ, வகுப்புத்தீர்ப்புப் போன்ற பல அம்சங்களில் பொதுஜன அபிப்பிராயத்தை மதிக்காததாயும், ஹிந்து ஸமூஹத்திற்கு தீங்கு இழைப்பதாயுமிருக்கிறது. ஹிந்து ஸமூஹ உரிமைகளை பலிகொடுக்கவே காங்கிரஸானது ஜின்னாவிடம் போகிறதேயல்லது, தன் இனத்தின் நன்மையைக் கருதியல்ல. ஆதலால் கிருஷ்ணன் தூது உபமானம் எல்லாவிதத்திலும் அனர்ஹமே. காரியக்கமிட்டியின் தீர்மானப்படி காங்கிரஸ் பிரதிநிதிகள் இருப்பார்களாயினும், இவ்விஷயத்தில் முக்யபாத்யமுள்ள ஹிந்து மஹா ஸபை பிரதிநிதிகள் இருப்பார்களென்று நினைக்க இடமில்லை, முஸ்லீம்லீகும் ஹிந்து ஸபை பிரதிநிதியில்லாத ஸபையையேற்குமாஎன்பது ஸந்தேகமே.

எப்படியும் இந்த ஸமரஸப் பேச்சு வெற்றி தருமென்று நினைக்க இடமில்லை, இன்னும் எவ்வளவோ சிக்கல்கள் இருக்கின்றன.

திவானிடம் பக்ஷபாதம்!

திருவாங்கூரில் நடைபெறும் ராஜ்யக் கலஹத்திற்கு உண்மையான ரகஸ்யக்காரணமென்னவென்பதைப்பற்றிப் பலர் பலவாறாகப் பேசுகின்றனர். எப்படியும் இப்போது அங்கு திவானாக இருந்துவரும் கனவானுடைய விரோதிகளாலேயே அவருக்கு விரோதமாக இந்தக் கலஹம் கிளப்பப்பட்டிருக்கிறதென்பதைச் சிலர் உறுதி செய்கிறார்கள். திவான் பதவியானது இன்னும் 5 வருஷத்திற்கு நீடிக்கப்பட்டவுடனேயே அதை எதிர்த்துச் சிலர், முக்யமாகக் காங்கிரஸ்காரர்கள் கண்டித்துக் கிளர்ச்சி ஆரம்பித்தது பலரும் அறிந்ததே. திருவாங்கூர் கலஹத்தில் கிறிஸ்தவர்கள் அதிகம் ஸம்பந்தப்பட்டிருப்பதும் கவனிக்கக்கூடிய விஷயம். ஸமீபத்தில் தண்டிக்கப்பட்ட மிஸ்ஸஸ் குருவில்லா என்ற ஸ்திரீத் தலைவரும் வேறு பலரும் அங்கு பஹிரங்கமாகப் பேசி வருவதில் இப்போதைய திவான் விலகிப்போனாலொழிய ராஜீயக் கிளர்ச்சியை நிறுத்தவோ, ஸமாதானம் பேசவோ முடியாதென்று தெளிவாகச் சொல்லி வருகிறார்கள். ஆதலால் பொறுப்பாக்ஷி, என்ற வியாஜம் சொல்லப்பட்டபோதிலும், திவானிடமுள்ள பிரத்யேகப் பொறாமை இக்கிளர்ச்சிக்குப் பெரிதும், காரணமென்பது வெளிப்படுகிறது. ஆதலால் திவானைப்பற்றி அங்கு அவதூறான கதைகளைக் கட்டிவிட்டு விபரீதமான தூஷணங்களை பொறுப்பாக்ஷி வாதிகள் செய்து வருவது தலைமீறிப்போய்விட்டது.

இந்த நிலைமை காந்திஜிக்குத் தெரிவிக்கப்பட்டதன்மேல் அவர் அதன் உண்மையை அறிந்துகொண்டு விட்டார். திருவாங்கூர் கிளர்ச்சிக்காரர்களை எச்சரித்தார். திவான் மீது பேசப்பட்ட அவதூறுகளை காங்கிரஸ் தலைவர்கள் பஹிரங்கமாகவாபீஸ்பெறவேண்டுமென்று காந்திஜி ஆக்ஞையிட்டார். அப்படிச் செய்யாவிட்டால் தமது ஆதரவு காங்கிரஸ் காரர்களுக்கு கிடைக்காதென்றும் சொன்னார்.

ஆயினுமென்ன? திருவாங்கூர் கிளர்ச்சிக்காரர்கள் காந்திஜியின் கட்டளைக்குக்கீழ்படிய மறுத்து விட்டனர். திவான் மீது கூறிய அவதூறுகளை வாபீஸ்பெறமுடியாதென்றும் அதனால் தன் மதிப்பு குறைந்து, இந்த இயக்கம் பலஹீனப்பட்டு விடுமென்றும் அவர்கள் பதில் சொல்லி விட்டார்கள்.

காந்திஜி திவானிடம் காட்டிய பக்ஷபாதம் அல்லது [illegible]மாயிருக்கலாம். அதற்குஅவச்யமும் இருக்கலாம். ஆயினும் திருவாங்கூர் கிளர்ச்சிக்காரர்கள் காந்திஜி வார்த்தையைக்கூட லக்ஷ்யம் செய்யாததுப் பற்றி காந்திஜி சிறிது ஆலோசிக்க வேண்டியதவச்யம். எதையும் ஆரம்பத்தில் கிளப்பிவிட்டோ, ஆதரித்தோ பேசிவிட்டால் பிறகு அதை காந்திஜியால் கூட ஸமாளிக்கமுடியவில்லை யென்பது இப்போதும் வெளிப்பட்டது. தமது வார்த்தை கூட லக்ஷியம் செய்யப்படாமல் நிலைமை மிஞ்சிவிட்டதை காந்திகாண்கிறார்.

ஆரம்பத்திலேயே இவர் திருவாங்கூர் கிளர்ச்சிக்காரர்களை முன், பின் யோஜியாமல் தூக்கிவைத்து தூபம்போட்டு பேசாமலிருந்தால் இந்தநிலைமை ஏற்பட்டிராதல்லவா? இந்தமாதிரி தீர்க்காலோசனையின்றி கார்யம் செய்து நம்மையும், தேசத்தையும் காந்திஜி சிரமப்படுத்தியதற்கு இந்தியராஜ்ய கிளர்ச்சியில் பலஉதாஹரணங்கள் உண்டு.

திருவாங்கூர் விஷயத்தில்காந்திஜி மேற்கொண்டு என்னசெய்வார் பார்ப்போம்.

டாக்டர் ராஜன் விஜயம்.

சென்னை ஸுகாதார மந்திரியான கனம் ராஜன் சென்ற ஞாயிற்றுக்கிழமை குடந்தை விஜயம்செய்து தக்காம்பாளையத் தெருவில் அர்ப்பன் கோவாபிரேடிவ் பாங்கின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

கும்பேச்வரர், சாரங்கபாணி, ராமஸ்வாமி ஆலயங்களுக்குச் சென்று பார்வையிட்டார் அங்கு அவருக்கு உபசாரம் நடந்தது. மாலையில் பலர் அவரைப் பேட்டிகண்டு பேசினார்கள். குடந்தை தண்ணீர் சாக்கடை திட்டத்தைப்பற்றியும் பேசப்பட்டதாம். மாலையில் காங்கேயன் பார்க்கில் பொதுக்கூட்டத்தில் கனம் மந்திரி பேசினார்.

அறிவிப்பு.

ஸரஸ்வதீ பூஜை, விஜயதசமி விசேஷங்களை முன்னிட்டு அச்சாபீஸ் விடுமுறை காரணமாக இவ்வாரம் ஆர்யதர்மம் 8பக்கத்துடன் வெளியாக நேர்ந்தது.

மானேஜர்.

உருவப்படத்திறப்பு.

குடந்தை கோபால் ராவ், சேஷய்யா புஸ்தகசாலை மண்டபத்தில், திவான்பகதூர், கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களுடைய உருவப்படத்தை சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் கனம் ஸ்ரீமான் கே. எஸ் கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தார். கனம் அய்யங்கார் அவர்களும், வேறு பலரும் ஸ்ரீமான் சாஸ்திரியாரைப்பற்றி வெகுவாக கொண்டாடிப்பேசினார்கள்.

நிலவரி முறையை ஆராய பஞ்சாபுக்குப் போனார்.

சென்னை ரெவின்யூ மந்திரியான கனம் டி. பிரகாசம் நமது மாகாணத்தில் நிலவரி முறையை எப்படி திருத்தலாமென்பதைப் பற்றி பஞ்சாப் மாகாணத்திலுள்ள நிலைமையை அறிவதற்காக அவ்விடம் சுற்றுப்பிரயாணம் செய்தாராம்.

வைதிகக்கக்ஷியின் மகாநாடு.

சென்னை கோகலே ஹாலில் வைதிகக்கக்ஷியாரின் [illegible] ஸ்ரீமான் ஸுப்பண அமாத்யா அவர்களின் தலைமையில் நடைபெற்றது அனேக பிரபலஸ்தர் வைதிக தர்மத்தைப்பற்றியும் அதைக்காப்பாற்ற வேண்டியது ஸர்க்கார் கடமை யென்பதையும் பற்றிப் பேசினார்கள். தேவாலயங்களைக் காப்பாற்றவேண்டியதைப்பற்றி பலமாகப் பேசப்பட்டது. மலையாள ஆலயப்பிரவேச மசோதா, பம்பாய் ஆலயப்பிரவேச மசோதா போன்றவைகளைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வேறு பல முக்ய தீர்மானங்களும் செய்யப்பட்டன. திவான் பஹதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜதாஸ் உபசாரணைக்கமிட்டித் தலைவராயிருந்து பேசுகையில் இப்போது நடந்து வரும் அதர்மக் கிளர்ச்சிகளை பலமாகக் கண்டித்தார்.

மாகாணமெங்கும் " வைதிகக்கக்ஷி "க்கிளை ஸபைகளை ஸ்தாபிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஸ்ரீ லலிதாத்ரிசதீ.
நாகரலிபியில் மூலமும்.
நாமாவளியும்
விலை 0—3—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு
விலை அணா 0—2—0.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

மார்காபூர்.
Markapur Road Railway Station,
(Karnool Dt.)

வாரக் குறிப்புகள்.

ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா.

பட்டபின்கூட தெரியவில்லையே! ஆழ்ந்த யோசனை இல்லாமல் கேவல உத்ஸாஹத்தை வளர்த்து பிரிடிஷ் இந்தியாவில் தேசிய தலைவர் மாணவர்களை, பெண்மக்களை, தொழிலாளிகளை அடங்கா பிடாரிகளாக செய்து இப்போது அவஸ்தை படுகின்றனர். திருவாங்கூரில் சம்பளங்கட்டாதே! கலாசாலைக்கு போகாதே என கூறவோர் இதை மறந்தனரோ?

போர்குணத்தை விடுக! சென்னை அதிதீவ்ர இளைஞர் சங்கப்படை, சட்டத்தை மீற திருவாங்கூர் செல்கிறது. அறிவும் தீர்க்கதர்சநமுமுள்ளவர் இதைத்தடுப்பது அவசியம்!!

உண்மை தர்மகர்த்தா! திருக்கோவிலூர் சிவாலய தர்மகர்த்தாவான ஸ்ரீமான் V. G. ராமசந்திரய்யர், அட்வகேட், அவர்கள் வாகன சீர்திருத்தம் தீபதர்மம் நவராத்திரி உத்ஸவம் முதலியவைகளை மிகச் சிறப்பாக நடத்துவதுடன் நவராத்ரியின் ஐதிஹ்யமென்ன? என்று கோவிலில் ஓர் உபன்யாஸம் செய்வித்து இதர தர்மகர்த்தாக்களுக்கு நல்வழி காட்டுகிறார். தார்மிகர் வாழி!!

தயாளபாக்! சென்னை ஓர் புஷ்பக விமானம் எல்லாவற்றிற்கும் இடந்தரும். வடநாட்டில் தயாளபாக் என்ற சங்கத்திற்கு சமதாசாங்கம் 300 ஏகர் நிலம்தந்தது! அது அங்கு ஓர் புதிய குடி ஏறும் கிராமம்! புதிய பண்டைய ஸகல கைத்தொழிலையுமாரம்பிக்கும்!!

உணவு உடை கோடு! கோயில் வேண்டாம்! என்று முதல் மந்திரிக்கு பஞ்சம ஜாதி தலைவரும் மலையாள ஈழுவர்களும் வேண்டுகின்றனர். இது மந்திரி காதில் விழாதது நமது துரதிருஷ்டமே!

பகுத்தறிவு வேண்டாமா? மஹம்மதியரில் படிப்பில்லா பலர் நம் ஜாதிக்காரனைப் பிறன் அடித்தானெனில் ஏன் என்றுகூட விசாரியாமல் மேல் விழுந்து சண்டையிடுவது வழக்கமாய்விட்டது! மேலக்கோட்டையில் தனிப்பட்ட இருவர் சண்டை ஜாதி சண்டையாக மாறி வீண் கலஹம் நடக்கிறது! தலைவர் பகுத்தறிவை புகட்டுவாரா?

வழவழப்பேன்? கைகுத்தலரிசி சிறந்ததென எல்லோரும் கருதி அதை ப்ரசாரம் செய்வதென சில ஜில்லா ஸபைகள் முயல்கின்றன. லைஸென்ஸ் கொடுக்கும் அதிகாரம் கையிலுள்ளோர், மிஷின்களுக்கு அதை கொடாமலோ அதிக வரிபோட்டோ நிறுத்தக்கூடாதா? ஏழைகள் பிழைக்கும்! ஔபாஸநத்திற்கு உமியுமகப்படும்.

அனுஷ்டிப்பாரா? மதுரையில் ஸ்ரீ. ஜட்ஜ் கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்ரீ வைஷ்ணவ ஸபையில் ஓர் அழகிய உபன்யாஸம் செய்தார். முதல் தீர்த்த சண்டை அன்ய மதத்தினரிடம் செல்வதை அறவே ஒழிக்க வேண்டுமென்றார்!

விரிஞ்சீபுர மாஹாத்ம்யம்! ஸ்ரீ மதப்பய்ய வாளவதரித்து வசித்த இந்த திவ்ய க்ஷேத்ரங்களின் மாஹாத்மியத்தைத் தமிழில்வெளியிட ஸ்ரீமான் M. V. முனிரத்னமய்யர் என்ற பெரியார் பெரும் முயற்சி செய்கிறார். ஒவ்வோரிந்தியரும் விசேஷமாக தென்னாட்டவரும் இதை எல்லா வகையாலுமா தரிப்பது கடமையாகும்!!

தேவீபாகவதநவாஹபூர்த்தி! கீழமாம்பலம் விநாயகாலயத்தில் நடந்த நவாஹ உபன்யாஸம் விஜயதசமி இரவு பூர்த்தியாயிற்று. பக்தர்கள் அபரிமிதமாககூடி கதா ச்ரவணம் செய்து உபன்யாஸகரை கௌரவித்தார்கள்.

நமன சமுத்திரம்.

ஓர் மகானின் ஆராதனை.

அக்காலத்தில் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் இராஜாவாக இருந்த மகா-ா-ஸ்ரீ விஜயரெகுநாதராயத் தொண்டமான், ஸ்ரீ. ஸதாசிவப்ரும்மேந்திரஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி ஸ்ரீ வத்ஸகுலதிலகமாயும் பிர்மஸ்ரீ வைத்யநாதசாஸ்திரிகளுடைய குமாரராயும் அவதாரம் செய்த பிரும்மஸ்ரீ கோபாலகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களை திருச்சி ஜில்லா பிக்ஷாண்டார் கோவிலில் இருந்து சமஸ்தானத்திற்கு அழைத்துவந்து, புதுக்கோட்டைக்குத் தெற்கே ஆறுவது மைலில் உள்ள நமன ஸமுத்திரத்தில் வாஸம் செய்யும்படி சகலவித ஏற்பாடுகளும் செய்து கொடுத்து அன்றுமுதல் "மகாபாஷ்யம் இராஜபூஜித குருஸ்வாமிகள்" என்ற பிருதுகளும் கொடுக்கப்பட்டு இன்றும் அவ்வம்சத்தார்களுக்கு "மகாபாஷ்யம்" என்ற காரணப் பெயர் வழங்கிவருவது ஸர்வஜனப் ப்ரஸித்தம்.

ஸ்ரீ சதாசிவேந்திராளின் ஆக்ஞையின் பேரில் ஷை கோபாலகிருஷ்ண சாஸ்திரிகள் கும்பகோணம் ஸ்ரீ காமகோடிபீடம் 60-வது பீடாபிஷிக்தர்களான மூன்றாவது ஸ்ரீ மகாதேவேந்திரசரஸ்வதீஸ்வாமிகள் அவர்களால் "துரீயாச்ரமம்" கொடுக்கப்பெற்று, ஷை நமன சமுத்திரத்தில் விதேகமுக்தியடைந்து, சுத்தாத்வைத, நித்ய, நிரதிசய ஏகாநந்த நிர்கம, ஸ்வயம் பிரகாச சைதன்ய ஷை மகானுடைய சமாதி ஷை நமனசமுத்திரம் சிவன் கோவிலுக்குத் தெற்கே ஏற்படுத்தப்பட்டு தினசரி இருகால பூஜா நைவேத்தியங்கள் நடந்து வருகிறது.

நிற்க, ஷை மகானுடைய வம்சஸ்தர்களாயும், தற்காலம் இராஜபூஜித குரு பரம்பரஸ்தானத்தை அலங்கரித்து வருபவராயுமுள்ள பிரும்மஸ்ரீ "மகாபாஷ்யம்" வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்களும், ஷை வம்சஸ்தரும் மகாபாஷ்யம் பிரும்மஸ்ரீ அ. கிருஷ்ண சாஸ்திரிகள் (கானப்பேட்டை) அவர்களும் சேர்ந்து நிகழும் பகுதானிய ஸூ புரட்டாசிமீ 4உ (20—9—38) பௌம வாரம் துவாதசி திதியாகிய சுப தினத்தில் நமனசமுத்திரம் ஷை மகானுடைய அதிஷ்டானத்தில் மகன்னியாஸ புரஸ்ஸர ஏகாதசருத்ராபிஷேக, அலங்கார தீபாராதனைகளும் செய்து பிறகு, வேதாத்யயன சம்பன்னர்களாயும் சிஷ்டர்களாயும் உள்ள பிராம்ஹணோத்தமர்களை வரணம் செய்து விதிப்பிரகாரம் ஷை மகானுடைய "ஆராதனை" மகோத்ஸவத்தை நடத்தி பிறகு, அங்கு தரிசனார்த்தம் வந்திருந்த பக்தர்கள், அன்யர்கள், ஆஸ்திக சிகாமணிகள், துரீயாசிரமிகள், முதலானவர்களுக்கு ஷட்ரஸத்துடன் போஜனம் அளித்து பிரதக்ஷிண நமஸ்கார, மந்திராக்ஷதைப் பிரசாதங்களையும் பெற்றார்கள். இதைத்தவிர, சுமார்-500 இதர ஜாதியர்களுக்கும் அறுசுவையுடன் அன்னமளிக்கப்பட்டது. அன்று வித்வான்களால் பிரஸங்கமும் நடைபெற்றது.

இம்மகா கலியில் இம்மாதிரியான சில சாத்விகர்கள் ஆங்காங்கு தோன்றி தர்ம காரியங்களில் பிரவர்த்தி செய்வதை பார்க்குமளவில் "சர்வேஸ்வரன் 'எங்கும் நிறைந்தவர்" என்பதை நாஸ்திகர்களும் நம்பியே தீரவேண்டும்.

கண்டுகளித்தோன்.

யுத்த அபாயம் நீங்கியது.

ஹர் ஹிட்லரின் அபிப்பிராயப்படி ஸுடடன் பிரதேசத்தை ஜர்மனியின் வசம் விட்டு விடவேண்டுமென்று [illegible] ப்ரான்ஸ், இதாலி முதலிய தேசங்கள் செய்த ராஜியை ஸெக் தேசம் அங்கீகரித்துவிட்டது. இதனால் பெரிய யுத்த அபாயம் தாத்காலிகமாக தடுக்கப்பட்டிருக்கிறது. ஜர்மனி அந்தப் பிரவேசத்தை ஆக்ரமித்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டது.

திவானைத் தூற்றக்கூடாது.

காந்திஜியின் கட்டளை.

திருவாங்கூர் காங்கிரஸ் கலஹத்தைப்பற்றி காந்திஜி வெளியிட்டுள்ள எச்சரிக்கையில், காங்கிரஸ் வாதிகள் திவான்மீது கூறிய பழிகளையும், வசவுகளையும் வாபீஸ்பெறவேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிட்டால் அந்தக்கிளர்ச்சியில் தாம் ஆதரவு காட்ட முடியாதென்றும் சொல்லுகிறார்.

திருவாங்கூரில் காங்கிரஸ் கலஹம்.

திருவாங்கூரைச் சேர்ந்த பஸ்கொடி என்ற ஊரில் காங்கிரஸ் குல்லாய் தரித்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடி காலித்தனம் செய்தனராம். காங்கிரஸ்காரர்களும் துப்பாக்கி வைத்துக்கொண்டு போலீஸாரைச்சுட்டனராம். போலீஸ் ஸ்டேஷன் கொளுத்தப்பட்டது. மோட்டார் தீ வைக்கப்பட்டது. ரோட்டில் மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு போக்குவரத்துத் தடை செய்யப்பட்டது. ஒரு போலீஸ்காரன் இறந்தானும். செங்கனச்சேரி' என்ற இடத்திலும் கலஹமும் துப்பாக்கி பிரயோகமும் நடந்தது.

அஸ்ஸாமில் கலஹம்.

காங்கிரஸுக்கு எதிர் ஆர்ப்பாட்டம்.

அஸ்ஸாம் மாகாணத்தில் இதரக்கக்ஷியினருடைய உதவியில்மேல் காங்கிரஸ் மந்திரிஸபை அமைக்கப்பட்டிருப்பதை எதிர்த்துப் பெரிய கலவரம் நடந்தது. மாஜி மந்திரிக்கக்ஷியினரும், முக்யமாக, மஹம்மதியர்களும் இதில் கலந்திருந்தனராம். பலத்த சேதம் நேர்ந்தது. காலித்தனமும் அதிகமாம்.

குடந்தை ராஜாபாடசாலை.

ஸ்ரீ ஸரஸ்வதீபூஜா மஹோத்ஸவம்.

நிகழும் புரட்டாசி-மீ 14உ (30-9-38) முதல் மூன்று நாட்களிலும் ராஜாபாடசாலை மாணவர்களால் 2 நாள் மூர்த்தி ஆவாஹனமும் செய்யப்பட்டு ஸ்ரீ ஸரஸ்வதி பூஜையன்று சிரோமணி ப்ரும்மஸ்ரீ M. N. ராஜகோபால சாஸ்திரிகளவர்களால் "வித்தையும் அதன் ப்ரயோஜனமும்" என்பதைப்பற்றி உபந்யஸிக்கப்பட்டு அதே ஸமயம் சபையில் வீற்றிருந்த ஷை பாடசாலை தலைமை உபாத்தியாயர் ப்ரும்மஸ்ரீ S.M. ஸ்வாமிநாத சாஸ்திரிகளவர்களாலும், ஸ்ரீ. வா. சா. வெங்கட்டராமய்யர் அவர்களாலும் ஷை விஷயத்தைக் குறித்து உபந்யஸிக்கப்பட்டு, தாம்பூலம், பிரஸாதங்கள் கொடுக்கப்பட்டு ஷை மஹோத்ஸவமானது இனிது நடந்தேறியது.

A. ராஜகோபாலன்.

Mr. T. R. கணபதிராமய்யர் பிரசுரங்கள்.

பாகவதம் காலிகோபயிண்டு	2	0	0
ராப்பர்	1	8	0
இங்கிலீஷ்	2	0	0
7, 8, ஸ்கந்தங்களில் தமிழில்	0	8	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

சாஸ்திரங்களும் ஆசாரங்களும்.

எம். எம். அனந்தராயர் எழுதுகிறார்:—

அடியிற் றெழுதப்பட்ட உபன்யாஸமானது ஸ்ரீமத் பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமத் சித்ராபுரமடாதிபத்யத்தை வஹித்துக் கொண்டு வருகின்ற ஸ்ரீமதாநந்தாச்ரம ஸ்வாமிகளால் உத்தர இந்திய தேசத்தில் ஸஞ்சாரம் பண்ணும் காலத்தில் செய்யப்பட்டது:—

ஆச்வலாயனாதி ஸூத்திரங்களில் சொல்லப்பட்ட விதிகள் நம் அனுஷ்டானங்களுக்குள் முக்யமானவை. ஆனால் நம் ஆசாரங்களாலேவரப்பட்ட அனுஷ்டானங்களாலே அவ்வளவு முக்யதை கிடையாது. சிலர்கள் சொல்லுவார்கள்— ஆசாரங்கள் ஷை சாஸ்த்திரங்கள் இவைகளுக்குள் பலாபல நிரீக்ஷணையில் ஆசாரங்களே ப்ரபலமானவை. இவ்விஷயத்தில் நம்முடைய அபிப்பிராயமென்னவென்றால் — அனாதியாய் நாமனுஷ்டிக்கப்பட்டு கொண்டு வருகிற ஆசாரங்களை நாம் இன்றயதினம் விடக்கூடாது.

நமக்கு மீமாம்ஸாதர்சனமானது நம் சகல தர்மங்களுக்கு ஆதாரக்ரந்தமாயிருக்கின்றது. ஜைமினி ஸூத்ரக்காரர் சொல்லுகிறார்:—

“வைதிக தர்மத்திற்கு விரோதமான ஆசாரத்தை நாம் அனுஷ்டிக்கக்கூடாது” (1-3-3) அதேப்ராகாரமாய் சபர பாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது:— “பலாசத்வஜத்திற்கு வஸ்த்ரவேஷ்டனமாசாரமானது வழங்கிக் கொண்டு வருகிறது. இவ்விதமாக இதர சில ஆசாரங்களை அனுஷ்டிக்கின்றார்கள். வைதிக விதிகளுக்கு விரோதமான இவ்வித ஆசாரங்களை அனுஷ்டிக்கக்கூடாது” (1-3-4) ஷை ஸ்ரீமத்பகவத்கீதையிலும் சொல்லப்பட்டிருக்கிறது— “எவன் ஸ்வேச்சானுசாரமாய் நடந்து விஹித விதி நிஷேதங்களை தள்ளிவிடுகிறானோ அவன் இவ்வுலகத்தில் எவ்விதமான ஸாதனையும் சுகத்தையும் அடைமாட்டான். அவனுக்கு பரலோகத்தில் நல்ல கதியானது கிடையாது. ஆகையால் எந்த கர்மாக்களை செய்யவேண்டுமோ எந்த கர்மாக்களை செய்யக்கூடாதோ இவைகளெல்லாம் நிச்சயிக்கிறதற்காக நாம்சாஸ்திரங்களையே ஆதாரமாய் எடுத்துக்கொள்ள வேண்டியது” (XVI-23-24) இப்படியிருக்கையால் கீதையானது ஆசாரப்ராபல்யதையை ஒப்புக்கொள்ளவில்லை.

ஆனால் ஆசாரமானது சாஸ்த்ரங்களை காட்டிலும் ப்ரபலமாயிருக்கின்றது என்று வெகுகாலமாய் ஒரு வதந்தியானது வழங்கிக் கொண்டு வருகிறது. இந்த வதந்தியினுடைய மூலகாரணமானது சொல்ல முடியாத விஷயமாயிருக்கின்றது. அதிதேசமாக இவ்விஷயமானது தோன்றுகிறது. சிலவருஷங்களுக்கு முன் காலஞ்சென்றஸ்ரீமான் பஞ்சை மங்கேஷராயர் ஒரு பெருங் கூட்டத்தில் உத்கோஷித்தார்— “அக்காலத்திருக்கின்ற ஒரு பசுமாடானது பால் கறக்கிறதற்காக உபயோகபடாது. வ்யவஸாயத்திற்கும் உபயோகப்படாது.” இவ்வார்த்தையில் ஸத்யமுண்டு. ஏனெனில் நம் ஜாதியினுடைய ஸ்திதியானது விபரீதமாக ஆகிக்கொண்டு வருகிறது. வெகுகாலமாய் அனுஷ்டித்துக்கொண்டு வருகின்ற ஆசாரங்களை விட்டு விட வேண்டு மென்று சிலர் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இவர்களில் சிலர் மேற்சொன்னவர்களாலே அபிப்ராயித்த விஷயத்தை அனுஷ்டானத்தில் கொண்டு வந்து விட்டார்கள். மற்றவர்களில் சிலர் சில விஷயங்களில் மாத்திரம் நம் ஆசாரங்களில் திருத்தல் செய்ய வேண்டு மென்று ஆக்ஷேபிக்கிறார்கள். ஆனால் இவர்கள் அநேககாலமாய் நடத்திக்கொண்டு வரும் ரதோத்ஸவாதி விஷயங்கள் பற்றி ஆசாரணையின் திருத்துதல் விஷயத்தை ஆமோதிக்கிறதற்காக ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

மனுஸ்மிருதியில் அது உறுதியாக சொல்லப்பட்டிருக்கிறது.

“க்ருதயுகத்திற்கு வேறு தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. த்ரேதாயுகத்திற்கு வேறு விதங்களான தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. த்வாபர யுகத்திற்கு மற்ற விதமான தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஷை கலியுகத்திற்கு இன்னும் வேறு தர்மங்கள் செல்லப்பட்டிருக்கின்றன. இவ்விதமாய் காலானுஸாரேண ஒவ்வொருயுகத்திற்கு வெவ்வேறு தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆகையால் எல்லா காலங்களுக்கும் சொல்லப்பட்ட அஹிம்ஸாதி சாதாரண ஸாமான்ய தர்மங்களுக்குஸநாதன தர்மங்களெனப்படும்.

ஷை சிலர் தர்ம தத்வங்களை இல்லோகஸ்வபாவ தத்வங்களால் ஆராய்ந்து பரிசோதிக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். இவ்விதமாய் சொல்லிக்கொண்டு பாமர ஜனங்களுடைய கண்ணில் தூளியை போடுவதற்கு சுலபமாய் ஸாத்யமாகும். ஆனால் இதுவரையில் இந்த லோகதத்வ சாஸ்திரத்தில் சொல்லாத ஷை இனிவரையில் தத்வக்ஞர்களுடைய கண்ணிற்கு தென்படாத அனேக கூடமாயிருக்கின்ற விஷயங்கள் பற்றி அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மேலும், இன்றைய தினம் ப்ரகாசிக்கப்பட்ட தத்வங்களானவை வருங்காலத்தில் ப்ரகாசிக்கப்பட்ட தத்வங்களுடைய ஸஹாயத்தினல் இந்த தத்வங்கள் சரியான தத்வங்களில்லையென்று சொல்வதுமுண்டு. இவ்விதமான தத்வ நிர்ணய மார்க்கமானது நமக்கு விகித தர்ம தத்வங்களுடைய நிர்ணயத்திற்காக உபயோகம் செய்யலாகாது.

ஸ்வேச்சையாக, நம்மை ப்ராம்மணர்களென்று ப்ராம்மணேதர ஜனங்கள் நம்மை ஸம்மானிக்க வேண்டுமென்று சிலர் இச்சிக்கின்றார்கள். விஸ்வாமித்ரர் வஸிஷ்டரிடத்திலிருந்து ப்ராம்மண பட்டத்தை வாங்குகிறதற்காக முயற்சியை செய்தது போல் நம்மிடத்தில் ப்ராஹ்மண்யம் இருக்கிறதென்று இதரர்களிடத்திலிருந்து ஆமோதனையை கேட்கவேண்டுமோ? முன்காலத்தில் இவ்விதமாய் செய்ததினால் ராஜகீய வ்யவஹாரத்திற்கு சம்பந்தித்த உத்யோகங்களை கொடுக்கும் சமயத்தில் ப்ராம்மணர்களுக்கு இவ்விஷயத்தில் இல்லாமை தன்மையாக செய்ததற்கு அனேக உதாரணங்களில்லாமலில்லை.

வைதிக தர்மத்திலேயே நம்மெல்லோருக்கும் எப்பொழுதும் இருக்கும்படி ஸ்ரீமத் பரமானந்தாரனவர் ஏவட்டும்.”

வே. ஸோ. சர்மவின் பிரசுரங்கள்.

சங்கரோபதேசம்.	2	0	0
பத்ம புராணம்.	0	12	0
மார்கண்டேயபுராணம்	0	6	0
வாமன புராணம்.	0	6	0
வைகுண்ட ஏகாதசி	0	0	6
ஸ்ரீ ஸ்துதிகுஸுமாஞ்சலி	0	1	0
ப்ரஹ்மவை வர்த்தபுராணம்	0	12	0
கூர்மபுராணம்	0	6	0
ப்ரஹ்ம புராணம்	0	12	0

மதருஸ் லாஜர்னல் அச்சுக்கூடம் பிரசுரங்கள்.

From his masters Lips	1	0	0
Hindu Ideal	3	0	0
வால்மீகி ராமாயணம் 7 காண்டம் (தேவநாகரிலிபியில்)	ரூ.	அ.	ப.
இன்பேப்பர்	5	0	0
நிக்பேபர்	4	0	0

கிடைக்குமிடம் :—

ஸ்ரீ ஜனார்தா பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட் டவுன்ஹைஸ்கூல் ரோடு: கும்பகோணம்.

புராணக் கதைகள்.

(ராமசந்த்ர ஹரி:)

நாரதர் ஸ்ருஞ்சயனுக்குபதேசித்த பதினாறு அரசர்களின் சரித்திரத்தைக் கண்ணன் தருமருக்குரைத்தது.

அவிக்ஷித்தின் குமாரனான மருத்தன் என்றும் ஓரரசனிருந்தனன். அவனுடைய யாகத்தில் இந்திரன் வருணன் பிருகஸ்பதி முதலிய தேவர்கள் ப்ரத்யக்ஷமாக வந்தார்கள். அவன் செய்த யாகத்தால் தேவராஜனான இந்திரனுக்கு அவனிடம் அஸூயை உண்டாயிற்று. இந்திரனுக்காக பிருகஸ்பதியானவர் அவனிடம் சென்று இனி யாகம் செய்யாதிருக்கவேண்டுமெனத் தடுத்தார். ஆயினும் அவர் தம்பியான ஸம்வர்த்தரென்றும் ரிஷி பிரகஸ்பதியின் இஷ்டம் நிறைவேறுவண்ணம் அரசனுக்கு யாகம் செய்வித்தார். அம்மருத்தன் பூமியை ஆண்டகாலத்தில் பூமியில் உழவு முதலியன இல்லாமலே பயிர்கள் செழித்தோங்கின.

அவன் செய்த ஸத்ரயாகத்தில் விச்வே தேவர்கள் ஸதஸ்யர்களாகவும் மருத்தென்றும் தேவர்கள் ரித்விக்குகளாகவும் ஸாத்தியர் முதலிய தேவர்கள் பரிசாரகர்களாயுமிருந்தனர். அவன் கொடுத்ததக்ஷிணையோ தேவமனித கந்தர்வர்களுக்கு அதிகமாயிருந்தன. ஸ்ருஞ்சய: உன்னையும் உனது குமாரனையும்விட தர்மம், ஞானம், ஐசுவரியம், வைராக்யம் இவைகளில் மேற்பட்டவனும் மிகப் புண்யவானுமான அம்மருத்தனே இறந்தானென்றால் நீ இப்போது வருந்தவே வேண்டாம்,

ஸுஹோத்ரன் என்னுமோரசனிருந்தனன். அவன் விதிதன் என்பானது புத்திரன். அவன் அரசாளுங்கால் அவனிடமிருந்த பிரியத்தால் இந்திரன் ஒருவருஷம் பொன்மழை பொழிவித்தான். பூமியானது அப்போது வஸுமதி என்ற உண்மையான பெயருடையதாயிருந்தது. ஆறுகளில் பொன்னீரோடிற்று. அதிலுள்ள மீன், நண்டு, ஆமை முதலியனவெல்லாம் பொன்னுருவமுள்ளவைகளாயிருந்தன. அவைகளைக்கண்டு ஸுஹோத்ரன் ஆச்சரியமடைந்தான். இவ்விதமான அளவில்லாத ஸ்வர்ணத்தை அவன் தான் குருக்ஷேத்ரத்தில் ஒரு பெரிய யாகத்தைச் செய்து அதில் பிராமணர்களுக்குக் கொடுத்துவிட்டான். ஸ்ருஞ்சய! உன்னையும் உன் புத்திரனையும் விட மிகச் சிறந்த புண்ணியவானான அந்த ஸுஹோத்ரனே மரித்தானெனில் நீ இப்போது சோகப்படவேண்டிய காரணம் ஒன்றுமேயில்லை.

ஸ்ருஞ்சய! பிருஹத்ரதன் என்ற அங்க தேசத்தரசன் இறந்ததையும் கேள். அவன் மேன்மையான 1000000 அச்வங்களையும் ஸ்வர்ணாபரணபூஷிதைகளான 1000000 கன்னிகைகளையும் தானம் செய்தான். அவன் செய்த யாகத்தில் 1000000 யானைகளையும் அலங்கரிக்கப்பட்ட ஆயிரம் பசுக்களுடன் கோடி காளைகளையும் தக்ஷிணையாகக் கொடுத்தான். இந்திரன் விஷ்ணுபதம் என்ற மலையில் பிருஹத்ரதன் செய்த ஸோமயாகத்தில் ஸோமபானம் செய்து மதமடைந்தான். பிராம்மணர்களும் தக்ஷிணைகளால் சந்தோஷித்தார்கள். அவன் செய்த நூற்றுக்கணக்கான யாகங்களில் தேவமனித கந்தர்வர்கள் விசேஷமான தக்ஷிணைகளை அடைந்தார்கள். ஸோம ஸம்ஸ்தை என்றும் 7 யாகங்களில் அவ்வரசன் கொடுத்தது போல் தக்ஷிணை கொடுப்பவன் அப்போதுமிப்போது மெப்போதுமில்லை. தர்மாதி நான்கு புருஷார்த்தங்களிலும் உன்னையும் உன் புத்திரனையும்விடச் சிறந்தவனும் புண்ணியசாலியுமான அவ்வரசனே இறந்தானெனில் நீ இப்போது உனது புத்திரனைப் பற்றி வருந்தவேண்டாம். (தொடரும்).

215231



அநாவசியமாக ஏன் - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

வெளியூர் செய்திகள்.

திருவண்ணாமலை.

ஸ்ரீ ஆசார்ய அத்வைத வர்ணாஸ்ரம தர்ம
பரிபாலன சபை.

தற்காலம் கலியின் கொடுமையால் உலகத்தில் பலவித அனர்த்தங்கள் சம்பவித்து, ஞானிகள் நிறைந்த நம் நாட்டிலும்கூட ஆங்காங்கு மதத்தை தூஷித்தும், சாஸ்திர விருத்தமான கார்யங்கள் பலவற்றை செய்யத் தூண்டக்கூடியதுமான பிரசாரங்கள் நடைபெற்றுவருகின்றன. இவைகளையெல்லாம் கூடியவரையில் தடுப்பான்வேண்டி ௸ சபையானது பல மதாபிமானிகளால் 5—9—38 தொடங்கப்பெற்றது.

அதன் முக்ய உத்தேசங்கள்:— (1) வர்ணாஸ்ரமதர்மங்களைக் காப்பாற்றுதல். (2) வேதசாஸ்திர புராணங்களையும், நித்யநைமித்திக ஆசாரங்களையும் வரைத்தல். (3) முக்கியமான விஷயங்களை அவ்வப்போது பத்திரிகைகள் மூலமாய் பிரசுரித்தல். அவைகளை துண்டுப்பிரசுரங்களில் அச்சிட்டு இலவசமாய் எல்லோருக்கும் வழங்குதல்.

இச்சபையின் அதிகாரிகள் தலைவர்:— ஸ்ரீமத் ஸ்வாமிநித்ய பரமஹம்ஸ வித்யானந்த பாரதி அவர்கள். காரியதரிசி:— V. A. வேங்கட சுப்பா பட்டு ரிடையர்டு டிப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்.

உபகாரியதரிசி.— V. K. வேங்கடரமணன்

கமிட்டி மெம்பர்கள்:— 1. பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள். 2. வேங்கடசுப்பா சாஸ்திரிகள். 3. சஞ்சீவி சாஸ்திரிகள் 4. தி. சநாராயணசாமி அய்யர்.

இச்சபையின் சாதாரணக்கூட்டம் ஒன்று 23-9-38 சுக்ரவாரத்தன்று அய்யங்குள அக்ரஹாரம் ‘,பரப்பிரம்மவிலாஸத்தில்'' மாலை 6மணிக்கு பிரம்மஸ்ரீ சீதாராமசாஸ்திரிகளின் அக்ராஸனத்தின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் ஏராளமான ஆஸ்திகர்கள் குழுமியிருந்தனர்.

பிரார்த்தனை முடிந்த பின்னர் சென்ற கூட்டத்தின் குறிப்புகள் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

பின்னர் பிரம்மஸ்ரீ வேங்கடசுப்பா பட்டு அவர்கள் "ப்ராம்ஹமுகூர்த்தமும், பிராதஸ்மரணமும்'' என்பதுபற்றி உபன்யசித்தார்.

அவர்தம் உபன்யாஸத்தில் ப்ராம்ஹமுகூர்த்தமென்பது அப்பொழுதுவிழித்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் குறித்தும் பகவானின் அனந்தநாமங்களிலொன்றையாவது அவ்வேளையில் ஸ்மரிப்பதாலேற்படும் நன்மைகளைக் குறித்தும் சாஸ்திரம், விஞ்ஞானம், அனுபவம் இவைகளையொட்டி மிகவிரிவாகப்பேசி, தன்னால் தொகுக்கப் பட்டிருக்கும் பிராத ஸ்மரணத்திற்கேற்ற சிலசுலோகங்களையும் படித்துக் காட்டினார்.

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின:—

1. வர்ணாஸ்ரமதர்மபரிபாலன சபைகள் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்தி வேலை செய்யுமாறு இச்சபை எல்லா ஆஸ்திகர்களையும் கேட்டுக்கொள்ளுகிறது.
2. பிராதஸ்மரண சுலோகங்களை புத்தக ரூபமாய் வெளியிடவும், பத்திரிகைகளுக்கு அனுப்பி பிரசுரிக்கவும் காரியதரிசிக்கு இச்சபை அதிகாரமளிக்கிறது.
3. இச்சபையார் அனுப்பும் பிரசுரங்களை 'ஆர்ய தர்மம்' பத்திரிகையில் பிரசுரிக்குமாறு பத்திராதிபரைக் கேட்டுக் கொள்வதுடன், வாரா வாரம் ஓர் பிரதியையும் அனுப்பிவருமாறு கேட்டுக்கொள்கிறது. தீர்மானங்கள் முடிந்த பின்னர் "ஓம்பூர்ணமத:" என்ற சாந்தி கோஷத்துடன் சபை கலைந்தது.

காரியதரிசி,
ஸ்ரீ ஆர்ய அத்வைத வர்ணாஸ்ரம தர்ம பரிபாலன சபை, ஸ்ரீமதருணாசல க்ஷேத்ரம்.

குறிப்பு:—சபை புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதால், அன்பர்கள் தங்கள் கடிதங்களில் 50, அய்யங்குள அக்ரஹாரம், திருவண்ணாமலை "என குறிக்கப் பிரார்த்தனை.

திருக்கோவிலூர் வீரட்டானம்.

நவராத்திரியில் உபந்நியாஸம்.

இவ்வூரில் ௸ ஸன்னிதானத்தில் நவராத்திரி உத்ஸவத்தை முன்னிட்டு ௸ தேவஸ்தானம் தர்மகர்த்தா பிர்மஸ்ரீ வக்கீல் வி. ஜி. ராமச்சந்திரய்யர் அவர்களுடைய நன் முயற்சியால் சென்னையிலிருந்து பிர்மஸ்ரீ பிரஸங்கவா ஸாஹித்ய வாங்முகபூஷண தர்மஸேவா துரந்தர சோமதேவசர்மா அவர்களை நேற்று ஸரஸ்வதிபூஜா தினத்தில் வரவழைக்கப்பட்டு ௸ யாரால் நவராத்திரியும், மஹிஷாஸுர மர்த்தனமும், என்பதுபற்றி, உபந்யஸிக்கப்பட்டது. அது ஸமயம் விசேஷ பக்தர்களும் ஸ்ரீமான் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அவர்களும் ஸதஸில் வீற்றிருந்தார்கள். பிர்மஸ்ரீ சர்மா அவர்கள் வெகு உத்ஸாஹத்துடன் நவராத்திரி புண்யகால விசேஷத்தைப்பற்றியும், அதில் அம்பாளை அவச்யம் பூஜிக்கவேண்டியதைப் பற்றியும், அதனால் ஏற்படும் பலன்களைப் பற்றியும் மஹிஷாஸுரன் வரலாறுபற்றியும் அவன் வதத்தைப்பற்றியும் நவராத்திரி உத்ஸவாங்கமாக இதை நடத்தின பிர்மஸ்ரீ தர்மகர்த்தா அவர்களைப்போற்றியும் விரிவாக மூன்றுமணிநேரம் உபந்யஸித்தார்கள். பிறகு ஸ்ரீ ஞானியார் முடிவுரையாக கால்மணி வரையில் பேசுகையில் சர்மா அவர்களின் வாக்வன்மையைபற்றி ஆச்சர்யமாகப் பேசினார்கள். பிறகு ஸபை முடிவடைந்து மண்டப தீபாராதனை, விநியோகம் முதலியவை செய்யப்பட்டன.

ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள்.

தண்டாங்கோரை.

நிரூட பசுபந்த யாகம்.

தஞ்சை ஜில்லா தண்டாங்கோரை வாஸிகளாயும், வெகு யாகங்களால் யக்ஞேச்வரரை திருப்திசெய்து உலகிற்கு வெகு க்ஷேமத்தை செய்தவாளாயும் உள்ள ப்ரம்ஹஸ்ரீ அப்பாத்துரை தீக்ஷிதர் 1, அவர்கள் குமாரர் வைத்யநாத தீக்ஷிதர் அவர்களையும் கொண்டு, மறுபடியும் லோக க்ஷேமத்தையும், ஜன்ம ஸாபல்யத்தையும் கருதி, நாளது புரட்டாசி-மீ 20உ வியாழக்கிழமை, 21உ வெள்ளிக்கிழமை அன்றும் ப்ரதி வருஷம் செய்யவேண்டியதும், 36ம் வருஷத்தியதும், 10-வருஷத்தியதுமான 'ஸாவித்ர சயனத்தோடு கூடிய நிரூட பசுபந்தம்' என்கிற மஹாயாகத்தை சந்திர மௌளீச்வாருடையவும், ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகளினுடையவும், யக்ஞேச்வாருடையவும பரிபூர்ண அனுக்ரஹத்தால் தண்டாங்கோரையில் நடக்கிறபடியால் அதற்கு எல்லோரும் வந்திருந்து திரவ்ய ஸகாயம் செய்து யக்ஞேச்வர ப்ரஸாதத்தை அடையக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆஸ்திக மகாஜனங்கள்.

உயர்ந்த புஸ்தகம்!
உயர்ந்த புஸ்தகம்!!

ஸ்ரீநகர விமர்சனம்.
ஆர்யாத்விசதி or ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்னம்.
[பிர்மஸ்ரீ அருட்கவி ந. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் எழுதிய தமிழுரையுடன் கூடியது.]
விலை 0—12—0. தபாற்செலவு வேறு.
கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட்
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd, Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அருங்கலப் ல

4 40
123

13 - 12 - 1938

2152

494 477 549
28 OCT 1938
MADRAS
215252

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

புஸ்தகம் 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்யவஸ புரட்டாசிமீ 27உ 1938வஸ அக்டோபர்மீ 13உ | லக்கம் 40

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு	ரூ.	20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு	அணா.	0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

"விடுதலை" பத்திரிகை ஆசிரியர் கைதியானார்.

ஈரோட்டிலிருந்து வெளியாகும், சு.ம பத்திரிகையான "விடுதலை" யில் வகுப்புத்வேஷ முண்டுபண்ணக்கூடிய கட்டுரைகள் வெளிவந்திருப்பதாகக் கருதியசென்னை சர்க்கார் உத்திரவுப்படி அதன் ஆசிரியரும், பிரசுரகர்த்தாவும் ஈரோட்டில் கைதிசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஜாமீன் மனு 15தேதி விசாரிக்கப்படும்.

லார்டு லின்லித்தோ.

ஸமஷ்டி விஷயமாகப்புதிய முயற்சி.

இந்திய வைஸ்ராய் அவர்கள் இம்மாதம் 24உ பம்பாய் வந்து தமது பதவியை ஏற்றுகொள்வார். இவர் இங்கிலாந்து சென்று வந்ததின் பலன் உத்யோக தோரணையில் தெரியவில்லையாயினும், லண்டன் நிருபர்கள் இவ்விஷயமாக ஓர் புதிய செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது வைஸ்ராய் இந்தியா மந்திரியுடன் கலந்து பேசியதன் பலனாக இந்தியாவில் எல்லாக்கக்ஷிப் பிரதிநிதிகளையும் கொண்ட ஓர் ஆலோசனைக்கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்யப்படும் என்றும், காந்திஜியுடன் வைஸ்ராய் ஸந்தித்து பேசுவாரென்றும், திட்டமாகச்சில ஏற்பாடுகளைஉடனேசெய்துவிடும் உத்தேசத்துடன் வைஸ்ராய் இந்தியா திரும்பி வருவதாயும் சொல்லப்படுகிறது.

டெல்லி சிவாலய ஸத்யாக்ரஹம்.

அநேகர் கைதியாயினர்.

டில்லி சிவாலய விஷயமாக நடக்கும் ஸத்யாக்ரஹம் நாளுக்குநாள் வலுத்து வருகிறது பிரதி தினமும் அநேகர் சட்டத்தை மீறிக் கைதியாகி வருகிறார்கள். லாகூர் முதலிய இடங்களிலிருந்து இதற்காகத்தொண்டர்கள் பலர் வருகின்றனர். டில்லி முனிஸிபாலிடி ஹிந்து கௌன்ஸிலர்பலர் கவர்ன்மெண்டின் [illegible] தங்கள் பதவியை ராஜிநாமா செய்து வருகிறார்கள்.

இதாலியிலும் ஜாதிக்கலப்பு விவாஹத்தடை.

ஹிட்லர் செய்தது போல், முஸோலினியும் இதாலியில் கலப்பு விவாஹத்தடை உத்திரவை வெளியிட்டிருக்கிறார். ஆர்ய ஜாதியினரான எந்த இதாலிய பிரஜையும், அந்நிய தேசத்தவரை விவாஹம் செய்து கொள்ளக்கூடாதென்றும், முக்யமாக யூதர்களை மணக்கக்கூடாதென்றும் உத்யோகத்திலிருப்பவர்கள், எந்த அந்நிய ஜாதிஸ்திரீயையும் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாதென்றும் உத்திரவு போட்டிருக்கிறது.

காங்கிரஸ்காரர் அடிவாங்கினர்.

ரோட்டாக் என்ற ஊரில் நடைபெற்ற ஜமீன்தார் மஹாநாடுக்கு பஞ்சாப் மந்திரிகளும் வந்தனர். அப்போது காங்கிரஸ் வாதிகள் இதை ஸஹியாமல் கூட்டத்தில் கலஹம் ஆரம்பமாகியது. காங்கிரஸ்காரர்களுக்குத்தடியடிகளும் கல்லடியும்விழுந்தது. காங்கிரஸ் கொடி கொளுத்தப்பட்டது. காங்கிரஸ்காரர்களின் வீட்டிற்குள் கூடப்புகுந்து கலகம் செய்தார்களாம்.

டாக்டர் காரே ராஜிநாமா செய்ய மாட்டார்.

டாக்டர் காரே சட்ட ஸபை மெம்பர் பதவியை விடும்படி கார்யக்கமிட்டி விதித்த உத்திரவை நிராகரித்து விட்டார். தாம் ராஜிநாமா செய்யப்போவதில்லையென்றும், வோட்டர்களுக்குத்தாம் கொடுத்தவாக்குறுதிப்படியே நடந்து கொண்டிருப்பதாயும் அவர் கூறிவிட்டார். அவரை சுபாஷ்பாபு பயமுறுத்துகிறார். என்ன நடக்கப்போகிறதோ?

மறுபடி மறியல்.

சென்னையில் கட்டாயஹிந்தியை எதிர்த்து பள்ளிக்கூட வாசலிலும், பிரதம மந்திரி வீட்டுவாசலிலும் நடந்த ஸத்யாக்ரஹம் நின்றுவிட்டதென்று நினைக்கப்பட்டது. ஆனால் அது மறுபடியும் தலைகாட்டியிருக்கிறது. பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

பார்லிமெண்டின் அங்கிகாரம்.

ஜர்மனி, ஸகஸ்லவேகியா விஷயமாக மிஸ்டர் சேம்பர்லேன் செய்து வைத்த ராஜி உடன்படிக்கையை காமன்ஸ் ஸபை மெஜாரிடியில் ஏற்றுக்கொண்டு விட்டது. தொழில் கக்ஷி திருத்தம் தோற்றது. பலர் பிரதம மந்திரியை தாக்கியும், பலர்தாங்கியும் பேசினர்

சித்தூர் கடப்பை மது விலக்கு.

சென்னை சர்க்கார் உத்தரவுப்படி சித்தூரிலும் கடப்பையிலும் மது விலக்குத் திட்டத்தை கனம் ஆச்சாரியார் ஆரம்பித்து வைத்தார். கள்ளுக்கடைகள் எடுக்கப்பட்டன ஜனங்கள் அதில் அதிகம் உத்ஸாஹம் காட்டினாராம்.

ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ்,
லிமிடெட், டவுன் ஹைஸ்கூல்
ரோடு, கும்பகோணம்.

எல்லாவிதமான அச்சு, பைண்டிங், ரூலிங் முதலிய வேலைகளும் சீக்கிரமாகவும் நயமான சார்ஜிலும் செய்து கொடுக்கப்படும்.

தமிழ், இங்கிலீஷ், நாகர, கிரந்த, எல்லா அக்ஷரங்களிலும் புஸ்தகங்கள் அச்சுப் போடுவதில் விசேஷமாய்ப் பலராலும் ஆதரிக்கப்பெற்றது. வேண்டிய விவரங்களைத் தெரிவிக்க ஸித்தமாய் இருக்கிறோம்.

மானேஜர்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T.B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரிதெரு, கும்பகோணம்.

தத்கால பரிஸ்த்தியும் அதன் குறைகுணங்களும்.

N. சாம்பசிவ அய்யர்.

நாகை ஹிந்து மதாபிமான ஸங்கத்தில் கீழ்வளூர் பிர்ம்மஸ்ரீ V. K. வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்கள் செய்த உபன்யாஸத்தின் சாராமவது:—

தத்கால பரிஸ்திதியும் அதன் குறை குணங்களும் என்பது இப்போதுள்ள உலக நிலைமையும், பழைய காலத்து நிலைமையும், அவ்விரண்டிற்குமுள்ள தாரதம்யத்தைக் கவனித்து, எது இன்றியமையாதது என்று கண்டுபிடித்து, அதன்வழி நடப்பதற்கே இந்த உபந்யாஸமாகும்.

இக்கால, பழைய, காலங்களில் ஜனங்களால் அநுஷ்டிக்கப்படும், பிரதிதின வாழ்க்கையிலுள்ள கடமைகளையே பற்றி, விசாரிக்க வேண்டும். இக்காலத்தில் பேதப்பட்டிருக்கும் குலகுணங்கள் எவைகள் என யோஜித்தால்: ஒரு மனிதன் தூங்கி எழுந்தவுடன் செய்ய வேண்டிய முதற்கடமை கடவுளை ஸ்தோத்தரித்து எழுவதற்கு பதிலாக தூங்கி விழித்தவுடன் பல் தேய்க்காமலே காபி—(bed coffee)சாப்பிடுகிற வழக்கம் வந்து விட்டது. இது மாத்திரமா, பல் தேய்க்கல் என்ற விஷயத்திலும், ஜல மல மோசன விஷயங்களிலும், —ஸ்நான விஷயத்திலும், ஆடை உடுத்தும் விஷயத்திலும், பூஜா விஷயத்திலும், ஆகார நித்ய கர்மானுஷ்டான விஷயத்திலும், தூக்க விஷயத்திலும், ஸநாதன பழக்கத்திற்கு மாறுபாடாகவே நடந்து வருகின்றன. விதி விலக்குகளும் தவறிவிட்டன. மேற்சொல்லிய ஒவ்வொரு விஷயங்களுக்கும் பழைய காலங்களில் அநுஷ்டித்து வந்த, சுருதி, யுக்தி அநுபவங்களான மூவித பிரமாணங்களுக்கும் தற்காலம் விரோதப்பட்டவைகளாக ஆயின. நமது வேத சாஸ்திர ஆகமாதிகளோ ஜீவர்களுக்கு சுகத்தைத்தருபவைகளாக இருக்கின்றன. அவைகளிடத்திலோ இக்காலத்தவர்களுக்கு நம்பிக்கையும் சிரத்தையும் குறைந்து விட்டது. சாஸ்த்ராய சலாகாயச" என்னும் வழக்கச் சொல்லை வழங்குவதுகூட நின்றுவிட்டது இவ்வித காலவிபரீதத்தினால் தர்மம் குறையவே, பாபங்கள் அதிகமாகி அதனால் அதிவிருஷ்டி, அனாவிருஷ்டி, விருதாவிருஷ்டி முதலிய கெடுதல்களும், பூகம்பாதி உத்பாதங்களும் விளைகின்றன.

இனி, மேற்சொல்லிய ஒவ்வொரு விஷயத்திலும் சென்றகால, மாறுதல்களை எடுத்துச் சொல்வதென்றால், மாஸக்கணக்கான காலம் வேண்டுமென்றும், அதற்காக அதிக முக்கியமாயுள்ள ஒரு விஷயத்தையே பேச எடுத்துக் கொள்ளலாமென்றும் அதைப்பேசி நிர்மாணித்து, நிர்மாணித்தவற்றை நாமெல்லோரும் கடைப்பிடித்து ஒழுகுவோமாகில் இவ்விபரீத மாறுதல்கள் நீங்கி பழையகாலம் போல் உலகம் க்ஷேமத்துக்கு வரலாமென்றும் அம்முக்கிய விஷயம் இதுதானென்றும் விசாரிப்பது அத்யாவச்யமாகும்.

உலகத்தில் கூடியவரையில் பாபங்களின் சம்பந்தமின்றியும் இயன்ற அளவு புண்யங்களின் சம்பாத்யமும் நாளடைவிலே ஜாக்கிரதையாய் அபிவிருத்தி பண்ணும் பக்ஷத்தில் சீக்கிரத்தில் நல்லகதி அடைவதற்கு யோக்யதையாகும். புண்ய பாபங்களோ நல்வினை தீவினையின்றி பிறப்பவைகளல்ல. நல்வினை செய்பவர்களை தர்மவான்கள் என்றும் தீவினைகள் செய்பவர்களை அதர்மவான்கள் என்றும் உலகத்தவர்கள் அழைக்கிறார்கள். ஆனால் வினைகளோ—(கர்மாக்களோ)திரிகரணங்களால் செய்யப்படுபவைகளாகின்றன. அத்திரிகரணங்களோ மனது, வாக்கு, காயம் இம்மூன்றுமேதான். இம்மூன்றையும் ஜீவனின் கைவசப்பட்ட ஆயுதங்களாக சொல்லப்படுகின்றன. கரணம் சொல்லிற்கு ஆயுதம் என சாஸ்திரத்தால் வெளியாகிறது. இம்மூன்று கரணங்களும் முக்கியம், அமுக்யம் என இருவகையாக பிரிக்கப்பட்டுள்ளன. இவைகளில் முக்கிய ஆயுதம் மனம் என்னும் தத்துவமே. மற்றைய இரண்டினையே அமுக்யமென கூறலாகும். முக்யமான மனதை ஜீவன் நேரில் அறியாவிட்டாலும் அது உளதென்னும் இருப்பை ஒப்பிக்கொள்ளாதவன் ஒருவனுமில்லை. அதுவோ உருவமற்றது. மிகவும் ஸூக்ஷ்மமானதால். ஏனெனின் ஸூக்ஷ்ம பூதங்களினுடைய சத்வகுணச் சேர்க்கையால் தோன்றியதாகிறது. அதற்கிருக்கும் வலிமையோ அளவிடமுடியாதாம். அது ஸூக்ஷ்ம இந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும் ஐந்து ஞானேந்திரியங்கட்கும், வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபத்தம், என்னும்ஐந்து கர்மேந்திரியங்கட்கும் எஜமானனாய் இருக்கிறது "தசேந்திரியாத்யக்ஷ:" என்று சுருதியும் சொல்கின்றது. இனி இந்த பத்து இந்திரியங்கட்கும் வாசஸ்தானமாக ஒரு ஸ்தூலசரீரம் வேண்டும். அதையே காயம் சொல்லால் அழைக்கப்படுகிறது. ஆகவே உலகத்தில் நினைப்பு தொழிலான கர்மத்தைச்செய்கிறது மனதென்றும், அப்படி அதே ஒரு தொழிலைச்செய்வதால் அம்மனதுக்கு கர்த்ரு (செய்யுந்தன்மை) த்வமும், 10 இந்திரியங்களை ஏவுதலால் காரயித்ருத்வ (செய்விக்குந்தன்மை)மும் உண்டென அநுபவத்தாலேயே விளங்குகிறது. ஆதலால் இப்பத்து இந்திரியங்கட்கும் இவைகளின் துவாரமாக ஸ்தூல சரீரங்கட்கும் தொழில்கள் ஏற்படுகின்றன. இன்னும் இந்த மனதினிடத்தில் ஒரு விசித்திரமான யோக்யதையை நாமெல்லோரும் கண்டு ஆச்சரியப்பட வேண்டிய விதத்திலிருக்கிறது. அதாவது இச்சரீரத்தினால் எவ்வெவ்விதமான கர்மாக்கள் பத்து இந்திரியங்களாலும் நிகழ்கின்றனவோ அவைகள் யாவற்றிற்கும் தவறாமல் பதிவுகளை (Impressions) இம்மனது பெறுகிறது. இப்பதிவுகளோ மனதினிடம் ஏற்படாவிட்டால் திரும்ப நினைப்பு வருவதற்கு இடமில்லை. உதாரணமாக ஒருவனைப் பார்த்தோம். அவ்விதம் பார்க்கப்பட்டவனுடைய உருவத்திற்கும் அவன் குரலுக்கும் தனித்தனி பதிவுகள் ஏற்பட்டு விடுகின்றன. இதுவுமன்றி புசித்த பதார்த்தங்களின் ருசிக்கும், முகர்ந்த பதார்த்தங்களின் கந்தத்துக்கும் ஸ்பரிசித்த பதார்த்தங்களின் உணர்ச்சிக்கும் தனித்தனியே பதிவுகள் ஏற்பட்டுவிடுகின்றன. இன்றும் கமன, ஆகமன, கொடுத்தல் வாங்குதல், பேசுதல் விஷயங்கள் முதலான கர்மேந்திரியங்களின் தொழில்களுக்கும், தேச கால சம்பந்தங்களோடு பதிவுகள் ஏற்படுகின்றன. இப்பதிவுகளே உலக நடவடிக்கைகளுக்கு ஆதாரமாம். இப்படி சகல பதிவுகளையும் பெறுகின்ற ஜமானன மனது தன் தொழிலாகிய நினைப்புகளுக்கும் தன்னிடத்திலேயே பதிவு ஏற்படுத்தி கொள்கிறது. ஆனதால் ஒருவனை ஒருவன்பார்த்து "உன்மனதில் பதிந்ததா" என்று கேட்கிறான். அவனும் "பதிந்தது" என்று பதில் சொல்லுகிறான். இப்பதிவு என்னும் தமிழ் சொல்லிற்கே ஸம்ஸ்கிருத பாஷையில் ஸம்ஸ்காரம் என்னும் ஆங்கிலத்தில் impression என்றும் கூறுகிறார்கள். முடிவாக மனதிலிருந்து உதிக்கும் நினைப்புகளுக்கு காரணம் எதுவென்று விசாரிக்கப்புகின் இந்தப்பதிவுகளே தான் இன்று வியக்தமாக தெரிகிறது. அந்த நினைப்புகளுக்கு சாஸ்திரங்களில் எண்ணமென்றும், ஸங்கல்பம் என்றும், வாஸனை என்றும், விருத்தி என்றும், பெயர்கள் காணப்படுகின்றன. ஆங்கிலத்தில் (tendency) என்று சொல்லுவார்கள். இதற்கு திருஷ்டாந்தமாக ஒருவன் ஒரு பலாப்பழத்தை வாங்கி வந்து தன் குழந்தைகளுக்குத் தெரியாமல் ஒரு பீரோவில் வைத்துப் பூட்டி விட்டான். மறுநாள் விடிந்தவுடன் குழந்தைகள் அப்பலாப்பழத்தை நேரில் பார்க்கா விட்டாலும் அதின் வாசனையால் அறிந்து அக்குழந்தைகள் பலாச்சுளை கொடு என்று கேட்கின்றன. அம்மாதிரியே பார்த்தல், கேட்டல், முதலான சகல அநுபவங்கட்கும் மனதில் பதிவுகளாக கொண்டு வந்து வைக்காவிடில் திரும்ப வாசனைகளாகிய நினைப்புகள் உதிப்பதற்கு காரணமில்லை ஆகவே நினைப்புண்டாவதற்கு பதிவுகாரணம் பதிவுக்கோ அநுபவம் காரணம். அநுபவமென்றாலோ மனது இந்திரியங்களின் துவாரமாக சப்தாதி விஷயங்களுடன் சம்பந்திப்பதே காரணம். இந்த வாசனைகளை சாஸ்திரங்கள் இரண்டு விதமாய்ப் பிரிக்கின்றன "வாஸனாஸரித் விதா ப்ரோக்தா சுத்தாசமலினா ஸதா" என்றும் சுருதியால் சுத்த வாசனை என்றும் அசுத்த வாசனை என்றும் கூறப்பட்டன. நல்லகர்மாக்களின் பதிவுகளிலிருந்து சுத்த வாசனைகளும் கெட்டகர்மாக்களின் பதிவுகளிலிருந்து அசுத்த வாசனைகளும் உதிக்கின்றன— ஆதலால் வாசனைகள் விருத்தியடைய பதிவும், பதிவு விருத்தியடைய கர்மாக்களும் கர்மாக்கள் விருத்தியடைய வாஸனைகளும் ஒன்றுக்கொன்று காரணங்களாயிருக்கின்றன இதையே" வாஸனா விருத்தித:காரியம் கார்ய விருத்தியாச வாஸனா" என்று சுருதி கூறுகின்றது.

உலகில் பெரும்பாலோர் (ஆஸ்திகர்கள்) ஈஸ்வரன் ஒருவன் உளனென்றும் அவனே எங்கும் நிறைந்துள்ளான் என்றும் அவனுடைய பிரேரணையாலே எண்ணங்களை உதிப்பிக்கச்செய்கிறான் என்றும் அந்த எண்ணத்தின் வழி நடத்தப்படும் ஒவ்வொரு கர்மாக்களுக்கும், ஏற்படும் பலன்கள் (சுக துக்கங்கள்) ஈஸ்வரனால் அளிக்கப்படுகிறதென்றும் ஆனது பற்றி ஜீவர்கள் பரதந்திரர்களென்றும் தங்களால் ஒன்றும் ஆகவில்லை என்றும் இவைகளை "விதி" என்றும் சொல்லிக் கொண்டு காலத்தை கழிக்கிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு பண்டையகாலங்களில் சுருதி ஸ்மிருதிகளில் நம்பிக்கையும் சிரத்தையும் விசாரணையும் அதன்படி நடத்தலும் எல்லோருக்கும் சர்வசாதாரணமாக இருந்ததோ அவ்வளவுக்கவ்வளவு இக்கலியில் முற்றிலும் மாறுதலை அடைந்து விட்டன. தற்காலத்தில் சுலபமாய் "விதி" என்னும் சொல்லை உபயோகப்படுத்திக்கொண்டு அவர்களுக்குத் தோன்றிய எண்ணத்தின் வழி நடக்கிறவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் சொல்லும் "விதி" என்னும் சப்தத்திற்கு தாத்பரியமே இல்லை. இன்னும் சிலர் "விதியை மதியால் வெல்லலாம்" என்று சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். ஆதலால் "விதி" என்னும் சொல்லுக்கு பொருள் என்னவென விசாரித்தறிவதே நமது முக்கிய கடமையாகும்.

இனி "விதி" என்பது என்ன :— ஒருவன் எந்த கரணத்தினாலாவது-அல்லது கரண (மன) சம்பந்த இந்திரியத்தினாலாவது, காயத்தினாலாவது, ஒரு கர்மாவைச்செய்யின் அதனால் தவறாது மனதில் பதிவு ஏற்பட்டுவிடுமென்பது விதி" நான் கர்மாவைச் செய்வேன் பதிவு ஏற்படக்கூடாது" என்று எவ்வளவு முயற்சித்தாலும் பதிவு ஏற்படாமலிராது. அப்பதிவிலிருந்து வாஸனை (எண்ணம்) உதிக்குமென்பது விதி" நான் கர்மாவைச் செய்து பதிவு ஏற்பட்டும் (வாஸனை) எண்ணம் உதிக்கக்கூடாது" என்று எவ்வாறு

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க.)

அகல்யா சாப விமோசனம்.

யோகசாஸ்திர நிருபணம்.

நான் இராமாயண சரித்திரம் யோகசாஸ்திரத்தின் நிருபணமென்று ஆங்கில பாஷையில் புஸ்தகம் அச்சிட்டு இருக்கிறேன். தமிழ் பாஷை மட்டும் தெரிந்தவர்களுக்கு தெரியும்படி அதின் முக்கியமான கட்டங்களை தமிழில் இந்த பத்திரிகையில் போட்டு வெளியிட உத்தேசிக்கிறேன். அதில் இன்று அகல்யா சாப விமோசனமென்ற பாகத்தை கீழே விவரித்திருக்கிறேன்.

ஷட் சக்கர நிருபணம் என்ற சாஸ்திரத்தில் நம்முடைய சரீரத்தில் 7 சக்கரங்களிருப்பதாகவும் அவைகளின் மூலம் ஸுஷும்ணநாடியிலிருப்பதாயும், அந்த நாடியானது மூலாதாரத்திலிருந்து சிரஸ் வரைப்போகிறதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ஒரு சக்கரம் இரண்டு புருவங்களுக்கும் மத்தியில் உள்ளது. அதற்கு ஆக்ஞா சக்கரம் என்று பெயர். அது தாமரை மலர் போல் உள்ளதாயும் அதற்கு 100 இதழ் களிருப்பதாயும் அந்த இதழ்களில் ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள 50 அக்ஷரங்களும் இரண்டு தபா வரிசையாக எழுதப்பட்டிருப்பதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 50 அக்ஷரங்களுக்கும் சுருக்கிச்சொல்லுகிற பெயர் பாணினீ சூத்திரப்படி பார்த்தால் "அகல்" என்று வருகிறது. அந்த சூத்திரம் "அ, இ, உண்" என்று ஆரம்பித்து "ஹல்" என்பதில் முடிகிறது. அதில் "அ" முதல் எழுத்தாயும் "ஹல் கடைசி எழுத்துக்களாயுமிருப்பதால் அவைகளைச்சேர்த்தால் "அஹல்" என்றுவருகிறது அதை அந்த சக்கரத்திற்குப் பெயராக வால்மீகி அமைத்திருப்பதாகத்தெரிகிறது.

அஹல்யையின் புருஷனை கௌதமர் இன்னாரென்று பார்ப்போம். ஸம்ஸ்கிருத பாஷையில் "கோ," என்ற பதத்திற்கு "கண்" என்றும் அர்த்தமுண்டு. ஆகையால் "கௌதமர்" என்பவர் கண்ணின் பார்வை என்று அர்த்தம் செய்யலாம். யோக நிஷ்டை செய்யும் பொழுது இரு கண்களின் பார்வையும் ஒன்றுசேர்ந்து புருவத்தின் மத்தியில் விழ வேணுமென்று கீதையில் சொல்லியிருக்கிறது. அந்த இரு கண்களின் பார்வைக்கு கௌதமா என்று பெயர் வைத்திருப்பதாகத் தெரிகிறது. அந்த புருவங்களின் மத்தியில் அகல்யையாகிற ஆக்ஞா சக்கரமிருப்பதால் அதில் கௌதமருகிற கண்களின் பார்வை விழுகிறதினால் அதை ஆக்ஞா சக்கரத்திற்கு புருஷனாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஷட் சக்கர நிருபணத்தில் யோகநிஷ்டை பலப்பட்டால் அந்த ஆக்ஞா சக்கரத்திலுள்ள 100 இதழ்களும் 100 ஸூர்யனைப்போல் பிரகாசிப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இராமரை சரீரத்திலுள்ள ஆத்மாவாக அர்த்தம் செய்ய வேறு ஆதாரங்கள் பல இருக்கின்றன. சரீரத்தில் ஆத்மாவானது நிஷ்டையிலிருக்கும் போது கண்களுக்கு வருகிறது. இராமனாகிற ஆத்மா கண்களில் வந்து விழிகளின் பார்வை மூலம் ஆக்ஞா சக்கிரமாகிற அகல்யையை பார்த்தவுடன் பிரகாசமில்லாமலிருந்த ஆக்ஞா சக்கரம் பிரகாசிக்கிறபடியால் உயிரில்லாத அகல்யையாகிற ஆக்ஞா சக்கரம் உயிருடன் கூடியதாக ஆகிறது. மேலும் இந்த அர்த்தம் சரி என்று உறுதிப்படுத்த வேறு காரணமிருக்கிறது. கௌதமருகிற கண்களின் பார்வை ஆக்ஞா சக்ரமாகிற அகல்யையை தொட்டவுடன் அந்த சக்கரத்திலுள்ள 100 இதழ்களும் ஸூர்யனைப்போல பிரகாசித்து ஆனந்தத்தையுண்டு பண்ணுகிறதால் அந்த பிரகாசிக்கிற 100 இதழ்களும் அகல்யைக்கும் கௌதமருக்கும் பிறந்த பிள்ளையாக "சதாநந்தர்" என்று பெயரிடப்பட்டிருக்கிறது. சதாநந்தர் என்ற பெயருக்கு 100 ஆனந்தம் என்று அர்த்தமாதலால் அந்தப்பெயர் பொருத்தமாக இருக்கிறது.

அகல்யையைப்பற்றிய மற்ற இரண்டுகதைகளும் இந்த அர்தத்திற்கு பொருத்தமாக இருக்கிறது. ஒருகதை அகல்யை கௌதமர் இல்லாதகாலத்தில் இந்திரனுடன்சேர்ந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. ஷட்சக்கர நிருபணத்தில் சிரஸில் 1000 இதழ்களுடன் கூடிய ஸஹஸ்ரார சக்கரமிருப்பதாயும் அதற்கு இந்திரன் தேவதை என்றும் அதன் 1000 இதழ்களிலும் ஸம்ஸ்கிருதத்திலுள்ள 50 அக்ஷரங்களும் 20 மடங்காக எழுதப்பட்டிருப்பதாயும் யோகநிஷ்டை விருத்தியானால் அந்த 1000 இதழ்களும் ஸூர்யனைப் போல் பிரகாசிப்பதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலுள்ள 50 அக்ஷரங்களுக்கும் அகல்யை என்று பெயர் ஆதலால் அந்த அகல்யை அந்த சக்கரத்திலுமிருப்பதாலும் அந்த சக்கரத்தில் கண்களின் பார்வை நேரே விழாததினாலும் கௌதமர் இல்லாத காலத்தில் அகல்யை இந்திரனுடன் சேர்ந்ததாக சொல்லி இருப்பதும் பொருத்தமாக இருக்கிறது. கௌதமர் இந்திரனுக்கு முதலில் அவன் தேகத்தில் 1000 யோனிகள் இருக்கும்படியாக சாபம் கொடுத்ததாயும் பிறகு இந்திரனுடையவேண்டுகோளின்பேரில் 1000 யோனிகளும் 1000 கண்களாக பிரகாசிக்கும்படி கௌதமர்சொன்னதாயும்சொல்லப்படும் கதையும் பொருத்தமாக இருக்கிறது. அந்த சக்கரத்திலுள் 1000 இதழ்களும் முதலில் பிரகாசமில்லாத காலத்தில் யோனிகளாகவும் பிறகு யோக நிஷ்டையினால் பிரகாசமுண்டானதால் அவைகள் 1000 கண்களாக ஆய்விட்டதாக சொல்லலாம். அதினால் இந்திரனுக்கு ஸஹஸ்ராக்ஷன் என்ற பெயருமிருக்கிறது. வேறு ஒரு கதையும் இதற்கு பொருத்தமாயிருக்கிறது. பிரஹ்மா அகல்யையை யார் 14 உலகங்களையும் முதலில் சுற்றி வருகிறார்களோ அவருக்கு கல்யாணம் செய்து கொடுப்பதாக சொன்னதாயும் அதை அனுசரித்து இந்திரன் சுற்றிவருமுன் கௌதமர் இரண்டு முகங்களோடு இருக்கும் ஒரு கோவை சுற்றினதாயும் அந்த கோவிற்குள் 14 உலகங்களும் அடங்கி இருப்பதால் கௌதமருக்கு அகல்யயை கல்யாணம் செய்து கொடுத்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறதும் "கோ" என்பதற்கு பசு என்று அாத்தம் செய்யாமல் "கண்" என்று அர்த்தம் செய்தால் பொருத்தமாக இருக்கிறது. நாம் கண்ணால் ஒன்றை பார்த்தால் அந்த வஸ்துவின் பிம்பம் கண்ணுக்குள் விழுகிறதால் அது கண்ணுக்குள் இருப்பதாகவே சொல்லலாம். அப்படியே நாம் கண்ணினால் ஆகாசம் பூமி எல்லாவற்றையும் பார்த்தால் 14 உலகங்களின் பிம்பங்களும் கண்ணிற்குள் விழுவதால் அவை கண்ணிலிருப்பதாகவேசொல்லலாம். கௌதமராகிற இரு கண் விழிகளும் இரண்டு முகத்தோடு கூடிய கோவாகிற இரண்டு கண்களை சுற்றிப்பார்த்தால் 14 உலகங்களையும் கௌதமருகிற கண்விழிகள் சுற்றினதாக ஆகிறபடியால் கௌதமருக்கு அகல்யை பத்னியாக ஆனாள் என்பதும் சரியாக இருக்கிறது. மேலும் ஒரு கோவாக தானம் செய்யும்போது "கவாம் அங்கேஷு திஷ்டந்தி புவனானி சதுர்தச" என்றமந்திரம் சொல்லுகிறார்கள். அதன் அர்த்தம் கோவின் வயற்றில் 14 உலகங்களுமிருப்பதாக அர்த்தமாகிறது. அந்த தேங்காய் கண் வடிவமாக இருக்கிறதேயொழிய "பசு வடிவமாக இல்லாததால்" கோ என்பதற்கு கண் யென்ற அர்த்தம் தான் பொருத்தமாக இருக்கிறது.

எஸ். அய்யாதுரை அய்யர்.

(2-பக்கம் தொடர்ச்சி)

முயற்சித்தாலும் உதியாமலிராது. கர்மாக்களுக்கு பலன்கள் சுக (துக்கங்கள்) கிடைக்கும், அநுபவித்தாக வேண்டுமென்பது விதி. எவ்விதம் தடுக்க முயன்றிடினும் பலன்கள் வாராமல் நில்லாது.

பதிவு, நினைப்பு பலம், என்னும் இம்மூன்றில் நினைப்பின்படி மாத்திரம் கர்மாவை செய்யாமல் இருக்கலாம்— "இதையே மதியால் விதியை வெல்லலாம்" என்று, உலகத்தவர் பேசுவது வழக்கம். ஆனால் நாம் எந்த நினைப்பின் வழி பிரவர்த்திக்கலாம் எந்த நினைப்பின் வழி பிரவர்த்திக்கக்கூடாது என்பதற்கு சாஸ்திரங்களை கற்றுணர்ந்தோரிடமிருந்து, முறைப்படி விசாரித்து நடப்பதே நம்முடைய முக்ய கடமையாகும்.

இந்த வழக்கம் நின்று விடவே, பாபங்களை புண்ணியமென்று நினைத்தும் புண்ணியங்களை பாபம் என்று பாவித்தும் விவரம் தெரியாமல் தாறுமாறாக கர்மாக்களைச்செய்து பாபிகளாக ஆகிவிடுகிறோம். இதை விட்டு எல்லாம் ஈசனின் செயல் என்று சொல்லி சோம்பேறியாய்த் திரியாமல் ஜீவர்களுக்கும் பிரயத்தனம் உண்டென்றும் அதுவே புருஷ ப்ரயத்தன மென்றும். சாஸ்திரங்கள் சொல்வதை நம்பி இந்த விதிவிலக்குகளாகிய மேடு பள்ளங்களினின்றும் தப்பித்துக் கொள்ளும் பொருட்டு இந்த சன்மார்க்கத்தை கடைபிடித்து ஒவ்வொருவரும் நடக்க முயற்சிக்க வேண்டும்.!

முடிவாகக் கூறுவது என்ன வென்றால் கண்டபடி விஷயங்களில் ஈடுபடுத்தி அதனால் பதிவுகளை கண்டபடி ஏற்படுத்திக் கொள்ளாமலிருக்கும்படிக்கும் இந்தப் பதிவுகளே, நினைப்புக்கும், பலன்களுக்கும் காரணமாயிருத்தலால் இதுவிஷயத்தில் ரொம்ப ஜாக்ரதையிருக்கவேண்டு மென்றும் எவ்வளவுக்கெவ்வளவு உஷாருடன் இருந்து மனதை சீர்திருத்திக்கொண்டு வந்தால் அவ்வளவுக்கவ்வளவு நாளடைவில் அந்த: கரணம் சுத்திகரிக்கபட்டு சீக்கரத்தில் நற்கதி அடைவதற்கு இலகுவாகும் என்பதே. இந்த உபன்யாசத்தையே கிருஷ்ணபரமாத்மா அர்ஜுனனுக்கு, அடியில் வரும் சுலோகத்தால் வெளியிட்டிருக்கிறார்.

கீதை அத்தியாய 16 சுலோகம் 24
"தஸ்மாச் சாஸ்த்ரம் ப்ரமாணம்தே"
கார்யா கார்ய வியவஸ்திதௌ !
ஞாத்வா சாஸ்த்ர விதா நோக்தம்
கர்மகர்து மிஹார் ஹஸி ‖

உயர்ந்த புஸ்தகம் !
உயர்ந்த புஸ்தகம் !!

ஸ்ரீநகர விமர்சனம்.
ஆர்யாத்விசதி. ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்னம்.
[பிர்மஸ்ரீ அருட்கவி ந. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் எழுதிய தமிழுரையுடன் கூடியது.]
விலை 0—12—0. தபாற்செலவு வேறு
கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

ஸ்ரீ லலிதாத்ரிசதீ.
நாகரலிபியில் மூலமும்.
நாமாவளியும்
விலை 0—3—0
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு
விலை அணா 0—2—0.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பகுதான்ய-ஹு புரட்டாசி-மீ 27உ

பயமுறுத்தல்.

காசியில் முஸ்லீம்களின் ஆர்ப்பாட்டம் அதிகம் நடந்தது. ஜின்னா, ஷௌகத் அலி, பஸ்லுல் ஹக் போன்ற முஸ்லீம் தலைவர்கள் நிதானம் தவறியும், ஆத்திரம் பொங்கியும் பொறுப்பில்லாமலும், ஹிந்துக்களை பயமுறுத்தும் தோரணையில் பேசியிருக்கிறார்கள். முஸ்லீம்களை ஹிந்துக்களின் ஆதிக்கத்திற்கு உட்படுத்திவிடவும், முஸ்லீம்மதம், நாகரிகம், கலை முதலியவைகளை அழித்துவிடவும் காங்கிரஸும், ஹிந்துக்களும் சூழ்ச்சி செய்வதாக அவர்கள் பாமர முஸ்லீம்களை கிளப்பிவிடும் தோரணையில் உண்மையற்ற விஷயங்களைப் பேசியிருக்கிறார்கள். மேலும் முஸ்லீம்களின் இஷ்டப்படி காங்கிரஸோ ஹிந்து ஸமூஹமோ இணங்கிவராவிட்டால் தேசத்தில் பயங்கர நிலைமை ஏற்படுமென்றும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். முஸ்லீம் தலைவர்கள் இவ்வாறு முரட்டுத்தனமாகப் பேசுவது பாமரஜனங்களை பலாத்காரத்தில் தூண்டுவதற்குக் காரணமாயிருக்கிறது. இம்மாதிரி பயமுறுத்தி பேசுவதே தற்போது அந்தஸமூக தலைவர்களின் வேலையாகி விட்டது. ஏற்கனவே பம்பாய், கான்பூர், கல்கத்தா முதலியவிடங்களில் நடந்த பயங்கர வகுப்புக் கலகத்திற்கு முன்பு முஸ்லீம் ஸமூஹத்தலைவர்கள் சிலர் இம்மாதிரியே பேசியது பலருக்கு ஞாபகமிருக்கலாம். ஒருபெரிய தலைவரின் பேச்சுக்குப் பிறகும், அவருடைய ஆதரவிலும், பம்பாய் கலவரம் நடந்து ஹிந்துக்களின் ஸொத்துக்களும் உயிருக்கும் மஹத்தான சேதம் ஏற்படவில்லையா? இதை அப்போதே அநேக பத்திரிகைளும் குறிப்பிட்டன.

தங்கள் இஷ்டத்தைப் பிடிவாதமாகக் கத்தி முனையைக்காட்டி நிறைவேற்றிக்கொள்ளும் மனோபாவத்தை முஸ்லீம்கள் காட்டுவது இப்போது அதிகமாகிவிட்டது. இம்மாதிரியான விஷமத் தூண்டுதலால். வெடிகுண்டுக்கொப்பான முஸ்லீம் பாமர ஜனங்கள் ஒரு நிமிஷத்தில் அபாயகரமான பலாத்காரத்தில் இறங்கிவிடலாம்.

ஹிந்துமுஸ்லீம் ஒற்றுமையைப்பற்றிகாங்கிரஸும், சிலஹிந்துக்களும் அதிகமாகபிரமைகொண்டு முஸ்லீம்களை அநுஸரிப்பதே இந்தநிலைமைக்குக் வெகுதூரம் காரணமென்பது தெளிவு. அதன்பலனையே காங்கிரஸ்காரர் தற்போது அநுபவிக்கின்றனர். காங்கிரஸ் காரியக்கமிட்டிமீதும், காங்கிரஸ்மந்திரிகள் மீதுமே ஜின்னாபெரிதும் சீறிவிழுகிறார். வந்தேமாதரம்கீதம் முஸ்லீம்களின்மீது பலாத்காரமாகத் திணிக்கப்படுகிறதாம். ஹிந்தியை கட்டாயமாக்குகிறார்களாம். முஸ்லீம்ஸமூகத்திற்கு விரோதமான காரியங்களையே காங்கிரஸ் மந்திரிகள் செய்துவருகிறார்களாம். இவ்வாறெல்லாம் ஜின்னாவும், ஹக்கும்பலமாக குற்றம்சாட்டுகிறார்கள். காசியில், நடந்த ஆர்பாட்டங்களையும், பலாத்காரமூட்டக்கூடிய பேச்சுக்களையும் பார்த்தபின் ஹிந்துஸமூஹத்தின்மனம் கலங்காமலிருக்க முடியாது. வகுப்புக்கலஹ பயமுறுத்தலுக்கு ஹிந்துக்கள் இனிஅஞ்சமாட்டார்கள். ஆயினும் கலகத்தால் இரு வகுப்பாருடையவும் உயிருக்கும், சொத்து முதலியவைகளுக்கும் நாசமேற்படக் கூடியதையும் அந்தஸமூஹத்தலைவர்கள் கவனிப்பது புத்திசாலித்தனமாகும்.

இந்தியராஜ்ய ஸ்வதந்திரத்திற்கு ஹிந்து முஸ்லீம்ஒற்றுமை அவச்யமானஎன்ற விஷயத்தையும் யோஜித்து இனிஇந்தவிஷயத்தில் பாடுபடுவதை சிறிதுகாலத்திற்கு நிறுத்திவிடலாம். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை என்ற பெயருடன் முஸ்லீம்களை அநுஸரிக்க ஆரம்பித்ததே தற்போதிய மிடுக்கான நிலைமைக்குக்காரணமென்பது பிரபல ஹிந்துத்தலைவர்களின் அபிப்ராயமாகும்

வெள்ளைக்காரர்கள், முஸ்லீம்கள், ஆகிய அன்னியர்களுள் ஹிந்துக்களைப்பற்றியவரை சிலமுஸ்லீம்களே அதிக விரோதம் காட்டி நீண்ட காலமாகப் பல வழிகளிலும் ஹிந்து ஸமூஹத்தைக் கஷ்டப்படுத்தி வந்திருக்கிறார்கள். இப்போதும் அவர்கள் இந்த மனோபாவத்தையே காட்டிக்கொள்வதானால் ஹிந்துக்கள் வெள்ளைக்கார ஆக்ஷியை ஆதரிக்க வேண்டியவர்களாவார்கள். இத்தகைய பயமுறுத்தலுக்கு உட்படுவதைவிட ஹிந்துக்கள், தைர்யமாயும், பௌருஷத்துடன் நடந்துகொண்டு இந்திய ஸ்வராஜ்ய பிரஸ்தாபத்தையே சிறிது காலத்திற்கு ஒதுக்கிவைத்துவிடலாம். லக்ஷக்கணக்கான ஹிந்துக்கள் தியாகம்செய்து பெற்ற ஸ்வதந்திரத்தில் முஸ்லீம்கள் ஒரு சிறிய த்யாகம்கூடச் செய்யாமலேயே கத்திமுனையைக்காட்டி நியாயமற்ற பங்கு கேட்பது ஒப்பக்கூடியதல்ல.

மற்றொரு விநோதமும் காசியில் நடந்தது. இப்போது ஏற்படவிருக்கும் ஸமஷ்டியானது ஹிந்துக்களையே மெஜாரிடியாகக் கொண்டதாயிருக்குமாம். ஆகையால் அது தங்களுக்கு வேண்டியதில்லை யென்றும் மத்யகவர்மெண்டில் "முஸ்லீம் ஸமஷ்டி" என்று தனியாக ஒன்றை ஏற்படுத்திவிடும்படி முஸ்லீம்கள் கேட்கிறார்களாம். ஷௌகத் அலியும் இந்த யோஜனையை பலமாக ஆதரிக்கிறாராம். இந்த யோஜனை உருப்படுமா, இதை பிரிடிஷார் ஏற்பார்களா. இத்யாதி விஷயங்கள் இருப்பினும் இதிலிருந்து அவர்களுடைய மனப்போக்கு நன்கு விசதமாகவில்லையா? ஹிந்துக்களுடன்ஒத்துப்போவதில்லையென்ற ஒரே பிடிவாதத்தையே இது வெளிப்படுத்துவதாயில்லையா? சில விஷயங்களைக்கவனிக்கும் போது இந்தமாதிரிப்பிரிவினைச்செய்து விடுவது நல்லதென்று பலர் நினைக்கலாம். இதை விட இந்தியாவில் முஸ்லீம்களுக்கு தனி மாகாணம் ஏற்படுத்தி அதற்கு "முஸ்லீம் மாகாணம்,, என்று பெயர் கொடுத்து எல்லாமுஸ்லீம்களையும் அங்கு குடியேறும்படி செய்து தேசத்தில் நிரந்தரமாகச்சச்சரவை தீர்த்து அமைதியையும் ஏற்படுத்தி விடலாம்.

மஹம்மதியர்கள் மத விச்வாஸமுள்ளவர்களென்பதும், சட்டஸபைகள் மத விஷயத்தில் பிரவேசிப்பதைத் தடுக்க அவர்களுடைய உதவி மற்ற மதஸ்தர்களுக்கும் உதவியாயிருக்குமென்றும் நம்பிவந்தவர்கள்கூட இப்போது முஸ்லீம்களின் பயமுறுத்தலைப் பார்த்தபின் தங்கள் மனதை மாற்றிக் கொள்ளவேண்டி வந்திருக்கிறது.

குறிப்புகள்.

மதம் மாறியவர்களுக்குச் சலுகை கூடாது.

சென்னை மாகாணத்திலுள்ள ஹிந்து மதத்தினரான தீண்டாதாருக்கு ஸர்க்கார் சில ஸௌகர்யங்களைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களில் அரைச்சம்பளம் அல்லது அடியோடு சம்பளம் போன்ற ஸௌகர்யங்கள் அவர்களுக்கு உண்டு. ஸமீபத்தில் வெளி வந்த ஓர் உத்திரவு இதை உறுதிப்படுத்தியிருக்கிறது.

ஆயினும் மதம்மாறிய தீண்டாதார்கள் இந்தச்சலுகைகளை தங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்றும், தாங்கள் மதம் மாறிய போதிலும், கல்வி முதலியவைகளில் தாழ்ந்தவர்களாகவே இருந்து வருவதாயும் வாதிக்கிறார்கள்.

தென்னிந்தியாவில் பலவிடங்களில் மதம் மாறிய தீண்டாத கிறிஸ்தவர்கள் கூட்டம் போட்டு ஸர்க்கார் உத்திரவை கண்டிப்பதுடன், தங்களுக்கும் அந்த சலுகைகளைக்காட்டவேண்டு மென்று ஸர்க்காரை நிர்பந்தித்துத் தீர்மானம் செய்துவருகிறார்கள்.

தீண்டாதார் ஜாதித்தலைவரான ஸ்ரீமான் ஆர். ஸ்ரீநிவாஸன் வெளியிட்டுள்ள அபிப்பிராயத்தில், மதம்மாறிய தீண்டாதார், இந்தச் சலுகையை அபேக்ஷிக்க உரிமை கிடையாதென்றும், இது ஹிந்துக்களான தீண்டாதாருக்கே உரித்தானதென்றும் எடுத்துக் காட்டியிருக்கிறார். கிறிஸ்தவ மதத்தையோ மஹம்மதிய மதத்தையோ பிரவேசித்த தீண்டாதாருக்கு அந்தந்த மத ஸ்தாபனங்களே, கல்வி வஸதிகளையும் ஸமூஹ அந்தஸ்துகளையும் கொடுக்க கடமைப்பட்டவையாம், அப்படியே கொடுத்து வருவதாயும் ஆகையால் ஹிந்து மதத்திலுள்ள தாழ்ந்த ஜாதியாருக்கே இப்போது உதவிவேண்டியதாயிருப்பதாயும், இதில் மதம்மாறியவர்கள் பாத்யம் கொண்டாட நியாயமில்லையென்றும் வாதித்திருக்கிறார். ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸனின் வாதத்தில் நியாயமிருப்பது உண்மையே, மதாந்திரம் போனவர்கள் அங்கு ஸமூஹ அந்தஸ்தும், பொருளாதார கல்வி ஸௌகர்யமும் அதிகம் பெறலாமென்றே அங்கு போனார்கள். அந்த மதத்தலைவர்களும் இந்த ஆசையைக் காட்டியே அவர்களை ஏமாற்றி தங்கள் மதத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க அவர்கள் இன்னும் பல வழிகளிலும் முன்னேற்றமடையாமலிருப்பது யாருடைய குற்றம்? சர்ச்சுகளில் கூட தீண்டாமை இன்னும் நீங்கவில்லை. ஆதலால் அங்கு அவர்களுக்கு ஏமாற்றமேற்பட்டிருந்தால் அவர்கள் மீண்டும் ஹிந்து மதத்திற்குத் திரும்பிவிடுவதே புத்திசாலித்தனமாகும். புனா ஒப்பந்தப்படி ஏற்பட்ட எந்த உரிமையும் மதம் மாறிய தாழ்ந்தவர்களுக்குக் கிடைக்காது. ஆதலால் மதம் மாறியவர்கள் மீண்டும் தங்கள் மதத்திற்குத் திரும்ப இப்போது ஓர் ஸந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதை அவர்கள் உணர்ந்து நடக்கட்டும்.

குலஸ்திரீகளைக் கெடுப்பதா?

நவீன நாகரீகத்தின் பெயரால் நமது தேசத்தில் ஹிந்து குலஸ்திரீகளின் நிலைமை வர வர மிகக் கேவலமாகி வருகிறது. இதற்கு கணக்கற்ற ருஜுக்களைக் காண்கிறோம். ஸிந்துமாகாணத்தில் சில விடங்களில் "ஓம் மண்டலி,, என்ற பெயருடன் ஓர் ஸங்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஸங்கத்தின் நோக்கம் விசித்ரமானது. இதில், ஸ்திரீகளும் புருஷர்களும் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். மெம்பர்களாக இருக்கும் ஸ்திரீகள், வீடு வாசல்களையும், கணவன், பிள்ளை முதலியவர்களையும் விட்டுவிட்டு இந்த ஸங்கத்தின் ஆதரவிலேயே வஸித்து வாழ வேண்டுமாம். இப்போது அந்த மாதிரி அநேக ஸ்திரீகளை இந்த ஸங்கம் கெடுத்துவிட்டதாகத் தெரிகிறது. இதனால் பல குடும்பங்களில் கஷ்டமும் அவமானமும் நேர்ந்திருக்கிறது.

இந்த மண்டலத்தில் மெம்பர்களாயுள்ள அநேக குலஸ்திரீகள் தங்கள் குடும்பத்தை விட்டு வெளியேறி மண்டலத்தின் கட்டிடத்திலேயே வஸித்து வருகிறார்களாம். அந்த மண்டல நிர்வாஹிகள் அந்த ஸ்திரீகளை வெளியே அனுப்பவும், குடும்பத்தில் கலந்து கொள்ளவும் அநுமதிக்காமல் உள்ளே அடைத்துவைத்திருக்கிறார்களாம். இதன் காரணமாக அநேகக் குடும்பஸ்தர்கள் அந்த ஸங்கத்தின்மீது கோர்ட்டுகளில் பிராது தொடர்ந்திருக்கிறார்கள்.

இவ்விஷயமாக ஹைதராபாத் ஸப்கோர்ட்டில் நடந்த ஒரு கேஸ் கவனிக்கத்தக்கது. ஸ்ரீமான் ஸாதுராம் என்பவர் தனது மனைவியான கலாவதி என்பவள் தன்னையும், தம் குடும்பத்தையும் விட்டுவிட்டு ஓம் மண்டலியில் சேர்ந்துவிட்டதாயும், இதனால் தனக்கு அவமானமும் நஷ்டமும் ஏற்பட்டிருப்பதாயும், தம் மனைவியைத் தம்மோடு சேர்ந்து வாழும்படி கோர்ட்டு உத்திரவு செய்யவேண்டுமென்றும் ஸ்ரீமான் ஸாதுராம் பிராதில் சொல்லியிருக்கிறார். மேற்படி மண்டலிஸ்தாபகரையும் அவர் பிரதிவாதியாகச் சேர்த்திருக்கிறார். தமது குடும்ப வாழ்க்கையானது இந்த மண்டலி ஸங்கத்தால் பாழாகி விட்டதாயும், இவர்களுடைய தூண்டுதலால் தமது மனைவி தம்முடன் சேர மறுப்பதாயும், ஸ்திரீகளிடம் காமஸுகத்தை விரும்பும் கணவன்மார்கள், நாய்களென்றும், ராக்ஷஸர்களென்றும், இந்த ஸங்கத்தார் பிரசாரம் செய்வதாயும், இதனால் அநேக குடும்ப ஸ்திரீகள் புத்திகெட்டு விட்டதாயும் அவர் நிரூபணம் செய்தார். ஜட்ஜ் இந்த மண்டலத்தின் செய்கையைக் கண்டித்து விட்டு உடனே கலாவதி இந்த மண்டலியைவிட்டு, தனது குடும்பத்தில் சேர்ந்து வாழவேண்டுமென்று உத்திரவு செய்தார். இம்மாதிரி இன்னும் அநேககேஸ்கள் விசாரணையிலிருப்பதாகத்தெரிவதிலிருந்து அங்கு நிலைமை எவ்வளவு கேவலமாகிவிட்டதென்பதை ஹிந்து ஸமூஹமும், கவர்ன்மெண்டாரும் கவனிக்க வேண்டும். கணவனையும், குடும்பத்தையும் விட்டுப்பிரித்து ஸ்திரீகளை அபஹரித்துக்கொண்டு போகும்,இந்த யோக்யமற்றஸங்கத்தை ஸர்க்கார் உடனே கலைக்கவேண்டாமா?

எதையும் "முற்போக்கு" நாகரிகம் என்று வர்ணித்துக்கொண்டு தேசத்தின் கௌரவத்தைப்பாழாக்கி வரும் நாகரிகர்கள் இந்த அவமானத்திற்கு என்ன பதில் சொல்லுவார்களோ? எப்படியும் நமது ஸ்திரீகளின் கற்பையும், நாகரீகத்தையும் காப்பாற்ற கவர்ன்மெண்டார்கடுமையான சட்டமூலமாக இத்தகைய ஸங்கங்களை கலைக்கவேண்டியது அவச்யமாகும்.

இந்த நியாயத்தை நிலை நிறுத்துக!

சென்னை கார்ப்பரேஷனில், திருவாங்கூர் "அடக்கு முறை"யைக் கண்டிக்க ஒருவர் ஓர் அவஸரத் தீர்மானம் கொண்டுவந்தார்! ஆயினும் மேயர் இதை நிராகரித்துவிட்டார். இது நியாயமே. இதற்கு மேயர் சொல்லிய காரணமென்னவென்றால் ஒரு ஸம்ஸ்தானத்தின் நிர்வாஹ விஷயத்தில் அபிப்பிராயம்கூற கார்ப்பரேஷனுக்கு அதிகாரமில்லை. இது கார்ப்பரேஷனுக்கு ஸம்பந்தமில்லாத விஷயம் என்று மேயர் சொன்னார். கார்ப்பரேஷன் என்பது அந்தந்த ஸ்தலத்தின் ஸுகாதாராதிகளின் நன்மைகளைக் கவனிக்க ஏற்பட்ட ஒரு ஸங்கமேயல்லது அது பொதுவான தேச விஷயங்களில் கக்ஷியபிமானம் காட்டிக் காரியம்செய்ய ஏற்பட்டதல்ல. அது அதன் கடமைகளில் சேர்ந்ததல்ல. அதன் அங்கத்தினரும் அத்தகைய பெரிய அதிகாரங்களை வோட்டர்களிடமிருந்து பெற்றவர்களல்ல. அப்படியிருந்தும், தற்போது தேசமெங்கும் நகரஸபைகள் ஆலயப்பிரவேச ஆதரவுபோன்ற அதிகப் பிரசங்கமான காரியங்களில் இறங்கி மதவிஷயத்தில் தீர்ப்புக்கூற முன்வந்திருக்கின்றன. சென்னை கார்ப்பரேஷன் மேயர் பிரகிருதத்தில் கொடுத்த தீர்ப்பு நியாயமானதென்றாலும், ஏற்கனவே இதற்கு மாறாக அங்கு காரியம் நடத்தப்பட்டிருப்பதை ஒருவரும் மறக்க மாட்டார்கள். திருவாங்கூர் ஆலயப்பிரவேசத்தை ஆதரித்துத் தீர்மானம்செய்தது. அந்த அரசருக்கு அதற்காக உபசாரப்பத்திரம் படித்தது. அப்போது சிலர், இக்காரியங்கள் கார்ப்பரேஷனுக்கு ஸம்பந்தமற்றவை என்று எடுத்துக்காட்டியும் காங்கரஸ் மெம்பர்கள் அதை லக்ஷியம் செய்ய வில்லை இப்போது மேயர் வெளியிட்டுள்ள நியாயம் முன்னேயே புத்தியில் படவில்லையா? உண்மையென்ன? அப்போது தனது அதிகாரத்தை மீறி ஸமஸ்தானவிஷயத்தில் கார்ப்பரேஷன் பிரவேசித்தது. இப்போதோ நல்ல புத்தி உதயமாகியிருக்கிறது. ஆனால் இந்த நியாயம் நீடித்திருக்குமா? உண்மையில் மேயரோ, மந்திரிகளோ, முனிஸிபாலிடிகள் இத்தகைய விஷயங்களில் பிரவேசிப்பது அநுசிதமென்று நினைத்தால் இதைச்சட்ட மூலமோ, உத்திரவு மூலமோ எல்லாமுனிஸிபாலிடிகளிலும் அமுலுக்குக்கொண்டு வருவது அவச்யமாம்.

வாரக்குறிப்புகள்.

ஸ்ரீ வத்ஸ வெ சோ சர்மா

குடிசைத்தொழிலும் விலையும் தேவை? டில்லியில் தொழில் மந்திரிகள் ஸபை சுபாஷ் தலைமையில் கூடிற்று. வழக்கப்படி வானளாவ பேச்சு, விருந்து, ஊர்வலம் மாலை புகழுரை மற்றும் மற்றும் பலதடபுடல். தேசியமந்திரிகள் ஓராண்டிற்குள் என்னென்ன தொழிற்சாலைகள் ஆரம்பித்தனர்? அரசாங்க உதவிக்கேனும் அந்தந்த மாகாணத்தில் செய்யும் பண்டம் வாங்கப்பட்டதா?

ஆராய்ச்சியுடன்தானா? கனம் ப்ரகாசம் பஞ்சாபில் விலைக்கேற்ப, வரி விதிக்கும் முறையை ஆராய்ச்சி செய்து வந்தார். சென்னைக்கு அதனால் பயனுண்டா? என்ன? எப்போது?

மாகாணப்பிரிவு நோய்! மத்யமாகாணத்திலும் தோன்றி விதர்ப்பதேசத்தைத் தனித்தனியாகப் பிரிக்க ஸபை தீர்மானித்தது. இதனால் வீண்செலவுடன் சரிதானா? எந்த வகையான பயனுவதுண்டோ? தெரியாது!

நல்ல தீர்ப்பு! வடநாட்டிலே ஓம்மண்டலீ என ஓர் சங்கம் தோன்றி பெண்கள் போகத்திற்காக தோன்றவில்லை. அதை விரும்புவோர் நாய் ராவணன் எனப்பிரசாரம் நடந்து, பல குலஸ்திரீகள் புருஷனை விட்டு சங்கத்தலைவரிடம் வந்தனர். ஒரு கணவன் தன் மனைவியை தன்னுடனனுப்பும்படி அச்சங்கம் மீது வழக்கு தொடர்ந்தார். நீதிபதியும் உடனே அனுப்ப தீர்ப்பு செய்தார் பலர் அங்ஙனம் வழக்கு தொடர்கின்றனர், மண்டலீ தலைவர் ஆண்பிள்ளை என்பதே ஸந்தேஹத்திற்கிடம்.

வார்த்தகேமுநி விருத்திகள்!! உயிர் போமளவும் உலக ஆசையில் ஊடாடுமனைவர்க்கும் குவாலிய ஸமஸ்தான மன்னன் மகளுக்கு அரசை அளித்து தான் துறவியாகி பாடங்கற்பிக்கிறார்!!

அளவுகடந்த சலுகையாலே! இன்று மகம்மதலி ஜின்னா அமித்கான் ஷாபி போன்ற பல மஹம்மதியர் காங்கிரஸை கவிழ்த்து முஸ்லீம் லீக்கை நிறுத்த முயற்சிக்கின்றனர். ராஜ்ய தந்த்ரம் நன்கு கற்காததாலிந்த குறை!

பலத்வாரங்களால் சிந்துகின்றன! பொது மக்கள் பணம் தன் கையில் வந்தவுடன் தன் கையால் தேடிய பொருளைப்போல் செலவு செய்வதில்லை. பொறுப்பில்லாமல் வாரி இறைக்கப்படுகிறது! இந்திய அரசாங்கம் ஓர் சிக்கனமாக ஏற்பாடு செய்ய அது உடனே 80லக்ஷம் வீண் அதிகச்செலவை நிறுத்தவழி காட்டினர்.

அசடா? த்வேஷியா? மன்னார் குடியில் சாரதாச்சட்டப்படி ஓர் ஸாதுவுக்கு சிக்ஷை விதிக்கப்பட்டது! இந்த வழக்கை ஆரம்பித்விட்ட புண்யவான் சட்டத்தை மீறுபவர் தண்டிக்கப் படவேண்டுமென்றே முயற்சித்தாராம்? என்னே கருணை! இவ்வரிய தொண்டிற்கேற்ற பலனைப் பெறுவர்!

ஏன் ஸந்தேஹம்? சாஸ்த்ரப்ரமாணத்தைத் தழுவி பிராமணன் உயர்ந்தவன். அவனுக்களிக்கும் தானம் அனந்த பலத்தையளிக்குமென பல பிராமணோதாரர்கள் தர்மஞ் செய்ய மூல தனம் வைத்தனர். அதை நிர்வாஹம் செய்யும் ஓர் சென்னை தர்மகர்த்தாவிற்கு மீளாத ஸந்தேஹமாம்! யார் வைஷ்ணவர் என்று! கோர்டுக்குப்போனார்! தன் ஸந்தேகம் தீர்ந்தது! எல்லாரும் வைஷ்ணவரே! மூலதனம் வைத்தவர் நோக்கமென்ன? அதன்படி நடப்பதே தர்மம் எனத்தோன்றவில்லை!

புதிய வைதிக கக்ஷி! டாக்டர் ஸுப்பண்ணா அமாத்யா என்பவாது முயற்சியால் ஓர் கக்ஷி துவக்கப்பட்டது! ஏதாவது நல்ல வேலை செய்து சிரஞ்ஜீவியாக வாழும்படி வேண்டுகிறோம்!

நல்ல பாடம்!! திருவாங்கூர் அடக்கு முறையை கண்டிக்க சென்னை நகரஸபையில் ஒருவர் ஒரு வெகுஅவஸர தீர்மானம் கொண்டுவந்தார். நகர நிர்வாஹம் வீணாகப்போகிறதா என தலைவர் மண்டையிலடித்து ஸம்ஸ்தான விஷயத்தில் தலையிடாதே என உட்கார வைத்தார்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

மார்காபூர்.
Markapur Road Railway Station,
(Karnool Dt)

திப்பிருஜபுரம் ப்ரும்மவித்யா ப்ரகாசினி ஸபா.

வேதப்ரகாச உபன்யாஸங்கள்.

22-4-38—21-5-38—2-7-38—23-7-38 20-8-38 இந்த 5 ஸ்திர வாரங்களிலும், திப்பருஜபுரம் பிரும்மஸ்ரீ மந்திரமூர்த்தி க்ருஷ்ண சாஸ்திரிகளவர்களால்- ஒரு தினம் சொன்னதை மறுதினம் சொல்லாமல் வேதசாஸ்த்ர ஆதாரங்களைக்கொண்டு விஸ்தாரமாக உபன்யசிக்கப்பட்டு வந்தவிஷயங்களின் சுருக்கம்:- உலகத்தில் மனுஷ ஜாதியில் கோரப்படுகிற விஷயங்கள் அர்த்த காமமோக்ஷங்கள் இந்த 3 புருஷார்த்தங்களும் சித்திப்பதற்குக் காரணம் அஹிம்ஸை, ஸத்யம் முதலான நன்னடத்தையுடன் செய்கிற வர்ணாச்ரம தர்மங்களே ௸ அஹிம்ஸை முதலான தர்மங்களுக்கு ப்ரமாணம் அனாதியான வேதமே. ௸ வேத சாஸ்திரங்கள் மஹாப்ரளயத்தில் பரமாத்மாவினிடம் லயப்பட்டிருந்து மறுபடியும் ஜகத்ஸ்ருஷ்டி காலத்தில் பஞ்சீக்ருத ஆகாசஸ்ருஷ்டிக்குப்பிறகு பரமாத்மாவின் ச்வாஸரூபமான வாயுவின் ஸ்ருஷ்டி காலத்தில் வாயு பூதத்தோடு ௸ வேதசாஸ்திரங்களும் வெளிப்பட்டு ஆகாசத்தில்லயித்திருந்த ௸ வேத சாஸ்த்ரங்களை ஸ்ரீமன் நாராயணன் தன் நாபிகமலத்திலுண்டான ப்ரும்மதேவருக்குத் தோன்றும்படியாக அனுப்பி அனுக்ரஹித்தாரென்றும்,

௸ வேத சாஸ்த்ரங்களுக்கு காரணாக்ஷரங்களான மாத்ரு காக்ஷரங்களை ஈச்வரன் ஆனந்தத் தாண்டவம் செய்யுங் காலத்தில் தன் வலது கரத்திலுள்ள உடுக்கில் நின்றும் அ-காரம் முதல் ஹ-காரம் வரையிலுள்ள 14 ஸூத்ரங்களாக சப்த மூலமாக வெளியிட்ட ௸ அக்ஷரங்களில் ஏதாவது ஓர் அக்ஷரமே உத்தமாதிகாரிகளுக்கு உபாஸனத்தால் மோக்ஷம் வரையிலுள்ள புருஷார்த்தங்களை கொடுத்து விடும் என்றும்,

உலகத்தில் வர்ணாச்ரம தர்மானுஷ்டானங்கள் நடைபெறவும் மந்த மத்யமாதிகாரிகள் இஷ்ட ஸித்திகளை அடைவதற்காகவும், ப்ரம்மதேவருடைய ஆக்ஞானுக்ரஹத்தால் மகரிஷிகள் ச்ரோத்ரேந்த்ரிய மஹாகாசஸம்பந்தத்தாலும் பூர்வ ஸம்ஸ்கார ஸம்பந்தத்தாலும் அறிந்த வேத வேதாங்கங்களையும் வேத ஸாரங்களை ஸ்ம்ருதிகளாகவும், புராணங்களாகவும் வெளியிட்டு கல்ப ஸூத்ரங்களை செய்து உபதேசித்தார், வர்ணாச்ரம தர்மாநுஷ்டானங்கள் நடைபெறும்படியாக அநுக்ரஹித்தார்கள். கோலோகத்தில் க்ருஷ்ண பரமாத்மாவின் விக்ஞாபனத்தால் பரமசிவன் உபநிஷத் ஸாரமான காமிக பாஞ்சராத்ர விஷ்ணுயாமல ஞானார்ணவாதி தந்த்ர சாஸ்த்ரங்களையும் செய்து தேவாலய உத்ஸவாதிதர்மங்களும் மந்த்ரோபாஸனங்களும் தபோ விசேஷங்களும் நடைபெறும்படியாக அனுக்ரஹித்தார். ஜைமினி, வ்யாஸர் முதலானவர்கள் ஷட் 6 தர்சனங்களாகிய ஸூத்ரங்கள் மூலமாய் வேதஸாரமாகிய ஸித்தாந்தங்களை ஸ்தாபித்தார்கள் இவ்விதம் உலகத்தில் ஈச்வராக்ஞையால் வர்ணாச்ரம தர்மாநுஷ்டானங்களும், நைமித்திக காம்ய கர்மங்களும், ஆலய ஸேவா வழிபாடுகளும் நடந்து வந்தன வென்றும்,

இக்கலியின் கொடுமையால் ஸுமார் 100 வர்ஷங்களுக்கு முன் மேல்நாட்டார்கள் நம்முடைய வேத சாஸ்த்ரங்களை ஆராய்ச்சி செய்து பார்த்து இதில் மஹாஸித்திகளும் நிக்ரஹானுக்ரஹ சக்திகளும் விளங்குவதை ஆலோசித்து ப்ராமணர்களிடம் பயம் கொண்டவர்களாய் இந்தியாவிலும் வந்து பார்த்து, ப்ராம்மணர் முதலானவர்களும் வேத சாஸ்திரங்களில் சொல்லியபடி கீழ்மேலான ஜாதிக்கட்டுப்பாடுகளுடன் பரஸ்பரம் மதிப்பு மரியாதையுடன் ஸேவ்ய ஸேவகபாவத்துடன் வர்ணாச்ரம தர்மானுஷ்டான ஜாடைமாடைகளைப்பார்த்தும் ஆதிகாலத்தில் மேனாட்டிலிருந்து வந்தவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு பஞ்சமர்களைத்தவிர வேறு யாரும் ஸம்மதிக்காமலிருந்ததையும் பார்த்தும் மனதில் அச்சங் கொண்டவர்களாய் ப்ராமண்யம் முதலான தர்மானுஷ்டான கட்டுப்பாடுகளை இந்தியாவில் ஒழித்து விடவேண்டுமென்று தகுந்த ஏற்பாடுகளை செய்தவர்களில் முதன்மையாக நின்றவர் இத்தேச ராஜதானி நகரில் அச்வாரோஹணம் செய்துகொண்டு இன்றைக்கும் காணப்படுகிறார்கள். ௸யார்களுடைய சூழ்ச்சியால் ரோமேசந்த்ரதத்தர் மாக்ஸ்மில்லர் ஹண்டர் முதலானவர்கள் ஹிஸ்ட்ரியில் சுமார் 400 வருஷத்துக்கு முன் இந்தியாவில் ப்ரும்மணாதி ஜாதிபேதங்களும் வேத சாஸ்த்ரங்களும் கிடையாதென்றும் அபரிஜனர் என்ற ஓரே ஜாதிதான் இருந்ததென்றும் பிறகு வடநாட்டார்கள் இந்தியாவில் குடியேறி நாகரீக மனோதர்ம ஸாமர்த்யங்களை கொண்டு வேதங்களையும் சாஸ்த்ரபுராணாதிகளையும் கல்பித்து ஸாமர்த்யங்களுக்குத் தக்கபடி ப்ராம்மணாதி ஜாதியாருக பிரித்து கொண்டு மனோதைர்யமில்லாத ஸாமான்ய ஜனங்களை தம்தமக்கு ஊழியக்காரர்களாயும் கீழ் வகுப்பு ஜாதியாருக வைத்து ஒருவர்கொருவர் ஏமாற்றி வருகிறார்களென்று ஹிஸ்ட்ரி எழுதி இந்தியா முழுமையும் வித்யாசாலைகளில் பாடமாக வைத்து சிறுவர்களுக்கு உபதேசிக்கும்படி ஏற்பாடுசெய்தது விக்டோரியா காலத்தில் ஏற்பட்டதான மத விஷயங்களில் தலையிடுவதில்லையென்ற உடன்படிக்கையை மாற்றுவதற்கு நவாப் கால கலஹம் போல் பலாத்காரமாய் செய்யாமல் தந்திரமாக செய்த இது ஓர் வேலை என்றும்,

மண், ஜலம், நெருப்புகளின் விகாரவஸ்துக்களை தெய்வமென்று கல்பித்துக்கொண்டு பூஜை வழிபாடுகளை வெறும் கட்டுப்பாடாக செய்துகொண்டு பிறரை ஏமாற்றி வருவதாகவும் ஹிஸ்டரி இயற்றி இந்தியா முழுமையும் பாடசாலைகளில் சிறுவர்களுக்கு விவேகம் புத்தியில் மலரும் தருணத்தில் ௸ ஹிஸ்டரிகளை பாடமாக வைத்து போதனை செய்து வருகிற விஷயங்களை நம்மவர்கள் கவனிக்காமல் மார்க்கு அதிகமாக வாங்குவதை மாத்திரம் கண்டுகளிக்கிறோமே தவிர மதவிபரீத படிப்பை கவனிக்கவில்லை தவிரவும் பாடசாலைகளில் பாடங்களை அதிகடுமையாக வைத்த போதிலும் ப்ராம்மணர்கள் பரீக்ஷையில் தேறுவதைக்கண்டு ௸ மதவிபரீத சூழ்ச்சிக்கு அதிகுதியாக ப்ராம்மணத்வேஷத்தையும் இன்னும் காட்டி வருகிறார்கள். ௸ ஹிஸ்டரியை நம் சிறுவர்கள் படிக்கத்தலைப்பட்டு ஸுமார் 100 வருஷ காலமாக நம் மதத்திலும் வேதசாஸ்த்ரங்களிலும் நம்பிக்கையற்றவர்களாய், பாஷண்டர்களாகத் திரும்பி 3 தலைமுறை ஆகிவிட்டது. வேதசாஸ்த்ரங்களில் நம்பிக்கை யில்லாததால் நாம் கையாளக்கூடாத அன்யதேச ஸாமான்களை ஸர்வ விஷயங்களிலும் கூச்சமில்லாமல் நடை, சிகை, உடை, பாவனைகளையும் மாற்றிக்கொண்டு அதிமோஹத்துடன் உபயோகித்து வருவதற்கும் அன்ய தேசசாமான்கள் மூலமாய் அன்ய தேசியர்களுக்கு ஏற்படும் லாபத்திற்கும் ௸ சூழ்ச்சியே அதிகுதியாகவிருக்கிறது என்றும்,

வேத மதங்களில் நம்பிக்கை யில்லாதவர்களாய் தர்மானுஷ்டானங்களை பெரும்பாலும் விட்டு காலக்ரமத்தில் ப்ரௌடாவிவாஹாதிகளை செய்யத்தலைப்பட்டு, ஸ்வகார்யார்த்தமாய் சட்டமும் செய்துகொண்டு, ஜீவகாருண்யத்தைக்கொண்டவர்கள் போலும் நடித்துக்கொண்டு, எல்லாஜாதியரும் கீழ் மேலாக இல்லாமல் ஸகோதரர்கள் போலவேயிருந்துகொண்டு உலக முன்னேற்றத்திற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று ஸபை கூட்டி ஸ்வராஜ்ய விஷயமாய் ௸ சூழ்ச்சிக்காரர்களுக்கு ப்ரியத்தை காட்டுவதற்காகவும், ஆலயப்ரவேசாதிகளையும் நடத்தி வருகிறார்கள் என்றும்,

வேத மதங்களில் நம்பிக்கையற்ற அதர்மரூபமான விபரீதாநுஷ்டானத்தால்-கலி 5000-த்தில் ஏற்பட்ட பூமிகம்பம் நடந்து அடிக்கடி பலவிடங்களில் பூகம்பத்தினால் சேதமும் ரோக யுத்தங்களும் இந்தியாவில் பல விதமான கலகத் தொந்திரவுகளும் ஜலப்ரளயமும் உண்டாகி வருகின்றன வென்றும் உபன்யஸித்து,

௸ ஹிஸ்டரிப்படிப்பினால் புருஷர்கள் கெட்டது போதாதென்று, பெண் குழந்தைகளையும் க்ரிஸ்தவ மாதர் உபதேசத்துக்காக ௸ பாடசாலைகளிலமர்த்தி அவர்களுக்கும் நடை உடை பாவனைகளும் மாறி நாஸ்திகத்தன்மையை உண்டாக்கி விட்டார்கள்.

இத்தன்மைகளுக்கு ஒற்றுமையாய் ராமகிருஷ்ணபரமஹம்ஸ, விவேகானந்த, ரமண மஹரிஷி முதலான தற்கால ஞானிகளிடம் பக்தி பாராட்டிய லக்ஷக்கணக்கான ஜனங்கள் ௸ பெரியவாளுடைய தெரிசனத்துக்காக தமக்கு ஏதாவது உபதேச மொழிகள் கிடைக்காதா வென்று ஆவலுடன் போய்வருகிற ஜனங்கள் தனக்கு அவாளுடைய உபதேசம் கிடைத்தது போலும், ௸யார்களுடைய கொள்கையை தெரிந்துகொண்டவர் போலும் நடித்துக்கொண்டு தமது ஸந்த்யாவந்தனங்களை செய்யாமல் விட்டுவிட்டு சிகையை அலங்கரித்துக்கொண்டு கீழ்மேலான ஜாதிபேதங்களை விட்டு ஸஹோதரர்களைப் போலிருந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுமென்று நினைக்கிறார்களே தவிர, ௸ பெரியவர்கள் அநேக வார்த்தைகள் பேசும் தருணத்தில் தங்களிடத்தில் அதிக பக்தியுள்ளவர்களுக்காவது அவரவர் பக்குவநிலைமைக்குத் தக்கபடி வர்ணாச்ரம தர்மானுஷ்டானம் செய்துவரவேண்டுமென்றுசொல்லியிருக்கும் ஸமயத்தில் இரண்டொருவரையாவது அனுஷ்டித்தவராகக்காணலாம், அவ்வித உபதேச மொழிகளை கிடையாதென்று நிச்சயமாகச் சொல்லலாம். ஆகிலும் ௸ பெரியவர்கள் பகவத்கீதையை கையில் வைத்துக்கொண்டு உபதேசிக்கிறார்கள். பேசாமலிருந்தால் மிக நலம் என்றும் ஹிஸ்டரியில் எழுதியபடி. இந்தியாவில் ஆதிகாலத்திலிருக்க அபரிஜனங்கள் என்றவர்களை ஹரிஜனங்களென்றும் ஆதித்ராவிடர் என்றும் அவர்களுக்கு நாமம் சூட்டி அவர்களை உயர்த்திக்கொண்டாடி வருகிறார்கள் என்றும், இதுகளெல்லாம் கலியின் கொடுமையைத் தவிர வேறில்லை.

நம் வேத சாஸ்த்ரபுராணாதிகளில் காணப்படுகிற ஆக்யாயிகாசரித்ரங்கள் வேற்று ஸமீப காலத்தில் நடந்தவைகள் போலும் ஒரேசரித்ரம் 2 3 புராணாதிகளில் வெவ்வேறு ரீதியாய் காணப்படுவதாலும் சில விதி விலக்குகள் வெவ்வேறு சாஸ்திரங்களில் ஒன்றுக்கொன்று முரண்பாடாயிருப்பதைக்கொண்டு ௸ ஹிஸ்டரி கொள்கையில் தீவ்ர பக்தியுள்ளவர்கள் வேதாதிகள் புதிதாக இயற்றப்பட்டவை தான் என்று விதண்டாவாதம் செய்வதற்கெல்லாம் பிரும்மஸ்ரீ மந்த்ரமூர்த்தி சாஸ்திரிகள் ச்ருதி, யுக்தி அநுபவ திருஷ்டாந்தங்களைக்கொண்டும், வேத சாஸ்திர வாஸிஷ்ட ஸூதஸம்ஹிதாதி புராணங்களை கொண்டும், யாரும் ஒத்துக்கொள்ளும்படியாக ஸமாதானம் சொல்லி வேதசாஸ்திரங்கள் அநாதி

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

வெளியூர் செய்திகள்.

பாபநாசம்.

நவராத்திரி உத்ஸவம்.

இந்த பாபநாசத்தில் எழுந்தருளியிருக்கும் பங்கஜவல்லி ஸமேத ஸ்ரீநிவாஸபெருமாள் ஆலயம் வெளி, உள் கோபுரங்கள். இன்னும் மற்றுமுள்ள வாகனமண்டபம் முதலானதுகள், மிகவும் கேவலமான ஸ்திதியில் இருந்து ஜீரணமாகிவிட்டது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ௸ ஆலயவிஷயங்களை பரிபாலித்துவரும் தஞ்சாவூர் தேவஸ்தான கமிட்டி ஆபீஸ் பிரெஸிடெண்டு ஸ்ரீமான் A. கிருஷ்ணஸாமி வாண்டையார் அவர்களின் ஸமயோசித உதவியினால் ௸ கோவில் மானேஜிங் டிரஸ்டியான ஸ்ரீமான் N. S. ராஜப்பய்யர் அவர்கள் தக்க முயற்சி எடுத்துக்கொண்டு தன் மேற்பார்வையிலேயே தக்க வேலைக்காரர்களை வைத்துக்கொண்டு ஜீரணமான ராஜகோபுரம், உள்கோபுரம், வாகனமண்டபம் முதலானதுகளை 3மாத காலத்துக்குள் பார்ப்போர் வியக்கும்படி ஜீர்ணோத்தாரணத்தை ஸ்ரீநிவாஸன் கிருபையால் முடித்து ௸ வாகனமண்டபத்தை வஸந்த மண்டபம் என்று சொல்லும்படியான நிலைமையில் செய்து இந்த 1938-ம் வருஷம் ஜ்யேஷ்டாபிஷேகத்தையும், தாயாருக்கு நவராத்திரி உத்ஸவத்தையும் ௸ வஸந்த மண்டபத்தில் தக்க அலங்காரங்களுடன் நவராத்திரி உத்ஸவத்தை மங்களவல்லி அருளால் ௸ டிரஸ்டி ஸ்ரீமான் N. S. ராஜப்பய்யர் நடத்திவைத்ததானது எல்லோராலும் கொண்டாடத்தக்கது. இன்னும் பாக்கியிருக்கும் முக்கிய இடங்களை ரிபேர் பார்க்கவும் கும்பாபிஷேகம் செய்யவும் சுமார் ரூ. 2000 பிடிக்கும். கொடுத்து ௸ டிரஸ்டி அவர்களுக்கு உதவிசெய்து தர்மத்தை நிலைநிறுத்தவேண்டும்.

நேரில்கண்டவன்.

6-ம் பக்கம் தொடர்ச்சி.

தான் என்று ஸித்தாந்தம் செய்தது நாஸ்திகருக்கு கூட ஆஸ்திக்யத்தை உண்டு பண்ணி மிகவும் ஆபூர்வமாயும் புகழத்தக்கதாகவுமிருந்தது.

27—8—38 ஸ்திரவாரத்திலும் மந்த்ரமூர்த்தி சாஸ்திரிகள் அஹிம்ஸை, ஸத்யம், ப்ரும்மசர்யம், திருடாமை முதலான ஸாமான்ய தர்மங்களையும், அபக்ஷ்யபக்ஷணத்தால் மூளை கெட்டு தர்மானுஷ்டான பக்தி நசித்து, நாஸ்திகத்தன்மை அதிகரித்தும், சாஸ்த்ரீய ஆகாரத்தால், பக்தியும், ச்ரத்தையும், உண்டாகும் விஷயத்தை விரிவாகவும், தைத்தரீய உபநிஷத் சிக்ஷாவல்லி 11 வது அனுவாகத்தையும் தெளிவாகஉபன்யஸித்து த்ரைவர்ணிகளின் ஸாமான்ய தர்மங்களையும் மற்ற சமுதாய தர்மங்களையும் உபன்யஸித்தது பக்தி ச்ரத்தையை உண்டாக்கக்கூடியதாக இருந்தது.

17-9-38 ஸ்திர வாரத்தில் ௸ மந்த்ரமூர்த்தி சாஸ்திரிகள் தற்கால விவேகிகள் வேதாந்த தமிழ் புஸ்தகத்தையும் ஆங்கிலமொழி பெயர்ப்பிலும் பார்த்துவிட்டு வேதாந்தத்தில் நிபுணருகத்தம்மை நினைத்துக்கொண்டு தர்மானுஷ்டானம் அனவச்யமென்று அனுஷ்டிக்காமல் தம்மை ஞானியாக நினைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கும் தர்மாநுஷ்டான சிரத்தை உண்டாவதற்காக சுகாச்சார்யாள் ப்ருமஞானியாயிருந்தும் வியாஸ பகவானுடைய உபதேசத்தாலும் ஜனக மகாராஜாவின் ஸம்வாத நிருபணத்தாலும் ஆச்ரம தர்மங்களை பாக்கியில்லாமல் க்ரஹஸ்தாச்ரம தர்மங்களையும் அனுஷ்டித்து புத்ர தளஹித்ர அனுபவதுடன் மஹாயோக ஸித்தியை அடைந்த சுகோபாக்யானத்தை உபன்யஸிக்க ஆரம்பித்து நன்றாக சொல்லி வருகிறார்.

ஸபா, செக்ரெட்ரி டி. என். வெங்கட்டராமய்யர்.

ஆத்தன்குடி.

ஸநாதன தர்ம மகாசபை.

வெகுதானிய ௵ புரட்டாசி ௴ 23௳ பௌர்ணமிக்கூட்டம் இன்று மாலை 3 மணிக்கு பிர்மஸ்ரீ சுப்பிரமண்ய சாஸ்திரிகள் தலைமையில்' கடவுள் வாழ்த்துக்குப்பின், ஸபை ஆரம்பமாயிற்று திரு. சு. வீர. கதிரேசன் செட்டியாரவர்கள். ஜகதீசய்யாவர்கள் திருவேங்கிடமய்யங்காரவர்கள் வெங்கட்டராம கனபாடிகள் முறையே, தற்காலம் ஸநாதனிகள் செய்யவேண்டிய கடமை, திருவாங்கூர் நிலை, கிராமஸபைகள் ஏற்படுத்தலின் அவசியம், ஸ்திரீதர்மம், என்பனபற்றி விரிவுரை நிகழ்த்தியபின்னர் வந்தனோபசாரம் கூறப்பெற்று ஸபை இனிது நிறைவேறியது.

காரியதரிசி
M. திருவேங்கடமய்யங்கார்.

ஆங்கரை.

ஸ்கந்தஷஷ்டி.

இப்பூவுலகின்கண் சேதனர்களாகிய மானிடஜன்மமடைந்த யாவரும் தரிசித்த ஆங்கரை அக்ரஹாரத்திலுள்ள ஆர்தத்திராண பாராயணராய் விளங்கும் மருதாந்த நாதேசுவார் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஷண்முகப்பெருமானுக்குப் பஹுதான்ய வருஷம் ஐப்பசி ௴ 8-௳ (24—10—38) திங்கட்கிழமை உபக்ரமித்து வழக்கம் போல் எட்டாவது நாள் பூர்த்தி செய்வதாக கிராம அசேஷ மகா ஜனங்களால் நிச்சயம் செய்யப்பட்டுள்ளது.

அசேஷக மஹாஜனங்கள்.

ஸ்ரீ சாரதா நவராத்ரீ மஹா யாக வைபவம்.

தேவகோட்டை.

மைசூர் ராஜ்யத்தைச் சேர்ந்த ஸ்ரீ கல்யாணபுரமென்ற பெங்களூர் வாஸியும் அக்னிஷ்டோமாதி மஹாக்ரதுக்களை நடத்திய வரும் ஸ்ரீ வித்யையில் குரு முகமாக த்ரிபாதுகாதி பூர்ண தீக்ஷா பட்டாபிஷிக்தரும ஸ்ரீ அபிநவ சச்சிதானந்த வானப்ரஸ்த ஸ்ரீ சக்ர பீடஸ்தித ஹடாராஜலம்பிகாதி ராஜயோக நிஷ்டா நிஷ்ணாதரும் வேதமூர்த்திகளுமான பிர்மஸ்ரீ பி. வி சங்கரநாராயண சாஸ்திரிகள் அவர்கள் நித்ய நைமித்திக த்ரிகால பூஜாதி கர்மானுஷ்டானங்களைச் செய்து கொண்டு லோகோபகாரமாக தற்காலம் க்ஷீணதசையில் இருந்துவருகிற ப்ராசீன யோக சாஸ்திர விதிகளையும் ப்ராணாயாமதத்வங்களையும் நன்கு அனுஷ்டித்துக் காண்பித்து மெய்ப்பித்து அத்யாத்ம வழியில் ஜனங்களை நிரந்தரமாக ப்ரவ்ருத்திக்க ஏற்பாடு செய்யும் நோக்கத்துடன் ஆங்காங்கு யோக கலாசாலைகளும் ஏற்படுத்தி தற்சமயம் இங்கு சுமார் 17—9—38 (புரட்டாசி 1-ம்) தேதி விஜயம் செய்தார்கள். ௸ சுவாமிகள் 24-9-38 நவராத்திரி ஆரம்ப தினமான சனிக்கிழமை முதல் 3—10—38 வரை வெகு விமர்சையாக சிலம்பனி ஸ்ரீ சிதம்பரவிநாயகர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த துவாதசி மடத்தில் ஸ்ரீ சக்ரம் சுப்ரமண்ய சக்ரம் மற்றுமனேக சக்ரங்கள் ஹனுமார் ஸாளக்ராமங்கள் இத்யாதிகளுடன் நித்ய பூஜாதுரந்தராய் இருந்துகொண்டும் விசேஷமாக ஸ்ரீ சாரதா நவராத்திரி மஹாயாக ஹோமங்களில் அத்வர்யு யஜமான ஸ்தானத்தை வஹித்துக்கொண்டும் நிராஹார மௌன தீக்ஷையுடன் வேத பாராயணங்கள் புராண இதிஹாஸ படனங்கள் அனேக மஹா மந்திர ஜபங்கள் ஏகாதசருத்திர ஜபம் சூர்ய நமஸ்காரம் இத்யாதிகளுடன் அபிஷேகம் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமார்ச்சனைகள் ப்ரதிதினம் பூர்ணாஹுதி ஹோமம் முதலியவைகளை கொஞ்சமும் சிரமமின்றிச் செய்து வந்தது தரிசிக்க வந்தார்களின் மனதை பக்திபாவசப்படுத்தியதுடன் புராணங்களில் கேட்கப்பட்ட வஸிஷ்ட விஸ்வாமித்ராதியக்ஞங்களை கண்கூடாக பார்ப்பதுபோல். ஆச்சர்யத்தையும்ஆனந்தத்தையும் பிரமிப்பையும் உண்டுபண்ணியது.

நவராத்ரி கடைசிதினம் விஜயதசமியன்று வெகு விமர்சையுடன் மஹாபூர்ணாஹுதி (புடவை ரவிக்கை நவரத்னங்கள் இதர ஸகல ஸாதனங்களால்) நடத்தப்பட்டு அவப்ருதஸ்நானமும் குதூஹலத்துடன் நடந்தேறியது. பிறகு ருத்விக் ஸம்பாவனை யதாக்ரமம் செய்யப்பட்டு, எல்லா பக்தகோடிகளுக்கும் அபிஷேக தீர்த்தம் மஞ்சள் குங்குமம் முதலியன ௸ ஸ்வாமிகளால் அனுக்ரஹத்துடன் அளிக்கப்பட்டன. ௸ ஸ்வாமிகளால் யோகாஸனங்கள் சூரியநமஸ்காரக்ரமங்கள் ப்ராணாயாம முறைகள் முதலியன இன்னும் சில நாள்களில் காட்டப்படப்போகின்றன என்று தெரியவருகிறது.

௸ யாக வைபவத்திற்கு முக்யமாக ஸ்ரீ சிதம்பர விநாயகர் தேவஸ்தானம் டிரஸ்டிகளால் செய்த பேருபகாரம் மிகப்போற்றத்தக்குந்தது. மேலும் இவ்விஷயத்தில் வக்கீல் N. S. சுப்பிரமணிய அய்யர். வக்கீல் D, S. ராஜகோபாலய்யர். வக்கீல் S. கிருஷ்ணய்யர். வக்கீல் R. கிருஷ்ணஸாமி அய்யங்கார். டாக்டர் N. S. நாகராஜ அய்யர். வக்கீல் S. K. நாகஸாமி அய்யர். வக்கீல் சிவசுப்ப்ரமணிய அய்யர். மற்றுமுள்ள நகரத்தார்கள் முதலியவர்களின் பொருளுதவியும் சரீரப்யாசையும் மிகபோற்றத்தகுந்தது.

(ஒரு நிருபர்.)

ஸ்ரீ கிருஷ்ண ஜனனம்.

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யாள் அவர்களின் பரிபூர்ண அனுக்ரஹத்தை முன்னிட்டு, ௸ பரமாசாரியாளின் மடத்தில், சுமார் 6 மாத காலமாக அதாவது (18-3-38) முதல் விக்கிரபாண்டியம் ப்ரம்மஸ்ரீ கோபால சாஸ்திரிகள் அவர்களால், ஸ்ரீமத் பாகவதம் ஆரம்பித்து ப்ரதிதினம் மாலை 6-மணிக்கு மேல் ப்ரவசனம் செய்து வருவதில் 1-முதல் 9-ஸ்கந்தங்கள் வரையில் முடிவுபெற்று நாளது பகுதான்ய ௵ புரட்டாசி ௴ 24௳ (10-10-38) திங்கட்கிழமை தினம் ஸ்ரீ பாகவதம் தசமஸ்கந்தம் ஆரம்பம் செய்து ௸ ௴ 30௳ (16-10-38) ஞாயிற்றுக்கிழமை அஷ்டமீ திதியில் ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவின் ஜனனமும் வழக்கம் போல் 6-மணிக்கு உபந்யசிக்கப்படும்.

மஹா ஜனங்கள்.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.
மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0

கும்பகோணம்.

ஸ்ரீ மஹாசார்யஸ்வாமிகள் மடத்தில் நடந்த நவராத்ரி மஹோத்ஸவம்.

நிகழும் பகுதான்யஞு புரட்டாசிமீ 8உக்கு சரியான (29-9-38) முதல் நவராத்ரி 9 தினத்திலும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யஸ்வாமிகளவர்கள் மடத்தில் விக்கிறபாண்டியம் ப்ரம்ம ஸ்ரீ கோபால சாஸ்திரிகள் அவர்களால் மாலை 7-மணிக்கு ஆரம்பித்து 8 மணி வரையில் பிரதி தினம் பராசக்தியின் மஹிமையை எடுத்துரைக்கும் கிரந்தங்களில் ரொம்ப சிரேஷ்டமாயும் மஹா பக்தி ஸ்வரூபங்களான 700 ச்லோகமுள்ளதாயும் நவராத்ரி மஹா புண்ய காலத்தில் இதை பாராயணம் செய்தவர்களுக்கு சதுர்வித புருஷார்த்தங்களையும் ஸர்வாபீஷ்டத்தையும் கொடுக்கிறேன் என்று பராசக்தியினாலேயே வாமளிக்கப்பட்டதாயும் இருக்கிற தேவீ மஹாத்மியம் என்னும் க்ரந்தத்தை ப்ரதி ஸ்லோகம் வாசித்து அதன் தாத்பர்யத்தை ரொம்பவும் தெளிவாய் ஸர்வ ஜனங்களும் பராசக்தியின் மகிமையைக் கேட்டு ஆனந்திக்கும் மூகபஞ்சசதீ, லகுஸ்துதி முதலிய ச்லோகங்களின் உதாஹரணத்தோடு வெகு அழகாக கேட்போர் மனது பரவசமாகும்படி உபன்யாஸம் செய்தார்கள். பிரதிதினம் ஜனங்கள் பரம உத்ஸாகத்தோடு திரள் திரளாக வந்து கொண்டிருந்தது. 9-வது நாள் சும்ப நிசும்ப வதம் முடிவை அடைந்தது. மறுநாள் விஜய தசமி தினம் மதுகைடப: மஹிஷாஸுரன்: சும்ப நிசும்பன், இவர்களை வதம் செய்து ஜயஸ்ரீயினால் விளங்கிய தேவி மஹிமையை அபாரமாய் வர்ணித்து ஷை கிரந்தத்தின் பலச்ருதியை சொல்லி முடித்தார்கள். அன்று தேவியின் ஆராதனமும் ரொம்ப விமர்சையாய் நடைபெற்றது. மேற்படி சாஸ்திரிகளுக்கு தேவீ பக்தியும் வாக்பாடவமும் ஸ்லோகம் சொல்லுகிற அழகும் இன்றியமையாததாகயிருக்கிறது. பொது ஜனங்களுக்கு மேல் மேலும் உத்ஸாஹம் அதிகரித்து வருகிறது. ஷை சாஸ்திரிகள் அவர்களுக்கு ஆரோக்ய திருடகாத்ர ஸித்தியும் ஸ்ரீ காமாக்ஷி தேவியும் ஸ்ரீ பரமாசார்யாளும் அனுக்ரஹிக்கும்படி பிரார்திக்கிறோம்.

எஸ். பி. வெங்கட்டராமய்யர்.

ஸ்ரீ வைஷ்ணவ பிரஸ்தாபத் தகராறு.

கோர்ட்டில் ரஸமான விவாதம்.

(நமது விசேஷ நிருபர்)

சென்னையிலுள்ள சிங்கம் செட்டி யதிராஜு செட்டி சார்டிஸ்தாபகர் ஸ்ரீமான் யதிராஜு செட்டியார் 1899ஞுத்தில் தமது மூன்று லக்ஷம் பெறுமான சொத்துக்களை தர்மத்துக்கு எழுதி வைத்து நிர்வாஹ டிரஸ்டிகளும் ஏற்படுத்தி, தென்கலை ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு உதவி செய்வதிலும் அவர்களின் கதாகாலக்ஷேபங்களுக்கும் கோவில் விசேஷங்களுக்கும் ததியாராதனாதி காரியங்களுக்கும் வைசிய ஜாதிப்பையன்களின் கல்வி அபிவிருத்திக்கும் செலவு செய்யவேண்டுமென தர்மஸ்தாபன பத்திரத்தில் குறிப்பிட்டிருப்பதாய் சொல்லப்படுகிறது.

தஸ்தாவேஜில் ஸ்ரீவைஷ்ணவர் என்று கண்டிருப்பது காலஞ்சென்ற தர்மஸ்தாபகரின் நோக்கம் ஸ்ரீ வைஷ்ணவப்பிராமணர்களை மட்டுமே குறிக்குமென்றும் ஸ்ரீவைஷ்ணவ வைசிய செட்டியார் பையன்கள் கல்வி அபிவிருத்திக்கென மறுபடியும் குறிப்பிட்டிருப்பதிலிருந்தே முன்விஷயம் உறுதியாவதாவும், நிர்வாஹ டிரஸ்டிகளில் சிலர் அபிப்ராயப்பட்டதாயும், இந்தத் தகராறைத் தீர்த்து ஓர் முடிவு கூறுமாறு சார்டி டிரஸ்டிகளில் ஒருவரான ஸ்ரீமான் பி. ராஜமன்னார் செட்டியார் சென்னை ஹைகோர்ட்டில் மனுச் செய்து கொண்டதன்பேரில் அதை விசாரணை செய்த ஜஸ்டிஸ் வெங்கடரமணா ராவ், ஸ்ரீ வைஷ்ணவர் என்றால் சகல ஜாதி வைஷ்ணவர்களையுமே குறிப்பதாக தாம் அபிப்ராயப் படுவதாயும் ஸ்ரீ வைஷ்ணவ ஆச்சார்யர்களில் சில பிராமணரல்லாத வைஷ்ண ஜாதியினரும் சேர்க்கப்பட்டே ஸ்ரீ வைஷ்ணவ பரம்பரா விபரம் பிரஸ்தாபிக்கப்படுவதாய்த் தெரிவதிலிருந்து அவை வர்ஜிதப்படுவதாயும் தீர்ப்புக் கூறியிருப்பதாயும் தெரிகிறதுடன் மனுதாருக்காக மதராஸ் அட்வோகேட் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்ரீ ரங்காச்சாரியார் முதலியோரும் பிரதிவாதிகள் சார்பாக வக்கீல் ஸ்ரீமான் ஜி. கிருஷ்ண ஆர்யா ஸ்ரீமான் எ சூர்யநாராயண ராவ் ஆஜராய் ஆர்க்குமெண்டு வாதம் செய்ததாயும் தெரிகிறது.

இந்த கேஸ் மேலும் அப்பீலுக்குச் செல்வதாயிருப்பதாகவும் பிரஸ்தாபமாயிருப்பதுடன் இத்தர்ம சார்ட்டி டிரஸ்டிகள் யாவரும் பிராமணரல்லாதவர்களேயெனத் தெரிவதும் குறிப்பிடத்தக்கதாம்.

4-10-38-ஞு செவ்வாய்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

நெல்லு முதல்தரம் வெள்ளை சிறுமணி 125 பவுண்டு உள்ள மூட்டை	4—0—0
ஷை இரண்டாம் தரம் செல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை	3—2—0
அரிசி முதல்தரம் வெள்ளை சிறுமணி 190பவுண்டு உள்ள மூட்டை	9—0—0
ஷை இரண்டாம்தரம் செல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை	7—8—0
தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை	4—5—0

ஷை தாசில்தார்.

மூகபஞ்சசதியில் முதல் பாகம்.

"ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B.A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது. தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0 ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு விலை அணா 6.

பேச்சு நன்றாக இருக்கிறது! டி. எஸ். ராஜன் என்ற கனவான் படக்காக்ஷி மூலம் நமது உயரிய மத சித்தாந்தங்களைக் கற்பிக்கலாமென்கிறார். செய்கை மாறுதிருக்கிறதே!

சலுகையாயல் வேலை கேடலாமா? சென்னைநகர ஸபை தாழ்ந்த ஸ்திரீகள் உபாத்திமை தொழிலுக்கு பரீக்ஷையில்லாமலே நற்சாக்ஷிபத்ரமளிக்கலாமென்பதை ஸ்ரீ ஸத்ய மூர்த்தி அழகாகக் கண்டித்தார்.

(வெ. ஸோ.)

தஞ்சாவூர் ஜில்லா, நாகப்பட்டணம் தாலூகா நாகப்பட்டணம் டவுன் மார்க்கெட்டில் 3—10—38 திங்கட் கிழமை அமுலிலிருந்த சில மொத்த விலைகளுக்குஜாப்தா.

முதலாம்தரம் வெள்ளை சிறமணியன் அரிசி 100 பவுண்டு அல்லது 1 மூட்டை	9—8—0
இரண்டாம்தர கட்டைச்சம்பா ஷை	8—0—0
நெல் முதல்தரவெள்ளை சிற மணியன் 64 பவுண்டு	1-14-0
இரண்டாம்தர கட்டைச்சம்பா ஷை ரு	1—8—0
தேங்காய் எண்ணெய் 38 பவுண்டு	4—4—0

ஷை தாசில்தார்.

அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்.

1. திருப்புகழ் பாராயண திருமுறை	1	4	0
2. நால்வர் சரித்திரம் காலிகோ	0	12	0
3. ,, ராப்பர்	0	10	0
4. பாரதசாரம்	1	2	0
5. ஸ்ரீ ராமாயண வினாவிடை.	1	8	0
6. பஞ்சரத்னம்	0	12	0
7. ஷண்முக விஜயம்,	0	12	0
8. ஸ்ரீபாலஷண்முக விஜயம்	0	8	0
9. ருக்மணி	0	8	0
10, தேசிங்குராஜன்	0	10	0
11. ராஜாதேசிங்கு	0	5	0
12. திருக்குறள் நீதிக்கதைகள்.	0	10	0
13. தசகுமார சரித்ரம்	0	6	0
14. திருப்புகழ் ரத்னமாலை	0	3	0
15. கந்தரலங்காரம்	0	2	0
16. திருஞான சம்பந்தர்	0	2	6
17. விசாரசன்மர்	0	3	0
18. மூர்த்தி நாயனார்	0	3	0
19. திருநாவுக்கரசர்.	0	2	0
20. குகன்.	0	4	0
21. திருவகுப்பு.	0	4	0
22. பாராயண திருப்புகழ்	0	2	0
23. வேல், மயில் விருத்தம்	0	1	0
24. திருப்புகழ் விருத்தியுரை	8	0	0

கிடைக்குமிடம்:—

ஸ்ரீஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்.
டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.

அத்யாத்மயோகம் அல்லது ஆத்மப்பயிற்சி.

குருதாஸ் இயற்றியது. திவான்பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளது முகவுரையுடன் கூடியது. எளிய தமிழ் நடையில் உள்ளது. முற்றிலும் அநுபவங்கள் நிறைந்தது. பற்பல ஆதாரங்களுடன் கூடியது. பகவத் விஷயத்தில் ஈடுபட்டுள்ள ஸகோதர-ஸகோதரிகளுக்கு அத்தியாவசியம் உள்ளது. எல்லா மதத்தினர்களுக்கும், கொள்கையினருக்கும் ஓர் துணையாயிருப்பது. காமகோடி ஸ்ரீ ஜகத்குரு, ஸ்ரீ ரமணரிஷி, ஸ்ரீ ராமானந்த ஸாஸ்வதி முதலிய மஹான்களது அனுக்கிரஹம் அடைந்தது. ஹிந்து, சுதேசமித்திரன், ராமகிருஷ்ண விஜயம், ஆர்யதர்மம், முதலிய பல பத்திரிகைகளாலும், ஸ்ரீமான் A. S. P. அய்யர் I. C. S. அட்வகேட் திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர் முதலிய பல வித்தியா நிபுணர்களாலும் போற்றப்பட்டுள்ளது. 15 அத்தியாயங்கள் உள்ளது. 308 பக்கங்கள் கொண்டது. ஐந்து மகான்களினது படங்கள் ஆர்ட்டு பேபரில் உள்ளது.

விலை காலிகோ ரூ. 3—0—0 ராப்பர் ரூ. 2—8—0 தபால்சார்ஜ் தனி.

கிடைக்குமிடம்:— "ஆர்யதர்மம்" ஆபீஸ், கும்பகோணம்.

ஸமஸ்காரங்களும் அவைகளால் உண்டான செலவுகளும்.

எம் எம். அனந்தராயர் எழுதுகிறார் :—

அடியில் எழுதப்பட்ட உபன்யாஸமானது ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமத் சித்ராபுர மடாதிபதிபத்யத்தை வஹித்துக் கொண்டு வருகிற ஸ்ரீமதானந்தாச்ரமஸ்வாமிகளால் செய்யபபட்டது.

"எல்லா ஜீவ ஜந்துக்களில் இருக்கப்பட்ட ஜீவாத்மாக்கள் ஒரே பரமாத்மாவினுடைய அநேக விகாரங்களென்று சொன்னதினால் ஏக ஜீவதத்வமானது இருக்கிறதென்று ஆதி ஆச்சார்யர்கள் ப்ரபலமாக உத்கோஷித்திருக்கிறார். அவருடைய விவேக சூடாமணியில் சொல்லப்பட்டிருக்கிறது—ம்ருகங்களில் மனுஷ்ய ஜன்மாவானது அதிதுர்பலமான விஷயம்; மனுஷ்ய ஜாதியில் பும்ஸ்த்வமானது இதைக்காட்டிலும் அதி துர்பலமான விஷயம், இதை காட்டிலும் பும்ஸ்த்தவ ஜாதியில் ப்ராம்ஹண ஜன்மவானது அதிதுர்லபமான விஷயமாயிருக்கின்றது. இப்படியிருக்கையில் இதனால் தென்படும் முக்யமான விஷயமென்ன வென்றால்— மேற்சொன்ன வெவ்வேறு ஸ்திதிகள் இருக்கையினுடைய காரணமென்ன வென்றால்— மோக்ஷ ஸாதனையை அடைந்து பிற்பாடு மாத்ரம் ஏக ஜீவதத்வத்தை அறிந்து கொள்ளலாம்; இத்தத்வத்தை ஸாக்ஷாத்காரம் பண்ணும்வரையில் ப்ராம்ஹண தத்வமானது ஒரு ப்ராம்ஹணனிடத்தில் இருந்துகொண்டிருக்கும். சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது— ஜன்மாவினால் ம்ருகமாகயிருந்த போதிலும் ஸம்ஸ்காரங்களாலே ப்ராம்ஹணன் ஒருவனாகிறான். ஆகையால் ஸம்ஸ்காரங்களாலே மாத்ரம இரண்டாம் ஜன்மாவாக சொல்லப்பட்ட ப்ராம்ஹணத்வத்தை அடைகிறான்.

மனுதர்ம சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது—ஜனனத்தினால் உண்டாகிற பாபங்களை போக்கடிக்கிறதற்காக ஸம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டன. "ப்ரபஞ்சஸாரம்" என்கிற க்ரந்தத்தில் ஆதி ஆச்சார்யாள் ஸ்தாபித்திருக்கிறார்—மந்திரங்களுக்கு ஓர் அஸாதாரணமான சக்தியுண்டு. குமரில பட்டாரனவர் சொல்லுகின்றார்—ஒவ்வொரு வைதிக ஸம்ஸ்காரத்திற்கு த்ருஷ்டமான உபயோகமானது நம்முடைய கண்ணுக்கு தென்பட்ட போதிலும் அத்ருச்யமான உபயோகமானது இருந்துக்கொண்டேயிருக்கும். இப்படியிருக்கையில் அஸாதாரணமான வேத கோஷத்தினுடைய சக்தியினால் நடத்தப்பட்ட வைதிகஸம்ஸ்காரங்கள் நமக்கு கொஞ்சம்கூட உபயோகமில்லையென்று எவனாவது ஒருவன் எப்படி சொல்லலாம்?

வைதிக ஸம்ஸ்காரங்களில், இரண்டே இரண்டு ஸம்காரங்கள்—உபநயன ஸம்ஸ்காரம், விவாஹ ஸம்ஸ்காரம்—மாத்ரம் இக்காலத்தில் நம்மவர்களில் ஸாதாரணமாய் நடத்திக்கொண்டு வரப்படுகிறது. இவ்விரண்டு ஸம்ஸ்காரங்களாலே விபரீதமான செலவுகள் உண்டாகின்றன என்று கொஞ்சம் காலத்திற்குமுன் நம்மவர்களிற் சேர்ந்த க்ருஹஸ்தர்கள் அனாவச்யமான செலவுகளை தள்ளி அவச்யமான செலவுகளுடைய வ்யவஸ்தையை மடம் மூலமாய் வைதிகர்களுக்காக செய்யவேண்டுமென்று நம்மிடத்தில் விக்ஞாபனையோடு ப்ரார்த்தித்தார்கள். நாம் இவ்வாஞாபனையில் சொல்லப்பட்ட வேண்டிய விஷயங்களை நம்முடைய பர்யாலோசனைக்காக எடுத்துக் கொண்டு வைதிக கார்யங்களுடைய பாகங்களுடைய விபாகங்கள் பண்ணி இரண்டு வகையாக வைதிக கார்யங்களை ஏற்படுத்தினோம்— (1) சாஸ்த்ரரீத்யா விஹிதகர்மங்கள் (2) ஆசாரீத்யா வரப்பட்ட காம்யகர்மங்கள். எவர்களுக்கு செலவு கஷ்டங்களுண்டோ அவர்கள் மேற்சொன்ன முதற் வகை கர்மங்கள் மாத்ரம் செய்தாற் போரும். பூரி தக்ஷிணையை இன்னும் ஸந்தர்பணையும் தள்ளி உபநயன ஸம்ஸ்காரத்திற்கு மாத்ரம் பத்து ரூபாய்களுடைய செலவில் செய்யக்கூடுமென்று ஏற்படுத்திருக்கிறோம். பூரி தக்ஷிணையானது இச்சானுஸாரமாக கொடுத்தாலும் கொடுக்கலாம் கொடுகாமலிர்தாலும்மிருக்கலாம். ஸந்தர்பணமானது ஒவ்வொருவருக்கு 4½ அணா ப்ரகாரம் செலவாகும். ஆனால் வைதீகர்களுக்கு மற்ற இடங்களில்கூட மடத்தில் வழங்கிக்கொண்டுவரும் செலவு வ்யவஸ்தை ப்ரகாரமாய் அவர்கள் நடபிக்க வேண்டுமென்று மட நிர்பந்தம் வைத்தோமேயாயின் வைதீக வ்ருதியில் இருக்கப்பட்ட ஏழை ப்ராம்ஹணர்கள் ஒரே அடியாக ஸ்வவிருத்தியானது தன்னுடைய ஜீவனத்திற்கு போராமலிருகிறதை பார்த்து அந்த விருத்தியை விடும்படியாகும். இவ்விதமானது ஏற்பட்டால், ஸரியாக வைதிக தர்மரீத்யா கார்யங்களை நடபிக்கிறவர்கள் நம்ம இச்சானுஸாரமாக கிடைக்கமாட்டார்கள்.

மேலும், நம்ம ஸம்ப்ரதாய வைதீகார்கள் ஸத்யநாராயண வ்ரதத்தை நடத்துகிறதில் இதரஸம்ப்ரதாயிக வைதீகர்கள் காட்டிலும் ஜாஸ்தியான செலவை பண்ணுகிறார்களென்று ஒரு கேள்வியை கேட்கப்பட்டிருக்கிறது. இது வாஸ்தவமான விஷயம். காரணமென்னவென்றால் நம்ம வ்ரத ரீதியானது ஆஸ்வலாயன ஸம்ப்ரதாயப்ரகாரம்; அவர்களுடைய ரீதியானது இதர ஸம்ப்ரதாயங்கள் ப்ரகாரம்; இப்பேதமே காரணம். முதலிலேயே விசாரத்தை செய்தால் நம்ம ஆஸ்வலாயன தர்மங்களில் இந்த வ்ரதமானது விதிக்கவில்லை. இரண்டாம் விஷய மென்ன வென்றால் ஆஸ்வலாயன தர்மங்களில் இந்த வ்ரதமானது விதிக்காமலிருந்தபடியால் இதர ஸம்ப்ராதயக ஜனங்களாலே கொடுக்கப்பட்ட த்ரவ்யத்தைக் காட்டிலும் கொஞ்சம் ஜாஸ்தியாக நம்ம ஸம்ப்ராதயிக ஜனங்கள் நம்ம சொந்த வைதீகர்களுக்கு த்ரவ்யத்தைக்கொடுத்தால் நம்ம சொந்த ஜனங்களுக்கு ஸகாயத்தை செய்தது போல் ஆகமாட்டாதோ? மடத்தில் நடைபெறுகின்ற அனேக வ்ரத செலவுகளுடைய வ்யவஸ்தா பட்டியானது "ஸாரஸ்வத் டைரெக்டரி (சமாசார கோழத்தில்)" யில் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது.

விவாஹ—உபநயனாதி மஹோத்ஸவங்களில் பாட்டுகச்சேரி நர்தன முதலிய ஸம்ப்ரமங்களுக்காக விபரீதமான செலவுகள் செய்துக்கொண்டு வருகிறார்கள். இவ்விதமான செலவுகளை நம்ம விசாரத்திற்கு கொண்டு வந்தோமேயாயின் வைதிக தர்ம கார்யங்களுக்காக மாத்ரம் அவச்யமாக செய்ய வேண்டிய செலவுகளை குறைக்கிறதற்கு சொல்வதில் உசிதமான விஷயமில்லை யென்று நமக்கு தோன்றுகிறது. ஒரு "ரிஜிஸ்டர்ட் (Registered)" விவாஹத்தினாலேயே மாத்திரம் அதிஸ்வல்ப செலவில் நடத்தக்கூடுமென்று சொல்லத்தக்க விஷயமல்ல. ஜாஸ்தி செலவு அல்லது அதிஸ்வல்ப செலவு—இதுகளெல்லாம் ஒவ்வொருவன் மேலாதீனமாயிருக்கிற விஷயமே தவிர இதர விஷயங்களின் மேல் ஆதீனமாயிருக்கின்றதென்று சொல்லத் தக்க விஷயமல்ல.

எல்லா விதங்களில் பார்தோமேயானால் வைதிகர்களுக்கு கொடுக்க வேண்டிய த்ரவ்யத்தினுடைய வியவஸ்தா பட்டியை செய்வதற்கு அந்தந்த தேசத்தில் வழங்குகின்ற நமக்கு சேர்ந்த தர்ம ஸபைகளாலே மாத்ரம் இவ்விஷயத்தை நன்றாக ஆராய்ந்து தீர்மானிக்கவேண்டியது. அஸ்ஸபைகள் அந்தந்த தேசங்களிருக்கின்ற ஸ்திதி கதி களெல்லா வற்றையும் நன்றாக அறிந்துக்கொண்டு எவ்விதமான வ்யவஸ்தையை நிச்சயித்தால் அந்தந்த தேசங்களிலிருக்கின்ற வைதீகர்களுடைய ஜீவனோபாயத்திற்கு கொஞ்சம் கூட குறைவு இல்லாமலிருக்கும்படி அவ்விதமான வ்யவஸ்தயை நிச்சயிக்கவேண்டியது.

எல்லோரும் சரியான தர்மானுசாரிகளாக இருக்கவேண்டுமென்று ஷை எல்லோரும் ஸம்ஸ்காரங்களை ஸரியாக அனுஷ்டித்துக்கொண்டு வரவேண்டுமென்று நம்ம பிரார்தனை."

ஸ்ரீமத் பாகவத உபந்யாஸம்.

பழய மாம்பலம் ஏரிக்கரைத் தெருவு 18 நெ. ஸ்ரீ வத்ஸாச்சரமத்தில் 24—9—38 முதல் 9—10—38-வரையில் இரவு 8 மணிக்கு மேல் உடையாளூர் ஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகளால் ஸ்ரீமத் பாகவத உபந்யாஸம் நடைபெற்றது.

மஹாபாரத உபந்யாஸம்.

மதராஸ் மாம்பலம் கோதண்டராமஸ்வாமி வஸந்த மண்டபத்தில் உடையாளூர் ப்ரம்மஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் 8 மாதகாலமாய் ஒவ்வொரு தினமும் உபந்யாஸம் செய்யப்பட்டு வரும் ஸ்ரீ மஹாபாரத உபந்யாஸத்தில் 1—10—38 முதல் கர்ணபர்வ பூர்த்தியாகி 3—10—38 முதல் சல்ய பர்வம் ஆரம்பமாகி நடந்துவருகிறது.

(நமது நிருபர்)

வடவேர்.

நன்னிலம் தாலூகா வடவேர் கிராமத்தில், நவராத்திரி புண்ய காலத்தை முன்னிட்டு சேங்காலிபுரம் புராணகேஸரி ப்ரும்ம ஸ்ரீ அப்பாஸாமி சாஸ்திரியார் அவர்களால் நவக்ஹகிரமத்தை அனுஸரித்து 24—9—38 சனிக்கிழமை விஜயதசமி பர்யந்தம் பிரதி தினம் இரவு 8 மணி முதல் 11 மணிவரையில் ஸ்ரீ வால்மீகி ராமாயணம் பிரவசனம் ரொம்ப அழகாய் உபந்யாஸம் செய்யப்பட்டது ஸமீபமுள்ள கிராமங்களிலிருந்து அநேக ஜனங்கள் தினந்தோறும் வந்து கதா சிரவணம் செய்து பரமானந்தமடைந்தார்கள் பட்டாபிஷேக மஹோத்ஸவத்தோடு சரித்திரம் பூர்த்தியடைந்தது.

கிருஷ்ணமூர்த்தி.

சாரதாச்சட்டப்படி தண்டனை.

தஞ்சை ஜில்லா சேங்காலிபுரத்தைச் சேர்ந்த ஜி. ராமஸ்வாமி என்பவர் கொடுத்த பிராதின் மேல் வேதாரண்யம் ஸ்ரீமான் விஸ்வநாத சாஸ்தி என்பவர் சாரதாச்சட்டப்படி 200 ரூ அபராதம் விதிக்கப்பட்டார். ஒரு ஸ்திரீ விடுவிக்கப்பட்டாள். 12 வயதுள்ள தன் பெண்ணை விவாஹம் செய்து கொடுத்ததாக வழக்கு, பிரதிவாதி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

பால்ய விவாகக்கொடிய வழக்கத்தைத்தடுக்க வேண்டுமென்ற பெரியநோக்கத்துடனேயே கேஸ் கொடுத்தாக வாதிபெருமை சொல்லிக் கொண்டாராம்.

ஸர். ஸி. பி-க்கு கறுப்புக் கொடி!

திருவாங்கூர் திவான் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் ஸிம்லா செல்லுகையில் சென்னையிலும், பம்பாயிலும் ரயில்வே ஸ்டேஷனில் வரும்போது கருப்புக்கொடி ஆர்பாட்டம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம். இந்த ஸமாசாரம் தெரிந்து அவர் வேறு வழியாகச் சென்றுவிட்டாராம். கருப்புக்கொடிக்காரர்கள் ஏமார்ந்தனர்.

215252

ஸம்ஸ்கிருத வாணீ ஸம்வர்த்தினீ ஸபா.

கல்லிடைக்குறிச்சி.

அக்டோபர் 2௳ தேதி யன்று வைதிக தர்மஸம்வர்த்தனீ ஸம்ஸ்கிருத மஹா கலாசாலையில், ஸ்ரீ ஸரஸ்வதி பூஜா மஹோத்ஸவமும், இச்சபையின் வருஷாந்தர விழாவும் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீமான் K. S சங்கரய்யரவர்கள் தலைமை வகித்தனர். அப்பொழுது ஸ்ரீமான் R. V. சுப்பிரமணிய சர்மா அவர்கள் வருஷாந்தரரிபோர்ட் வாசித்தனர். பிறகு இக்கலாசாலை வித்யார்த்திகளான R. வெங்கடேச்வர சர்மா, ஹரிஹரசுப்பிரமணிய சர்மா இவ்விருவர்களால் வியாகரணத்திலும் எஸ். வாதிராஜ சர்மா, T. V. ராமநாத சர்மா இவ்விருவர்களால் நியாயத்திலும் வாக்யார்த்தங்கள் சொல்லப்பட்டன. பின்னர் இவ்வூர் வாசியான வேதாந்தசிரோமணி பாகவத பூஷணம் ஸ்ரீமான் K. V. ஹரிஹரசுப்பிரமண்யசாஸ்திரியவர்கள் "ராமாயண ஸாரம்" என்னும் விஷயத்தைப்பற்றி வடமொழியில் எளிய நடையில் வெகு நன்றாக உபன்யஸித்தனர். பின்னர் ஜியார்ஜ் மத்யதரக்கல்லூரி தமிழாசிரியர் ஸ்ரீமான் என். சிதம்பரகிருஷ்ணய்யரவர்கள் "கலைகள்" என்னும் விஷயத்தை தமிழில் நன்றாக உபன்யாஸம் செய்தார் பின்பு இக்கலாசாலை மாணவர்கள் சாகுந்தலத்தில் ஒரு பகுதியை நடத்தினர். பின்னர் தலைவர் அவர்கள் கூறியதாவது:-ஸம்ஸ்கிருத கல்வி யாவருக்கும் அவச்யமானது. ஸம்ஸ்கிருதத்தாலே தான் இந்தியாவே விருத்தியடைகிறது. சிலர் ஸம்ஸ்கிருதத்தை (Dead Language) இறந்த பாஷை என்று சொல்லுகின்றனர். அதற்கு அர்த்தம் அவ்விதம் இல்லை. ஆனால் ஸம்ஸ்கிருதம் இந்தியாவில் இல்லாவிடில் வேறுபாஷைகளெல்லாம் இறந்தே போய் விடும் என்பதே அர்த்தம்.

ஆகையினால் தான் (German) ஜெர்மனியிலும் ஸம்ஸ்கிருதத்தை கட்டாயக்கல்வியாக நியமித்திருக்கின்றனர். தவிர இங்குநடந்தன யாவும் மிகவும் திருப்தியளிக்கக்கூடியதாக இருந்தது என்பதேயாம். பிறகு இக்கலாசாலை (காஸ்பாண்டெண்ட்) எம். ஆர். ராமலிங்க அண்ணாவி அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை இனிது கலைந்தது.

ஒரு நிருபர்.

சாஸ்திர. விசாரதப்பட்டம்.

இவ்வருஷத்திய நவராத்ரி சமயத்தில் திருவாதி கீழவீதி ஸ்ரீ தர்மஸம்வர்த்தினீ ஸந்நிதியில் விளங்கிவரும் ஸ்ரீ பாலகணபதி வித்தியாசாலையில் மேலக்காவேரி பிரம்ம-ஸ்ரீ ஸாஹித்ய சிரோமணி சிவராமசாஸ்திரிகள் அவர்களால் 27-9-38 முதல் வரிசையாய் மூன்று நாட்களில் மூன்று உபன்யாஸங்கள் செய்யப்பட்டன.

பகவத்கீதையைப்பற்றி முதல் உபன்யாஸத்தில் ஸ்ரீ சாஸ்திரியவர்கள் கூறுகையில் அதன் ஆரம்பத்திற்குகாரணத்தையும் அதன் அதன் பயனையும் மூன்று ஷட்கங்களின் வரிசைக்கு உட்கருத்தையும் அத்வைதத்தில் அதன் தாத்பர்யம் எவ்விதம் புலப்படுகிறதென்பதையும் ப்ரஸ்தான த்ரய சப்தார்த்தத்தையும் அதனால்சீர்திருத்தக்காரர்களுக்கு பகவத்கீதை உபகாரம் செய்யாதென்பதையும் மற்றும் பல அரிய பெரிய விஷயங்களையும் மிக்க தெளிவாயும் மதுரமாயும் உபன்யஸித்தார்கள்

இரண்டாவது உபன்யாஸத்தில் ஸ்ரீமத் ராமாயணத்தின் சாராம்சத்தைப்பற்றிச் சொல்லும் பொழுது ஸ்ரீ ராம சரிதம் ஸீதா சரிதம் பௌலஸ்த்ய வதம் என்ற மூன்று பெயர்களுக்கும் காரணத்தையும் அவைகளின் ஸ்வாரஸ்யத்தையும் ராமாயணச்லோக நிரூபண பூர்வகமாய் எடுத்துக்காட்டியும் அது தர்மங்களையே உலகத்தில் எடுத்துக் காட்டுவதற்காக ஏற்பட்டதென்பதையும் இதில் தத்வார்த்தம் சொல்வதென்பதும் வேதாந்த விஷயம் தான் சொல்லப்பட்டிருப்பதென்ற அபிப்ராயமும் சிறந்த நீதியில் பொருத்தமாய் தோன்றவில்லையென்பதையும் ஆதிகாவ்யம் என்ற சப்தத்தின் பொருளையும காவ்யத்திற்கு ரஸம்தான் ஆத்மா என்பதையும் ரஸம் என்பது என்னவென்பதையும் ப்ரக்ருதத்தில் கருணா ரஸம் ப்ரகாசிக்கிறதென்பதை ஆனந்த வர்த்தனர் முதலிய ஆலங்காரிகர்களுடைய ஸித்தாந்தத்தால் நிரூபணம் செய்தும் ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஸித்தாந்தப்படி இது சரணாகதி சாஸ்திரம் என்பதை உபபாதனம் செய்தும் கர்மானுஷ்டானத்திற்கு பாதகமில்லாத வகையில் அந்த ஸித்தாந்தமும் நமக்கு இஷ்டம்தான் என்பதையும் வ்யஞ்ஜனா வ்ருத்தியால் பரமேச்வரருக்கு மேன்மை இதிலிருந்து கிடைக்கின்றதென்பதையும் ஸ்ரீ ராமாயணத்தை பற்றி பல மஹா கவிகளுடைய மேன்மையான அபிப்ராயங்களையும் ப்ராசீன நவீன ஆராய்ச்சிகளுடன் மிகவும் உருக்கமாயும் தெளிவாயும் அபாரமான புத்திகூர்மையுடனும் பரிச்ரமத்தை காண்பித்தும் அவர்களின் உற்சாகத்தையும் ஸாஹித்யத்திலுள்ள அதிசயமானபாண்டித்யத்தையும் மிக கம்பீரமாயும் அடக்கமாயும் வெளிப்படுத்தியது மிகவும் போற்றத் தக்கதாகும். மூன்றாவது நாள் வழக்கம்போல் 8-மணிக்கு ஆரம்பித்து தேவியின் மஹிமையைக் கூறும் பொழுது உபநிஷத்துக்கள் ப்ரம்ம ஸூத்ரங்கள் புராணங்கள் முதலிய யாவும் அம்பாளின் மஹிமையையே வர்ணிக்கிறதென்பதையும் சக்திக்கும் சிவனுக்கும் நிஜமாய் கிடையாதென்பதையும் மூர்த்தியாதிதமாய் அவர்களை உண்டுபண்ணக்கூடிய சக்தியற்றவளாய் காமேச்வரனின் மடியில் ப்ரகாசிக்கிறவளாயும் உலக மாதாவாயும் பரிஹார்தேவதைகள் வசிக்கும் உலகங்களுக்கெல்லாம் மேல் உலகத்தில் இருப்பதால் லலிதா என்று பெயர் பூண்டவளாய் கோபஸ்திரீகள் அக்ரூரன் முதலியவர்கள் அம்பாளின் அனுக்ரஹத்திற்குதான் இஷ்டத்தை அடைந்தனரென்பதையும் ஸ்ரீ கௌரீ பூஜையின் விசேஷத்தையும் தேவீ மாஹாத்மியம் லலிதா ஸஹஸ்ரநாமம் இவைகளின் பெருமையும் எடுத்துக் காட்டி சரத நவராத்ரியில் அதிலும் சுக்ரவாரத்தில் தேவி பூஜையின் அருமையும் பல அம்பாளின் பெருமையைக் காண்பிக்கும் க்ரந்தங்களிலிருந்தும் எடுத்துக் காட்டி விநயஸம்பத்துடனும் விசேஷ பக்தியுடனும் உபன்யஸித்தார்கள். முடிவில் சேஷராமசாஸ்திரியார் வந்தன உபசாரம் கூறும்பொழுது ஸ்ரீ சாஸ்திரிகளால் சாஸ்திர ஆராய்ச்சியையும் அவர்களின் குணநிசப்த்யதையும் ஆசாராநுஷ்டானம் உள்ள பரம்பரையில் உண்டானவர்களென்பதையும் க்ரமமான முறையில் வேதாத்யயனம் முதல் ஆரம்பித்து இதுவரையில் பயிற்சி செய்வதில் உற்சாகம் உள்ளவரென்பதையும் ஸாஹித்யம் முதலிய சாஸ்திரங்களிலும் விசேஷமான பாண்டித்யத்தையும் ஸ்ரீ காஞ்சீகாமகோடிபீடாதிபதி அவர்களின் ஸித்தாஸ்தானத்தில் ஸித்தி ப்ரம்மானத்தம் பெரிய க்ரந்தங்களையும் நன்கு அப்யஸித்தவர்கள் என்பதையும் இவர்களை மேன் மேலும் உற்சாகப்படுத்தினால் ஆஸ்திக உலகத்திற்கு விசேஷ ஆதரவு ஏற்படும் என்பதையும் லலிதா ஸஹஸ்ரநாமத்திய "சிதேகரஸ ரூபிணி" "ஸாமகானப்ரியா" முதலிய அர்ச்சனைகளும் அர்த்தத்தையும் மூன்று உபந்யாஸங்களின் வரிசைக்கு ஸ்வாரஸ்யத்தையும் எடுத்துக்காட்டினார்கள். இந்த மூன்று உபன்யாஸங்களுக்கும் ஸம்ஸ்க்ருத காலேஜ் பண்டிதர்களும் பல ப்ரமுகர்களும் ஸ்திரீகளும் பாகவதர்களும் ப்ரியமாய் விஜயம் செய்தது குறிப்பிட தக்கதாகும். அவர்களின் இஷ்டப்படியே சாஸ்திரிகளுக்கு அவர்களின் பாண்டியத்தையும் போற்றி அவர்களை உற்சாகப்படுத்வதற்காக ஷை ஸபையோர்களால் ஸ்ரீ காமகோடிபீடாதிபதியவர்களின் அநுக்ரஹத்தை முன்னிட்டு சாஸ்திர விசாரத என்ற பட்டமும் ஸன்மானமும் கொடுக்கப்பட்டது. இதற்கு உதவி புரிந்த ஆஸ்திகர்களுக்கும் வித்யாசாலை தலைவர்களுக்கும் நன்றி செலுத்தப்பட்டது. பிறகு ஷை வித்யாசாலை தலைவர் ஸ்ரீ ராஜகோபாலய்யங்கார் அவர்களும் ஸ்ரீ ஸப்ரிஜிஸ்ட்ரார் அவர்களும் ஷை சாஸ்திரிகளை புகழ்ந்து சில வார்த்தைகள் பேசினர். பகவத்ஸந்நிதி ஸமர்ப்பணம் செய்து கூட்டம் இனிது முடிவடைந்தது.

சேஷராம சாஸ்திரி.

மிலட்டூர்.

ஸீதாகல்யாண மகோத்ஸவம்.

பழூர் வேதாந்த பாடசாலையில் பண்டிதர் பிரம்மஸ்ரீ S. V. ஸுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் சிஷ்யரும் வேதாந்த சிரோமணியுமான மிலட்டூர் K. ரகுநாத சாஸ்திரிகளால் மிலட்டூரில் சென்ற ஒரு மாதகாலமாக உபன்யஸிக்கப்பட்டு வரும் ஸ்ரீ ராமாயண கதையில் நாளது ௴ 10௳ யன்று ஸீதாகல்யாண கட்டம் பிரவசனம் செய்யப்பட்டது. ஸ்ரீ சாஸ்திரிகள் மிகவும் அழகாயும் அனேக விசேஷ அர்த்தங்களோடும் அந்தந்த இடங்களுக்கு தகுந்தபடி வேதாந்த விஷயங்களையும் தார்மிக விஷயங்களையும் விளக்கி கதை பிரவசனம் செய்வதை எல்லோரும் பாராட்டினார்கள். கதை உபன்யாஸத்திற்கு பிறகு சந்தன தாம்பூலாதி விநியோகங்கள் நடைபெற்று மகோத்ஸவம் முடிவடைந்தது.

R ஸீதாராமசர்மா

ஸ்ரீ மஹாபாரதச் சுருக்கம்
(ஆதிபர்வம்.)
ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யரவர்களால் மூலத்திலுள்ளபடியேசுருக்கமாக எளியநடையில் எழுதப்பட்டது. பாரதக் கதைகளை இலகுவில் அறிய இன்றியமையாததென்று மேதாவிகளால் புகழப்பெற்றது.
விலை அணா 0 8 0

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்
அருளிச்செய்த
'பதினொரு சில்லரை ரஹஸ்யங்கள்'
முதல்பாகம்
ஸாரஸாரம் முதலியன.
விலை ரூ. 1—8—0.
இரண்டாம் பாகம்
விரோதபரிஹாரம் முதலியனவும்
பரமபதஸோபாநமும்.
விலை ரூ. 1—4—0.
இரண்டும் சேர்ந்து
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு ரூ. 2-4-0
கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜநார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

[illegible]
A1
38
20-10-1938

215253

495

24 OCT 1938
MADRAS

215253

563

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்]
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 — கும்பகோணம் கலி5040 பகுதான்ய௵ ஐப்பசி௴ 4௳ 1938௵ அக்டோபர்௴ 20௳ — ஸ 41.

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப்பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு	ரூ.	20	0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு	அணா.	0	8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

காந்தி—வைஸ்ராய் ஸந்திப்பு.

ஸமஷ்டி ஆலோசனை.

லார்டு லின்லிதோ இந்தியா வந்ததும் காந்திஜியை ஸந்தித்து ஸமஷ்டி விஷயமாகப்பேசுவாரென்றும், காங்கிரஸின் இஷ்டத்தை அநுஸரித்து ஸமஷ்டியில் சீர்திருத்தம் செய்யப்படுமென்றும் இவ்விஷயமாக இந்திய மந்திரி வைஸ்ராயிக்குப் பூர்ண அதிகாரம் கொடுத்திருப்பதாயும் அட்வான்ஸ் பத்திரிகையின் லண்டன் நிருபர் அறிவித்திருக்கிறார்

பறிமுதலான நிலங்கள்

வாபீஸ் செய்ய மசோதா.

பம்பாய் சட்ட ஸபையில், சட்ட மறுப்பு காலத்தில் பறிமுதலான நிலங்களைத்திருப்பி கொடுக்கவேண்டியதற்கான மசோதா நிறைவேறிவிட்டது.

உதவி இந்தியா மந்திரி
இந்தியா வந்தார்.

இந்தியா உதவி மந்திரியான கர்னல்மூர் ஹெட் என்பவர் இந்தியாவுக்கு வந்து விட்டார். பலவிடங்களில் இவர் சுற்றுப்பிரயாணம் செய்வார். நிலைமையை நேரில் அறிவார். காங்கிரஸ் மந்திரிகளையும், காந்திஜியையும் ஸந்திப்பாரென்று சொல்லப்படுகிறது.

டில்லி சிவன் கோவில் தகராறு.

மூன்று ஹிந்துக்கள் கொல்லப்பட்டனர்.

டில்லி சிவாலயத்தகராறு வெகு தூரம் முற்றி விட்டது. ஹிந்து ஸத்யாக்ரஹிகளின் ஊர்வலத்தை முஸ்லீம்கள் தடுத்தனர். கலஹம் நடந்தது. இதில் மூன்று ஹிந்துக்கள் கொலையுண்டனர். கடைகள் மூடப்பட்டிருக்கின்றன.

மூல்டான் கலஹம்.

மூல்டானில் மசூதி முன் மேளம் வாசித்தகாரணமாக ஹிந்து முஸ்லீம் கலஹம் நடந்தது. உயிருக்கும்பொருளுக்கும் விசேஷமாக சேதம் ஏற்பட்டது. 100 கடைகள் எரிக்கப்பட்டன.

யூதர்கள் வக்கீல் தொழில் நடத்தத்தடை.

ஜர்மனியில் உத்திரவு.

ஜர்மன் ப்ரஜா உரிமைச்சட்டப்படி ஜர்மனியில் யூதர்கள் இனிமேல் வக்கீல் தொழில் நடத்தக்கூடாதென்று ஜர்மன் கவர்ன்மெண்டார் ஓர் உத்திரவு பிறபித்துள்ளார்கள்.

ஸர். ஸி. பி. படேல் ஸந்திப்பு.

திருவாங்கூர் திவான் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யரும். ஸர்தார் படேலும் பம்பாயில் திருவாங்கூர் நிலைமையைப்பற்றி ஸந்தித்துப்பேசியதாகத்தெரிகிறது.

அங்கு இன்னும் பலர் கைதியாகி வருகின்றனர்.

இதற்கு மேல் என்ன!
ஹிட்லரின் முயற்சி.

ஸுடேடன் பிரதேசத்தை வசப்படுத்திய பிறகு, ஏற்கனவே தாம் இழந்த மற்ற காலனிகளைப்பெற ஹெர்ஹிட்லர் முயற்சி செய்ய ஆரம்பித்து விட்டார். பிரிட்டனின் யோஜனையை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

ஜனுப் ஜின்னாவின் ஏமாற்றம்.

ஸிந்துவில் முஸ்லீம் லீக் மந்திரி ஸபையை அமைக்க ஜனுப் ஜின்னா செய்த முயற்சி பலிக்கவில்லை. பல முஸ்லீம்கள் இதற்கு இணங்கவில்லை. பிரதம மந்திரி அல்லாபக்ஷும் ஜின்னா வலையில் விழ மறுத்து விட்டார்.

மதுரை
முனிஸிபாலிடியாரின் ஆவேசம்.

கோவிலில் தீண்டாதாரை
விடவேண்டுமாம்.

மதுரை முனிஸிபாலிடி கூட்டமொன்றில், ஸ்ரீ மீனாக்ஷியம்பாள், அழகர் முதலிய கோவில்களில் தற்போது, ஐரோப்பியர் மஹம்மதியர் முதலியவர் போகும் இடம் வரையில் தீண்டாதாரும் போகலாமென்று ஓர் உத்திரவு போடவேண்டுமென்று மந்திரிகளைக் கேட்டுக்கொள்வதாக ஓர் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

தீண்டாதாருக்குக்கோவில் வேலை.
திருப்பதியில் ஆரம்பம்.

திருப்பதி தேவஸ்தானத்திற்குச்சொந்தமான மின்ஸார பவர்ஹௌஸ் வேலையில் தீண்டாதாரையும் சேர்த்துக்கொள்ளலாமென்று கனம் டாக்டர் ராஜன் அநுமதியின் மேல் கமிஷனர் ஓர் உத்திரவு பிறப்பித்திருப்பதாகத்தெரிகிறது.

உயர்ந்த புஸ்தகம்!
உயர்ந்த புஸ்தகம் !!

ஸ்ரீநகர விமர்சனம்.
ஆர்யாத்விசதி ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்நம்.
[பிர்மஸ்ரீ அருட்கவி ந. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் எழுதிய தமிழுரையுடன் கூடியது.]
விலை 0—12—0. தபாற்செலவு வேறு.
கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வெ. ஸோ. சர்மா.)

யார் தவறு? சிந்துவில் நடந்த முஸ்லீம் லீகின் தலைவர் பேச்சும் தீர்மானங்களும் இந்தியருக்கு ஓர் பேர் இடியாம். காந்திஜி முஸ்லீம்களை தலைமீது தூக்கி வைத்து ஆடினார். அதன் பயனாக இன்றும் பல அனர்த்தங்கள் நேரிடப்போகின்றன!! அடுத்தபடியாக பஞ்சமரும் இந்த ஸ்திதிக்கு வருவர்.

நடந்தால் நலம்!! பம்பாயில் ஸர். விச்வேச்வர ஐயாவின் சகாயத்தைக்கொண்டு ஓர் மோட்டார்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. கால வேகத்தை எவராலேயும் தடுக்க முடியாது. காந்திஜி முதல் மிஷின் வேண்டா வேண்டாம், என்று எவ்வளவு கூறியும் அவருக்கே அதை விட்டுவிட முடியவில்லை. நமது மூலதனத்தைக்கொண்டு செய்யப்படின் பல வகையிலும் இந்தியருக்கு நன்மையுண்டாகும்.

வழி காட்டுகிறது!! திருநெல்வேலி ஜில்லா போர்ட் ஓர் கைத்தொழிற் கலாசாலையை நடத்துகிறது. இங்ஙனம் ஒவ்வொரு ஜில்லா போர்டும் அந்தந்த இடத்தில் கிடைக்கும் சாமான்களைக்கொண்டு தொழிற்சாலையை நடத்தினால் தேச க்ஷேமமுண்டாகும்.

மதுரை போர்டின் துர்வாதம்! ஆடி வீதிகளிக்கூண்டு வரை கிறிஸ்தவர் முதலியவர் போவது போல் பஞ்சமரையும் போக அனுமதிக்கும்படி மந்திரிகள் உத்திரவிட ஓர் தீர்மானம் செய்தது. இது ஜில்லா போர்டின் வேலையில்லை என மந்திரி பதில் கூறுவாரா?

திருப்பதி தேவஸ்தான பால் பண்ணை! கோவிலுக்கு பக்தர்களால் விடப்படும் பசுக்களை ஏலம் போட்டு மூலதனம் சேர்க்காமல் பசுக்களை காப்பதும் யாத்ரீகர்களுக்கு நல்ல பால் கொடுக்கும்படி செய்வதும் சிறந்த கார்யமே! ஆனால் இதை வ்யாபாரமாகக் கொண்டு சாஸ்திர விருத்தமான காரியங்களை ப்ரவேசிக்காமலிருக்கவேண்டும்.

அனர்த்த வழி! திருப்பதி கமிஷனர் தேவஸ்தான எலக்டிரிக்பகுதியில் ஓர் பஞ்சமருக்கு வேலையளித்து மந்திரி முனிசாமிப்பிள்ளையின் புன்னகையைப்பெற்றார். இங்ஙனமேமற்றும் பல பகுதிகளில் பல பஞ்சமரை நுழைத்து சுலபமாக ஆலயப்ப்ரவேசத்திற்கு வழியைக் கண்டு பிடிப்பார். வைதிகர்களெவரும் இதைக் கண்டிக்க வேண்டும்.

நாக்கை அடக்கிப் பேசு! என லாகூர் நீதிபதி ராஜீயக்கைதியைப்பார்த்துக்கூறினார். தமிழ் நாட்டில் ஆளுபவரோ வாய் கூசாமல் ஆஸ்திகரைநிந்திக்க மற்றவரை எப்படி அடக்கப்போகிறது.

ஸ்திரீகள் போதுவிஷயத்தில் தலையிட்டால் குடும்பம் சீர் குலையும் என்று சென்னை பெற்றோர் சங்கம் செய்த தத்வம் நிறைந்த அருமையான தீர்மானத்தின் மீது விசேஷ உரை தேவையா?

திமிரானப்பேச்சு!! டாக்டர் முத்துலக்ஷ்மி தங்கள் இனத்தைச்சார்ந்த சில தேவதாஸிகள் ஆலயத்தில் தொண்டு செய்வதற்காக பொட்டு கட்டவேண்டுமென்று கூற அவர்களை மிக இழிவான சொற்களால் தாக்குவது படித்தவர்க்கு அழகல்ல.

இதல்லவோ செய்யவேண்டிய வேலை!! அமெரிக்க அரசாங்கம் ஏழைகளுக்கு தானியங்கள் பாதிவிலைக்கே கிடைக்கும்படி செய்கின்றது. நமது அரசாங்கம் அத்தகைய தொண்டில் ஈடுபடாது கோவிலையும் பஞ்சமரையும் கெடுத்து தானும் கெட்டு நம்மையும் கெடுக்கின்றது.

விபரீத தீர்மானம்! பிரிட். பெண்கள் சபை கூடி தங்களுக்கு டிக்கெட் கலெக்டர் வேலை வேண்டுமெனவும், கணவன் சம்பாத்யத்தில் 8ல் ஒரு பங்கு தங்களுக்கு கொடுக்கவேண்டுமெனவும், மற்றும் பல விபரீதமான தீர்மானங்களைச் செய்தனர். இவ்வண்ணம் விருத்தியாகிக்கொண்டே சென்றால் விரைவில் நாடு அழியும்.

உத்பாதமா!! வங்காட்டில் பகல் 12 மணிக்கு மிகப்ப்ரகாசமானநக்ஷத்திரம் தெரிந்ததாம்.

நமக்கும் தேவை! பம்பாயில் படாசுகளைச் சுட்டுத் தெருவில் எரிந்தால் போலீஸ்காரர்கள் கைதிசெய்வார்கள்.

ஸினிமாவினால் வரும் தீங்கு! சென்ற ஒரு வாரமாக சென்னையில் அதிவிசித்ரமான மூளைசுரம் பரவிவருகிறது. சுகாதார அதிகாரிகள் "ஸினிமாவுக்குப் போகாதே" என்று எச்சரிக்கிறார்களே தவிர ஸினிமாவை தடுக்க முன் வராதது விசித்ரமானது.

சென்னை.

கந்தாடை பெரியார் காலமானார். வெகாஞ்சியில், அக்னிஷ்டோமம், சர்வதோமுகம், மஹாக்னிசயனம், அதிராத்ரம் முதலிய மஹாயாகங்களைச் செய்தவருமான ப்ரும்மஸ்ரீ கந்தாடை ராமஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் சென்றவாரம் 9உ இரவு அக்னிஹோத்ரத்தை செய்துவிட்டு உட்கார்ந்தபடி அனாயாசமாக தீர்த்தம் சாப்பிட்டுக்கொண்டே பூத உடலை விட்டு அக்னிஹோத்ரிகளது உலகத்தை அடைந்தார். ப்ரம்மஸ்ரீ பக்ஷிதீர்த்தம் யக்ஞேச்வர தீக்ஷிதர் அவர்கள் ஆஹிதாக்னி ப்ரயோகத்தை செவ்வனே நடத்தினார்.

ஒரு நிருபர்.

Books by Dewan Bahadur
K. S. Ramasami Sastrigal, B.A., B.L.

		Rs.	A.	P.
1.	Kalidasa's Heroes	0	6	0
2.	The science of the soul	1	8	0
3.	Manu, the friend of Man	0	8	3
4.	Sandilya Bakthi Sutras	0	4	0
5.	The Gospel of Gita	0	3	0
6.	The future of Brahmin	0	2	0
7.	The Gita ideal of devotion	0	4	0
8.	நாரத பக்தி ஸூத்ரம்	0	2	0

கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல் கும்பகோணம்.

மதராஸ் லாஜர்னல் அச்சுக்கூடம் ப்ரசுரங்கள்.

From his masters Lips	1	0	0
Hindu Ideal	3	0	0
வால்மீகி ராமாயணம் 7 காண்டம் (தேவநாகரலிபியில்)	ரூ.	அ.	ப.
தின்பேப்பர்	5	0	0
திக்பேப்பர்	4	0	0

கிடைக்குமிடம் :—

ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்
டவுன்ஹைஸ்கூல் ரோடு: கும்பகோணம்

ஸ்ரீமத் பாகவதம்.

அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிராமய்யரவர்களால் தமிழில் மொழிபெயர்ப்பு.

கிளோத் பைண்டு செய்தது ரூ. 1—4—0
சாதாரண பேபர் ரூ. 1—0—0

7,8,9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது. விலை 8 அணா

1. G. Subramaniam &Co.,
Sri Bhagavam Publishing House,
Tinnevelly Jn.
Arya Dharmam Office, Kumbakonam.

ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸபை.
கும்பகோணம்.

திருக்குடந்தை ஸ்ரீ சார்ங்கபாணிஸ்வாமி தேவாலயத்திலுள்ள ஸ்ரீ வேதாந்த தேசிகருடைய உத்ஸவகாலத்தில் சென்ற 50 வருஷமாக நடத்தப்பட்டுவரும் விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸபையின், பரீக்ஷா, ஸம்பாவனைகள் இவ்வருஷமும் வெகு விசேஷமாக நடந்து சென்றவாரம் வெள்ளிக்கிழமை பூர்த்தியாகியது. திவான்பகதூர் ஸ்ரீ. உ.வே. எஸ். ராகவ அய்யங்கார் ஸ்வாமியும், சங்கர ராமானுஜ ஸித்தாந்த பரிபாலன நிதி மானேஜிங் டைரக்டரான ஸ்ரீமான் எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்களும் வழக்கம்போல் எல்லா விஷயங்களையும் நேரில் கவனித்துக்கூடயிருந்து சிறப்பாக நடத்தி வைத்தார்கள்.

வழக்கம்போல் வெளியூர், உள்ளூர்களிலிருந்து பிரஸித்த வித்வான்களும், வித்யார்த்திகளும், வேத, பிரபந்த பாராயணகாரர்களும் வந்திருந்தனர். ஸ்ரீ பாஷ்யம், ரகஸ்யம், வேதம், வேதலக்ஷணம், பிரபந்தங்கள் போன்றவைகளில் பரீக்ஷை நடத்தப்பட்டது. மஹாமஹோபாத்யாய, பண்டிதராஜ ஸ்ரீ. கிருஷ்ணமாசாரியஸ்வாமி, புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசார் ஸ்வாமி, அக்னிஹோத்ரம் தாதாசாரியஸ்வாமி, திருப்பதி காலேஜ் பிரின்ஸ்பல் திருமலை தாதாசாரியஸ்வாமி, காவல்பாக்கம் தேவனாதாசார்ஸ்வாமி, சின்னமூர் ஸ்ரீநிவாஸபட்டாசார்ஸ்வாமி முதலிய பிரஸித்த வித்வான்கள் ஸபையில் இருந்து பரீக்ஷைகளை நடத்தினார்கள். திருச்சி அட்வகேட் ஸ்ரீ ஏ.வி. கோபாலசாரியர் டி. டி. தாதாசாரியர், புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸசாரியர் முதலியவர்கள் பல முக்ய விஷயங்களைப்பற்றி உபந்யஸித்தார்கள். கனபாடி, அனந்தாசாரியஸ்வாமி, கனபாடி அண்ணாத்தனஸ்வாமி இருவரும் வேதலக்ஷண பரீக்ஷைகளையும், வேத பரீக்ஷைகளையும் நடத்தினார்கள். வேத மஹிமையைப் பற்றி சிறந்த பிரஸங்கமும் செய்தனர். வெள்ளிக்கிழமை மாலை வித்வத் ஸம்பாவனை செய்யப்பட்டு, திவான்பகதூர் ராகவஅய்யங்கார் ஸ்வாமிகளால் எல்லோருக்கும் உபசார வார்த்தைகள் சொல்லப்பட்டு ஸபையானது வேத கோஷத்துடன் பூர்த்தியாகியது.

இச்சமயம் அவ்விடம் விஜயம் செய்திருந்த செங்கனிபுரம் பிரஸங்கபாரீண ஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் சிறிய பிரஸங்கமொன்று செய்து, வைஷ்ணவ லௌகிக ப்ரமுகர்கள் இந்த ஸபை விஷயத்தில் அதிக சிரத்தை காட்டவேண்டுமென்பதை வற்புறுத்திவிட்டு தமது நன்கொடையாக ஸபைக்கு 5 ரூபாய் உபகரித்தார். இது சந்தோஷத்துடனே பெற்றுக்கொள்ளப்பட்டது.

ஸபையின் ஆதரவில், திவான்பகதூர் ராகவய்யங்கார்ஸ்வாமியால் நடத்தப்பட்டுவரும் வேதபாடசாலை மாணாக்கர்களை ஸபையில் பரீக்ஷை செய்து, அவர்கள், நன்கு கற்பிக்கப்பட்டு நன்றாக உபஸ்திதியுடன் சொல்லுவதைப்பார்த்து ஸபா பண்டிதர்கள் விசேஷமாக திருப்தியடைந்தார்கள். மாணாக்கர்களுக்கு காவ்யபாடமும் கற்பிக்கப்பட்டிருக்கிறது. மந்திர ப்ரச்னம் போன்ற அவச்யமான விஷயங்களும் கற்பிக்கப்பட்டிருப்பதைப்பார்த்து யாவரும் ஸந்தோஷித்து இப்பாடசாலை விருத்தியடையும்படி ஸ்ரீஆராவமுதனைப்ப்ரார்த்தித்தார்கள். இதில் சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கும் ஸ்ரீமான் ராகவய்யங்கார்ஸ்வாமிகளையும் வாழ்த்தினார்கள்.

நமது நிருபர்.

ஸினிமாவில் ஸ்ரீராமாநுஜர்

திருக்குடந்தையினின்றும் பிரதி பௌர்ணமி வெளிவரும் "மாத்வமித்திரன்" பத்திரிகை புஸ்தகம் 11, நெ. 3 (9-10-38) பக்கம் 92-93-ல் கண்டிருப்பதை அங்ஙனே முதலில் பிரசுரித்தும் பின்னர் விஷயத்திற் புகுவோம்.

"××× ஸ்ரீரங்கத்தில் ஆளவந்தார் ஹீன ஜாதியினரை உயர்த்துவது முதலான மூன்று அபிலாஷைகளைக்கொண்டிருந்து அதை பூர்த்தி செய்விக்க ஸ்ரீராமானுஜரிடம் சொல்லி பிரேரேபிக்கும் முன், ஆளவந்தாருடைய காலமானதும், இதரர்கள் மூலமாய் ஸ்ரீராமானுஜர் அறிந்து இவைகளை பூர்த்தி செய்வதாய் ப்ரதிக்ஞை செய்யவும், மடங்கியிருந்த ஆளவந்தார் மூன்று விரல்கள் விரிந்ததும், பிராம்மணரல்லாத சாத்தார ஜாதியிற் பிறந்த திருக்கச்சி நம்பியை ஸ்ரீராமானுஜர் குருவாக வரித்ததும், அதற்கு அந்த நம்பி சம்மதிக்காததால் அவருடைய உச்சிஷ்டத்தை சாப்பிட்டாவது அவரை குருவாய்க் கொள்வதென்று ஸ்ரீராமானுஜர் நிச்சயித்து தன் வீட்டிற்கு அவரை போஜனத்திற்கழைத்ததும், ஸ்ரீராமானுஜர் இல்லாத சமயம் நம்பி சாப்பிடவந்து அவருடைய பாரியாள் இந்த சூத்ர சேஷம் வீட்டில் கலக்காதிருக்க அவஸரமாய் வீட்டின் ஒதுப்புறத்தில் திருக்கச்சி நம்பிக்கு போஜனம் செய்வித்து, அவருடைய எச்சில் இலையை கோலால் தள்ளி சுத்தம்செய்து, அந்த தோஷம் நீங்க, தான் ஸ்நானம்செய்து வந்ததும், இதை அறிந்த ஸ்ரீராமாநுஜர் துக்கப்பட்டு தன் ஸம்ஸாரத்தை நிந்திக்க, ஜாதி வித்யாஸம் பாராட்டாமல் அவர் இருப்பதற்கு தான் அனுசரணையாக இருக்கமுடியாதென்று அவருக்கும் அவருடைய பாரியாளுக்கும் சச்சரவு ஏற்பட்டதும், அது விருத்தியாகி ஸ்ரீராமாநுஜர் தன்பாரியாளை ஒதுக்கிவிட்டு ஸந்யாஸம் வாங்கியதும், உறையூர் மல்லன் முதலிய தாழ்ந்த ஜாதியினரின் ஸம்பர்க்கம் அடைந்திருந்தும் கூட ஸ்ரீராமானுஜருக்கு மரியாதை செய்யவேண்டியிருக்கிறதே என்று துக்கப்பட்டு ஸ்ரீரங்கம் கோவிலதிகாரிகள் அவருடைய ப்ரசாதத்தில் விஷமிட யோஜனை செய்ததும், அதை அறிந்த ஸ்ரீராமானுஜர் உபவாஸ விரதத்தை மேற்கொண்டதும், பிறகு திருக்கோட்டியூர் நம்பியின் வார்த்தையின் பேரில் ஸ்மார்த்தரான ப்ரணதார்த்திஹரரின் வீட்டில் ஸ்ரீராமானுஜர் சாப்பிட்டு வந்ததும், டெல்ஹி நவாபிடமிருந்து ஸ்ரீராமப்ரியரின் விக்ரஹத்தைப்பெற்று திரும்பி வரும் சமயம் திருடர்களிடமிருந்து சில பஞ்சமர்கள் காப்பாற்றியதின் நிமித்தம் அவர்களை சிஷ்யர்களாய் ஏற்றுக்கொண்டு அவர்கள் தீண்டாதவர்களல்லவென்று உறுதிகூறி தீக்குலத்தார்களான அவர்களுக்கு திருக்குலத்தார்கள் என பெயரிட்டு அந்த விக்ரஹமுள்ள திருநாராயணபுரம் கோயிலில் பஞ்சமர்கள் வருஷத்திற்கொருமுறை போய்வரலாமென்று அனுமதியளித்து, அவ்வாறு சாசுவதமாய் நடைபெற ஏற்பாடு செய்ததும், விஸ்தாரமாய் நடித்துக்காட்டப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் சிகரமாக மற்றொன்றும் அறிவிக்கப்பட்டது. ஸ்ரீராமானுஜரே மறுபிறப்பை அடைந்து உலகில் தீண்டாமையை ஒழிக்கப்போவதாயும், உலகிலுள்ள எல்லா கோயில்களிலும் எப்போதுமே எல்லா பஞ்சமர்களும் தாராளமாய்ப்போய்வர ஏற்பாடு செய்யப்படுமென்றும் உறுதி கூறியதைக்காட்டி, அதன்படி ஸ்ரீராமானுஜர்தான் ஸ்ரீமான் காந்தியாக அவதரித்ததாயும், அவர்தான் சரியான ஸ்ரீவைஷ்ணவர் என்றும் தீண்டாமை ஒழிக்க உபதேசம் செய்யும் அவருடைய வலக்கைதான் ஐந்து படங்களுள்ள ஸ்ரீராமானுஜரின் மூலரூபமான ஆதிசேஷன் என்றும் காண்பிக்கப்பட்டது."

மேற்குறித்த விஷயங்களுக்கு மூலாதாரமில்லாமலில்லை. ஸ்ரீ வைஷ்ணவர்களில் ஒரு சாரார் வேதம் போற் கருதி வரும் குரு பரம்பரையே இவற்றிற்கு அடிப்படை. இக்குரு பரம்பரைக்குள்ளது ஆதாரமோ அறிகிலோம். ஐதிஹ்யங்களால் நன்மைகள் உண்டாமாயினும் அடிப்படையான தத்வங்களுக்கு அவை முரண்படுமேல் அவற்றைத்தள்ளுதலே ஆன்றோர் அபிமதம். ஸ்ரீ பாஷ்யகாரர் என்று பேரறிஞர் போற்றும் பெருந்தகையாளர் நான்மறையாளரென்றும், ஆசார சீலரென்றும் ருஜுவான வியாக்கியானங்களை அருளிச்செய்தவரென்றும், சிறந்த வர்ணாச்ரமியென்றும், மெய்யலது விளம்பாதபோராண்மையாளரென்றும், சாஸ்த்ரவச்யராய் தான் உபதேசித்தவாறே வாழ்க்கையை நடத்திய மஹான் என்றும் உலகிலுள்ள சான்றோர் அனைவரும் இது காறும் முறைகேடின்றி முழங்கியுள்ளனர். மேலேகண்டபடி அவரவர் தோன்றியபடி கூறுதற்குக் காரணம் அவர் அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யத்தை ஸ்ரீவைஷ்ணவாசாரியர்கள் தற்காலத்தில் நாடு நகரமும் நன்கறிய செவ்வனே பிரசாரம் செய்யாத குற்றந்தான். இனியும் தாமறியாது இவ்வாசார்ய சிகாமணியின் க்ரந்தங்களை நன்கு பரவச்செய்தால் இவ்வித அனர்த்தம் என்றும் நேரிடாது. செவிடன் காதில் சங்கூதினது போலில்லாமலிருப்பின் இனி நலம்.

ஸினிமாவில் காட்டப்பட்டதாகக் கூறப்பட்ட ஒரு விஷயத்தையும் சாதாரண அறிவுள்ள ஒருவனும் அங்கீகரிக்க மாட்டான். கடைசி வாக்கியங்களை நன்கு கவனித்தால் விஷயம் யாருடையது, எதற்காகச் செய்யப்பட்டதென்பது தெற்றென விளங்கும். ஆளவந்தார் விஷயம், ஸ்ரீ ராமாநுஜர் ஸந்யாஸம் பெற்ற விந்தை, ஸ்மார்த்தக்ரஹத்தில் யதி போஜனம், முதலியன உண்மை அறிவு நடுவு நிலைமையுள்ள எந்த மநுஷ்யனும் அங்கீகரிக்கமுடியாதவை, திருநாராயணபுரம் பஞ்சமர் அநுமதிப்பு விஷயமாய் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க வித்வத் பரிஷத்தின் தலைவர் யதுகிரி யதிராஜஜீயர் இறுதிநாளன்று இராயப்பேட்டை லலிதாஸதனத்தில் வீராவேசத்துடன் உத்கோஷித்ததை இங்கு குறிப்பிடுகிறோம். யதார்த்தவாதி வெகுஜன விரோதி. கட்டுப்பாட்டால் பொய்யை உண்மையாக்க முடியாது. அறந்தான் வெல்லும். அகில ஸ்ரீவைஷ்ணவர்களும் தற்காலம் ஒன்று சேர்த்து இப்போது ஸம்பவித்திருக்கும் அவமானத்தை அறவே ஒழிக்க முயன்றால் தான் இவர்கட்கு ஸ்ரீராமானுஜதாஸத்வம் உண்மையில் ஸித்திக்கும் இல்லையேல் வெறும் வேஷமே. ஆசார்யத்ரோஹமும் ஸம்பவிக்கும். ஸ்ரீ வைஷ்ணவர்களே! விழிமின்! தர்மயுத்தம் நடாத்தி ஜயம்பெறுமின்! சோம்பலை ஒழிமின்

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்

நாகரலிபியில் மூலமும்,
நாமாவளியும். விலை அணா 0—5—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு
விலை அணா 0—4—0.
தபால்செலவு அணா 0—1—0

இந்த லலிதாஸஹஸ்ரநாம புஸ்தகம் ஸ்ரீமான் கணேசய்யரவர்களால் மொழிபெயர்த்து அச்சாகிவருகிறதும், ஏற்கனவே ஆர்யதர்மத்தில் பிரசுரமாகி வந்ததுமான ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம புஸ்தகத்தை அனுஸரித்து ப்ரிண்ட் செய்திருக்கிறது.

Copies can be had of:—
The Sri Janardana Printing Works, Ltd
Town High School Road, Kumbakoaum

தேச முன்னேற்றம்!

தேசங்களின் அபிவிருத்திக்காக இராப்பகல் பாடுபடுவர் பலர்; மின்சார விளக்கின் உதவியால் பாட்டுடன் படக்காக்ஷியைக்காட்டி பணம் ஸம்பாதிக்கும் கூட்டதாரும் (Company) தேசமுன்னேற்றக் காரக்கூட்டத்தாருடன் ஒத்துழைக்க ஆரம்பித்து விட்டனர்; உதாஹரணமாக, 'தேசமுன்னேற்ற'ப்படக் காக்ஷிவிளம்பரத்தில், பெரியஎழுத்தில் என்ன வரைந்திருக்கின்றனர்? என்றால்:— தீண்டாமையை ஒழித்தல், ஆலயப்ரவேசம், ஹரிஜனங்களுக்கு ஆதரவு. ஹரிஜனங்களை ஆதரிக்கவேண்டும்; அவர்களை ஆலயங்களில் செலுத்தல் வேண்டும்; அவருடன் நெருங்கிப் பழகவேண்டும்; இம்மூன்று விஷயங்களுக்கும் அநுபந்தமாக வேறு சிற்சில விஷயங்களும் சேர்க்கப்பட்டு கிராமங்கள், நகரங்கள் தோறும் காக்ஷிகள் இரவில் தினம் இரண்டு தடவை காட்டப்படுகின்றன? இதைப்பார்க்கும்பாமர ஜனங்களின் மனதில் என்னதோன்றும்? ஐயோ! பாவம்; எல்லாம் உண்மை தான்; ஏழைக்கு இரங்கலாகாதா? கொஞ்சங்கூட ஜீவகாருண்யமே இல்லையே! இவர்களா தேசத்திற்கு க்ஷேமத்தைச்செய்யப்போகிறார்கள்?............'இவை போன்ற தோற்றங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத்தோன்றக்கூடும். இப்படக்காட்சிக்காக, பணத்தை வாங்கிக்கொண்டு பாட்டும் கூத்தும் வேஷமும் தரித்துக்கொண்டு ஆனந்த நர்த்தனம் புரிந்த நடர்களையும் நடிகளையும் நாம் போற்றாமலிருப்பதற்கில்லை; நிற்க, இம்மூன்று விஷயங்களையும் நாம் இங்கு சற்று ஆராய்வோம்:

அரிஜனங்களுக்கு எம்மட்டில் உதவி அளிக்கலாம்? என்றால்:—கிருஷி-பயிரிடுதல், வியவஸாயம் செய்யும் இவர்களுக்கு, நிலஸ்வான்தார் ஏர், எருது, மண்வெட்டி, விதை, உரம் முதலிய ஸாதனங்களை விலைக்கிவாங்கிக்கொடுத்து, விளையும் தான்யங்களில் $\frac{1}{3}$ மூன்றில் ஒரு பங்கும் கொடுத்து, கடனாக கொடுத்த பணத்தை வைக்கோல் போர் விற்று, பணம் மிகுந்தால் 6-மாதத்திற்கு ஒரு தடவையாக வட்டியன்னியில் பெற்றுக்கொள்ளலாம்; தைமாஸப் பிறப்பு, தீபாவளி, திருவிழா ஸமயங்களில் விவஸாயிக் குடும்பத்திற்கு உடுக்கத் துணி, மணி, பொங்கற்படி, உதவலாம். இதன்றி,

அன்னருக்கு விருந்தளிப்பதும்
அன்னருடன் விருந்துண்பதும்.

அன்னரின் அழகுவாய்ந்த மங்கையை வதுவை செய்யவோ, தமது கன்னியரை வதுவை செய்விக்கவோ ஓர் ஸமபுத்தியுள்ள மிராசுதார், முயன்றால், ஆதரவு காட்டினால் இதைவிட வேறு என்ன இகழ்ச்சி - மானக்கேடு வேண்டியிருக்கிறது!

2-வது இவ்வரிஜனங்கள் - பண்டைகாலத்திய தம்மினத்தாரின் பழக்க வழக்கப்படி ஏதாவதொரு மாடனை-தேவதையை பன்னிமாடனையோ, அல்லது சுடலைமாடனையோ, வெள்ளி, சனி, செவ்வாய்போன்ற கிழமைகளில் மேளதாளவாத்ய - கோஷங்களோடு கோலாஹலமாக போற்றுகின்றனர்; இதில் பன்னிமாடன்-என்றால் விஷ்ணு, வராஹாவதாரஞ்செய்ததால்; சுடலைமாடன் - என்றால் சிவன், மயானத்தில் வஸித்தலால், என்க; மயா-லக்ஷ்மீதேவியுடன் அடன்-ஸஞ்சரிப்பவர்; மா அடன்-மாடன். எங்கும் நிறைந்த பரம்பொருள் என்று பொருள்-படுகின்றது; இவர்களில் சிலருக்கு சாம்பான்-சிவநேசன் என்ற பெயர் உண்டு; தவிரவும், கொச்சி ராஜ்யத்தை ஆக்ஷிபுரியும் விஷ்ணுபக்தர்களான அரசர்களுக்கு 'மாட-பூபதி' எனும் பிருது இப்பவும் வழங்குகின்றது.

(தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்

பகுதான்ய-௵ ஐப்பசி-௴ 4௳

தார்மிகர்களின் கடமை.

ஸ்ரீயுத கொல்லங்கோடு ராஜாவான ஸர் வாஸுதேவராஜா அவர்கள் மலையாள ஆலயப்பிரவேச மசோதாவை எதிர்த்து அந்த தேசத்தில் பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார். இந்த மசோதா அநுஷ்டானத்திற்கு வாராமல் தடுக்கத் தமது சக்தியனைத்தையும் உபயோகிக்கப்போவதாக ஏற்கனவே அவர் பிரதிக்ஞை செய்திருப்பது பலரும் அறிந்ததே. சில தினங்களுக்கு முன் பாலக்காட்டில் நடந்த ஜாதி ஹிந்துக்களின் கூட்டமொன்றில் அவர் தலைமை வகித்துப்பேசுகையில், மற்ற ஜில்லாக்களிலுள்ள தார்மிகர்களுடையவும், மதாசாரியர்களுடையவும் ஆதரவு மலையாளத்திற்கு அவச்யம் வேண்டியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நிலைமையில் அங்காங்குள்ள தார்மிகர்கள் இவ்விஷயத்தில் தாங்கள் என்ன செய்யக்கூடியதென்பதை உடனே யோஜித்துத் தீர்மானிக்க வேண்டிய காலம் வந்திருக்கிறது.

மசோதா கெஜட்டில் பிரசுரமாகிவிட்டது. மந்திரிகளும், கார்யதர்சிகளும் தாங்கள் போகுமிடங்களெல்லாம் இந்த மசோதா விஷயமாகப் பிரசாரம் செய்து ஆதரவுதேட ஆரம்பித்துவிட்டார்கள். காங்கிரஸ் கூட்டங்களிலும், முனிஸிபாலிடிகள் ஜில்லா போர்டு முதலிய காங்கிரஸ் வசமுள்ள ஸ்தாபனங்களிலும் இந்த மசோதாவிற்கு ஆதரவு காட்டித்தீர்மானங்கள் செய்யப்படுகின்றன. இவ்வளவு நடக்கையிலும் நமது தார்மிக ஸமூஹம் எதிர்கால ஆபத்தைக்கவனியாமல் உறங்கிக்கொண்டிருப்பது வருந்தத்தக்கது. ரங்கய்யர் மசோதாவை எதிர்த்த காலத்திலுள்ள உத்வேகம் இப்போது காணப்படாததற்குக்காரணமென்னவோ? சட்டஸபையில் மந்திரிகளுக்கு மெஜாரிடி பலமிருப்பதைக்கொண்டு இது நிறைவேறிவிடக்கூடியதாகையால், இதில் கிளர்ச்சி செய்வது அநாவச்யகமென்று சிலர் கருதியிருப்பதாகத்தெரிகிறது. இது தவறு. இப்போது ஆலயப்பிரவேச விஷயமாக காங்கிரஸ் மந்திரிகள் கொண்டுள்ள கொள்கையென்னவென்பதை நம்மவர்கள் கவனிப்பது அவசியம். நேரடியாகப் பஞ்சமருக்கு ஆலயப்பிரவேச உரிமை அளிக்கும் உத்தேசம் தங்களுக்கு இல்லையென்றும், பொது ஜனங்கள் இஷ்டப்பட்டால் அதை நிறைவேற்றிக் கொள்ளுவதற்குச் சட்டமூலமான ஸௌகர்யத்தைமட்டும் இந்த மசோதா மூலம் ஏற்படுத்திக்கொடுப்பதாகவும் மந்திரிகளின் எண்ணமாயிருக்கிறது. அதாவது தாங்கள் ஆலயப்பிரவேசப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமல் அதைப் பொதுஜனங்களின் தலைமீதே தந்திரமாகச் சுமத்தியிருக்கின்றனர். இரண்டு கக்ஷியாருக்கும் நல்லவர்போல் தாங்கள் நடித்துகாட்ட அவர்கள் விரும்புகிறார்கள். நம்மை பொதுஜனங்களுடன் போராடும்படி செய்திருக்கிறார்கள்.

ஆதலால் ஆலயப்பிரவேசம் ஏற்படுவதோ, தடுக்கப்படுவதோ பொதுஜன அபிப்பிராயத்தைப் பொறுத்ததாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு கோவிலுள்ள பிரதேசத்தில் வஸிக்கும் ஜாதி ஹிந்துக்கள் இஷ்டப்பட்டால்தான் ஆலயப்பிரவேசம் நடக்கும். இல்லையேல் அது நடக்காது. இதற்காக அந்தப் பிரதேசப் பொதுஜன வாக்கு எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் நாம் இனி மந்திரிகளையோ, காங்கிரஸையோ அணுகி இந்த அநீதியை நிவர்த்திக்கப் பாடுபடுவது அவசியமில்லை. பொதுஜனங்களிடையில்தான் நமது பிரசார வேலைகள் நடக்கவேண்டும். அந்தந்த பிரதேசத்தில் வோட் எடுக்கும் முன்பு பொதுஜனங்களுக்கு இந்த மசோதாவால் விளையக்கூடிய ஐஹிக ஆமுஷ்மிக விபரீத பலன்களை விரிவாக எடுத்துக்காட்டவேண்டியது அவச்யமாகிறது.

காங்கிரஸ்காரர்களும் நமக்கு எதிர் பிரசாரம் செய்வார்களாயினும், பொது ஜனங்களில் பெரும்பாலோருடைய மனப்போக்கு இன்னமும் ஆஸ்திக்யத்தில் நிற்பதால் நமக்கு வெற்றிகிடைக்குமென்று நினைக்க இடமுண்டு. ஆகையால் சட்டஸபையில் மசோதா நிறைவேறிவிட்டதால் மாத்திரமே ஒன்றும் நடந்துவிடமுடியாது. பொதுஜன மெஜாரிடி அபிப்பிராயம் கிடைத்தாக வேண்டும். நமது பிரசாரத்தினால் அந்த மெஜாரிடி கிடைக்காமல் செய்யவேண்டியதே இப்போதிய முக்ய வேலையாகும். தவிரவும் இந்த மசோதா மலையாளத்திற்குத்தானே என்று மற்றவிடங்களில் இருப்பவர்கள் உதாஸீனமாயிருக்கமுடியாது. இந்த பரிக்ஷையை ஆதாரமாகக்கொண்டே மற்ற ஜில்லாக்களிலும் இத்தகைய மசோதாவைக் கொண்டுவர மந்திரிகள் உத்தேசித்திருக்கிறார்கள். ஆரம்பத்திலேயே இதற்குப் பொதுஜன ஆதரவு இல்லையென்பதை நாம் நிரூபணம் செய்து மலையாள மசோதாவைக் கவிழ்த்துவிட்டோமானால் மற்ற இடங்களில் இது தலைக்காட்ட அஞ்சக்கூடும். மந்திரிகளும் இதன் பலாபலனையோஜித்தே முடிவு செய்யவேண்டியவர்களாயிருப்பார்கள்.

நவம்பர் கூட்டத்தில் மலையாள மசோதா நிறைவேறிவிடுமாதலால், அதன் பிறகு பொதுஜன ஓட்டை எடுக்கு முன் மலையாளம் முழுவதும் தார்மிகர்கள் தீவிர பிரசாரம் ஆரம்பிக்கவேண்டும். இதர ஜில்லாக்களிலிருந்து தர்மபிரசாரகர்கள் மலையாளம் சென்று உதவி புரிவதுடன், அநேகப் பிரபலஸ்தத் தலைவர்கள் சேர்ந்து ஒரு கோஷ்டியாக அங்கு சுற்றுப்பிரயாணம் செய்து உபகரிக்கலாம். மதாசாரியர்களும், தங்கள் பிரதிநிதிகளையனுப்பியும் ஸ்ரீமுகம் முதலானது விடுத்தும் ஜனங்களை வசமாக்கலாம். மேலும், ஏற்கனவே குருவாயூரில் நடத்தியதுபோல் ஓர் அகில இந்திய ஸபை நடத்தியும், ஸௌகர்யமுள்ள மதாசாரியர்களும், மடாதிபதிகளும் தங்கள் பரிஜன, பிருதுகளுடன் அந்த தேசத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து ஜனங்களுக்கு உண்மையை கூறி பிரசாரம் நடத்தலாம்.

மடாதிபதிகளின் நேர் விஜயத்தால் விசேஷ பயன் ஏற்படுமென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. இச்சமயம் ஸ்ரீ பூரிஸ்வாமிகள் போன்ற பெரியார்களையும் அத்தேசத்திற்கு பிரசாரம் செய்ய பிரார்த்திப்பது விசேஷ நன்மை பயக்கும். இம்மாதிரியான முக்யகார்யங்களைச்செய்து ஸர். வாஸுதேவ ராஜா, ஜாமோரின் முதலிய கேரள தார்மிகர்களின் கையை நாம் பலப்படுத்தவேண்டியது அவச்யம். இவ்விஷயத்தில் நமது பெரிய ஸபையான அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் தக்க முயற்சி யெடுத்துக் கொள்ளுமென்று எதிர்பார்க்கிறோம்.

குறிப்புகள்.

சென்னை கார்ப்பரேஷன் எலெக்ஷன்.

சென்னையில் சில வார்டுகளில் நடந்த எலெக்ஷனின் முடிவு வெளிவந்திருக்கிறது. இதிலிருந்து காங்கிரஸ் வாதிகள் தங்கள் நிலைமையை யோஜிக்கவேண்டியகாலம் வந்திருப்பதாகதோன்றுகிறது. கார்ப்பரேஷன்—அல்லது முனிஸிபல் எலெக்ஷன்களிலிருந்து கக்ஷிகளின் பலாபலன்களை நிர்ணயிக்க முடியாதென்பது வாஸ்தவமே, முனிஸிபல் எலெக்ஷன்களில் பலகாரணங்களை முன்னிட்டு வோட் போடுவது வழக்கமாயிருக்கிறதே இதற்குக் காரணம். ஆயினும் காங்கிரஸ் ஆக்ஷி நடந்துவரும் தலைநகரிலேயே காங்கிரஸுக்குத் தோல்வியேற்பட்டால் அதை சாதாரணமாக நினைத்துவிட முடியாது. இப்போது நடந்த எலெக்ஷனில் காங்கிரஸ் அட்ஹாக் கமிட்டி நிறுத்தியவர்களில் பெரும்பாலோர் தோல்வியடைந்தனர். இதற்கு முன் நடந்த எலெக்ஷனிலும் காங்கிரஸ் சில ஸ்தானங்களை இழந்துவிட்டது. ஆகவே பூர்ண மெஜாரிடி இருந்துவந்த சென்னைகார்ப்பரேஷனில் தற்போது காங்கிரஸுக்கு மெஜாரிடி யில்லாமல் போய்விட்டது. இதேமாதிரி அடுத்த தடவையிலும் நடந்தால் அங்கு காங்கிரஸ் கக்ஷியானது மிக துர்பலமாகி விடுமென்பது நிச்சயம். இப்போதே இதைப்பற்றிய கவலை ஏற்பட்டுவிட்டதாகத்தெரிகிறது.

காங்கிரஸிடம் பொதுஜனங்களுக்கு நம்பிக்கை குறைந்து வருவதற்கு இது ஒரு சின்னமாகவே கருதப்படவேண்டும். அட்ஹாக் கமிட்டியின் தவறுதலே இதற்குக் காரணமென்று வாதிக்கப்படலாமாயினும் முற்றிலும் அதையே காரணமாகக் கொள்ளமுடியாது. எலெக்ஷனில் வெற்றி பெற்ற பிறகு ஓட்டர்களின் நன்மையை அலக்ஷ்யமாகப் பேசுவதும், வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் துர்கக்ஷி பேசுவதும், காங்கிரஸில் அதிகரித்துவருவதை எங்கும் காண்கிறோம். தாங்களே யஜமானர்களென்ற இறுமாப்பும் காங்கிரஸ் கௌன்ஸிலர்களை விட்டபாடில்லை. மேலும் தற்காலமுள்ள பண நெருக்கடி நிலைமையில் பொதுஜனங்களுடைய பணக்கஷ்டத்தைச் சிறிதும் கவனியாமல் காங்கிரஸ் கௌன்ஸிலர்களும், மந்திரிகளும் அதிக வரி விதிக்கும் கொள்கையை பலமாக ஆதரிக்கிறார்கள். "அதிகவரி போட்டுத்தீருவோம்" என்று தைர்யமாகவும் பகிரங்கமாகப்பேசி வருகிறார்கள். வெளிஜில்லாக்களிலுள்ள பல முனிஸிபாலிடிகளில் காங்கிரஸ் நிர்வாகத்தில் வரி பளு அதிகரித்துவருவதற்கு, கும்பகோணம் முதலான முனிஸிபாலிடிகளே உதாஹரணம். வரியைக் குறைக்கும் கக்ஷியாரையே இனி ஜனங்கள் ஆதரிப்பார்கள். இதில் ஸந்தேஹமில்லை. எப்படியும் இப்போது வெளியாகிய சென்னை கார்ப்பரேஷன் எலெக்ஷன் முடிவானது காங்கிரஸ் வாதிகளுக்கு, விசேஷமாக வெளி ஜில்லா முனிஸிபல் காங்கிரஸ் கக்ஷிக்கு பெரிய எச்சரிக்கை யென்பதில் தடையில்லை.

ஸன்மார்க்கம் கெட்டவர்கள் எங்கு தான் இல்லை?

சென்னை மாகாணத்திலுள்ள தேவதாஸிகள் விழித்துக்கொண்டு விட்டனர். அவர்கள் ஸங்கம் அமைத்துக்கொண்டு மஹா நாடும் நடத்த முன் வந்திருக்கிறார்கள். தேவாலயங்களில் பொட்டுக்கட்டுதல் முதலான தங்கள் ஜீவனத்திற்கும், உரிமைக்கும் சட்டமூலமாக ஏற்படும் தடைகளை எதிர்க்க அவர்கள் நிச்சயித்திருக்கிறார்கள். இதைக்கண்டு டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மையாருக்கு மிகுந்த பயமும் கோபமும் வந்துவிட்டது. அவர்கள் மீது இவர் சீறி விழுகிறார். விகாரமான பாஷையில் அந்த தேவதாஸி வகுப்பினரைத்தாக்குகிறார். குடிகாரர்களையும் தேவதாஸிகளையும் ஒப்பிட்டு வர்ணிக்கிறார். தேவாலயங்களில் பொட்டுக்கட்டி தெய்வத்திற்கு வழிபாடு செய்வது குடிப்பதற்கு ஸமமாக இவரால் கருதப்படுகிறது.

டாக்டர் முத்துலக்ஷ்மி போன்றவர்கள் பிரஸித்தியடையவேண்டி ஏதாவது ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமல்லவா? இதற்கு பொட்டுக்கட்டுதலைப்பொறுக்கிக்கொண்டார். வெகு ஸாதாரணமான இந்த அல்ப விஷயத்தை மிகப்பெரிதாக ஆடம்பரப்படுத்தினர். ஸமூகமே நசித்துவிடுமென்று கண்ணீர்விடலானார். தேவதாஸி ஸமூஹத்தின் மானத்தைக்காப்பாற்ற முன் வந்திருப்பதாகப்பறையடித்துக் கொண்டார். பத்திரிகைகளில் இவருக்கு வேண்டியளவு இடம் கிடைத்தது.

ஆனால் பொட்டுக்கட்டும் விஷயம் இவ்வளவு பெரிதா? அபாயகரமானதா? நமது ஸமூஹத்தை பாதிக்கக்கூடியதா? ஒன்றுமில்லை. எல்லாம் ஆதாரமற்றவை. மிகைப்படுத்தப்பட்டவையே. பொட்டுக்கட்டுதல் துர்மார்க்கத்திற்கு இடமளிப்பதாகடாக்டர் முத்துலக்ஷ்மி சாதனை செய்கிறார். இது ஒன்றுதான் அவருடைய முக்ய வாதமாக இருக்கிறது. இது ஸரியானதா? பொட்டுக்கட்டினால் ஸன்மார்க்கம் குறைய வேண்டுமா? பொட்டு கட்டியவர்கள் யாவரும் ஸன்மார்க்கம் தவறியவர்களென்று சொல்லிவிட முடியுமா? அநேகர் நன்னடத்தையுள்ளவர்களாக இருக்கமாட்டார்களா? ஆகையால் பொட்டுக்கட்டுதலுக்கும் துர்மார்க்கத்திற்கும், கார்ய காரணம் கற்பிப்பது முட்டாள்தனமே.

குலஸ்திரீகளை சந்தியில் இழுக்கும் நவீன ஸ்திரீகள் இயக்கத்தின் ஸமாசாரமென்ன? அவைகளால் ஸ்திரீகளின் ஸன்மார்க்கம் குறையவில்லையென்று சொல்லமுடியுமா? இதுவரையில் பத்திரிகைகளில் வெளிப்பட்டுள்ள பலவித விவரங்களே போதிய ருஜுக்கள் அல்லவா? காந்திஜியின் ஸத்யாக்ரஹ ஆச்ரமத்தில் நடந்ததென்ன? அவர் உபவாஸமிருக்கவில்லையா? சட்டமறுப்பு காலத்தில் சில ஸ்திரீகள் பட்ட அவமானமென்ன? சாரண இயக்கத்தில் சேர்ந்தஸ்திரீகள் சிலரைப்பற்றி புகார் வரவில்லையா? ஹிந்தி பிரசார இயக்கத்தில் அபவாதம் ஏற்படவில்லையா? காலேஜ்களிலும்,பள்ளிக்கூடங்களிலும் ஸ்திரீ புருஷர் சேர்ந்து படிப்பதில் நேரும் அனர்த்தங்களுக்கு அளவு ஏது? டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டிபோன்றவர்கள் ஸ்திரீகளை சந்தியில் இழுத்துக்கிளப்பிவிடும் எந்த நவீன இயக்கத்தில்தான்ஸன்மார்க்கம் கெடவில்லை? ஆகையால் பொட்டுக்கட்டுதலால் ஸ்திரீகள் கெட்டு விடுவார்களென்று வாதிப்பதில் அர்த்தமில்லை. நல்லவர்களும், கெட்டவர்களும், எங்கு மிருக்கிறார்கள். குலஸ்திரீகளின் பெருமையைப் பாழாக்க முன்வந்துள்ள நவீன ஸ்திரீகள், ஸன்மார்க்கத்தைப்பற்றி கவலை கொள்ளுவது மிக்க விரோதமாகும்.

ஆந்திரமாகாணப் பிரிவினை ஆவேசம்!

ஆந்திர தேசத்தைத் தனி மாகாணமாக ஆக்கிவிடவேண்டுமென்ற கிளர்ச்சி வலுத்துவிட்டது. பிரபல ஆந்திரர்களும் இதை பலமாக ஆதரிக்க முற்பட்டுவிட்டார்கள். ஸமீபத்தில் நடந்த ஆந்திர மஹாஸபையில் மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் வெங்கடஸுப்பாராவ், ஸர் அல்லாடி கிருஷ்ணஸாமி அய்யர் போன்றவர்கள் கூட இதை வற்புறுத்திப் பேசியிருக்கிறார்கள். கனம் ஸி. ராஜகோபாலாசாரியர் ஆரம்பத்தில் இதில் ஸம்மதிக்கவில்லையாயினும், ஆந்திர தேசச் சுற்றுப்பிரயாணகாலத்தில் நேர்ந்த ஸம்பவங்களுக்கு பிறகு தாமும் அதை ஆதரிப்பதாகச் சொல்லிவருகிறார். இதை யனுஸரித்து இந்தியாமந்திரிக்கு கனம் ஸி. ஆர். சிபார்சு அனுப்பியிருப்பதாயும் தெரிகிறது. எதையும் ஒன்றுபடுத்தும் கொள்கையை ஆதரிக்குமிக்காலத்தில் இந்தப் பிரிவினை உசிதமாவென்று நினைக்கலாம். ஆந்திரர் தமிழர் என்ற பேதபுத்தியை அதிகரிக்கவும், அவரவர் தம் தம் நலத்தையே பாதுகாக்கும் குறுகிய புத்தியும் இதனால் அதிகரிக்கும். ஆந்திரர்களின், கலை, பாஷை, நாகரிகம் இவைகளைக் காப்பாற்றுவதே இந்தப்பிரிவினை நோக்கமானாலும் ஒன்றாயிருந்துகொண்டே இதை ஸாதிக்க முடியாதென்பதில்லை.

இனி ஆந்திரத்தைப் பிரிப்பதாயின் அந்த பாஷை பேசும் ஜனங்கள் வஸிக்கும் பிரதேசங்களையெல்லாம் அதில் சேர்க்கவேணும் இவ்விஷயமாக இப்போதே தகராறு கிளம்பிவிட்டது. சென்னை நகரம் தமிழருக்கா, ஆந்திரருக்கா என்ற சர்ச்சை கிளம்பிவிட்டது. அதில் ஆந்திரம் பேசுகிறவர்களே அதிகப்பட்டிருப்பதாலும் வேறுசரித்திர ஸம்பந்தமான ஆதாரத்தினாலும் ஆந்திரர்களுடையதே என்று மாஜி ஜட்ஜ் வெங்கடஸுப்பாராவ் முதலானவர்கள் வாதித்திருக்கிறார்கள் ஸர். அல்லாடியோ, தமிழருக்குப் பாதி, ஆந்திரருக்குப் பாதியாக பிரித்து விடலாமென்று மத்யஸ்தம் செய்கிறார். பொதுவாயும், உயர்ந்த கொள்கையுடனும் கவனித்தால் இந்தமாதிரியான பிரிவினையால், ஜன ஸமூஹம் சிதறுண்டு போவதுடன், பொருளாதாராதி கஷ்டங்களும் ஏற்படக்கூடும். ஆயினும் ஆந்திரர்கள் இதில் தீவிர ஆவேசம் காட்டுவதால் தமிழ் தேசத்திற்கு பாதகம் ஏற்படாத வகையில் இந்தப் பிரிவினையில் ஜாக்ரதை செய்யப்படுமென்று நம்புவோம்.

ஜஸ்டிஸ் கக்ஷிக்கு உயிர்?

சென்னை ஜஸ்டிஸ் நிர்வாக ஸபைக்கூட்டம் கூடியதாம். தென்னிந்தியாவில் இக்கக்ஷியை மீண்டும் உயிர்ப்பிக்கத்திட்டம் போடப்பட்டதாம். ஹிந்தி எதிர்ப்பு இயக்கத்தை சட்ட ஸம்மதமான வழியில் நடத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதாவது இப்போது நடக்கும் ஸத்யாக்ரஹ மறியலை இக்கக்ஷி ஒப்பவில்லை. ஜஸ்டிஸ் கக்ஷியின் வருடாந்தர மஹாநாட்டைக் கூட்டவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

காங்கிரஸிடம் பொதுஜனங்களுக்கு அலுப்பும் அதிருப்தியும் ஏற்பட்டுவரும் ஸமயம் பார்த்து இக்கக்ஷி தலைதூக்கமுயற்சிப்பதை காங்கிரஸ் வாதிகள் கவனித்து நடப்பது நலமென்று நினைக்கப்படுகிறது.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
மர்காபூர்.
Markapur Road Railway Station,
(Karnool Dt.)

ஸ்ரீ சார்ங்கபாணி கோவில் தீர்த்த மரியாதை.

கமிட்டியின் முடிவு.

குடந்தை ஸ்ரீ சார்ங்கபாணிஸ்வாமி கோவிலில் கடதீப தீர்த்த மரியாதை விஷயமாக தேவஸ்தானக் கமிட்டி தலைவர் இரண்டு வருஷங்களுக்குமுன் பட்டாசாரியர்களுக்கு விரோதமாகச்செய்திருந்த உத்திரவை சென்ற ஞாயிற்றுக்கிழமை நடந்த கமிட்டி கூட்டத்தில் மாற்றிவிட்டார்கள். தலைவரின் உத்திரவானது மார்கழி-௴ 20௳ இரவு நடக்கும் இரண்டாவது கடதீபத்தைப் பற்றியதுமாத்திரமேயல்லது மற்ற கடதீப காலங்களுக்கு ஏற்பட்டதல்லவென்றும், ஆகையால் எல்லா தீர்த்தமரியாதை ஸந்தப்பங்களிலும் கோவில் மாமூல் வழக்கப்படியே மரியாதைகளை டிரஸ்டிகள் நடத்திவைக்க வேண்டுமென்றும் கமிட்டியானது ஏகமனதாக முடிவுசெய்தது.

இதையனுஸரித்து கோவில் டிரஸ்டிகள் சிறிய விசாரணை நடத்தி முதல் தீர்த்த மரியாதைக்காரர்களாகிய பட்டாசாரியர்களுக்கே கடதீப காலங்களில் மரியாதை நடப்பது நீண்டகால வழக்கமென்பதை அறிந்து அப்படியே நடத்தும்படி 18௳ உத்திரவு செய்தார்கள்.

ஒரு நிருபர்.

திருவாங்கூர் கலஹம்.

ரயிலைக் கவிழ்க்க முயற்சி?

திருவனந்தபுரத்திற்கு ஸமீபமாயுள்ள ஓரிடத்தில் ரயில்வே லைனில் ஏராளமாகக் கட்டைகளை அடுக்கி திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் ரயிலைக் கவிழ்த்துவிட சில துஷ்டர்கள் முயற்சி செய்திருந்தனர். டிரைவர் அதைக் கண்டு பிடித்து ரயிலை நிறுத்தி ஆபத்து நேராமல் தடுத்தார். திருவாங்கூர் நிர்வாஹத்திற்கு அபக்யாதி உண்டுபண்ணவேண்டுமென்ற கெட்ட நோக்கம் கொண்ட ராஜீயக் கிளர்ச்சிக்காரர்களால் இந்த விஷமம் செய்யப்பட்டிருக்கலாமென்று நினைக்கப்படுகிறதாம்.

பாலக்காட்டில் ஆலயப்பிரவேச கண்டனம்.

கோல்லங்கோடு ராஜாவின் முழக்கம்.

பாலக்காட்டில் ஸ்ரீமான் கொல்லங்கோடு ஸ்ரீவாஸுதேவராஜா அவர்களின் தலைமையில். பிரமாண்டமான ஜாதி ஹிந்துக்களின் கூட்டமொன்று இரண்டு தினங்களுக்குமுன் நடைபெற்றது. மலையாள ஆலயப்பிரவேச மசோதாவைக் கண்டித்து பிரபலஸ்தர்கள் பேசினார்கள். கண்டனத்தீர்மானம் நிறைவேறியது. ஜில்லா முழுவதும் பலத்த பிரசாரம் நடத்த பலமான கமிட்டியொன்று ஏற்படுத்தப்பட்டது.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை.

திருவாங்கூரில் வரக்கூடாது.

சென்னையிலிருந்து பிரசுரமாகும் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" என்ற பத்திரிகை, தரைவழியாகவோ கடல்வழியாகவோ திருவாங்கூர் ஸம்ஸ்தானத்திற்குள் நுழையக்கூடாதென்று ஸம்ஸ்தான ஸர்க்கார் உத்திரவு போட்டிருக்கிறார்கள்.

தேச முன்னேற்றம்.

(3ம் பக்கத்தொடர்ச்சி)

மேலும், உத்ஸவகாலங்களில் பகவான் ரதத்தில் ஆரோஹணஞ்செய்து வீதிப்ரதக்ஷிணமாக பவனிவரும்பொழுது கண்டுகளிக்கின்றனர் ஹரிஜனங்கள்; அன்னாரை முன்னேற்றக்காரர் நிர்பந்தித்து ஆலயத்திற்குள் புகுத்துவார்களாகில், தாமும் கெடுவதுடன் அவர்களையும் அதோகதியடையச்செய்துவிடுவார்கள்; கிராம மகாஜனங்களின் கோபத்திற்கும் அதிருப்திக்கும் பாத்திரர்களாவார்கள்; முன்னேற்றக்காரர் புதுக்கோயில் கட்டி கடவுளை பிரதிஷ்டைசெய்து, அவர்களுக்கு அளித்து ஆனந்தமாக ஹரிஜனங்களுடன் தொழலாகாதா? கிராமக்கோயில்களையும் கிராமவாஸிகளையும் பாழாக்குவதற்கல்லவா இவர் முயற்சி!

தீண்டாமையொழித்தல் முடியாத காரியம்; ஏனெனில் இக்காலத்தில் ஜனங்கள் எல்லோரும் ஏதாவதொரு பொதுக்கூட்டத்திற்கோ, ரயிலில் ஊருக்குச்செல்லவோ வேண்டியிருந்தால், வெளுத்தவஸ்திரங்கள், சட்டைகள் தரித்துக்கொண்டு உடம்பை மூடிக்கொண்டும், சட்டையற்றவர் அங்கவஸ்திரத்தினால் சரீரத்தைப் போர்த்துக்கொண்டும் சென்று, தங்கள் காரியத்தை கவனிப்பதாக கண்டிருக்கிறோம்; அயல்நாட்டாரின் நாகரீகம் இது என்று சிலர் கருதலாம். இதில் ஓர் ஸூக்ஷ்மம் இருக்கின்றது; அஃது யாது? என்றால்:- பொதுவாக ஆஹாரம், ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என மூன்று விதமாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது; தாமஸமான உணவுகளை உட்கொள்ளுபவருடைய உடம்பினின்றும் ரோமக்கால் வழியாக, ரோகத்தை உண்டுபண்ணும் சக்திவாய்ந்த கண்ணுக்குப்புலப்படாத சில அணுக்கள் கிருமிகளுடன் வியர்வையோடு வெளியாகின்றன; இவை பிறர் உடம்பில் ஒட்டிக்கொண்டால், அதிசீக்கிரத்தில் ஏதாவதொரு பிணியை உற்பத்திசெய்யாமல் விடாது; சட்டையினாலாவது, அங்கவஸ்திரத்தினாலாவது, உடம்பை மறைத்துக்கொண்டுவிட்டால், இவை உடம்பைத்தாக்காது; தாமஸிகள் மற்றவர்களை எங்கேயாவது வழியில் நெருங்கிவிட்டால், அன்னார் சடலத்தினின்றும் வெளியே வீசும் துர்கந்தம் மற்றவர்களின் மனதை சர்த்தி செய்யும்படி கொமட்டுகின்றது; இஃது யாவர்க்கும் அநுபவஸித்தம்; இதுபோன்ற கெடுதியை நிவர்த்திப்பதற்காகவே, 4 5 நுகவளவுதூரம் அணுகாமல் செல்லவேண்டும் என்று மஹர்ஷிகள் தர்மசாஸ்திரங்களிலும், (அறநூல்களில்) ஆயுள் வேதமுறைகளிலும் விரித்துக்கூறியிருக்கின்றனர்;

தாமஸிகள் விலகாவிடினும், ஸாத்விகர்கள் ஒதுங்கும் வரை அணுகாமலிருக்க வேண்டும் இந்த நுட்பங்களை ஸுகாதார உத்யோகஸ்தர்களுடன் ஆராய்ச்சி செய்தால், நன்கு விளங்கும்; ஆரியர்களின் தர்ம நுட்பங்களை ஸதா ஸயன்ஸ் மூலம் ஆராய்ந்தறிந்து, புகழ்ந்து, கட்டுரைகள் எழுதி ஜெர்மனியர் வெளியிட்டிருப்பதை படித்துணர்ந்தால் உண்மை வெளிப்படும். இத்துடன் வேறு விஷயங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன; அவையாவன: புலால் மறுத்தல், மது விலக்கு முதலியன; இவை யாவரும் மெச்சத்தகுந்த நல்ல விஷயங்கள் தான்; ஆதலால் தேச முன்னேற்றம் என்று சொல்லிக்கொண்டு ஸ்வதேச ஜனங்களை ஸினிமா காக்ஷிகள் மூலமாகவும் உபன்யாஸங்கள் மூலமாகவும் ஏமாற்ற முயலுதல் மிக வெட்கக் கேடாக முடியும்; ஆகையால் தேச மகா ஜனங்கள் யாவரும் முன்னேற்றக்காரர் என்ற ஏமாற்றக்காரரின் ஆட்டத்துக்கு உட்படாமல், ஸ்வபுத்தியுடன், இம்மை மறுமைப்பயனளிக்கும். ஆர்ய தர்மிகளின் ப்ராசீன அநுஷ்டானப்படியே நடந்துவந்து, ஸகல ஸ்ரேயஸ்ஸையுமடைந்து உய்வார்களாக!

K. A. ராமலிங்க சாஸ்த்ரி.

திப்புராஜபுரம் ப்ரும்மவித்யா ஸபா.

உபன்யாஸங்கள்.

17—9—38 புரட்டாசி-மீ 1உ மந்த்ரமூர்த்தி சாஸ்திரிகள் ஆரம்பம் செய்த சுகோபாக்யான உபன்யாஸ சுருக்கம்.

ஸரஸ்வதி நதிதீரத்தில் தன்னுச்ரமத்தில் வசித்துவருகிற வ்யாஸ பகவான் ஒருசமயம் தன்னுச்ரமத்தில் ஊர்குருவிகள் சேர்ந்து முட்டையிட்டுக் குஞ்சுபொரித்தவுடன் அக்குஞ்சை ஆணும் பெண்ணுமாகிய இக்குருவிகள் மனுஷ்ய தம்பதிகள்போல் ஆகாரம் கொண்டுவந்து குடுத்து கொஞ்சிக் குலாவிக் ரெக்கையால் அணைத்து வெகு அபிமானத்துடன் போஷித்து வருவதை பார்த்து மிக ஆச்சர்யத்துடன் யோசித்தார். ப்ரதி உபகாரத்தை எதிர்பாராத திர்யக்ஜந்துவுக்கு புத்ரவாத்ஸல்யம இவ்விதமிருக்கும்போது இஹலோக பரலோக ஸுகத்தையும் தேவரிஷி பித்ருக்களுடைய கடனை தீர்ப்பதற்கு முக்ய ஸாதனமாக யிருப்பதையும் சாஸ்த்ரம் கூறுவதால் புத்ரபாக்யத்தை அபுத்ரவனாகிய எந்த மனுஷ்யந்தான் ஆசைப்படமாட்டான் என்று அனுமானிப்பதைக் காட்டிலும் அபுத்ரவானாகிய நம்முடைய துர்பாக்ய ரூபமான அனுபவ ப்ரத்யக்ஷமே பெரிதாக யிருக்கிறபடியால் இந்த துர்பாக்யம் நிவர்த்தியாகி புத்ர பாக்யத்தை அடைந்து இஹலோக, பரலோகஸௌக்யத்தோடு மாத்திரம் நின்றுவிடாமல் மோக்ஷானந்தத்தையும் கொடுக்கத்தகுந்த எந்த தெய்வத்தைக் குறித்து தபஸ் செய்யலாமென்ற ஸந்தேஹ மனக்கலக்கத்துடன் இருக்கும்போது நாரத பகவான் வந்து அர்க்யாதி உபசாரங்களை செய்து குசலப்ரச்னம் செய்யும்போது வ்யாஸரின் முகவாட்டத்தைப் பார்த்து நாரதர் விசாரித்து மேற்படி ஸந்தேஹ விஷயத்தை தெரிந்துகொண்டவுடன் நாரத பகவான் தன் பிதாவாகிய ப்ரும்மதேவருக்கும் தத்பிதாவாகிய பகவானுக்கும் நடந்த ஸம்வாதத்தை தெரிவிக்கிறார்.

அதாவது ப்ரும்மதேவர் பகவானை தெரிசிக்க வைகுண்டம்போய் பார்க்கும்போது பகவான் நிஷ்டையிலிருப்பதைக் கண்டு ஆச்சர்யத்துடன் பகவான் எழுந்ததும் தங்களால் த்யானம் செய்யக்கூடிய மேலான தெய்வமுண்டாவென்று விசாரிக்க பகவான் கூறுகிறார். பரமாத்மாவுக்கு ப்ரளயத்துக்குப் பிறகு உலகத்தை ஸ்ருஷ்டிக்க இச்சை தோன்றுவதற்கு ஸ்பந்த சக்தி என்று சைதன்ய ரூபிணியாய் விளங்குகிறார் சித்சக்தியின் ப்ரேரணையால் நீயும் நானும் ருத்ரனும் ஸ்ருஷ்டி பாலனம் ஸம்ஹாரங்களை செய்து வருகிறோம் நான் நித்ரை செய்வது புரண்டு படுப்பது எழுந்திருப்பது என்ற காரியங்களுக்குக்கூட சயன - பரிவர்த்தன உத்தான ஏகாதசிகளை காலமாக மேற்படி சித்சக்தியால் நியமிக்கப்பட்டிருக்கிறது நாம் எல்லோரும் தூங்கி எழுந்திருப்பதுகூட ஸ்வதந்த்ரமில்லாமல் அவளுடைய இச்சைப்படி நடக்கிறோம். இதற்கு ஸாக்ஷியாக நீயே அறிந்த விஷயம் அதாவது மஹார்ணவ ஸமுத்ரத்தில் என்னுடைய நாபிகமலத்தில் நீ உண்டான ஸமயத்தில் என்னுடைய காதுக்குரும்பையிலுண்டான 2. அசுரர்கள் உன்னை அதட்டியதில் நீ பயத்துடன் நான் நித்திரையிலிருப்பதை அறிந்து நீ பலவிதமாய் எழுப்பியும் எழுந்திருக்க முடியாதவனாய் இருப்பதை அறிந்து நீ தேவியை ஸ்துதிக்க அவளுடைய க்ருபையால் எழுந்து 5000 வருஷம் யுத்தம்செய்தும் (ஜயிக்க முடியாமல்) தேவியின் கிருபையால் கடசியில் மதுகைடப அஸுரர்களை நான் ஜயித்ததற்கு நீயே ஸாக்ஷியாகயிருந்தும் உங்களால் த்யானம் பண்ணபபடுகிற மேலான தெய்வம் உண்டா என்று கேழ்க்கிறாய் அந்த சித்சக்தியை த்யானம் செய்கிறேனென்று பகவான் ப்ரும்மதேவரைப் பார்த்து சொன்னனென்ற ஸம்வாதத்தை நாரதர் வ்யாஸருக்கு சொல்லியதைக் கேட்டுக்கொண்டிருந்த மஹரிஷிகள் ஸூதமுனிவரைப் பார்த்து மதுகைடபவதசரித்ரத்தை சொல்லவேண்டுமென்று கேட்டபடியாலும் நவராத்ரி ஆரம்பதினம் நேர்ந்தபடியாலும்

24—9—38, 1—10—38 ஸ்திரவாரங்களில் 2லும் மதுகைடபவத சரித்ரத்தை சொல்லி வரும்போது சக்தியின் உத்கர்ஷ தத்வ ரஹஸ்யத்தை மஹரிஷிகள் கேட்டார்களென்பதை அவலம்பித்து மந்த்ரமூர்த்தி ப்ரும்மஸ்ரீ கிருஷ்ணசாஸ்த்ரிகள் நவராத்ரி மகிமையைக் குறித்த ஆதாரங்களையும் புராணத்திலுள்ளபடியும் ஸூதஸம்ஹிதை முதலான இதர கோட்பாடுகளுடன் சக்தியின் உத்கர்ஷதத்வ ரஹஸ்யங்களை உபன்யஸித்து வந்ததை கேட்டவர்களுக்கு தேவி பக்தி அதிகரித்து நவராத்ர அநுஷ்டானத்தை உத்தேசமில்லாதவர்கள்கூட பக்தியுடன் அநுஷ்டிக்கத் தக்கதாகயிருந்தது.

டி. எஸ். வேங்கடராமய்யர்.

தஞ்சாவூர் ஜில்லா, நாகப்பட்டணம் தாலூகா நாகப்பட்டணம் டவுன் மார்க்கெட்டில் 10—10—38 திங்கட்கிழமை அமுலிலிருந்த சில மொத்த விலைகளுக்குஜாப்தா.

முதலாந்தரம் வெள்ளை சிறுமணியன் அரிசி 190 பவுண்டு அல்லது 1 மூட்டை	9—8—0
இரண்டாந்தர கட்டைச்சம்பா ஷை	8—0—0
நெல் முதல்தரவெள்ளை சிறுமணியன் 64 பவுண்டு	1-14-0
இரண்டாந்தர கட்டைச்சம்பா ஷை ரூ	1—8—0
தேங்காய் எண்ணெய் 38 பவுண்டு	4—4—0

ஷை தாசில்தார்.

10-10-38-ஹூ செவ்வாய்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி125 பவுண்டு உள்ள மூட்டை	4—0—0
ஷை இரண்டாந் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை	3—2—0
அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 190பவுண்டு உள்ள மூட்டை	9—0—0
ஷை இரண்டாம்தரம் நெல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை	7—8—0
தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை	4—5—0

ஷை தாசில்தார்.

ப்ரும்மஸ்ரீ அருட்கவி சுப்ரமண்ய அய்யர், அவர்கள் எழுதியது.

ஸ்ரீ நகர விமர்சனம்.	0	12	0
ஸ்ரீ குரு விமர்சனம்.	0	5	0
வரிவஸ்யா ரஹஸ்யம்.	1	0	0

கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட், கும்பகோணம்.

தீபாவளி.

யோக சாஸ்திர நிருபணம்.

முற்காலத்தில் நரகாஸுரன் என்ற ஒரு அஸுரனிருந்ததாயும், அவன் தேவர்களையும் மனிதர்களையும் தொந்திரவு செய்து வந்ததாயும், அவன் இந்திரனுடைய தாயாரான அதிதிபோட்டுக்கொண்டிருந்த குண்டலங்களை அபஹரித்துக்கொண்டு பாதாள லோகத்தில் ஒரு பட்டணத்தை ஸ்தாபித்துக்கொண்டு அவ்விடத்தில் ஆண்டுவந்ததாயும், தேவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனிடம் அவனைக்கொல்லும் படி வேண்டிக்கொண்டதால் ஸ்ரீ கிருஷ்ணன் தன் பெண்சாதி ஸத்யபாமையுடன் கெருடன் பேரில் ஏறிக்கொண்டு பாதாள லோகத்திற்கு போய் நரகாஸுரனுடன் சண்டை போட்டு அவனைக்கொன்று அவனிடமிருந்த குண்டலங்களை பிடுங்கிக்கொண்டு இந்திர லோகத்திற்கு போய் அதிதியினிடம் அவைகளைக்கொடுத்துவிட்டு ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகைக்கு திரும்பினதாகவும் நரகாஸுரன் தான் சாகு முன் ஸ்ரீ கிருஷ்ண பகவானைத்தான் இறந்த தினத்தில் அநேக தீபங்கள் போட்டு அதை உத்ஸவமாக ஜனங்கள் கொண்டாடி வரவேணுமென்றும் அப்படிக்கொண்டாடினால் அதை அவ்விதம் கொண்டாடுகிறவர்களுக்கு கெங்கா ஸ்நான பலன் கிடைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதாயும் அந்தப்படி ஸ்ரீ கிருஷ்ணன் உத்திரவு பண்ணினதாயும் அதனால் தீபாவளி யன்று அநேக தீபங்கள் பட்டாசுகள், வாணங்கள் மூலம் போட்டுக் கொண்டாடி வருவதாயும் சொல்லப்பட்டிருக்கிறது.

யோக சாஸ்திரப்படி இதை பின் வருமாறு அர்த்தம் செய்ய இடமிருக்கிறது. நரகாஸுரனென்பது மூலாதாரத்திலுள்ள ஒருகெட்ட சக்தி யென்பதாயும், அதிதியின் குண்டலங்களை மூலாதாரத்திலிருக்கும் குண்டலி சக்தியாயும், யோகிகள் யோக நிஷ்டையினால் அந்த கெட்ட சக்தியைக்கொன்று குண்டலினி சக்தியை இந்திர லோகமாகிற சிரஸிலிருக்கும் ஸஹஸ்ரதள சக்கிரத்துக்கு ஏற்றின உடன் அந்த சக்கிரத்திலுள்ள 1000 தளங்களும் ஸூர்யனைப்போல பிரகாசிப்பதோடு அவ்விடத்திற்கு மேல் மதுசக்கிரத்திலிருக்கப்பட்ட ஜ்யோதிஸும் பிரகாசிக்கிறது. இந்தஜ்யோதியைத்தான் பார்த்ததற்கு ஸமமாக தீபாவளி யன்று தீபங்கள் போட்டு பிரகாசிக்கச் செய்கிறோம். இந்த சிரஸிலுள்ள ஜ்யோதியைத்தான் சிற்றம்பலத்தில் நடராஜர் நர்த்தனம் செய்வதாய் நந்தன் சரித்திரத்தில் சொல்லி அதைப்பின் வருமாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது. "தில்லை அம்பல ஸ்தல மொன்று இருக்குதாம்" "அதைக்கண்டபேர்க்கு ஜெனனமரணபிணியை கருக்குதாம்" "அதில் உருவில்லாதகுரு ஒன்றிருக்குதாம்" "அது மூலக்கனலை ஊதி எழுப்பிக்காணப் பருக்குதாம்" "உருவமாகி வெளியே வருகுதாம்" "நான்மறைக்கும் உணர்வில்லாத காக்ஷி தருகுதாம்."

— S. அய்யாத்துரை அய்யர்.

திண்டுக்கல்.

ஸரஸ்வதி பூஜை.

சென்ற (3-10-38) ஞாயிற்றுக் கிழமையன்று ஸ்ரீ ஜகத்குரு மடத்தில் இந்நகரத்திய வேதபாடசாலை மாணவர்களால் "ஸரஸ்வதி பூஜை" விமர்சையாக நடந்தேறியது. பூஜைக்குப்பிறகு ப்ரம்மஸ்ரீ கே. தியாகராஜ தீக்ஷிதரவர்கள், B A., L T. "தேவி பூஜை" என்னும் விஷயத்தை ஓர் அழகிய உபன்யாஸம் புரிந்தார்கள். உபன்யாஸகரவர்கள் தேவி தத்வத்தைப்பற்றியும், பூஜாவிதானங்களைப்பற்றியும் நவராத்ரி விசேஷங்களைப்பற்றியும் எடுத்துரைத்தபின்ப்ரசாதம்வழங்கப்பெற்றுகூட்டம் இனிதுகலைந்தது.

— R. பாலஸுப்ரமண்யன்.

MATATHIPATHIES AS INDIA'S REAL MESSENGERS.

Reading Sir. S. Radhakrishan's reply to the address presented to him by the Corporation of Madras, one cannot help feeling how nice it would be, had the *Matathipathies* broadcasted to the world India's message in place of, at least along with, Sir. Radhakrishnan. Depictments, however vivid and eloquently worded, of the world's present sad condition and tributes of expression to India's "spirituality" "eternal values", etc., by way of contrast and comfort, does not help very much. India has got to tell the world *definitely* and *point-blank* how it must arrange itself if the present reign of disorder should give place to concord and order. In other words, how man should be related to woman to form a happy and enduring family; how family should be united to other families within each area if a happy and stable society should be built up and maintained; how nations—both weak and strong coloured and colourless—should get linked together, through righteous use of commercialism, if war and mutual distrust should disappear. Such a detailed prescription alone is the message that the world will take from India and be thankful for. Will the Matathipathies, who have an imperative duty in this matter, rise to the occasion, I repeat and vindicate themselves? Else,.. they must soon get extinct—though it is painful and may even seem irreverent to say it.

On the subject of linguistic provinces too, which is engaging much attention to-day, may I say that under a proper organisation of the Indian nation, separate provinces would he in automatically, as they once were. Tamils going out into Telugu country or Malayalam men going out into Tamil country were unknown and are still regarded as anamolous features. Even between members of the same caste, men of one linguistic area does not marry a woman of another area, although the acquisition of a common language, the English, as part of modern 'education, but really as an epuipment in the struggle to live, is now hiding these abnormalities and even giving them a false dignity, all its own. So that, as the final solution of the linguistic political problem, as rather other problems, depends on the establishment of organised or Dharmic life, it would all legitimately fall under the function of a Responsible Congregational Head, which a Matathipathy emphatically is, —not an *Asrama Sanyasi* giving *upadesams* and *anugrahas* to those who may seek them as some would be content with having them —*if* religion is to be understood and applied in its full connotation.

(Sd.) N. Subrahmanya Iyer.

ஒப்பிலியப்பன் கோவில்

ஸ்ரீமத் ஆண்டவன் வருஷத் திருவாராதன மஹோத்ஸவம்.

பஹுதான்ய-ஹூ ஐப்பசி-மீ 21உ (6—11—38) ஞாயிற்றுக்கிழமை சுக்ல சதுர்தசியில், ஸ்ரீமதித்யாதி, பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய, பௌண்டரீகபுரம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனுடைய வருஷ கைங்கர்யமாகையால், ஐப்பசி 12உ வெள்ளிக்கிழமை (23—10—38) திவ்ய பிரபந்தம், வேதபாராயணம், ஸ்ரீபாஷ்யம் முதலான கிரந்தங்கள், துடங்கி உப்பிலியப்பன் ஸன்னிதி திருநந்தவனத்திலுள்ள ஆச்ரமத்தில் ஸ்ரீமதித்யாதி, பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய ஸ்ரீரங்கநாத மஹாதேசிகன் எழுந்தருளியிருந்து நடத்துகிறபடியால் ஷை கைங்கர்ய மஹோத்ஸவத்திற்கு யாவரும் எழுந்தருளியிருந்து பூர்த்திசெய்து வைத்து ஸ்ரீமத் ஆண்டவன் அநுக்ரஹத்தைப்பெற வேணுமாய் பிரார்த்திக்கப்படுகிறது என்று இளநகர், மாடபூசிநரஸிம்மாசாரியர், எஸ்.ராஜகோபால அய்யங்கார், ரா. ஸ்ரீநிவாஸராகவாசாரியர் முதலானவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஆலங்குடி

ஒரு தமிழ்ப் பெரியாரின்.

அறுபதாம் ஆண்டு நிறைவு விழா.

தாம் ஒரு குடும்பி யானபின் தமிழில் ஆர்வங் கொண்டு கற்கத்தொடங்கி, பல இடையூறுகளுக்கிடையே தம் சொந்த உழைப்பாலே அதனை முறைப்படி கற்றுத் தேர்ந்து சிறப்புற்றவரும், முப்பது வருஷங்களுக்கதிகமாகத் தமிழாசிரியராயிருந்தும் தமிழ்த் தொன்னூல்களை வெளியிட்டும் தமிழ்ப்பணியாற்றி மேம்பாடடைந்தவரும், தமிழன்பும் தெய்வ பக்தியும் மாறு உள்ளத்தவருமான பிரும்மஸ்ரீ பண்டித அ. கொ. பால ஐயர் அவர்களுக்கு அறுபதாம் ஆண்டு நிறை விழா (ஷஷ்டியப்த பூர்த்தி கல்யாணம்) நாகபட்டணம் தாலூகா ஆலங்குடி கிராமத்தில் உள்ள அவருடைய கிருகத்தில் நேற்று (11—10—1938) வெகு சிறப்பாக நடைபெற்றது. வேதபாரகர்களும் நண்பர்களும் அபிமானிகளுமான பிரமுகர் பலர் விழாவிற்கு விஜயம் செய்திருந்தனர். நேரே வரவியலாத பல அன்பர்களிடமிருந்து தந்தி, தபால் மூலமாக வந்த பாராட்டுச் செய்திகளும் வாழ்த்துப்பாக்களும் சபையிலே படிக்கப் பெற்றது. தம்பதிகள் மணக்கோலத்துடன் புகைப்பட மெடுக்கப்பெற்றனர். வைதிக லௌகிக காரியங்கள் விமரிசையாக நடைபெற விழா இனிது நிறை வேறியது.

ஐயாவர்கள் இப்பொது தமது கிராமத்திலேயே தங்கியிருந்து சிவாலய கைங்கரியத்தில் ஈடுபட்டு அதனைச் செவ்வனே செய்து வருகின்றார்கள். ஸர்வேச்வரன், தம்பதிகளுக்கு நீண்ட ஆயுளையும் அரோகதிடகாத்திரத்தையும் அருளுவானாக.

ஒரு நிருபர்

Mr. T. R. கணபதிராமய்யர் பிரசுரங்கள்.

பாகவதம் காலிகோபயிண்டு	2	0	0
ராப்பர்	1	8	0
இங்கிலீஷ்	2	0	0
7, 8, ஸ்கந்தங்களில் தமிழில்	0	8	0

கிடைமிடம்:- ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஓர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல்ரோடு. கும்பகோணம்.

திவான்பகதூர் V. K. ராமநுஜாசாரியார். எழுதப்பட்டது.

யதீந்த்ரமத தீபிகை.	4	0	0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஓர்க்ஸ் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஓர்க்ஸ்,
லிமிடெட், டவுன் ஹைஸ்கூல்
ரோடு, கும்பகோணம்.

எல்லாவிதமான அச்சு, பைண்டிங், ரூலிங் முதலிய வேலைகளும் சீக்கிரமாகவும் நயமான சார்ஜிலும் செய்து கொடுக்கப்படும்.

தமிழ், இங்கிலீஷ், நாகர, கிரந்த, எல்லா அக்ஷரங்களிலும் புஸ்தகங்கள் அச்சுப் போடுவதில் விசேஷமாய்ப் பலராலும் ஆதரிக்கப்பெற்றது. வேண்டிய விவரங்களைத் தெரிவிக்க ஸித்தமாய் இருக்கிறோம்.

மானேஜர்.

மதிப்புரை.

ஸ்ரீ ஆண்டாள் திருமணம்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் நாலாயிரப்பிரபந்தம் செய்த ஆழ்வார்கள் பன்னிருவர்களுள் ஸ்ரீ ஆண்டாளும் ஒருவர் என்பது பலரும் அறிந்த விஷயம். பகவத் பக்தி மேலீட்டால் ஸ்ரீ ஆண்டாள் பாடிய பாசுரங்கள் பலவற்றுள், முக்யமான "திருப்பாவை" என்ற பிரபந்தத்தின் கருத்தைத்தழுவி நாடகரூபமாக மேற்படி புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. இதன் ஆசிரியர் திருமலை, நல்லரன் சிரோமணி டி. ராமகிருஷ்ணய்யங்கார் என்பவர். ஆண்டாளுடைய பகவத் பக்தி விசேஷத்தையும், திருப்பாவையின் பக்தி ரஸப்பெருக்கையும், வைஷ்ணவர்களின்றி மற்ற ஸம்பிரதாயஸ்தர்கள் யாவரும் அநுபவித்து ஆனந்திக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இந்த நாடகம் அவரால் எழுதப்பட்டிருக்கிறது. ஆண்டாள் அரங்கனை அடைய வேண்டி அநுஷ்டித்த "மார்கழி நோன்பு" என்ற விரதத்தின் கதையே இந்த நாடகத்தில் கையாளப்பட்டிருக்கிறது. ஆண்டாள் அரங்கனையே மணந்ததாகச்சரித்திரம் கூறுகிறது. மார்கழி நோம்பின் போக்கோ கண்ணனைப்பற்றியதாகக் காணப்படுகிறது. ஆயினும் ஆண்டாள் அரங்கனைக்கண்ணனாக ஸேவிப்பவளாதலால் கண்ணனைப்பற்றிய மார்கழி நோன்பு பொருத்தமற்றதாகாது.

ஆண்டாள் சரித்திரம் பல பேரால் பல வழிகளில் எழுதப்பட்டிருக்கின்றது. ஆண்டாள் ஸ்ரீரங்கம் வந்து அரங்கனை ஸேவித்து அவர் திருமேனியில் அந்தர்தான மடைந்ததாகச் சிலர் கூறுகிறார்கள். வேறு சிலர் அரங்கனே ஸ்ரீவில்லிபுத்தூர் வந்து அவளைமணந்ததாக பேசுகின்றனர். மற்றும் சிலர் ஆழ்வார் திருநகரியில் எல்லா ஆழ்வார்களின் முன்னிலையில் நடந்த ஸ்வயம்வரத்தில் ஆண்டாளுக்கும், அரங்கனுக்கும் விவாஹம் நடந்ததாக எழுதியுள்ளார்கள். இம்மாதிரி அநேக வேற்றுமைகள் காணப்படுவதால் நாடகத்தில் ஆசிரியர் ஏதாவதொருவழியைபின்பற்றநேர்ந்தது.

நாடக காவ்யத்தில் அமைக்கப்படும் கதாசரீரமானது மூலக்கதைக்கு மாறுபட்டதாயிருக்கலாமென்பதை ஆலங்காரிகர்கள் அங்கீகரித்துள்ளார்கள். நாடகரஸத்தின் பெருமைக்கும், கதாநாயக, நாயகிகளுடைய குணங்களுக்கும் குறைவு ஏற்படாத வழியில் கதையை கவியின் இஷ்டப்படி குறைக்கவோ கூட்டிக்கொள்ளவோ அநுமதியுண்டு. இது ராம, கிருஷ்ணாதி சரித்திர விஷயமான நாடகங்களில் மஹாகவிகளாலும் அநுஸரிக்கப்பட்டிருக்கும் வழியாகும். ஆதலால் இந்த நாடகத்திலும் அந்த வழி சிலவிடங்களில் பின்பற்றப்பட்டிருப்பது குற்றமாகாது. ஸம்பிரதாய விரோதமுமாகாது. புருஷர்களிலும் ஸ்திரீகளிலும் அநேகபாத்திரங்கள் இங்கு கற்பிக்கப்பட்டு ரஸமான ஸந்தர்ப்பங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கதாநாயகன் அரங்கன். கதாநாயகி ஆண்டாள். ஸந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஆங்காங்கு பாசுரங்கள் சேர்க்கப்பட்டிருப்பதும் ரஸமாக இருக்கிறது. இதில் ஆறு அங்கங்கள் இருக்கின்றன. பலவிடங்களில் சித்திரப்படங்களும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஸ்ரீமான் ராமகிருஷ்ண அய்யங்கார் இவ்விஷயத்தில் பரிச்ரமம் எடுத்துக்கொண்டு புதிய மாதிரியில் ஸம்பிரதாயத்திற்கும், தமிழ் பாஷைக்கும், தமிழ் மக்களுக்கும் செய்துள்ள உபகாரம் மிகச் சிறந்ததாகும். இந்நூலைப்பற்றிய மற்ற மேன்மைகளை, ஸ்ரீமான் சடகோப ராமாநுஜாசாரியர், எம். ஓ. எல். ஸ்வாமி எழுதியுள்ள இதின் முகவுரையில் விரிவாகக் காணலாம். இப்புஸ்தகத்தை வைஷ்ணவர்களின்றி மற்ற எல்லா ஸம்பிரதாயஸ்தர்களும் கூட எளிதில்படித்துப் பேரின்பம் அடையலாம். இதன் விலை அணா 8. புஸ்தகம் வெகு அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் டி. ராமகிருஷ்ண அய்யங்கார் சிரோமணி ஆழ்வார் திருநகரி என்ற விடத்தில் கிடைக்கும்.

ஜீ. டி.

சங்கர விலாஸம்!

விசயைநகரத்து சிதம்பரநாத பூபதியால் இயற்றப்பட்ட தமிழ் புராண காவ்யமாகிய சங்கரவிலாஸம் என்ற தமிழ் பாசுரமயமான புஸ்தகமொன்று வரப்பெற்றோம். இப்புஸ்தகம் இதுவரையில் அச்சில் வெளிவரவில்லை. இது சுமார் 232 வர்ஷங்களுக்கு முன் எழுதப்பட்டதென்று தெரிகிறது. யாழ்ப்பாணம், ஜோதிட பரிபாலினீ புஸ்தக சாலையில் ஏட்டுப்பிரதியில் கிடைத்ததென்று சொல்லப்படுகிறது. இதில் சிவபிரானைப்பற்றி விசேஷித்துக் கூறப்படும் 12 அத்யாயங்கள் இருக்கின்றன. பஞ்சாக்ஷரம், விபூதி, ருத்திராக்ஷம் ஆகியவைகளின் மகிமையைச் சொல்லும் நான்கு அத்யாயங்களும், சிதம்பரம், திருவாரூர் போன்ற பல சிவஸ்தலங்களின் கதைகளைச் சொல்லும் ஐந்து அத்யாயங்களும் கோதாவரி முதலிய புண்யதீர்த்தச் சிறப்பைக்கூறும் ஓர் அத்யாயமும் காணப்படுகிறது. இதில் மொத்தம் 1435 செய்யுள்கள் இருக்கின்றன. தமிழ் தேசத்திய புலவர்கள் பலரும் இதைப் புகழ்ந்து அபிப்பிராயம் வெளியிட்டிருக்கின்றனர். யாழ்ப்பாணம் கொக்குவில் சோதிடப்பிரகாச யந்திரசாலையில் பதிப்பிக்கப் பெற்றது. விலை ரூ. 2—0—0.

ஸ்ரீபதி அநுபவஜாதகம்.

இது யாழ்பாணம் வண்ணார்பண்ணை ஜோஸ்யர் ஸ்ரீபதி அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியதை அநுஸரித்து, ஷெயார் புத்திரி ஸ்ரீமதி இந்திராதேவியால் தமிழில் எழுதப்பட்டது. ஜாதக விஷயத்தில் உபயோகமுள்ளதும், இலகுவானதுமான ஓர் நூல் இது. ஜாதகம் பார்க்கும் வழியை ஸுலபமாக போதிக்கக் கூடியது, இதில் உதாஹரணத்துடன் படங்கள் போட்டு விஷயங்கள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ 2-0-0 யாழ்பாணம் கொக்குவில் சோதிட பரிபாலன அச்சுகூடத்தில் கிடைக்கும்.

ஸ்தோத்திரங்கள்.

வைத்தீஸ்வரஸ்தோத்திரம், விஷ்ணுஸ்தோத்திரம், இரண்டு சேர்ந்த புஸ்தகமும், விச்வநாதாஷ்டகம், விசாலாக்ஷீ பஞ்சரத்னம் முதலிய ஸ்தோத்திரங்களடங்கிய புஸ்தகமும் வரப்பெற்றோம். கொக்குவில் சோதிஷபிரகாச யந்திரசாலையில் அச்சிடப்பட்டவை. அங்கு கிடைக்கும்.

கப்பல் (ஓடம்).

ஸம்ஸாரமெனப்படும் மஹாஸமுத்ரத்தைத் தாண்டிவைக்கும், ஸ்ரீ கிருஷ்ணாஷ்டோத்திர சதநாம ஸ்தோத்திரம் என்ற கப்பல், அல்லது ஓடமென்ற இச்சிறுபுஸ்தகம் தமிழில் சீயாழி ஸ்ரீமான் கே. ஏ. கிருஷ்ணசாஸ்திரிகளால் இயற்றப்பட்டது. விலை. அரை அணா. சீயாழி சுந்தரம் பிரஸில் கிடைக்கும்.

ஆழ்வார் திருநகரி ஸனாதன தர்ம மஹா ஸபாவுக்கு நன்கொடை.

(நமது விசேஷ நிருபர்.)

ஆழ்வார் திருநகரி ஸ்ரீமத் உ-வே. அழகப்பிரானர் தேசிகமையங்கார் ஸ்வாமியின் ஸ்ரீவைகுண்டயாத்ராவைபவோத்ஸவ த்ருவது வார்ஷீக தீர்த்த தின கொண்டாட்டம் 11—10—38 செவ்வாயன்று ததியையில் திருநகரியில் அதிவிமர்சையாய் நடைபெற்றது. இவ்வைபவத்தை யொட்டி பரமபதமெய்திய (காலஞ்சென்ற) ஸ்ரீ-உ-வே அழகப்பிரானர் தேசிகமைய்யங்கார் ஸ்வாமியின் குமாரர்களால் திருநகரி சனாதன தர்ம ஸபைக்கும் ஸ்ரீமத் வரவரமுனி சபைக்கும் பணமுடிப்புகள் நன்கொடையளிக் கப்பட்டதாயும் தெரிகிறது.

ஸ்ரீ வைகுண்டம் தேவஸ்தான தகராறு.

டிரஸ்டிகளுக்குள் தாவா,

ஸ்ரீவைகுண்டம் தேவஸ்தான டிரஸ்டிகளுக்குள் நிர்வாஹ விஷயமாய் பலமான தகராறுகளிருந்து வருவதாயும் இது சம்பந்தமாய் ஸ்ரீவைடிரஸ்டிவக்கீலே ஸ்ரீமான் டி. எஸ் தாத்தாசாரியாரால் சென்னை போர்டுக்கும் தூத்துக்குடி ஆலயக்கமிட்டிக்கும் பலமாக ரிபோர்ட்டுகளனுப்பப்பட்டிருப்பதாயும் தெரிகிறது. (ந. வி. நி.)

ஸ்ரீமத் எம்பெருமானர் ஜீயர்ஸ்வாமி திருப்பதி திவ்ய தேச யாத்ரா விஜயம்.

[நமது விசேஷ நிருபர்.]

ஆழ்வார் திருநகரி உடையவர் கோவில் ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர்ஸ்வாமி தமது பரிவாரங்களுடன் திருப்பதி திவ்ய தேச, யாத்ரையில் புறப்பட்டு ப்ரதானநகரங்கள் [illegible] தேசங்கள் மார்க்கமாய்எழுந்தருளினர். [illegible]திக பக்தர்களாலும் பிரமுகர்களாலும் ஸ்ரீ ஜீயர்ஸ்வாமிகள் எங்கும் விசேஷமாய் வரவேற்றுபசரிக்கப்பட்டு வருவதாய்த் தெரிகிறது. ஸ்ரீஸ்வாமிகள் மதுரைமாநகருக்கு விஜயமானதும் ஸத்ஸம்ப்ரதாயசபாத்தலைவர் அட்வகேட் ஸ்ரீமான் டி. எஸ் ராமஸ்வாமி அய்யங்கார் திருமாலிருஞ்சோலைமலை தேவஸ்தான எக்ஸ்கூட்டிவ் ஆபீசர் ஸ்ரீமான் ராதாகிருஷ்ணய்யர் முதலிய பல பிரமுகர்களாலும் விசேஷ வரவேற்பு உபசாரம் செய்யப்பட்டு கோவில் மரியாதை வைபவங்களும் சிறப்பாக செய்து வைக்கப்பட்டதாயும் தற்போது திருக்கோஷ்டியூருக்கு விஜயம் செய்திருப்பதாயும் சிவகங்கை திவான் ஸ்ரீமான் எம். பி. பாய் ஐ. ஸி. எஸ். ஜமீன் மரியாதை செய்து உபசரித்தும் திருக்கோஷ்டியூர் கோயில் மரியாதை மங்களா சாஸனம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்துள்ளதாயும் தெரிகிறது புதுக்கோட்டை தஞ்சை குடந்தை தில்லைதிருச்சித்திரகூடம் ஸ்ரீபெரும்பூதூர் மார்க்கமாய் மதராஸ் சென்று திருப்பதிக்கு விஜயமாக பல மாதமாகலாமெனவும சொல்லப்படுகிறது சிரோமணி வித்வான் உ-வே. ஸ்ரீராமகிருஷ்ணய்யங்கார் ஆஸ்தான வித்வானாகவும் மாஜி யூனியன் சேர்மன் ஸ்ரீமான் வி. டி. ஆழ்வாரையங்கார் யாத்ரா ஏஜண்டாகவும் ஜீயருடன் கூடவே செல்வதாயும் தெரிகிறது.

ஸ்வதர்ம தூஷணை எதற்காக?

எம். எம். அனந்தராயரால் எழுதப்பட்டது

அடியில் பெழுதப்பட்ட உபன்யாஸமானது ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமச்சித்தாபுர மடாதிபத்யத்தை வகித்துக்கொண்டு வருகிற ஸ்ரீமதானந்தாச்ரம ஸ்வாமிகளாலே செய்யப்பட்டது:—

"பாகவத பரம்பர ஸம்ப்ரதாயத்தின் பெயரில் சில துராசாரங்களை 'ஆரோபணை செய்து வளர்ந்தோங்கிக்கொண்டு வருகிறது. நம்மதமாநுசாரிகள் இவ்விதமாயிருக்கின்ற ஸ்திதியை பார்த்து மிகவும் வருத்தப்படுவதுடன் நம்ம ஆசாரங்களிலிருந்து அடியோடு த்யாஜ்யம் செய்யவேண்டுமென்று அபிப்ராயித்துக்கொண்டு வருகிறார்கள். அநேக ஸந்தர்ப்பங்களில் பாகவத தர்ம விஷயமாய் சொன்ன போதிலும் ஸரியான பாகவததர்மத்தை அறிந்தவர்கள் மிகவும் அபூர்வமாயிருக்கவேண்டும். பாகவததர்மமானது இக்காலத்தில் எவ்வளவு வரையில் விபரீதத்தை அடைந்துகொண்டிருக்கிறதோ! சாக்த ஸம்ப்ரதாயத்திற்கு சேர்ந்த "பாமமார்க்கமானது" இந்தபாகவத தர்மத்தில டங்கிக்கொண்டு வந்திருக்கிறதென்று நன்றாக உத்கோஷித்தாலும் இச்சொன்ன விஷயமானது சத்தியத்திற்குட்பட்டில்லையென்று சொல்லுகிறவன் யாரும் கிடையாது. மேலும் மாத்வர்களுடைய ஸஹவாஸத்தினால் வரப்பட்ட சில ஆசாரங்கள் கூட பாகவத தர்மத்திற்கு சேர்ந்தவையென்று சொல்லிக்கொண்டு வரலாயிற்று இவ்வளவுவரையிலும் பாகவத தர்ம விஷயமாய் பாவித்துக்கொண்டு வருகிறார்கள். எப்படி ஒருவனுக்கு தன்னுடைய கோத்ரமானது தெரியாமலிருந்தால் காச்யபகோத்ரத்திற்கு சேர்ந்தவனென்று சொல்லிக்கொள்ளலாமோ, அதேப்ராகாரமாய் ஏதாவது ஓர் ஆசாரமானது ப்ரத்யேகமாய் எந்ததர்மத்தின் மேல் ஆதார பூதமாயிருக்கின்ற விஷயம் தெரியாமலிருந்தேதயாயின் அந்த ஆசாரமா[illegible] சரியோ தப்போ பாகவத தர்மத்தின் ஆதார பூதமாயிருக்கின்றது என்று சுலபமாய் சொல்வதுண்டு. இவ்விதமான ஸ்திதியானது இருந்தபடியால் இப்பாகவத தர்ம விஷயமாய் முன்னியிலேயே நம்மால் பராமர்சிக்கப்பட்டு சில விஷயங்களை இனிமேல் உபந்யஸிப்போம். இதற்குள் ராமக்ருஷ்ண மடத்திற்கு சேர்ந்த அதிகாரிகள் "கல்சரல் ஹெரிடேஜ் அப் இண்டியா" (Cultural Heritage of India) என்ற பெயரினால் வழங்குகிற ஓர் க்ரந்தத்தை ப்ரகாசத்தார்கள். இந்த க்ரந்தத்தில் பாகவததர்ம விஷயமானது அதி விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த க்ரந்தத்தில் சொன்ன விஷயங்களை மற்றொரு தாம் நாமிப்பொழுது செய்யும் உபன்யாஸத்தில் சொல்லுவது அவச்யமில்லை ஆனால் இவ்வளவு மாத்ரம் சொன்னதுனால் போரும். அது என்னவென்றால் :— அந்தக்ரந்தத்தில் ஸ்பஷ்டமாய் சொன்ன விஷயமென்னவென்றால் :— "தர்மசாஸ்த்ரங்களுக்கு விரோதமான எவ்விதமான ஆசாரமும் பாகவததர்மத்தில் பூர்ந்துகொண்டு இருக்கிறதற்காக கொஞ்சம்கூட இடம் கிடையாது.

ஆதி ஆச்சார்யாளுடைய ப்ரஹ்மஸூத்ர பாஷ்யத்தில் பாகவததர்மத்தின் சதுர்வ்யூஹங்கள் விஷயமாய் வேறுவித அபிப்ராயமானது தோன்றி வரலாம். அதேப்ரகாரமாய் பாகவததர்மாநுஸாரிகள் வேதங்களுக்குக்கூட ப்ரத்யக்ஷமாய் தென்படாத பரமாத்மாவானவன் ஒரு பக்தனுக்கு தென்படுகிறான் என்று ச்லாகிக்கிற ஸமயத்தில் வேதாபிமானியாக யிருக்கின்ற ஆதி ஆச்சார்யாள் மேற்சொன்ன ப்ரகாரம் பாகவத தர்மமானது வேதங்களை அவமானித்ததினால் இவர் இம்மாதிரியான அவமானித்தலை ஸஹிக்க முடியாமல் பாகவத தர்மமானது தர்மசாஸ்த்ரங்களுக்கு விரோதமான மதமென்று சொல்லிருக்கிறார். (II- 2-4-5) ஆனால் இவ்விரண்டு விஷயங்களில் அபிப்ராய பேதங்களிருந்தபோதிலும், பாகவததர்மத்தில் விதித்த ஸகுணோபாஸனை மூலகமாய் பரமாத்மவை அடைகிறதற்காக ஓர்மார்க்கமென்று ஆதி ஆசார்யாள் ஸ்பஷ்டமாய் ஒப்புக்கொண்டிருக்கிறார். (II- 2-42) அவர் பாகவததர்மத்தை முழுவதும் கண்டிக்கவில்லை, ஷெடி அதை அடியோடு நம்மதர்மாசரணைகளிலுருந்து தள்ளிவிடவேண்டுமென்று பிரயத்தனிக்கவுமில்லை.

பாகவததர்மத்தில் ஈஸ்வராமோச்சாரணையானது முக்யமான கொள்கையாகயிருந்தபடியால் அந்த தர்மத்தில் தர்மாசரணைக்கு இடம் கிடையாது என்று தோன்றப்படலாம். ருக்வேதமானது ஆதாரமாய் எடுத்துக்கொண்டு (II- 2-26) இதே வேதத்தில் நாமோச்சாரணமானதுஓர் வழியாக விதிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லிருக்கிறார். அந்த வழியானது இவ்வுலகத்தில் புருஷார்த்தங்களை ஸாதிக்கிறதற்காகவும், ஸ்வல்ப முயற்சியினால் அதிகமான பலன்களை கொடுக்கிறதாயும், அதில் அஹிம்சையானது சொல்லப்பட்டிருக்கிறதாயும், த்ரவ்யமில்லாமல் அந்த தர்மத்தை அனுஷ்டிக்கமுடியுமாயிருக்கிறதாயும், மற்றொருவனுடைய ஸஹாயமானது அகத்தியமில்லாததாயும், தேசகால நிர்பந்தங்களில்லாமலிருக்கின்றதாயும், இப்படியிருக்க இதா வழிகளைக்காட்டிலும் இவ்வழியானது உத்தமவழியாக இருக்கிறதென்று ஆதி ஆசார்யாள் அபிப்ராயத்திருக்கின்றார்கள். எப்படியாயினும், மேல்நிரூபணை செய்யப்பட்ட பாகவத தர்மமார்கத்தில் அஹிம்ஸாதிதர்மங்கள் அடங்கிக்கொண்டிருக்கிறதென்று நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்வது அவச்யமான விஷயம். எப்படியாயினும் ஒருதர்மமார்கத்தில் பக்தியே முக்கியமான விஷயமிருந்தபடியால் எல்லா சதாசாரங்களுடைய அனுஸரணையானது சாத்யமாயில்லாமலிருந்தபடியால் அந்த மார்கத்தில் துராசாரங்களுக்கு கொஞ்சம் கூட இடம் கிடையாது.

அந்தக்கரண சுத்தியினாலே மாத்ரம் ஈச்வரநாமோச்சாரணையானது முக்திக்கு காரணபூதமாகுமென்று விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் ஆதி ஆசார்யாள் இந்த தத்வத்தை உறுதியாக ஸ்தாபித்திருக்கிறார். மேற்சொல்லப்பட்ட அபிப்பிராயமானது ஞான மார்க்கத்தினால் முக்தி ஸாதனையை அடையக்கூடுமென்று அவருடைய மதத்திற்கு விரோதமாயில்லை. அப்படியிருக்கையில், ஆதி ஆசார்யாளுடைய மதத்திற்கு முக்யமாக விரோதமில்லாமலிருக்கும்பொழுது எந்தக்காரணத்தினால் பாகவத தர்மமானது அனுஸரிக்கிறதற்காக யோக்யமான விஷயமில்லாமலிருகிறதென்று எப்படிச்சொல்லலாம்?

ஸர்வஸக்திமானயிருக்கிற பரமாத்மாவானவர் நம்மெல்லோருக்கும் பாகவத தர்மமானது ஸரியாக அறிந்து கொள்வதற்கு ஷெடி. நம் நடத்தைகளால் அத்தர்மத்தின் பரிசுத்தையை போக்கடிக்காமலிருக்கும்படி ஸகல சக்தியை கொடுக்கட்டும்."

புராணக்கதைகள்.

(ராமசந்த்ர ஹரி:)

(முன் தொடர்ச்சி)

ஸ்ருஞ்சய! உசீநரன் புத்திரனான சிபியின் சரித்திரத்தைக்கேள். அவன்பூமிமுழுதையும் ஒரு தோல் போல் சுருட்டினான். அவனது ரதத்தின் சப்தத்தால் பூமி சப்தித்தது. அவன் ஜயப்ரதமான ஒரு தேரிலிருந்து கொண்டு இப்பூமியை ஒரு குடைக்குள்ளாக்கினான். அவன் காட்டிலுள்ள பசுக்கள் தன் பசுக்கள், குதிரைகள் யாவற்றையும் யாகத்தில் தானமாகக்கொடுத்தான். எல்லா அரசர்களுக்குள்ளும் இச்சிபி என்னும் அரசனைப்போன்றவர் இருந்ததுமில்லை இருக்கப்போவதுமில்லை என்று பிரம்மாவும் நினைத்தார் இவ்வளவு சிறந்தவனான சிபியே இறந்தானெனில் நீ உன் புத்திரனைப்பற்றி சோகிக்கவே வேண்டாம்.

5. துஷ்யந்தனுக்குச் சகுந்தலையிடம் உண்டான பரதனும் காலஞ்சென்றதைக்கேட்கிறோம். அப்பரதன் யமுனைக்கரையிலும் ஸரஸ்வதியின் கரையிலும் கங்கைக்கரையிலும் மற்றவிடங்களிலுமாக ஆயிரம் அச்வமேத யாகங்களையும் நூறு ராஜஸூயயாகங்களையும் செய்திருக்கிறான். இந்தப்பரதனது கார்யத்தைப்பின் தொடர எந்த அரசர்களும் சக்தால்லர். அவன் விஸ்தாரமான வேதிகளில் ஆயிரத்திற்கதிகரித்த குதிரைகளைக்கட்டி அந்த யாகசாலையில் கண்வருக்கு 1000000000000 (ஆயிரம் பத்மம்) பசுக்களைக்கொடுத்தான். உன்னையும் உன் புத்திரனையும்விட தர்மாதிகளில் எவ்வளவோ மேலான அப்பரதனே உன் புத்ரன் விஷயத்தில் என்ன சொல்வது.

ஸ்ருஞ்சய! தசரதபுத்ரனான ஸ்ரீராமரும் இறந்ததாகக் கேட்கின்றோம். அவர் எப்பொழுதும் பிராணிகளைப் புத்திரவாஞ்சையுடன் காப்பாற்றினார். அவரது தேசத்தில் பொருளில்லாதவனும் கஷ்டப்படுபவனுமில்லை. அவர் எல்லோருக்கும் தகப்பனைப் போலிருந்தார். அவர் ராஜ்யபாரம் செய்யும்போது காலத்தில் மழைபெய்து பயிர்கள் செழித்து எங்கும் எப்பொழுதும் சுபிக்ஷமாயிருந்தது. அப்போது பிராணிகளுக்கு ஜலம், தீ, துஷ்டம்ருகங்கள் இவைகளால் எவ்வித தீங்குகளும் உண்டானதில்லை. ஸ்த்ரீ புருஷர்கள் வியாதியின்றி இஷ்டசித்திகள் பெற்று ஆயிரமாண்டுகள் சுகித்திருந்தார்கள். ஸ்திரீகளிடத்திலும் விவாதம் கிடையாது. பிரஜைகள் பயமில்லாமல் ஸஞ்சரித்து இஷ்டஸித்திகள் பெற்று ஸந்தோஷமாய் உண்மையான நியமத்துடன் தர்மஞ்செய்கிறவர்களாயிருந்தார்கள். அக்காலத்தில் மரங்கள் யாவும் எக்காலத்திலும் பூவும் கனியும் நிரம்பிச்செழிக்க, பசுக்கள் பதக்குப்பால் கறப்பவையாயிருந்தன. அந்த ராமர் பதினான்கு வருஷம் காட்டில் வஸித்து பிறகு யாவரும் கொண்டாடும் பத்து அச்வமேதங்கள் செய்தார். அழகிய முகமும், சிவந்த கண்ணும், சிங்கம்போன்ற மார்பும், முழங்காலளவு நீண்ட கைகளும், யானைபோல கறுத்த உருவமும் உள்ள ராமர் பதினோராயிரம் வருஷம் அயோத்தியை அரசுபுரிந்து வந்தார். அந்த ராமரே இறந்தாரெனில் உன் குமாரனுக்காக வருந்தவேண்டாம். (தொடரும்)

ஸ்ரீ லலிதாத்ரிசதீ.
நாகரலிபியில் மூலமும்.
நாமாவளியும்
விலை 0—3—0
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு
விலை அணா 0—2—0.

21253

மார்சளியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

வெளியூர்ச் செய்திகள்.

மன்னார்குடியில் மஹாகவி காளிதாஸ தின மஹோத்ஸவம்

ராஜமன்னார்குடி நாஷனல் ஹைஸ்கூலில் மஹாகவிகாளிதாஸரின் தினம்கொண்டாடப்பட்டது. இதுசென்ற புதன்கிழமை12-10-38 ஷை ஹைஸ்கூல் தலைமை ஸம்ஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ வ்யாகரண வேதாந்தசிரோமணி என். விஸ்வநாத சாஸ்திரியள் அக்ராஸனத்தின் கீழ் நடைபெற்றது.

ப்ரம்மஸ்ரீ மேலக்காவேரி சாஹித்ய மீமாம்ஸா சிரோமணி, சாஸ்திர விசாரத ஏ. சிவராம சாஸ்திரியள் முதலில் பேசுகையில் காளிதாஸரின் புகழை மற்ற கவிகள் அடையவில்லையென்றும், வால்மீகி, வ்யாஸர், காளிதாஸர் இந்த மூவரும் மஹா கவிகள் என்பது மிகையாகாதென்றும், விப்ரலம்பச்ருங்காரம், கருணம், முதலிய ரஸங்களை ரஸிகர்களுக்கு சப்தமில்லாமல் புகட்டும் வழியில் இவர் மிகவும் ஸமர்த்தர் என்றும், மஹா காவ்ய லக்ஷணங்கள் இவர் காவ்யங்களில்பூர்ணமாயிருக்கின்றதென்றும் இயற்கை வனப்புவாய்ந்த வஸ்துக்களை இவர் அப்படியே வர்ணித்திருப்பதால் இவர் க்ரந்தங்கள் மூன்று காலங்களிலும் போற்றப்படுகின்றதென்றும் உபமாலங்காரத்தில் இவர் மிகப்ரஸித்தி பெற்றவர் என்றும் இவர் புஸ்தகங்களில் ஸாமான்ய தர்மங்களும் விசேஷதர்மங்களும் தெளிவாய்ப்ரதிபாதனம் செய்யப்பட்டிருக்கின்றதென்றும், ச்ருங்கார ரஸத்தில் கூட தர்மப்ரவணமானதே இவருக்கு இஷ்டமென்றும், ப்ரம்மானந்தத்திற்கு ஸமானமான ஆனந்தம் இவர்க்ரந்தங்களைப்படிப்பதால் யாவருக்கும் எளிதில் ஏற்படும் என்பதை பாணர் என்ற பெரிய கவியே வர்ணித்திருக்கிறாரென்றும், எப்பொழுதும் துக்கத்தை யநுபவித்து வரும் ஜனங்களுக்கு சுகம் வேண்டுமானால் இவர் க்ரந்தங்களைப்படிப்பதே அதற்கு சாதனம் என்றும் இவர் க்ரந்தங்களைப்படித்து நாம் விஷயங்களை நன்குணர்வதே இவரிடத்தில் நாம் காண்பிக்கும் க்ருதக்ஞதையாகவேற்படும் என்றும் இளமையிலிருந்தே மாணவர்கள் இவர் க்ரந்தங்களை படிக்கவேண்டும் என்றும் இவர் தேசம், காலம், சரிதம் க்ரந்தங்கள் இவைகளைப்பற்றியும் ப்ரமாண நிரூபண பூர்வகம் எடுத்துரைத்தார்கள்.

பிறகுஷையூர் வேதபாடசாலைகனபாடிகளும் ஷை ஸ்கூலில்மதபோதகாசிரியருமான ஸ்ரீ-உ. வே நரஸிம்ஹாசாரியார்அவர்கள்பேசுகையில் காளிதாஸர் ப்ராம்மணர் என்பது உபநிஷத்து வாக்யங்களை அப்படியே அவர் எடுத்திருப்பதினால் ஸித்திக்கிறதென்றும் ஸ்ரீமத் ராமாயணாதிகளில் எந்த பாகம் அதிகமாய் வர்ணிக்கலாம் என்பதை இவர் தன் க்ரந்தத்தில் காண்பித்திருக்கிறார் என்றும் வால்மீகியின் நோக்கத்தை பல இடங்களில் பின்பற்றியிருப்பதை ரகுவம்சம் என்ற பெயர் காண்பிக்கிறதென்றும் இன்னும் பல விஷயங்களையும் சுருக்கமாயும் தெளிவாயும் எடுத்துரைத்தார்கள். முடிவில் அக்ராஸனாதிபதி அவர்கள் காளிதாஸர் க்ரந்தங்கள் மாணவர்களுக்கு ப்ரக்ருதத்தில் பயன்படும் விதத்தை எடுத்துக் காட்டி உபன்யாஸம் செய்த பண்டிதர்களை போற்றி இவர்களைக்கொண்டு பல உபன்யாஸங்கள் நடத்துவது நலம் என்பதையும் தெரிவித்தார்கள். பிறகு ஹெட் மாஸ்டர் ஸ்ரீ S. வைத்யநாதய்யரவர்கள் பேசும்போது அக்ராஸனாதிபதி அவர்களும் உபன்யாஸகர்களும் சிறந்த பண்டிதர்களாயும் ரஸிகர்களாயுமிருக்கின்றன என்றும் நமது தேச மஹா கவியை நாம் போற்றுவது நமது ஸ்கூலின் பெயருக்குப் பொருத்தமானதென்றும்இதற்காக விஜயம் செய்த பண்டிதர்களுக்கும் உபாத்யாயர்களுக்கும் மாணவர்களுக்கும் தனது மனமார்ந்த நன்றியை செலுத்துவதாயும் கூறினார். ஸபை இனிது முடிவடைந்தது.

M. S. சுப்ரமணிய அய்யர்.

திப்பிராஜபுரம்

பிரும்ம வித்யா விகாஸினீ ஸபா.

சென்ற 8-10-38 ஸ்திர வாரம் ஷை சபையின் ஆதரவில் காரியதரிசி அவர்களின் அழைப்பிற்கிணங்கி இரவு 7½ மணி முதல் 8½ மணி வரையில் ஷையூர் ஜன்மியும் நன்னிலம் போர்டு ஹைஸ்கூல் ஸம்ஸ்கிருத உபாத்தியாயருமான பிரும்மஸ்ரீ டி. எஸ். வைத்தியநாத சாஸ்திரி, சிரோமணி அவர்களால் "பிரும்ம வித்யையும், ஸபையின் நோக்கங்களும்" என்ற விஷயம் பற்றி பரமாசார்யாநுஸந்தான பூர்வமாக வெகு அழகாக உபன்யசிக்கப்பட்டது.

முதலில் "பிரும்ம வித்யா ஸபா" என்றது இது வரையில் பெயராக இருந்து வந்ததாகவும் தற்காலம் ஸபை பந்தலில் பிரும்மவித்யை என்ற கொடியானது மஹான்களால் சிறிது காலத்திற்கு முன் ஸ்தாபிக்கப்பட்டு, தர்மம் என்ற விஷயம் பற்றிய உபன்யாஸங்களால் தண்ணீர் வார்க்கப்பட்டு பக்தி என்ற கொழு கம்பைப்பற்றி பந்தலில் ஏறிப்படரும் தருவாயில் இருப்பதாகவும், அது பற்றியே ஷை ஸபைக்கு "பிரும்ம வித்யா விகாஸினீ" என்று பெயரிடுவது பொருத்தமாகுமென்றும் ஷை பிரும்ம வித்யையின் புஷ்பங்களாகிற ஐஹிக ஸுக போகங்களையும், காய் கனிகளாகிற ஸ்வர்க, மோக்ஷ, பர்யந்தமான ஸகல ச்ரேயஸ்களையும் அடையப் பெறுவது இவ்வூர் மஹா ஜனங்களின் பாக்கியமேயாகும் என்றும், அதற்கு ஸாதனங்களை வரிசைப்படுத்தி ஒவ்வொன்றாக ஆராய்ந்துவருவதில் பிரவிருத்தி, நிவர்த்தி, என்ற தர்மம் அடிக்கடி உபந்நியஸிக்கப்படுவது தண்ணீர் வார்ப்பது போல் இன்றியமையாததாகும் என்றும், பிரும்மவித்யையின் ஸ்வரூபம் தர்மத்தின் நுட்பமான தத்வங்கள், பண்டிதர்களின் கடமை, தர்மசேவையில் ஈடுபடுவதிலுள்ள நிர்பந்தங்கள், இவைகள் பற்றி விரிவாகவும், உத்ஸாகத்துடனும் உபந்நியஸித்கையில் காலத்தின் வேகத்தினால் ஏற்படும் விளைவுகளும், அதில் மகா ஜனங்களின் பங்கும், பகவானின் அவதாரமும் எவ்வாறு நிகழும் என்பது பற்றியும் ச்ருதி, ஸ்மிருதி வசனங்களுடன்; தர்மத்தையே ஆச்ரயிக்கும் பக்ஷத்தில் அர்த்த காமங்கள்,தான்ய லாபம் நியாயமாக வந்து சேருமென்றும், மோக்ஷத்தையடைவதற்கு தர்மமே முக்கிய ஸாதனமென்பது பற்றியும் "யம்பாலயஸி தர்மம் த்வம்" என்ற கௌஸல்யையின் மங்கள சாஸனத்தைத்தழுவியும், "தர்மார்த்த காமா: கலுதாதலோகே" என்று லக்ஷ்மணனைக் குறித்து ராமன் உபதேசித்ததையும், [illegible] விருத்தமான அர்த்த காமங்கள் விலக்[illegible]க்கவை என்பது பற்றி பரத ராஜ்யம், ரா[illegible]ணாஸீதை பலவாறு நிந்திப்பது மூலமான உபதேசமும், பாதிவ்ருத்யத்தின் மஹிமை ஸ்த்ரீகள் கற்பைக்காப்பது அவசியமானது, என்பது பற்றி (முனிவேஷம் ஸஹஸ்ராக்ஷம்) என்ற அகல்யையின் விருத்தாந்தத்தையும், உபந்நியஸிக்குங்கால், ஸ்திரீகள் புருஷர்கள் யாவரும் பரவசமாகிக்கண்ணீர் ததும்பக்கேட்டு ஆனந்தித்தனர். ஷை உபந்யாஸத்தில் இனிய சாரீரமும், பதங்களின் விசேஷார்த்தங்களும், சபையின் பாலுள்ள அன்பும் குறிப்பிடத்தக்கதாகும். அடுத்தபடியாக நடைபெற்ற ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமியின் ஸேவை, விசேஷ அலங்காரத்துடனும், வாத்ய கோஷங்களுடனும் விமரிசையாக நடைபெற்றதை யாவரும் ஸேவித்து தன்யர்களானார்கள். பலவித அஸௌகர்யங்களால் உபந்யாஸங்களைக் கேட்முடியாதவர்களின் சார்பாக, விஸ்தாரமாக அநேக உபந்யாஸங்கள் செய்யும்படி பிரஸிடெண்ட் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு அவ்விதம் ஏற்படுவது தனக்கு மிகுந்த பாக்யமென்றே உபந்நியாஸகரால் ஷை சபைக்கும், மஹா ஜனங்களுக்கும் ஆசிகூறி தர்மத்தை ஸம்ரக்ஷிக்கும்படியும், அவ்வாறு ரக்ஷிக்கப்பட்ட தர்மமே எல்லோரையும் காப்பாற்றவேண்டுமென்றும், சொல்லி முடிக்கப்பட்டது.

ஒரு நிருபர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd, Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அப்பத்துரம்

4 ள 42

23

27-10-1938

215254

26 OCT 1938
215254
577

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 23 கும்பகோணம் கலி5040 பகுதான்ய௵ ஐப்பசி௴ 11உ 1938௵ அக்டோபர்௴ 27உ வ 42

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ.	20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா.	0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

மத்ய மாகாண பிராம்மணரல்லாதார்.

காங்கிரஸில் சேர தீர்மானம்!

மத்யமாகாண பிராம்மணரல்லாதார் கக்ஷியின் மஹாநாடு 20உ யன்று நாகபுரியில் நடந்தது. காங்கிரஸ் ஒன்றுதான் தேச விடுதலைக்கு உழைக்கும் ஸபையாயிருப்பதால் யாவரும் அதில் சேருவதே நியாயமென்றும் ஆகையால் பிராம்மணரல்லாதார் கக்ஷியினர் யாவரும் காங்கிரஸில் சேர்ந்துவிட நிச்சயிப்பதாயும் முடிவு செய்யப்பட்டது. இதன் மூலம் அங்கு சட்டஸபையில் காங்கிரஸ் கக்ஷியின்பலம் அதிகரிக்கும்.

டாக்டர் காரே விஷயமாக கார்யக்கமிட்டி செய்த முடிவை ஆதரிப்பதாயும், பிராம்மணர்கள் காரேயை ஆதரித்துக் கிளர்ச்சி செய்வதைக் கண்டிப்பதாயும் தீர்மானிக்கப்பட்டதாம்!

பாலஸ்தீனத்தில் ராணுவ ஆட்சி.

யூதர் அரேபியர் கலஹம் காரணமாக பாலஸ்தீனத்தில் ராணுவ ஆட்சி ஆரம்பமாகியிருக்கிறது. யூதர்களுக்கென்று தனியாக பிரதேசத்தைப் பிரிப்பதென்ற யோஜனையை பிரிட்டிஷார் கைவிட்டு விட்டார்களாம். துஷ்டர்களான அரேபியர்களைக் கைதிசெய்து அடக்குவதே தற்போதைய வேலையாயிருக்குமாம். அரேபியர்கள் ஹிட்லரிடம் இதைப் பற்றி முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

The Kumbakonam Mutual Benefit Fund Limited,
KUMBAKONAM.

NOTICE.

An Extra-Ordinary General Meeting of the subscribers of the Kumbakonam Mutual Benefit Fund Ltd., will be held at 8 A. M. on Sunday the 13th November 1938 at the Fund office Premises No. 58, Big Street, Kumbakonam to consider and pass the following resolutions as Special Resolutions so as to amend the Articles of Association of the Fund as hereunder under S 20 of the Indian Companies Act with immediate effect.

I Resolved that after article No. 5 of the Fund's Articles of Association the following be added as articles 5a and 5b. of the Articles of Association of the Fund.

5 (a) " The Fund may by special resolution reduce its share capital in any way and in particular by paying off capital, cancelling capital which has been lost or unrepresented by available assets, reducing the liability on the shares, cancelling shares not taken or agreed to be taken by any person or otherwise as may seem expedient and capital may be paid off upon the footing that it may be called up again or otherwise.

5 (b) The Fund in General Meeting may from time to time by special resolutions increase or empower the Directors to increase the capital by the creation of new shares of such amount as may be deemed expedient."

II Resolved that in article 100 of the Fund's new Articles

" (a) In the place of "4½" in line 5 thereof the figure "5" be substituted.

(b) The words and figures "1/2% for charity" in line 6 thereof be omitted".

By Order, of the Board,
V. R. SATAKOPA IYENGAR,
Secretary.

Kumbakonam,
16—10—38.

The Kumbakonam Mutual Benefit Fund Limited,
KUMBAKONAM.

NOTICE.

An Extra Ordinary General Meeting of the subscribers of the Kumbakonam Mutual Benefit Fund Ltd., will be hold at 8 A. M. on Sunday the 20th November 1938, at the Fund Office Premises No. 58, Big Street, Kumbakonam to consider and pass the following resolutions as Special Resolutions by way of reducing the share capital of the Fund under S. 55 (2) of the Indian Companies Act and in pursuance of the power under Article 5 (a) of the Articles of Association of the Fund.

Resolved that in the place of Para 5 of the Fund's Memorandum of Association the following be substituted as para 5 thereof:-

i. " The nominal capital of the Association (Fund) shall be 33,00,000 divided into 33,00,000 shares of Rupee 1 (one) each.

ii. Out of the sums now subscribed by each of the shareholders as share money under the existing rules a sum of Rupee 1 (one) shall be retained for each shareholder as his share money—one share—and out of the balance a sum of annas 4 shall be utilised, 2 annas as entrance fee and 2 annas as cost of stamp for each scrip and the balance shall be carried to his recurring deposit account to be dealt with by the Fund under Articles 38 to 51 of the Fund's Articles of Association."

By order of the Board,
V. R. SATAKOPA IYENGAR,
Secretary.

Kumbakonam,
16—10—38.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

வைராக்யத்தின் ஸ்வரூபம்.

சென்ற 19-9-38ல் நாகை ஹிந்து மதாபிமானஸங்கத்தில் கீழ்வளூர் பிரம்மஸ்ரீ V. K வேங்கட்டராம சாஸ்திரிகள் அவர்கள் "வைராக்யம்" என்ற விஷயத்தைப்பற்றி செய்த உபன்யாசத்தின் சாரமாவது.

வைராக்யம் என்னும் சொல் விராகம் என்னும் பதத்திலிருந்து உண்டாகியது. விகத—ராகம் என்றுள்ள இரு பதங்கள் சேர்ந்ததே. விராகம் என்ருயிற்று. ராகம் என்ற சொல்லிற்கு ஆசை என்று அர்த்தம் சொல்வார்கள். வி—என்ற எழுத்து முன்னுல் சேர்ப்பதால் விரோத அர்த்தத்தை தருவதாயிற்று. ஆகவே ஆசையற்ற தன்மையாயிற்று. அத்தன்மைக்கு வைராக்யம்—அதை உடையவனுக்கு வைராகி (பைராகி) என்று பெயர்— இந்த வைராச்யத்திற்கு ஹேது, சொருபம், காரியர், அவதி, பலம், என்ற அம்சங்கள் உள. அதில் ஹேதுவாவதேதென்னில் அதை கவனிப்போம். இந்த வைராக்யம் என்னும் சொல்லை உபயோகப்படுத்தாதவர்கள் உலகிலில்லை. பெரும்பாலோர் இதற்கு பொருள் தெரியாமலே இச்சொல்லை உபயோகப் படுத்துகிருர்கள். எவ்விதமெனில் அதைக் கவனிப்போம்:— எந்த ஸினிமாவாயிருந்தாலும் பார்க்காமலிருப்பதில்லை என்ற வைராக்யம் எனக்குண்டென்றும், சிலர் விடிந்த 6மணிக்கெல்லாம் காபி சாப்பிடுவது என்று ஒரே வைராக்யம் என்றும், இதைப்போல ஸ்பரிச விஷயம், கந்த விஷயம், சப்த விஷயம், இதுகளை கிரகிக்கும் விஷயத்திலும் எனக்கு வைராக்யம் உண்டென்றும் சொல்கிருர்கள். ஆனல் உலகத்தில் ஞானிகளைத்தவிர அஞ்ஞானிகள் தான் இந்திரியங்களின் பிரவிருத்தி, விஷயங்களோடு சம்மந்தப்படுவதையே வைராக்யம் என்ற சொல்லுக்குப் பொருள் என்று சொல்கிருர்கள். வாஸ்தவத்தில் அப்பதத்திற்கு ராகத்தை (ஆசையை) நீக்கிவிடுவதிலேயே கருத்திருக்கின்றது. இவ்விதம் உலகத்திலுள்ள வழக்கச் சொல்லிற்கெல்லாம் விரோத அர்த்தத்தைச் செய்வதாக ஆகிவிட்டது.

உதாரணமாக:— "அன்னியோன்யம்" என்னும் பதத்திற்கு ரொம்ப ஒற்றுமை, என்று அர்த்தம் பண்ணுகிருர்கள். அதற்கோ வேறு வேறு என்று பொருள்படும்— இன்னும். "கல்லைக்கண்டால் நாயைக்காணோம், நாயைக்கண்டால் கல்லைக்காணோம்" என்று வசனிப்பதுண்டு. இதைக்கவனிப்போம். ஒரு கல்லொன்று எதிரில் கிடக்கும் போது, தற்சமயம் ஒருநாய் அகப்பட்டால் அடிக்கலாம் என்றும், ஒரு சமயம் ஒருநாயைக்காணும்போது ஆகா! இச்சமயம் ஒரு கல் அகப்பட்டால் அடிக்கலாம் என்றும், இவ்விதமாய் அர்த்தம் விசாரிக்காதவர்களால் பேசப்படுகிறது. இது முற்றிலும் விரோதமாம். இதற்கு வாஸ்தவப்பொருளை விசாரித்தால் அடியிற்கண்டபடி பொருள்படும்:— அதாவது ஒரு பிரபுவின் பங்களாவின் முன்புறத்தில், சிறு மேடை ஒன்று அமைத்து அதின் மேல், சலவைக்கல்லினுல் செய்யப்பட்ட ஒரு நாய் படுத்துக்கொண்டிருப்பது போல் வைக்கப்பட்டிருந்தது. அதனுடைய பார்வை ரொம்பவும் கடூரமான பார்வையுடனிருப்பது போலும், பார்ப்பவர்களை எல்லோரும் பயப்படும்படியாயும், அதை ஒரு சங்கிலியால் கட்டப்பட்டு, அம்மேடையின் சமீபத்திலுள்ள ஒரு தூணில் கட்டப்பட்டிருந்தது. அந்தப்பங்களாவின் பக்கத்தில் தெரு ஒன்றுண்டு. அதில் வழிச்செல்லுகிறவர்களெல்லாம் அந்நாயைப்பார்த்து பயந்து பக்கத்திலிருக்கும் வேலியில் மேல் வஸ்திரம் அகப்பட்டு கிழித்துக்கொண்டும், பயத்தினுல் இடறி விழுந்தவர்களும், சரீரத்தில் இரத்தகாயம் பட்டவர்களும் அநேகர் உண்டு. அவ்விதம் சிரமத்துடன் வந்த ஒருவனை எதிரில் வந்தவன் கண்டு வஸ்திரம் கிழிபட்டும் உடம்பில் காயப்பட்டும் ஓடுகிருயே என்ன விசேஷம் என்று கேட்க ஒரு நாய்க்குப்பயந்து இக்கதியாச்சுதென்ருன். வந்தவன் பயந்தவனைப்பார்த்து நீ பயப்படாதே மறுபடியும் அடிக்கடி இவ்வழி வரவேண்டியதாயிருப்பதால் பயத்தை போக்கிக்கொள்ளவேண்டியதவசியமல்லவா, வா என்பின்னுல் என்று கூப்பிட்டான். பயந்தவன் மறுபடியும் அந்த நாயினிடமா அழைத்துப்போகிருய், வாமாட்டேன், என்ருன். மறுபடியும், பயப்படாதே, அது நாயல்ல என்று அழைத்துப்போய் இது சலவைக்கல்லால் செய்யப்பட்டது அழகுக்காக வைக்கப்பட்டிருக்கிறது என்று தட்டிக்காட்டியவுடன் கல் என்று ஞானம் வந்தது. அது முதல் பயம் நீங்கிவிட்டது இதற்கே "நாய் காணிற் கற்காணுவாது" என்னும் பழமொழி (உலக வழக்கச்சொல்.) ஆதலால் விசாரியாததினுல் வந்த துன்பங்கள். இதற்கு சிவவாக்கியர்

"மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்பஞ்சபூதம்
பரத்தில் மறைந்தது பார் பஞ்சபூதம்"

இப்பொழுது அந்த வைராக்யம் என்னும் சொற்பொருளை கவனிப்போம். நாம் ஒவ்வொருவரும் வைராக்யத்தை சம்பாதித்துக் கொள்ளவேண்டியது அத்தியாவசியம். இதன் பொருளும், சகல ஆசைகளையும் நிவர்த்தி செய்வதிலேயே தாத்பரியமிருக்கின்றது. ஆசையோ விஷயங்களைப் பற்றவேண்டும் என்னும் எண்ணம் மனதினிடமாக உதிப்பதேயாம். அந்த விஷயங்களோ சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம், என்ற ஐந்தேயாம். மனதில் எண்ணம் உதித்த உடனே மனம், மெய், வாய், கண், மூக்கு, செவி, என்றவைகளில் ஒன்ருேடு சம்மந்தப்பட்டு அவ்விஷயத்தை அனுபவிக்கிறது. அவ்விதம் அனுபவிப்பதால் ஒரு சமயம் சுகமும், ஒரு சமயம் துக்கமும் உண்டாகிறது.

ஆதலால் இவ்விஷங்கள் சுக, துக்க ஹேதுக்களாகின்றன என்பது அஞ்ஞானிகளின் அபிப்பிராயம். இவ்விதமாக சுகம் தரும் விஷயங்களென்றும், துக்கம் தரும் விஷயங்களெனவும் தீர்மானித்து விட்டார்கள் அஞ்ஞானிகள். அவர்கள் தீர்மானித்தபடி சுகம் தரும் விஷயங்களைத்திரும்பத் திரும்ப அடைவதில் திருப்தியுள்ளவர்கள் அவர்களுக்கு துக்க விஷயங்களைத்திரும்ப நினைக்கவோ, சுவாவோ, கொஞ்சமேனும் இஷ்டப்படுவதில்லை. விஷயங்கள் சுக துக்க ஸ்வரூபங்கள் என்பதே அஞ்ஞானிகளின் தீர்மானம், அது சரிதானுவென்று கவனித்துப்பார்க்கில், உதாரணமாக வெய்யிலின் தாபம் ஸகிக்கமுடியாதென்ருலும் நனைந்த வைக்கோலை உணர்த்தவேண்டியவர்கள், வெய்யிலை அபேக்ஷிக்கிருர்கள், வழி நடப்பவன் அதை வெறுக்கிருன். ஒரு கிழவன் வெய்யிலிலே படுத்திருக்கப்பிரியப்படுகிருன். சிலர், பாகல்காய் நல்ல ருசி, சுகமாயிருக்கிறதென்றெண்ணுகிருர்கள் சிலர் அதைக சப்பென்று வெறுக்கிருர்கள். வாஸ்தவமாக ஒரு வஸ்து சுகஸ்வரூபமாயிருப்பின், எக்காலத்தும் எல்லோருக்கும் நிரந்தரம் சுகத்தைத்தரவேண்டும். இந்த நியமம் தவறிவிடுகிறதேயன்றி வேறல்ல. ஆனல் உணவைப்புசிக்கும் பொழுதும், சந்தன புஷ்பாதிகளை அடையும் போதும் சுகந்தோற்றுகிறதே அந்த சுகந்தான் எது என்ருல். அது தான் நாம் அறியவேண்டிய முக்கிய விஷயம். கடைத்தெருவில் ஒரு கடையில் சேலம் ஒட்டுமாங்கனிகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. கண்டவிநிவழியாய்ப்போய்க்கொண்டிருப்பவன் சும்மா போகாமல் மனதில் உதிக்கும் அநேக எண்ணங்களுடன் போய்க்கொண்டிருக்கிருன். ஒரு மனிதன் க்ஷணமேனும் மனதில் எண்ணமில்லாமலிருக்கமுடியாது. இதற்கு "நஹிகஸ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத்" என்று சுருதி கூறுகின்றது. இன்னும் ஔவை "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம், எண்பது கோடி கோடி நினைந்தெண்ணுவான்". இச்செய்யுளில் எண்பது கோடி. என்பது உபலக்ஷணமாம். ஆதலால் கணக்கிடமுடியாத எண்ணங்கள் எனச்சொல்லும்படியாகிறது.

அவ்விதம் அக்கடை வழிச்செல்லுங்கால் அப்பழங்களின் மாதூர்யமான கந்தம் இவனுடைய எண்ணங்களுடைய மனதை தடைபடுத்தி ஆட்டத்தை ஓயும்படிசெய்தது. மனது ஓயவே, அவ்வாழ்ந்த மனதில் சுகம் தோற்றிற்று. அவ்வானந்தம் கலையாமல் நிற்கக்கூடாதா? இப்பழங்களை வாங்குவதற்கு, கையில் காசு இல்லையே என்ன செய்வது என்று கவலை ஏற்பட்டது. இக்கவலையே மனதின் ஆட்டம். ஆட்டகாலத்திலோ சுகம் கிஞ்சித்தும் அடையமுடியாது. அச்சமயம் தனது சிநேகிதன் ஒருவன் வர அவனைக் கண்டு ஒரு ரூபாய் பணம் கொடும் என்று கேட்டான். அவ்விதமே பணம் தர, பழங்களை வாங்கிக்கொண்டான். பணத்தையடைந்து பழத்தை பெற்றவுடன் முன்னிருந்த ஆட்டம் ஓய்ந்தது. ஓய்ந்த இடத்தில் ஆனந்தம் தோற்றிற்று. மறுப்படியும் வேருேர்விதத்தால் மனம் ஆட ஆரம்பித்தது. அதாவது இப்பழத்தை சாப்பிடமுடியவில்லை. ஏனெனில் இவ்வளவு வயதான மனிதன் தெருவோடு தின்று கொண்டு போகிருன் என்று பரிகாசம் செய்வார்களே, வீடு போய் சாப்பிடுவோம் என்ருலோ மைல் 3 இருக்கிறதே எப்பொழுது வீடு போய்ச்சேருவோம். நிஃபோம் என்ற கவலை (ஆட்டம்) ஏற்பட ஆனந்தம் மறைந்தது. பிறகு வீடு போய்ச்சேர்ந்தான். பழங்களை அலம்பினுன். துண்டு பண்ணினுன், ஒருதுண்டை புசித்தான் அப்பொழுது ஆகா! என்ன பிரம்மானந்தம், என்று சுகத்தை யடைந்தான். இவ்விடத்திலும் மனதின் ஆட்டம் ஓய்ந்தபிறகே அவ்வானந்தம் விளங்கியிருக்கிறது. இதனுல் மனத்திற்கு ஆட்டம் ஏற்பட்டால் துக்கமென்றும் அது ஓய்ந்தால் ஆனந்தம் விளங்குகிறதென்றும் கண்டோம். ஆனல் ஆட்டம் மனதிற்கு ஏற்படும்போது அந்த ஆனந்தத்தைக்காணோம் என்று சங்கை வரும். அச்சங்கைக்கு இடமில்லை. எவ்விதமெனில்:— ஒரு குட்டையிலுள்ள ஜலத்தில் சந்திரபிரதிபிம்பம் தோற்றுகிறது. ஜலம் ஆட்டம் அடையும் போது பிரதிபிம்பம் சரியாய்ப்பார்க்க முடியாது. சலனம் ஓயவே பிரதிபிம்பம் அழகாய்த் தோற்றும் இவ்வுண்மையைத்தாயுமானவர்:—

"சும்மாயிருக்க சுகமுதயமே" என்ருர். இன்னும் "சித்தமை அடக்கியே சும்மாயிருக்கின்றதிறமரிது" என்ருர்.

இதனுல் சலனமற்ற மனதில் ஏற்படும் ஆனந்தம் பிரதிபிம்பமாகில், அப்பிரதிபிம்பத்திற்கு, ஆனந்த ஸ்வரூபமாயுள்ள, ஒருபிம்பம் தனித்திருக்கவேண்டியதென்று வெளியாயிற்று. அதினுல் அப்பிம்பம், யாதெனக்கண்டுபிடித்தல் வேண்டும். அது ஆத்மா என்னும் வஸ்துவாம். அதற்கு சச்சிதானந்தம் (சத்து, சித்து, ஆனந்தம்) என்னும் 3 வகை இலக்கணம் கூறப்பட்டிருப்பதால் அதன் ஆனந்தமே ஓய்ந்த மனதில் பிரதிபிம்பமாய்த் தோற்றுகிறது.

இது ஓர் புறமிருக்க, இவ்விதம் கிடைக்கும் ஆனந்தத்தை சுருதிகளிலும், சாஸ்திரங்களிலும் எவ்விதம் அழைக்கிறதென்று கவனிப்போம். ஒரு இஷ்டவிஷயத்தை பார்த்த

(தொடர்ச்சி 3ம் பக்கம் பார்க்க)

வைராக்யத்தின் ஸ்வரூபம்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

மாத்திரம் மனம் ஓய்ந்து கிடக்கும் ஆனந்தத்திற்கு "ப்ரியம்" [illegible] கைக்குக்கிட்டிய பொழுது மனம் ஓய்ந்து அதில் தோன்றும் ஆனந்தத்திற்கு மோதம் என்றும், கிட்டிய பதார்த்தத்தை அனுபவிக்கும் காலத்து மனம் ஓய்ந்து கிடைக்கும் ஆனந்தத்திற்கு ப்ரமோதம் என்றும், கூறுகின்றது. ஆகவே இப்பிரிய, மோத, பிரமோதம் என்ற மூன்றினையும் ஒரே சொல்லாலும் சாஸ்திரம் பரிபாஷையாகக்கூறுகின்றது. அச்சொல் "மோதம்" என்பதே தான். இதுவுமன்றி இந்த ஆனந்தங்கள் அழிந்து போகக்கூடியதென்றும் ஒருவனுக்கு கிடைத்த சுகம் போல் அவ்வளவு உயர்ந்ததாய்க்கிடைக்கவில்லையென்பதும் ஏற்றத்தாழ்ச்சியாயிருப்பதால் அது துக்கமானதென்றும், தெரிவதால் அதை விட்டுவிட வேண்டியது. சப்தாதி விஷயங்களின் சம்மந்தமின்றியே ஒருவனுக்கு ஆனந்தம் கிடைக்குமானுல் விஷயங்களின் அடைவுக்கு திரும்பத்திரும்ப ஆசைப்பட அவசியமில்லை. "பருத்திச்செடியே புடவையாக காய்த்துவிடும் பக்ஷத்தில்" ஐவுளிக்கடையும் நெசவுக்காரனும் தேவையில்லையன்ருே?

ஜீவன்களுக்கு விழித்திருக்கும் நிலை, கனவு நிலை, தூக்கநிலை, என மூவித நிலைகளுண்டு. அத்தூக்க நிலையில், சப்தாதி விஷயங்களின் சம்மந்தமின்றியே மனதிற்கு ஓய்வு நிலையுண்டாகி ஆனந்தம் அடையப்படுகிறது. இந்தத் தூக்கத்தில் கிடைக்கும் சுகமோ ஏற்றத் தாழ்ச்சியற்றது. எறும்பு முதல் நான்முகன் (பிரம்மா) வரை சுழுப்தியில் (தூக்கத்தில்) அனுபவிக்கும் ஆனந்தம் ஒரே படித்தரமானது. இதில் அருமையில்லையன்ருே? பகுத்தறிவோடு கூடிய மானிட வர்க்கத்தினராகிய நாம், விஷய சம்மந்தமின்றி ஆனந்தம் கிடைக்கும் நிலையாகிய தூக்கத்தை நமக்கு ஈஸ்வரன் மாதிரி (sample)பாக கொடுத்திருக்கிருன், அத்தூக்க நிலைக்கே நாம் பாடுபட்டு அதை எப்போதும் அனுபவிக்கும்படியாய் பழகவேண்டும் என்றும் ஒருபோதும் விஷய சம்மந்தம் வேண்டாம் என்றும் அது விஷம் தான் என்று தீர்மானித்துத் தள்ளவேண்டியதே. அப்படி அவ்விஷயாதிகளில் துவேஷம் பிறந்து மறுபடி விஷய நினைப்பின்றி இருத்தலே வைராக்யம் அடைவதற்கு ஹேதுவாகும்.

"முக்திமிச்சஸி சேத் தாத விஷயான் விஷவத் த்யஜ" என்று அஷ்டாவக்ரர் ஜனகருக்கு உபதேசித்தார். விஷமென நினைத்து விஷயங்களைத் தள்ளவேண்டியிருக்க, அதுகள் சுகமெனப் பற்றுதல் மோகமே (மயக்கமே புத்திக்குறைவே) இது எதுபோலுமெனில் "சுவான அஸ்தி நியாயம்" போலுமிருக்கிறது அதாவது ஒரு நாயானது, நீண்டகாலமாய் மடித்துக் கிடந்த குப்பையிலுள்ள ஒரு எலும்புத்துண்டை பிறநாய்களுக்குத் தெரியாமல் ஓர் மறைவான இடத்திற்குப்போய் தன் முன் இருகால்களாலும் டிடித்து அடிக்கடி கடிப்பதினுல் அவ்வெலும்பின் கூர்மையான பாகங்கள் அதின் ஈறுகளில் குத்தி அதினின்றும் பெருகும் இரத்தத்தை குடிப்பதிலிருந்து இந்த சத்து முழுமையும் இந்த எலும்பிலிருந்து வருகிறதென்று தீர்மானிக்கும். அதற்கு வாய்ப்புண்ணுனதும் தெரியாது. தன் சரீரத்திலுள்ள இரத்தம் என்றும் அறியாது. வாயில் புண்ணுகி வலி ஏற்பட்ட பிறகும் அதைவிட மனமில்லாமல் ஓரிடத்தில் வைத்து மூடிவிட்டு திரும்பவும் மற்ருெரு நாள் வந்து கவனிப்போமென்று போவது போலும்.

வாரக் குறிப்புகள்.

ஸ்ரீவத்ஸ வெ. ஸோ. சர்மா.

[illegible]! தேசிய ஸபை அளவிற்கு மிஞ்சி தங்களைத் தாங்களே மதித்துப்போற்றிக்கொள்வதும்தேர்தலுக்கு ஸ்தலத்திலுள்ள செல்வாக்குள்ளவர்களுடன் ஸ்தல ஸபைக்கே அதிகாரமளியாமல் (அட்ஹாக்) தனிச்சபை ஒன்றமைப்பதும் முதல் முழுத்தவறு. ஊர்வாயை மூடமுடியுமா? லஞ்சபேய் இங்குநடமாடுவதாக வதந்தி!

கௌரவமற்ற வாழ்வு! தேசியவாதியாயிருந்து தனிச் சபையால் நிராகரிக்கப்பட்டு தேர்தலில்வெற்றிபெற்றவர் சிலரைக்கொண்டு தேசிய ஸபைக்கு பல முண்டென ஓர் பத்திரிகை பெருமை பாராட்டுகிறது! தோல்வியை விட மானக்குறைவானது என்று எனது அறியவில்லை?

பதவிக்காகவா? நாகபுரியில் சிரகாலமாயிறந்த அப்ராமண ஸபை கூடி காங்கிரஸில் வந்து சேர்ந்ததாம். ஸந்திக்காக ஜின்னு கோஷ்டிக்குக் கேட்டதெல்லாம் கொடுக்கும் ஸபை தங்களுக்கேதேனும் தாராதா?

ஆழ்ந்த கருத்துள்ளதல்ல! பேசுவதற்கு முன் பலமுறையோசி! காந்திஜிக்கே அடங்காமல் அஸன்மார்க்கத்திலிறங்கும் திருவாங்கூர் தேசியஸபையை ஆமோதித்து ஆள்பலம் தனபலம் தரும்படி தேசிய ஸபை தலைவர் செய்தி விடுத்தார். நேரில்லது துர்மூலமுள்ளதை அறியாமல் ஆமோதிப்பது சபைக்கே பலக்குறைவாம்!

சில அரிய குணம்!! ஹிட்லரெனில் சிலருக்கு கர்ப்பம் கலங்கும்! அவருக்கு வடமொழி வரப்ரஸாதமாம்! அவர் ஜாதி ஆர்ய ஜாதியா?. என்பது வேறு! அப்படி நினைத்து அதைத்தனியாக காக்க அவர் செய்யுமரிய முயற்சி போற்றத்தக்கதாம்! யூதர் வக்கீல் தொழில் செய்யக் கூடாதென புதிய உத்திரவு! ஸ்வஜாதி தொழிலைப் போதிப்பது வர்ணுச்ரம தர்மம்!

32 தேசீயவாதிமீது கொலைகேஸ்!! அமிருத ஸரஸில் நடக்கிறது! தேசத்திற்கே பேரவமானமன்ருே இது!

பசுவைக் கொல்லாத மரியாதை! ராம்பூர் நவாப் தன் தேசத்திற்கு ஹிந்து ஸ்வதேசி மன்னர்கள் வந்துபோகும்வரை தன்னுட்டில் எவரும் பசுவைக் கொல்லக்கூடாதென உத்திரவிட்டார்.

இனி ஸமாதானம் பேசாதே! தேசிய ஸபை ஜின்னுவின் வாலைப்பிடித்துக்கொண்டு ஸமாதானத்திற்கு ஓடுவது கௌரவமல்ல என ஓர்சிக் தலைவர் மகா ஸபையில் கூறினுர்.

காரணம் காட்டவேண்டாமா! ஹிந்து மதமும் மஹம்மதிய மதமும் என்று ஓர் ஆர்யஸமாஜ நூலை சென்னை அரசாங்கம் பறிமுதல் செய்தது. காரணங் காட்டாததால் மஹம்மதியருக்கு பயமோ என வதந்தி உலவுகிறது.

டிவாலரா எச்சரிக்கை! ஐரிஷ் இருபிளவாயிருக்கும்வரை சமாதானமில்லை என்று பிரிட்டிஷ் மந்திரியை எச்சரிக்கிருர்!

படை திரட்டுகிருர்! தர்மத்தில் கையை வைக்க, தேசிய ஸபை ஒளி மங்குகிறது! இருட்டு வேளையில் ராஜ்ய தந்திரி பொப்பிலி விழித்தெழுந்து கக்ஷியை எழுப்புகிருர்! யார் தாங்குவார்? யார் எழுவார்? பார்ப்போம்!

தந்தரம் பேச்சு! உதவி இந்தியா மந்திரி நான் ராஜீய கார்யமாக் வரவில்லை, ஆனல் தலைவர்களைப் பார்ப்பேன் என்று பாம்பே அப்பேத் காரரை தர்சிக்கிருர்? அசட்டுப் பத்ரிகா நிருபர் இந்தியர் ஸாமர்த்யத்தை அவரிடம் காட்டத் தவறி விட்டனர்.

மழைக்காக விராடபர்வ! பலமுறையும் சிஷ்டாசாரத்தையு மனுபவத்தையுங் காட்டி இம்முறையை ஆதரித்துரோம். அற்பிசியிலும் மழையில்லாக் குறை [illegible] குடந்தையில் [illegible]த்தில் ஷடி முறை நடக்கிறது. மற்ற ஊர்களுமிதைப் பின்பற்ற உலக க்ஷேமத்தைத் தேடவேண்டுகிறேம்.

விசித்திர யுத்தம்! பாம்பே மாகாணத்திலுள்ள ராஜகோட்டை ஸமஸ்தானுதிபதி வெள்ளைக்கார திவானை வேலையிலிருந்து தள்ள அவர் போகமாட்டேனென்கிருர்!

இங்கு காங்க்ரஸ் கூடுக! இல்லையேல் ஸத்யாக்ரஹம்! என ஓர் ஊரார் புதிய காங்க்ரஸ் கூட்டுபவருக்கு எச்சரிக்கை செய்கின்றனர்.

தி. நா. பாங்க் டைரக்டர்கள் கைதியாயினர்.

திருவாங்கூர் நாஷனல் பாங்கியின் டைரக்டர்களான, மாத்தன், யாமன் பிள்ளை, ஈபன், வர்க்கிஸ் என்ற நால்வரும் திருவாங்கூர் ஸம்ஸ்தான வாரண்டின்படி சென்னையில் கைது செய்யப்பட்டனர். இவர்கள்மீது நம்பிக்கைத் துரோஹம், தப்பக்கணக்கு தயாரிப்பு, ஏமாற்றுதல் ஆகிய குற்றங்கள் சாட்டப்பட்டிருக்கின்றன. இவர்கள் திருவாங்கூருக்குக் கொண்டுபோகப் படுவார்கள்.

4 அணுவிற்காக தற்கொலை.

பிராம்மண மாணவன் கதி.

லாகூரில் ஒரு பிராம்மண மாணவன் தன் செலவுக்காகப் பெற்றேர்கள் 4 அணு கொடுக்க மறுத்ததை ஸஹியாமல் தற்கொலை செய்து கொண்டான். இவன் படித்தும் வேலையகப்படாமல் திண்டாடியதும் இதற்கு காரணம்.

தோல்விக்குக் காரணம்.?

சென்னை கார்ப்பரேஷனில் காங்கிரஸ் அபேக்ஷகர்கள் தோல்வியுற்றதற்கு ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் காரணம் கூறுகிருர் கார்ப்பரேஷன் உத்யோகஸ்தர்களுக்கு கொடுபட்டுவந்த அலவன்ஸ்களை காங்கிரஸ்காரர்கள் குறைத்ததற்காக அவர்கள்மீது கோபத்தால், கார்ப்பரேஷன் உத்யோகஸ்தர்கள் எலெக்ஷனில் காங்கிரஸுக்கு விரோதமாக வேலை செய்தனரென்றும் இதனுலேயே சில தோல்விகள் ஏற்பட்டனவென்றும் ஸ்ரீமான் முத்துரங்கம் கூறினுர்.

க்ஷவரத்தொழிலாளர்

புதிய முறைக்கு எதிர்ப்பு.

கல்கத்தாவில் பழயகால ஸம்பிரதாயப்படி க்ஷவரம் செய்து ஜீவிக்கும் 600 தொழிலாளர்கள் கூட்டம் கூடி, ஆயிரக்கணக்கான வருஷங்களாக வழக்கத்திலிருந்தும் முறையை விட்டு இப்போது ஸேப்டிரேஸ்டுப்ளே கருவி மூலமாக க்ஷவரம் செய்துகொள்ளப்படுவதை கண்டித்தனர். புதிய கருவியை உபயோகிப்பதால் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு ஜீவன்மில்லாமல் தவிக்க நேருவதையும் அவர்கள் வெளிப்படுத்திப்பேசினுர்கள்.

திருவாங்கூர் திவான்மீது அவதூறு

திருவாங்கூர் காங்கிரஸ் தலைவர்கள் சிலர் திவான்மீது கூறிய அவதூறுகளை வாபீஸ் பெற மறுப்பதால் அவர்கள்மீது புதிய கிரிமினல் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமாம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்

பகுதான்ய-௵ ஐப்பசி-௴ 11௳

திருவாங்கூர் ராஜீயக்கிளர்ச்சியின் பலன்.

ஸனாதனிகள் கற்க வேண்டிய பாடம்.

திருவாங்கூர் மஹாராஜா ஏற்கனவே தமது பிறந்த தினத்தில் மத ஸம்பந்தமான ஓர் விளம்பரத்தை விடுத்துப் பிரஸித்தியடைந்தது போல், இப்போது ஓர் ராஜீய ஸம்பந்தமான உத்திரவை வெளியிட்டு உலகத்தாரின் கவனத்தை கவர்ந்திருக்கிறார். அங்கு ராஜீயக்கிளர்ச்சிக்காரர்கள் எல்லை மீறி கார்யம் நடத்தத்தொடங்கியதன் காரணமாக அவசரச்சட்டமியற்றப்பட்டும், சட்ட மறுப்பு காரணமாக கணக்கற்றவர்கள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டும் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருந்ததல்லவா? இவ்விஷயத்தில் மஹாராஜா ராஜீயக்கிளர்ச்சிக்காரர்களின் போக்கை பரீக்ஷித்துப்பார்க்க விரும்பி சிறிது விட்டுக்கொடுக்க முன் வந்திருக்கிறார். ஸமீபத்தில் தண்டிக்கப்பட்ட ராஜீயக்கைதிகள் எல்லோரையும் விடுதலை செய்து விடும்படியும் கிரிமினல் அவசரச்சட்ட அமுலை தாற்காலிகமாக நிறுத்தி வைத்தும் ஓர் உத்திரவை பிறப்பித்துள்ளார். வழி தப்பிய ராஜீயக்கிளர்ச்சியை சட்ட ரீதியாக அடக்குவதற்குத் தமக்குள்ள பலத்தை பூர்ணமாகக் காட்டிய பிறகே அவர் இம்மாதிரி உத்திரவைப் பிறப்பித்திருப்பதால் ராஜீயக்கிளர்ச்சிக்காரர்களிடம் பயந்து பணிந்து விட்டதாக நினைக்கக் காரணமில்லை. கிளர்ச்சிக்காரர் நிதானம் பெறுவதற்கு ஓர் ஸந்தர்ப்பத்தையே அவர் ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறார். ஆகவே இதைக்கிளர்ச்சிக்காரர்கள் எவ்விதம் உபயோகிப்பார்களென்பதும் இதனால் என்ன பயன் ஏற்படுமென்பதும் பிறகு தான் வெளிப்படும்.

இந்த ஸந்தர்ப்பத்தில் ஸனாதனிகள் கவனிக்கவேண்டிய விஷயமே முக்யமானது. ராஜீயக் கிளர்ச்சிக்காரர்கள் வெகு ஸமீபத்தில் தான் தங்கள் வேலையை ஆரம்பித்தனர். ஆயினும் அதற்குள் உலகத்தாரின் ஆதரவைப் பெற்று, மஹாராஜா இணங்கி வரும்படியும் பெரிய பயனைப் பெற்றுவிட்டார்கள். ஆலயப்பிரவேச விஷயமாக தார்மிகர்கள் 2 வருஷமாக நடத்திவரும் கிளர்ச்சியில் இத்தகைய வெற்றி ஏன் ஏற்படவில்லை? இதை ஸனாதனிகள் கவனிக்கவேண்டியது மிக்க அவச்யம். ஸனாதனிகள் வாய்ப் பேச்சுடன் நிற்பவர்களென்றும் அவர்களால் கார்யத்தில் ஒன்றும் செய்ய முடியாதென்றும் நமது எதிரிகள் ஏளனமாயும் அலக்ஷ்யமாயும் பேசி வருவதைப் பார்க்கிறோம். அது திருவாங்கூர் விஷயத்தில் உண்மையாகிவிட்டதாக நினைக்க இடமிருக்கிறது. அங்கு மதஸம்பந்தமாயும் ராஜீய ஸம்பந்தமாயும் கிளர்ச்சி ஏற்பட்டதாயினும், இரண்டாவதே இன்று வெற்றிபெறும் தருவாயிலிருப்பதற்கும், மற்றொன்றை மதிப்பார்களே இல்லாமலிருப்பதற்கும் ஸனாதனிகளின் சிரத்தைக் குறைவும், தைர்யமின்மையும், த்யாக உணர்ச்சியில்லாமையுமே முக்ய காரணமென்று சொல்லத் தடையில்லை. அரசியல் கிளர்ச்சிக்காரர்கள் நூற்றுக்கணக்காக, நெஞ்சுந்துணிந்து வெளிவந்தார்கள். சட்டமறுப்புக்கும், தடியடிக்கும், ஜயில்வாஸத்திற்கும் பலகஷ்டங்களுக்கும் உட்பட்டார்கள். ஒரு தலைவரின்கீழ் கட்டுப்பாடாக நின்று வேலைசெய்தார்கள். தலைவர் நெருப்பில் விழும்படி கட்டளையிட்டாலும் அதற்கு இணங்கி நடந்தார்கள். இவ்வாறு அவர்களுடைய உறுதியையும் கட்டுப்பாடையும் த்யாகபுத்தியையும் ஒருவரும் குறைத்துப்பேச முடியாது. ஆதலால் ஸர்க்கார் அவர்களுடைய முறையீடுகளுக்குச் செவிசாய்க்கவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

ஆலயப்ரவேச விஷயமாய் அங்கு நடந்த கிளர்ச்சி என்ன? கூட்டங்களில் தீர்மானம் எழுதி வாசிப்பதும் பத்திரிகைகளில் எழுதுவதும்தான் நமது வேலையாயிருந்தது. திருவாங்கூரில் எவ்வித ஆர்ப்பாட்டமுமில்லாமல் நிச்சப்தமாகவே இருந்தது. வெளியிடங்களிலிருந்தும் வெறும் கண்டனத்தீர்மான ஆர்ப்பாட்டமே நடந்தது. ஆகையால் வெறும் வாய்வீச்சுடன் நிற்பவர்களிடம் ஸர்க்காருக்கு அலக்ஷ்யபுத்தி தோன்றுவது ஸகஜந்தானே?

ஆலயப்ரவேசத்தை எதிர்த்து கோவில் வாசலில் ஸத்யாக்ரஹம் ஆரம்பிக்க நம்மிடம் வேண்டியளவு பணமும் ஆள்பலமுமில்லையா? அத்தகைய தைர்யமும் உறுதியும் இல்லாமல் நாம் மத ஸம்ரக்ஷணம் செய்ய எப்படி முடியும்? பெரிய பெரிய மதஸ்தாபனங்களெல்லாம் இதை ஏன் கவனிக்கவில்லை? நமக்குள் போதிய அளவு சிரத்தையும், கிரியாசக்தியும் தைர்யமும் வெகு காலமாகவே மறைந்து வருகிறது. இவ் விஷயத்தில் நாம் ராஜீயப் பிரசாரகர்களிடம் பாடம் கற்கவேண்டிய அவச்யமிருக்கிறது. நம்மை நாம் சுத்தமாகப் புடம்போட்டு தர்ம ஸம்ரக்ஷணத்திற்காக எந்த த்யாகத்தையும் செய்யத் தயாராக இருப்பதாக காட்டிக்கொள்ளாவிடில் நமது கிளர்ச்சி வெற்றிபெற வழியில்லை. இதை திருவாங்கூர் உதாஹரணத்தைக்கொண்டு கவனிப்போமாக.

ஆலயப்பிரவேச கண்டனம்.

குடந்தையில் ம. ம. ஸ்ரீ. அனந்தகிருஷ்ண சாஸ்திரியார் பிரஸங்கம்.

கும்பகோணம் அத்வைத ஸபை ஆதரவில் செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு ஸ்ரீசங்கரமடத்தில் கல்கத்தா யூனிவர்ஸிடி மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்து ஓர் பிரஸங்கம் செய்தார்கள். நிரிமதஸ்தர்களிலும் அநேக பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். ஸ்திரீகளும் ஏராளமாக வந்திருந்தனர். பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் ஆரம்பத்தில் சிறிது நேரம் ஸம்ஸ்கிருதத்தில் இந்த விஷயத்தைப்பற்றிப் பேசிவிட்டுப் பிறகு தமிழில் தமது உபந்யாஸத்தைச் செய்தார்.

ஆலயப்பிரவேச விஷயத்தை முற்றிலும் சாஸ்திரத்தினால் நிர்ணயிக்கமுடியுமேயல்லது கேவலம் யுக்தியால் முடியாதென்றும், மஹம்மதியர், கிறிஸ்தவர்களைக்கூட நமது ஆலயங்களில் அநுமதிக்க யுக்திசொல்லமுடியுமென்றும், மஹம்மதியர் ஆக்ஷிகாலத்தில், கோபுரங்களையும், விமானங்களையும், பிராகாரங்களையும் இடித்துத் தள்ளினார்களேயன்றி தெய்வத்தின் சக்தியில் கைவைக்கவில்லையென்றும், தற்போதுள்ளவர்களோவென்றால் கோவிலின் வெளி ஆடம்பரங்களை ரக்ஷித்து, உயிர்ஸ்தானமாகிய தெய்வத்தின் சக்தியை நாசமாக்க முயலுகிறார்களென்றும், தேவாலயங்களில் தெய்வம் ஆத்மஸ்தானத்திலிருப்பதாயும், கோவிலானது அந்த ஆத்மாவுக்கு உடல் ஸ்தானத்திலிருப்பதாகவும் ஆத்மாவற்ற உடலானது எப்படி சவமாகக் கருதப்படுகிறதோ, அப்படியே தெய்வஸான்னித்யமற்ற கோவிலும் ஆகுமென்றும் ஸ்ரீசாஸ்திரிகள் கூறினார்கள்.

பிறகு பிராம்மணாதி ஜாதி பேதங்கள் குண கர்மங்களை அநுஸரித்தவையல்லவென்றும் ஸ்வாபாவிகங்களென்றும் கீதை பாரதம் முதலிய பிரமாணங்களைக்கொண்டும், அநேக யுக்திகளைக்கொண்டும், உபபாதனம் செய்தார்கள். ஆலயப்பிரவேசத்தால் ஆலயங்கள் நசித்து அதன் மூலம் தேசத்திற்கே அக்ஷேமம் ஏற்படக்கூடியதென்றும், மலையாளத்தில் ஆலயப்பிரவேசம் ஏற்பட்டால், அதற்கு முந்தியே பிம்பங்களிலிருந்து தைவ சக்தியை கும்பம் முதலியவைகளில் ஆகர்ஷித்து வேறிடத்தில் வைத்துக்காப்பாற்ற நம்பூதிரிகள் யோஜித்திருப்பதாயும், கூறி முடித்தவுடன் ஸபை கலைந்தது.

பிரம்மஸ்ரீ சாஸ்திரியார் நாளை பாலக்காடு சென்று அங்கு நடைபெறப்போகும் தேவாலய டிரஸ்டிகளின் கூட்டத்தில் இருந்து ஆலோசனை கூறிவிட்டு கல்கத்தா போவார். பிறகு ஆலயப்பிரவேச ரெபரண்டம் எடுக்கும் காலத்தில் கேரளம் வந்து ஆலயப்பிரவேசத்திற்கு எதிர் பிரசாரம் செய்வாரென்று தெரிகிறது.

நமது நிருபர்.

பொதுவுடமை ஒழிந்தது.

ஹிட்லரும், முஸோலினியும், ஐரோப்பாவில் பொதுவுடமை தத்வத்தை அடியோடு த்வம்ஸம் செய்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டு அதற்கேற்றபடி வேலைத் திட்டம் அமைத்துக்கொண்டிருப்பதை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். ஸெகஸ்லவேகியாவிலிருந்து ஸூடடனை ஹிட்லர் பிரிக்க விரும்பியதற்கும் இதுவே காரணம். அங்குள்ள ஆயிரக்கணக்கான ஜர்மானியர்கள் பொதுவுடமைக்காரர்களிடம் சிக்கிக்கொண்டு கஷ்டப்பட்டார்கள். ஸெக்தேசத்தில் பொதுவுடமையானது வெகு ஆழமாக வேரூன்றி நின்றது. இப்போது ஜர்மனியானது ஸூடடனை வசப்படுத்திக்கொண்டுவிட்டதால் ஸெக் பிரதேசத்திற்கு ஜர்மனியிடமிருந்து எப்போதும் நடுக்கந்தான். ஆதலால் ஜர்மனியுடன் ஸெக் தேசமானது நேசபாவத்துடன் இருக்கவேண்டியது நிர்பந்தமாகிவிட்டதால் ஜர்மனிக்குப் பிடிக்காத பொதுவுடமைக் கொள்கையை ஸெக் தேசம் கை விட்டு விட்டது. அங்கு இருந்த பொதுவுடமைக் கக்ஷிகளெல்லாம் கலைக்கப்பட்டுவிட்டன. அக்கக்ஷிப் பத்திரிகைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. ஸெக் தேசத்தை அண்டிய வேறு பல இடங்களிலும் இம்மாதிரி செய்யப்பட்டுவிட்டது. ஆதலால் ஹிட்லர் ஸூடடனைத் தாம் பிடித்துக்கொண்டதுடன் நில்லாமல் ஸெகஸ்லவேகியாவிலிருந்து பொதுவுடமையைத் துரத்தியும் தமது மனோரதத்தை நிறைவேற்றிவிட்டார்.

நமது தலைவரான ஸ்ரீமான் ஜவஹர்நேரு ஸமீபத்தில் அந்த தேசத்திற்குபோய் பொதுவுடமைக் கக்ஷியினரைக் கண்டு உத்ஸாஹப்படுத்தி வந்தார். அவர் திரும்புவதற்குள்ளாகவே அங்கு அந்தக் கக்ஷி மரித்துவிட்டது. இந்தியாவில் பொதுவுடமையைப் புகவிட விரும்பும் விஷமிகள் ஐரோப்பாவில் அதற்கு ஏற்பட்டு வரும் கதியை நன்கு உணர்வது விவேகமாகும்.

தொழில் அபிவிருத்திக்கு மதம் செய்யும் உபகாரம்.

தீபாவளி உதாஹரணம்.

தீபாவளிப்பண்டிகை இந்தியாவெங்குமுள்ள ஹிந்துக்களனைவராலும் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு கிரஹத்திலும் சிறு குழந்தை முதல் யாவரும் எண்ணை தேய்த்து மங்கள ஸ்நானம் செய்து புதிய ஆடைகளணிந்து விருந்துண்டு மகிழ்ந்தார்கள். இதன் மூலம் ஏழை, பணக்காரன், உயர் ஜாதி, கீழ் ஜாதி யென்ற பேதமின்றி யாவரும் ஆமுஷ்மிக சிரேயஸ்ஸை அடைந்தார்கள். சாஸ்திரங்களிடமும், பரலோகம் தெய்வம் முதலியவைகளிடமும் தங்களுக்குள்ள திடமான நம்பிக்கையையும் இந்தப்பண்டிகை மூலம் கோடிக்கணக்கான ஹிந்துக்கள் வெளியிட்டுக் கொண்டார்களென்பதும் ஓர் முக்ய விஷயம்.

ஆயினும், மதச்சடங்குகளை மூட நம்பிக்கை யென்று தூற்றுகிறவர்களும், பணத்தையும், வயிற்றையுமே பெரிதாக நினைத்து அதற்காகவே பாடுபடுகிறவர்களுமான தற்கால நாகரிக நாஸ்திகர்கள் கூட அங்கீகரிக்ககூடிய பற்பல இஹ லோக நன்மைகளும் இத்தகைய பண்டிகைகளால் உண்டாவதை நாம் கவனிக்க வேணும். பொதுவாகவே நமது மத விதிகள் யாவும், நம் தேசத்தொழில்களுக்கு நேராகவோ, பரம்பரையாகவோ உயிர் ஊட்டக்கூடியவைகளாயிருப்பதை நம்மவர்கள் சிறிது சிந்தித்துப்பார்த்தால் விளங்காமற் போகாது. மத விதிகளும், தொழில் அபிவிருத்தியும் நெருங்கி ஸம்பந்தப்பட்டவைகளாகவே இருக்கின்றன. இதற்கு இந்த தீபாவளிப்பண்டிகையிலேயே உதாஹரணமிருப்பதைப் பார்க்கலாம். முதலில் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளுவோம். இந்தப்பண்டிகையில் சிறு குழந்தை முதல் யாவரும் புதிய ஆடை உடுத்த வேண்டுமென்று சாஸ்திரம் கூறுகிறது. இந்த விதியை மதித்து கோடிக்கணக்கான ஜனங்கள் ஏககாலத்தில் வேஷ்டிகளும், புடவைகளும், சட்டை குட்டை முதலிய ஆடைகளையும் வாங்க முற்படுகிறார்கள். இப்படி ஏக காலத்தில் குறிப்பிட்டதினத்தில் யாவரும் புதிய ஆடை வாங்குவது மதக்கட்டளையாலல்லது வேறு எந்த வழியாலும் நடக்கக்கூடியதில்லை. தனிப்பட்ட மனிதரொருவர் எவ்வளவு மதிப்புள்ளவராயினும் இந்தியாமுழுவதுமுள்ள ஹிந்துக்கள் அவருடைய வார்த்தைக்கு இம்மாதிரி கட்டுப்படமாட்டார்களன்றோ? காந்திஜி கதர் கட்டும்படி அடிக்கடி வற்புறுத்துகிறார். தேசியவாரம் போன்ற பல ஸந்தர்ப்பங்களைக்காட்டி கதர் வாங்கும்படி உபதேசிக்கிறார். ஆயினுமென்ன? ஆயிரத்தில் நான்கு பேர்கள் கூட அதை அநுஷ்டிப்பதில்லை யென்பது பிரத்யக்ஷமானது. காந்திஜியும், காங்கிரஸ் தலைவரும் இதில் தங்கள் ஏமாற்றத்தைப் பலதடவைகளில் வெளியிட்டு வரவில்லையா? ஆயினும் அத்தகைய ஜனங்களே மதக்கட்டளையை முன்னிட்டுப்பிறர் தூண்டுதலோ, பிரசாரமோ, இல்லாமல் தாங்களாகவே தீபாவளி தினத்தில் எல்லா நகரக்கிராமாதிகளிலும் ஏககாலத்தில் புது ஆடை வாங்கத்தவறுவதில்லை.

எவ்வளவோ தலைமுறைக்கு முன் சாஸ்திரம் இட்ட கட்டளையை இன்றுகூட ஜனங்கள் பயபக்தியுடனும், சிரத்தையுடனும் நிறைவேற்றி வருகிறார்கள். ஆகையால் சாஸ்திரக் கட்டளையை நம்மவர்கள் இன்னும் மதித்து வருவதும் விளங்கும். ராஜீயத்தில் சுதேசி பிரசாரம் முதலியவைகளையும் மத ரீதியை அநுஸரித்துச் செய்தால் சீக்கிரத்தில் வெற்றி யேற்படவும் வழியுண்டு. இதை காந்திஜியே அறிந்துள்ளார். எனவே இப்படி ஏககாலத்தில் கோடிக்கணக்கான ஜனங்கள் புதிய ஆடை உடுத்தமுன் வருகையில், ஆடை உற்பத்தி செய்கிறவர்களும் அதில் ஸம்பந்தப்பட்ட பதினாயிரக் கணக்கான தொழிலாளிகளும் பெரிய நன்மையை அடைகிறார்கள். பஞ்சு, நூல் இவைகளின் உற்பத்தி, நெசவு, நெய்ததை வியாபாரம்செய்வது முதலிய வேலைகளில் எவ்வளவு பேர் ஸம்பந்தப்பட்டு நன்மை யடைகிறார்கள்? பணமுள்ளவர்களின் பணங்கள் இவ்வழியில் பலரிடம் பாவுவதால் பொதுவுடமை தத்வமும் பிரதி பலிக்கிறது. மேலும், நல்லெண்ணை வாணமருந்து, வெல்லம் போன்ற அநேக பதார்த்தங்களின் உற்பத்தியாளரான தொழிலாளிகளும் ஸௌகர்யம் பெறுகிறார்கள். ஏககாலத்தில் கோடிக்கணக்கானவர்களுக்கு ஆடை ஸப்ளை செய்யவேண்டியிருப்பதால் வெகுநாளாக கட்டுக் கடையிலிருந்த சரக்குகளும் விற்பனையாக ஸௌகர்யம் ஏற்படுகிறது. இம்மாதிரி வழியில் யோஜனைசெய்து பார்த்தால் மதாசார அநுஷ்டானங்கள் எவைகளும் பொது நன்மைகளையும், பொருளாதார ஸௌகர்யத்தையும், தொழில், வியாபார விருத்தியையும் செய்கிறவைகளாய் இருப்பது விளங்கும்.

மதங்களை ஒழித்து விட விரும்பும் நாஸ்திகர்கள் இதை யோஜித்தார்களா? தேசம் முழுவதும் ஜனங்களைக் கட்டுப்படுத்தி தொழில் வியாபாரிகளுக்கு ஸௌகர்யமுண்டாக்கக்கூடிய சக்தி மதத்தைத் தவிர வேறு யாருக்கு இருக்கும்? காந்திஜியோ, அல்லது வேறுபெரியாரோ கட்டளையிட்டால்யார் கேட்கிறார்கள்? இதில் இன்னொரு விஷயமும் கவனிக்கத்தக்கது. பிராம்மணர்கள் தங்கள் நன்மைக்காகவே மதப்புரட்டுகளை ஏற்படுத்தியதாகப் பிதற்றும் நாஸ்திகர்கள், மதஸம்பந்தமான கார்யங்களை முன்னிட்டு கணக்கற்ற பிராமணரல்லாத தொழிலாளிகளே எதிலும் ஸௌகர்யமடைவதைக் கவனிக்கவில்லை. பிராம்மணர்கள் மதஸம்பந்தமாக வாங்கும் பண்டம், பதார்த்தங்கள் யாவும் பிராமணரல்லாதரிடமே கிடைக்கிறது. விவாஹம், உபநயம் சிராத்தம் யாகம் முதலிய எக்கார்யம் செய்தாலும் அவைகளால் பிராமணரல்லாத தொழிலாளிகளின் ஜீவனம் நன்கு நடக்க இடமிருப்பதை கவனிக்கவும். இன்று இந்தியாவில் பிராமணர்கள் மத ஸம்பந்த கார்யங்களை நிறுத்திவிட்டால் அதனால் லக்ஷக்கணக்கான பிராமணரல்லாத தொழிலாளிகளே ஜீவனத்திற்குத் திண்டாடவேண்டி வருமென்பது திண்ணம்.

மத அநுஷ்டானங்களால் பிராம்மணர்கள் அடையும் பலன் வெகுகொஞ்சமே. அதுவும் பரலோகத்தில் தான். இகலோகத்தில் பணம் சேகரித்து ஸுகிக்கக் கூடிய தொழில்கள் வியாபாரங்கள் ஆகிய யாவற்றும் பிராம்மணரல்லாதாரிடமே விடப்பட்டிருக்கிறது. ஒரு விவாஹமென்றால், வெள்ளி, பித்தளைப்பாத்ரங்கள், தங்க நகைகள், வேஷ்டி, சேலை வகைகள் வாத்யம், பந்தல், வெற்றிலை, புஷ்பம், வாணம் முதலான ஸகல விஷயங்களிலும்பிராம்மணரல்லாதாரே நன்மையையடைகிறார்கள். பிராம்மணர்களுக்கோ இரண்டணா தக்ஷிணை கூட அகப்படுவது திண்டாட்டம். இம்மாதிரி ஒவ்வொன்றையும் கவனித்தால் மத விதிகளால் பிராம்மணர்களை விட பிராம்மணரல்லாதாரே விசேஷ நன்மையடைந்து வருவது பிரத்யக்ஷம்.

கோவில்களால் பிராம்மணர்களை விட அல்லாதாருக்கே பிழைப்பு அதிகம். தேவாலயங்களைக்கட்டுதல், அழகிய சில்ப வேலை மூலம் கோபுரம், மண்டபம், விமானம் இவைகளைநிர்மாணித்தல், தேர், ரதம், போன்றவைகளை சில்பசாஸ்திரப்படி அமைத்தல், தெய்வபிம்பங்களை நிர்மாணித்தல், உத்ஸவகாலங்களில்வேண்டியிருக்கும் அநேக பதார்த்தங்களின் ஸப்ளை ஆகிய யாவும் பிராம்மணரல்லாதாராலேயே செய்யப்படுகிறது. அவைகளால் அவர்களுக்கு நல்ல ஜீவனம் ஏற்படுவதுடன், சில்பத்திறமையினால் கௌரவமும் ஏற்படுகிறது. மேற்சொன்ன கார்யங்கள் எவைகளிலாவது பிராம்மணன் ஸம்பந்தப்படுவதுண்டா? ஒரு தம்பிடி கூட அவர்களுக்கு அதில் கிடைப்பதில்லை. ஆதலால் பிராம்மணர்கள் தேவாலயங்களால் நன்மை பெறுவதாகப்பேசுவது மூடத்தனமே.

சு.ம. நாஸ்திகக்கூட்டத்தாரின் விருப்பப்படி நம்தேசத்தில், மதமும், தேவாலயங்களும் மறைந்தால், பிராமணரல்லாதாரின் அதிசயிக்கத்தக்க சில்பத்திறமை நசிப்பதுடன், நகரங்களையே அலங்கரிக்கும், அழகிய கோபுர, விமானாதிகளையும் சித்திரத்திறமை நிறைந்த தேர்களையும் நம்மவர்கள் பார்க்கமுடியாது. அயல் நாட்டாரும் நம்தேசக்கலைகளின் மேன்மைகளையும், பிராம்மணரல்லாதவர்களின் தொழில் ஸாமர்த்யத்தையும் கண்டு அதிசயிக்க இடமில்லாமல் போகுமென்பது திண்ணம். நாஸ்திக இயக்கத்தால் பிராம்மணரல்லாதாரே விசேஷமாக பாதகமடைவார்கள். ஆதலால் மதத்தை அடிப்படையாகக்கொண்டு எதையும் நாம் செய்து எல்லா ஜாதிமத வகுப்புக்களும் நல்ல க்ஷேமத்தை அடைய நம்முன்னோர்காட்டிய வழியே உத்தமமென்று நினைப்போமாக.

தர்மத்தை ஸரியாக அநுஷ்டித்தால் அதிலிருந்து அர்த்தம் காமம் முதலியவை தானாகவே உண்டாவதாக நமது சாஸ்திரம் கூறுவதும் கவனிக்கத்தக்கது.

மதாபிமானி.

The Kumbakonam Bank, Ltd.,
(Established in 1904.)

HEAD OFFICE: 54, BIG STREET. KUMBAKONAM.
LOCAL SUB-OFFICE: YANAIYADI ROAD.
BRANCHES: MANNARGUDI & NEGAPATAM.
SUB-OFFICES: AYYAMPET & NANNILAM.

Authorised Capital Rs. 5,00,000.
Paid up Capital Rs. 2,82,575.
Reserve and Contingent Funds exceed .... Rs. 2,18,000.

Banking business of every description transacted.

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
“ ஆர்யா சதகம் ”
Mr. G. V. கணேசய்யர், B A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால் சிலவு வேறு] [விலை அணா 0—8—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு விலை அணா 6.
கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்
டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
Kandukur.
(Nellore Dt.)

ஸ்ரீ சார்ங்கபாணி கோவில் முதல் தீர்த்த மரியாதை.

தகராறு.

பாட்டாசாரியர்களுக்கு மரியாதை நடத்தப்பட்டது.

கும்பகோணம் ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமி கோவிலில் கடதீப காலத்திய முதல் தீர்த்த மரியாதையானது பாட்டாசாரியர்களுக்கு உரித்தானதென்றும் அவர்களுக்கு அதைச் செய்யவேணுமென்றும் தேவஸ்தானக் கமிட்டியும், டிரஸ்டி போர்டும் உத்திரவு செய்திருந்ததை அநுஸரித்து சென்றவாரம் புதன்கிழமை ஸ்வாமி புறப்பாடு நடந்து கடதீபம் ஆனதும் பாட்டாசாரியர்கள் முதல் தீர்த்த மரியாதையைப்பெற வந்துநின்றார்கள், ஜனகூட்டம் ஏராளமாக இருந்தது. ஆயினும் பூஜகர்கள் கமிட்டி உத்திரவுக்கும் டிரஸ்டிகளின் உத்திரவுக்கும் கீழ்ப்படியமறுத்து மரியாதைசெய்ய ஆக்ஷேபித்தனர். டிரஸ்டிகளின் உத்திரவு தெளிவாக இல்லையென்றும் வாதாடினார்கள்.

மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீமான் ஹரிராவ் M. A. B.L., அவர்கள் ஸ்தலத்திற்கு வந்து டிரஸ்டிகளின் உத்தரவின் அர்த்தத்தை விளக்கி, பாட்டாசாரியர்களுக்கு முதல் தீர்த்த மரியாதையைச் செய்யும்படியும் உத்திரவுப்படி நடக்கும்படியும் பூஜகர்களை வற்புறுத்தினார். இச்சமயம் கூட்டத்தில் குழப்பமும், கூச்சலும் அதிகரித்தது. மரியாதையை நடத்தாமலே ஸ்வாமியை உள்ளே கொண்டுபோய் விட முயற்சி நடந்தது. ஆனால் பொதுஜனங்கள் இதற்கு இடமளிக்கவில்லை. தேவஸ்தானக்கமிட்டியின் ஏகோபித்த தீர்மானத்திற்கும், டிரஸ்டி போர்ட்டின் உத்திரவுக்கும் மதிப்புக்கொடுத்து அவைகளை நிறைவேற்ற வேண்டிய அவச்யமேற்பட்டதாலும், அதையே பொதுஜனங்கள் விரும்பியதாலும், மரியாதை நடக்கும் வரையில் ஸ்வாமி அங்கேயே ஒரு மஞ்சத்தில் எழுந்தருளப்பண்ணிவைக்கப்பட்டார். கலஹம் அதிகரிக்காமலிருக்கவேண்டி போலீஸார் தருவிக்கப்பட்டனர். உடனே மானேஜிங் டிரஸ்டியின் அவஸர அழைப்பின் மேல், ஸ்ரீமான்களான, எம். கே. வைத்தியநாதய்யர், ஏ. வி. நாராயணஸ்வாமிப்பிள்ளை, ஆர். ஸ்ரீனிவாஸாசாரியர் ஆகிய டிரஸ்டிகளும் ஸ்தலத்திற்கு வந்து பூஜகர்களின் ஆக்ஷேபணையை விசாரித்தனர். மேல் அதிகாரிகளின் உத்திரவுக்குக் கீழ்படிந்து நடக்கும்படியும், இல்லையேல் அதனால் பல விபரீதங்கள் ஏற்படுமென்றும், டிரஸ்டிகள் எப்படியாவது மரியாதையை நடத்திவைத்துத்தங்கள் உத்திரவை நிறைவேற்றிவைக்கத்தீர்மானித்திருப்பதாயும் பூஜகர்களுக்கு எச்சரிக்கப்பட்டதாகத்தெரிகிறது.

பூஜகர்கள் மறுத்தால், ஸமீபத்தில் தீக்ஷை பெற்ற வைஷ்ணவர்களைக்கொண்டு காரியத்தை நடத்திவிடவும் யோஜனை சொல்லப்பட்டிருந்ததாகத்தெரிகிறது. கடைசியாக டிரஸ்டிகள் மற்றொரு உத்திரவு பிறப்பித்து, பூஜகர்கள் தீர்த்தம் முதலியமரியாதைகளை தாங்கள் செய்து கொள்ளாமலே பாட்டாசாரியர்களுக்குச் செய்ய வேண்டுமென்பதே தங்கள் உத்திரவின் கருத்தென்றும் விளக்கி அந்தப்படியே செய்யும்படி சொன்னார்கள். கடைசியாக பூஜகர்கள் இசைந்து தாங்கள் மரியாதைசெய்து கொள்ளாமலே பாட்டாசாரியர்களுக்கு தீர்த்தம், சடாரி, பரிவட்டம், துளசி முதலிய மரியாதைகள் நடத்தினார்கள். அச்சமயம் பொதுஜனங்கள் செய்த சந்தோஷ ஆரவாரமும் கரகோஷமும் வெகு பலமாயிருந்தது, அந்தப் பெருங்கூட்டம் முழுவதும் விசேஷ திருப்தி காணப்பட்டது. டிரஸ்டிகளின் உறுதியும் பாராட்டப்பட்டது. இந்தமாதிரிமரியாதைதகராறு அடிக்கடி ஏற்படாமல் தடுக்கடிரஸ்டிகள் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாயும் ஒவ்வொரு மரியாதைகாரர்களையும் விசாரணை செய்து முடிவு செய்யப்போவதாயும் தெரிகிறது. இந்த முயற்சி வரவேற்கத்தக்கதே

கண்டதுரைப்போன்

ஓர் பதில்.

சென்ற ஆவணிமீ 9உ அச்சிட்டு வெளிவந்த ஆர்யதர்மத்தில் 3-வது பக்கத்தில் மு. ந. ஜானகிராமய்யர் அவர்கள் எழுதியிருக்கும் "ஸாமோபாகர்ம கால நிர்ணயம்" என்ற தலையங்கத்தின் விஷயத்தை நாம் பார்த்தோம். அதில் 7-வது விஷயத்திற்கு இது பதிலாகும். அதாவது சாரதா விலாசத்தில் அச்சிட்டிருக்கிற வர்ணாச்ரம தர்ம காண்டத்தில் 61-வது பக்கத்தில்

सार्व भौमीये என்று ஆரம்பித்து तत्रैव

"ऋग्यजुस्सामाथर्वेशा जीवशुक्र कुजेन्दुना ।
शाखा धीशेशक्ति युक्ते तच्छाखा ध्ययनं शुभम् ॥
एको मूढो भवेदन्यस्स्वोच्चमित्रांशगो यदि ।
स्वराशिमूढगौ चैवमौढयदोषो न विद्यते ॥
इत्यादि वचनात् शुक्रेशक्तियुक्तेगुरुमौढयेऽपि
यजुश्शाखि नामुपा कर्म कर्तव्यम् । शुक्रेमौढया
दावायेवं मौढयादि दोषेषु उपाकरणवर्जनस्मरणं
स्वशाखाधीशस्य शक्त्यभावविषयम्,, इति

என்று எழுதப்பட்டிருப்பதை நாம் ப்ரமாணம் என்று தெரிவிக்கிறோம் "एकोमूढ,, என்ற வசன ப்ரகாரம் குஜன் (அம்சத்தில்) தனக்கு மித்ரமான குருவின் க்ஷேத்ரமான மீனத்தில் இருப்பதால் மௌட்ய தோஷம் இல்லை இதையே நாம் முன்னமேயே எழுதியிருக்கிறோம். தோஷமில்லாமல் போனாலும் சாந்தி செய்வதே நலம் என்பதையும் தெரிவித்திருக்கும்பொழுது இவர்களின் கேழ்விக்கு அவகாசம் ஏது? "குருகடகத்தில் ஒருவருஷத்திற்குமேல் தங்கக்கூடும் அப்பொழுது அஸ்தமனதோஷமில்லையா?" என்பதற்கு ப்ராக்ருதத்தில் ஸமாதானம் தேவையில்லை. "अर्धपक्षमान् उत्सर्ग ,,

என்ற காதிர க்ருஹ்ய ஸூத்ரத்தின் வ்யாக்யானத்தில்,

"अर्धपक्षमानितिवचनात् प्रौष्ठपदे हस्तद्वयसंभवे पूर्वहस्तएवोपाकरणम् ,,

என்று கூறப்பட்டிருப்பதாலும் இவ்வருஷம் ஆவணிமீ 12உயே ஸாமோபாகர்ம செய்தது உசிதமானது என்பதைதெரிவிக்கிறேன்.

சேஷகிரி சாஸ்திரி.

வருண ஜபம்.

துலா மாஸத்திலும் மழையில்லாமல் கஷ்டப்படும் ஜனங்களுக்கும், ஆடுமாடுகளுக்கும் பயிர்களுக்கும், க்ஷேமத்திற்காக மழை பெய்யும்படி தெய்வத்தைப்ப்ரார்த்திக்க 24-10-38 திங்கள் கிழமை முதல் காலை 9 மணியிலிருந்து மத்தியானம் 1மணி வரையில், சுமார் 10 நாளைக்கு பிரதிதினம், கும்பகோணம் பக்தபுரி அக்ரஹாரம் காவேரிதுறையில் 'வருண ஜபம்" செய்யப்படும். அவ்விடத்திலேயே மாலை 5 மணி முதல் 6 மணி வரையில் "விராடபர்வமும்" நடந்து வருகிறது. வருண ஜபம் செய்யும் 8 பிராமணர்களுக்கும் ஒவ்வொரு நாளும், மத்யான போஜனம் செய்துவைக்க அபிப்ராயமுள்ளவர்கள் தயவு செய்து அடியில் கண்டவரிடம் தெரிவித்தால் சௌகரியமாயிருக்கும்.

C. S. தீக்ஷிதர். 3. பிள்ளையார்கோவில் தெரு.
கும்பகோணம்.

திருவாங்கூரில் விடுதலை. உத்திரவு.

திருவாங்கூர் மஹாராஜாவின் பிறந்த தினமாகிய 22உ யன்று மஹாராஜா, ராஜீயக்கைதிகள் யாவரையும் விடுதலை செய்யும்படியும் கிரிமினல் திருத்த அவஸரச்சட்ட அமுலை தாத்காலிகமாக நிறுத்திவைப்பதாயும் உத்திரவு பிறப்பித்துள்ளார்.

பொதுவுடமை அழிந்தது.

ஸுடடன் ப்ரதேசத்தை ஜர்மனி வசப்படுத்திய தினம் முதலாக ஸெகஸ்லவேகியா நாட்டிலேயே பொதுவுடமை கக்ஷியும், அதன் ஆக்ஷியும் அடியோடு நசித்துவிட்டதாம்.

சுற்றித்திரியும் கோர்ட். லாகூரில் புதிய முறை.

லாகூரில் சில ஸப்மாஜிஸ்ட்ரேட்டுகள், நான்கு கான்ஸ்டேபிள்களுடன் கிராமாந்திரங்களில் குதிரை மீது சுற்றிவருகிறார். ஆங்காங்கு ஏற்பட்டுள்ள வழக்குகளை அந்த ஸ்தலத்திலேயே விசாரணை செய்து தீர்ப்பும் கூறிக்கொண்டு போகிறார்.

ஆலயப்பிரவேசத்தால் ஏற்பட்ட நஷ்டம்.

திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரத்திற்குப்பிறகு பிரபல ஜாதி ஹிந்துக்கள் பலரும் அந்தக்கோவிலுக்குப்போவதை நிறுத்திவிட்டகாரணமாயும் அந்த கோவிலுக்கு 2 லக்ஷம் ரூபாய் வருமானம் குறைந்து நஷ்டம் ஏற்பட்டு விட்டதாகத்தெரிகிறது.

நீண்டாதாருக்கு டெபுடிகலெக்டர் பதவி.

சென்னையில் ஸ்ரீமான் ராமச்சந்திரன் என்ற நீண்டாஜாதியைச் சேர்ந்த கனவானுக்கு சென்னை சர்க்கார் முதலெடுப்பிலேயே டெபுடிகலெக்டர் உத்யோகம் கொடுத்திருக்கிறார்கள். இதை அந்த ஜாதியார் ஒரு திருநாளாகக்கொண்டாடி மேற்படி ராமசந்திரனுக்கு உபசாரமும் நடத்திவருகிறார்களாம்.

ராஜீயக்கைதிகள் விடுதலை. வங்காளத்தில் புதிய கிளர்ச்சி.

வங்காள ஸர்க்காருக்கும், காந்திஜிக்கும் ராஜீயக்கைதிகள் விடுதலை விஷயமாய் நடந்த மத்யஸ்த ராஜிப் பேச்சுக்கள் முறிந்துவிட்டனவாகையால் 100 பிரபலஸ்தர்கள் சேர்ந்து யோஜித்துப் புதிய முறையில் ஜனங்களிடையில் பிரசாரம் நடத்த ஓர் அட்ஹாக் கமிட்டியை நியமித்திருக்கிறார்கள். ஸ்ரீமான் ஸுபாஷ்போஸ் இதன் வேலைகளை திட்டம் செய்வார்.

எம் எல். ஏ. மீது வழக்கு.

சென்ற சட்டஸபை எலெக்ஷனில் ராமநாதபுரம் ராஜாவைத் தோற்கடித்த காங்கிரஸ் சட்டஸபை மெம்பரான ஸ்ரீமான் முத்துராமலிங்கத்தேவர் என்பவர் பசுமலைத்தொழிலாளர்களை பலாத்காரத்திற்குத் தூண்டிய குற்றம் செய்ததாக ஸர்க்காரால் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணையாகிவருகிறது. இவரை விடுவித்துவிட காங்கிரஸ்காரர் கிளர்ச்சி செய்கிறார்கள்.

ஸீதா விவாகம்.

யோக சாஸ்திர நிருபணம்.

(அய்யாத்துரை அய்யர்
மாஜி ஸப்மாஜிஸ்ட்ரேட்)

வால்மீகி இராமாயணத்தின் ரஹஸ்ய அர்த்தத்தை அறிய தொண்டு தொட்டு வரும் ஒரு சுலோகமிருக்கிறது. அது பின் கண்டிருப்பதுதான்.

"ஆத்மா ராமோ ப்ரஹ்மவித்யாச ஸீதா பதிர் ப்ராதா மானஸம் வாயு ஸூனு:" இதின் அருத்தம். இராமர் சரீரத்திலுள்ள ஆத்மாவென்றும், ஸீதை ப்ரம்ஹவித்தை என்றும் ஸஹோதரனான இலக்குமணன் புத்தி என்றும் ஹநுமார் மநஸ் என்றும் ஏற்படுகிறது.

ஆகையால் ஸீதையை பிரஹ்மவித்தை என்று ரஹஸ்யார்த்தம் செய்திருப்பதாக நினைக்க இடமிருக்குறது. இதற்கு வால்மீகி இராமாயணத்திலேயே அநேக ஆதாரங்களிருக்கின்றன. ஜெனகர் தன் பெண்ணாகிற ஸீதையை யார் அடைய விரும்புகிறாரோ அவர் தான் வைத்திருந்த சிவனுடைய தனுஸை நாண் ஏறிட வேணுமென்று பிரதிக்ஞை செய்திருந்ததாக சொல்லியிருக்கிறது. முண்டக உபநிஷத்தின் இரண்டாவது அத்யாயம் இரண்டாவது பாகம் மூன்றாவது சுலோகத்தில் உபநிஷத்தை தனுஸாக சொல்லப்பட்டிருக்கிறது. ஜெனகர் பிரஹ்மஞானியாதலால் அவர்கொடுத்த வில்லை உபநிஷத்தாக அருத்தம் செய்ய இடமாகிறது. இராமர் அதை நாணேற்றினார் என்பதை அவர் அந்த உபநிஷத்தை படித்து அதிலிருந்து ஸீதையாகிற பிரஹ்ம வித்தையை அடைந்தார் என்பது ஸீதையை பிரஹ்ம வித்தை என்று அருத்தம்செய்வதற்குபொருத்தமாயிருக்கிறது. அந்த வில்லை இராமர் அவஸரமாய் வளைத்து நாணேற்றினார் அதினால் அந்த வில்லு இரண்டு துண்டாக முறிந்ததாக சொல்லியிருப்பதையும் கூட அந்த உபநிஷத்தை அவஸரமாக வாசித்ததால் அதற்கு இரண்டு விதமாக அருத்தம் தோன்றினதாயும் ஒன்று அத்வைதத்திற்கு ஸாதகமாயும் மற்றது த்வைதத்திற்கு ஸாதகமாயும் தோன்றிற்று என்றும் ஆனால் அவர் நாண்கயிற்றால் இரண்டு துண்டுகளையும் சேர்த்து கட்டி விட்டதால் ஒரே அருத்தம் தான் நிலைத்தது என்றும் சொல்ல இடமுண்டு. மேலும் ஸீதை பிரஹ்மவித்தையாக இருப்பதால் அவளுக்கு "ஸீதை" வெண்மை" என்ற பெயர் பொருந்தும். அவளுக்கு வால்மீகி அதின்ரஹஸ்யார்த்தத்தை மறைக்க "ஸி" என்ற அக்ஷரத்தை தீர்கமாக செய்து "ஸீதை" என்று மாற்றி இருப்பதாகச்சொல்லலாம். ஏனென்றால் பிரஹ்ம வித்தையாகிற ஸரஸ்வதி வெண்மை நிறமாக இருப்பதால் ஸீதை என்று பெயர் வைத்திருப்பது உசிதமாகத் தோன்றுகிறது. மேலும்ஸீதையை வைதேகி" என்றதற்கு, தேகமில்லாதவள் என்று அருத்தமாதலாலும் பிரஹ்ம வித்தைக்கும் ஸ்தூலதேகமில்லாததாலும் அந்தப் பெயரும் பொருத்தமாக இருக்கிறது. மேலும் நாரதர் வால்மீகிக்கு சொல்லிய இராமாயணச்சுருக்கத்தில் ஸீதையை "நாரீணாம் உத்தமாவதூ:" என்று சொல்லப்பட்டிருக்கிறது. "நாரம்" என்ற பதத்திற்கு ஞானம் என்று அருத்தமிருப்பதாலும் பிரம்மவித்தை மற்ற ஞானங்களைக்காட்டிலும் உத்தமமான ஞானமாதலாலும் ஸீதையை "நாரீணாம் உத்தமாவதூ:" என்று சொல்லி இருப்பதும் பொருத்தமாக இருக்கிறது. மேலும் ஸீதை அயோனிஜை என்றும் யாகசாலை உழும்போது அகப்பட்டாள் என்றும் சொல்லுவது பிரஹ்மவித்தை அயோனிஜை ஆதலாலும் உபநிஷத்துக்கள் யாகசாலையில் விசேஷமாய் சொல்லப்படுவதாலும் அந்த சரித்திரமும் பொருத்தமாக இருக்கிறது. மேலும் ஸீதையை "தேவமாயேதி நிர்மிதா" என்று சொல்லியிருப்பதாலும் "மாயா" எனபதற்கு ஸரஸ்வதி என்று அருத்தமிருப்பதாலும் ஸீதையை தேவமாயை என்பதும் பொருத்தமா இருக்கிறது. இராமாயணத்தில் ஸுந்தரகாண்டத்தில் ஸீதை பிரஹ்மவித்தை என்று அருத்தம் செய்ய மூன்று அடியில் கண்ட வாக்கியங்களை வால்மீகி சொல்லி இருக்கிறார்.

(1) "ஆம்னாயானம் அயோகேன வித்யாம்ப்ரசிதிலாமிவ" இதின் அருத்தம் ஸீதையானவள், அடிக்கடி வாசியாததால் மறக்கப்பட்ட வேதவாக்யம் போலிருக்கிறாள்.

(2) "வ்ருதஸ்னாதஸ்ய விப்ரஸ்ய வித்யேவ விதிதாத்மன:" இதற்கு அருத்தம் வேதம் படித்து ஸமாவர்த்தனம் செய்த ஒரு மாணாக்கனைப்போல் எல்லோருக்கும் தெரியும்படி இருக்கிறாள்.

(3) "ப்ரதிபத் பாடசீலஸ்ய வித்யேவ தனுதாம்கதா" ஸீதையானவள், பிரதமையில் அப்யஸிக்கப்பட்ட வித்யை போல மெலிவாக இருக்கிறாள்.

மேலும் ஸீதையை அவளுடைய முன் ஜென்மத்தில் அவள் குசத்வஜர் என்ற இருஷிக்கு பெண்ணாயும் அவள் பெயர் வேதவதி என்றும் வேதத்தை படித்தபோது அவள் பிறந்ததால் அப்பெயர் இடப்பட்டதென்றும் சொல்லப்பட்டிருப்பதாலும் வேதவதி என்பதும் "பிரஹ்மவித்தை" என்று அருத்தமாவதாலும் அந்த சரித்திரமும் பொருத்தமாக இருக்கிறது. மேலும் ஸீதையைக்குறித்து இராமாயணத்தில் சொல்லப்பட்ட அடியில்கண்ட சரித்திரமும் அவள் பிரஹ்ம வித்தை என்பதற்கு பொருத்தமாக இருக்கிறது.

ஸீதையும் இராமரும் பஞ்சவடியில் வசிக்கும்போது இராவணனும் மாரீசனும் வந்ததாயும் மாரீசன் மான்வேஷம் போட்டுக்கொண்டு ஸீதையையும் இராமரையும் மாயையால் மயக்கினதாயும் ராமர் மானைப்பிடிக்கப் போன உடன் ஸீதையை இராவணன் அபஹரித்து இலங்கைக்கு தூக்கிப்போய்விட்டதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சவடி என்பது சித்தமென்றும், சித்தத்திற்கு ஒரு நல்ல விருத்தி வந்தால் அதை மாயாவிருத்தி மறைத்து அந்த மறைந்த விருத்திகள் தங்கக்கூடிய இடமாகிற மூலாதாரத்திற்குப்போய்விடும் என்றும் யோக சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதாலும் பஞ்சவடி என்பது ஐந்துவிதமான விருத்திகள் உண்டாகிற இடமாகிற சித்தமென்றும் லெங்கை என்பது அந்த விருத்திகள்போய் தங்கி இருக்கும் இடமாகிற மூலாதாரமென்றும் அருத்தம் செய்ய இடமுண்டு. கீதையின் 7-வது அத்யாயம் 15-வது சுலோகத்தில் மாயையால் ஞானம் அபகரிக்கப்படும் என்று சொல்லியிருப்பதால் "மாயயா அபஹ்ருத ஞான:" ஸீதையாகிற பிரஹ்ம வித்தை மாயை மூலமாய் அபஹரிக்கப்பட்டது என்பதும் பிறகு லங்கையாகிற மூலாதாரத்திற்கு கொண்டுபோகப்பட்டது என்பதும் பொருத்தமாக இருக்கிறது. பிறகு ஸீதை யானவள் இலங்கையில் அக்னிப்பிரவேச மூலம் தன்னை சுத்தம் செய்துகொண்டு இராமரை மறுபடியும் சேர்ந்தாள் என்பதும் பிரமஹ்ஞானமானது மாயையினுடையவும் இந்திரியங்களுடையவும் மோகத்தை விட்டு சுத்தமாகி திரும்பி இராமரிடம் வந்தது என்று அருத்தம் செய்வது பொருத்தமாக இருக்கிறது.

பிறகு ஸீதையானவள் இராமரால் பரித்யாகம் செய்யப்பட்டாள் என்று இராமாயணம் உத்திரகாண்டத்தில் சொல்லியிருப்பதும் அவளை பிரஹ்மவித்தை என்று அருத்தம் செய்தால் கீதைப்படிக்கும் உபநிஷத்துப்படிக்கும் பொருத்தமாயும் நியாயமாயுமிருக்கிறது. கீதையின் 4-வது அத்யாயம் 36-வது சுலோகத்தில் "ஸர்வம் ஞானப்லவேனைவ வ்ருஜினம் ஸந்தரிஷ்யஸி" என்றும் ச்வேத அச்வதரா உபநிஷத்தில் "பிரஹ்மோடுபேனப்ரதரேத வித்வான்" என்றும் ஞானமாகிற பிரஹ்ம வித்தையை ஆத்மஸாக்ஷாத்காரம் அடையும்வரை அதை அடைய ஏறிப்போகும் ஓடமாக வைத்து அதை அடைந்த பிறகு அந்த ஓடத்தை பரித்யாகம் செய்யவேண்டியது நியாயமாக இருப்பதால் ஸீதையாகிற பிரஹ்மவித்தையை நிர்விகல்ப ஸமாதியாகிற லவணஅஸுரவதத்தை செய்து மதுபுரியை ஆளுகிறதாகிற ஆநந்தத்தை 12 வருஷம் சத்துருக்னனாகிற இராமருடைய சித்சக்தியானது அடைந்திருக்குமுன் ஸீதை யாகிற பிரஹ்ம வித்தையை பிரஹ்ம ஞானத்திற்கு இருப்பிடமாகிற வால்மீகியின் ஆச்ரமத்தில் விட்டது உசிதமாகஇருக்கிறது. ஸீதைக்கு குசன் லவன் என்று இரு பிள்ளைகளும் பிறந்தது என்பதும் அவர்கள் இராமயணத்தைப் பாடினார்கள் என்பதும் குசனை யோக சாஸ்திரத்தின் முதல் இரண்டு பாகங்களாயும், லவன் என்றதை அதின் மூன்று நான்காவது பாதங்களாயும் அருத்தம் செய்ய இடம் இருப்பதால் பொருத்தமாக இருப்பதுடன் இராமாயணம் யோக சாஸ்திர நிரூபணம் என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

ராமேச்வரம் ஸ்ரீ வெங்கடாசல தீக்ஷிதர் மறைவு.

(15-10-38) இரவு 9-மணிக்கு இப்பெரியார் தனது வீட்டிலே புத்ர ஸன்னதியில் 75-வது வயதில் பூத உடலைவிட்டார். இவர் யஜுர் வேதத்திலும் நான்கு சாஸ்திரங்களிலும் விசேஷமாக தர்ம சாஸ்த்ரத்திலும் பூர்ணப்ரக்ஞையுள்ளவர். படிப்புடனில்லாமல் நல்ல சிஷ்டாசாரத்தையும் கைப்பற்றியவர். அர்த்தாதுரதையைக் காட்டாமல் யாத்ரிகர்களிடம் தக்கவண்ணம் பேசி அவர் மனதை ஆகர்ஷிப்பதில் மிக நிபுணர். வித்வான்களோ தீக்ஷிதர்வாளிடந்தான் செல்வர்.

ஸகல தர்ம ஸந்தேஹங்களையும் கசடறக் கூறவல்லவர். பல ராஜாக்களால் ஸம்மானிக்கப்பட்டவர். ஆலய ப்ரவேசாதி புதுக் கிளர்ச்சிக்கு அவர் ஆதரவைப் பெற பலரால் பல முயற்சிகள் செய்யப்பட்டன. சிறிதளவும் சிஷ்டாசாரத்தை விட்டுக்கொடுக்க மனமில்லாதவர். சென்ற ஆண்டு ஸ்ரீராமஸேது தர்சனத்துடன் அவாள் தர்சனத்தையும் பிரதானமாகக் கொண்டு சென்றபோது தனது குழந்தைகளில் ஒருவனாகவே என்னை எண்ணி பல அரிய உபதேசங்களைச் செய்தார். சிறிது காலமாக கண்பார்வைமட்டுப்பட்டு ஞானசக்ஷுஸ் என்பதை அன்வர்த்தமாக்கினார். இத்தகையோர் எத்தனை காலமிருந்தாலும் தேசோபகாரமாகும். அவர் புத்ரர் ஸ்ரீ உமாமகேச்வர தீக்ஷிதர், அவர் தம்பி ஏனைய சீடர் அனைவருக்கும் நமது ஆழ்ந்த துக்கத்தை தெரிவிக்கிறேன்.

ஸ்ரீ வத்ஸ வே. ஸோமதேவன்.

ஸ்ரீ லலிதா த்ரிசதீ.
நாகரலிபியில் மூலமும்
நாமாவளியும்
விலை 0—3—0
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு
விலை அணா 0—2—0.

215254

வெளியூர்ச் செய்திகள்.

மேல்மங்கலம்.

நாளது பகுதான்ய வருஷம் புரட்டாசிமீ 28ம் தேதிக்கு (4-10-38) வெள்ளிக்கிழமை மேல்மங்கலம் பிரம்மஸ்ரீ சிவருமகணபதி கனபாடிகளின் (ஆஸ்திக மகா ஜன ஸபா கார்யதரிசி) பிதா பிரம்மஸ்ரீ சிவருமசுப்பிரமணிய கனபாடிகள் தன் 61 வது வயதில் சிவலோகப்பிராப்தி அடைந்தார். இன்னவர் மஹாநிஷ்டர். வேதாத்யனம் பூர்ணமாய் செய்தவர். மேல்மங்கல கிராமம் உபாத்யாயர். காசி முதலிய க்ஷேத்திரங்களில் தீர்த்தாடனம் செய்தவர். ஷஷ்டி அப்தபூர்த்தி போன வருஷம் வெகு சிறப்பாகச்செய்து கொண்டார். இன்னவர் மரணம் சனாதன உலகிற்கே பெருத்த நஷ்டம் என்பதை தெரிவிப்பதுடன் இன்னவர் ஆத்ம சாந்தியடைய ஈச்வரனை பிரார்த்திப்போமாக. நமது சனாதன வீரர் சிவருமகணபதி கனபாடிகளுக்கு நம்முடைய ஆறுதலை சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

ச. கிருஷ்ண சாஸ்திரிகள்.

திருச்சி.

ஸம்ஸ்கிருத ஸாஹித்ய பரிஷத்.

மேற்படி பரிஷத்தின் 2வது ஆண்டு நிறைவுவிழா 16-10-38 ஞாயிற்றுக்கிழமை மாலையில் திருச்சி முனிஸிபல் பப்ளிக் ஹாலில் நடைபெற்றது. சிறந்த படிப்பாளிகளான அநேக கனவான்களும் பொது ஜனங்களும் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர்.

சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் வி. வி ஸ்ரீநிவாஸ அய்யங்கார் பரிஷத்தில் அக்ராஸனம்வகித்து ஸம்ஸ்கிருதத்தைப்பற்றி சிறந்த பிரசங்கம் செய்தார்.

மஹாமஹோபாத்யாய ஸ்ரீமான் R. V. கிருஷ்ணமாசாரிய ஸ்வாமிகள் "மஹாகவிகள்" என்ற விஷயத்தைப்பற்றி ஸம்ஸ்கிருத பாஷையில் அழகிய உபன்யாஸம் செய்தார்.

சீயாழி அட்வகேட் ஸ்ரீமான் ஸுந்தராசாரியர், பாரவி பாரதி,, என்ற விஷயத்தைக் குறித்து தமிழில் பிரஸங்கித்தார். தலைவரின் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரங்களுடன் ஸபை பூர்த்தியாகியது.

இரவு ஸம்ஸ்கிருதத்தில் சாகுந்தல நாடகம் நடித்துக்காட்டப்பட்டது.

ஒரு நிருபர்.

வானமாமலை.

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தாபிவர்த்தினீ ஸபா.

ஸ்ரீவானமாமலை மடம் முதல் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த, ஸ்ரீ ஒன்றான வானமாமலை ஸ்வாமி திருநக்ஷத்திரமான கன்யா புனர்வஸுவை முன்னிட்டு, ஸ்ரீ மடத்தில் (7-10-38) முதல் ஆரம்பித்து நடைபெற்ற, மஹோத்ஸவத்தில் ப்ரதி தினமும், திவ்ய ப்ரபந்த ஸேவை, ததீயாராதனம் முதலியது விசேஷமாக நடைபெற்றதுமல்லாமல் இப்பொழுது 26-வது பட்டதில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில், உள்ளூர் வித்வான்களாலும், பல ஊர்களிலிருந்தும் வந்த பண்டிதர்களாலும் வழக்கம் போல் உபயவேதாந்தங்களிலும் வாக்யார்த்தங்களும் உபந்யாஸங்களும் அழகாக விஜ்ஞாபிக்கப்பட்டு கடைசி தினத்தில் வித்வான்களுக்கு விசேஷ ஸம்மானமும் ஸ்ரீஸ்வாமி ஸந்நிதியிலிருந்து அநுக்கிரஹிக்கப்பெற்றது.

ஒரு விசேஷ நிருபர்.

திருநெய்ப்பேர்.

பாடசாலை.

திருநெய்ப்பேர் ஓர் திவ்யஸ்தலம். அதில் ஸநாதனதர்மமும், இங்கிலீஷ் படிப்புகளும் அபிவிர்த்தி அடையக்கூடிய ஓர் திவ்யபாடசாலை மகா-ள-ஸ்ரீ டிஸ்டிரிக்ட்போர்டு பிரஸிடெண்ட் நாகை சுப்பராயசெட்டியார் அவர்கள் திறமை வாய்ந்த ஸ்கூல் ஹெட்மாஸ்டர் S. அமுர்தலிங்கமுதலியார் R. சீனிவாசராவ் P. ஷண்முகம்பிள்ளை இவர்கள் மூவரும் அந்தந்த வகுப்புகளுக்கு தகுந்தவர்களாக நியமனம் செய்திருப்பதும் நான்நேரில் ஷை பாடசாலையில் இன்றுகாலை 8-30 மணிக்கு வந்து பார்த்தும் எல்லா மாணவர்களும் சாவ்யமான கானத்துடன் கடவுள் ஸ்தோத்திரமும், மற்றுமுள்ள வகைகளையும் பார்க்கவும் நான் முன் பார்த்ததைவிட மாணவர்கள் ஜாஸ்தியாக சேர்க்கப்பட்டும் மாணவர்களும் பள்ளிக்கூடமும் சுத்தமாக இருப்பதையும் பார்த்ததில் இவைபோல் எங்கும் பாடசாலைகள் அபிவிர்த்தி யடையவேணுமாய் ஸ்ரீஜகத்குரு பரமாசாரியார் அவர்களை மனமார அநேககோடி நமஸ்கார பிரஸ்சதமாய் பிரார்த்தித்துக்கேட்டுக்கொள்கிறேன். இவைகளை எல்லாம் ஆர்யதர்ம பத்திரிகையில் பிரசாரம் செல்தால் சிஷ்யகொடிகளெல்லாம் ஸநாதன தர்மத்திலும் ஈடுபட்டு நீடூழிகாலம் சுகஜீவியாய் போகபோக்கியத்துடன் இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

வி எஸ். ராமசந்திரய்யர்.

விராடபர்வ உபன்யாஸம்.

துலா மாஸம் ஆரம்பித்தும் மழை இல்லாததால், ஊரில் வைசூரி, ஜ்வரம், வியாபித்திருப்பதாலும் வெய்யிலின் கொடுமை அதிகமாயிருப்பதாலும் 19-10-38 புதன்கிழமை மாலை 4 மணி முதல் 5 மணி வரையில் கும்பகோணம் பக்தபுரி அக்ரகாரம், காவேரி துறை சங்கர மடத்தில், பிரத்யக்ஷ ரூபமான ஸ்ரீமத் மகாபாரதம் "விராட பர்வம்" பிரம்மஸ்ரீ பாலகிருஷ்ண தீக்ஷிதர் அவர்களால் உபந்யஸிக்கப்படும். அனைவரும் தயவுசெய்து வருக.

C. S. தீக்ஷிதர்

வைஸ்ராய் வந்தார்.

4-மாத ரஜாவில் இங்கிலாந்து சென்றிருந்த வைஸ்ராய் கனம் லார்டுலின்லிதோ தமது மனைவியுடன் 24வ பம்பாய் வந்து உடனே ஸிம்லா சென்றார். தமது பதவியை ஏற்றார். ஆக்டிங் வைஸ்ராயான பிரபோன் பிரபு மீண்டும் கல்கத்தா கவர்னர் பதவிக்குத் திரும்பினர்.

புராணக் கதைகள்.

(ராமசந்த்ர ஹரி:)

(முன் தொடர்ச்சி.)

ஸ்ருஞ்சய! பகீரதன் என்றும் அரசரும் இறந்தான். அவன் செய்த யாகத்தில் தேவராஜன் ஸோமபானம் செய்து தன்கைவன்மையால் பல்லாயிரக்கணக்கான அஸுரர்களை ஜயித்தான். அவன் செய்த யாகத்தில் பத்து லக்ஷம் கன்னிகைகளை தக்ஷிணையாகக் கொடுத்தான். அப்படிக்கொடுத்த ஒவ்வொரு கன்னிகைக்கும் ஒவ்வொரு ரதமும் நூறு யானைகளும் ஆயிரம் குதிரைகளும் ஆயிரம் பசுக்களும் ஆயிரம் ஆடுகளும் தானஞ்செய்தான். பாகீரதி என்ற கங்கை அவன் மடியில் குழந்தை போல் உட்கார்ந்திருந்தாள். அதனாலேயே கங்கைக்கு ஊர்வசி என்னும் பெயருண்டாயிற்று. அந்தப்பகீரதனும் மரணமடைந்தானெனில் உன்புத்திரனைக்குறித்துப் பரிதாபம் வேண்டாம்.

மஹாத்மாவான திலீபராஜனும் இறந்தான். அவன் காரியங்களை அந்தணர்கள் மிகவும் கொண்டாடுகிறார்கள். அவன் பெரிய யாகம் செய்து இந்தப்பூமியைப் பிராமணர்களுக்கு தானம் செய்தான். அவன் செய்த யாகங்களால் இந்திராதி தேவர்கள் மிகவும் சந்தோஷித்து அவனுக்கு வேண்டிய காரியத்தைச்செய்தார்கள். அவனைக்கொண்டாடாத தேவரும் கந்தர்வருமில்லை. அவனைப் போன்ற அரசர்கள் இருந்ததேயில்லை. அவனை தர்சித்தவர்கள் ஸ்வர்க்கமடைந்தார்கள். அவனரண்மனையில் வேத சப்தமும், வில்லின் சப்தமும், கொடு என்ற சப்தமும் குறைந்ததேயில்லை. அந்த திலீபனே இறந்தானெனில் உன் புத்திரனைப்பற்றி என்ன சொல்வது.

யுவனாச்வன் புத்திரனான மாந்தாதாவும் இறந்தான். இவன் யுவனாச்வன் வயிற்றில் பிருஷதாஜ்யத்திலிருந்துதித்தான். மூவுலகங்களையும் ஜயிக்கத்தக்கவன். தந்தையின் வயிற்றிலிருந்த அவனை மருத்தென்றதேவர்கள் வெளிப்படுத்தினார்கள். அக்குழந்தை தந்தையின் மடியில் படுத்திருக்கும்போது தேவர்கள் இக்குழந்தை யாரிடம் பால் குடிக்கும் என்று பேசிக்கொண்டிருக்கும்போது இந்திரன் "என்னிடம் குடிக்கும்" என்ற அர்த்தமுள்ள மாம்தாதா என்றும் வார்த்தைகளைச் சொன்னான். ஆகையால் அவனுக்கு மாந்தாதாவென்றே பெயருண்டாயிற்று.

இந்திரன் அக்குழந்தையின் வாயில் தன் கையை வைத்துப் பால்பெருகும்படிசெய்து வந்தான். அதைப்பருகிய அக்குழந்தையின் சரீரம் நாளொன்றுக்கு நூறு பலம் வீதம் வளர்ந்து பன்னிரண்டு நாட்களில் பன்னிரண்டு வயதுள்ள அரசனாயிற்று. அவ்வரசன் அங்காரன் முதலிய அநேக அரசர்களை ஜயித்து ஸூர்யோதயாஸ்தமயங்களுக்குட்பட்ட பூமியை ஆண்டு வந்தான். அவன் அநேக அச்வமேதராஜஸூயங்களைச்செய்து பிராம்மணர்களுக்கு ஒரு யோஜனை பருமனும் பத்து யோஜனை நீளமுமுள்ள பொன்னாற் செய்த மத்ஸ்யங்களை தானம் செய்தான். எல்லாவிஷயங்களிலும் உன்னையும் உன் புத்திரனையும் விடச் சிறந்தவனான அம்மாந்தாதாவே மரித்தானெனில் உன் புத்திரனைப் பற்றி வருந்துவானேன்.

நகுஷன் புத்திரன் யயாதியும் இறந்தான். அவன் பூமி முழுமையும் ஜயித்தவன். பல யாகங்களைச் செய்தான். பிராமணர்களுக்கு மூன்று தங்கமலைகளைத் தானம் செய்தான். அவன் இப்பூமியை த்ருஹ்யு முதலிய குமாரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து பூருவென்றும் புத்திரனுக்கு ராஜ்யத்தில் பட்டாபி

(தொடர்ச்சி 2-ம் காலம் பார்க்க)

(3-ம் காலம் தொடர்ச்சி)

ஷேகம்செய்து தான் தன் பார்யையுடன் விருத்தாப்பியத்தில் வனத்தையடைந்தான்.

நாபாக புத்திரன் அம்பரீஷன் கதையைக் கேள். அவனுக்கு யாகஞ்செய்வித்த பிராம்மணர்களுக்குப் பத்துலக்ஷம் அரசர்கள் பணிவிடை செய்தார்கள். அவ்வரசர் யாவரும் அச்வமேதஞ் செய்தவர்கள் போல் தேவயான மார்க்கமாகப் பிரம்மலோகமடைந்தனர்.

சித்ரரதன் புத்திரனான சசபிந்துவென்ற அரசனுக்கு லக்ஷம் பாரியைகளிருந்தனர் அவர்களிடம் பத்துலக்ஷம் புத்திரர்கள் உண்டானார்கள். அவன் செய்வ அச்வமேதத்தில் பிராம்மணர்களுக்கு அவன் கொடுத்த பொருள் கணக்கிலடங்கியதல்ல. இவ்வளவு மேலானவர்களுமிறந்தாரெனில் உன் மகனைப்பற்றி வருந்தவே வேண்டாம்.

(தொடரும்.)

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd, Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அர்யதர்மம்

4 ஸ 43

23

3 - 11-1938

215255

937
9 57
215255
589
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 NOV 1938
MADRAS

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்யஸு ஐப்பசிமீ 18உ 1938ஸு நவம்பர்மீ 3உ | ஸ 43

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.

தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ.	20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு.	0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்ம ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

"விடுதலை,, மீது குற்றப்பத்திரிகை.

சு. ம. கக்ஷி தினசரிப் பத்திரிகையாகிய விடுதலையின் ஆசிரியர், பிரசுரகர்த்தா ஆகியவர்கள்மீது சென்னைஸர்க்கார் தொடுத்துள்ள வகுப்புத்வேஷ, வழக்கில் எதிரிகள் மீது குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டது. எதிரிகள் ஸெஷனுக்கு கமிட் செய்யப்பட்டார்கள்.

ஸர்வ கலாசாலையில் விக்ரஹ ப்ரதிஷ்டை.

சிதம்பரம் அண்ணாமலை யூனிவர்ஸிடியைச் சேர்ந்த "ஸ்ரீநிவாஸ சாஸ்திரி ஹாலில்,, ஸ்ரீ நடராஜர், ஸ்ரீகோவிந்தராஜர் ஆகிய பெருமான்களுடைய விக்ரஹம் ஸ்தாபிக்கப்பட்டன. கனம் சாஸ்திரியார் இந்த ஸந்தர்ப்பத்தில் பேசுகையில், பட்டம் பெறும்மாணவர் இந்த தெய்வ விக்ரஹங்கள் முன், தாங்கள் நல்ல வழியிலிருப்பதாக பிரதிக்ஞை செய்து கொள்ள, இது ஒரு ஸௌகர்யமாயிருக்குமென்று கூறினர்.

பட்டமளிப்பு பிரஸங்கம்.

அண்ணாமலை ஸர்வகலாசாலையின் இவ்வருஷப் பட்டமளிப்பு பிரஸங்கத்தை பமபாய் "ஸோஷல் ரிபாரம்,, பத்திரிகை ஆசிரியரும், பிரபல ஆசாரத்திருத்தக்காரருமான ஸ்ரீமான் கே. நடராஜன் என்பவர் செய்தார் மாணவர்களுக்கு தீண்டாமை விலக்கு போன்ற சீர்திருத்தங்களின் அவச்யத்தைப் பற்றி வற்புறுத்தி அவர் உபதேசித்தார்.

திருவாங்கூர் காங்கிரஸ். மீண்டும் பயமுறுத்தல்!

ராஜீயக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டும், கிரிமினல் சட்டம் நிறுத்தப்பட்டும்கூட திருவாங்கூர் காங்கிரஸ்காரருக்கு திருப்தியில்லையாம். பொறுப்பாட்சி வழங்காவிட்டால் மீண்டும் பெரியகிளர்ச்சி செய்யப்போவதாக அந்த காங்கிரஸ் கார்யக்கமிட்டி கூட்டம் பயமுறுத்தித்தீர்மானம் செய்திருக்கிறது.

ஸமஷ்டி ஏற்பட்டால் சட்ட மறுப்பு?

ஸுபாஷ் பாபு எச்சரிக்கை.

ஸ்ரீமான் ஸுபாஷ் சந்திர போஸ் அஸ்ஸாமில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் காங்கிரஸின் கொள்கைக்கு விரோதமாக ஸமஷ்டித் திட்டம் வருமானால் அதை எதிர்த்துப்போராட சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்படுமென்று எச்சரிக்கிறார்.

நாகபுரி முனிஸிபாலிடியில் சச்சரவு.

தலைவர் ஓட்டம்.

நாகபுரி முனிஸிபாலிடியில் காங்கிரஸ் கக்ஷியைச்சேர்ந்த சேர்மன் மீது நம்பிக்கையில்லாத்தீர்மானம் செய்யப்பட்டது. அவர் ராஜிநாமா செய்யாததால் மெம்பர்கள் அவரை பலாத்காரமாக வெளியேற்றக்கலவரம் செய்தார்கள். அதன்மேல் தலைவரும், உபதலைவரும் ஸபையை விட்டு வெளியேறினார்களாம்!!

ஹோட்டல் பிரவேசம் பலிக்கவில்லை

ஆமதாபாத் முதலிய விடங்களில் தீண்டாதாரை ஹோட்டல்களில் விடும் விஷயமாகச் செய்தகிளர்ச்சி பயன்படவில்லை. ஆதலால் ஸத்யாக்ரஹம் ஆரம்பிக்கலாமாவென ஸ்ரீமான் ராஜபோஜிடம் ஆலோசனை கேட்கப்பட்டிருக்கிறதாம்.

கும்பகோணம் பாங்கி, லிமிடெட்,
(1904-ஸூம் ஸ்தாபிக்கப்பட்டது).

ஸேவிங்ஸ் அக்யூமுலேஷன் அக்கௌண்டு

பையன்கள் மேற்படிப்புக்கு போவதற்கு முன், கனமாய் கையில் பணம் சேரும்படிக்கும்;

பெண்களுக்கு கலியாண வயது வருவதற்கு முன்னே சிறுக பணம் சேர்த்து பெரிய [illegible] பண்ணிக்கொள்வதற்கும்;

எதிர்பாராத செலவுகள் வரும்போது எளிதாய் எடுத்துக்கொடுப்பதற்கும்;

ஒருவர் முகத்தைப்பார்த்து கடன் கேட்காமல் எப்போதும் கைக்கு பணம் உதவும்படிக்கும்;

கும்பகோணம் பாங்கியில்
ஸேவிங்ஸ்
அக்யூமுலேஷன் அக்கௌண்ட்
ஆரம்பியுங்கள்.

இதில், இன்ஷியூரன்ஸ் பாலிஸி எடுப்பதைக்காட்டிலும் அதிக வட்டி வருமானம் உண்டு. மாதாந்தரம் பணம் கட்ட வேண்டிய முறைகளிலுள்ள நிர்ப்பந்தங்களும் தொந்தரவுகளும் கிடையாது.

K R. V. சாஸ்திரிகள் பிரசுரங்கள்:—	
த்யானச்லோகம்	0 1 0
சாஸ்வதி பூஜாகல்பம்	0 1 0
ஜவஹர்லால் நேரு	0 4 0
தாதுரூபாவளி	0 4 6
சப்தமஞ்சரி	0 5 0

N. ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள். பிரசுரங்கள்.	
சிவகீதிமாலா.	0 4 0
ராமாஷ்டோத்ரம்.	0 1 0
சங்கர பகவத்பாதாள்.	0 8 0
தமிழ் சிக்ரேசா.	0 4 0

கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல் கும்பகோணம்

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

இரஸாயந முறை

அல்லது

காயகல்பம்

வைதிகர் கொள்கைகளில் விச்வாஸமும் சிரத்தையுமுள்ள விவேகிகளுக்கே இரஸாயநம் என்னும் இஹபர ஸாதகமான அஸாதாரண சிகித்ஸை குறிப்பிட்ட குணங்களைத் தருமென்று ருஷீச்வரர்கள் கசடறக் கூறியிருக்கிறார்கள்.

கற்றறிந்த ஆயுர்வேத சாஸ்திரஜ்ஞருக்கன்றி மற்றெவருக்கும் 'இரஸாயநமுறை' இன்னதென்றே இதுவரையில் விளங்காதிருந்தது. பண்டித மாளவியாஜியைப் போன்ற பெரியோர் இதை முறைப்படி செய்துகொள்ளத் துணிந்திலிருந்து, இச் சிகித்ஸாமுறையே அதற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டதுபோல் நாடெங்கும் மிகப் பிரஸித்தியடைந்து பிரபலமாகப் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

இப்பொழுது இந்த இரஸாயந முறைக்கு ஏற்பட்ட இப் பிரஸித்தியைக் கீழ்நாட்டு மேல்நாட்டு வைத்தியர்களில் பலர் தொழில் முறையில் திரவ்யம் தேடுங் கருவியாகவும், பொது ஜனங்களில் அநேகர் ஆயுளபிவ்ருத்திக்கும், ஆரோக்யப் பெருக்குக்கும், கிழத்தனத்தாலான சீர்கேட்டைக் குறைப்பதற்கும், உத்ஸாஹமான உயிர் வாழ்க்கைக்கும் உற்றதோர் உபாயமாக உபயோகித்துக் கொள்ளவும் ஊக்கமுள்ளவாயிருக்கின்றனர்.

அரிய ஆயுர்வேத சாஸ்திரத்தில் அவிச்வாஸம் பாராட்டிய அநேகம் பேர்வழிகள் கூட, அச் சாஸ்திரத்திலும் அருமருந்துகள் உண்டென்கிற உண்மையை உணர்ந்து அதைத் தமக்கும் உபயோகித்துக்கொள்ள முன்வருவதைக் கண்டு, மனிதருக்கு உயிர் [illegible] அதிருஷ்டமும் துரதிருஷ்டமும் அவ்வக் காலத்திற்கேற்ப மாறி மாறிச் சுழன்று நிகழ்வதுபோல், நம் நாட்டுப் பிரபல சாஸ்திர தத்துவங்களின் உண்மைகளுக்குங்கூட இவ்வாறு எளிய தசையும் உயர் தசையும் மாறி மாறித் தாழ்ந்தும் உயர்ந்தும் வருவதாகக் கூறவேண்டியிருக்கிறது.

காயகல்பம் என்கிற மாபெரும் சிகித்ஸை எத்தகையது? மாளவியாஜியைப் போன்றவர் அதற்கு உட்பட்டு அதை நிறைவேற்றிக் கொண்டதேன்? மஹாத்மாஜியைப் போன்றவர்க்கு அதை ஏன் செய்யக்கூடாது? என்கிற பல வேறுவகையான கேள்விகளை நானறிந்து பலர் கேட்டுவருகிறார்கள். இவ்வித வினாக்கள் அனைத்துக்கும் இவ் வியாஸமே விளக்கமான விடையாகும்.

முறைப்படி யுபயோகிப்பதால் குறிப்பிட்ட எந்த வியாதியையும் குணப்படுத்தி முற்றிலும் சுகந்தரக்கூடிய மருந்துகளை 'ஸித்தௌஷதங்கள்'' என்று கூறுவர். அவ்வித மருந்துகளுக்குத் தான் "கல்பௌஷதங்கள்" அல்லது "கல்பங்கள்" என்று பரிபாஷிகப் பெயர். ஆகையால் ஆதிகாலந்தொட்டு ஆயுர்வேத ஸம்ஹிதாக் கிரந்தங்களாகிய "சரக ஸம்ஹிதை", "ஸுச்ருத ஸம்ஹிதை", "காச்யப ஸம்ஹிதை" "அஷ்டாங்க ஹ்ருதயம்" முதலிய பிரபல வைத்தியக் கிரந்தங்களில் 'கல்ப ஸ்தாநம்' என்று தனியாக ஒரு பெரிய பாகம் அமைக்கப்பட்டு, அதில் குறிப்பிட்ட நோய்களை நிச்சயமாய் நிவ்ருத்திக்கும் "கல்பங்கள்" என்கிற ஸித்தௌஷத முறைகள் பல விஸ்தாரமாகத் தொகுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. கல்ப ஸ்தாநங்களில் விவரிக்கப்பட்டுள்ள ஔஷத முறைகள் யாவும் வமந-விரேசநாதி சிகித்ஸைகளுக்கும், பலவேறுவகையான பிணிகளைப் பரிஹரிப்பதற்கும் ஏற்ற ஸித்தௌஷதங்களாயிருக்கின்றனவேயன்றி, ஆரோக்கியத்தை அபிவ்ருத்தி செய்து ஆயுளை நீடிக்கச் செய்வதற்கென்றே ஏற்பட்ட இரஸாயனௌஷதங்களென்று சொல்லக்கூடியவையல்ல. முனிச்வரர்களும் யோகிகளும் முற் காலத்தில் விரும்பிய காயஸித்தி யென்கிற யோக ஸித்திக்கு உபயோகமான உபாயமாய் அமைந்தது "இரஸாயநம்" என்னும் முறையே ஆகிலும் இப்பொழுது, அதிலும் முக்கியமாய் மாளவியாஜீ இச்சிகித்ஸையைச் செய்துகொள்ளத்துவங்கியது முதல் இதற்குக் "காயகல்பம்" என்கிற பெயர் எங்கும் சரியாகவோ தவறுதலாகவோ பிரபலமாய் வழங்கப்பட்டு வருகிறது. முன் குறிப்பிட்ட விதமாய் எந்த குறிப்பிட்ட வியாதியையும் நிச்சயமாய் நிவ்ருத்திக்கும் இயல்புள்ள எச் சிகித்ஸையும் அல்லது எந்த மருந்தும் "கல்பம்" என்கிற பெயரால் வழங்கப்படுவது சாஸ்திர ப்ரஸித்தமான விஷயம். ஆயுளாரோக்யத்தையும், மனோதார்ட்யத்தையும் அளித்து, மானிடருக்கு மூப்பினாலான நரை திரை முதலியதைத் தடுத்துப்போடும் ஔஷதம் அல்லது சிகித்ஸை சாஸ்திரப்படி "இரஸாயநம்" என்கிற பெயரால் அழைக்கப்படும். இவ்வுண்மையைத்தான் அடியிற்குறிக்கப்படும் பிரமாணம் விளங்க நிரூபிக்கின்றது.

பண்டித மாளவியாஜீ செய்துகொண்ட சிகித்ஸா முறைக்கு "இரஸாயநம்" என்பது தான் சாஸ்த்ரீயப் பெயர். ஆயுர்வேத ஸம்ஹிதாக் கிரந்தங்களின் 'கல்ப ஸ்தாநங்களில்' விவரிக்கப்படுகிற மத கல்பம், ஜீமூத கல்பம், தாமார்கவ கல்பம் முதலிய ஸித்தௌஷதங்களுக்கும் தற்பொழுது எங்ஙனமோ காய கல்பம் என்று வழங்கப்படுகிற இரஸாயந முறைக்கும் எவரேனும் ஸம்பந்தமொன்றைக் கற்பித்தாலும் கற்பனை செய்யட்டும். அஃதெப்படியாயினும் முனிவர்களும் விரும்பி யேற்கக் கூடிய முக்கியப் பிரயோசனம் இதற்கு எவ்விதம் ஏற்படுகிறது? இம் முறைக்கு இரஸாயநமென்னும் பெயர் வந்ததன் காரணம் என்ன? இதை நிறைவேற்றும் வகை யாது? என்கிற விவரங்களை வைதிக லௌகிகர்களிற் பலர் அறிய ஆவலுள்ளவராயிருக்கிறார்கள். ஆகையினால் சாஸ்திரப் பிரமாணங்களை ஆதாரமாகக் கொண்டே இவ்வியாஸத்தில் விஷயங்களை விசதப்படுத்தவேணும்.

நாம் அருந்தும் ஆஹாரம் அனைத்தும் ஆமாசயம் என்கிற இரைப்பையிலும், ஆந்த்ரம் என்கிற குடலிலும் பக்குவமாய், பிறகு இரத்தத்திற் சேருவதற்கு முன்பு ஒருவகையான வெண்ணிறக் குழம்பு நிலைமையைப் பெறும். அவ்விதப் பாற்குழம்பை ஆயுர்வேதமறிந்தவர் ப்ரதம தாதுவென்றும், இரஸ தாதுவென்று விசேஷமாகவும் கூறுவர். இத் தாதுரூபமான இரஸம் என்றும் ஸத்து இரஸாயனிகள் என்கிற ஸ்ரோதோமுகங்களில் (ஆங்கிலத்தில் இவற்றை லாக்டியல்ஸ் என்கிறார்கள்) சேர்ந்து, இரத்தத்துடன் கலந்து, இரஞ்ஜகபித்தம் என்கிற உஷ்ண ஸஹிதமான நிறப்பொருள் முதலியவற்றின் சேர்க்கையால் இரத்த தாதுவாகப் பரிணமித்து அப்பால் கிரமமாக மற்ற மாம்ஸாதி தாதுக்களையும், பாஹ்யாப்யந்தர அவயவங்களையும் நிரந்தரமாகப் போஷித்து வருகிறது. போஷணை என்பது தேஹத்திற்கு "இலாபகரமான செய்கை" அதே ஸமயத்தில் மலம்-மூத்திரம் - வியர்வை - நிச்வாஸம் முதலிய வகையில் நிமிஷந்தோறும் வெளியாகும் கழிவானது சரீரத்திற்குச் 'செலவு' அல்லது 'நஷ்டந்தரும் செய்கை.' நாமுண்ணும் உணவானது பால்யம் முதல் கிழத்தனம் வரை முற்கூறிய வகையில் நம் தேஹத்தில் ஏற்படும் நஷ்டத்தை ஈடுசெய்து, ஒரு சிறந்த போஷணைக்கு மாத்திரம் உபயோகப்படுகிறது. நிரந்தரமாயுண்டாகும் மலநிரூபமான கழிவு என்னும் நஷ்டத்தை ஈடு செய்யவே நாம் உண்ணும் உணவு (இரஸ-ரத்தாதி தாதுபோஷண ரூபமான காரியத்தைச் செய்ய) உதவுகிறது. கிழத்தனம் கிட்டக் கிட்ட, அவ்விதம் கழிவு ரூபமான நஷ்டத்தைச் சரிப்படுத்த மாத்திரம் நாம் உபயோகிக்கும் உணவு ரூபமான போஷணை உடலுக்குப் போதாது. பாலியப் பருவத்திற்குப் பின்புகூட இரஸ-இரத்தாதி தாதுக்களின் சிதைவைச் சரிக்கட்டவும், மேன்மேலும் அவற்றிற்கு விசேஷ செழுமையை விருத்தி செய்யவும், ஓஜஸ் என்னும் உயிருக்கு இன்றியமையாத உத்தமதாதுவை அபிவ்ருத்திசெய்து உத்ஸாஹ-பலங்களை உயர் நிலைக்குக் கொண்டு வரவும் 'விசேஷ போஷணைக்கு வகை தேடினாலன்றி வயோதிகத் தன்மையில் உடல் வாடி, வலிமைகுன்றி, ஊக்கமிழந்து, உயிர் வாழும் காலமும் ஒடுங்கிக் குறுகிவிடும். அவ்விதம் இரஸாதி ஸகல தாதுக்களுக்கும் விசேஷ போஷணையையும், வன்மையையும், ஆயுளாரோக்கிய அபிவ்ருத்தியையும் அளிக்கும் உபாயமாகத் தான் 'இரஸாயநம்' என்கிற முறையை முற்காலத்திய முனிவர்கள் கண்டறிந்து வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது வயது ஏற ஏற தேஹ தாதுக்களில் சிதைவு என்னும் 'நஷ்டம் அதிகரிப்பதும்' அவற்றிற்கு அவசியமான போஷணை என்னும் 'இலாபம்' கிரமமாகக் 'குறைவதும்' இயல்பு. ஆகவே அவ்விதம் அதிகரித்துவரும் சிதைவு என்னும் நஷ்டத்திற்கு ஈடு செய்யும் ஸாமானிய போஷிப்போடு விசேஷ போஷிப்பான அதிக இலாபகரமான உபாயத்தைத் தேடினாலன்றி தேஹ பலமும், உத்ஸாஹமும், உயிர் வாழ்க்கையும் மனிதருக்கு நீடிக்கமாட்டாதென்கிற தத்துவத்தைக் கண்டறிந்து நமது முன்னோர் அதற்கு "இரஸாயநம்" என்கிற அரியதோர் பெயரைத் தந்தனர். இத் தத்துவத்தை ஒரு சிறு ஸூத்திர ரூபமான அரைச்லோகத்தினால் சரகர் लाभोपायो हि शस्तानां रसादीनां रसायनम् என்று விளக்கியிருக்கிறார்.

பிராணிகளின் ஜீவதாதுக்களுக்குச் சிதைவு இருவகையிற் காணும்; ஒன்று வயது செல்லச் செல்ல இயற்கையிலேற்படும் மூப்புச் சிதைவு; மற்றொன்று மனோ தேஹ வியாதிகளாலாகும் சிதைவு. ஆயுர்வேதத்திற்கூறிய அஷ்டாங்கங்கள் என்கிற எண் வகைச் சிகித்ஸைகளுள் ஏழுவிதமான சிகித்ஸா முறைகளும் நோய்களால் அல்லது செயற்கைக் கோளாறுகளால் உண்டாகும் சிதைவு என்னும் நஷ்டத்தை ஈடுபடுத்தும் உபாயங்களாம். கிழத்தனத்தாலாகும் சிதைவையும் நித்தியபடி ஏற்படும் நியதமான சிதைவையும் ஈடு செய்து தேஹ தாதுக்களுக்கு அதிக இலாபகமான போஷணையைத் தந்து, வியாதிகளையும் வயோதிகத் திமைகளையும் வரவிடாமல் வன்மையையும், ஆரோக்கியத்தையும் அபிவ்ருத்தி செய்யும் சிகித்ஸை அல்லது ஔஷதமே "இரஸாயநம்" என்று சாஸ்திரஜ்ஞரால் வழங்கப்படுகிறது. இதைத் தான் சார்ங்கதரர் என்பவர் रसायनं तु तत् ज्ञेयं यज्जराव्याधिनाशनम् முதலிய வாக்கியங்களால் விவரித்திருக்கிறார். இரஸம் முதல் சுக்ராந்தமான எழு தாதுக்களுடையவும் ஸத்வரூபமான "ஓஜஸ்" என்னும் தாது ஒன்றுண்டு. உயிர் வளர்ச்சிக்கும், உத்ஸாஹ விருத்திக்கும் ஊக்கங்குன்றாது உழைக்கும் சக்திக்கும் உற்றதோர் ஸாதநம் அதுவென்று ஆயுர்வேதஜ்ஞர் கூறுவர். (ஆங்கிலத்தில் அதைத்தான் அல்ப்யூமின் என்கிறார்கள் எனக் கருதப்படுகிறது). ஆரோக்கிய நிலைமையில்கூட அந்த எட்டாம் தாதுவுக்கு அபிவ்ருத்தியைத்தரும ஔஷதம் அல்லது சிகி-

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

இரஸாயந முறை.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

த்ஸை இரஸாயநமாகவும், வ்ருஷ்யமாகவும் (சுக்ரார்த்தவங்களை விருத்திசெய்து ஆண்மை முதலியதைச் செழுப்பிப்பது வ்ருஷ்யம்) உபயோகப்படுமென்பதாக स्वस्थस्योजस्करं यत्तु तद्वृष्यं तद्रसायनम् என்று அக்னி வேசாதி முனிவர்கள் கூறுகிறார்கள்.

தேஹதாதுக்களுக்கு இலாபகரமான போஷணையைத்தரும் வ்ருஷ்யம், இரஸாயநம் என்கிற இருவகை சிகித்ஸைகளுள் முந்தியது ஐஹிகஸுகத்தில் ஈடுபட்டு ஸந்தாந வ்ருத்தியை விரும்புபவருக்கு அவசியமானது. குதிரையைப்போல் உடலுக்கு விசேஷ உரந்தருவதால் அது "வாஜீகரணம்" என்றும் வழங்கப்படும். இரஸாயந முறையோ ஓஜோவ்ருத்தியை யுண்டுபண்ணி தேஹமனோ பலத்தையும் ஆயுளையும் அபிவ்ருத்தி செய்வதோடு, ஞானேந்த்ரிய-கர்மேந்த்ரியங்களை வலுப்படுத்தி, அவற்றை முறை தவறாகப் பிரவ்ருத்திக்காமலிருக்குமாறு கட்டிக் காக்கும் திறமையைத் தரக்கூடியதென்றும், யோகாப்யாஸாதி ஆத்மார்த்த காரியங்களுக்கும் இன்றியமையாச் சாதநமென்றும் ஆயுர்வேதப் பிரவர்த்தகர்களான ஆசாரியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

"முன்பு ச்யவநாதி மாமுனிவர்கள் வயது சென்றமையால் வலிவற்றுப் போயினர்; நீண்ட தவம்புரியக் கருதி நீடித்த ஆயுளை விரும்பி, மிகச் சிறப்பான இந்த இரஸாயந முறைகளைச் சேவித்து அளவற்ற ஆயுளைப் பெற்றனர்; அதன் பயனாக அறிவையும், தவத்தையும், பிரஹ்மசர்ய மேன்மையையும், அத்யாத்ம ஸாதநமான யோகசக்தியையும் அடைந்து, நீண்டாயுள்படைத்து ஐஹிக ச்ரேயஸ்ஸுக்களில் ஈடுபட்டுவிட்டு, தம நிஷ்டைப்படி விண்ணுலகு சேர்ந்தனர்." என்று இரண்டாவது இரஸாயநபாதாத்யாயத்தில் சரகர் மொழிந்திருக்கிறார்.

"இரஸாயந முறைகள் ஒழுங்காக உபயோகிக்கப்பட்டால் ஆயுள் அபிவ்ருத்தியடைவதோடு, உடலில் உள்ளும் புறமுமுள்ள தாதுக்களில் வியாதிகள் அணுகமாட்டா; கிழத்தனத்தாலாகும் நரை திரை முதலியவை கிட்ட நெருங்குவதில்லை; தேஹமும் மனமும் சுத்தியடைந்து நிர்மலமாகும்; இரஸாயநத்தினால் ஏற்படக்கூடிய இக் குணங்களெல்லாம் இம்மை மறுமைகளுக்கு அவசியமான ஆத்மார்த்த தத்துவங்களில் ஈடுபடும் நோக்கமுள்ளவருக்கே குறிப்பிட்ட பலனைக் கொடுக்கக்கூடியது" என்கிறார் முதல் இரஸாயநபாதத்தில் சரகர்.

ஆகவே உடலும் உள்ளமும் சுத்தமில்லாதவருக்கும், ஆத்மார்த்தங்களில் அவிச்வாஸமுள்ளவருக்கும் இரஸாயநத்தினாலான ஆனுகூல்யம் ஏற்படாதென்று ஆயுர்வேதம் விளங்கக் கூறுகிறது.

இருஷீச்வரர்கள் ஸேவித்த இரஸாயந முறைகளை ஒழுங்காக உபயோகிப்பது அவ்வளவு எளிதல்ல. அதில் அநேக வகைப் பிரயோகங்கள் இருந்தபோதிலும் சரகாதி முனிகள் மொழிந்துள்ள மிகவும் முக்கியமான இருவகை முறைகளை இங்கு விவரிப்பது உசிதமாகும்.

"இரஸாயநப்பிரயோக முறையை 'குடிப்ராவேசிகம்' என்றும், 'வாதாதபிகம்' என்றும், இருஷிகள் இருவகையாகப் பிரித்து வழங்குகிறார்கள்" என்று முன் ச்லோகம் மொழிகிறது. குடி என்றால் குடிசை அல்லது சிறு வீடு; அவ்வீட்டினுள் இருந்துகொண்டு செய்துகொள்ளும் ஒருவகை சிகித்ஸையை 'குடிப்ராவேசிகம்' எனக் கூறுவர். இது அனைவரும் எளிதிற் செய்துகொள்ளக்கூடிய சிகித்ஸையாக மாட்டாது. நல்ல வாயுவும் நல்ல வெளிச்சமும் உள்ள திறந்த வெளிகளில் இருந்துகொண்டு தாது போஷணைக்கான சில ஔஷதாஹாராதிகளை உபயோகித்தவாறு நிறைவேற்றப்படும் சிகித்ஸாக்ரமம் 'வாதாதபிகம்' எனப்படுகிறது. க்ஷயம் முதலிய ரோகங்களால் பீடிக்கப்படுபவர்களுக்கு இக்காலத்தில் வெகு சிலாக்யமானதென்று நிறைவேற்றிவரும் திறந்த வெளிகளிற் செய்யும் (ஓபன் ஏர் ட்ரீட்மெண்டு) சிகித்ஸா முறையானது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆயுர்வேதாசார்யர்களால் ஆரோக்கியமும் ஆயுளும் அபிவ்ருத்தியடையக் கருதி நிறைவேற்றப்பட்டதென்றும், நம் தேசத்துச் சாஸ்திரஜ்ஞருக்கு இம்முறை நூதனமல்லவென்றும் "வாதாதபிகம்" என்கிற இரஸாயநவிதி விளக்குகிறது. வாதாதபிக ரஸாயநம் அனைவருக்கும் ஏற்ற சிகித்ஸை; ஆனால் வீர்யத்தினாலும், குண விசேஷத்தினாலும் குடிப்ராவேச முறையே மற்றதினும் மிகச் சிறந்ததாகக் கருதி सुदुष्कर என்று மொழிந்து, ஆகிலும் அது மிகவும் கஷ்டஸாத்யமான முறையென்று ஸ்பஷ்டமாகக் கூறிவிட்டு, அப்பால் இஷ்டமுள்ள பேர் ஸாத்யமானால் அதைச் செய்துகொள்வது நலமென்றெண்ணி, குடிப்ராவேசிக முறையைச் சரகாதிகள் விவரித்திருக்கிறார்கள்.

குடிப்ராவேசிக முறைக்கு முக்கியமாக ஏற்ற இடத்தைத் தேடி, குடியென்கிற சிறு வீட்டை அமைப்பதுதான் முதற் காரியம். ஸாது ஜனங்களும், வஸிக்கும் இரமணீயமான இடமொன்றைத் தேடிக் கொள்ளவேண்டும். வியாதி முதலியவை பரவாமல் பிரசஸ்தமானதாய், சிகித்ஸைக்கு அவசியமான அகில பதார்த்தங்களும் கிடைக்கக் கூடியதாய், பரிசுத்தமாய் உள்ள பிரதேசத்தில் சாரீர-மானஸிக விகாரங்களுக்கு இடந்தாராத வகையில் உயரமான இடத்தில் சிறு வீடு ஒன்று அமைக்கவேண்டும். அது நகரத்திற்குச் சமீபத்திலும் அமைக்கப்படலாம். உள்ளுக்குள் உள்ளாக மூன்று பெரிய அறைகளுள்ளதாய், ஒவ்வோர் அறையும் சிறிய சாளரங்களடங்கியதாய், உன்னதமானதாய் அது கட்டப்படவேண்டும். கேட்க வழங்காத அல்லது வேதனை யுண்டுபண்ணுவதான எச் சப்தமும் அக்கம் பக்கங்களில் உண்டாகாத விதமான இடத்தில் அவ்வீடு அமைக்கப்படுவதோடு, அதன் உள்ளும் புறமும் உள்ளத்தைக் கவரக் கூடியதாய் அமைந்திருக்கப் பார்க்கவேண்டும். சிகித்ஸைக்குத் தேவையான ஔஷதங்களும், வைத்தியர்கள் கையாளும் ஸகல கருவிகளும், பத்தியாஹாரத்திற்கு அவசியமான பதார்த்தங்களும் சிறிதும் குறைவின்றி அங்கு ஸித்தமாயிருக்க வேண்டும். ஸ்திரீகள் அவ்விடத்தில் எக்காரணத்திலும் பிரவேசிக்கலாகாது. கற்றறிந்த வைத்தியர்களும், உபசரிப்பதிற் கைதேர்ந்த பரிசாரகர்களும் எந்த நிமிஷத்திலும் அவசியமானவற்றைச் செய்ய அங்கு ஆயத்தமாகயிருந்து வர வேண்டும். இவ்வித குடி என்னும் சிறு வீட்டைக் கட்டிக்கொள்ள முடியாதவர் முற்கூறிய முறையில் பெரும்பான்மையான ஸௌகரியங்களுக்கும் வஸதியான வேறு கிருஹம் (குடி) கிடைத்தால், அதிலும் இந்த இரஸாயந சிகித்ஸையைச் செய்து கொள்ளலாம். சுபதினத்தில், சிறந்த முகூர்த்தத்தில் அதிற் பிரவேசித்துச் சிகித்ஸைக்கு ஆரம்பிக்கவேண்டும். இம் முறையில் முழு நம்பிக்கையும், மனோதைர்யமும், வேறு காரியங்களிற் கவலையின்மையும், கோபதாபாதிகள் நீங்கி குளிர்ந்துள்ள மனோநிலைமையும் பெற்றிருந்தாலன்றி இந்த இரஸாயநப் பிரயோகத்தினால் பிரயோஜன மேற்படாது. அக்குடியிற் பிரவேசித்ததும் சௌள ஸ்நானாதிகளால் வெளி தேஹத்தையும், வமந - விரேசந - வஸ்திப்பிரயோகாதி சோதந சிகித்ஸைகளால் உடலின் உட்புறத்தையும் (குடல் முதலியவற்றை) முற்றிலும் சுத்தம் செய்துகொண்டு, வைத்தியரிடமும் கடவுளிடமும் விசேஷ பக்தி சிரத்தையோடு இரஸாயந சிகித்ஸையைச் செய்துகொள்ள ஆரம்பிக்கவேண்டும்." இக் கடினமான சிகித்ஸையைத் தாங்கி மிகப்பொறுமையுடன் நிறைவேற்றிக்கொள்ளும் திறமையுள்ளவருக்கே இதைச் செய்வது முறை. நோயற்ற தேஹமும், விவேகமும், ஆத்மார்த்தமான ஆமுஷ்மிக விஷயங்களில் விச்வாஸமும் சிரத்தையும் உள்ளவனாயிருக்கவேண்டும் அம்மனிதன்; வேறு எக்காரியத்திற்கு முயற்சியோ கவலையோ அவனுக்கு இருத்தலாகாது; இவற்றோடு பரிவுள்ள பணியாளரும், உபயோகிப்பதற்கு அவச்யமான உபகரணங்களும், செலவுக்குப் போதிய திரவ்யமும் ஸித்தமாயிருக்க வேண்டும். இவ்வித மனிதனே குடிப்ராவேச சிகித்ஸை யென்னும் இரஸாயந முறைக்கு அதிகாரியாவான்" என்று சரகவாக்கியம் கூறுகிறது. (வே. நீ)

செங்கற்பட்டு.

18-10-38 முதல் 24-10-38 வரை திருக்கழுக்குன்றத்தில் சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்களால், "ஸ்ரீமத் பாகவதஸப்தாஹம்" நடைபெற்றது. அவ்வூரில் மோசூரிலிருந்து வந்திருக்கும் ஆஸ்திகர்களான பெரியவர் ஒருவர் முயற்சியாலும் இதர ஆஸ்திகர்களுடைய முயற்சியினாலும் வெகுநன்றாய் நடைபெற்றது. பிரம்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுடைய உபன்யாஸம், தர்ம ஸூக்ஷ்மத்தோடு கூடினதாயும், பக்திபாவசமானதாயும் இருந்ததைக் கேட்டு ஜனங்கள் ஆனந்தத்தை அடைந்தார்கள். செங்கல்பட்டிலிருந்து, ரிடையர்டுபோஸ்ட்மாஸ்டரும், ஸ்ரீவித்யோபாஸகர்களுமான பிரம்மஸ்ரீ விச்வநாதய்யாவர்கள் பிரம்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுடைய ஸம்பந்திகளும் ரிடையர்டு, ஜில்லாபோர்டு இஞ்ஜினீருமான பிரம்மஸ்ரீ M. துரைஸாமிஅய்யர் முதலிய ஆஸ்திகர்களும் வந்து சிரவணம் செய்தது குறிப்பிடத்தக்கது.

26-10-38 முதல் செங்கற்பட்டு ஸ்ரீகோதண்டராமர் ஸன்னிதியில், பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராமதீக்ஷிதர் அவர்களால் 'ஸ்ரீமத்ராமாயண நவாஹம்" நடைபெற்று வருகிறது. இடையில் வேதாந்தம், தர்மஸூக்ஷ்மங்கள், ஸதாசாரங்கள் முதலியவைகள், பாமரர்களுக்கும் மனம் உருகும்படி உபன்யஸித்து வருகிறார்கள். இதற்கு இவ்வூர் ஸப் ஜட்ஜ் மகா-ா-ா-ஸ்ரீ R. S. சுப்பிரமணிய அய்யர், டிஸ்ட்டிக்ட் முன்சீப் மகா-ா-ா-ஸ்ரீ B. C. பஞ்சநதஅய்யாவர்கள் டிஸ்ட்ரிக்ட் மெடிகல், ஆபீசர் மகா-ா-ா-ஸ்ரீ K. நாராயணஸாமி அய்யர் முதலியவர்களும் இன்னும் பிரபல வக்கீல்களும் உத்தியோகஸ்தர்களும் வந்து சிரவணம் செய்கிறார்கள். இதில் மகா-ா-ா-ஸ்ரீ டிரயினிங் ஸ்கூல் வாத்தியார் வெங்கடசுப்ராமணிய அய்யர். மகா-ா-ா-ஸ்ரீ V. அகோரம் அய்யர் முதலியவர்கள் முயற்சியே விசேஷமானது.

P. N. நாராயணசாஸ்திரி.

ஸ்ரீ லலிதாத்ரிசதீ.
நாகரலிபியில் மூலமும்.
நாமாவளியும்
விலை 0—3—0
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு
விலை அணா 0—2—0.

The Sri Janardana Printing
Works, Limited, KUMBAKONAM.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்

பகுதான்ய-௵ ஐப்பசி-௴ 18உ

எம். ஸி. ராஜாவின் ஏமாற்றம்.

சென்னை சட்டஸபையில் எம். ஸி. ராஜாவின் ஆலயப்ரவேச மசோதாவை முதன் மந்திரி எதிர்த்துத்தோற்கடித்ததை ஸஹியாமல் ஸ்ரீமான் ராஜா கிளர்ச்சி செய்ய ஆரம்பித்திருக்கிறார். இதற்கு அவர் ராஜீயத்தில் அடைந்த ஏமாற்றமும், தோல்வியும் ஒரு காரணமாயிருக்கலாம். தமது மசோதாவை கனம் பிரதம மந்திரி வேண்டுமென்றே சதி செய்து கொன்றுவிட்டதாயும் இந்த அநீதியை காந்திஜி கவனிக்கவேணுமென்றும் அவருக்கு எழுதினார். அதற்கு காந்திஜி பதில் கொடுத்தார். இந்தக்கடிதபோக்குவரத்து, பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. இதைப்படிக்கும் எந்த தார்மிகனின் உள்ளமும் பதைக்காமலிருக்காது.

ஸொத்து ஒருவனுடையது இரண்டு வழிப்போக்கர்கள் சேர்ந்து அதை அபஹரிக்க விரும்புகிறார்கள். ஒருவர் உடனேயே ஒரே தடவையில் அதைக்கைப்பற்றி விடவேண்டுமென்கிறார். மற்றொருவரோ, அவஸரப்படக் கூடாதென்றும், கொஞ்சம் கொஞ்சமாகப் போகவேண்டுமென்றும், கடைசியில் எல்லாவற்றையும் கைப்பற்றி விடுவதே தமது உத்தேசமென்றும், இச்செய்கைக்கு ஸாமர்த்தியமாக ஜன ஆதரவையும் பெற்று விட வேண்டுமென்றும் சொல்லுகிறார். இருவருக்கும் சச்சரவு- ஒரு பெரியவர் இதற்கு மத்யஸ்தர். இவர்களில் ஒருவராவது அந்த ஸொத்தின் ஸொந்தக்காரனைப் பற்றி கவலைப்படவில்லை. அவனை லக்ஷ்யமே செய்யவில்லை. அவனுடைய கக்ஷியென்ன வென்பதையும் காது கொடுத்துக் கேட்கத் தயாராக இல்லை. அவன் எது சொன்னாலும், எது செய்தாலும் அதை மதியாமல் ஸொத்தைப் பொதுவுடைமையாக்கிவிட நிச்சயித்திருக்கிறார்கள். இது தான் எம். ஸி. ராஜாவுக்கும் ராஜாஜிக்கும் நடக்கும் விவாதமாகும். ஒரே மூச்சில் தென்னியக் கோவில் களனைத்தையும் ஆக்ரமிக்க வேணுமென்று ராஜா விரும்புகிறார். ராஜாஜியோ ஜனபலம் சேர்த்துக் கொண்டு மிருதுவாக ஆக்ரமிக்கலாமென்கிறார்.

தமது மசோதா தள்ளப்பட்டதைப் பற்றி காந்திஜியிடம் ஸ்ரீமான் ராஜா புகார்கூறியிருப்பதில் புனா ஒப்பந்தப்படி காந்திஜியும், காங்கிரஸும் நடக்கத்தவறி விட்டதாயும் புனா ஒப்பந்த காலத்தில் ஆலயப்ரவேசம்செய்து வைப்பதென்ற உறுதி மொழி கொடுக்கப்பட்டதாலேயே தாமும் மற்ற தீண்டாதாரும் கலப்புத் தொகுதி முறைக்கு ஸம்மதித்ததாகவும், இப்போது ராஜாஜி, ஏமாற்றி விட்டபடியால் இனி தனித் தொகுதி முறையே தாழ்ந்த ஜாதியாருக்கு அவசியமெனத்தாம் முடிவுக்கு வந்திருப்பதாயும் ஸ்ரீமான் ராஜா வருத்தப்படுகிறார். இந்தக்கடிதம் மூலமாக அவர் காங்கிரஸையும், காந்திஜியையும், ராஜகோபாலாசாரியரையும் திட்டமாக எதிர்க்க முன் வந்திருப்பது வ்யக்தமாயிருக்கிறது தீண்டாதார்களுக்கு இவர்கள் நன்மை செய்யாததுடன் அநீதி செய்துவிட்டதாக உலக மறிய அதைஅவர்பிரசாரப்படுத்தியிருக்கிறார். இந்தநிலைமையை ஸிருஷ்டித்துக்கொடுத்தது காந்திஜியும், ராஜாஜியும் ஆவார்கள். சில வருஷங்களுக்கு முன் ஆலயப்பிரவேச ஆவேசம் கொண்ட ஸ்ரீமான் ஸி. ஆர். அளவு கடந்து எம் ஸி ராஜாவுடன் உறவு கொண்டாடினர். தீண்டாத ஜாதியாருக்கு அதிதமான நம்பிக்கையுண்டாகும் படிப்பேசி அவர்களை வசப்படுத்த முயன்றார். தாமே ஒரு மசோதாவைத்தயாரித்துக்கொடுத்து அதை நிறைவேற்றி வைக்கவும் படாதபாடு பட்டார். இவ்வளவு செய்து தீண்டாதார் ஸமூஹத்தைத்தூண்டி விட்ட குற்றம் ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியரைச்சேர்ந்ததே. இப்போது அவரால் தூண்டப்பட்டவர்கள், உறுதி மொழிப்படி நடக்கவேண்டுமென்று வற்புறுத்துவதில் பிசகென்ன? முன்பு நண்பர்களாயிருந்தவர்களே இப்போது காங்கிரஸ் மந்திரிகளை எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள் பம்பாயில் ஸ்ரீமான் ராஜபோஜும் இதே வழியில் இறங்கி விட்டார். தீண்டாதாருக்கு நன்மை செய்வதாக வாக்களித்தபடி காங்கிரஸ் நடக்கவில்லையென்றும், அது ஏமாற்றி விட்டதாயும் அவர்காங்கிரஸ் மீது பாணம் போட்டிருக்கிறார். சாந்தமாக இருந்த ஸமூஹத்தைத் தப்புவழியில் தூண்டியதன் விபரீத பலனையே இப்போது காங்கிரஸ் தலைவர்கள் அநுபவிக்க நேர்ந்திருக்கிறது.

தங்கள் ஜாதியினரைக் கோவிலில் விடாத வரையில் தாங்கள் ஹிந்துக்களென்று அங்கீகரிக்கப்பட்டதாக ஆகாதென்றும், இந்த நிலைமையில் தனித்தொகுதியையே தாம் விரும்புவதாயும் ராஜா கூறுகிறார். புனா ஒப்பந்த காலத்தில் காந்திஜியின் உயிரைக்காக்க வேண்டி ஹிந்துத் தலைவர்கள் ஒப்பந்தம் செய்துகொண்டார்களெனினும், அங்கு கூடியிருந்தவர்கள் ஹிந்துமதஸ்தர்களின் உண்மையான பிரதிநிதிகளல்ல. மாளவியாஜி,டாக்டர் டாகூர்முதலியவர்களோ புனா ஒப்பந்தஉள்நோக்கத்தைப் பிறகு வெளியிட்டுள்ளார்கள். ஆலயப்பிரவேசம் செய்து கொடுப்பதாக ஒப்பந்தத்தில் காணப்படவில்லையென்றும் அதற்குத் தாம் கட்டுப்படவில்லையென்றும் மாளவியாஜியே பிறகு வெளியிட்டிருக்கிறார். இப்படியிருக்க புனா ஒப்பந்தப்படி ஆலயப்பிரவேச உரிமை வாக்களிக்கப்பட்டிருப்பதாக ராஜா கூறிக் குற்றம் சாட்டுவது விநோதமானது. தீண்டாதார் தனித்தொகுதியால் பிரிந்துபோவதைப்பற்றி காங்கிரஸ்காரர்கள் கூட இப்போது வருத்தப்படமாட்டார்கள். கனம் பிரதமமந்திரியானவர், ஸநாதநிகளின் அபிப்ராயத்திற்கு இணங்கிவிட்டதாக ஸ்ரீமான் ராஜா கூறுகிறார். இது அர்த்தமற்ற, உண்மையற்றவாதமே.

ஆனால் கனம் மந்திரி ஆலயப்பிரவேச விஷயத்தில் எந்த நிலைமை ஏற்படவேண்டுமென்று உள்ளூரவிரும்பினரோ, அது இப்போது ஏற்பட்டுவிட்டதாக நினைக்கலாம். ஆலயப்பிரவேசம் செய்துவைக்காவிட்டால் தேசத்தில் பெரிய அமளியேற்படுமென்றும் அதை அடக்கமுடியாதென்றும்,தீண்டாதார் விழித்துக்கொண்டுவிட்டார்களென்றும், ஆகவே ஸநாதநிகள் விட்டுக்கொடுக்கவேண்டுமென்றும் மந்திரிகள் இனி பயமுறுத்தி ஸுலபமாகச் சட்டம் செய்துவிடலாம். ஸநாதநிகள் வாய்திறவார். இந்த தந்திரமான உத்தேசத்துடனேயே, தீண்டாதாரைத் தூண்டிவிடும் நோக்கத்துடன் எம். ஸி. ராஜா மசோதா நிராகரிக்கப்பட்டிருக்கவேண்டுமே யல்லது உண்மையில் ஸநாதநிகளை திருப்திசெய்ய அல்ல. இந்த ஏற்பாட்டங்களால் ஸநாதநிகள் திருப்தியடைந்து ஏமாறுகிறவர்களல்ல. பிரதம மந்திரியை சிலாகிக்கக்கூடியவர்களுமல்ல. ஆதலால் கனம் பிரதம மந்திரி ஸநாதநிவசமாகிவிட்டதாக எம். ஸி. ராஜா கூறுவதில் அர்த்தமேயில்லை.

குறிப்புகள்.

வகுப்பு நிந்தையைத் தடுக்க வேண்டும்.

நாகரீகம் முற்றி வருகிறது. மனித ஸமூஹம் பரஸ்பர அன்பு காட்டி ஒற்றுமை உணர்ச்சியுடன் வாழ வேண்டுமென்று வாய் வேதாந்தம் மலிந்து கிடக்கிறது. கார்யத்தில் இது எப்படி? இதை கவனித்தால் இந்தியாவில் தற்போது தோன்றியிருப்பது போல் வகுப்புத்வேஷமும், வகுப்பு நிந்தையும் எக்காலத்திலும் இல்லையென்று சொல்லலாம். ஜனநாயகம் தோன்றியிருப்பதால் ஒவ்வொருவரும் தம் தமக்குத் தோன்றியபடி பேசுவதே சுயேச்சை யென்று கருதப்படுகிறது போலும்! தீர்க்காலோசனையற்ற தலைவர்கள் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையென்ற இருட்டு வழியில் இறங்கி இவ்விரு ஸமூஹத்திற்கும் சச்சரவை விருத்தியாக்கி விட்டார்கள். இதனால் தற்போது இந்த வகுப்புத்வேஷமும் வகுப்பு நிந்தையும் எங்கும் அதிகரித்து விட்டது. பெரிய பெரிய தலைவர்களாக விளங்குகிறவர்கள் கூட இந்தவழியில் இறங்கி விட்டதை நாம் தினமும் பார்த்து வருகிறோம்.

தென்னிந்தியாவை, முக்யமாகத் தமிழ்த் தேசத்தைப்பற்றிய வரையில் ஹிந்து முஸ்லீம் பிணக்கு அதிகமில்லையாயினும் அதற்கும் பெரிதான வேறு ஒரு வகுப்புத்வேஷப் பேய் இங்கு தலைவிரித்தாடுகிறது. இந்தப் பேய் தோன்றி சுமார் 20 வருஷங்கள் ஆகிவிட்டன. இது முக்யமாக இத்தேசத்தில், கல்வி, நாகரிகம், முதலிய பல வழியிலும் முன்னேற்றமடைந்துள்ள பிராம்மண வகுப்பை எதிர்த்துத் தோன்றியுள்ளது.

சென்ற சிலவருஷங்களாகஇந்தவகுப்பின் நாகரிகம், ஸன்மார்க்கம் முதலியவைகளைப்பற்றி பஹிரங்கமாக பிரஸங்கங்களிலும் பத்திரிகைகளிலும் செய்யப்பட்ட நிந்தைகளுக்கு அளவே கிடையாது. பிராம்மணஸ்திரீகள் அவமதிக்கப்பட்டனர். ராம கிருஷ்ணாதி தெய்வங்களைப்பற்றி தூஷித்து எழுதப்பட்ட கட்டுரைகளுக்கு கணக்கில்லை. வேதம்,ராமாயண பாரதம் போன்ற புனித நூல்களைத்தூற்றியும் பரிஹஸித்தும் வெளிவந்த ஆபாஸங்களுக்கு அளவில்லை. அப்போது அதிகாரத்திலிருந்த கக்ஷியார் இந்த வகுப்பு நிந்தைகளை அடக்கத்தவறி விட்டார்கள். ஆதலால் அதிகார பின் பலத்தைக்கொண்டு பிராம்மண நிந்தை அப்போது அதிகரித்தது. வகுப்பு நிந்தையைத்தடுக்க ஏற்பட்ட சட்டங்கள் இறந்துகிடந்தன.

ஆயினும் சிலகாலம் மறைந்திருந்த பிராம்மணத்வேஷமும் நிந்தையும் தற்போது தென்னிந்தியாவில் மீண்டும் எங்கும் தலைகாட்டி நிற்கிறது. ராஜீயத்தில் தோற்றுப்போன கக்ஷியார் தங்கள் த்வேஷத்தை இப்போது பிராம்மணர் மீது காட்டி வருகிறார்கள். ஹிந்தி எதிர்ப்புக்கிளர்ச்சியென்ற வியாஜம் ஒன்று கிடைத்தது. இப்போது புதிய அபாயமென்னவென்றால் பிராம்மணத்வேஷக்கக்ஷியார் முஸ்லீம் பாமரர்களை ஏமாற்றிச்சேர்த்துக்கொண்டு பிராம்மணர் மீது ஏவி விடுகிறார்கள். இதனால் வகுப்பு நிந்தை மிகக்கேவலமாக எங்கும் பரவி விட்டது. எந்த மீட்டிங்குகளிலும் பிராம்மணர்கள் திட்டப்படுகிறார்கள். பயமுறுத்தப்படுகிறார்கள். அவர்களுடைய நாகரிகம் தூஷிக்கப்படுகிறது. இதனால் முன்னை விட அந்த ஸமூஹத்தின் கவலை அதிகரிக்க நேர்ந்திருக்கிறது. ஹிந்தி எதிர்ப்புக்கக்ஷியில் தலைவர்களாக விளங்கிவரும் படித்த பிரபலஸ்தர்கள் கூட இந்தமட்டமான வழியில் இறங்கி வழி காட்டுவது வருந்தத்தக்கது.

ஆகையால் இம்மாகாண கவர்னர் இவ்விஷயத்தை கவனித்து, சட்டமூலமாக இந்த வகுப்பு நிந்தையைத்தடுக்கத்தக்க நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளுக்கு உத்திரவு செய்யவேண்டிய அவசர மேற்பட்டிருக்கிறது.

மன மாற்றம்!

டாக்டர் வரதராஜுலு நாயுடுவை தமிழ் தேசத்தார் அதற்குள் மறந்திருக்கமாட்டார்கள். ராஜீய உலகில் அவர் தற்போது ஒளி மங்கி மறைந்து விட்டாலும் சில ஸந்தர்ப்பங்களிலாவது அவரது ஞாபகம் பொது ஜனங்களுக்கு வந்து கொண்டிருக்கிறது.

இரண்டு தினங்களுக்கு முன் சென்னை ரேடியோவில் அவர் ஓர் பிரஸங்கம் செய்தார். இது பத்திரிகைகளில் பிரபலமாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அந்த பிரஸங்கத்தைப்படித்து நாமும் வியப்புற்றோம். ஒரு மனிதன் தமது ஆயுள் காலத்திற்குள் அடையும் பற்பல மன மாறுபாடுகளைப்பற்றி உலகில் அறியாதவரில்லை. இவருடைய பிரஸங்கத்தைப்படித்ததும் "இவர் தான் பழைய நாயுடுகாருவா,, என்ற ஸந்தேஹம் யாவருக்கும் உதிக்கக்கூடியது. அவர் நடத்திய பத்திரிகைகளையும், பிரஸங்கங்களையும் அவருடைய அக்கால மனப்போக்கையும் நன்கு படித்து அறிந்த நாமும் அப்படியே நினைக்க நேரிட்டது. அக்காலத்தில் மிக்க நாஸ்திகர் போலும், தீவிர வகுப்பு வாதி போலும் தோன்றிய நாயுடுகாரு நேற்றைய பிரஸங்கத்தில் அதற்கு அடியோடு மாறுபட்டவராகக்காணப்படுகிறார். ரிஷிகளின் ஆத்மசக்தி பாஷை, நாகரீகம் காவ்யம் மதம் போன்றவைகளைப்பற்றி வற்புறுத்தி அவர் ஆதரித்துப்பேசுகிறார்.

வடமொழியைப்பற்றி அவர் மெச்சிப் பேசுகிறார். ஆர்யர்களால் தென்னிந்தியாவில் வடமொழி பரப்பப்பட்ட பிறகுதான் தமிழ் பாஷைக்கு ஆர்ய பாஷையின் கூட்டுறவால் விசேஷ வளர்ச்சியேற்பட்டு தமிழ் முன்னேற்றமடைந்ததாகக் கூறுகிறார். வடமொழியும் ஆர்யர்களும் தமிழ் பாஷைக்கும், தமிழருக்கும் விரோதிகளென்று கணக்கற்ற வியாஸங்களில் எழுதிவந்த இவர் இப்போது ஆர்யர்களையும் அவர்களது பாஷையும் தமிழ் தேசத்தின் அபிவிருத்திக்கு உபகாரம் செய்ததாகக் கூறுவது எவ்வளவு பெரிய மாறுதல்! நாயுடுகாரு இப்போது சாந்தமனதுடன் உண்மையை அறிந்துகொண்டதற்கு நாம் ஸந்தோஷிக்கிறோம்.

பத்திரிகைத் தொழிலையும் பக்ஷபாதமின்றி நடக்கவேண்டியதைப் பற்றியும், அவர் வெளியிட்டுள்ள அபிப்ராயமும் அவரது முன்னிலைக்கு மாறுபட்டிருப்பது மெச்சக் கூடியதே. பத்திரிகைகளில் நீக்குப்போக்கின்றி தனி மனிதர்களைத் தாக்கி எழுதுவது தகாதென்கிறார். மேலும் தற்போது சில பத்திரிகைகள் கட்டுக்கடங்காமலும் வரம்பு மீறியும் ஒரு வகுப்பை அல்லது ஒருமனிதனைத்தூற்றுவது அதிகமாகிவருவதாயும் இந்த க்ரோத புத்தி ஒழியவேண்டுமென்றும் விரும்புகிறார்.

டாக்டர் நாயுடு தற்போது அதிக வேலைத் தொந்திரவு இல்லாமல் தமது பழைய கொள்கையை நினைத்து அதை மாற்றிக்கொள்ள முற்பட்டிருக்கிறார். தமது பத்திரிகையாகிய தமிழ்நாடு வாரப்பத்திரிகைகளிலும், தினசரியிலும் தாம் செய்துவந்த வகுப்புநிந்தை, தெய்வ, பரலோகப்பரிஹாஸம், ஆர்ய ஜாதி, மத, நாகரிகதூஷணம் போன்றவை நிறம்பிய வியாஸங்களை இப்போது அவர் படித்து அதனால் மனவேதனையடைந்து பழையதவறுகளைத்திருத்திக்கொள்ள முற்பட்டிருப்பதாகவே இந்த பிரஸங்கம் நிரூபணம் செய்கிறது "கடைசி வயதில் ஸாதுவ்ருத்தி: ,,என்ற பழமொழிக்கு இது ஒத்திருக்கிறது.

சுதேச ஸம்ஸ்தானங்களில் விஷமக்கிளர்ச்சி!

இந்தியாவில் எக்காலத்திலும் காணப்படாத நிலைமை இப்போது சுதேச ஸம்ஸ்தானங்கள் பல வற்றிலும் பரவி வருவதை தினந்தோறும் பத்திரிகைகளில் பார்க்கிறோம். திருவாங்கூர், ஹைதராபாத், மைசூர் தெங்கனல், ராஜ்கோட், காச்மீரம், போன்ற அநேக ஸம்ஸ்தானங்களில் பொறுப்பாக்ஷி கிளர்ச்சி என்ற வியாஜத்தில் மிகுந்த அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது. அந்த ஸம்ஸ்தானங்களில் பிரஜைகளுக்கும், ஸர்க்காருக்கும் தகராறு முற்றிப்பெரிய கலஹங்களும், துப்பாக்கி பிரயோகமும் மரணங்களும் ஏற்பட்டு வருகின்றன. இது காறும் பூர்ண ஸமாதானத்துடன் அமைதியாக ஆக்ஷி நடந்து வந்த ஸம்ஸ்தானங்களில் இப்போது இவ்விபரீத கிளர்ச்சிகள் தோன்றியிருப்பதற்கு காரணமென்ன? ஜனங்களுக்குப் பொறுப்பாக்ஷி தாகம் அதிகரித்து விட்டதாக ராஜீய வாதிகள் பேசலாமாயினும் உண்மையில் அது மட்டும் காரணமாகாது, சுதேசி அரசர்களுடைய ஆட்சியில் அந்த தேச ஜனங்கள் இன்று வரையில் மிகுந்த நம்பிக்கையும், பிரீதியும், வைத்து அத்துடனேயே திருப்தியடைந்துவந்திருக்கிறார்கள். இப்படி சாந்தமாக வாழ்ந்துவந்தவர்களை ராஜீய வாதிகள் தூண்டிவிட்டதே இப்போதைய நிலைக்குக்காரணமாகும். ஜனங்களைத்தப்பு வழியில் தூண்டிவிட்ட தலைவர்கள், தங்கள் குற்றத்தை மறைத்துக்கொண்டு "ஜனங்கள் விழித்துக் கொண்டு விட்டார்கள்,, என்று ஸமாதானம் சொல்லி விடுவது வழக்கம்.

தற்போது ஸுதேச ஸமஸ்தானக்கிளர்ச்சிக்கு ஸமஷ்டியின் பேச்சு வெகு தூரம் காரணமாம். அதிலும். ஸமஷ்டியை எதிர்க்கக் கங்கணம் கட்டியுள்ள காங்கிரஸ் வாதிகள் தற்போது ஸுதேச ஸமஸ்தானங்களை கலக்கி விட யோஜனை செய்திருக்கிறார்கள். ஸமஷ்டி சட்டசபையில் சுதேச ஸம்ஸ்தானபிரதிநிதிகள் அந்த அரசரால் நியமிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். காங்கிரஸ்காரர்களுக்கு இது பிடிக்கவில்லை. பொதுஜன எலெக்க்ஷன் மூலமே இந்தப் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்பது காங்கிரஸின் வாதம். மேலும் சுதேச அரசர்களின் அதிகாரங்களை சிறுகச்சிறுகப் பறித்து விடவேண்டுமென்பதும் காங்கிரஸின் தீவிரக்கொள்கை. இவைகளை நிறைவேற்றும் நோக்கத்துடனேயே இந்த ஸமஷ்டிப்பேச்சு ஸந்தர்பத்தில் காங்கிரஸ்காரர்கள் சுதேச சமஸ்தான பிரஜைகளைக்கிளப்பி விட்டிருக்கிறார்கள். ஸுதேச ஸமஸ்தான விஷயத்தில் காந்திஜி சிறிது ஜாக்ரதை காட்டுவதாக நினைக்கப்பட்டாலும் தீவிரதிகளான, நேரு போஸ் போன்றவர் ஸம்ஸ்தானங்களையே தொலைத்துவிட விரும்புகிறவர்கள். அவர்களுடைய விருப்பப்படியே இப்போதைய கிளர்ச்சி தோன்றியிருப்பதாகத நினைக்க ஆதாரமில்லா போகவில்லை.

எதையும் கிளப்பிவிடுவது ஸுலபம். பிறகு அதை அடக்குவது சிரமமாகி விடுகிறது. மேலும், கிளப்பிவிட்டவர்கள் மீதே அந்தக் கிளர்ச்சி பாய்வதையும் அனுபவத்தில் பார்க்கிறோம்.

திருவாங்கூரில் அரசர் நல்ல ஸம்ஞை செய்தார். ஆயினும் தீவ்ரவாதிகள் இன்னும் இணக்கம் காட்டவில்லை. காந்திஜியின் உபதேசங்களைக் கூட அந்தக்கிளர்ச்சிக்காரர்கள் சட்டை செய்யவில்லை. பலாத்காரம் கூடாதென காந்திஜி சொன்னார். இதை அங்கு கேட்பாரில்லை. திவான் மீது கூறிய அவதூறை வாபீஸ் பெறும் படி அவர் வற்புறுத்தினார். இதற்கும் அவர்கள் உட்படவில்லை. பொறுப்பாக்ஷி கொடாவிடில் மீண்டும் கலஹமென்கிறார்கள். இதிலிருந்து, கிளப்பி விட்டவிஷமத்தை அடக்குவது சிரமமென்பது தெளிவாகவில்லையா? இந்தக்கிளர்ச்சியைத் திரை மறைவிலிருந்து தூண்டி விடுகிறவர்கள் நெருப்பு விளையாட்டுச்செய்வதை உணரவில்லை. ஸம்ஸ்தான பிரஜைகளின், ஸொத்துகளுக்கும், உயிருக்கும் பெருத்த தீங்கு விளைவிக்கக்கூடிய இத்தகைய கிளர்ச்சிகளை எந்த வழியிலும் அடக்க வேண்டியது அவச்யமாகும். அதே ஸமயத்தில் பிரஜைகளின் நியாயமான கோரிக்கைகளையும் கவனிப்பதும் விவேகமாகும்.

ஜகத்குரு, ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள்.

நெல்லூர் விஜயம்.

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடா[illegible] கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீசங்காரச்சார்ய ஸ்வாமிகள் 30உ யன்று நெல்லூருக்கு விஜயம் செய்தார்கள். நகரத்திலுள்ள பிரபலஸ்தர்களும், ஏராளமான பொதுஜனங்களும் ஸ்ரீஸ்வாமிகளைத் தக்கபடி வரவேற்று உபசரித்தனர். நகரத்தின் பிரதானத் தெருக்கள் வழியாக ஸ்ரீஸ்வாமிகள் சகல பிருதுகளுடன் கணற்ற ஜனங்கள் ஸேவித்தவண்ணம் ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்டார்கள் ஸ்ரீஸ்வாமிகளுக்காக ஏற்பட்ட ஆச்ரமத்தில் ஸ்வாமிகள் வந்திறங்கியதும் அநேக கனவான்களும் பொது ஜனங்களும் ஸ்ரீஸ்வாமிகளைத் தர்சனம்செய்துதிரும்பினர். ஸ்ரீஸ்வாமிகள் நெல்லூரில் சில நாட்கள் தங்கியிருப்பார்கள்.

24-10-38-௵ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி125 பவுண்டு உள்ள மூட்டை	4—0—0
ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை	3—2—0
அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 190பவுண்டு உள்ள மூட்டை	9—0—0
ஷை இரண்டாம்தரம் நெல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை	7-10-0
தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை	4—6—0

☞ தாசில்தார்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Nellore.

நிலவரியைக் குறைக்க வழி !

கிராம முன்ஸீப்புகளுக்கு ஆபத்தா ?

தஞ்சை ஜில்லா பிரதிநிதியாக இந்தியா சட்டஸபையில் வீற்றிருக்கும் ஸ்ரீமான் கே. ஸந்தானம் தமது தொகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்து வந்தார். முக்யமாக மிராசுதார்களுக்கு அவர் ஸமாதானம் சொல்லி நிலவரிக் குறைவு விஷயமாக சிரத்தை காட்டி வருகிறார். எலெக்ஷன் காலத்தில் நிலவரிக் குறைவு அத்யாவச்யகமென்றும் அதிலேயே உழைக்கப்போவதாயும் நமது ஜில்லா பிரதிநிதிகள் ஆசைகாட்டிப் பேசினார்கள். ஆனாலும் சட்ட ஸபை போனபிறகு கக்ஷிக்கட்டுப்பாட்டிற்கும் காங்கிரஸ் ஆக்ஞைக்கும் கீழ்படிந்து நடக்கவேண்டிய கஷ்டம் நமது பிரதிநிதிகளுக்குஏற்பட்டுவிட்டது. அவர்கள் நமது பிரதிநிதியென்றமுறை மாறி காங்கிரஸ் பிரதிநிதிகளாக விளங்க வேண்டியிருக்கிறது. அதனால் அவர்கள் விரும்பினால் கூட மிராசுதார் நன்மையை கவனிக்க வழியில்லை. ஸ்ரீமான் ஸந்தானம் இந்தியா சட்ட ஸபைக்குப்போய் 2 வருஷங்களாகிவிட்டன. அதற்கு முன் மந்திரி ராஜன் அங்கு இருந்தார். இவரும் மிராசுதார்களுக்கு, முக்யமாக நிலவரி குறைவுக்கு என்ன செய்தார்களென்பது தெரியவில்லை. நிலவரிக்குறைவானது மாகாண ஸம்பந்தப்பட்ட விஷயமென்றும் சென்னை சட்டஸபையே இதைக் கவனிக்கவேண்டுமென்றும் இப்போது சொல்லப்படுகிறது. அப்படியானால் எலெக்ஷன் காலத்தில் சொல்லியது தவறுதானா? இந்தியா சட்டஸபையில் நமது மிராசுதார்களுக்காக நமது பிரதிநிதிகள் வேறு செய்ததென்ன?

ஸ்ரீமான் ஸந்தானம் இப்போதும் நிலவரிக் குறைவு விஷயமாக பலவித ஆலோசனைகளைக் கூறும் நிலைமையிலேயே இருக்கிறார். மிராசுதார்களுக்கு இதுவே ஆறுதலளிக்குமென்று இவர் நினைவுபோலும்? நிலவரியைக் குறைக்க தற்போது மந்திரி ஸபை இணங்கவில்லை. இதை விட 'முக்யமான' மது விலக்கு வேலையை அது மேற்போட்டுக்கொண்டு வருமானத்தை இழந்து நிற்கிறது. இந்த நிலைமையில் நிலவரியையும் குறைத்து விட்டால் ஸர்க்கார் திண்டாடவேண்டியது தான். ஆதலால் வேறு வழியில் வருமானத்திற்கு ஏற்பாடு செய்து கொண்ட பிறகு தான் நிலவரிக் குறைவைப்பற்றி யோஜிப்பார்களாம். இதற்காகப் பலர் பலவித யோஜனை சொல்லி வருகிறார்கள். நமது பிரதிநிதி ஸந்தானமும் இந்த யோஜனைசொல்லுகிறவர்களின் ஜாப்தாவில் சேர்ந்துகொண்டு ஓர் புதிய ஆலோசனை கூறுகிறார். கிராம முன்ஸிப் உத்யோகத்தையே எடுத்துவிட்டு கர்ணங்களைக் கொண்டே அந்த வேலையையும் பார்க்கச் செய்து விடலாமாம். கர்ணங்களுக்கு ஸர்க்கார் சம்பளம் கொடுக்கவேண்டியதில்லையாம். அதற்குப் பதிலாக மிராசுதார்களே வருமானம் கொடுத்து உதவி செய்யலாமாம். இவ்வளவு செய்தால் இதனால் ஒரு கோடி ரூபாய்தான் மிஞ்சுமாம். இதைக்கொண்டு நிலவரியில் ஒரு பாகத்தைக் குறைக்கலாமென்று இவர் கூறுகிறார்.

கிராம முன்ஸீப்களை வேலையிலிருந்து நீக்குவதன் மூலம் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைபோய் பல குடும்பங்கள் தவிக்க நேருமென்பதை இவர் கவனிக்கவில்லை. கர்ணங்களுக்கு மிராசுதார்கள் சம்பளம் கொடுப்பதென்பது மறை முகமாக மற்றொரு வரி விதிப்பதேயாகும். ஏழை மிராசுதார்களுக்கு இது பளுவாயிருக்கும். ஆகவே இவருடைய யோஜனை ஸரியானதாகத் தோன்றவில்லை. வோட்டர்களின் கண்களைத் துடைக்க இவர் ஏதோ பேசியதாகத் தெரிகிறதேயல்லது அநுபவ ஸாத்யமாகப் பேசவில்லை.

ஹைதராபாத்தில் ஸத்யாக்ரஹம்.

ஆர்ய ஸமாஜிகள் கைதியாயினர்.

ஹைதராபாத் ஸம்ஸ்தானத்தில் காங்கிரஸையும் ஆர்ய ஸமாஜ பிரசாரத்தையும் தடைசெய்து பிறப்பிக்கப்பட்ட உத்திரவை எதிர்த்து சட்டமறுப்பும் ஸத்யாக்ரஹமும் ஆரம்பமாயிருக்கிறது. ஆர்ய ஸமாஜிகள் பலர் கைதியாகிவருகின்றனர். ஸத்யாக்ரஹ ஸபை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

"காங்கிரஸை எங்களிடம் விடுங்கள்"

காந்திஜிக்கு அபேதவாதிகள் பதில்.

தீவ்ரவாதிகளையும், அபேதவாதிகளையும் கண்டித்து ஸ்ரீமான் காந்தி எழுதியுள்ள ஒரு வியாஸத்தைப் பார்த்து அவர்கள் மிகவும் கோபமடைந்திருக்கின்றனர்.

காங்கிரஸை தங்களிடம் விட்டு விடும்படியும், காந்திஜியைவிட இன்னும் நேர்மையாகவும், பலன் தரதக்க வழியிலும் அஹிம்ஸா நோக்கத்துடனும் தாங்கள் காங்கிரஸை நடத்திக் காட்ட தயாராக இருப்பதாயும் அவர்கள் பதில் கொடுத்திருக்கிறார்கள்.

மூர்ஹெட்—காந்தி ஸந்திப்பு.

இந்திய உதவிமந்திரியான கர்னல் மூர்ஹெட் எல்லைப்புறத்தில் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் காந்திஜியுடன் கால்மணி நேரம் வரையில் இந்திய ராஜ்ய விஷயத்தைப்பற்றிப் பேசினார்.

படேல் திருவாங்கூர் போவார்.

திருவாங்கூர் ஸம்ஸ்தானக் காங்கிரஸ் பிரதிநிதிகள் சிலர் காந்திஜியைப் பேட்டிக் கண்டு அத்தேச நிலைமையைத் தெரிவிப்பார்கள். திவான்மீது கூறப்பட்ட புகார்களை வாபீஸ்பெறும்படி காந்திஜி கூறிய ஆலோசனையை அவர் வற்புறுத்துவார்.

அவச்யமிருந்தால் ஸர்தார் படேல் திருவாங்கூர் சென்று காங்கிரஸுக்கும், ராஜாங்கத்திற்கும் ராஜியுண்டுபண்ணிவைக்க முயலுவார்.

திண்டாதாரிடம் காங்கிரஸின் அலக்ஷ்யமாம்.

ஸ்ரீமான் ராஜபோஜின் குற்றச்சாட்டு.

பம்பாய் திண்டாதார் தலைவரான ஸ்ரீமான் ராஜ போஜ் என்பவர் ஆமதாபாத்தில் பேசுகையில் காங்கிரஸ் மந்திரிகள், ஆலயப்பிரவேசம் போன்றவைகளில் திண்டாதாருக்கு சரியான உதவி செய்ய வில்லையென்றும், காங்கிரஸானது தற்போது மஹம்மதியர்களுடன் ஸமரஸம் பேசுவதில் மூழ்கி நிற்பதால் திண்டாதார் நன்மையை மறந்து விட்டதாயும் திண்டாதாருக்கும் மந்திரி பதவி கொடுக்காவிடில் தேசமெங்கும் பெரிய கிளர்ச்சி நடத்தப்படுமென்றும் எச்சரித்தார்.

இப்படி ஆலோசனை சொல்லிக்கொண்டே அநேக காலம் கழிந்துவிட்டது. ஸ்ரீமான் ஸந்தானம்போன்றவர்கள் மந்திரி ஸபையை நெருக்கி ஏதாவது முடிவுசெய்வதே நியாயமாயிருக்கும். ரவின்யூ மந்திரி பஞ்சாப்புக் போய் பார்த்து வந்து விட்டார். அவர் என்ன முடிவு செய்தார்? இதை பற்றி மிராசுதார்களுக்கு உறுதி கூறுவது தான் தற்போ விரும்பக்கூடியதாம். மிராசுதார்.

வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ. வெ. வே. சர்மா)

தைவத்தின்மீது கோபமா? ஸ்ரீமான் T. R வெங்கட்ராம சாஸ்திரிகள் சாவார் இயக்கத்தில் தைவம், தேசம் அரசன் என்பதில் தேசம் ஒன்றைத்தவிர மற்றதை நீக்கி விடவேணுமென்கிறார்? பேச்சில் கூட தைவம் கூடாதெனில்மதமெங்கே?ஸாடெங்கே?காமெங்கே!

ஒற்றுமைக்காக ஸமூஹ பகிஷ்காரம்! முஸ்லீம் லீகில் சேராமல் தேசிய ஸபையில் சேர்ந்திருப்பதற்காக மௌலானா அஸாத்தை கல்கத்தா முஸ்லீம்கள் அவர் வஹித்து வரும் ஓர் வித ஆசார்யப்பதவியைப் பிடுங்க முயற்சிக்கின்றனர்! ஸமூஹத்தில் கட்டுண்டோ!

ஹைதராபாத்தும் திருவாங்கூரா? தேசிய ஸபை அராஜக ஸபையென அரசர் கூறியதால் பலர் கைதி செய்யப்படுகின்றனர். அங்கும் குடிகளுக்கும் அரசாங்கத்திற்கும் மட்டுமில்லாமல் ஹிந்து முஸ்லீம் சண்டை போல் முஸ்லீம் ஆர்ய ஸமாஜி சண்டையோ என நினைக்க இடமளிக்கிறது.

தன் கடமை என்ன? செங்கல்பட்டில் பஞ்சமோத்தாரண கூட்டத்தில் ஓர் பெண், ஆஸ்தி சேர்ப்பது பிராமணர் தர்மமல்ல! என்கிறார்! பல ஆண்மக்கள் மத்தியில் மேடைமீதேறி பேசுவது பெண் கடமையா என ஒருவரும் கேட்க முன் வாராதது வருந்தத்தக்கது!

அவர் ஸமூஹம் அடையட்டுமே! விருதுநகரில் மஹம்மதியர் ஓர் ஹிந்து பெண்ணுக்கு உபசாரப்பத்ரமளிக்கும் போது நீங்கள் தொண்டு செய்வது ஸ்திரீ ஸமூஹத்திற்கே கௌரவமென்றனர். உங்கள் ஸமூகம் இந்த கௌரவமடையட்டுமே என கூறி அமர்ந்தார் அம்மையார்!

மீண்டும் துப்பாக்கியா? ஆலப்புழையில் மீண்டும் துப்பாக்கி பிரயோகம் நடந்தது துர்பாக்யமே! காந்தி கதரியும் பயனில்லை!

பஞ்சமருள் சண்டை! பஞ்சாபில் மந்திரி ஸபை ஒன்றில் தலைமை வகிக்கச்சென்றார். அவர்களுக்குள் கக்ஷிபேத சண்டையால் கூட்டம் குழப்பத்துடன் முடிந்தது! ஜாதிகளை நீட்ட அவகாசமில்லை!

திருச்சந்தூரில் வாலாட்டமா? வரும் டிஸம்பரில் அங்கு ஸத்யாக்ரஹம் செய்து பஞ்சமரை ஆலயத்துள்ளே அனுப்ப சிலர் தேசிய ஸபையை உத்திரவு கேட்கின்றனர். திருச்செந்தூராண்டி வாலை அறுப்பர்!

யார் வைதீகர் அறிவாரா? ராஜாஜி முஸ்லீம் மெச்ச ககோர் பேரியைப் போற்றி வைதிகருமங்கு தொழுகிறார் என்கிறார்! யார் வைதிகர்? யார் தொழுகிறாரென்பதை இவரறிவாரா? பேச்சு வாக்கில் எதையும் பேசலாமா?

பொங்கித்தின்னச் செய்வரா? பாலக்காட்டில் பெண்களுக்குத்தனியான "போஜன விடுதி" அரசாங்கமமைத்துத் தர வேண்டுமென சிலர் மந்திரி காரியதரிசியிடம் வேண்டினர். சமயல் கூட தெரியாமல் கெடுக்க வேணுமா? அவரவரே பொங்கித்தின்ன ஏற்பாடு செய்தல் நலமல்லவா?

ஜாதியைக் கவனியாது யோக்யதையைக் கவனி! தேசிய ஸபை ஜாதியை ஒழிப்பதாக கூறி ஒவ்வோர் ஜாதிக்கும் உத்யோகத்திலின் அதிகச்சலுகை காட்டியதால் ராஜ போஜ் எனும் பஞ்சம தலைவர் ஒவ்வோர் மாகாணத்திலும் ஒவ்வோர்மந்திரி வேலையாவது பஞ்சமருக்கு கொடு. முஸ்லீமிடம் பக்ஷபாதம் காட்டுவதால் நாங்கள் ஸத்யாக்ரஹம் செய்வோமென்கிறார்.

தேசீய ஸபை வேலை கூடாது? 114 பிரிவை வங்க அரசாங்கம் ப்ரயோகம் செய்தது.

அராபிய ஸாம்ராஜ்யமா? இப்படி ஓர் பல இயக்கம் மேனாட்டில் பரவுகிறதாம்! ஜர்மனி ஸஹாயமாம்.

ஆத்திச்சூடி.

[இப்புஸ்தகத்தின் பெயர் தமிழ் தேசத்தினருக்கு நன்கு தெரிந்ததே. இதிலுள்ள நீதி வாக்யங்களில் சாஸ்திரங்களையும் உலக அநுபவத்தையும் ஒட்டிய அரியதத்வங்கள் நிறைந்திருப்பதைப் பலர் அறிவர். மிக்க உயர்ந்ததாக மதிக்கப்படும் இக்கிரந்தத்திலுள்ள ரஸத்தை ஆங்கிலம் கற்றவர்களும், வேறு பலரும் நன்கு அறிந்துகொள்ளவேண்டியது அவச்யமாகும். மேலும் தமிழ் பாஷையறியாதவர்களும் இதர மாகாணத்தியவர்களும் இதன் பெருமையை தெரிந்துகொள்ள வேண்டியது அவச்யமாகும் ஆதலால் இந்த நீதி புஸ்தகத்திக்கு, ஸம்ஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்ப்பு அவச்யமென்று எண்ணி கூடிய வரையில் மூலத்தின் கருத்துக்கு இணங்கியே எழுதப்பட்டிருக்கிறது.]

ஆத்திச்சூடி அமர்ந்ததேவனை
ஏத்தி ஏத்தி தொழுவோம்யாமே

अगस्त्यकुसुमापीड भवानीपतिलालितं ।
वागर्थसिद्धये देवं वारणास्यमुपास्महे ॥

For Purpose of acquiring a knowledge of speech and its sense, we worship the Elephant-faced-God, who has been lulled by the Lord, of Parvathi, who has been crowned with "Atthi flowers".

1. அறஞ்செய விரும்பு.
भव धर्मरतो (नित्यं)
Be interested in performing Dharma (always)

2. ஆறுவது சினம்.
कर्तव्यः क्रोधनिग्रहः ।
Anger should be suppressed (for ever)

3, இயல்வதுகரவேல்.
याच्ञा मोघा न कर्तव्या
The request (of others) should not be kept unfulfilled.

4. ஈவது விலக்கேல்.
दातारं न विघातयेत ॥
Do not Present a donor in the way of a donor.

5. உடையது விளம்பேல்.
नान्यस्मै स्वं(धनं) ब्रूयात्
Don't reveal to others what you possess.

6. ஊக்கமதுகைவிடேல்.
न त्यजेदुद्यमं (क्वचित्)
(In any case), attempt should not be abandoned.

7. எண்ணெழுத்திகழேல்.
न साहित्यमुपेक्षेत न चापि गणितं तथा ॥
The study of Literature as well as Asfronomy should not be neglected.

8. ஏற்பதிகழ்ச்சி.
याचनं मानघाति स्यात्
Begging depreciates one's regard.

9. ஐயமிட்டுண்.
दत्तशेषाशनो भवेत् ।
Give alms first to others and then take your food.

10. ஒப்புரவொழுகு.
लोकाचारमुपाधावेत्
The customs of the world should be followed.

11. ஓதுவதொழியேல்.
न स्वाध्यायादुपारमेत् ॥
The study of all sciences should not be abandoned (for ever).

12. ஔவியம் பேசேல்.
सासूयं न प्रभाषेत
Don't speak jealously about others, and to converse with jealousy should be obviated.

13. அஃகம் சுருக்கேல்.
धान्यमूल्यं न सङ्कुचेत् ।
Never and sell in the market.

14. கண்டொன்றுசொல்லேல்.
दृष्टमेकं न विब्रूयात्
Leave (the habit of) telling in reverse of what you have seen.

15. ஙப்போல்வளை.
भवेद्गोपकारकः ॥
Be useful to your kinsmen as well as your nation.

16. சனிநீராடு.
पुत्रस्य जनने स्नायात् ।
Bathe at the moment a son is born to you.
तैलेन शन्यहे स्नायात्
Take (your) oil-bath every Saturday.

17. ஞயம்படஉரை.
ब्रूयान्मृदु हितं वचः ।
Speak (always) charmingly and benevolently.

18. இடம்படவீடிடேல்.
पर्याप्तं सदनं कार्यं
Construct your house accommodatingly

19. இணக்கமறிந்திணங்கு.
मित्रं कुर्यात्परीक्षितं ॥
Cultivate friendship after due consideration.

20. தந்தை தாய்ப்பேண்.
(आजीवं) पितरौ रक्षेत्
Support your Parents (till the end of their lives)

21. நன்றிமறவேல்.
उपकारं न विस्मरेत्
Never be ungraeful

22. பருவத்தேபயிர்செய்.
काले (क्षेत्रे) कृषिं कुर्यात
Cultivate in time (in proper soil).

23. இயல்பலாதனசெயேல்.
न धर्मादन्यदाचरेत् ॥
Don't Perform a thing which is unjust and llegal.

24. மண்பறித்துண்ணேல்.
दुर्बलान्नं बलान्नाद्यात्
The property of a weak person should not be enjoyed by force and influence.

25. அரவமாட்டேல்.
सर्पक्रीडा न वृत्तये ।
For the sake profession, do not play w venomous serpents.

26. இலவம்பஞ்சிற்றுயில்.
शयीत तूलशयने
Sleep (alwaps) on the bed of cotton.

27. வஞ்சகம் பேசேல்.
माभाषेत सवञ्चनं ॥
Don't speak hypocritically.

28. அழகலாதனசெயேல்.
अमङ्गलं न कुर्वीत
Unauspicious deeds should not be dor

29. இளமையிற்கல்.
बाल्ये शिक्षेत (सद्गुरोः) ।
Learn (all sciences) in boyhood (from good preceptor.)

30. அனந்த லாடேல்.
मा भजेदधिकां निद्रां
Don't sleep superflously.

31. அறனைமறவேல்.
धर्मं कर्तुं न विस्मरेत् ॥
Never forget to do your duties.

32. கடிவதுமற
परुषं न प्रभाषेत
Forget to speak flingly.

33. காப்பதுவிரதம்.
नियतः पालयेद्व्रतं
The religious asterities should be strictly performed.

34. கிழமைப்பட வாழ்.
जीवेत् सर्वाभिगम्यश्च
Lead your life easily accessible to all.

35. கீழ்மையகற்று.
कुत्सितानि विवर्जयेत्
Avoid depraved things.

36, குணமதுகைவிடேல்.
गुणिनं माह्युपेक्षेत
Don't leave a good thing without considering its merits.

37. கூடிப்பிரியேல்.
मा हन्यात्संगतं सतां
Don't break the friendship with good people.

38. கெடுப்பதொழி.
वर्जयेत्स्वपरद्रोहं
Don't spoil yourself as well as others.

39. கேள்வி முயல்.
यतेत श्रोतु मादरात्
Try to hear what others say.

40. கைவினை கரவேல்.
सहजं कर्म माजह्यात्
The craft prescribed for a communit should not be abandoned.

41. கொள்ளை விரும்பேல்.
मा गृधः कस्यचिद्धनं ।
Never desire robbery.

(தொடரும்)

டி. எஸ். வைத்யநாத சாஸ்தி
சிரோமணி, நன்னிலம் ஹைஸ்கூல் பண்டித

ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமி

கும்பகோணத்தில் விஜயம்.

ஆழ்வார் திருநகரி ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதிப்படி எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர்ஸ்வாமி (26-10-38) இன்று இவ்விடம் எழுந்தருளினார். இந்நகர் ஸ்ரீ ஆராவமுதன் சந்நிதியிலிருந்து ஸ்தலாங்க மரியாதையுடன் வரவேற்கப்பட்டு சடாரி முதலான மரியாதைகளும் டி ஜீயர்ஸ்வாமிகளுக்குச்செய்யப்பட்டது. ஆராவமுதன் சந்நிதி மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீமான் ஹரிராவ் அவர்கள் மிக பக்தி சிரத்தையுடன் ஸ்வாமிகளை வரவேற்றது பாராட்டத்தக்கது. ஸ்வாமிக்கு நகரத்தார் சார்பாக ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. டி ஜீயர் ஸ்வாமி, நாதன் கோவில், நாச்சியார் கோவில் முதலான திவ்ய தேசங்களை மங்களாசாஸனம் செய்து கொண்டு திருப்பதிக்கு எழுந்தருளுவதாகத் தெரிகிறது.

ஒரு நிருபர்.

தக்ஷிணாயந பிரதம விவாஹம்.

ஓர் ஸந்தேஹம்.

தக்ஷிணாயந காலத்தில் ப்ரதம விவாஹம் செய்வது அநுஷ்டானத்திலில்லை. இதற்கு சாஸ்த்ராதாரம் இல்லாததே காரணம். தற்காலம் சில லௌகிகர்கள், தங்களிஷ்டப்படி எதையும் செய்து விட்டுத் தங்களை அண்டிப்பிழைக்கும் சிலரைக்கொண்டு தங்களுடைய செய்கைக்குச் சாஸ்திர பலம் கட்டச் சொல்வது வழக்கமாய் விட்டது.

சென்னையிலுள்ள பிரபல தெலுங்கு பிராம்மணரொருவர் இந்த ரீதியையே அநுஸரித்தார்: இரண்டு வருஷம் முன்பு கும்பகோணம் அத்வைத ஸபையில் இது விஷயமாகச் சர்ச்சை வந்தது. ஒரு பண்டிதர் செய்யலாமென்கிற பக்ஷத்தை ஆதரித்துப் பேசினார். இதனை எதிர்த்துப்பல பண்டிதர்கள் பேசினார்கள்.

விஷயம் இவ்வாறிருக்க, இந்த வருஷம் ஆவணி மீ" த்தில், கும்பகோணத்திலுள்ள ஒரு வைஷ்ணவர் (ஸ்ரீ ஆண்டவன் ஸ்வாமி சிஷ்யர்) தன்னுடைய இரண்டு பெண்களுக்கும் ப்ரதம விவாஹம் ஒரு நாளில் செய்துமுடித்தார். இப்படிச்செய்யும்படி தனக்கு ஒரு பெரியவர் அனுமதி கொடுத்திருப்பதாக இந்த வைஷ்ணவர் சொல்லுகிறதாகத் தெரிகிறது.

வைதிகர்களையும் தெய்வத்தையும் தூஷித்து எழுதியே பாழும்வயிற்றை நிறப்பிக்கொள்ளும் சில பத்திரிகை நிருபர்களோ, எந்தக் காரியத்தையும், பண்டிதர்களையும் தாக்கிப் பேசியும் எழுதியும் கூட்டம் போட்டும் ஆர்ப்பாட்டம் செய்யும் பல வம்பர்களோ, ஏகாஹவிவாஹம் முதலியவற்றைப் பலமாகக் கண்டித்து வரும் ஒரு ப்ரபல ஸநாதனியோ, கட்டுப்பாடாய் இது விஷயத்தில் ஒதுங்கியிருப்பது, ஆச்சரியத்தை விளைவிக்கின்றது.

இந்தத் தக்ஷிணாயந ஏகாஹ விவாஹம் சாஸ்திரியமா, அல்லதா? என்பதை இந்தப்பத்திரிகை மூலம் தர்ம சாஸ்திர பண்டிதர்கள் விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு ஸநாதனி
காப்பு—ஸ்ரீரங்கம்.

பிரும்மஸ்ரீ அருட்கவி சுப்ரமண்ய அய்யர்,
அவர்கள் எழுதியது.
ஸ்ரீ நகர விமர்சனம். 0 12 0
ஸ்ரீ குரு விமர்சனம். 0 5 0
வரிவஸ்யா ரஹஸ்யம் 1 0 0
கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம்,
லிமிடெட், கும்பகோணம்.

கும்பகோணம்.

நகரசபை நிர்வாகமும் தலைவரின் கவலையும்.

சென்ற சிலகால முன்பு நமது நகர் சேர்மன் அவர்களும் மற்றுமுள்ள சிப்பந்திகளுடன் அகாலங்களில் மிகவும் பாராட்டகூடிய சிரத்தையுடன் நகரசபையின் வரும்படியின் முன்னேற்றத்தைக்கொண்டு ரொம்பவும் சிரமப்பட்டு லைசென்ஸ் இல்லாத வண்டி வகையருக்களை கண்டுபிடிப்பதில் பட்டபிரயாசை யாரும் அறிந்தவிஷயமே. சென்ற சிலதினங்களாக பெய்துவரும் மழையினால் நமது நகர் முற்றிலும் பெருவாரியாக நிர்வாகிகளும் அதிகாரிகளும் நடமாட்டமே இல்லாமலிருந்து வரும் வீதிகளிலும் அக்ராஹாரங்களிலும் உள்ள பெரும் பள்ளங்களிலும் படுகுழிகளிலும் சுகாதாரக்குறைவிற்குக் காரணமாய் ஏற்பட்டு வரும் தண்ணீரை போக்கடிக்கவேண்டியது மிகவும் அவசியமாகவும் நியாயமாகவும் இருக்கிறது. இந்த விஷயத்தை நமது நகர் சேர்மன் அவர்கள் மேல்கண்ட விஷயத்திற்கு எடுத்துக்கொண்ட பொறுப்பைப்போல் சுகாதாரம், இஞ்ஜினீரிங், வகையரு அதிகாரிகளுடன் நகர வீதிகளை நேரில் பார்வையிட்டு அங்காங்குள்ள குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர்களுடன் நேரில் உத்திரவிட்டும், அவ்வித உத்திரவை செய்து முடிக்குமாறு வேண்டியஏற்பாடுகளை செய்தும் கொடுக்கவேண்டியது அவசியமாய் இருக்கிறது. மழை பெய்ததிலிருந்து நமது நகர் வீதிகளின் நிர்வாகம் நன்கு விளங்குகிறது.

க. நி.

தர்மானுஷ்டானங்கள்.

ஓர் ஸம்பாஷணை.

தாதா—கிருஷ்ணா, உன் தகப்பனார் எங்கே?

கிருஷ்ணன்—அப்பா, ஆபீஸிலிருந்து வரவில்லை.

தகப்பனார்——அப்பா, ஏன் கூப்பிட்டீர்கள்?

தாதா—மணி 8-ஆய் விட்டதே இதுவரையில் எங்கேபோனாய்?

தகப்பனார்—ஆபீஸ் வேலை அதிகம். நாழிகை ஆய்விட்டது.

தாதா—இருக்கட்டும்; ஆபீஸுக்கு சமீபத்திலுள்ள குழாயில் அநுஷ்டானம் செய்தாய் விட்டதல்லவா;

தகப்பனார்—அங்கே உத்தியோகஸ்தர்கள் முன் நான அனுஷ்டானம் செய்து கொண்டிருந்தால் வெட்கமாயிராதா? அது தான் செய்யவில்லை.

தாதா—மகம்மதியர்களுக்கு இராஜாங்கத்தார் கச்சேரி காலத்திற்கூட, அநுஷ்டானத்திற் கிடங்கொடுத்திருக்க, உரிய காலத்தில் உரிய அநுஷ்டானங்களை ஸநாதனிகளாகிய நீங்கள் செய்யப் பின்வாங்குவதும், லஜ்ஜை என்று சொல்வதும் வெகு அழகாயிருக்கிறது.

தகப்பனார்—அது இருக்கட்டும். ஏன் கூப்பிட்டீர்கள்?

தாதா—நம் கிருஷ்ணனுக்கு 'அக்ஷராப்பியாசம்' செய்யவேண்டாமா?

தகப்பனார்—அக்ஷராப்பியாசமா! குழந்தை ஸ்கூலுக்குப் போய் வருகிறானே!

தாதா—ஸீனத்தில் இறங்கிவிட்டாயா! 'அக்ஷரம்' என்ற பரம்பொருளில் முதற் பயிற்சியின்றி, ட, ப, டப, பட என்ற பொருளற்ற சத்தக் குறிகளில் மனமிறங்கிற்று; முதற்கோணல் முற்றும் கோணல்" நடக்கட்டும்.

கிருஷ்ணா, பல் தேய்த்தாயா? விபூதி இட்டுக் கொண்டாயா?

கிருஷ்ணன்—முதலில் பாடம் படித்து விட்டு பிறகு எல்லாம். நீ பாட்டுக்கு இரு.

தாதா—காலையில் முகம் கழுவி திலகமிட்டு வேலையிலமர்ந்தால், வேலையில் உற்சாகம் மனத்தெளிவு ஏற்படும். இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாய்.

கிருஷ்ணன்—க்ஷவரம் செய்து பண்ணிக் கொண்டிருக்கிறேன்.

தாதா—கிருஷ்ணா அப்பாவைக் கூப்பிடு.

தகப்பனார்—ஏன் அப்பா!

தாதா—இன்றைக்கு சனிக்கிழமை, அமாவாசை. க்ஷவரம் கூடாது. நீ குழந்தைக்குச் சொல்லவேண்டாமா?

தகப்பனார்—குழந்தை! இதிலே தான் வந்திருக்கிறதோ. 'உயிர் போகிறதற்கும், மயிர் போகிறதற்கும் நாளோ''

தாதா—தெரியாத்தனமாகப் பேசாதே. வயிற்றுப்பிழைப்பிற்காக கற்ற படிப்பு. உலகத்தின் சகல விஷயமும் தெரிந்தவனாக எண்ணாதே. காலம் என்பது கிரஹங்களின் சாரங்களினால் கணக்கிடப்பட்டது. கிரஹமென்பது ஒன்றையொன்று ஆகர்ஷிப்பதால் மாத்திரம் அப்பெயர் அதற்கு வந்தது. இதை உத்தேசித்தோர் பழமொழி "நாள் செய்வது நல்லார் செய்யார்" என்று ஏற்பட்டிருக்கிறது.

தகப்பனார்—தவறி விட்டது அப்பா, இனி கவனிக்கச்செய்கிறேன்.

தாதா—கிருஷ்ணனுக்கு வயது என்ன?

தகப்பனார்—ஏன். 9 வயது ஆயிற்று.

தாதா—உபநயனம் செய்ய வேண்டாமா, காலமல்லவா என்று கேட்டேன்.

தகப்பனார்—இப்பொழுதேயா! என்ன அவசரம்:

தாதா—'இளமையிற்கல்,' 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ற முதுமொழிகளுக்கிணங்க, நற்பழக்கங்களை நாம் இளம்பிராயத்தில் உண்டாக்கினால், பசுமரத்தாணி போல் மனதிற்பதியும். வேறு அழுக்கு ஏறுவதற்குமுன், சாயம் துணியில் ஏற்றுவது உசிதமல்லவா?

தகப்பனார்— கிளிப்பிள்ளை பேச்சுப்போல் அர்த்தம் தெரியாமல் செய்கிறது தானே?

தாதா—அசடே, அப்படிச் சொல்லாதே. விதை விதைப்பது பட்டத்திலல்லவா! இளம்பிராய பட்டத்தில் விதைத்தால் காலத்தில் பலன் கொடுக்கும். வயிற்று வலியால் பாதைப்படும் ஒருவன், சுக்கின் தன்மையையும் அதற்கும் தன் தேகத்திற்கும் உள்ள சம்பந்தமும் தான் தீரத்தெரியும்வரை, வயிற்றுவலி பரிஹாரமாக சுக்கை விழுங்க ஆக்ஷேபிப்பதுபோல், அர்த்தம் தெரியாமல் செய்யலாகாதெனப் பிதற்றுகிறாயே!

தஞ்சைக்குப்போக ரயிலில் டிக்கெட் வாங்கியவன் மற்றவர்களைப்போல் வண்டியில் போய் உட்கார்ந்தால் குறித்த இடம் போகலாம்; ஏறுக நீராவி எப்படி வண்டியிழுக்கும்? நாம் ஆற்றில் விழுந்தால் என்செய்வது? எனச் சந்தேகித்துத் தயங்குபவனை என் என்று சொல்வது? ஒவ்வொரு விஷயத்தையும் ஒவ்வொருவரும் கற்பதுமுடியாது. நீராவியின் தத்துவங்களை யறிந்த ஓர் மேதாவி யமைத்தது நீராவி யந்திரம் என்று ரயிலில் நாம் ஏறுவதுபோல், ஆசாரத்தைப் பின்பற்ற வேண்டிய வேளையில் அதன் நுட்பங்களை விசாரிப்பது, அசட்டுத்தனம் வெளியாக்குகிறது.

(தொடரும்)
A. வெங்கடாமய்யர்.

பரசுராம பங்கம்.

யோக சாஸ்த்ர நிரூபணம்,

பரசுராமரை ஓங்காரமாக அருத்தம் செய்ய இடமிருக்கிறது. ஓங்காரத்தில் மூன்று அக்ஷரங்கள் சேர்ந்து இருக்கின்றன. அவைகள் அ, உ, ம். இவைகளில் முக்கியமானவை அ, உ இந்த இரண்டுகள் தான். கீதையில் 10 வது அத்யாயத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் "அக்ஷராணாம் அகாரோஸ்மி" என்றுசொல்லி இருக்கிறார். அதற்கு அருத்தம். அகாரம் என்பது ஸ்ரீ கிருஷ்ணனைக் குறிக்கிறது. உ, என்ற அக்ஷரம் சிவனைக்குறிப்பதாகச் சொல்லப்படுகிறது. பரசுராமருடைய பரம்பரையும் இவர்களுக்கு ஒத்திருக்கிறது. அவருடைய பாட்டனாருக்குப் பிருகு என்றும், தகப்பனார் ஜமதக்னிஎன்றும் சொல்லப்படுகிறது. கீதையின் 10 வது அத்யாயத்தில் ஸ்ரீகிருஷ்ணன் தான் ப்ருகு என்று சொல்லி இருக்கிறார். "ஜமத் அக்னி" என்ற பதத்திற்கு வயிற்றில் ருத்ராம்சமாகிற அக்னியை வைத்திருப்பது என்று அருத்தமாவதால் ஜமதக்னியை ருத்ரனாகச்சொல்லலாம். மேலும் பரசுராமருடைய ஆயுதமாகிற பரசுவும் ஓங்கார வடிவம் தான். முண்டக உபநிஷத்தின் இரண்டாவது பாகம் 4வது சுலோகத்தில் "ப்ரணவம் தநு:" என்று சொல்லியிருக்கிறது. அதற்கு அருத்தம் "ஓங்காரம்" தநுசுதான் என்பது. ஆகையால் பரசுராமர் இராமருக்கு கொடுத்த வில்லு என்பது "ஓங்காரம்" தான் என்றும் அந்த வில்லை வளைத்து நாணேசிடவேணுமென்று அவர் சொன்னது இராமர் ஓங்காரத்தின் அருத்தத்தை சொல்ல வேண்டுமென்று பரசுராமர் சொன்னதாக அருத்தம் செய்யலாம். இராமர் அந்த வில்லை வளைத்து நாணேற்றினார் என்பது பிரணவத்தின் அர்த்தத்தை சரியானபடி இராமர் சொன்னார் என்று அருத்தம் செய்ய இடமுண்டு. இராமர் ஏற்கனவே ஜனகர் கொடுத்த வில்லாகிற உபநிஷத்தைப் படித்துத் தெரிந்து கொண்டதால், அவர் பிரணவத்திற்கும் அர்த்தத்தை சரியானபடி தெரிந்து கொண்டார் என்றும் சொல்லலாம்.

மேலும் பரசுராமருடைய மற்ற சரித்திரம் அவர் ஓங்கார ஸ்வரூபமென்று அருத்தம் செய்வதை உறுதிப்படுத்துகிறது. அவர் க்ஷத்திரியர்களை வதம் செய்து அவர்களுடைய இரத்தத்தால் தன் பித்ருக்களுக்கு திருப்தி செய்தார் என்று சொல்லப்படுகிறது. "க்ஷத்ர" என்ற பதத்திற்கு "க்ஷதம் த்ராயதி அல்லது க்ஷதாத் த்ராயதி" என்று அருத்தம் செய்யலாம். "க்ஷதம்" என்றால் காயமென்று அருத்தம். "த்ராயதி" என்றால் ரக்ஷிக்கிறது என்று அருத்தம். ஆகையால் "க்ஷத்ரம்" என்ற பதத்திற்கு இருவிதமாய் அருத்தம் செய்யலாம். காயப்படாமல் ரக்ஷிக்கிறதென்றும் காயம்பட்ட பிறகு அந்த காயத்தை ரக்ஷிக்கிறதென்றும் அருத்தம் செய்யலாம். சரீரத்தில் காயப்படாமல் ரக்ஷிக்கிறவர்களுக்கு "க்ஷத்திரியாள்" என்று பெயர். சரீரத்தில் காயம்பட்ட பிறகு அந்த காயத்தை ரக்ஷிப்பது "இரத்தம்" "க்ஷதம்" என்ற பதத்திற்கு இரத்தம் என்று அருத்தம் செய்தால் பரசுராமர் "க்ஷத்ரத்தை" க்கொன்றார் என்பது சரியாக இருக்கிறது. ஏனென்றால் நம்முடைய சரீரத்தில் ஓங்கார ஸ்தானம் ஒன்று இருக்கிறது அது சிரஸிலுள்ள ஸஹஸ்ராரசக்கரமும் அதிலிருந்து மூலாதாரம் வரைவரும் ஸுஷும்னா நாடியும் சேர்ந்து ஓங்காரவடிவமாக இருக்கிறது. இந்த ஸ்தானத்தில் சுக்லவாஹினி நாடிகளிருப்பதாயும் அந்த ஸ்தானத்தில் யோகியின் சரீரத்தில் விசேஷமாக இரத்தங்கள் சுக்லமாக மாற்றப்படுகிறது. அதே சுக்லம் பிறகு ஓஜஸாக மாறி மூலாதாரத்திலுள்ள குண்டலி சக்தியை ஸஹஸ்ரதளத்திற்கு ஏற்ற உபயோகமாகிறதால் ஓங்காரமாகிற பரசுராமர் க்ஷத்திரமாகிற இரத்தத்தைக்கொன்று சுக்லமாக மாற்றுகிறது. அந்த சுக்லம் புத்திர உத்பத்திக்கு காரணமானதாலும் புத்திர உத்பத்தியில் பித்ருக்களுக்கு திருப்தி உண்டாவதாலும் பரசுராமர் க்ஷத்திரத்தைக்கொன்று பித்ருதிருப்தி செய்தார் என்பது சரியாக இருக்கிறது. மேலும் "சுக்லம்" என்ற பதத்திற்கும் "அர்ஜுனன்" என்ற பதத்திற்கும் "வெள்ளை" என்று அருத்தம். மனிதனுடைய "வீர்யம்" சுக்லத்தில் சேர்ந்திருப்பதால் சுக்லத்திற்கு 'வீர்யார்ஜுனன்" என்ற பெயரும் பொருந்தும்". ஆகையால் பரசுராமர் "கார்த்தவீர்யார்ஜுனனைக் கொன்றார்" என்பதும் யோகியின் சரீரத்தில் ஓங்காரஸ்தானத்தில் "சுக்லம்" ஓஜஸாக மாறுகிறதை குறிப்பதாக அருத்தம் செய்ய இடமுண்டு. மேலும் பரசுராமர் க்ஷத்திரியாளை 21 தரம் கொன்றார் என்பதும் ஒருவிதமாக பொருத்தமாக இருக்கிறது. யோகியின் சரீரத்தில் இரத்தம் சுக்லமாக மாறி பிறகு ஓஜஸாக மாறுகிறதால் அந்த சரீரத்திலுள்ள பாபங்களையெல்லாம் போக்கடிக்கிறது. அந்த பாபங்கள் 21 விதம் உள்ளது. "ஏகவிம்சதி பாபாத்வம்ஸி" என்று சொல்லி இருப்பதை உத்தேசித்து 21 தரம் க்ஷத்திரியாளைக் கொன்றதாகச்சொல்லி இருப்பதும் ஒரு விதமாக சரியாக இருப்பதாக சொல்ல இடமுண்டு.

மேலும்இராமாயணம் பாலகாண்டம் எழுபத்தாறுவது ஸர்க்கம் 14,22 சுலோகங்களில் பரசுராமர் இராமரிடம் விடைபெற்றுக்கொண்டு மஹேந்திர கிரிக்கு தபசு செய்யப்போவதாக சொல்லிப்போனதாக சொல்லியிருக்கிறது. மஹேந்திரகிரி என்பதை ஹிருதயமாகிற அனாஹத சக்கரமாக ஹநுமார் மஹேந்திர கிரியிலிருந்து இலங்கைக்குத் தாண்டின கட்டத்தை அருத்தம் செய்யும் போது சொல்லியிருக்கிறேன். முண்டக உபநிஷத் இரண்டாம் பாகம் 6 வது சுலோகத்தில் ஹிருதயத்திலுள்ள ஜ்யோதிஸை ஓங்காரமாக எண்ணி த்யானம் செய்யும்படி சொல்லியிருப்பதால் பரசுராமருகிற ஓங்காரம் மஹேந்திரகிரிக்கு தபசுக்குப்போவதாக சொல்லிப்போனதும் பொருத்தமாக இருக்கிறது.

S. அய்யாத்துரை அய்யர்.

புராணக்கதைகள்.

[S. ராமச்சந்த்ர ஹரி:]
(முன் தொடர்ச்சி)

ஸ்ருஞ்சய! அதூர்த்தராஜனின் புத்திரன் கயன் என்பவனும் இறந்து விட்டதாய்க்கேள்வி. அவ்வரசன் ஹோம சேஷத்தை நூறு வருஷம் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அக்னியானவர் அவனிடம் வந்து என்ன வரம் வேண்டுமென்று கேட்க, 'நான் எவ்வளவு தானம் செய்தாலும் எனது பொருள் அரிவற்றதாயிருக்க வேண்டும்.' என் மனம் ஸத்தியத்திலேயே செல்ல வேண்டும். எனக்கு தர்மத்தில் சிரத்தை விருத்தியடைய வேண்டும். என்ற இவ்வரங்களைக் கேட்டான். அக்னிபகவானும் அவனிஷ்டப்படியே வரம் கொடுத்தார். அவன் செய்த யாகங்களையும் கொடுத்த தானங்களையும். ஒருவராலும் சொல்லி முடியாது. அவன் ஸோம யாகத்தாலும் தனங்களாலும் ச்ராத்தங்களாலும் கர்மங்களாலும் முறையே தேவர்கள் அந்தணர் பிதிருக்கள் மனிதர்களை சந்தோஷிப்பித்தான். அசுவமேத யாகத்தில் 50 முழ அகலமும் 100 முழ நீளமுள்ள பொற்பூமியை தக்ஷிணையாகக் கொடுத்தான். இவ்விதம் தர்மாதிகளினிலும் மிகச்சிறந்தகயனே மரித்தானெனில் உன் புத்திரனைக்குறித்து தாபப்பட வேண்டியதுண்டா?

ஸங்க்ருத புத்திரன் ரந்திதேவனும் இறந்தான் அவன் இந்திரனைக்குறித்து அரிய தவம் செய்து பின்வருமாறு வரம்பெற்றான். 'எங்களுக்கு அதிகமான அன்னமிருக்க வேண்டும். நாங்கள் அதிதிகளையும் அடைய வேண்டும். எங்கள் ச்ரத்தை விலகாமலிருக்க வேண்டும். நாங்கள் ஒருவரையும் யாசிக்கக்கூடாது." வனத்திலுள்ள பசுக்கள் தங்களை நற்காரியத்தில் உபயோகிக்கும் படி தானாகவே ரந்திதேவனை வந்தடைந்தன. அவன் செய்த யாகத்தில் உபயோகித்த பசுக்களின் தோற்சுமையிலிருந்து கசியும் ஜலம் சர்மண்வதி என்ற நதியாகப் பெருகிற்று.

அவன் பிராம்மணர்களுக்கு ஆயிரக்கணக்கான ஸ்வர்ணங்கள் கொடுத்தான். அவன் வீட்டில் தங்கமில்லாத பாத்திரங்களே யில்லை. அந்த ரந்திதேவனும் மரித்தான். உன் புத்திரனைக்குறித்து வருந்த வேண்டாம்.

ஸ்ருஞ்சய! மஹாத்மாவான ஸகரனும் இறந்தான். அவன் இக்ஷ்வாகு குலத்தில் பிறந்து மனிதர்களுக்கில்லாத பராக்கிரமம் பெற்று புருஷப் புலிபோல் விளங்கினான். அவன் புறப்படும்போது அவனுடைய அறுபதினாயிரம் புத்திரர்களும் சந்திரனை நக்ஷத்திரக் கூட்டங்கள்போல பின் தொடர்வார்கள். அவன் பிராமணர்களுக்குச்செய்த தானங்களுக்குக் கணக்கில்லை. அவனுடைய கோபத்தால் தோண்டப்பட்டபடியால் ஸமுத்திரத்திற்கு ஸாகரம் என்ற ஓர் பெயருண்டாயிற்று. அந்த ஸகரனே மரணமடைந்தபொழுது உன் புத்திரனுக்காக வருந்தவேண்டாம்.

வேனனது குமாரன் பிருதுவென்ற அரசனுமிறந்தான். பெரிய காட்டில் மகரிஷிகள் கூடி உலகத்தை இவன் பெருகச் செய்வானென்று [illegible] பெயரிட்டு பட்டாபிஷேகஞ் செய்தார்கள். அவனுக்கு க்ஷத்திரியன் என்றும் ராஜாவென்றும் காரணப் பெயர் ஏற்பட்டது. அவனது ஆக்ஷியில் பூமி உழாமலே செழித்தது. மரங்களின் இலையிலும் தேன்சொரிந்தது. பசுக்கள் பதக்குப்பால் கறந்தன. ஜனங்கள் நோய் முதலியன இன்றி சுகமே வசித்தார்கள். அவன் ஸமுத்திரத்தில் செல்லும்போது ஸமுத்திர ஜலம் கல்லுப்போல் இருந்தது. அவன் செய்த அச்வமேதத்தில்

(தொடர்ச்சி 2-ம் காலம் பார்க்க:)

மூன்று ஆள் உயரமுள்ள இருபத்தொரு தங்கமலைகளை பிராமணர்களுக்குத் தானம் செய்தான். உன்னையும் உன் புத்திரனையும் விட தர்மம் ஞானம் வைராக்கியம் ஐச்வரியம் இவைகளில் மிகச் சிறந்தவனான அந்தப் பிருதுவும் மரணமடைந்தான். உன் புத்திரனுக்காக நீ வருந்தவேண்டாம். ஓ! ஸ்ருஞ்சய! நான் சொல்வதெல்லாம் கேட்டு நீ ஒன்றும் பேசாமலே தியானம் செய்கிறாய். எனது வார்த்தையைக்கேட்கவில்லையா? என் வார்த்தை உன் விஷயத்தில் பயனுள்ளதாகுமாவென நாரதர் கேட்டார்.

அப்போது ஸ்ருஞ்சயன் நாரதரைப்பார்த்து மஹாத்மாக்களும் புண்யசாலிகளுமான அரசர்களைப்பற்றியதும் சோகத்தை விலக்குவதுமான உமது வார்த்தை பயனளிக்கின்றன [illegible] தங்கள் தரிசனத்தினாலேயே நான்சோகமற்றவனானேன். அடியேன்மீது தங்களுக்கு அநுக்ரஹமிருக்குமானால் இப்பொழுது என் புத்திரன் ஜீவித்து நான் அவனுடன் சேரவேண்டும் என்று கேட்டான். நாரதர், பர்வதர் என்ற ரிஷியால் உனக்களிக்கப்பட்டவனும் ஸுவர்ணஷ்டீவி என்று சொல்லப்பட்ட உன் புத்திரனை ஆயிரம் பிராயமுள்ளவனாய் நான் திரும்பவும் உனக்குக்கொடுக்கிறேன் என்றார்.

215255


அநாவசியமாக ஏன் — —
— — அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

திப்பிராஜபுரம்.

பிரும்ம வித்யா ஸபா.

17-9-38உ ஸ்திர வாரத்தில் பிரும்மஸ்ரீ ஆடுதுறை பெருமாள் கோயில் லக்ஷ்மீகாந்த சர்மா அவர்களால் குசேலோபாக்யானம் பாகவதோக்த ப்ரகாரமாயும், அநேக ஸ்வயம் கவன ச்லோகங்களுடனும் ஸ்ரீமத் அய்யாவாள் ச்லோகங்கள், அதன் விசேஷ தாத்பர்யங்களுடனும் வெகு உத்ஸாகமாயும் திருப்திகரமாயும் உபன்யசிக்கப்பட்டது.

24-9-38, 1-10-38உ ஸ்திர வாரங்களில் பிரும்மஸ்ரீ மந்திமூர்த்தி கிருஷ்ண சாஸ்திரிகளவர்கள் தேவீ பாகவதோக்த மதுகைடப வதம் என்கிற ஆக்கியான ரஹஸ்யத்தை அழகாகவும் விஸ்தாரமாகவும் உபன்யசித்தார்.

8-10-38உ ஸ்திர வாரத்தில் உள்ளூர், நன்னிலம் போர்டு ஸ்கூல் ஸம்ஸ்கிருத அத்யக்ஷர் சிரோமணி ப்ரும்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகளவர்களால் தர்மத்தைப்பற்றியும் உதாஹரணமாக வால்மீகி ராமாயணத்தில் சில சில திருஷ்டாந்தங்களுடன் அதி சிலாக்கியமாக உபன்யஸிக்கப்பட்டது.

15-10-38உ ஸ்திர வாரத்தில் சேங்காலிபுரம் ப்ரஸங்கபானு பிரும்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகளவர்கள் சாக்ஷாத் பிரும்ம வித்யையின் தத்வத்தைப்பற்றியும், நமது பாரத நாட்டின் முக்ய லக்ஷ்யம் ஆதி முதல் நிவிருத்தி மார்க்கம் ஒன்றே என்ற விஷயத்தைப்பற்றியும், வேத சாஸ்திர, இதிஹாஸ, புராணாந்தர்கத அதி நுட்ப ரஹஸ்யங்களையும், ஸ்ரீமத் ஆதி சங்கர பகவத் பாதாள் அத்வைத மத சித்தாந்தம் பண்ணியிருக்கிற பெருமையையும் பற்றி வெகு தெளிவாகவும், அழகாகவும் எடுத்துச்சொல்லி உத்கோஷித்தார்:— மேன்மேலும் இப்பேர்ப்பட்ட ஸபைகள் ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டிய ஆவசியகத்தையும், அதற்கு தன்னாலான வரையில் ஈடுபட்டு உழைக்க கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாயும், அதற்கு நம் எல்லோருக்குமே அவசியமான நெருக்கடி லோகத்தில் ஏற்பட்டிருப்பதாயும், வெகு உருக்கமாயும், நவீன முறை [illegible] உபமான உபமேயங்களுடனும் ஸதஸ்யர்கள யாவரும் ப்ரமிக்கும்படியும் உபன்யஸித்தார்.

22-10-38உ ஸ்திரவாரத்தில் மந்திமூர்த்தி பிரும்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளவர்கள் தேவீ பாகவதோக்த "சுகஜனனம்" என்கிற சரித்திரத்தை அதி விமரிசையாய் உபன்யசித்தார்.

29-10-38உ ஸ்திர வாரத்தில் உள்ளூர் பிரமஸ்ரீ நாராயணஸாமி ச்ரௌதிகளவர்கள் 'கர்ம' என்கிற விஷயத்தைப்பற்றியும், அதன் ஆவச்யகத்தைப்பற்றியும், வசிஷ்ட, விச்வாமித்ர ஸம்வாதத்தைச்சொல்லி கர்மாவின் மஹிமையைப்பற்றியும், ஈச்வராக்கியானம் என்கிற சரித்திரத்தைச்சொல்லி, பைசாசங்களுக்கும் ஈச்வரருக்கும் நடந்த சம்பாஷணையினால், நாம் செய்ய வேண்டிய, த்யஜிக்க வேண்டிய கர்மாக்களையும் நன்றாக எடுத்துச் சொல்லி, ஸ்வானுபவத்துடனும், உற்சாகத்துடனும், கேட்கிற ஜனங்களுக்கு மேன்மேலும் ஆஸ்திக்கியத்தை விருத்தி பண்ணக்கூடியனவாயுமுள்ளதோர் ப்ரஸங்கத்தை அழகாக செய்து முடித்தார்.

விராட பர்வம்:—ஆஸ்திக சிரோமணியாகிய இவ்வூர் ப்ரும்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்கள் கிருஹத்தில், சென்ற ஒரு வாரகாலமாக ஸ்ரீமத் மஹாபாரதம் விராட பர்வத்தை ஸம்ஸ்கிருதத்தில் மூலமும், தமிழ்ல் அதன் மொழி பெயர்ப்பும் வாசித்து வரப்படுகிறது.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்:— ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை அநுஸ்யூதமாய் நரசிங்கம் பேட்டை ராமு சாஸ்திரிகளவர்கள் ஒரு ச்லோகம் கூட விடாமல் விசேஷ தாத்பர்யங்களுடனும், புராதனசிட்டைகளுடனும் அழகாக சொல்லி வருகிறதில் சென்ற 20-10-38ல் ஸ்ரீராம பாதுகா பட்டாபிஷேக கட்டம் வெகு விமரிசையாகவும் கண்ணியமாகவும் நன்கு நடந்தேறியது. சென்ற 30-10-38ல் ஆரணிய காண்டத்தில் கர தூஷண யுத்தம் ரொம்ப சிலாகிக்கத்தக்கதாயும், அசாத்திய வர்ணிப்பு, சிட்டை, விசேஷார்த்தங்களுடன் நடந்தது.

நமதுநிருபர்.

ஆத்தன்குடி.

ஸநாதன தர்ம மகா சபை.

ஐப்பசி8உ மாலை 4 மணிக்கு பிரம்மஸ்ரீ P.S. சுப்பிரமணிய கனபாடிகள் தலைமையில் ஸபை ஆரம்பமாகியது. கடவுள் வாழ்த்துக்குப் பின் பிரம்மஸ்ரீ வெங்கட்டராம கனபாடிகள் T. P. ஜகதீசய்யர் M. திருவேங்க[illegible] முறையே, ஸம்ஸ்காரம், பிறவிப்பயன், மோக்ஷம், மதாசாரியர்கள் கடமை, என்பன பற்றி உபன்யசித்த பின் வந்தன வாழ்த்துடன் இரவு 8மணிக்கு ஸபை இனிது நிறைவெய்தியது.

எம். திருவேங்கிடமய்யங்கார் காரியதரிசி.

ஸ்ரீ மஹாபாரதச் சுருக்கம்

(ஆதிபர்வம்.)

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யர் வர்களால் மூலத்திலுள்ளபடியேசுருக்கமாக எளியநடையில் எழுதப்பட்டது. பாரதக் கதைகளை இலகுவில் அறிய இன்றியமையாததென்று மேதாவிகளால் புகழ்ப்பெற்றது.

விலை அணா 0 8 0

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்

அருளிச்செய்த
'பதினொரு சில்லரை ரஹஸ்யங்கள்'
முதல்பாகம்
ஸாரஸாரம் முதலியன.
விலை ரூ. 1—8—0.
இரண்டாம் பாகம்.
விரோதபரிஹாரம் முதலியனவும்
பரமபதஸோபாநமும்.
விலை ரூ. 1—4—0.
இரண்டும் சேர்த்து
ஆர்யதர்மம் சாந்தாதார்களுக்கு ரூ 2-4-0

ஸ்ரீ நஞ்ஜீயர் அருளிச்செய்த

ஸ்ரீஸூக்தபாஷ்யம்.

ஸ்ரீலக்ஷ்மீஸஹஸ்ரநாமம், லக்ஷ்மீ அஷ்டோத்ரம், திருக்கோட்டியூர் ஸ்ரீ உ-வே. ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமியின் முகவுரை, புதுக்கோட்டை A. ஸ்ரீநிவாஸராகவன் M. A அவர்களின் ஆங்கிலமொழி பெயர்ப்புடன் கூடிய சதுச்லோகி, ஸ்ரீ குணரத்ந கோசம், ஸ்ரீஸ்துதி முதலியன அடங்கியது

விலை. ரூ. 1 8 0

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.

" ஆர்யா சதகம் "

Mr. G. V. கணேசய்யர், B A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது. தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0

ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு விலை அணா 6.

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

ஸ்ரீஜனார்தந அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works Ltd, Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அத்யாத்மம்

4 ரூ
23 44

10-11-1938

215256

938/8
9/8
215256
26 NOV 1938
MADRAS
602

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்யஞு ஐப்பசிமீ 25உ 1938ஞு நவம்பர்மீ 10உ. | வ 44

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

கும்பகோணம் பாங்கி, லிமிடெட்
(1904-ஆம் ஸ்தாபிக்கப்பட்டது)

ஹெட் ஆபீஸ்:- 54, பெரியதெரு. கும்பகோணம்.
லோகல் சப் ஆபீஸ் யானையடி ரோடு.
பிராஞ்சுகள்:— மன்னார்குடி, நாகப்பட்டணம், நன்னிலம், அய்யம்பேட்டை.

ஏற்படுத்தப்பட்ட மூலதனம் } ரூ. 5,00,000
வசூலிக்கப்பட்ட மூலதனம் } ரூ. 2,85,585

காப்பு நிதிகள் ரூ. 2,00,000க்குமேல்.

டி பாங்கி ஆபீஸுகளில் சகலவிதமான பாங்கி வேலைகளும் நடத்தப்படும்.

சென்னை மேயர்.

சென்னை கார்ப்பரேஷனுக்கு ஸ்ரீமான் கே. வெங்கிடஸாமி நாயுடு என்கிற காங்கிரஸ்காரர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் சென்னை ராஜாங்க ஸபை மெம்பரும் உபதலைவருமாவார்.

ஆலயப் பிரவேசம்.

மதஸ்தாபன போர்டு சுற்றறிக்கை.

சென்னை ஹிந்து மதஸ்தாபன-போர்டார் இந்த மாகாணத்திலுள்ள தேவாலயங்களின் டிரஸ்டிகளுக்கு ஓர் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். ஆலயப் பிரவேசத்தை எப்படி சாதிக்கலாமென்றும், வேறு ஆலோசனைகளும் கேட்கப்பட்டிருக்கின்றன. கோவில்களில் கதர் துணியையே உபயோகிக்கும்படியும் ஓர் சுற்றறிக்கை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

உதவி இந்தியா மந்திரி.

சீக்ய கோவிலுக்கு நன்கொடை.

உதவி இந்தியா மந்திரியான கர்னல் மூர்ஹெட் அமிர்த ஸரஸ்ஸுக்குச் சென்று சீக்யக் கோவிலைப் பார்த்தார். அதற்கு 5 ரூபாய் நன்கொடை கொடுத்தார். ஜலியன் வாலாவையும் அவர் பார்த்தார்.

பொப்பிலி ராஜா ராஜிநாமா.

ஜஸ்டிஸ் கக்ஷியின் சாச்வதத் தலைவரான பொப்பிலி ராஜா தமது பதவியை ராஜிநாமா செய்து விலகிவிட்டதாகத் தெரிகிறது.

ஸுபாஷ் போஸ் பேசமுடியவில்லை.

ராஜ ஷாஹியில் காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் ஸுபாஷ் போஸ் ஒரு மாணவர் கூட்டத்தில் பிரஸங்கம் செய்தார். அச்சமயம் அங்கு கூடியிருந்த முஸ்லீம் மாணவர்கள் பெருங்கூச்சல் போட்டு கலஹம் விளைவித்தார்கள். இதனால் ஸுபாஷ் பாபு பேசமுடியாமல் கூட்டத்தைவிட்டுப் போக நேர்ந்ததாம்.

சர்ச்சுகளில் துர்மார்க்கம்.

ஆஸ்திரியாவில் நடவடிக்கை.

ஆஸ்திரியா தேசத்தில் கிறிஸ்தவ சர்ச்சுகளில் மிக்க ஆபாஸமாக துன்மார்க்கப் பழக்கங்கள் அதிகரித்து வருவதால் அந்த சர்ச்சுகளை மூடிவிடும்படி கவர்ன்மெண்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள். ஒரு சர்ச் விருந்த 9-பாதிரி ஸன்யாஸிகளும் 30 சிப்பந்திகளும் துர்மார்க்கம் காரணமாகக் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

வரதக்ஷிணை மசோதா.

இலங்கையில் தோல்வி.

இலங்கை சட்ட ஸபையில் வரதக்ஷிணைத் தடுப்பு மசோதா கொண்டு வரப்பட்டது. ஆனால் அதற்கு எதிராகவும் ஸாதகமாகவும் ஸமமாக ஓட்டுக் கிடைத்ததால் அக்கிராஸனாதிபதியின் வோட்டைகொண்டு மசோதா தோற்கடிக்கப்பட்டது. திருவாங்கூர் ஸ்திரீகள் வரதக்ஷிணையை ஒழிக்க தீவ்ர பிரசாரம் நடத்தப் போகிறார்களாம்.

காங்கிரஸின் பஹிஷ்காரம்.

இந்தியா [illegible] பற்றி விசாரணை செய்ய வந்திருக்கும் சாட்பீல்டு கமிட்டியை பஹிஷ்கரிப்பதாயும், அதன் முன்பு ஸாக்ஷ்யம் கொடுப்பதில்லையென்றும் காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது.

வைத்யக்கல்லூரி தலைவர்.

சென்னை மெடிகல் காலேஜ் தலைவராக டாக்டர் லக்ஷ்மணஸாமி முதலியார் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இது வரையில் இந்த ஸ்தானத்திற்கு வெள்ளைக்காரர்களே நியமிக்கப்பட்டு வந்ததை காங்கிரஸ் மந்திரிகள் மாற்றி விட்டார்கள். இவர் ஏ. ராமஸாமி முதலியாரின் ஸஹோதரர்.

திருவாங்கூர் கைதிகள் விடுதலை

திருவாங்கூர் ராஜ்யக் கைதிகளில் இது வரையில் 300 பேர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். பலாத்காரக் குற்றத்தில் ஸம்பந்தப்பட்ட கைதிகளை விடுவிக்க ஸர்க்கார் உத்தேசிக்கவில்லையாம்.

தமிழுக்கு ஆதரவில்லை.

சிதம்பரம் அண்ணாமலை ஸர்வகலாசாலையில் எல்லா நடவடிக்கைகளும், தஸ்தாவேஜிகளும் தமிழிலேயே இருக்கவேண்டுமென்ற தீர்மானத்தை கனம் ஸ்ரீநிவாசசாஸ்திரியார் எதிர்த்துப்பேசினார். தீர்மானம் தோல்வியுற்றது.

காந்தி; வைஸ்ராய் ஸந்திப்பு.

ஸ்ரீமான் காந்தி எல்லைப்புறத்திலிருந்து திரும்பும்போது டெல்லியில் கனம் வைஸ்ராயைக்கண்டு பேச ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

விசுவாமித்ர தசரத ஸமாகமம்.

ஸ்ரீராமனை யாகரக்ஷணத்திற்கு அனுப்பியது.

யோக சாஸ்திர நிரூபணம்.

விச்வாமித்திரர் யோக சாஸ்திரப்படி இன்னாரென்று அறிய அவருடைய பரம்பரை இராமாயணத்தில் சொல்லியபடி தெரிந்து கொள்ளவேண்டும். அதன்படி ஆதியில் குசன் என்ற ஒருவர் பிரஹ்மாவுக்குப் பிள்ளை பிறந்ததாயும் அந்த குசனுக்கு 1 குசாம்பன் 2 குசநாபன் 3 ஆதூர்தரஜஸ் 4 வஸு என்று நாலு பிள்ளைகள் பிறந்ததாயும் அவர்களில் குசநாபனுக்கு நூறு புத்திரிகள் உண்டானதாயும் அந்த நூறு புத்திரிகளும் பெரியவர்களாகி ஒரு நாள் வெளியே உத்யானவனத்திற்குப் போயிருந்த போது வாயு பகவான் அவர்கள் ரூபத்தைக்கண்டு மோகம் கொண்டு அவர்களை தன்னைக்கல்யாணம் செய்து கொள்ளும்படி கேட்டதாயும் அவர்கள் அதற்கு இணங்காமல் தன் தகப்பனாரைக் கேட்க வேண்டுமென்று சொன்னதாயும் அதனால் வாயு அவர்கள் பேரில் கோபம் கொண்டு அவர்கள் சரீரத்தில் புகுந்து வாத ரோகத்தை உண்டுபண்ணினதாயும் அதைத்தன் தகப்பனாரிடம் போய் சொன்னவுடன் அவர் வாயுவின் பேரில் கோபம் கொண்டு தன்னுடைய நூறு பெண்களையும் சூளி என்ற ரிஷியின் புத்திரனான பிரம்மதத்தனுக்கு அவர்களை கல்யாணம் செய்து கொடுத்ததாயும் அதுகண்டு வாயு அவர்கள் சரீரங்களை விட்டு விலகி விட்டதாயும் அதற்குப்பிறகு குசநாபனுக்கு காதி என்ற ஒரு பிள்ளை பிறந்ததாயும் அந்த காதிக்கு விச்வாமித்ரர் பிள்ளை யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த விச்வாமித்ரருடைய பரம்பரையின் விபரங்களையும் யோக சாஸ்திரத்தின் அங்கங்களையும் ஒத்துப்பார்த்தால் யோக சாஸ்திரத்தை குசனென்றும் அதன் அங்கங்களை அவருடைய ஸந்ததிகளாகவும் சொல்லப்பட்டிருக்கிறதாக தெரிகிறது. குசனை யோக சாஸ்திரமென்று வைத்தால் குசன் பிரஹ்மாவுக்குப்பிள்ளை என்று சொல்லியிருப்பதால் யோக சாஸ்திரமும் பிரம்மாவினால் உண்டுபண்ணப்பட்டதென்று நினைக்க இடமுண்டு. பதஞ்சலி யோக சாஸ்திரத்தைச் செய்தார் என்று சொல்வதையும் கூட அவர் ஏற்கனவே இருந்த யோக ஸூத்திரங்களை ஒன்றாக சேர்த்து ஒரு சாஸ்திரமாக எழுதினதாக சொல்ல இடமுண்டு. அந்த குசனுக்கு 1 குசாம்பன் 2 குசநாபன் 3 ஆதூர்தரஜஸ் 4 வஸு என்று நாலு பிள்ளைகளை அந்த யோகசாஸ்திரத்தின் நாலு பாதங்களாக சொல்லலாம். அதன் முதல் இரண்டு பாதங்களும் ஸாக்ஷாத் யோக சாஸ்திரமாயிருப்பதால் அவைகளின் பெயரும் குசாம்பன் குசநாபன் என்ற பெயர்களும் ஒத்தமையாக இருக்கின்றன. குசநாபனுக்கு நூறு புத்திரிகள் என்பதை யோக சாஸ்திரத்தில் முதல் பாதத்திலுள்ள 51 ஸூத்திரங்களில் முதல் ஸூத்திரம் "அதஹ யோகாநு சாஸனம்" யோகம் விவரிக்கப்படுகிறது என்று மட்டும் சொல்லி இருப்பதாலும் இரண்டாவது ஸூத்திரம் முதல் தான் யோக சாஸ்திரம் சொல்லப்படுவதாலும் அதைத்தள்ளி இரண்டாவது ஸூத்திரம் முதல் நூற்றி ஒருவது ஸூத்திரம் வரையுள்ள நூறு ஸூத்திரங்களிலும் யோகம் அனுஷ்டிக்கவேண்டிய விபரங்கள் சொல்லப்பட்டிருப்பதாலும் அந்த நூறு ஸூத்திரங்களையும் குசநாபனுடைய நூறு பெண்களாக வைத்தால் அதன் நூறுவது ஸூத்திரம் இரண்டாவது பாதத்திலுள்ள 50 வது ஸூத்திரமாவதாலும் அந்த ஸூத்திரத்தில் பிராணாயாமம் செய்யும் விவரம் சொல்ல ஆரம்பிக்கப்படுவதாலும் அந்த நூறு பெண்களையும் பிரஹ்மதத்தனுக்கு அர்ப்பணம் செய்த உடன் வாயு சேஷ்டை நிவர்த்தி ஆனதாக சொல்லப்பட்டிருப்பதாலும் அந்த நூறு ஸூத்திரங்களில் சொல்லப்பட்ட யோக நிஷ்டையை பிரஹ்மஞானம் அடையவேணுமென்று எண்ணி பிரம்மத்தின் மூர்த்தியை த்யானம் செய்து பிராணாயாமம் செய்தால் வாயு சேஷ்டை அன்றியில் பிராணாயாமம் ஸித்திக்கிறதென்றதை காட்ட அந்த நூறு பெண்களையும் பிரம்மதத்தனுக்கு அர்ப்பணம் செய்தவுடன் வாயு சேஷ்டை விலகி விட்டதென்று சொல்லப்பட்டிருப்பதாயும் அர்த்தம் செய்ய இடமுண்டு. இதே ரஹஸ்யத்தை இல்வலன் வாதாபி என்ற கதையும் நிரூபணம் செய்வதாகச்சொல்லலாம். வாதாபி என்பது பிராணாயாமம் செய்கையில் உள்ளே போகும் காற்றாகவும் அது பிராணாயாமத்தில் பிரம்ம த்யானத்தைச் சரியாகச்செய்யாத பிராம்மணர்களைக் கொன்று விட்டதாயும் அகஸ்தியர் அதை சரியானபடி செய்ததால் அவர் வாதாபியை கொன்று விட்டதாய் சொல்லியிருப்பதும் இந்த அருத்தத்திற்குப் பொருத்தமாக இருக்கிறது. மேலும் பால காண்டம் 21 வது ஸர்க்கம் 14 முதல் 16 வரையுள்ள ச்லோகங்களிலும் கிருசாச்வர் என்று ஒருவர் இருந்ததாயும் அவருக்கு ஜய என்றும் ஸுப்ரபா வென்று இரண்டு பெண்சாதிகள் என்றும் அவர்களில் முதல் பெண்சாதிக்கு 50 புத்திரர்கள் என்றும் இரண்டாவது பெண்சாதிக்கும் 50 புத்திரர்கள் என்றும் அந்த முதல் 50 புத்திரர்களும் அஸ்திரங்கள் என்றும் இரண்டாவது 50 புத்திரர்களும் [illegible] அந்த நூறு அஸ்திர சஸ்திரங்களும் விஸ்வாமித்ரருக்கு அர்ப்பணம் செய்யப்பட்டதாயும் அவைகள் அஸுரர்களைக் கொல்ல உபயோகப்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நூறு புத்திரர்களும் மேலே சொன்ன குசநாபன் புத்திரர்களாகச்சொல்லப்பட்ட நூறு ஸூத்திரங்கள்தான் என்றும் சொல்ல இடமுண்டு. குசன் என்ற பதமும் கிருசாச்வன் என்ற பதமும் யோக சாஸ்திரத்தைக் குறிப்பதாகச் சொல்லலாம். குசன் என்ற பதத்தில் "கு" என்றால் கெட்டது என்று அருத்தம். "சா" என்றால் கொல்லுகிறது என்று அருத்தமாதலால் குசன் என்பதற்கு பாபத்தைக்கொல்லுகிறது என்று அருத்தம்வைத்தாலும் யோக அநுஷ்டானம் பாபத்தை கொன்று விடுவதால் குசன் என்பது யோக சாஸ்திரமாக அருத்தம் செய்யலாம். அதுபோல க்ருசாச்வன என்றாலும் யோக சாஸ்திரம் என்று அருத்தம்செய்யலாம். க்ருச என்றால் மெலிவு என்று அருத்தமாதலாலும் "அச்வ" என்றால் இந்திரியங்கள் என்று உபநிஷத்தில் சொல்லியிருப்பதால் க்ருசாச்வன் என்றால் இந்திரியங்களை அடக்கு முறையாகிற யோக சாஸ்திரத்தையே குறிப்பதாகச் சொல்ல இடமுண்டு.

மேலே சொன்ன குசனுடைய சரித்திரத்தில் அந்தகுசனுடைய நூறுபுத்திரிகளையும் பிரஹ்மதத்தனுக்கு கல்யாணம் செய்து கொடுத்தபிறகு காதி என்று ஒரு பிள்ளை அவருக்கு பிறந்ததாயும் அவருடைய பிள்ளை தான் விச்வாமித்ரர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. காதி என்ற பதத்தில் "கா" என்றால் பாட்டு என்றும் "தி" என்றால் அவைகளின் சேர்க்கை என்றும் அர்த்தமாதலால் காதி என்றது யோக ஸூத்திரங்களின் ரூகங்களை குறிப்பதாயும் அவர் பிள்ளையாகிற விச்வாமித்ரர் என்ற பதத்திற்கு "உலகத்திற்கு சிநேகிதர்" என்று அருத்தமாவதால் அவரையும் யோக சாஸ்திரத்தின் பாகமாயும் அவர் யோகத்தை சிலஸித்திகளை அடைய செய்து யோகத்தை வ்யர்த்தம் செய்து பிரஹ்மஞானத்தை அடையாததாலும் அந்த சாஸ்திரத்தின் முதல் இரண்டு பாதங்களும் ஸாக்ஷாத் யோக சாஸ்திரமாயும் அதின் மூன்றாவது பாதம் ஸித்திகளைப் பற்றிச் சொல்வதாலும் அதை அடைய பிரயத்தனப்பட்டால் பிரம்ம ஞானம் அடைய இடமில்லாததாலும் அவ்விதம் தபஸை வ்யர்தம் செய்ததாக விச்வாமித்ரரை சொல்லியிருப்பதால் அவரை யோக சாஸ்திரத்தின் முதல் மூன்று பாதங்களாயும் வஸிஷ்டர் யோகாநுஷ்டானத்தை ஸித்திகளுக்கு ஆசைப்படாமல் செய்து பிரம்ம ஞானத்தை அடைந்ததாக சொல்லியிருப்பதால் அவரை யோக சாஸ்திரத்தின் முதல் இரண்டு பாதங்களும் நான்காவது பாதமாகிற கைவல்யபாதமும் சேர்ந்ததாகவும் வஸிஷ்டருக்கும் விச்வாமித்ரருக்கும் நடந்த சண்டையை யோக சாஸ்திரத்தின் மூன்றாவது நான்காவது பாதங்களுக்குள்ள விரோதத்தை எடுத்துக்காட்டுகிறதாயும் அருத்தம் செய்ய இடமுண்டு. இதை யோக சாஸ்திரத்தின் மூன்றாவது நான்காவதுபாதங்களின் பெயர்களும் உறுதிப்படுத்துகிறது. குசனுடைய மூன்றாவது பிள்ளை பெயர் ஆதூர்த்தரஜஸ் என்பது விச்வாமித்ரருடைய செய்கைகளைக் குறிப்பதாயும் நான்காவது பிள்ளையின் பெயர் வஸு என்று இருப்பதால் அந்தப்பெயர் வஸிஷ்டர் என்ற பெயருக்கு ஒத்திருப்பதுடன் அது கைவல்யபாதமாதலால் அவர்செய்கைக்கும் ஒத்திருக்கிறது. மேலும் விச்வாமித்ரருடைய பிள்ளைகளுக்குப்பெயர் மதுச்சந்தர்கள் என்றதால் அதுவும் யோக சாஸ்திரத்தின் சத்தனை குறிக்கிறது. மேலும் குசன் என்ற பதம் வேறு எங்கே வருகிறதோ அதையும் பரிசோதித்தால் அது யோக சாஸ்திரத்தை குறிப்பதாக அருத்தம் செய்யலாம். ஜனகர் பிரம்ஹஞானியானதால் அவர் தம்பிக்குப்பெயர் குசத்வஜர் அதுபோல ஸீதை பிரம்ஹ வித்தையாதலால் அவள் மூத்த பிள்ளையின் பெயர் குசன். கீதையின் ஒவ்வொரு அத்யாயத்திலும் முடிவில் "பிரம்ஹ வித்யாயாம் யோக சாஸ்திரே" என்று யோக சாஸ்திரத்தை பிரம்ஹ வித்தையின் பாகமாகச் சொல்லப்பட்டிருப்பதால் குசத்வஜனாகிற யோகசாஸ்திரத்தை பிரம்ஹஞானியான ஜனகருக்குத்தம்பியாயும் குசனாகிற யோகசாஸ்திரத்தை ஸீதையாகிற பிரம்ம வித்தையின் புத்திரனாகச்சொன்னதும் பொருத்தமாக இருக்கிறது. ஸீதையின் முதல் பிள்ளையை யோக சாஸ்திரத்தின் முதல் இரண்டு பாதங்களாயும் அவளுடைய இரண்டாவதுபிள்ளையாகிற லவனை அந்த சாஸ்திரத்தின் மூன்று நான்காவது பாதங்களாயும் சொல்லலாம். ஏனென்றால் அதன் முதல் இரண்டு பாதங்களும் ஸாக்ஷாத் யோக சாஸ்திரமானதால் மூத்த பிள்ளைக்கு குசன் என்ற பெயர் பொருத்தமாக இருக்கிறது. மூன்றாவது பாதத்தின் பெயர் ஆதூர்தரஜஸ் அதில் முக்கியமான பாகம் "ரஜஸ்", நான்காவது பாதத்தின் பெயர் "வஸு" இந்த இரண்டு பெயர்களின் முதல் எழுத்துக்களை ஒன்று சேர்த்தால் "ரவ" என்று வருகிறது. ஸம்ஸ்கிருதத்தில் "ர"வுக்குப்பதில் "ல" வருமாதலால் "ரவ" என்றது "லவ" என்று மாற்றப்பட்டிருக்கிறது. ஆகையால் ஸீதையினுடைய இரண்டு பிள்ளைகளும் சேர்ந்து யோகசாஸ்திரத்தைக்குறிக்கிறது. அவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து இராமாயணத்தைப் பாடினார்களென்பது இராமாயணம் யோக சாஸ்திர நிரூபணம் தான் என்பதை உறுதிப்படுத்துகிறது.

மேலும் குசத்வஜனுடைய புத்திரிகளான மாண்டவி, ச்ருதகீர்த்தி என்பவர்களை பரதன்,

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க.)

சாஸ்திர பலமே ஸர்வஜன வச்யகரம்.

நாஸ்திக்ய பூர்ண பலம் நசுக்கப்படவேண்டிய காலம் வந்துவிட்டபடியால் "சர்வஜன வச்யம்" என்னும் அரசியல் துறையில் சம்பாதித்த ஆயுதம் ஆஸ்திக்யத்தை தொலைப்பதற்கு உபயோகிக்க தன் வசம் இருக்குமென்று துள்ளுகிறது. ஜாதிமத பேதங்களும் சாஸ்திர ஆதாரங்களும் சண்டைக்கும் அடிமைத் தனத்திற்கும் காரணபூதமென்றும் பிராசீன கொள்கைகளற்ற தற்கால பிரமுகர்கள் நடிப்பதைக்கண்டு மயங்கி அவர்கள்பால் திரளான பாமரர்கள் சாருகின்றனர். யார் வார்த்தையை, எதற்காக, எவ்விஷயத்தில் மட்டும். எக்காலத்தில் மட்டும் எப்பேர்ப்பட்டவர்கள் கேட்டு எப்படி நடப்பது என்ற வியவஸ்தை தொலைத்துக்கொண்டு பல பாமரர் நாஸ்திக்ய சிகாமணிகளிடம் இணங்கிக்கொண்டு போவதையும் காண்கிறோம்.

சகல வாதங்களை அறிந்த அதார்மிக பிரமுகர்கள் தார்மிக உணர்ச்சி இல்லாத தோஷத்தால்தான் தாம் கெட்டதுமன்றி ஆஸ்திகப்பற்றுள்ள பலகோடிஸாதுக்களையும் பொய் பிரசாரத்தால் கெடுத்துவிடலாமென்றிருக்கிறார்கள். சாஸ்திரத்தையும், சாதுக்களின் கருத்தையும், தங்கள் மறைவான நோக்கங்களையும் மறைத்துத் திரித்து ஓயாமல் மலைமலையாய் பத்திரிகை, மேடை, சங்கம் முதலான சகல சாதனங்களையும் உபயோகித்து பொய் பிரசாரக் குப்பையைக் குவித்துவிட்டனர். குப்பை மலை மிகவும் பெரியதாகவும் உறுதியாகவும் ஆகிவிட்டபடியால் காலம் மாறி எல்லாம் தன் வசமாகி விடுமென்று நாளுக்குநாள் சீறுகிறது. உறுமுகிறது, கர்ஜிக்கிறது, கடைசியாக அரசியல் சட்டம் போடுகிறது. ஓர் அணுப்பிரமாணம் உண்மை, சாத்விகம், தெய்வீகத்தன்மை என்ற சொரூபத்தை உடைய ஆஸ்திகப் பிரசாரம் என்ற அக்னி இதோடு சம்பந்தப்பட வேண்டிய காலம் வந்துவிட்டபடியால் பொய் பிரசாரம் தகிக்கப்பட்டு ஆஸ்திக்யம் ஓங்கி நிற்கும்.

நிஷ்பக்ஷபாதமான பண்டித பரிஷத்தொன்றும் போடமுடியாமலும், மத விஷயமான ஆதாரங்களோடு பாமரர்களுக்கு பேச்சு சுதந்திரமளித்தது. அந்த ரீதியாய் சித்தாந்தங்கள் ஒன்றும் செய்யாமலும், மேனாட்டு நாகரீகத்தாலும் பிரசார அசௌகரியங்களாலும் உண்மை தெரியாத பாமர ஹிந்துக்களுக்கு அரசியல் நெருக்கடி மிகப் பெரிதாக உதயமாகும் காலம் பார்த்து ஹரிஜனங்களுக்கு ஆலயப்ரவேச உரிமை என்னும் வியாஜத்தால், மத அறிவையும் நம்பிக்கையும் அனுஷ்டானத்தையும் தொலைக்கிறார்கள். நம்மத கோடாலிக்காம்புகள் இவர்கள், சனாதனிகள் என்ற பதத்திற்கு அர்த்தம் தெரியாத மத விரோதிகள். மத தத்துவங்களுக்குத் தகுந்தபடி காலத்தை மாற்றவேண்டும் என்று சொல்லத்தெரியாமல் கெட்டகாலத்திற்குத் தகுந்தபடியெல்லாம் நிர்பந்தமான பொய்பிரசாரமூலம் ஹிந்துக்கள் மாறி மாறி மனமாறி, மதமாறி, ஜாதி மாறி, நீதிமாறி பாழடைய செய்கின்றனர். நிர்பந்தமான சட்டங்களை எதிர்ப்பவர்கள் ஏதோ சில பண்டித ரத்னங்கள்தான் என்று ஒருகால் கூறுவதும், மாறுதலை வேண்டாதவர்கள் சில மூடநம்பிக்கையாளர்தான் என்று வேறொரிடத்தில் கூறுவதும், எல்லாரும் மாறிவிட்டனர் என்று சில சமயம் உரைப்பதும், சனாதனிகள் மனமோ மதமோ மாறவேண்டிய காலம் வந்துவிட்டதென்றுரைப்பதும், எல்லாரும் சேர்ந்து தங்களே சம்மதித்து இயற்றிக்கொள்ளும் மதசட்டமென்றும், மகா புனிதமான அரசியல் தத்துவத்திற்கிணங்க சிருஷ்டிப்பட்ட அவசியமென்றும் பல பலவிதமாய் வாய்க்கு வந்தபடியும் வாக்கூடாத வழியாயும் வரும் பிரசார முறைகளை கவனிக்கிறோம்.

நாஸ்திக்யமும் அநாசாரமும் ஊறி ஊறி கெடுக்கப்பட்டவர்கள் சில பெயர்வழிகளே! அவர்கள்தான் குண்டு தைரியமும் பொய் பிரசாரமும் சாஸ்திர வாசனையும் அற்று திரிபவர். அவர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை. கடவுள் பார்த்துக்கொள்ளுகிறார்! நாம் கவலைகொண்டு ரக்ஷிக்கவேண்டுவது யாரிடமென்றால் மத நீதிகளை அனுஷ்டித்தும் தகுந்தபடி சம்வாதம் செய்யத் தெரியாத பாமரர்களிடத்தும், நீதிகளையும் பெரியவர்களின் ஆசாரத்தையும் கண்ணுற்றால் அதன்படி நடக்க சித்தமானவர்களிடத்தும் என்று அறியவேண்டும்.

ஆலயங்கள் ஹரிஜன்ங்களுக்கு பயன்பட்டுக்கொண்டுதான் வந்திருக்கிறது. அவர்களும் ஹிந்துக்கள்தான். அவர்களும் ஆகமத்தை ரக்ஷித்த சிலர்கள். பிறந்த ஜாதி காரணமாக பற்பல அசுசிகளையும் மேனாட்டு நாகரீக நாஸ்திக்யத்தால் உலக அந்தஸ்துக்காக எந்தமதம் வேணுமானால் போய் விடுவோமென்றெல்லாம் சொல்லும் கேவலஸ்திதியில் தான் இருப்பதாக எல்லாரும் பார்க்கிறோம். ஆலயப்ரவேச உரிமை அடையும் நிலைமைக்கு எம்மகான் ஞானஸ்நானம் கொடுத்திருக்கிறார். விரலைமடக்கட்டும்.

தற்சமயம் ஹிந்துமத உண்மை நிலைமையை எடுத்துக்கூறும் சிறுபுஸ்தகத்தை இலவசமாய் வழங்கவேண்டும். மகாசந்நிதானங்களை குறைகூறலாகாது. அவர்கள் ஆசீர்வாதம் அனுக்ரஹம் போதும். தீவிர பிரசாரகோஷ்டி உடனே ஏற்பாடு செய்து மடங்களிடம் யாசகம் செய்தால போதுமானது. மிகச்சிறு சாதுரியமான கோஷ்டிகளாய் ப்ளஷர் கார்களில் துரிதமாய் எல்லா ஊர்களுக்கும் போய் துண்டு பத்திரிகைகளோ, கைப்பிரதிகளோ வழங்கி வரவேண்டும். தற்காலிகப்ரதிநிதி கோஷ்டி ஒன்று ஏற்பட்டு அது அரசாங்கத்தார்களையும் பொதுஸ்தாபன அதிகாரிகளையும் வாதுக்கிழுக்க வேண்டும். ஆலயப்ரவேச சட்டம் போடும் அசுபதினத்தில் ஆலயங்களில் உற்சவமோ, அர்ச்சனைகளோ, சபைகளோ, ஜனங்களோ, பஜனைகளோ பிரம்மாண்ட அளவில் நடத்த ஏற்பாடு இப்போதே துவக்கவேண்டும். தெய்வங்களை ஆலயங்களிலிருந்து ஆகர்ஷிக்க வேண்டுமா? என்று கேட்கவேண்டும். மத விஷயமாய் சட்டசபையில் பேசுவதோ போலிங் நடத்துவதோ கூடாது என்று தடுக்கவேண்டும். ஹிந்துமத தத்வ அனுஷ்டானங்களை நம்பி அனுசரிக்காத பிரஷ்டர்கள் மதவிஷயமாய் ஒன்றும் செய்யக்கூடாதென்றும் அவர்கள் செய்வது சீர்திருத்தமல்ல, மதவிரோதமே என்று கூறவேண்டும். சாமான்ய மனித தர்மமான மத அறிவை கெடுப்பவர் அவர்களே! ஹரிஜனாதி ஸமஸ்த பாமரர்களுக்கும் நேர்வழியில் உய்யும் வழியை காட்டக்கூடியவர் தொன்றுதொட்டு மதத்தை பயபக்தியுடன் அனுஷ்டிப்பவரே! ஈஸ்வரோ ரக்ஷது.

ஹிதவாதி T. A. R.

'ஸௌந்தர்ய லஹரீ.'

காபி ஒன்று விலை ரூ. 1—8—0
தபால் செலவு பிரத்யேகம்.
கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.

காயத்ரீ ராமாயணம்.

இப்பாதங்களுக்கு, முன்னர் நமது ஆர்ய தர்மம் இதழில் நண்பர் ஒருவர் காயத்ரீ ராமாயணத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பாடக்ரமங்கள் இருப்பதால் அவைகளினிடையே எது ஆதாரத்தோடு கூடியது என்று தெரிவிக்குமாறு வேண்டினதாக எனக்கு ஞாபகமிருக்கிறது. இன்னம் என்ன விஷயங்களைப் பற்றி அவர் கேட்டிருந்தாரென்பது ஞாபகத்தில் இல்லை. ஆயினும் மஹேசுவரதீர்த்தீயத்தைப்பார்க்க நேரிடும் போது பின் வரும் ச்லோகத்தில் தென்பட்டது.

காயத்ர்யா: த்ரீணி சத்வாரி த்வே,
த்வே த்ரீணி அத ஷட் க்ரமாத் |
சத்வாரி ஸப்தகாண்டேஷு
ஸ்தாபிதாந்யக்ஷராணிது ||

இதன்படி காயத்ரீ அக்ஷரங்களில் பால காண்டத்தில் மூன்றும் அயோத்யா காண்டத்தில் நான்கும் ஆரண்ய காண்டத்தில் இரண்டும் கிஷ்கிந்தா காண்டத்தில் இரண்டும் சுந்தர காண்டத்தில் மூன்றும் யுத்த காண்டத்தில் ஆறும் உத்தர காண்டத்தில் நான்குமாக அமைக்கப்பட்டிருக்கின்றனவெனத் தெரிய வருகிறது.

கோவிந்த ராஜர் இதைப்பின் பற்றியோ அல்லது மகேச்வர தீர்த்தர் கோவிந்தராஜரைப் பின்பற்றியோ இருவரும் ஒரே பாடத்தை அனுசரித்திருக்கின்றனர். இதன் படி பின் வரும் சுலோகங்கள்தான் காயத்ரீ ராமாயணமாகும்.

பாலகாண்டம் ஸர்க்கம்-1 சுலோகம் 1; 30—18; 63—3.
அயோத்யா காண்டம் 14—36, 44—5, 71—34, 99—25.
ஆரண்ய காண்டம் [illegible]—1, 47—10.
கிஷ்கிந்தா காண்டம் 4—3, 31—1.
சுந்தர காண்டம் 1—1, 27—13, 46—10
யுத்த காண்டம் 1—1, 28—27, 50—38 68—1, 81—1, 114—98,
உத்தர காண்டம் 1—1, 21—7, 41—1. 76—27.

இதற்குப் பல சுருதியாக உத்தரகாண்டம் 111—11, சுலோகத்தை வைத்துக்கொள்ள வேண்டும். ஸர்க்கம் சுலோகம் இவ்விரண்டின் எண்களும் ஸ்ரீ டி. ஆர். கிருஷ்ணாசாரியாரின் 1930ஸுத்திய ராமாயணப் பதிப்பின்படி யுள்ளவை. இதில் உள்ள குறையாதெனில் (குறையென்று கருதினால்) சுலோகங்களில் முதல் எழுத்தெல்லாம் காயத்ரீ அக்ஷரமல்ல பல சுலோகங்களில் நடுவிலும் கடைசியிலும் உள்ளன. ஆனால் அச்சாகி தற்காலம் பிரசாரத்திலிருந்துவரும் காயத்ரீ ராமாயணத்திலோ முதலெழுத்துக்கள் எல்லாம் காயத்ரீ அக்ஷரங்களாக உள்ளன. ஆயினும் முதலில் கூறப்பட்ட பாடத்திற்கு இருவர்களுடைய சம்மதி இருப்பது போல் அல்லாது யாதொரு ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்விரு பாடங்களுக்கும் "தபஸ் ஸ்வாத்யாயநிரதம்" "நிரீக்ஷ்ய ஸ முகூர்த்தம் து" என்ற இரண்டு சுலோகங்களும் பொதுவாகவுள்ளன. பிந்திய பாடத்தில் ஆரண்ய காண்டத்தில் ஒரு சுலோகம் அதிகமாகவும் உத்தரகாண்டத்தில் ஒரு சுலோகம் குறைவாகவும் இருக்கிறது.

எம். ராமராவ்.

பிரும்மஸ்ரீ அருட்கவி சுப்ரமண்ய அய்யர்,
அவர்கள் எழுதியது.
ஸ்ரீ நகர விமர்சனம். 0 12 0
ஸ்ரீ குரு விமர்சனம். 0 5 0
வரிவஸ்யா ரஹஸ்யம். 1 0 0
கிடைக்குமிடம்:— ஜனார்த்தந அச்சுக்கூடம் லிமிடெட், கும்பகோணம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பகுதான்ய-ஞு ஐப்பசி-மீ 25உ

ஜனநாயகத்தின் விபரீத விளைவு.

பம்பாயில் தொழிலாளிகள் பெரிய வேலை நிறுத்தம் செய்துவருகிறார்கள். இதனால் அங்கு உயிர்சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டுவருகிறது. பம்பாய் சட்டஸபையில் காங்கிரஸ் மந்திரிகள் 'தொழில் தகாறு' மசோதா ஒன்றை நிறைவேற்றினார்கள். இந்த மசோதாவானது முதலாளிகளுக்கு அநுகூலம் செய்வதாயும் தொழிலாளிகளுக்கு பிரதிகூலம் செய்வதாயும் [illegible] ஆக்ஷேபிக்கப்பட்டது. பற்பல தொழில் ஸங்கங்களும் மந்திரிகளை இவ்விஷயமாகச் சட்டஸபையிலேயே எச்சரித்தனர். இந்த மசோதாவை நிறைவேற்றினால் லக்ஷம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்செய்து கிளர்ச்சிசெய்து மந்திரிகளைக் கஷ்டப்படுத்தத் தயாராக இருப்பதாக சட்டஸபையிலேயே பயமுறுத்தப்பட்டது.

இப்போது அந்தப்படியே கார்யம் நடந்துவிட்டது. பதினாயிரக் கணக்கான தொழிலாளிகள் வேலை நிறுத்தம்செய்து பெரிய கலவரத்துடன் பலாத்கார கார்யங்களைச்செய்து வருகிறார்கள். இதனால் பம்பாய் நகரம் ரணகளமாகியிருக்கிறது. அடிதடியும், கல்வீச்சும், துப்பாக்கிப் ப்ரயோகமுமாயிருக்கிறது. போலீஸாருக்கும் அடியாம். அங்கு முடிசூடாமன்னராக மதிக்கப்படும் ஸர்தார் படேலையும் தொழிலாளிகள் விடவில்லை. அவரையும் தொந்திரவுசெய்து அவமானப்படுத்தினார்கள். அவர்மீது கல்மாரி பொழியப்பட்டது. அவரது மோட்டார் தாக்கப்பட்டது. கனம் மந்திரி முன்ஷியும் இந்த கதிக்கு ஆளாகவேண்டியிருந்தது. இந்தக் கலஹம் பம்பாயில் மட்டுமில்லை. இதர மாகாணங்களிலும் பரவக்கூடியதாக இருக்கிறது. சென்னையில் உள்ள தொழிலாளிகளும், தலைவர்களும் இச்சமயம் பார்த்துப் பாமரர்களைத் தூண்டிவிட முயற்சிப்பதாகத் தெரிகிறது இங்கும் ஓர் தொழிலாளர் கூட்டத்தில் கலவரம் ஏற்பட்டு போலீஸ்காரர் வரவேண்டியதாயிருந்ததாம். ஆகவே பம்பாய் வியாதியானது தேசமெங்கும் பரவக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது,

பம்பாயில் தேசிய ஸர்க்கார் தான் நடைபெறுகிறது. நம்மவர்கள் தான் முக்ய நிர்வாஹங்களை நடத்தி வருகிறார்கள். முன் காலம் போல் அன்னியர்களான வெள்ளைக்காரர்களுக்கு இப்போது ஆதிக்கமில்லை. தொழிலாளர்களின் நண்பர்களாக நினைக்கப் பட்ட காங்கிரஸ் மந்திரிகளே நம்மை ஆளுகிறார்கள். இப்படி இருக்கையில் கூட அங்கு இத்தகைய கலவரம் ஏன் ஏற்பட்டது?

அன்னியர் ஆதிக்கம் ஒழிந்து, ஜனநாயக தத்துவப்படி இந்தியர்களின் ஆக்ஷி ஏற்பட்டால் அமைதியும், ஸுகவாழ்வும் ஏற்பட்டுவிடுமென்று சொல்லி வந்தார்களே! அதன்படி இப்போதைய அநுபவமென்ன? சென்ற ஒருவருஷகாலமாகக் காங்கிரஸ் ஆக்ஷியானது அநேக மாகாணங்களில் நடந்து வந்தபோதிலும் அங்கெல்லாம் அமைதி ஏற்பட்டிருக்கிறதா? அன்னியாக்ஷி காலத்தில் இருந்த அமைதின்மை, அதிருப்திகளை விட இப்போது நம்மவர் ஆக்ஷியில் அவைகள் அதிகரித்திருப்பதாகவே தெரிகிறது. காங்கிரஸ ஆக்ஷி நடைபெறும் ஒவ்வொரு மாகாணங்களிலும் ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டுப் பெரிய அமளியும், மந்திரிநிர்வாஹத்தில் அதிருப்தியும் இருப்பதை மறைக்கமுடியாது. எலக்ஷனில் தோற்றுப்போன ராஜீயக்கக்ஷியின் மேல் தோஷம் கூறிவிட்டால் மட்டும் போதாது. காங்கிரஸுக்கு உள்பட்டவர்களும் காங்கிரஸ் அபிமானிகளும் கூட அதிருப்தி அடைந்து கிளர்ச்சியில் இறங்கியிருக்கவில்லையா? இப்போது கலஹம் செய்யும் தொழிலாளிகளும் காங்கிரஸ் அபிமானிகளென்றே ஆடம்பரப்படுத்தப்பட்டு வந்தது. ஆயினும் அவர்களே இப்போது காங்கிரஸ் நிர்வாஹத்திற்குக் குழிதோண்ட முன்நிற்கிறார்களல்லவா?

தொழிலாளிகளுக்கு இத்தகைய அடங்காமையையும், துணிவையும் உண்டுபண்ணியது ராஜீயக்கக்ஷிகளே யாகும். இதில் காங்கிரஸ் கக்ஷி முதன்மையானது-ராஜீய காரணத்திற்காக தொழிலாளிகளைத்தங்கள் வசம் இழுத்துக்கொள்ள விரும்பி ஒவ்வொரு கக்ஷியாரும் முயற்சி செய்கிறார்கள். [illegible] மல், கண்மூடித்தனமாக தொழிலாளிக்கு வாக்குறுதி கொடுத்துக்கிளப்பி விட்டு விட்டார்கள். இதுவே தற்போதைய நிலைமைக்கு முக்ய காரணமாகும். காங்கிரஸ்காரர்கள் எலெக்ஷனுக்கு முன்பு அதிதமான ஆசை வார்த்தைகள் சொல்லியதற்கு அளவுண்டா? அந்தச்சலுகையைக் கொண்டே இப்போது தொழிலாளிகளும், அவர்களுடைய தலைவர்களும், தங்களிஷ்டப்படியே மந்திரி ஸபை ஆடவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஐக்ய மாகாணத்தில் கிருஷிகர்களை தப்பு வழியில் தூண்டிவிட்ட காங்கிரஸ் தலைவர்களே இப்போது அங்கு அதை ஸமாளிக்கமுடியாமல் தவிக்கிறார்கள். இப்போது ஸ்ரீமான் படேல் என்ன சொல்லுகிறார்? பழைய அதிகாரவர்க்கம் சொன்ன பேச்சையே திருப்பிச்சொல்லுகிறார். பலாத்காரத்திற்கும் பயமுறுத்தலுக்கும், மிரட்டலுக்கும் மந்திரி ஸபை பயப்படாதென்றும் எல்லாவித உபாயத்தினாலும் கலவரத்தை அடக்கித் தீருவோமென்றும் அவர் கூறுகிறார்.

ஜனநாயக ஆக்ஷியில் எப்போதும் இந்த நிலைமையே ஏற்படக்கூடியது. அந்த ஆக்ஷியில் பாமரர் முதல் யாவரும் ஓட்டுரிமை பெற்று யஜமானர்களாக ஆகிவிடுகிறார்கள். பாமரர்களைக்கொண்டே ராஜ்யத்தை நடத்த வேண்டுமென்ற எண்ணம் காங்கிரஸுக்கும் மற்றும் சில அதிதீவிர ராஜீயக் கக்ஷிகளுக்கும் இருந்து வருகிறது. ராஜ்ய நிர்வாஹம் நடத்துகிறவர்கள் எந்தக் கக்ஷியாராயிருந்தாலும் அவர்கள் செய்யும் சட்டதிட்டங்கள் மற்றொரு கூட்டத்தாருக்குப் பிடிக்காமலிருக்கலாம். அப்போது அவர்கள், வேலை நிறுத்தம், கலஹம், ஸத்யாக்ரஹம், சட்ட மறுப்பு முதலிய வழிகளில் இறங்குவார்கள். இப்படி ஒருவர் மாற்றி ஒருவராக ஒவ்வொரு கக்ஷியாரும் தங்களுக்குப் பிடிக்காததை எதிர்த்துக் கிளர்ச்சி செய்துகொண்டிருந்தால் தேசத்தில் அமைதி எப்படி ஏற்படும்? என்றைக்கு ஏற்படும்? ஜனநாயக முறை நடக்கும் மேற்றிசைகளில் இத்தகை அமைதியின்மை ஓயாமல் ஏற்பட்டுவருவதைப் பார்க்கிறோம். மேற்றிசைகளிலிருந்து இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட தற்கால ஜனநாயக முறையுடன் இந்த அமைதியின்மையும் தேசத்தில் இறக்குமதியாகிவிட்டது. ஆதலால் இனி அமைதிக்கு ஒருநாளும் இடமில்லை.

புத்திமான்களும், படித்தவர்களும், தீர்க்கதர்சிகளுமான பெரியோர்கள் சேர்ந்து பாமரர்களுடைய நன்மையை முன்காலங்களில் நிர்ணயித்து வந்தார்கள். மேல் நிலைமையில் இருப்பவர்களே கீழ் இருப்பவர்களின் க்ஷேமத்தைக்கவனித்து வேண்டிய விதங்கள் செய்தார்கள். தற்போது, கீழ்நிலைமையிலுள்ள பாமரர்களே தங்கள் நன்மையை நிர்ணயிக்க விரும்புவதுடன் மேலே இருப்பவர்களுக்கும் யஜமானர்களாக ஆகிவிட விரும்புகிறார்கள். இந்த மாதிரியான பாமரராஜ்யமும், பாமர ஆதிக்கமும் ஏற்பட்டு வியவஸ்தையும், ஜன ஸமூஹ க்ஷேமமும் அடியோடு கெடுப்பதற்கு தற்கால ஜனநாயகத்தில் இடமிருப்பதையே பம்பாய் கலஹம் உணர்த்துகிறது.

குறிப்புகள்.

வருண ஜப பலன்.

இவ்வருஷம் புரட்டாசி மாதம் முதலாக தமிழ் ஜில்லாக்களில் மழை பெய்யாத காரணத்தால் பொது ஜனங்களுக்கு விசேஷ அசௌகர்யங்களும், கவலையும் ஏற்பட்டிருந்தது. வியவஸாயிகள் பட்ட கவலையை வர்ணிக்க முடியாது. சம்பா பயிர்களெல்லாம் [illegible] இதைக்கண்டு விசாரம் அடைந்த ஆஸ்திகர் பல வழிகளால் தெய்வ வழிபாடு செய்து மழை பெய்யப் பிரார்த்திக்கத்தொடங்கினர். விராட பர்வ படனம், வருணஜபம் போன்ற ஸத்கார்யங்களும் அங்காங்கு நடைபெறலாயின.

கும்பகோணத்தில் ஸ்ரீமான் வி. என். தீக்ஷிதர் முதலிய சில ஆஸ்திகர்கள் முன்வந்து பக்தபுரி படித்துறையில் விராடபர்வ படனமும், வருண ஜபமும் நடத்தினார்கள். பிரதி தினமும் அநேக ஸத்பிராம்மணர்கள் கூடி வேத மந்த்ரங்களைச் சொல்லி வருணனை ப்ரார்த்தனை செய்தார்கள். ஜபம் ஆரம்பித்த இரண்டு தினங்களுக்குள்ளேயே சிறிது மழை ஆரம்பித்து நாளுக்கு நாள் பெரிதாகி வேண்டியளவு பெய்துவிட்டது. எல்லா ஜனங்களும், படித்தவர், பாமரர் என்ற வித்யாஸமின்றி எங்கும் வருண ஜபத்தின் மஹிமையைப்பற்றியே பேசி வருவது குறிப்பிடத்தக்கது. யாவருக்கும் இதில் ஒரு நம்பிக்கையும் சிரத்தையும் ஏற்பட்டிருக்கிறது.

மந்த்ர சக்தியைக்கொண்டு இஹலோக நன்மையை அடையும் நம்பிக்கையானது இக்காலத்தில் குறைந்து விட்டதாயினும் அநேக மந்த்ரவாதிகள் மந்த்ரஸித்தியடைந்து அதனால் பல அபூர்வ கார்யங்களை ஸாதிப்பது ப்ரத்யக்ஷமாய் நம்மால் பார்க்கப்பட்டு வருகிறது.

மந்த்ரசக்தியில் நம்பிக்கையானது இந்தியர்களுக்கு மட்டுமில்லை. எல்லா தேசத்திலும், எல்லாமதத்திலும் மந்திரத்திற்கு சக்தியுண்டென்பது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அரேபியாவில் மந்திரவாதிகள் மந்திரசக்தியால் பல அற்புதங்களைச் செய்கிறார்களாம். அமெரிக்காவில்கூட மழை பெய்வதற்காக ஸமுத்ரக்கரைகளில் மதாசாரியர் தொழுகை நடத்துவது வழக்கமாம். சில வருஷங்களுக்கு முன் அலஹாபாத் யூனிவர்ஸிடியில் வங்காளி கனவானொருவர் நம்தேசத்திய மந்திர சக்தியைப்பற்றிச்செய்த உபன்யாஸத்தில் இதர தேசங்களிலும் மந்திர நம்பிக்கை நிலைபெற்றிருப்பதை விஸ்தாரமாக நிரூபித்துள்ளார்.

நமது வேதமே மழை பெய்வதற்காக "காரீரி" என்ற யாகத்தை விதித்துள்ளது. இதைச் செய்தால் கட்டாயம் மழை பெய்யுமென்று வேதம் மொழிகிறது. மந்திர சாஸ்திர ப்ரவீணர்களான மஹா ரிஷிகளும் மந்த்ரசக்தியை அநுபவத்தில் அறியப்பலகர்மாக்களை உபதேசித்துள்ளார்கள். விதிப்படி செய்தால் அவை வீணாவதில்லை- ஆனால் தற்காலம் நமது பெருமைகளை நாம் உதாஸீனம் செய்து நிற்கிறோம். உறுதியுடன் முன்னோர் காட்டிய வழியில் சிரத்தையுடனும் நம்பிக்கையுடனும் நடப்போமானால் இப்போது ஏற்பட்டபலனைப்போல் இன்னும் பல வற்றையும் அடைந்து ஸுகிக்கவழி யுண்டு.

ஆஸ்திகன்.

வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா)

மெள்ள மெள்ள மேலே தாவுகிறார்! ஹிட்லர் வெற்றி மேல் வெற்றி பெற முயற்சிக்கிறார். பழைய காலனிகள் எல்லாவற்றையும் திருப்பிக்கொடுக்கும் வரை தான் சும்மாயிருக்கப்போவதில்லை என கூறுகிறார். பிரெஞ்சும் பிரிடிஷும் என் செய்யும்?

புது தேர்தலில் என்னாகுமோ? 1939 ஜனவரியில் பிரிடிஷ் பார்லிமெண்டு தேர்தல் நடக்கப்போகிறது. எந்தக் கக்ஷி ஜயித்தாலும் மிக தந்த்ரசாலியான சேம்பர்லேன் தன் கக்ஷியை விடார்.

தர்மமும் நியாயமுமாகும்! மைசூர் ரெயில் மூன்றாம் வகுப்பிற்கு விசிறி போட ஏற்பாடு செய்கிறது. எந்த ரெயிலிலும் அடி வகுப்பே ஏராளமானபணம்தருகிறது! எவ்வளவு வசதி செய்தாலும் பொருந்தும்.

மானியா அஹங்காரியா? காரச்சியில் ஓர் வெள்ளையர் இந்தியர் கீழ் வேலை செய்ய முடியாதென வேலையிலிருந்து விலகினர். எப்படி இருந்தாலென்ன? அவர் சம்பளம் பூராவாக வந்து விடப்போகிறது

நாஸ்திகர் என் சொல்வர்? மழையை நாடி பலஇடங்களில் வருணஜப, விராடபர்வ, கொடும்பாவி முதலிய பல பண்டைய ஆசாரங்களை பலர் கைகொள்ள, நல்ல மழை பொழிந்தது! தர்மம் தலைகாக்கும் என்பர் பெரியார்!

என்ன சொல்லப்போகிறது? பிப்ரவரியில் மன்னர் ஸபை கூடப்போகிறது. ஸமஷ்டி விஷயத்தைக் கவனிப்பதே முதற் பிரச்னையாகும். தேசியஸபை, அரசாங்கம், ஸமபுத்தி என மூன்றில் எதைத்தழுவுமோ?

பலப்படுத்த வேண்டும்! நாகபுரியில் டிஸம்பரில் ஹிந்து மகா ஸபையின் 20 வது வருஷக்கூட்டம் நடக்கிறது. தேசிய ஸபை நமது உரிமையையும் மதத்தையும் பாதுகாக்கத்தவறியதால் எல்லோரும் ஒன்று சேர்ந்து இதை அவச்யம் பலப்படுத்த வேண்டும்.

வீண் செலவே! பொக்கிஷ மந்திரிகளெல்லாம் டில்லியில் கூடி யோஜிக்கப் போகிறார்களாம். இப்படி தனித்தனி கூட்டம் போடுவதைவிட்டு எல்லா மந்திரிகளும் கூடி தத்தம் விஷயத்தைத்தனித்தனி கவனித்தால் செலவு குறையும். ஸாதிப்பதையும்கூடி ஸாதிக்கலாம்

விளையாட்டை விடு! பூஜை செய்! அண்ணாமலை ஸர்வகலாசாலை நடராஜ, ரங்கராஜ பிம்பத்தைப்பெருஞ் செலவில்வைத்தது. இதையுங்கூட சிலர் ஆக்ஷேபித்தனராம் ஆஸ்திகரான செட்டியார் ஆங்கு ஆகம விதிப்படி பூஜையும் செய்வித்தாலழகாயிருக்கும்.

கூத்தாடிகாலமிது! கலாசாலைகள் உத்யோகஸ்தர் சங்கம் ஜீவனத்திற்காக ஆடுபவர். டாக்கீஸ்எடுக்கும் கூத்தாட்டம் பலத்தது. கூத்தாடிக்கு உபசாரப்பத்திரம்! விருந்து! மந்திரிகள் பாராட்டு! வடநாட்டுப்பெண் கூத்தாடிக்குச் சென்ற வாரம் தமிழ்நாடு பல்லாண்டு பாடிற்று. வடநாட்டவர் தென்நாட்டை மதிப்பதில்லை.

இதாருக்குப்பாடம்! ஆலயத்தில் இருகக்ஷி வந்தால் அதை மூடு. உத்ஸவத்தை நிறுத்து. என பல அதிகாரி கூறுவர். காஞ்சிக்கருகே ஓர் அதிகாரி 7 மணியிலிருந்து 9மணி வரை ஒரு கக்ஷி, அதற்கு மேல் மற்றவர் உத்ஸவம் நடத்தட்டுமென ஸ்கந்தஷஷ்டிக்கு தீர்ப்புக் கூறினர்.

ஆறரைலக்ஷம் எலி ஸம்ஹாரம்! செய்தது பாம்பே நகர ஸபை! ஆஹா! எழுங்கள்! எழுங்கள்!! ஆலயப்பிரவேச மசோதாவிற்கு பக்க பலம் தேட ஆங்காங்கு ப்ரசாரம் நடக்கிறது. நாமுறங்கலாமா?

லைசன்ஸை ரத்து செய் இல்லையேல் உண்ணாவிரதம்! விருதாநகரில் மிரட்டல்!

இது மதமில்லையோ ?பாம்பே அரசாங்கம் போலீசார் மதுமாம்ஸ பக்ஷணம் செய்வதவச்யமென்று கட்டாயப்படுத்துவதை காந்திஜீ மதக்கட்டளையை எப்படி மீறுவது எனக் கண்டிக்கிறார். ஆலயத்தில் சண்டாளரை விடாதே என்பது மதக்கட்டளை யில்லையா?

பாதிரியும் கன்யையும் கைதி? வியன்னாவில் இவர்கள் வியபிசாரம் செய்வதுடன் ராஜத்வேஷப்ராசாரம் செய்வதாக பலர் கைதிசெய்யப்பட்டனர். மடங்கள் மூடப்பட்டன. சில இந்திய ஸுழலைக்கண்டு கண்ணீர் விட்டு வானளாவ வெள்ளையோரைப்போற்றுவோர் கவனிப்பாரா?

தடுத்தது நியாயமே? திருச்சியில் வீதியில் நுழைந்த சண்டாளரை அடித்ததாக 14அம்பலவாசிகள் (அப்ராமணர்) ஸெஷன்ஸுக்கனுப்பப்பட்டனர். நீதிபதி ஸம்பிரதாயத்தை மீறியவரைத்தடுப்பது நியாயமே! அடித்தது [illegible] விடுவித்தார்.

ஹிந்தியைக்கொண்டு விளைவிக்கும் தீமை.

ஜாதிக்கலப்பு போஜன நிர்பந்தம்.

தமிழ்நாட்டில் வருகிற வருஷம் கட்டாயமாக ஹிந்தி கற்பிக்கப்போகும் கல்லூரிகளில் ஹிந்தி பண்டிதர்கள் தேவையாயிருக்குமென்று ஹிந்தி பாஷையை கொஞ்சம் தெரிந்தவர்களை சேர்த்து தமிழ்ஜில்லாக்களில் சிறந்த கோயம்புத்தூர் டவுனுக்கருகில் சுமார் 3 மைல் தூரத்தில் ஹிந்துஸ்தானி ட்ரைனிங் வித்யாலயமென்று இம்மாதம் முதலில் புதியாய் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

ஹிந்திபாஷையை நாம் எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியதுதான். பாஷாஞானம் யாரையும் இதுவரையில் கெடுதல் செய்யாத போதிலும், மேலே சொன்ன ஹிந்தி வித்யாலயத்தில் சேர்க்கப்பட்டவர்களில் நானுமொருவனாக சேர்க்கப்பட்டுப் போய் சேர்ந்தேன். வித்யாலயத்தின் நோக்கமானது ஜாதி மத வித்யாஸமிருக்கக்கூடாதென்பதை விசேஷமாகக் கைகொண்டபடியினால், அங்கு சேருமுன் மாணவர்களுக்கு அபேதம் நன்றாய் உபதேசம் பண்ணப்பட்டது.

ஹிந்திபாஷை படிப்பிலா சாப்பாட்டிலா? இத்தடையல்லாமல், சாப்பாட்டிற்குத் தனித்தனியாக இட வசதிகளிருந்தும், வித்யாலயத்தின் மானேஜிங் கமிட்டி மெம்பர்கள், மாணவர்களை ஓரே இடத்தில் எல்லோரும் சேர்ந்து மதத்வேஷமன்னியில் ஒன்றாய்த்தான் சாப்பிடவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அங்கு சேர்ந்திருந்த நான் எழுந்து, "ஐயா, ஹிந்தி பாஷையை படிக்க வேண்டுமானால் சமமாய் சாப்பிடுவானேன் அல்லது சாப்பாட்டிற்குத்தான் வழியில்லையா வென்று கேட்டவுடன், வித்யாலயத்தின் மெம்பராகிய, சமமத ப்ரதிஷ்டாபகரான கனம் S. V. நாராயணய்யர் என்னை விழுங்கி விடுவர்போல் பார்த்து, ஸம்ஸ்க்ருதம் படித்தாலென்ன, சிரோமணிதான் பாஸ் செய்தாலென்ன. காபிஹோட்டலுக்கும் லாயக்கில்லையேவென்று அதட்டிச் சொன்னார்.

அறிவிப்பு.

சில அசௌகர்யங்களால் இவ்வாரம் பேபர் 8 பக்கங்களோடு வெளிவந்திருக்கிறது. அடுத்த வாரம் முதல் வழக்கம் போல் வெளிவரும்.

மானேஜர்.

பிறகு எப்படியாவது ஒன்றாய்ச்சேர்த்துச் சாப்பிடச்செய்ய வேண்டுமென்று எண்ணத்துடன் சாந்தமாய் சில வாதங்கள் செய்து நடுவில் சில நிமிஷங்கள் எனது குடும்ப சமாசாரத்தைக்கேட்டு கடைசியில் சகோதரர்கள் எத்தனைபேர் என்று கேட்டார். நான் சாதாரணமாய் அவர்கேள்விகளுக்குப்பதில் சொன்னவுடன், உமது தகப்பனருக்கு உமது சகோதரர்களிருக்கும் பொழுது உம்மை ஒருவரை உனது தகப்பனர் இறந்ததாகவே நினைத்துக்கொள்ளட்டுமே. நீர் சம்மதப்பட்டால் சரிதான். மதமென்ன. ஜாதியென்ன. உமக்கு ஒன்றாய் உட்கார்ந்து சாப்பிட்டுப்பழக்கமில்லாத போனால் உம்முடன் உட்கார்ந்து 4 நாட்கள் நானும் சாப்பிடுகிறேன். வாரும் சாப்பிடப்போவோம். இம்மாதிரியாகச் சாப்பிட்டால் க்ஷேமத்தையடைவீர். முத [illegible] வேலையும் கொடுக்க ஏற்பாடு செய்வேனென்று, என்னை ஏமாற்றுபவர் போல் சிந்தனை செய்தார்.

நினைத்தது மாறிவிட்டது.

அடாடா! என்ன கஷ்டம். இந்த வித்யாலயத்தில் சேரு முன் புது பாஷையானதால் கொஞ்சம் தெரிந்திருந்தபோதிலும் ரொம்பவும் கஷ்டப்பட்டுத்தான் வாசிக்கவேண்டுமென்று நினைத்தேன். நமது வக்கீல் S. V. நாராயணய்யர் அவர்கள் செய்த உபகாரம் நன்கு தெளிவாய் புரிந்து விட்டது. சாப்பிடும் தட்டுகளை தாளம் போட்டுக்கொண்டு ஸர்வமதஸ்தர்களும்ஒன்றாய்க்கூடிக்கொண்டு இரவும் பகலும் சாப்பிட்டுக்கொண்டிருந்தாலே சுலபமாய் பாஸ் செய்து வேலைக்குப்போய் விடலாமே. அய்யர் அவர்கள செய்த உபகாரத்தை மறந்து தற்சமயம் நான் நினைத்தது மாறுதலாகவே முடிந்தது. கடைசியில் (நடுவில் 2 தினங்கள் வெளியில் ஒவ்வொரு வேளை சாப்பிட்டுக்கொண்டும்) மன்னுடிக்கேட்டும், அய்யாவர்கள் தனது எண்ணத்தை நிறைவேற்ற வேண்டி ஒரு இடத்தில் ஒன்றாய்த்தான் சாப்பிடவேண்டுமென்று தீர்மானமாய் சொன்னதின் பேரில் ரூபாய் சிலவானதையும் பாராமல் மறுநாளே எனது இருப்பிடம் திரும்ப நேரிட்டது. அன்பர்களே ஹிந்திப்ரசாரத்தின் மகிமையைப்பார்த்தீர்களா.

P. ஸ்ரீனிவாஸ சாஸ்திரி
ஸாஹித்ய சிரோமணி திருச்சி

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Nellore.

மதிப்புரை:

ஸ்ரீ வரிவஸ்யா ரஹஸ்யம்.

மூலமும் உரையும்.

[ஸ்ரீ பாஸ்கரராயர் இயற்றியது. பிரும்மஸ்ரீ அருட்கவி க. சுப்ரமணிய ஐயர் அவர்கள் இயற்றிய 'தீபிகை' என்னும் தமிழ் விருத்தியுரையுடன், சென்னை ஸ்ரீ பிரஹ்ம வித்யா விமர்சினி ஸபையாரால் வெளியிடப்பெற்றது. இதன் விலை ரூ 1—0—0]

(சென்னை 178-ம் நெ லாயிட்ஸ் ரோடு, ப்ரம்ம வித்யா விமர்சினி சபையிலும். கும்பகோணம் ஸ்ரீ ஜனார்தன பிரஸ்ஸிலும் கிடைக்கும்.)

பாரதவர்ஷத்தில் அநாதிகாலமாகப் பாரமார்த்திக விஷயங்களில் ஆராய்ச்சியும் அநுபவமும் மிக்க பெரியோர்கள் உலகுக்கு உபகாரப்படும் நன்னெறிகளை வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். லௌகிக திருஷ்டியினால் பாரமார்த்திக திருஷ்டியின்மேல் படலம் மூடிக் கெட்டுப்போன மேலைத் தேசவாஸிகள் உலகின் அஞ்ஞான இருளைப்போக்குவதற்குக் கீழ்த்திசைக் கதிரவனை நோக்கி நிற்கிறார்கள். இந்தப் பெரிய தேசத்தில் பாரமார்த்திகத்துறையில் ஜீவிய காலமுழுவதும் ஆராய்ச்சிசெய்து அநுபவம் பெற்ற பெரியோர்கள் வகுத்துள்ள முறைகள் பல. அவற்றை அவலம்பித்து இன்பநுகர்ச்சியடைவோரும் பலராவர்.

வேத வேதாந்தங்களில் கூறப்பட்டுள்ள பரப்பிரம்ம ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்கும் விஷயத்தில் இந்நாட்டினர் கண்டுபிடித்த, [illegible] எந்த நாட்டினரும் கண்டுபிடிக்கவில்லை. பணத்தாலும் படையாலும் பெரும் சிறப்பை அடைந்துள்ள மேல் நாட்டார் விஞ்ஞான சாஸ்திரமாகிய ஸைன்ஸ் ஆராய்ச்சியினால் கண்டுபிடித்த அபூர்வ விஷயங்களைக்கண்டு நாம் வியக்கிறோம். பாஞ்சபௌதிகக் கட்டுப்பாட்டுள் அடங்கிய இந்த விநோதங்களுக்கு மேலாக அவாங்மனோகோசரமாகிய வஸ்துவைக் கண்டுபிடிக்கும் துறையைக் கூறும் மெய்ஞ்ஞான சாஸ்திரங்கள் பல நம்மிடத்தில் உள்ளன. அவற்றை இக்கால நாகரிக இருட்டில் உழல்வோர் அறிந்து பாராட்டுவதில்லை.

நெடுந்தூரத்தில் உள்ள பரமாணுஸ்வரூபமான நக்ஷத்திரங்களைக் கண்டுபிடிக்கும் பூதக்கண்ணாடிகளை மேல்நாட்டார் உண்டாக்கியிருக்கிறார்கள்; ஆனால் அதி ஸமீபத்தில் நம்முடைய ஹிருதயகமல குகைக்குள் இருக்கும் பரஞ்சோதியை அறியும் கண்ணாடி அவர்களிடம் இல்லை. நீராவியாலும் எண்ணெய் வகைகளாலும் பிரமிக்கத்தக்கவேகத்தோடு ஓடும் வாஹனங்களை அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் நம்மை ஜன்மஜன்மாந்தரங்களாகக் கர்ம மூட்டைகளுடன் பலவிடங்களுக்கு அதிவேகத்தால் இழுத்துச்செல்லும் மனமாகிய ரதத்தை ஒரு கணம் நிறுத்தும் வழி அவர்களுக்குத்தெரியாது. சப்தலக்ஷணத்தை ஆராய்ந்து ஒலியலைகளை வசப்படுத்தி உலக முழுதும் பரப்பும் யந்திரம் அவர்கள் கண்டுபிடித்தது. ஸ்வர்க்காதிபோகங்களையும் அதற்கு மேற்பட்ட மோக்ஷ லோகத்தையும் நாம் இருந்தவிடத்திலிருந்தே அநுபவிக்கச்செய்யும் மந்த்ரபூர்வமான ஒலியலைகளை அவர் உணரார்.

ஆ! மந்த்ரங்கள் அவ்வளவு சிறந்த சக்தியுடையன. வேத மந்த்ரங்களும் தாந்திரிக கிரந்தங்களில் பிரதிபாதிக்கப்பட்ட மந்த்ரங்களும் அபூர்வ சக்தியை உடையன. 'மநநம் ஹேதுவினால் உபாஸகர்களைப் பயரூபமான த்வைதப்ரபஞ்சத்தினின்றும் ரக்ஷிப்பதனால், மந்திரம்' என்று மந்திரத்தின் பொருள் கூறப்படுதல் காண்க.

இத்தகைய மந்திரங்களுள் சிறந்ததும் மந்திரராஜம் என்று பாராட்டப்படுவதும் ஸ்ரீவித்தை, ப்ரஹ்மவித்தையென்று வழங்குவதுமாகிய ஸ்ரீபஞ்சதசாக்ஷரியானது ஸ்ரீகாயத்ரீ மகா மந்திரத்தின் பொருளையுடையதாய் 'ஸர்வானர்த்த நிவர்த்திக்குக்காரணமாய்ப் பரமானந்த ப்ராப்திவடிவ மோக்ஷத்தின் பொருட்டுக் குருசிஷ்ய ஸம்ப்ரதாயத்தில் உபதேசிக்கப்பட்டு வருகிறது.

இந்த மஹாமந்த்ரத்தை உபாஸிப்பவர்களை ஸ்ரீவித்யா உபாஸகர்கள் என்று யாவரும் பாராட்டுகிறார்கள். ஸ்ரீசங்கராசார்யர் முதலிய மகாத்மாக்களெல்லாம் ஸ்ரீவித்யோபாஸனையினால் செயற்கரிய செயல்களைச் செய்திருக்கிறார்கள். இக்காலத்தும் பல பெரியோர்கள் இந்த உபாஸனையைக் கிரமமாகச் செய்து வருகிறார்கள்.

நமது மதிப்புரைக்கு வந்துள்ள "ஸ்ரீ வரிவஸ்யா ரஹஸ்யம்" என்ற இந்த அரிய நூல் மேலே கூறிய ஸ்ரீ வித்யோபாஸனையைப்பற்றிப் பல கூடமான விஷயங்களை வெளிப்படுத்துவதாகும். இதனை இயற்றியவர் லலிதா ஸஹஸ்ரநாமத்திற்கு மந்த்ர சாஸ்திர விளக்கங்களும், வேதாந்தாதி நூல்களும் இயற்றியவருமாகிய ஸ்ரீ பாஸ்கரராயரென்னும் மஹான் ஆவர்.

பாஸ்கரராயர் ஸ்ரீவித்யோபாஸகர்களுள் தலைசிறந்தவர். மஹாகவி. மந்த்ர சாஸ்திரமாகிய பெரிய பாற்கடலைக் கடைந்து அமிர்தம் போன்ற பல அரிய ரஹஸ்யங்களைத் திரட்டிக் காட்டுபவர். அவர் இந்த நூலை வடமொழிச் சுலோகங்களில் இயற்றியதோடு [illegible] எழுதி உபகரித்திருக்கிறார்.

ஸம்ஸ்கிருதத்திலுள்ள வேதம், மந்த்ர சாஸ்திரம் முதலியவற்றின் அருமையை நம்மவர்கள் தாமே அறிந்துகொள்ள முயல்வதில்லை. மாக்ஸ் முல்லர், வுட்ராப் போன்ற ஆங்கிலேய அறிஞர்கள் அவற்றையாராய்ந்து ஆங்கிலத்தில் எழுதினால் தலையை ஆட்டி விடுகிறோம். இந்த நிலைமாற வேண்டுவது மிகவும் அவசியம். ஸம்ஸ்கிருத நூல்களை நேரே அறிந்துகொள்ள முயல வேண்டும். இல்லையெனின் அவற்றை அறிஞர்களைக் கொண்டு தேசபாஷைகளில் மொழி பெயர்க்கச் செய்து அறிந்து கொள்ள வேண்டும்.

வரிவஸ்யா ரஹஸ்யமென்னும் இந்தப் புதயலைத் தமிழ் தெரிந்த பக்தர்கள் அறிந்து பயன் படுத்திக்கொள்ளும் பொருட்டு ஸ்ரீமான் அருட்கவி க. சுப்ரமணிய ஐயரவர்கள் வெளியிட்டுள்ள தமிழ் மொழி பெயர்ப்பாகிய இப்புத்தகம் பரோபகாரமானது. ஸ்ரீமான் சுப்ரமணிய அய்யர் ஒரு தேவி உபாஸகர். அவருடைய முயற்சியால் ஸ்ரீவித்யோபாஸகர்கள் ஒரு ஸங்கமாகக்கூடி ஸ்ரீவித்யாவிஷயமான சர்ச்சைகளிலும் ஸாதனைகளிலும் பொழுது போக்கி வருகிறார்கள். ஸ்ரீ ப்ரஹ்மவித்யா விமர்சனி சபை' அவருடைய ஊக்கத்தின் ப்ரயோஜனமாக விளங்குகின்றது.

ஸ்ரீவித்யோபாஸகரும் தமிழ் வடமொழிகளில் தக்க பாண்டித்யமுடையவருமாகிய ஒருவர் இயற்றிய மொழிபெயர்ப்பாக உள்ள இப்புத்தகம் ஸ்ரீவித்யா விஷயத்தில் அன்புள்ள யாவருக்கும் இன்றியமையாத பூஷணமாக விளங்குவது. ஸ்ரீமான் ஐயர் இந்நூலில் பல இடங்களில் வேறு நூல்களிலிருந்து மேற்கோள்களைக்காட்டி விஷயங்களை விளக்கியிருக்கிறார்.

வரிவஸ்யா ரஹஸ்யமென்பது உபாஸனா ரஹஸ்யமென்பது பொருள்படும். இந்த நூல் பஞ்சதசீ மகா மந்திரத்தின் மூன்று கூடங்களின் விவரணம், வர்ணங்களைப்பற்றிய விஷயங்கள், சப்த பேதங்கள், உச்சாரண முறை அக்ஷரஸ்வரூபம், விஷூல விவரணம் முதலிய பலவற்றைக்கூறும் முதலம்சத்தையும் இம்மந்திரத்தின் அர்த்த விசேஷங்களைக்கூறும் இரண்டாவதம்சத்தையும் கொண்டு விளங்குகின்றது. பாவார்த்தம் முதலிய பதினைந்து அர்த்தங்கள் இரண்டாவது அம்சத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன. 'அக்னியில்லா சாம்பலில் சொரியப்பட்ட ஹவிஸ்ஸானது எங்ஙனம் பயனற்றதாகுமோ, அங்ஙனமே அர்த்தத்தைத்தெரிந்து கொள்ளாமல் சப்தத்தை உச்சரிப்பது பயனற்றதாகும்' (ப.46) என்று இந்நூல் கூறுகின்றது. ஸ்ரீவித்யோபாஸனையாகிய யக்ஞம் செய்வதில் ஈடுபட்டவர்கள் இந்தப்புத்தகத்தைப்படித்து மந்த்ரார்த்தங்களைத் தெரிந்து கொண்டு தாங்கள் சொரியும் ஹவிஸ் ஸாக்ஷாத் ஞானாக்னியிலே விழுந்து பயன்படும்படி செய்வதற்கு ஸ்ரீமான் க. சுப்ரமணிய ஐயர் உபகாரம் செய்திருக்கின்றாரென்று கூறுவதில் பிழையில்லை.

நல்ல காகிதத்தில் சுத்தமாக அச்சிடப்பெற்ற இந்தப்புத்தகம் தமிழ்நாட்டிலே பிரசாரமானால் தமிழ் நாட்டுக்குப்பிரயோஜனம் அதிகமென்று கருதுகிறோம். ஐ. க.

2ம் பக்கம் தொடர்ச்சி

சத்ருக்னன் இவர்களுக்கு கல்யாணமான பிறகு விச்வாமித்ரர் இமயமலைக்கு தபசுக்குப்போய் விட்டதாய் சொல்லியிருப்பதும் உசிதமே குசத்வஜனுடைய புத்திரிகள் போக சாஸ்திரமானதால் அவர்கள் விவாகம் செய்ததாக சொன்ன பிறகு விச்வாமித்ரர் தேவையில்லாததால் அவரை தபசுக்குப்போய்விட்டதாக சொல்லியிருப்பதும் அவர் இரா[illegible] மலிருந்ததாக சொல்லியிருப்பதும் உசிதமே.

மேலே சொன்னதைக்கொண்டு இராமனை விச்வாமித்திரரிடம் ஒப்பி வித்தை, இராமர் அது முதல் போகசாஸ்திரத்தைப்படித்தாரென்று அருத்தம் செய்ய இடமுண்டு. பிறகு அவர் அதை அனுஷ்டித்துக் காட்டினாரென்பதை அவர் பிறகுசெய்த, தாடகா, ஸுபாகு வதமும், மாரீசனைத்தோற்கடித்ததும் அகல்யாசாபவிமோசனமும் உறுதிப்படுத்துகிறது. 8 அப்பாத்துரை அய்யர்.

7-11-38-ஹூ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

நெல் முதல்தரம் வெள்ளைசிறுமணி 13படிக்கு உள்ள மூட்டை	4—0—0
டை இரண்டாந்தரம் செல்லூர்சம்பா 48படிக்கு உள்ள மூட்டை	3—2—0
அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 48படிக்கு உள்ள மூட்டை	9—0—0
டை இரண்டாம்தரம் செல்லூர்சம்பா 48 படிக்கு உள்ள மூட்டை	7-10—0
தேங்காய் எண்ணை 64 சேர் நிறை	5—0—0

[illegible] தாசில்தார்.

ஜோதிட விளம்பரம்.

உங்கள் எதிர்கால பலன்களை அடைய, மிகவும் அநுபவமுள்ள ஜோதிட மணி தஞ்சை பள்ளி அக்ரஹாரம், து. கந்தசாமி செட்டியார் அவர்களால் உங்களுடைய பிறந்த ஜாதகம், பெயர் பொருத்தம் முதலியவைகளுக்கு பலன் எழுதிக் கொடுக்கப்படும்.

விபரமறியவேண்டுபவர் மேற்கண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்து கொள்ளவும். அரியநாயக முதலியார் ஸ்ரீ நாராயண தீர்த்தருசுவாமிகள் மடாலய பரிபாலகர் திருப்பூந்துருத்தி.

N. B. மேற்கண்ட ஜோதிட வருமானத்தை திருப்பூந்துருத்தி ஸ்ரீநாராயண தீர்த்தரு சுவாமிகளின் மடாலயதிருப்பணிக்கு உபயோகிக்கப்படும்.

ஸ்ரீ நாராயண தீர்த்தரு ஸ்வாமிகளின் சரித்திரம் அச்சிலிருக்கிறது. சீக்கிரம் வெளிவரும்.

ஸத்யேஸர்வம் ப்ரதிஷ்டிதம்.

(மந்த்ரமூர்த்தி கிருஷ்ணசாஸ்திரிகள்)

முக்காலங்களிலும் அழிவு இல்லாத ஸத்யவஸ்துவாய்க்ஞான (அறிவு) வடிவனாய் இறந்த நிகழ் வரும் காலங்களிலும் ஏற்றக்குறைவு நாச உற்பத்தி பரிணாம விகாராதி பேதங்கள் இல்லாத காலத்தாலும் எல்லையில்லாதவனும் சிலவிடங்களிலிருப்பவன் மற்ற விடங்களில் இல்லாதவனென்ற தேசவேற்றுமையில்லாமல் ஆகாசம் போல் எங்கும் நிறைந்திருப்பவனும் தன்னுடையரூபலேசாம்சத்தால் கோடிகோடிப்ரும்மாண்டங்களாக "பாதோஸ்ய விச்வா பூதாநி" என்றபடியும் தானே விளங்கி ஷை ப்ரும்மாண்டங்களுப்பாலும் எல்லையில்லாத ஸ்வரூபத்தையுடைய பரமாத்மா தன்னுடைய ப்ரக்ருதி தத்வத்தை முன்னிட்டு அவ்யக்த மஹத் அஹங்கார தத்வங்களாகிய முறையே காரண ஸூக்ஷ்ம ஸ்தூல பிரபஞ்சத்தில் ஸுஷுப்தி ஸ்வப்ன ஜாக்ர அவஸ்தைகளுக்கு அபிமானியாய் ஈச்வர ஹிரண்ய கர்ப்பவைச்வானர என்ற நாமதேயங்களை வகித்து பஞ்சீக்ருத ஆகாய வாயு தேயு ஜல பூமி ஓஷதி அன்ன புருஷ ப்ராணிஜாலங்களை முறைப்படி ஸ்ருஷ்டித்து இவ்வித உலகரூபியாயும் உள்ளும் புறமும் வ்யாபித்தும் ஜகத்ரூபியாய் விளங்குகிறான் என்ற விஷயத்தைச்சாந்தோக்ய உபநிஷத்திலும் சுருக்கமாய் "ஸர்வம்கல்விதம்பிரம்ம" என்றபடி ஸத்யவஸ்துவாகிய ப்ரும்மத்தினிடத்தில் உண்டாகி விளங்கி லயப்படுத்துவ உலகம் பரமாத்ம ஸ்வரூபமே என்று ஆலம் வித்திலிருந்து உண்டான மரத்தை ஆலமரம் என்றது போல் மண்ணின் விகாரமாகிய பானைமுதலானதுகளை மண்ணே என்றும் தங்கத்தின் விகாரமாகிய குண்டலம் முதலானதுகளை தங்கமே என்றும் ஜலத்தின் அலை விவேகிகள் நுரைகளை ஜலமென்றும் சொல்வது போல் உலகமும் பரமாத்ம ஸ்வரூபமே. என்று சொல்லப்படுகிறது. இவ்வித பிரும்ம ஸ்வரூபமான உலகத்தில் ப்ராணிகள் மனோ புத்தி சித்த அஹங்காரம் என்ற அந்த:கரணப்ரவ்ருத்தியால் ச்ரோத்ர த்வக் ஜிஹ்வா சக்ஷு: க்ராண என்ற ஞான இந்திரியங்களால் சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்களையும் வாக் பாணி பாத பாயு உபஸ்த என்ற 5 கர்மேந்திரியங்களால் பேசுவது (சப்திப்பது) க்ரஹிப்பது நடப்பது மலங்கழிப்பது ஸ்த்ரீயை போகிப்பது என்ற விஷயங்களையும் அனுபவித்துக்கொண்டு ஸர்வாந்தர்யாமியாகிய ஸாக்ஷி சைதன்யஸ்வரூபியான ஸத்யபரமாத்மாவின் ஸாந்நித்ய சக்தியால் உலகம் விளங்கி வருகின்றன என்பதை ஸத்யே ஸர்வம் ப்ரதிஷ்டிதம் என்ற வேத வாக்யத்தால் அறியத்தக்கது.

ஸத்யபரிபாலனமாவது ஷை ஞானேந்த்ரிய கர்மேந்திரியங்களால் ஷை சப்தாதிவிஷயங்களை மனதில் தோன்றியபடி அனுபவித்தலானது பசு, பக்ஷி, க்ருமி கீடாதிகளுக்கே இயற்கையாய் தேஹமுள்ளவரையில் உள்ளது ஷை ஜந்துக்களுக்கு சாஸ்த்ரவிருத்தமான காம க்ரோதாதிகளாலுண்டான விஷயானுபவத்தால் நாகானுபவம் கிடையாது. தேவாஸுரமனுஷ்யர்களுக்கு காம க்ரோதாதி சத்ருவர்கத்தால் அந்த: கரணத்தில் தோன்றியபடி [ஷை இந்த்ரியங்களால் சப்தாதி விஷயங்களை சாஸ்த்ரவிருத்தமாய் அனுபவித்தலென்பதே ஸத்யஹானி மூலமாய் நாகாதி கஷ்ட அனுபவங்களுக்குங் காரணமாக யிருக்கிறது. காமத்தால் செய்த சாஸ்த்ர ஸம்மதமான தர்மானுஷ்டானங்களும் இதின் பலரூபமான ஸ்வர்காதி லோகங்களில் நச்வரமாய் க்ஷணபங்குரமான விஷயஸுகங்களை கொடுத்து திரும்பவும் பதன ஜநந தாபத்ரய மாறுதி கஷ்டங்களை கொடுத்து கொண்டே யிருக்கிறது இதற்கும் ஸத்யஹானிதான் காரணமாக யிருக்கிறது இந்த உபன்யாஸ ஆரம்பம் முதல் இதுவரையில் எழுதிய விஷயங்களை அறியத்தகுந்ததன்மை தேவாஸுரமனுஷ்யர்களுக்கு யிருப்பதால் முன் எழுதியபடி உலகம் பரமாத்மஸ்வரூபமாகையால் உலகத்தில் அந்த: கரண ஞானேந்த்ரிய கர்மேந்த்ரியங்களால் வ்யவஹரிப்பதெல்லாம் காமம் க்ரோதம் லோபம் மோஹம் மதம் மாத்ஸர்யம் ஈர்ஷ்யா அஸூயை தம்பம் தர்பம் என்ற 10-வித சத்ருக்களுக்கு இடம் கொடுக்காமல் பக்தி ச்ரத்தையோல வேத, சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட விதிக்குகளை விலக்கி விதித்தபடி இரவிலும் பகலிலும் ஸத்யாகாலத்திலும் நடப்பதே ஸத்யபரிபாலனமாகும். உலகத்தில் பொய் சொல்லாமையை ஸத்யபரிபாலனமென்று ப்ரஸித்தமாக சொல்லுவது வழக்கமாகயிருக்க இது என்ன ஸத்யபரிபாலனம் என்று சிலர் நினைக்கக்கூடும். பொய் சொல்லாமை என்பது 11-இந்த்ரியங்களில் வாகிந்த்ரிய விஷயமான ஸத்யவசன பரிபாலனமும் மைத்த இந்த்ரிய விஷயங்களுடைய ஸம்மந்தமில்லாமல் நடைபெறாது. ஒருவன் ஸத்யவசன பாலனத்தை மாத்திரம் கைக்கொண்டு நேத்ரேந்த்ரிய விஷயமாகிய ரூபத்தில் தர்மோஹங்கொண்டு த்வக் இந்த்ரிய விஷயமாகிய ஸுகஸ்பர்சத்துக்கு சாஸ்த்ர விருத்தமாய் இடம் கொடுத்தால் ஸத்யவசன பாலனபுண்யமானது நசித்து பாபந்தான் மேலிடும் ஆகையால்த்தான் ஹரிச்சந்த்ரன் விச்வாமித்ரர் அனுப்பிய ஸௌந்தர்யம் பொருந்திய 2-மாதங்க கன்னிகைகளை விலக்கினான். ஆகையால் 11-இந்த்ரியங்களையும் காமாதி ஸம்மந்தமின்றியில் சாஸ்த்ரீய விஷயங்களில் செலுத்தி அனுபவிப்பதே ஸத்யபாலனமாகும்.

தவிரவும் ஸோகாமயத பஹுஸ்யாம் என்ற ச்ருதிப்படி நாம் உலகமாக ஆகவேண்டும் என்ற ஸங்கல்ப ரூபமாய் ப்ரும்மஸ்வரூபமாகிய க்ஞானமே [illegible] ஷை முறைப்படி உலகமாகவும் 11-இந்த்ரியங்களாகவும் 11-விஷயங்களாகவும் "ததாத்மானம் ஸ்வயமகுருத" என்றச்ருதிப்படி பரிணமித்து விளங்குவதும் தவிர ஸர்வாந்தர்யாமி சைதன்ய ஞான ப்ரகாசத்தால் 11-இந்த்ரியங்களும் 11-விஷயங்களை அறிகின்றன. ஆகையால் எல்லாம் ப்ரும்மஸ்வரூபமாகிய ஞானமே உலகரூபமாய் விளங்குகிறது. எதுபோல் என்றால் மஹா ஸமுத்ரம்போல் மஹா விஸ்தாரமான ஏரி ஜலமானது லக்ஷக்கணக்கான கணவாய்கள் வழியாய் முதலில் நதியாகவும் பிறகு வாய்க்கால்களாகவும் பிறகு சிறுகண்ணிகளாகவும் பிறகு முக்கோண நாற்கோணாதி வட்டமாகவும் இருக்கிற வயல் கண்ணி வாய்க்கால் நதி முதலான ஸ்தலங்களின்உருவம்போல் ஷை ஏரி ஜலம் வடத்தில் நீண்டும் குறுகி நீண்டும் நாச்சதுரமாயும் விளங்குவது போல் ப்ரும்மஸ்வ ரூபமாகிய க்ஞானமே முதல் அந்த: காணத்தில் (ப்ரக்ருதியில்) பாய்ந்து பிறகு ஞானேந்த்ரியங்களில் (பஞ்சபூதங்களில்) பாய்ந்து விஷயாகாரமாயும் (ஜகதாகாரமாயும்) விளங்குகிறபடியால் எல்லாம் ப்ரும்ம ஸ்வரூபமே. இவ்விதம் ப்ரும்மஸ்வரூபமாகிய உலகத்தில் உள்ளது உள்ளபடி இந்த்ரியவ்யவஹாரங்களை ஸத்யவழியில் செய்யாமல் காமாதி சத்ருக்களுக்கு வசப்பட்டு அசாஸ்த்ரீயமாய் நடப்பதே ஸத்யஹானிக்கு காரணமாகி ஸாக்ஷி சைதன்யனாகிய பரமாத்மாவை எங்குமிருந்து நம்முடைய அக்ரமத்தைப் பார்த்துகொண்டிருக்கிறாரென்று நினையாமையானது ப்ரும்மத்தை ஹத்தி செய்த பாபத்தை உண்டுபண்ணுகிறது.

ஸத்யவஸ்துவில்லாத அணுவுமில்லை. பயத்துடன் நடந்துவந்தால் ஸத்ய பரமாத்மாவானவர் இவன் நம்மை ஆச்ரயித்து வருகிறானென்று தன் ஸ்வரூபத்தில் சேர்த்துக் கொள்ளுகிறார். இவன் அவனாகவே ஆகிவிடுகிறான். ஸத்யபாலனம் என்பது லோகாதீத ஸத்ய பரமாத்மாவாக இவனை லயப்படுத்துகிறது.

இவ்விதம் உலகம் ப்ரும்மஸ்வரூபமென்றும் இதில் ஸத்ய பரமாத்மாவின் அனுக்ரஹத்துக்கு பாத்ரனாக ஆவதற்கு ஸத்ய வழியில் நடந்து ஸத்யஸ்வரூபியாக ஆகவேண்டுமென்ற விஷயத்தை தெரிந்துகொள்ள முடியாததற்குக் காரணமான அவித்யை என்பது அநாதிகாலமாக நமக்கு யிருப்பதால் ஈச்வரன் நம்மிடத்தில் தயைபாராட்டி ஸத்யஸித்தியை நாம் அடையவேண்டி வழி காட்டுவதற்காக வேத சாஸ்த்ரங்களை ச்வாஸரூபமாய் வெளியிட்டார். இவ்விதம் வெளியிட்ட வேதங்களுக்குள் முண்டகோபநிஷத்தில் நாம் ஸத்யபரமாத்மாவிடம் ஐக்யப்படுவதற்காக 3-வித்யைகள் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. அபராவித்யை பராவித்யை என்றும் அபராவித்யை என்றால் பத வாக்யாதி சப்தராசிகளாகிய வேதாதி ஸர்வசாஸ்த்ரங்களும். இதுகளில் சொல்லப்பட்ட வர்ணாச்ரம தர்மங்களாகிய அருணோதய ஸ்நான ஸந்த்யாவந்தனம் முதலான முக்யமான தர்மானுஷ்டானங்களையாவது குறிப்பிட்ட காலம் தவறாமல் செய்துவருவதினால் ப்ரதிபந்தக ரூபமான பாபங்கள் விலகி சித்த சுத்தி உண்டாகி வேதாந்த ச்ரவணம்செய்து பராவித்யாஸ்வரூபிணியாயும் ஸர்வசைதன்ய ரூபிணியாயுமிருக்கிற சித்சக்தியின் காயிக வாசிக உபாஸனம் வரையில் அபராவித்யானுஷ்டானமென்று சொல்லப்பட்டது. இதற்கு மேல் பராவித்யை என்ற சித்சக்தியின் ஸ்ரூப அரூப மானஸிக த்யானமே பராவித்யானுஷ்டானமென்று சொல்லப்பட்டதாக ஆகிறது இவ்விதம் முறைப்படி இவ்விரண்டு உபாஸ்தியினால் மேல் மந்த்ரத்தினால் முதலான லக்ஷணங்களால் குறிப்பிடப்பட்டஸத்ய பரமாத்ம வஸ்துவின் தாதாத்ம்யம் ஸித்திக்கிறது என்ற விஷயங்களை சுருக்கமாக சாந்தோக்ய உபநிஷத்தில் உலகமெல்லாம் ப்ரும்மஸ்வரூபமாகையால் ப்ரும்மவஸ்துவை சாந்தஉபாஸீத என்று சொன்னதினால் ராக த்வேஷாதி 10 தோஷங்களையும் விலக்கி வேதசாஸ்த்ரங்களில் சொல்லிய வர்ணாச்ரமாதி தர்மானுஷ்டானங்களை ஸத்ய ஸித்தியை அடைவதற்கு செய்து வரவேண்டும். இல்லையேல், ஆக்ஞாச்சேதி என்று பகவானுடைய ஆக்ஞாரூபமான ஷை சாந்தோக்ய வாக்யப்படி நிஷ்காமனையாக செய்யாவிட்டால் பகவானுக்கு த்வேஷியாய் கீழ்மேலுலகங்களில் சுற்றி ப்ரமிப்பதும் தமோகுணத்தால் திர்யக் ஜந்துவைப் போலும் நடப்பவனுக்கு நாகாதியாதனைகளும் நேரிடும் தவிரவும் ப்ருஹதாரண்ய உபநிஷத்தில், ஈச்வரன் ஜகத் ஸ்ருஷ்டிக்கி முந்தின ஸமயத்தில் நம்மைக்காட்டிலும் வேறு ஒன்றும் கிடையாது. ஸ்ருஷ்டிக்கி காரணபூதனாய் உலகரூபியாக விளங்க வேண்டியவன் நான் என்று சொன்னார். இவ்விதம் சொன்ன நான் என்ற பதத்திற்கு ஸம்ஸ்கிருத பாஷையில் அஹம் என்று பதத்தை தன் பெயராக உச்சரித்தார். இந்த அஹம் என்ற பதமானது ஸம்ஸ்கிருத பாஷைக்கும் வேதாதி சாஸ்திரங்களுக்கும் மாத்ருகாக்ஷரங்களுக்கும் ஸூத்ர ரூபமாக விளங்குகிறது. எப்படியென்றால் மாத்ருகாக்ஷரங்களுக்கு முதல் எழுத்து அ என்றதையும் கடைசி எழுத்தான ஹ என்றதையும் சேர்த்து அஹமென்று உச்சரிக்கப்பட்டது. இந்த அஹம் பதத்தினால் வேத சாஸ்த்ராதி 18 லௌகிக

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.)

215256

ஸ்ரீ வாஞ்சிய க்ஷேத்திரம்.

வேதபாராயண தர்மம்.

இந்த பூமியிலுள்ள சமஸ்தமான மனுஷ்யர்களும் ஒரு தினம் வசித்த மாத்திரத்தினால் கொடுக்கக்கூடிய கைலாசத்திற்கொப்பான ஸ்ரீ வாஞ்சிய க்ஷேத்திரம் என்ற க்ஷேத்திரமானது காவேரி தீரத்திற்குச் சமீபத்திலும் நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து சுமார் 6 மைல் தூரத்திலும் உள்ளது. இந்த க்ஷேத்திர வைபவத்தை இந்தியாவில் அறியாத ஆஸ்திகர்கள் அதிகமாயிருக்க முடியாது.

ஸ்காந்தம் முதலான பல பூராணங்களில் இந்த க்ஷேத்திர வைபவத்தை மகா முனிவரான ஸ்ரீ வியாசாச்சாரியார் வர்ணித்திருப்பது சத்தியமென்பது க்ஷேத்திரத்திற்கு ஒரு தரம் சென்று குப்த கங்கை என்னும் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து யம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மங்களாம்பிகை சகித ஸ்ரீ வாஞ்சேச்வரரை தரிசித்தவர்களுக்கு அப்பொழுது புலப்படும். யம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிறவர்களுக்கு யம பாதையே கிடையாதென்பது புராணங்கள் கூறியிருக்கிறது. அதிலும் கார்த்திகை-மீ ஞாயிற்றுக்கிழமைகளில் அந்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தால் பஞ்சமஹா பாதகங்களும் விலகிவிடும். இப்பொழுதும் கோடிக்கணக்கான ஜனங்கள் அந்த புண்ணிய காலத்தை முன்னிட்டு ஒவ்வொரு பானுவாரமும் வருகின்றனர். அப்பொழுது உத்ஸவமும் வருஷத்தோறும் நடந்துவருகிறது. ஷெ உத்ஸவத்தில் வேத பாராயணம் சாதுக்களுக்கு சந்தர்ப்பணம் இவைகளை நன்னிலம் பனங்குடியில் வசித்து வந்த பாரத்வாஜ மகரிஷி போன்ற மகா தபஸ்வியான பிரம்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் நடத்தி வந்தார். அவர்கள் தன்னுடைய 90 வது வயதில் சன்னியாஸம் செய்து கொண்டு ஸித்தியான பிறகு அவருடைய புத்திரர் பிரம்மஸ்ரீ ராமச்சந்திர தீக்ஷிதர் அவர்கள் நடத்தி வருகிறார்கள். இந்த பகுதான்ய ஹூ கார்த்திகை மீ 17உ வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடந்து வருகிற மஹோத்ஸவத்தில் வேதபாராயணத்தையும் ஷெ தீக்ஷிதர் அவர்கள் நடத்தி வருகிறார்கள். அனைவரும் உதவிபுரியவேண்டியது மிகவும் அவச்யம். வேதாத்யயனம் பண்ணும் சாதுக்கள் குக்ஷிகளில் நமது அன்னம் சேர்ந்து ஜீர்ணமானால் நமது பாபங்கள் எல்லாம் ஜீர்ணமாகிவிடும். இந்தப்பெரிய தர்மத்தை தீக்ஷிதர் அவர்கள் ஒருவரால் பொருத்துச் செய்ய முடியாததால் சாதுக்கள் அக்ஷதமாகவோ அல்லது திரவ்யமாகவோ கொடுத்து உபகாரம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. இக்காலத்தில் தர்மத்துக்கு கொடுக்கவேண்டுமென்ற ஆவலுடன் கூட இருக்கும் ஸாதுக்களுக்குக் கூட. இன்னார் வாஸ்தவமாக தர்மம் செய்கிறாயென்பது தெரியாததால் கொடுக்கமுடியாமல் போகிறது. ஆகையால் வாஸ்தவமான ஷெ தர்மத்தை உத்தம க்ஷேத்திரத்தில் நடத்தும் தீக்ஷிதர் அவர்களிடத்தில் தர்ம புத்தியைக்காட்டுவதற்காக இந்த விஷயமானது தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. நன்னிலம் தாலுகா பனங்குடி, ஸ்ரீராமசந்திர தீக்ஷிதர் என்ற விலாஸத்திற்குப்பணம் அனுப்பலாம்.

அனந்தராம தீக்ஷிதர்.

(8-ம்பக்க தொடர்ச்சி)

பாஷைகளையும் இச்வரன் தன்னுடைய நாமதேயமென்று காட்டியதாக ஆகிறது. இந்த அஹம்பதத்தின் விவரணத்தையே ஆனந்தத் தாண்டவ காலத்தில் வலது கை உடுக்கினால் அ என்ற எழுத்து முதல் ஹ என்ற என்ற வரையிலுள்ள மாத்ருகாக்ஷரங்களை 14 ஸூத்திரங்களாக விவரணம் செய்யப்பட்டதாக ஆகிறது. ஆகையால் ஈச்வரனுடைய ஓர் உருவமே. ஷெ ஆத்மாவை வேதம் என்ற மந்த்ரப்படி உலகமாக ஆனது போல் அவனுடைய பெயராகிற அஹம் பதமும் ஷெ உலக வ்யவஹாரங்களுக்கு வாசகங்களாக பாஷா ரூபமாக ஆகியிருக்கிறது. இவ்விதம் ஈச்வர ஸ்வரூபமான உலகமும் ஈச்வர நாமாவாகிய அஹம்பத பரிணாமமாகிய வேதாதி 18 பாஷைகளும் வாச்யவாசகஸம்பந்தத்துடன் விளங்குகிறது. இன்ன வாசக பதத்தால் இன்ன அர்த்தம் அறியத்தகுந்தது. ஆகையால் க்ருஷ்ணனும் நான் என்கிறான். என்று அறிவதற்கு ஈச்வர சக்தி காரணமாயிருக்கிறாள். இதைத்தான் அர்த்தமய ஸ்ருஷ்டியென்றும் சப்தமயஸ்ருஷ்டி யென்றும் சொல்லப்படுகிறது. அந்த ரூபமான உலகத்தை ஸ்தூலபிந்து என்றும் சப்தாதி வாசகங்களை ஸ்தூலநாத மென்றும் சொல்லப்படுகிறது. 2-ம் சிவ சக்திகள் ஆகையால் ஆதி முதல் எழுதிய இந்த உபன்யாஸத்தால் ஸத்ய வஸ்துவின் பரிணாமமாகிய இந்த உலகத்தில் ஸத்ய விரோதமில்லாத பாஷைகளாலும் ஸத்ய வாசகங்களான வேதாதிகளில் சொல்லப்பட்ட காமாதி ஸம்பந்தமில்லாத வர்ணாச்ரம தர்ம உபாஸனானுஷ்டானத்திலும் ஸத்யவஸ்து தாதாத்ம்யத்தை அடைவது தான் ஸத்யபரிபாலனமென்று சொல்லப்படுகிறது இந்த உபன்யாஸ முழுவிஷயங்களையும் அநுஷ்டித்தே ஹரிச்சந்த்ராதிகள் ஜகத்ப்ரஸித்தமான ஸித்தியை அடைந்தார்கள்.

கும்பகோணத்தில் நடந்த வருணஜப வரவு செலவு கணக்கு.

வரவு 46-4-1 செலவு 49-5-6 இன்னும் பாக்கி கொடுக்க வேண்டியது 12-10-6 ஆக ரூ 62—0—0

இந்த 62-0-0ல் 46-4-1 போக 15-11 11 மேற்கண்ட ரூ 15-11-11. இன்னும் பாக்கி இருக்கிறது. ஏதேனும் கொடுக்க இஷ்டமுள்ளவர்கள் C. S. தீக்ஷிதர், நெ 3, பிள்ளையார் கோவில்தெரு, கும்பகோணம் அவர்களிடம் கொடுக்கலாம்.

ஸ்ரீ ராமாயண பட்டாபிஷேக மகோத்ஸவம்.

நிகழும் பகுதான்ய ஹூ ஆவணி மீ 5உ முதல் கும்பகோணம் செட்டியார் குளம் கீழ்கரையில் விளங்கிக்கொண்டிருக்கும் ஸ்ரீராமமந்திரத்தில் அநேக ஆஸ்திகர்களின் ஆதரவின் பேரில் ஸ்ரீ வால்மீகி ராமாயணம் 27- பாகங்களாகப்பிரிக்கப்பெற்றுச் சிறந்த ச்ருதி, லய பக்கவாத்தியங்களுடன் திட்டைச்சேரி பிரம்மஸ்ரீ T. N. ரகுநாதபாகவதர் அவர்களால் கதாகாலக்ஷேப ரூபமாய் ஸ்ரீராகவன் க்ருபையால் நடந்து வருகிறது. ஸ்ரீராம பட்டாபிஷேக கதா காலக்ஷேபம் நிகழும் பகுதான்ய ஹூ ஐப்பசி மீ 28உ 13-11-38 ஞாயிற்றுக்கிழமைவயி பூசநக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில் மாலை 6—30 மணிக்குத் தொடங்கி நடைபெறும். ஆஸ்திகர் எல்லோரும் விஜயம் செய்து கதாச்ரவணம் செய்து ஆனந்தமடைந்து ஸ்ரீராமபிரான் கிருபைக்கு பாத்திரமாவதுடன் மன உறுதியுடன் கதா காலக்ஷேபங்களை நடத்திவரும் பாகவதரவர்களையும் நன்கு ஆதரிக்கப் பிரார்த்திக்கிறோம்.

ஒரு நிருபர்

நன்னிலம்.

ஸ்கந்த ஷஷ்டி உத்ஸவம்.

ஐப்பசி மீ 8உ (24-10-38) சோமவாரம் ஆரம்பமாய் தொடர்ந்து 6-நாள் நடைபெற்று 30-10-38 பானுவாரம் பெருமான் திருக்கல்யாணம் காலையில் வைதிக முறையிலும், இரவில் வள்ளி மணம் காலக்ஷேப முறையிலும் நிகழ்ந்தது. ஒவ்வொரு அன்பரும் செம்மனமோடு ஆதரவு காட்டி, உற்சவம் செவ்வனே நிறைவேறியது. ஒரு நிருபர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

குத்தாலத்தில் கூட்டம்.

தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் குத்தாலத்தில் நடைபெற்றது. அநேக மெம்பர்களும், தலைவர்களும், மந்திரிகளும் வந்திருந்தார்கள்.

கார்யக்கமிட்டியை அமைக்கும் அதிகாரம் தலைவருக்கு அளிக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

சட்டசபைகளில் ஸ்தானம் வகிக்கும் காங்கிரஸ்காரர்கள் முனிஸிபாலிடி, ஜில்லா போர்ட் முதலியவைகளில் அங்கத்தினராக இருக்கக்கூடாதென்று ஓர் தீர்மானம் செய்யப்பட்டது.

பம்பாயில் தொழிலாளிகள் கலவரம்.

மந்திரிகளுக்கு எதிர்ப்பு.

பம்பாய் சட்டசபையில் தொழில் சச்சரவு சோதா ஒன்றை மந்திரிகள் நிறைவேற்றியிருக்கிறார்கள். தொழிலாளிகள் இதனால் அதிருப்தியடைந்து கலவரம் செய்தனர் துப்பாக்கி ப்ரயோகமும் நடந்தது. மந்திரிகள் வண்டியும் தாக்கப்பட்டது. சட்டசபையில் விவாதகாலத்தில் தொழிலாளி மந்திரிகள் அதிருப்தியால் வெளியேறினார்கள்.

ஜே. கிருஷ்ண மூர்த்தி

தியஸாபிகல் மதத் தலைவராக மதிக்கப்படும் ஸ்ரீமான் ஜே. கிருஷ்ண மூர்த்தி என்பவர் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வந்திருக்கிறார். இந்தியா முழுவதும் இவர் மதப் பிரசாரம் செய்துவிட்டு ஆஸ்திரேலியா போவாராம்.

தெருவை சுத்தம் செய்தல்.

ஊழியர்களின் ஊக்கம்.

ஸாஹரன்பூரில் கிராமபிவிருத்தி திட்டத்தில் உழைத்துவரும் ஊழியர்கள் விடியற்காலையில் தெருக்களை சுத்தம் செய்யும் வேலையில் ஈடுபட்டுப் பொதுஜனங்களுக்கு வழிகாட்டி வருகிறார்களாம்.

திருவாங்கூர் பாங்கி டைரக்டர் விஷயம்.

திருவாங்கூர் பாங்கியில் டைரக்டர்கள் நால்வர் கைது செய்யப்பட்ட விஷயமாக சென்னை ஹைகோர்ட்டில் நடைபெற்ற வழக்குகள் யாவும் தோற்றுப்போயின. ஆகையால் அவர்கள் திருவாங்கூர் போலீஸாரிடம் இனி ஒப்படைக்கப்படுவார்கள்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அன்யதர்மம்

4 ண
23 45

17-11-1938

215257

215257
26 NOV 1938
MADRAS
615

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 | கும்பகோணம் கலி5040 பஹுதான்ய௵ கார்த்திகை௴ 2௳ 1938௵ நவம்பர்௴ 17௳ | ஸ 45

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.
விளம்பர விகிதம்
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0.
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

பொது ஸுகாதார மசோதா.

சென்னை ஸுகாதார மந்திரி கனம் டாக்டர் ராஜனால் தயாரிக்கப்பட்ட பொது ஜன ஸுகாதார மசோதா பிரசுரமாயிருக்கிறது. இதில் புதிதாக மாகாண ஸுகாதாரபோர்டு ஒன்று அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஸ்தல ஸ்தாபனங்களின் வருமானத்தில் ஒருபாகம் ஸுகாதாரத்திற்கு ஒதுக்கி வைக்கப்படவேண்டும். குடிதண்ணீர் சாக்கடை திட்டங்களுக்கு வகை செய்யப்படும். அசுத்தம் செய்வதைத் தடுத்தல், தொத்து வியாதி நிவாரணம் தர்மார்த்த வியாதித்தடுப்பு, பிரஸவ சிசு ஸம்ரக்ஷணதிட்டம். கொசு நிவாரணம், உத்ஸவகால சுகாதார ஏற்பாடுகள் கலப்படத்தடை முதலிய பல அம்சங்கள் அடங்கியிருக்கின்றன.

வங்கராஜீயக் கைதிகள்.

பாக்கியுள்ள ராஜீயக் கைதிகள் தங்களை சரியாக நடத்தவில்லையென்ற காரணத்தால் பட்டினி ஹடம்செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். 220 பேர்கள் இதில் ஸம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

முனிஸிபல் சேர்மன்கள்.

மதுரை, திருச்சி ஆகிய இரு முனிஸிபாலிடிகளுக்கும் முறையே ஸ்ரீமான்கள் சுப்பராமன் பி. ஆர். தேவர் என்ற இரு காங்கிரஸ்காரர்களும் சேர்மெனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

ராஜகோட்டில் ராஜீயக் கலஹம்.

கத்தியவார் பிரதேசத்திலுள்ள ராஜகோட் ஸமஸ்தானத்தில் பொறுப்பாட்சிக் கிளர்ச்சி வலுத்து வருகிறது. ஸர்க்காரின் தடை உத்திரவுகள் காரணமாக ஸத்யாக்ரஹமும், சட்டமறுப்பும் நடக்கிறது. பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். துப்பாக்கி பிரயோகமும் நடந்தது. ஸ்ரீமான் படேலும், அவர் குமாரியும் கிளர்ச்சிக் காரர்களுக்கு ஆலோசனை கூறி வருகிறார்கள்.

தென்னிந்தியாவில் மண்ணெண்ணெய் உற்பத்தி.

ஆராய்ச்சியின் பலன்.

சென்னை கவர்ன்மெண்டைச் சேர்ந்த ஆராய்ச்சிக்காரர் ஒருவர் தென்னிந்தியாவில் ஓர் முக்யமான இடத்தில் ஏராளமாக மண்ணெண்ணை ஊற்றுக்கள் இருப்பதாகக்கண்டு பிடித்திருக்கிறார். இதிலிருந்து இந்தியாவிற்கு வேண்டிய அளவு எண்ணை கிடைக்குமாம். மேலும் அவருடைய ஆராய்ச்சியின் பலனாக தென்னிந்தியாவில், வைரம், தங்கம், பித்தளை முதலியவைகள் ஏராளமாகக் கிடைக்குமென்று கண்டு பிடித்திருக்கிறார். மண்ணெண்ணை கண்டு பிடிக்கப்பட்ட பிரதேசத்தின் பெயர் ரஹஸ்யமாக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மீண்டும் புத்தகயைக் கிளர்ச்சி.

இலங்கையைச் சேர்ந்த சில பௌத்த பிக்ஷுக்கள் பாபுராஜேந்திர பிரஸாதிடம் தூதுசென்று புத்தகயைத் தங்களிடமே விட்டுவிடவேண்டுமென்றும் உலகில் புத்தமதே பெரிதென்றும் வற்புறுத்தினார்கள்.

சந்திரக்கிரஹண புண்யகாலம்.

இந்தியாவெங்கும் கொண்டாட்டம்.

சந்திரக் கிரஹண புண்யகாலத்தை முன்னிட்டு, காசி, கல்கத்தா முதலிய பற்பல புண்ய நதி தீரங்களிலும் தென்னிந்தியாவிலுள்ள புண்ய தீர்த்தங்களிலும் 10 லக்ஷக்கணக்கான ஜனங்கள் புண்ய ஸ்நானம் செய்தனர். பலவிடங்களில் ஜனக்கூட்டம் தாங்க முடியவில்லை போலீஸ் ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தனவாம்.

ஆஸ்திரியாவில் யூதர் கஷ்டம்.

ஜர்மன் ஆஸ்திரியாவில் யூதர்களை ஒழிக்கும் திட்டமானது வெகு உக்ரமாக அமுல் நடத்தப்பட்டு வருகிறது. ஆயிரக்கணக்கான யூதர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். அவர்களுடைய வீடுகளும், சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படுகின்றன.

பாலஸ்தீனக் கிளர்ச்சி,

பிரிடிஷ் அறிக்கை

பாலஸ்தீனத்தை யூதர்களுக்காக பிரிவினை செய்வதென்ற பிரிடிஷ் திட்டத்தை பிரிடிஷார் கைவிட்டு விட்டார்கள். பிரிவினையை எதிர்த்து அரேபியர்கள் பெரிய கிளர்ச்சி நடத்தியதே இதற்குக் காரணம்.

கும்பகோணம் பாங்கி, லிமிடெட்,
(1904-௵ ஸ்தாபிக்கப்பட்டது).

ஸேவிங்ஸ் அக்யூமுலேஷன்
அக்கௌண்டு.

பையன்கள் மேற்படிப்புக்கு போவதற்கு முன், கனமாய் கையில் பணம் சேரும்படிக்கும்;
பெண்களுக்கு கலியாண வயது வருவதற்கு முன்னே சிறுக பணம் சேர்த்து பெரிய முதல் பண்ணிக்கொள்வதற்கும்;
எதிர்பாராத செலவுகள் வரும்போது எளிதாய் எடுத்துக்கொடுப்பதற்கும்;
ஒருவர் முகத்தைப்பார்த்து கடன் கேட்காமல் எப்போதும் கைக்கு பணம் உதவும்படிக்கும்;

கும்பகோணம் பாங்கியில்
ஸேவிங்ஸ்
அக்யூமுலேஷன் அக்கௌண்ட்
ஆரம்பியுங்கள்.

இதில், இன்ஷியூரன்ஸ் பாலிஸி எடுப்பதைக்காட்டிலும் அதிக வட்டி வருமானம் உண்டு. மாதாந்தரம் பணம் கட்ட வேண்டிய முறைகளிலுள்ள நிர்ப்பந்தங்களும் தொந்தரவுகளும் கிடையாது.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. ஸீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

ஆயுர்வேத அபிவிர்த்தியின் அவச்யம்.

(காக்கழனி கிருஷ்ணமூர்த்தி.)

பிர்ம்மாவினால் செய்யப்பட்ட உபவேதங்கள் நான்கினுள் ஒன்றான ஆயுர்வேதமானது ஆதியில் 1, (ரணசிகிச்சையையும், ஆயுதங்களின் பிரயோகத்தை தெரிவிக்கும்) சல்லியமென்றும், சஸ்திரம் or Surgery) 2, (கழுத்துக்கு மேலுள்ள உருப்புக்களுக்குள்ள ரோகங்களையும், சிகிச்சையையும் போதிக்கும்) ஊர்த்துவாலங்கசாலக்கியமென்றும், 3, (சுரம், அதிசாரம் 'உன்மாதம், குஷ்டம் முதலான சரீர ரோகங்களையும் அதற்கான சிகிச்சைகளையும் தெரிவிக்கும்) காயசிகிச்சை யென்றும் (Practice of Physics) 4, (பேய்பிடித்தல் முதலான மனோவியாதிகளின் சிகிச்சையைத்தெரிவிக்கும்) பூதவைத்தியமென்றும், 5, (குழந்தைகளின் வியாதிகள் அதற்கான சிகிச்சைகளைச்சொல்லும்) கௌமாரபிர்த்தியமென்றும், 6, (விஷசம்பந்தமாயுள்ளவைகளின் பீடையையும் அதற்குள்ள சிகிச்சையையும் கண்ட) அகததந்திரமென்றும், 7, (வாதம் சுடும் வழிகளையும், சரீரத்தில் நரை, திரை, மூப்பு முதலானதுகளும், எவ்விதரோகங்களும் உண்டாகாமல் தடுத்துக்கொள்ளும் யோக முறைகளையும், ஆயுசை விர்த்தி செய்துகொள்ளத்தகுந்த காயகல்பங்களையும் போதிக்கும்) ரசாயன தந்திரமென்றும், 8, (ஜனனேந்திரியங்களுக்குண்டாகும் ரோகங்களையும் அதன் நிவர்த்தியையும், வீர்யவிர்த்திக்கான ஔஷதங்களையும் தெரிவிக்கும்) வசீகரணதந்திரமென்றும் ஆக எட்டு பிரிவுகள் உள்ளதாய் இருந்திருக்கவேணுமென்று ஊகிக்கப்படுகிறது.

காலானுசாரமாய் சம்பவித்த அழிவினால் அம்மூலகிரந்தங்கள் இப்பொழுது அகப்படாவிட்டாலும், அவைகளை அநுசரித்து எழுதப்பட்ட ஸுஸ்ருதம் (சஸ்திர சிகிச்சை) சரகம் (காயசிகிச்சை) என்ற இரண்டும் இக்காலத்தில் மூலகிரந்தமாக விளங்குகிறது. இந்த இரண்டு நூல்களையும் பின்பற்றி வாக்படாசாரியாரென்பவரால் வாக்படம் (அஷ்டாங்கஹிருதயம் எனச்சொல்லப்படுவது) என்ற நூல் செய்யப்பட்டு அந்நூல் தற்காலத்தில் அநுஷ்டானத்திலிருந்து வருகிறது.

பூர்வம் நம் பாரத கண்டமான இவ்விந்தியா ஆயுர்வேத அபிவிருத்தியில் பிரபலபட்டதாயிருந்த பொழுது அரபியர், யூதேயர், கிரேக்கர், முதலானவர்களும், எகிப்து, ஜினோவா, வெனிஸ், முதலிய நாட்டினர்களும் இந்தியாவிற்கு வந்து இந்திய வைத்திய முறைகளை கற்றுக்கொண்டார்கள் என சிலசரித்திரக்காரர்கள் எழுதியிருக்கிறார்கள். தவிர சாலோமன் அரசன் ஏசுகிறிஸ்துநாதர் முதலானவர்களும் இந்திய வைத்திய நூலைக்கற்றதாக ஒரு அமெரிக்க சாஸ்திரி எழுதுகிறார். இவ்விதமுள்ள ஆயுர்வேதமான வைத்திய முறை மஹம்மதியர்களின் அரசாக்ஷி காலத்திலும், இங்கிலீஷ்காரரிடம் வந்தபின்பும் அவர்களின் வைத்திய முறைகளையே எங்கும் பரவும்படி இங்கிலீஷ்காரர்கள் செய்துவிட்டதால், நமது ஆயுர்வேத முறைகள் க்ஷீணதசையை அடைந்து அரைகுறையாய் அப்பியசித்தவர்களால் அவரவர்கள் மனம் போனபடி சிகித்சை செய்யப்பட்டு வந்ததில், ஆயுர்வேதத்தை ஆதரிப்பாரின்றி போய்விட்டதால், அந்நூல்களில் அநேகம் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிட்டன. நாம் சிறுவர்களுக்காவது வகுப்புகளில் கற்பிக்கப்படும் பாடங்களாக நமது ஆயுர்வேத முறைகளைக்கற்பிக்காமல் விட்டுவிட்டதால், நம் நாட்டில் அதன் அபிவிருத்தி அடியோடு குன்றிவிட்டது.

சில வருஷங்களுக்குமுன் பல பிரமுகர்கள் நமது ஆயுர்வேத முறைகளின் சிலாக்கியமான அம்சங்களை நன்கறிந்து, அதை அபிவிர்த்தி செய்வதில் முயற்சி எடுத்து, பல இடங்களில் ஆயுர்வேத ஔஷத சாலைகள் ஏற்படுத்தியும், பலவிடங்களில் ஆயுர்வேத பாடசாலைகள் நடத்தியும் ஆயுர்வேத முறைகளை பிரபலப்படுத்தியிருக்கிறார்கள். அவைகளில் சென்னையிலுள்ள ஸ்ரீ வெங்கிட்ரமண வைத்திய சாலையும், அதைச்சேர்ந்த பாடசாலையும் முக்கியமானது. கனம் டாக்டர் A. லக்ஷ்மிபதி அவர்கள் B.A., M.B, & C.M, பிரசிடெண்டாகவுள்ள சென்னை ஆயுர்வேத பிரசார சபாவின் முயற்சியும் போற்றத்தக்கதாகும். இப்பொழுது ஸ்ரீமான் மாளவியா அவர்களடைந்த கல்பசாதன முறையால் இந்த ஆயுர்வேத முறையின் கௌரவம் உலகெங்கும் பரவியதற்கு ஒரு காரணமென்றும் சொல்லலாம். பல பொறுப்பாளிகள் முயற்சியால் ஏற்படுத்தப்பட்ட சென்னை இந்திய வைத்திய பாடசாலை (Indian Medical school) கெவர்ன்மெண்டாரால் நடத்தப்பட்டு வருவதில் பல பட்டதாரிகள் தோன்றி, அங்கங்கு ஆயுர்வேதமுறைப்படி வைத்தியஞ்செய்து வருவதில் நம் நாடு பல நன்மையை அடைந்திருக்கிறது. ஆயினும் சென்னை ஸ்கூலில் வைத்திய மாணவர்களுக்கு ஆயுர்வேத முறைகள் இங்கிலீஷிலேயே கற்பிக்கப்படுவதாலும், சஸ்திர சிகித்சையை (Surgery) இங்கிலீஷ் வைத்திய முறையை அநுசரித்தே போதிக்கப்படுவதாலும், அந்நூல்களை நூல்கள் எந்த பாஷையில் இயற்றப்பட்டிருக்கிறதோ அதே பாஷையைக் கொண்டு கற்பிக்கப்படாததாலும், ஆயுர்வேத முறைகளின் யதார்த்தமாயுமுள்ள சாரம்சங்களை மாணவர்கள் அறிந்துகொள்ள முடியாமல் போகிறது. நம் நாட்டில் பிரசிக்கப்பட்டிருக்கும் பல வைத்திய நூல்கள் பெரும்பாலும் ஸம்ஸ்கிருதபாஷையிலும், தமிழ் பாஷையிலுமே இயற்றப்பட்டிருப்பதால், அவைகளை அந்தந்த பாஷையிலேயே கற்பிப்பதுதான் மேல். அதற்கான சாதனங்கள் நமக்கிருந்தும் அதை கெவனிக்காமல் இருப்பது நியாயமாகாது.

இப்பொழுது தஞ்சாவூரில் நடந்துவந்த வைத்தியக்கல்லூரியை (Prince of Wales medical School) கெவர்மெண்டார் நிறுத்திவிட்டபடியால் அதே இடத்தில் அதன் நிதியைக்கொண்டு ஒரு ஆயுர்வேத பாடசாலை ஏற்படுத்த தஞ்சை ஜில்லா போர்டு மெம்பர்கள் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆயினும் மேற்படி தீர்மானத்தை கெவர்ன்மெண்டதிகாரிகள் மஞ்சூர் செய்யாமல், அதே கட்டிடத்தில் அந்த நிதியைக்கொண்டு ஓர் எக்ஸ்ரே அண்டு ரேடியம் இன்ஸ்டிட்யூட் (Xray and Radium Institute, ஸ்தாபிக்க போகிறதாயும் தெரிய வருகிறது. மேற்படி நிதியானது வைத்தியக்கல்லூரி நடக்கவே ஏற்பட்டிருப்பதாக தெரிய வருவதால் டிஸ்டிரிக் போர்டார் கோருவது போல் அதைக்கொண்டு ஆயுர்வேதபாடசாலை ஏற்படுத்த கவர்ன்மெண்டாரும் அநுமதிப்பது தான் மேலான காரியம். அப்படிச்செய்யப்படுவதில் அங்கு மாணவர்களுக்கு ஆயுர்வேதத்தை சம்ஸ்கிருத பாஷையிலும், தமிழ் பாஷையிலுமே கற்பிக்க கவர்ன்மெண்டாரவர்கள் டிஸ்டிரிக் போர்டாரின் தீர்மானத்தை அநுமதித்தும், அதில் ஆயுர்வேத அபிவிர்த்தி ஏற்படும் பொருட்டு, மேற்படி நூல்களை தகுந்த பண்டிதர்களைக்கொண்டு சம்ஸ்கிருத பாஷையிலும் தமிழ் பாஷையிலுமே கற்றுக் கொடுக்கும் படி ஏற்பாடு செய்யும் படியும் தஞ்சை ஜில்லா போர்டுகள் ஒன்றாகச் செய்திருப்பதால், சமீபத்தில் சேர்ந்த நாட்டு போர்டின் தீர்மானத்தை அமுலுக்குக்கொண்டுவரக்கூடிய வழிகளில் கெவர்ன்மெண்டாருக்கு எடுத்துரைத்தும், அதன் மூலம் ஏற்படும் பாடசாலையில் அவச்யம் சம்ஸ்கிருதத்திலும், தமிழிலுமே பாடங்களை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுவதும் அவருடைய கடமையென்பதை வற்புறுத்துகிறோம். பொதுமக்களும் இது சமயம் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்றபடி அங்கங்கு கூடி தீர்மானம் செய்து, அவச்யம் போர்டு தீர்மானத்தை அமுலுக்கு கொண்டுவரும் படியும், அதில் மேற்கண்டபடி நூல்கள் இயற்றப்பட்டிருக்கும் பாஷைகளிலேயே மாணவர்களுக்குக்கல்வி அபிவிருத்தி செய்யும் படியான ஏற்பாட்டை அங்கீகரிக்கும் படியும் கெவர்மெண்டாரவர்களுக்குத்தெரிவித்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவச்யமாகும். இதுவே சமயம் ஆயுர்வேத அபிவிருத்திக்கு அவச்யமான காரியம். இதில் சிரத்தை வரும்படி யாவருக்கும் ஈசன் அருள்புரிவாராக.

ஸநாதனதர்ம பிரசாரம்.

(இடையாத்துமங்கலம்.)

இவ்வூரில் 2-11-38௳ முதல் 9-11-38௳ வரை சனாதன தர்மப்பிரசாரகரான மதுரை பிரம்மஸ்ரீ M. N. சுப்பிரமண்ய சாஸ்திரிகள் அவர்களால் உபன்யசிக்கப்பட்டது. மதத்திற்காக மநுஷ்யஸ்ருஷ்டியா அல்லது மனிதருக்காக மதமா என்று ஆரம்பித்து மதத்திற்காகத்தான் மனிதஸ்ருஷ்டி என்றும் மதமில்லாமல் மனிதன் இருக்கமுடியாதென்பதைப் பற்றியும் வேதம் தான் மனிதனுக்கு ஆதாரம் என்றும் வேதத்திலிருந்து மூர்த்திகளும் உலகமும் உண்டாயிற்றென்றும் தர்மமென்பது கன்யாவென்றும் தர்மம், கன்மம், பக்தி இவைகளுக்கு பக்ஷாந்தரத்தில் சரியானபடி உபயோகிக்கமுடியாதென்றும் ஆகவே மனித சாமான்யன் இம்மூன்றையும் சாஸ்திர முறைப்படி உண்மையான சக்திக்கு குறைவின்றி அநுஷ்டித்தால் தான் ஈச்வரப்பிரசாதம் கிடைக்குமென்றும் தற்காலத்தில் நம் மதத்தை அழிக்க முற்படும் தேசமுன்னேற்றக்கோஷ்டியில் நாம் சேராமல் தலை கத்திரிப்பை விலக்கி, நெற்றிக்குறியிட்டு, வஸ்திரம் உடுத்தலை அவரவர்கள் நிலைக்குத் தக்கபடி உடுத்தி, பிராமணர்கள் தன் கையால் நூற்கப்பட்ட பூணூலை தரித்துக்கொண்டும் ஸந்தியா வந்தனம் ஒன்றை மட்டுமாவது காலம் தவறாது விதிப்படி அநுஷ்டித்து வந்தால் நம் நாடு முன்னேற்றமாகு மென்றும், பெரிய குடியான காப்பி, டீ முதலிய அனர்த்தங்களை ஒழித்தால் நமக்கு வியாதியே வராதென்றும் சாஸ்திர விதிப்படி நடந்து வருவதால் மட்டுமே இகலோகத்தில் பரம சுகத்தோடு கூட இருந்து பரத்தில் மோக்ஷத்தையும் அடைய வழியுண்டென்றும் மிகுந்த தகுந்த மேற்கோள்களோடும் யாவர் மனதுமுருக உபன்யசித்தார்கள்.

ஆத்ரேய அமிருதகடேச சர்மா.

ஓர் சந்தேகம்.

(ஆகாமாவை) என்ற புண்ணிய காலம் பஞ்சாங்கங்களில் பிரசுரமாகி ஜனங்கள் உஷ: காலத்தில் ஸ்னானம் செய்து வருகிறார்கள். உதாரணமாக 1938 ௵ நவம்பர் 7௳ திங்கட்கிழமை குறித்துள்ள ஆகாமாவை ஸ்னானம், திங்கள் காலையிலா செவ்வாய் காலையிலா நடக்கவேண்டியது. உதயாது தயம் வாரம் என்ற நியாயத்தால் இந்த சந்தேகம்?

சாஸ்திரஞ்ஞர்கள் தயவுகூர்ந்து மேற்படி புண்ணிய கால நிர்ணய மான்மியங்களை பிரார்த்திக்கும்.

ஏ வெங்கட்ராமன்.

ஆத்திச்சூடி.

(முன் தொடர்ச்சி)

42. கோதாட்டொழி.
त्यजेत् हठेन व्यायामं
Leave off risky games.

43. கௌவையகற்று.
दूरीकुर्याद्विनिन्दितं
Spurn the condemned ones.

44. சக்கரநெறி நில்.
राजाज्ञामनुवर्तेत
Obey the royal command.

45. சான்றோரினத்திரு.
बुधसङ्गे सदावसेत्
Be always in the company of learned people.

46. சித்திரம் பேசேல்.
नासत्यं सत्यवद्ब्रूयात्
Don't speak an unreal thing as if a real one or Never utter falsehood seemingly truth.

47. சீர்மை மறவேல்.
नत्यजेद्यशस्करं
Never fail to do an act which will ehrance your reputation.

48. சுளிக்கச்சொல்லேல்.
न निष्ठुरं प्रभाषेत
Never speak impudently.

49. சூதுவிரும்பேல்.
द्यूतासक्तो न वै भवेत्
Desire not gambling.

50. செய்வன திருந்தச்செய்.
समीक्ष्य कुर्यात्कार्याणि
A thing should be done correctly (with due consideration and without haste.)

51. சேரிடமறிந்துசேர்.
ज्ञातपूर्वस्समावसेत्
gude one and then associate.

52. சையெனத்திரியேல்
न गर्हितश्चरेल्लोकं
Don't ramble being condemned (by all).

53. சொற்சோர்வு படேல்.
न वदेदपशब्दितं
Avoid speaking incorrectly.

54. சோம்பித்திரியேல்.
नालसः प्रचलेन्नित्यं
Never idle away your life.

55. தக்கோனெனத்திரி.
संचरेत्साधुमानितः
Win the encomium of the Public.

56. தானமது விரும்பு.
दिसेदाशक्ति दीनेभ्यः
Give (according to your mite) to the poor.

57. திருமாலுக்கடிமை செய்.
कुर्याद्दास्यंश्रियः पतेः
Act as a servant to the Lord of the Goddess of wealth.

58. தீவினையகற்று.
दुष्कृतंवर्जयेन्नित्यं
Avoid wicked deeds.

59. துன்பத்திற்கிடங்கொடேல்.
मास्मभूत् दुःखहेतुकः
Don't give room to affliction.

60. தூக்கிவினை செய்.
कुर्यात्कार्याण्युपायज्ञः
Perform a thing after deu consideration.

61. தெய்வமிகழேல்.
न निन्देद्दैव (मापादि)
(Even in distress) do not despise God.

62. தேசத்தோடொத்து வாழ்.
स्वदेश्यैस्सम्मतोजीवेत्
Live always united with your nation.

63. தையல் சொற்கேளேல்.
नादद्यात्कामिनी वचः
Never pay heed to the words of a damsll.

64 தொன்மை மறவேல்.
न विस्मरेच्चिरस्नेहं
Erelong friendship should not be forgotten.

65. தோற்பன தொடரேல்.
न पतेत पराजये
The action leading to a defeat should be discontinued.

66. நன்மை கடைப்பிடி.
सुकृतेषु धृतिंकुर्यात्
Be frm in doing good deeds.

67. நாடொப்பன செய்.
आचरेल्लोकसम्मतं
The action approved by the Public should be performed.

68 நிலையிற் பிரியேல்.
न कदापि चलेत्सत्यात्
Never swerve from the path of Truth. (for ever)

69. நீர் விளையாடேல்.
नो रमेत जलाशये
Never play in water.

70. நுண்மை நுகரேல்.
न भवेत् भक्ष्यचपलः
Don't eat cakes (very often or frequently.)

71. நூல்பலகல்.
भव शास्त्रेषु शिक्षितः
Be well-versed in all arts.

72. நெற்பயிர் விளை.
आवपेत् (कृषिको) व्रीहीन्
Raise corn crops in abundance.

73. நேர்பட ஒழுகு.
धर्म्यं पन्थानमाव्रजेत्
Follow the path of righteousness,

74. நைவினை நணுகேல்.
दुष्कृतेषु न सज्जेत ।
Don't partake in wicked actio

75. நொய்ய உரையேல்.
न हिब्रूयादरुन्तुदं
Never speak heart-rendingly.

76 நோய்க்கிடங்கொடேல்.
न रोगप्रसरः कार्यः
Never fall a prey to sickness.

77. பழிப்பன பகரேல்.
न भाषेतावहेलनं
Indulge not in mockery.

78. பாம்பொடு பழகேல்.
न संवसेत् भुजङ्गैश्च
Don't play with (venomous people) Cobras

79. பிழைபடச் சொல்லேல்.
न विरुद्धार्थमीरयेत्
One should not utter a thing quite conrary to its sense.

80. பீடுபெற நில்.
तिष्ठेदुच्चैः पदं प्रातुं ।
Aspire for a high rank in life.

81. புகழ்ந்தாரைப்போற்றி வாழ்.
भवेदाश्रित रक्षकः
Always be a shelter of refugees (fo rever)

82. பூமி திருத்தியுண்.
भूमिकृष्ट्वोपभुञ्जीत
Till the soil and enjoy the produce.

83. பெரியாரைத்துணை கொள்.
वयोवृद्धसखो वसेत्
Seek the aid of elders.

84. பேதைமையகற்று.
ज्ञानेनहन्यादज्ञानम्
Dispel your ignorance. (by knowledge).

85. பையலோடிணங்கேல்.
बालसख्यमपाकुरु
Don't make friendship with youngsters

86. பொருடனைப்போற்றி வாழ்.
योगक्षेम परो जीवेत
Earn, Preserve and increase wealth.

87. போர்த்தொழில் புரியேல்.
न विगृह्णीतकंचन
Don't quarrel with others.

88. மனந்தடுமாறேல்
चालयेन्नापदि मनः
Never lose courage in face of difficulties

89. மாற்றானுக்கிடங்கொடேல்.
मा च भूरिपुभूमिदः
Never allow the enemy to scent you weakness.

90. மிகைபடச்சொல்லேல்.
नापार्थमभिभाषेत
Don't speak elaborately [not pertaining the point]

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்

பகுதான்ய-௵ கார்த்திகை-௴ 2௳

ஸுகாதார மந்திரி கவனிக்கவேண்டியவை.

சென்னை மாகாணத்தின் பொது ஸுகாதார அபிவிருத்தியைக் கருதி ஓர் புதிய மசோதாவை ஸுகாதார மந்திரி தயாரித்து வெளியிட்டிருக்கிறார். இதிலுள்ள குண தோஷங்களைப் பரிசீலனைசெய்து பத்திரிகைகள் அபிப்பிராயம் வெளியிட்டுவருகின்றன. இந்தப் புதிய மசோதாவில், ஏற்கனவே அமுலிலுள்ள சட்ட திட்டங்களைவிடச் சில புதிய அம்சங்கள் இருந்தபோதிலும், பொதுவாக இது பழைய சட்டங்களையே பெரிதும் தழுவி தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதிலுள்ள திட்டங்கள் நிறைவேறி, காலக்ரமத்தில் பொதுஜன ஸுகாதாரம் எவ்வளவு தூரம் அபிவிருத்தியடையுமென்பதை இப்போது ஒருவரும் நிர்ணயித்துவிடமுடியாது. ஸாதகமென்னவென்பதை அறிய அதிக காலமாகுமாயினும், சில பாதகங்கள் உடனே தெரியக்கூடியவைகளாயிருக்கின்றன. ஸுகாதார அபிவிருத்தி வியாஜத்தில் பொது ஜனங்களுக்குக் கட்டாய முறையில் அதிக வரிவிதிக்க நேருவது இதில் முக்யமாகும். மேலும், போலீஸ் காரர்களுக்கும், முனிஸிபல் ஸுகாதாரச் சிப்பந்திகளுக்கும் சில அதிக அதிகாரங்களைக் கொடுப்பதால் பொது ஜனங்கள் சிரமத்திற்குள்ளாகவேண்டிவரலாம்.

இந்த மசோதாவின்படி, நகரங்களில் குடிதண்ணீர் வசதி, சாக்கடை திட்டம், தொத்துவியாதி நிவாரணம், உத்ஸவகால ஏற்பாடுபோன்றவை விசேஷமாகக் கவனிக்கப்படுமென்று தோன்றுகிறது.

இந்த மசோதாவையொட்டி நாம் சில விஷயங்களைக் குறிப்பிடவேண்டியிருக்கிறது. தற்காலம் ஸுகாதார விதிகளைக் கவனிக்கும் பொது மேற்றிசை வாஸனையையும், அத்தேச சாஸ்திர முறையையுங்கொண்டே திட்டத்தை அமைக்கிறார்களேயன்றி நமது சாஸ்திர, ஆசாரமுறைகளைப் பின்பற்றி காரியம் செய்வது வழக்கத்திலில்லை. நம் முன்னோர்கள் ஸுகாதார முறைகளைப்பற்றி மிக உயர்ந்த தத்வங்களுடன் சிறந்த வழி காட்டியுள்ளார்கள். நாம் அநுஷ்டிக்கும்படி விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆசாரங்களிலும் ஸுகாதாரமுறைகள் அபரிமிதமாக அடங்கியிருப்பதை யார் கவனிக்கிறார்கள்? ஆயினும் ஸுகாதார சாஸ்திர நிபுணர்களான பல மேற்றிசை தத்வ சாஸ்திரிகள் நமது ஆசார முறை மிகவும் ஸுகாதாரத்திற்கு ஏற்ற வழியில் அமைந்திருப்பதை அதிகம் கொண்டாடி வருகிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டில் சானிடேரி கமிஷனராக இருந்த மிஸ்டர் குக் போன்றவர்கள் நமது ஆசார முறைகள் ஒவ்வொன்றையும் ஸுகாதார வழிப்படி ஆராய்ச்சிசெய்து வெளியிட்டிருப்பதை அநேகர் அறிந்திருப்பார்கள்.

தற்காலத்தில், ஸுகாதாரத்தைப்பற்றியும், தொத்துவியாதி பரவுவதைப்பற்றியும் அதிகம் பேசப்படுகிறதாயினும் அதைத்தடுக்க காரியத்தில் ஒன்றும் செய்வதில்லை. வியாதிகள் பரவுதற்குக் காரணமான சிற்பகிருமிகளைப்பற்றியும் நம்முன்னோர்கள் பிரஸ்தாபித்துள்ளார்கள். வியாதிகள் பரவுவதற்குக் காரணமாயுள்ளவைகளைக் குறிப்பிடுகையில் ஸ்பர்சம், ஸல்லாபம் அல்லது பேசுதல், மூச்சுக்காற்று, வஸ்திரம், ஆஸனம் ஸஹபோஜனம், போன்ற காரியங்களால் ஒரு மனிதனிடமிருந்து மற்றொருவனிடம் வியாதிகள் பரவக்கூடுமென்று நமது சாஸ்திரம் மொழிகிறது. தற்கால தத்துவ சாஸ்திரிகளும் இதை ஒப்புக்கொள்ளுகிறார்களாயினும் மேற்கண்ட, வியாதி பரவும் ஸாதனங்களைக் குறைக்கப் பாடுபடுவதில்லை. உதாரணமாக ஹோட்டல்களை கவனிப்போம். அவைகளில் பற்பல ஜாதி மதஸ்தர்களும் வந்து குடிக்கிறார்கள் சாப்பிடுகிறார்கள். எல்லோருக்கும் பாத்திரங்கள் ஒன்றே. ஒருவன் குடித்ததிலேயே மற்றொருவன் குடிக்கிறான். ஹோட்டலில் வருகிறவர்களில் பிரத்யக்ஷமான ரோகமுள்ளவர் சிலர். மற்றுமனேகர் க்ஷயம்போன்ற பஹிரங்கமாக அறியமுடியாத வியாதியுள்ளவர்களிருக்கலாம். இவர்களெல்லோரும் ஓரிடத்தில் சேர்ந்து தின்பதாலும் குடிப்பதாலும் வெகு ஸுலபமாக வியாதி கிருமி பரவ இடமுண்டாகிறது. இம்மாதிரிவிஷயங்களில் நமது சாஸ்திரம் செய்துள்ள கண்டிப்பானது மிகவும் சிரேஷ்டமானது.

தற்போது வெளிவந்துள்ள ஸுகாதார மசோதாவில் நகரங்களிலுள்ள ஹோட்டல் விஷயமாகப் பூர்ண கவனம் செலுத்த வேண்டியது அவசியம். ஹோட்டல்களின் ஸங்கியைக்குறைத்து விடுவதுடன், அவைகளில், பாத்திரங்கள், சாப்பிடுமிடங்கள் போன்றவைகளில் மிகுந்த பந்தோபஸ்து ஏற்பாடும் செய்யவேண்டும். ஹோட்டல்களில் ஜாதி பேத முறையை ஒழித்துவிட வேண்டுமென் சில மூடர்களுடைய பேச்சைக்கேளாமல் ஜாதி நியமத்தை அங்கு காப்பதால் ஸுகாதாரத்தை விருத்தி செய்ய வழியுண்டென்பதை அறியவேணும்.

மேலும் தற்போது பள்ளிக்கூடங்களும் ஸுகாதார விருத்திக்குத் தடையாயிருந்து வருகின்றன. முக்யமாக சௌசமென்பது அங்கு அழிந்துவிட்டது. மாணவர்களும், ஆசிரியர்களும், கக்கூஸுகளுக்குப் போய் விட்டு கைகால்களை சுத்தி செய்து கொள்ளாமலே வந்து விடுகிறார்கள். மல மூத்ர விஸர்ஜன காலத்தில் விதிக்கப்பட்ட நியமங்கள் யாவும் மிகுந்த சுகாதார முறையைத்தழுவி, வியாதி பரவவிடாமல்செய்யும் உபாயங்களென்பதை ஊன்றிக்கவனித்தால் விளங்கும். மூத்ர விஸர்ஜனம் செய்த மாணவர்கள் கை கால் முதலியவைகளில் அசுத்த பிந்துக்கள் சம்பந்தப்பட்ட நிலைமையிலேயே எவ்வித சுத்தியுமில்லாமல் வகுப்புக்கு வருகிறார்கள். ஆசிரியர்களும்படியே. இது வியாதி பரவுவதற்குப் பெரிய ஸாதனம். இதை கவனிப்பவர் கிடையாது. ஆதலால் ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும், மாணவர்களும், ஆசிரியர்களும், கண்டிப்பாக சௌசமுறையை அநுஸரிக்கும்படி செய்து அதற்கு வேண்டிய ஜல வஸதியையும் செய்து கொடுக்கவேண்டியதவச்யம். வியாதிகள் வெகு ஸூக்ஷ்மமாகப் பரவுமிடங்களையும் காரணங்களையும் கண்டு அதற்கேற்ற பரிகாரம் செய்யாவிடில் இந்த மசோதாவினால் பலன் ஏற்படாது. ஒவ்வொரு மனிதனும் தனித்தனியாக ஸுகாதாரமுறைப்படி ஏற்பட்ட ஆசாரங்களை அநுஸரித்தாலல்லது பொது ஸுகாதாரம் ஏற்பட வழியில்லை.

மேலும், பொது ஸ்தலங்களிலும், ரோட்டுகளிலும், ரயில்களிலும் சுருட்டுப்பிடிக்கும் துர்வழக்கத்தையும் இந்த மசோதாமூலம் தடுக்கவேண்டியது அவச்யமென நினைக்கிறோம். சுருட்டுப்புகையால் பொது ஸுகாதாரம் கெடாதென்று மந்திரி நினைக்கமாட்டார். ஆதலால் இந்த விஷயமும் மசோதாவில் சேர்க்கப்படுமென்று நம்புகிறோம்.

குலஸ்திரீகள் நாட்டியமாடலாமாம்!

வடதேசத்திலிருந்து சாந்தா ஆப்டே என்ற பிரபல ஸினிமா ஆட்டக்காரி தென்னிந்தியா வந்தாள். சென்னையில் அவளுக்கு பிரபலமான உபசரிப்பு நடந்தது. பெரிய அந்தஸ்திலுள்ளவர்களெல்லாம் இதில் கலந்துகொண்டு அந்த நடிகைக்கு வாழ்த்துக்கூறி மகிழ்ந்தார்கள். தென்னிந்தியாவில் வேறு சில இடங்களிலும் அவளுக்கு இம்மாதிரியே உபசாரம் நடந்தது. இவ்வளவு உபசாரம் செய்து அவளைத் தூக்கி தலைவி ஸ்தானத்தில் வைத்தபின், அவள் ஏதாவது பொதுஜனங்களுக்கு உபதேசம் செய்யவேண்டாமா? ராமேச்வரத்தில் இந்த ஸ்ரீமதி சாந்தா பேசுகையில் ஓர் முக்ய விஷயத்தில் தமது அபிப்ராயத்தை வெளியிட்டார். தென்னிந்தியாவில் ஸினிமாத் தொழில் வளர்ந்து வருகிறது. புருஷர்கள் பலர் இதில் நடிகர்களாக முன்வந்து விளங்குகிறார்கள். ஸ்திரீகள் மட்டும் பின் தங்கி நிற்கலாமா? குடும்ப ஸ்திரீகளும் ஒழிந்த நேரங்களில் ஸினிமாவில் நடித்து ஏன் பணம் ஸம்பாதிக்கக் கூடாது? இந்தக்கேள்வி இப்போது தென்னிந்தியாவில் பிரபலமாயிருக்கிறது. மேலும் நடனம் என்பது ஓர் கலை. இதை எல்லா ஸ்திரீகளும் ஏன் கற்றுக் கொள்ளக்கூடாது? இதனால் இந்தியக் கலைகள் விருத்தியடைய ஸௌகர்யமிருக்கவில்லையா? இத்யாதி தர்க்கங்கள் இப்போது பத்திரிகைகளில் வெளிவந்தவண்ணமாயிருக்கின்றன.

இதில் ஸ்ரீமதி சாந்தா தீர்ப்புக்கூறி விட்டாள். குலஸ்திரீகள் நாட்டியம் கற்பதிலும், நாட்டியம் ஆடுவதிலும் பிசகு இல்லையாம். இதனால் ஸன்மார்க்கம் குறைந்துவிடுமென்று சிலர் வாதிப்பது விதண்டாவாதம் தானும். நடிப்பதினால் ஸன்மார்க்கம் கெடவேண்டுமென்பது நியமமில்லையாம். ஆதலால் குலஸ்திரீகளும் ஸினிமாவில் நடிக்கலாமென்று இவள் ஸித்தாந்தம் சொல்லிவிட்டாள். இது ஏற்கனவேயே வழிதவறிய மனப்போக்குள்ள சில குடும்ப ஸ்திரீ புருஷர்களுக்கு திருப்தியாகவே இருக்கும்.

ஆனால் இதனால் விளையக்கூடிய தீமைகளை விவேகமுள்ளவர்கள் உணராமலிருக்க முடியாது. மூக்கையன் மூக்கு அவச்யமில்லையென்று பேசுவதுபோல் ஸ்ரீமதி சாந்தா குலஸ்திரீ நாட்டியத்தை ஆதரித்துப் பேசலாம். ஆயினும் அது ஹிந்து தர்மங்களையும் அவைகளில் ஸ்திரீகளுக்கு ஏற்பட்டுள்ள புனிதத் தன்மையும், குடும்ப வாழ்க்கையும், ஸன்மார்க்கத்தையும் அடியுடன் அழிக்கக்கூடியதென்பதற்கு கணக்கற்ற ருஜுக்கள் இப்போது கிடைத்துவருவதை மறப்பதற்கில்லை. நவீன நாகரிகத்தின் பெயரால் ஏற்கனவே ஸ்திரீகள் சீர்கெட்டு வருவதை இது அதிகரிக்கச் செய்யும்.

நாட்டியக்கலை அபிவிருத்தி அடைவது நியாயமாயிருக்கலாம். ஆனால் அது குலஸ்திரீ தர்மமல்ல. அதற்கென்று நமது சாஸ்திரம் ஒரு வகுப்பாரைக் குறிப்பிட்டிருக்கிறது. அவர்களைக்கொண்டே அந்தக் கலையை அபிவிருத்திசெய்து, அவர்களையும் ஆதரிக்கவேண்டியது நியாயமாயிருக்கும். குடும்ப ஸ்திரீகள் இதில் இறங்குவது நாட்டியத் தொழிலாளிகளின் ஜீவனத்திற்கும் த்ரோஹம் செய்வதாகும்.

ஹிந்துக்களுக்கு அநீதி.

ஐக்ய மாகாணம் அலிகர் ஜில்லா உடான் கிராமத்தில் மசூதிக்கு ஸமீப இடங்களில், மதஸம்பந்தமாக ஸங்கீதம் செய்யக்கூடாதென்றும், கதாபிரவசனங்கள் செய்யக்கூடாதென்றும் 144-வது பிரிவுப்படி உத்திரவு போடப்பட்டிருக்கிறது இதை எதிர்த்து ஹிந்துக்கள் ஸத்யாக்ரஹம் நடத்துகிறார்கள், 80-பேர் கைதியாயினர்.

துருக்கித் தலைவர் மரணம்.

துருக்கிக் குடியரசுத்தலைவரான முஸ்தபா கமால் பாஷா சில தினங்களுக்கு முன் இறந்து போனார்.

புனா ஒப்பந்தம் தொலையவேண்டும்.

மத்ய மாகாண தீண்டாதார் ஸங்கக்காரியதரிசியான தவரே என்பவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காங்கிரஸ் மந்திரி ஸபைகள் தீண்டாதாருக்கு எவ்வித நன்மையும் இதுவரையில் செய்யத்தவறி விட்டபடியால் இனி புனா ஒப்பந்தத்தையே தொலைத்துவிடவேண்டுமென்று கூறியிருக்கிறார்.

வருமான வரி மசோதா.

படேல் அறிக்கை.

இந்திய சட்டசபையில் ஆலோசிக்கப்பட்டு வரும் வருமான வரி மசோதாவின் 49-வது பிரிவை எதிர்க்கும்படியும், வைஸ்ராய் அதை நிராகரிக்கும்படி கேட்கவும் மாகாணப் பிரதம மந்திரிகளுக்கு ஸ்ரீமான் படேல் ஆக்ஞையிட்டிருக்கிறார்.

ஹிந்தி மறியலில் ஸ்திரீகள்.

சென்னையில் நடந்துவரும் கட்டாய ஹிந்தி மறியலில் ஸ்திரீகளும் ஸம்பந்தப்பட முன்வந்திருக்கிறார்கள். சில தினங்களுக்கு 5 ஸ்திரீகள் மறியல் செய்ததால் தண்டிக்கப்பட்டார்கள்.

காந்தியா? அம்பேத்காரா?

தீண்டாதாருள் சண்டை

ஆமதாபாத்திற்கு வந்திருந்தபோது டாக்டர் அம்பேத்கார் காந்திஜியை தூஷித்துப் பேசினார். தீண்டாதார் காந்தியை நம்பக் கூடாதென்றார். இதை அநேக தீண்டாதார்கள் ஆதரித்தனர். இதன்மேல் காந்திகக்ஷித் தீண்டாதாரும் கூட்டம்போட்டு காந்திஜியே தலைவரென்றும், அவரிடம் நம்பிக்கையிருப்பதாயும் தீர்மானித்தனர். இந்தக் கூட்டத்தில அம்பேத்கார் கக்ஷித் தீண்டாதார் புகுந்து காந்தியைத் திட்டியும், கூச்சல்போட்டும் பெரிய கலவரம் செய்தார்கள.

வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீவத்ஸ. வெ. ஸோ. சர்மா.)

ஸ்ரீ காந்திஜியிடம் நம்பிக்கை இல்லை!! யாருக்காக இவர் அவதரித்தாரோ! எவர்பெயரை அருமையாக தன் பத்திரிகைக்கிட்டாரோ? இரவும் பகலும் எவர் சிந்தையோ? அத்தகைய நாகபுரி ஹரிஜனங்கள் சபை கூடி செய்த தீர்மானமிது!

ம. ஆலம் விலகுகிறார்!! தேசிய ஸபையிலுள்ள ஜாதிச்சண்டை முதலிய அனர்த்தங்கள் பரிஹரிக்க முடியா என்று கூறி பழய தேசிய வாதியான இவர் விலகுகிறார்! தார்மிக ஆஸ்திகர்கள் அனைவரையுமிழந்து வருகிறது.

உபசாரப்பத்ரத்தால் என்ன பயன்? வக்கீல்களளித்த பத்ரத்திற்கு காந்தி பதிலிது. உண்மை ஸ்வராஜ்யத்திற்கு எழைக்கும் ஓர் வக்கீலிருந்தால் நான் நமஸ்கரிப்பேனென்றார் இதில் சில உண்மை உள? இனி வக்கீல்கள் ஜாக்ரதை!!

உசிதமான வாதம்? பெங்களூரில் மகாகனம் V. S சாஸ்திரிகள்பெயரால் கலாசாலையில் ஓர் வாதமும் அதில் ஜயிப்பவருக்கு பரிசும் வைக்கப்பட்டிருக்கிறது. அதில் இவ்வாண்டு பெண்களுக்கு விவாகரத்து வேண்டுமா என்ற வாதம் நடந்தது! மாணவரைக் கெடுக்கும் வழி!

காட்டை அழித்து காங்க்ரஸ் நகரமா? ஏற்கனவே தேசமும் தேசிய ஸபையும் தர்மத்திலிறங்கியதால் நல்ல மழை இல்லை! இவ்வாண்டு திரிபுராவில் காங்க்ரஸ் நடக்க காட்டை அழிக்கின்றனர். எந்த வகையில் பார்த்தாலுமிது மிக அநீதி!

நல்லது வேண்டா குருத்கோடி டாக்டர் குருத்கோடி பெயர் மறையும் ஸமயத்தில் அவர் எழுந்து ஹிந்து மஹா ஸபையைக்கண்டிக்கிறார். தேசிய ஸபையை வானளாவப் போற்றுகிறார்? எதற்காக? அவரே அறிவர்!!

வேம்பு கசக்கும்! தேள் கொட்டும்! இது மாறினலன்றோ ஆச்சர்யம்? ஹிந்திகற்க ஸமபந்தி போஜனம் வற்புறுத்தப்படுவதில் ஆச்சர்யமென்ன? ஜாதி தர்மத்தை வற்புறுத்துவோரிருந்தால் பேராச்சர்யப்படுவோம்!!

ஒருவரே! அவரும் கிறிஸ்துவர்!! கல்விவாரம் தடபுடலாய்நடந்தது! பேச்சு! பேச்சு! ஓயாமல்! ஒருவராவது மதக்கல்வியைப்பற்றி மூச்சேவிடவில்லை! (பேசியிருப்பவரிருந்தால் மன்னிக்க) சென்னை பிஷப் மதக்கல்வியைப்பற்றி பேசினார்! இந்தியர் கதி இப்படியா ஆனது?

அமெரிக்கா ஆகாயப்படை திரட்டுகிறது! ஓராண்டில் ஆயிரம் ஆகாய விமானம் கட்ட தீர்மானித்திருக்கிறது? உலக ஸமாதானப்பேச்சு! மிதபலம்!! ஹிட்லரே எல்லாவற்றிற்கும் காரணமாவர்? அல்லவா?

பயனுண்டாமா? ஆண்ட்ரூஸ் ஸ்ரீ காந்தி ராஜப்ரதிநிதி ஸந்திக்க முயற்சி செய்கிறாராம்! எப்படியாவது சண்டையின்றிவாழ்வது நலம்

நன்மை பயக்குமா? திருப்பதிதேவஸ்தான கமிஷனருக்கு தத்கால பிரதிநிதியாக ஓர் ஸ்ரீ வைஷ்ணவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்!

வரதக்ஷிணை பேச்சு! காசி ஸர்வகலாசாலை மாணவர் பார்லிமெண்டிலும் திருவாங்கூர் பெண்கள் ஸபையிலும் அதை ஒழிக்க பேசப்பட்டது! பயனுண்டாமோ?

எல்லைமீறிய செயல்! ரிலிஜஸ் எண்டோமெண்ட் போர்டை கலைக்க முதலில் யோசிக்கப்பட்டது. ஆனால் அதைக்கொண்டு துஷ்ப்ரசாரம் செய்ய உத்தேசம் போலும்! அது கதரையும் பஞ்சம ஆலயப்ரவேசத்தையும் ப்ரசாரம் செய்து மந்திரி தயவைத் தேடுகிறது போலும்!

ஸ்ரீ காந்திக்கே இக்கதியானால்? ஹரிபுராவில் காந்தி செய்யும் காலை மாலைப் பொது ப்ரார்த்தனை நடக்காமல் செய்தனராம் மாணவர். பெற்றோருக் கடங்காதே! கலாசாலையை விடு! என்ற ப்ரசாரபலனோ இது?

தொழிலாளிகளும் விரும்பவில்லை! பாம்பே தேசிய அரசாங்கம் செய்த தொழிலாளி சட்டம பிடிக்காமல் ஆங்கு வேலை நிறுத்தம். அடிதடி! சண்டை! அதையொட்டி சென்னை தொழிலாளி கூட்டம் தேசிய ஸபையை நிந்திக்க ஒரு அபிமானி அதை மறுத்தார். உடனே குழப்பம் கூச்சல் போலீஸ் இது தர்ம த்ரோஹ பலன் என உணர்ந்தது இருந்துமா?

பழிக்குப் பழியாம்! ஓர் யூதர் ஜர்மனியாரைச் சுட்ட குற்றத்திற்காக யூதர் ஆலயம் எரிக்கப்பட்டது. ஜர்மனியில் பதினாயிரக் கணக்கான யூதர் கைதிசெய்யப்பட்டனர். ஜாதி தேசம் இதன் பெயரால் நடக்கும் துஷ்ப்ரசாரமு பலனோ இது.

உடலைக்கருதாத 3 லக்ஷம் ஆஸ்திகர்! நடந்த க்ரஹணத்தில் பனிக்கட்டிபோல் குளிரும் கங்கா ஜலத்தில் காசியில் 3 லக்ஷம் நவத்வீபத்ரியில் 1 லக்ஷம் ஆஸ்திகர் ஸ்நானம் செய்தனரெனில் எவ்வளவு கடுமையாக கலி முயன்றும் ஆஸ்திகதை அகலாது.

காந்தி சீடரோ? வார்தா ஜில்லா மாஜிஸ்ட்ரேட் நதீ ஜலம் கெட்டுவிடும். ஆகலால் உத்ஸவம் நடத்தாதே என உத்திரவிட்டார்.

வங்காபிமானமோ? வங்கநாடு மிக மிக சுடநலம் மிகுந்தநாடு என அநுபவிகள் கூறுவர். பிரபுல்ல சந்த்ராரயர் எனும் பி. ஸி. ராய் ராஜ்ய வேலையில் புகமுடியாவிடினும் சுபாஷ் போஸை இவ்வாண்டும் தலைவராக்க எழுதுகிறார்.

முளையிலே அழிக்கப்பட்டது! திருச்செந்தூர் ஆலயத்தைக் கெடுக்க ஸ்தல தேசிய ஸபை மாகாணஸபையை உத்திரவு கேட்டது என்ன எண்ணம்கொண்டு அது மறுத்தாலும் அது நின்றது நலம்!!

குடந்தை ஸ்ரீ சக்கரபாணி கோவில்.

புதிய டிரஸ்டிகளின் நியமனம்.

கும்பகோணம் ஸ்ரீ சக்கரபாணிஸ்வாமிகோவிலுக்கு, ஸ்ரீமான்களான, வி. விஜயராகவபாட்டாசாரியர், கே. ராகவேந்திரராவ், ராமலிங்க செட்டியார் ஆகிய மூன்று பேர்களும், மதஸ்தாபன போர்டாரால் டிரஸ்டிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஸ்ரீமான் விஜயராகவபாட்டாசாரியர் மாஜி, ஸ்கூல் இன்ஸ்பெக்டர். ஸ்ரீராமர் ஸன்னிதியில் சித்திர ராமாயணத்தைப் புதுப்பித்து கைங்கர்யம் செய்தவர். அனேக தேவாலயங்களில் அடிக்கடி லக்ஷார்ச்சனை முதலியவைகளை விசேஷமாக நடத்திவருவதுடன் பொதுவாக பல தர்ம விஷயங்களிலும் ஈடுபட்டவர். ஸ்ரீமான் ராகவேந்திரராவ் இவ்வூரில் பிரபல வியாபாரி, ஆஸ்திகர்- தர்ம சிரத்தையுள்ளவர்- ஸ்ரீமான் செட்டியார் இக் கோவிலில் நீண்டகாலம் டிரஸ்டியாயிருந்து பல தர்மங்கள் செய்த பிரபல வைச்யகுடும்பத்தைச் சேர்ந்தவர்.

ஒரு நிருபர்.

ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

Nellore.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

91. மீதூண் விரும்பேல்.
न रमेतातिभोजने
Lessen your avarice in superfluous eating.

92. முனைமுகத்து நில்லேல்
न तिष्ठःसमरे साक्षी
Don't be a witness in quarrels.

93. மூர்க்கரோடிணங்கேல்.
दुर्जनान्परिवर्जयेत्
Don't be friend with rogues.

94. மெல்லினல்லாடோள் சேர்.
परिष्वजस्वजायांस्वां
Embrace your wife [and be cheerful with her]

95. மேன்மக்கள் சொற்கேள்.
(सदा) कुर्यात्सतां वचः
Bestow much attention on the words of good people.

96. மைவிழியார் மனையகல்.
वियर्जयेत वेशवाटान्
Don't enter into the premises of Prostitutes

97. மொழிவதறமொழி
असन्दिग्धं वदेत् वचः
Speak always undoubtedly.

98. மோகத்தை முனி
नियच्छेत् परदारेच्छां
Curb your passion towards others' wives.

99. வல்லமை பேசேல்.
न कत्थेत स्वपौरुषं
Don't swagger yourself.

100. வாதுமுற்கூறேல்.
वितण्डवादी न भवेत्
Don't argue unnecessarily.

101. வித்தை விரும்பு.
विद्याभ्यास रतो भवेत्
Be interested in educating yourself in arts.

102. வீடுபெற நில்
मोक्षेच्छुर्धर्ममातिष्ठेत्
Stand firm in your duty to obtain Eternal Felicity.

103. உத்தமனாயிரு
श्रेष्ठःस्यात् गुणकर्मभिः
Be the best of all (by your merits and deed)

104. ஊருடன் கூடி வாழ்.
Live unitedly with the people of your nation.

105. வெட்டெனப்பேசேல்.
Don't speak cold-heartedly.

106. வேண்டிவினை செயேல்.
Donn perform reprobate actions by greedi'css.

107. வைகறைத்துயிலெழு.
Awake from your sleep early in the morning.

காங்கிரஸ் ராஜ்யம் கவனிக்குமா?

ராணுவத்தில் சேருவோரே மாம்ஸம் புஜிக்க வேண்டிய நிர்ப்பந்தமிருப்பதாக இதுவரையில் நாம் நினைத்து வந்தோம். ஆனால் போலீஸ்படையில் சேருகிறவர்களுக்குக்கூட மாம்ஸமும், சாராயமும் அவச்யம் உபயோகிக்கப்படவேண்டுமென்று பம்பாய் கவர்ன்மெண்டில் வழக்கமிருப்பதாகத் தெரிகிறது.

இந்த வழக்கத்தைக் கண்டித்து காந்திஜி தமது பத்திரிகையில் ஓர் குறிப்பு எழுதியுள்ளார். போலீஸ் படையில் சேருகிறவர்கள் கட்டாயமாக மாம்ஸத்தையும் கள்ளையும் உபயோகிக்கவேண்டுமென்று பம்பாய் கவர்ன்மெண்ட் செய்திருப்பதை காந்திஜி வெகு பலமாகக் கண்டனம் செய்கிறார். ஸன்மார்க்கத்திற்கு இது ஏற்றதல்லவென்றும், மத விதியானது இதை அடியோடு தடுக்கிறதென்றும், மதக்கட்டளைக்கு விருத்தமாக பம்பாய் கவர்ன்மெண்டார் உத்திரவு இருப்பதால் அதை உடனே நிறுத்த வேண்டுமென்றும் காந்திஜி வற்புறுத்துகிறார்.

இவ்விஷயத்தில் காந்திஜி, மதத்தின் உதவியை நாடி தம் கக்ஷியை வற்புறுத்தியது மெச்சத்தக்கது. ஆயினும் இம்மாதிரியே இவர் எல்லா விஷயத்திலும் மத விதியை மதித்து நடப்பவராயிருந்தால் இன்று அவர் வேறு நிலைமையிலேயே இருந்திருப்பார்.

பிராணிகளைக்கொன்று அவைகளின் மாம்சத்தை மனிதன் புசிப்பதென்பது ஸஹிக்கக்கூடாத கொடிய பாபமே யாகும். இதை நமது சாஸ்திரம் வெகுகடுமையாகக்கண்டிக்கிறது. ஆயினும் இந்தியாவில் மாம்சத்திற்காக வென்று பிரதிதினமும், எல்லாநகர கிராமங்களிலும் ஆயிரக்கணக்கான பிராணிகள் கொல்லப்படுகின்றன. கணக்கற்ற காசாப்புக்கடைகள் ஏற்பட்டு விட்டன. நியாயமான மதஸம்பந்தான கொள்கைகளையும், கார்யங்களையும் கூட வெறுத்தும், தூஷித்தும் பரிஹஸிக்கும் ஸ்பாவமுள்ள தற்கால நாகரிகர்கள் ஒரு கசாப்புக்கடையையாவது எடுக்கவில்லை. ஒரு பிராணியையாவது கொல்லப்படாமல் தடுக்க முற்படவில்லை. ஆடுமாடுகளைக்கொல்லுவதற்கென்றே முனிஸிபாலிடிகளில் கட்டிடம் கொடுத்து உதவி செய்து வரியும் வாங்குகிறார்கள். கள் வருமானத்தால் ஸர்க்கார் பிழைப்பது பாபமென்றால், பிராணிகளைக்கொன்று குவிப்பதற்காக வரி விதித்து வருமானம் பெறுவது எவ்வளவு கொடிய பாபம். இதில் போலீசாரை மட்டும் பழி கூறுவது பயனில்லை. இந்தியாவில் பிராணிக்கொலை மூலம்,மாம்சம் அதிகரிப்பதையே முதலில் தடுக்கவேணும். காந்திஜியின் அபிப்ராயமும் இதில் தெளிவாயிருக்கிறது ஆகவே அங்கங்குள்ள மந்திரிகள் கிராமங்களிலோ, நகரங்களிலோ பிராணிகள் கொல்லப்படுவதைச் சட்டமூலமாகத் தடுத்து வாயில்லா பிராணிகளின் பிராணனை ரக்ஷிக்க முற்படுவார்களா? கோர அநாகரிகத்தை நிவர்த்திப்பார்களா?

---

108. ஒன்னாரைச்சேரேல்.
न कार्यः शत्रुभिः सङ्गः
Don't make company with your foes.

109. ஓரஞ்சொல்லேல்.
न ब्रूयात् पक्षपाततः
Don't speak \ partially.

अम्बिकागीतमालम्ब्य कृतं नीति निबन्धनं ।
वैद्यनाथेन गैर्वाण्यां भूयान्नित्यं सतां मुदे ॥

May the work नीतिनिबन्धनं in Sanskrit made by Sri T. S. Vaidyanatha sastri, which is written in accordance with "Ambika geetha" (ஆத்திச்சூடி) be always for the happiness of the Literary world.

தேச பாஷையில் பேசக்கூடாதா?

சிதம்பரம் அண்ணாமலை யூனிவர்ஸிடியின் கூட்டத்தில் ஒருவர், அந்த யூனிவர்ஸிடி தஸ்தாவேஜிகள் கடிதப் போக்கு வரத்து. நடவடிக்கைகள் முதலிய யாவற்றும் தமிழ்லேயே இருக்க வேண்டுமென்று ஓர்தீர்மானம் கொண்டு வந்தார். ஆனால் துரதிஷ்டவசமாக அது நிறைவேறாமல் போய் விட்டது. இந்த தீர்மானம் எவ்வித ஆக்ஷேபமும் இல்லாமல் ஏகமனதாக நிறைவேறி யிருந்தால் தமிழபிமானிகள் மிகுந்த ஸந்தோஷ மடைவார்கள். தேசத்திற்கும் இந்த யூனிவர்ஸிடி நல்ல வழிகாட்டி யிருந்த பெருமையை அடைடலாம். ஆனால் அது தவறிவிட்டது

கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் இதை ஆதரித்து அநுதாபம் காட்டினாராயினும் அதை அநுஷ்டானத்தில் கொண்டு வாமறுத்து விட்டார். அந்த யூனிவர்ஸிடி இன்னும் தமிழ்மயமாக ஆகவில்லை யென்றும், இன்னும் அங்கு பலதேசத்தியவர்களும், பலபாஷைகளும் ஸம்பந்தப் பட்டிருப்பதாயும், அவஸரப்படக்கூடாதென்றும் சொல்லி விட்டார்.

ஒரு பெரிய ஸ்தானபத்தில் திடீரென பாஷை விஷயமாகப் மாறுதல் செய்வது சிரமமென்பது உண்மைதான். அதிலும் யூனிவர்ஸிடி போன்றவைகளில் இது இன்னும் அதிக சிரமந்தான். ஆயினும் இந்த நிலைமை முடியும் காலம்தான் எப்போது? சிறுகச்சிறுக அந்த வழியில்போய் காலக்கிரமத்தில் அதை நிறைவேற்ற வேண்டாமா?

இந்த விஷயத்தில் இந்த யூனிவர்ஸிடி இருக்கட்டும். ஸ்வதேச அபிமானிகளான காங்கிரஸ்காரர்கள் நடப்பதெப்படி? முனிஸிபாலிடி, ஜில்லாபோர்ட், தேவஸ்தானம், போன்ற ஸ்தல ஸ்தாபனங்களில்கூட இன்னும் தமிழ் பாஷையில் நடவடிக்கை ஏற்படவில்லை. காங்கிரஸ் வசமாகியுள்ள அநேக முனிஸிபாலிடிகளில் காங்கிரஸ் மெம்பர்கள்கூட இங்கிலீஷிலேயே பேசுவதைப் பெருமையாக நினைத்துப் பேசுகிறார்கள். அங்குள்ள ஸ்திரீ பிரதிநிதிகள் தாழ்ந்தவகுப்பு பிரதிநிதிகள் போன்றவர்கள், இன்ன நடவடிக்கை நடக்கிறது, இன்ன பேசுகிறார்களென்று அறிய வழியில்லாமல் திண்டாடுகிறார்கள். ஸமீபத்தில் பல விடங்களில் இந்தச்சண்டை கிளம்பியது யாவரும் அறிந்ததே.

தேவாலய நிர்வாஹங்களிலும் இவ்விடு இங்கிலீஷ் மறையவில்லை. தேவஸ்தான கமிட்டிகளிலும், டிரஸ்டி போர்ட்டுகளிலும் இங்கிலீஷிலேயே பேசுகிறார்கள். தீர்மானங்களும் நடவடிக்கைளும் அந்நிய பாஷையிலேயே வரையப்படுகின்றன.

பெரிதும் மத ஸம்பந்தமான ஸ்தாபனங்களில் கூட இங்கிலீஷ் இன்னும் மறையவில்லையென்றால் யூனிவர்ஸிடியில் அது ஸாத்யமாகுமா? ஜனநாயக ஆக்ஷி வந்திருக்கிறது. பாமரர்களை உயர்த்தவேண்டியிருக்கிறது. ராஜ்யவாதிகளுக்குப் படித்தவர்களை விட பாமரர்களே அதிகம் பின்பலமாக வேண்டியிருக்கிறது. பிரதிநிதி ஸ்தானங்களில் படித்தவர்களை விட பாமரர்களையே அதிகம் புகுத்தவேண்டுமென்ற அவாமிகுந்திருக்கிறது. ஆகையால் அந்தவிடங்களிலெல்லாம் காங்கிரஸ்காரர்கள் கூட டம்பமாக அந்நிய பாஷையில் பேசினால் அது மிகவும் கேலிக்கு இடமாகும். தேசபாஷாபிமானமென்பது வேஷமாகி விடும். ஆதலால், தேவாலயங்கள், கமிட்டிகள், முனிஸிபாலிடி போன்ற ஸ்தாபனங்களிலாவது தமிழை உபயோகிக்கும்படி உடனே உத்திரவு செய்ய வேண்டியது மந்திரிகளின் கடமையாகும்.

தேவஸ்தானம்
டிரஸ்டிகள் கவனிக்கவேண்டிய விஷயம்.

[ஸமீப காலத்தில் இந்துமத சம்மந்தமான இனங்களைக் குறித்த போர்டு ஆபீஸிலிருந்து (office of the Board of Commissioners for Hindu Religious Endowments, Madras)தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தைக் குறித்து எல்லா தேவஸ்தான டிரஸ்டிகளும் தங்கள் தங்களுடைய ஸொந்த அபிப்பிராயத்தை தெரிவிக்கும்படியாக ஒரு அறிக்கை (Memorandum) எல்லா தேவஸ்தானங்களுக்கும் அனுப்பியிருப்பதாக தெரிகிறது.

இவ்விஷயம் நம்முடைய மதத்தை ஸம்பந்தித்திருக்கிறபடியால் அந்த முறையில் அதை கவனித்து அவர்களுக்கு நாம் பதில் தெரிவிக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது.

இவ்விஷயமாய் நமது காமகோடி பீடம் ஸ்ரீஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் 2—4—1938 தேதியில் கீழகோதாவரி ஜில்லா, திராக்ஷாராமம் என்ற ஊரில் செய்த உபன்னியாஸத்தின் ஸாராம்சம் கீழே அச்சிடப்பட்டிருக்கிறது. அதை அனுசரித்து ஸ்ரீ ஆசார்யாள் அவர்களுடைய மடத்திலிருந்து ஷை போர்டு ஆபீஸுக்கு பதில் அனுப்பியிருப்பதாகவும் அறிகிறோம்.

தேவஸ்தானம் தர்மகர்த்தர்கள் எல்லோரும் இவ்விஷயத்தை நன்றாக பராமர்சித்து தர்மத்தையும் ஆசாரத்தையும் ரக்ஷிக்கும் முறையில் பதில் அனுப்பும்படியாக கேட்டுக்கொள்ளப்படுகிறது. [பத்திராதிபர்.

காஞ்சீ காமகோடிபீடம் ஸ்ரீஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் 2—4—1938 தேதியில்
கீழகோதாவரி ஜில்லா திராக்ஷாராமம் என்ற ஊரில் செய்தஉபன்யாஸ ஸாரம்:—

ஆலயப் பிரவேச சட்டம்.

ஆலயப் பிரவேச சட்டம் ஏன் அதிக்கிரமம்?

ஆலயத்தில் ஈசுவர சான்னித்யத்தையும் அனுக்கிரஹத்தையும் கோருவோர்களே ஆலயத்திற்கு
செல்லவேண்டும்.

ஆலயத்தில் ஸாந்நித்தியமிருக்குமென்று போதிக்கும் சாஸ்திரம் ஆகமசாஸ்திரம். அந்த ஆக
ஆலயத்தில் ஸாந்நித்தியமிருக்குமென்று போதிக்கும் சாஸ்திரம் ஆகமசாஸ்திரம். அந்த ஆக
சாஸ்திரத்தில் இன்னின்ன விதிப்பிரகாரம் ஆலயத்தை ரக்ஷித்தால்தான் அங்கு ஈச்வர ஸான்னித்தியமிரு
க்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் நம்பிக்கையில்லாதார் பிராம்மணராயினும் சண்டாளனு
னும் ஆலயத்தில் பிரவேசிக்க அதிகாரியாகமாட்டான்.

அந்த ஆலய ஸம்பந்தமான விதிகளில் சண்டாளர்கள் முதலியவர்களும், செல்லக்கூடாத அநேக
பொருள்களும், ஜீவர்களும் இன்னின்ன இடத்தைத்தாண்டிச் சென்றால் தெய்வஸான்னியத்திற்குக் குறை
ஏற்படுமென்று அறிவிக்கின்றன.

எந்த சண்டாளனும் நிஜமான ஹிந்துமத பக்தனுமிருந்தால், அந்த ஈச்வர ஸான்னித்தியத்திற்கு
குறைவு ஏற்படுத்திவிட்டுத் தானும் பிறரும் அந்த அனுக்ரஹத்தைப் பெறாமல் நஷ்டப்படும்படி செய்ய
மாட்டான்.

தனக்கேற்பட்ட விதிப்படி நடந்து, கோபுர தர்சனம், உத்ஸவ தர்சனத்தினால் வேதியரைவிட அதிக
மான ஈச்வர கிருபையைப் பெறுவான். இவ்விதமே நந்தனார் சிவமயமானார்.

ஆகையால் பறையர்களுக்கும் மற்ற எல்லா வர்ணத்தார்களுக்கும் ஈச்வர ஸான்னித்யத்தையும், ஈசுவ
அனுக்கிரஹத்தையும் நாசம் செய்யும் இந்த சட்டத்தை, சகல ஹிந்துக்களும் ஒன்று சேர்ந்து எதிர்க்க
வேண்டியது கடமையாகும்.

ஆகம விதிகளை மீறின அநேக அனாசாரங்கள் நமது கோவில்களில் புகுந்து இருப்பதை நாம் தடு
கப் பிரயத்னப்படவேண்டிய ஸமயத்தில், அவைகளையே உதாஹரணமாகக் காட்டி மற்றும் ஸான்னித்ய
தைக் குறைக்கும் அனாசாரங்களைப் புகவிடுவது மிகவும் குரூரமான குற்றம். எந்த ஆகமசாஸ்திரத்தில் நம்
பிக்கையினால் இவ்வளவு விஸ்தாரமான ஈச்வரனுடைய ஆலயங்களைக் கட்டினார்களோ, எந்த விதிப்படி
ஸான்னித்யத்தை ரக்ஷிக்க அளவற்ற ஸ்திரமான ஆஸ்திகளை அர்ப்பணம் செய்திருக்கிறார்களோ, அவ
களுடைய நம்பிக்கைக்கு விரோதமாக, ஆகம சட்டத்தை மீறிய காரியங்களை செய்வது நிச்சயமாய் தெய்வ
நம்பிக்கைக்குத் துரோஹமாகும். அவ்விதமிருப்பது யோக்யமான பறையர்களுக்கோ ஏனையவர்களுக்கோ
ஒருவருக்கும் ஏற்காது.

நம் நாட்டில் நம் மதத்தில் நம்பிக்கையற்றுப்போன பறையர்களோ மற்றவர்களோ மிகவும் குறைவு
எல்லா ஜாதிகளிலும் நிஜமான ஈச்வர பக்தியும் நிறைந்தவர்கள் இன்னும் இருக்கிறார்கள். அவர்கள் என்
றும் இருப்பார்கள். தேவாலய ஸான்னித்யத்தில் நம்பிக்கையில்லாதவர்களே கோவில்களில் பறையர்களை
புகுத்தப் பிரயத்னப்படுகிறார்கள். அப்படி அவர் வார்த்தையை கேட்டுக்கொண்டு உள்ளே போகும் பறைய
களும் அதேமாதிரி நம்பிக்கையற்ற சிறுபான்மையோர்களாகவே இருப்பார்கள். இவ்விதம் நம்பிக்கையில்
லாதவர்கள் உலகத்தில் ஸ்வயமரியாதையை ஸாதித்தாய்விட்டதென்று தீர்மானமானவுடன், பின்னும்
குள் புகுவோர்கள் தங்கள் ஸ்வயமரியாதையை ஸாதித்தாய்விட்டதென்று தீர்மானமானவுடன், பின்னும்
கோவில்களில் காரியமில்லாததால் அவர்களும் கோவிலுக்கு வருவதை நிறுத்திவிடலாம். நிஜமாய் சாஸ்தி
ரத்தில் நம்பிக்கையுள்ளவர்களோ, சாஸ்திரத்தில் நிஷேதிக்கப்பட்டவர்கள் கோவில்களுக்குள் புகுந்து
விட்டதால் அங்கு ஈச்வர ஸாந்நித்யம் இல்லாததினால், தாங்கள் போவதையும் நிறுத்திவருவார்கள். இப
படி கிரமமாய் வேடிக்கை பார்ப்பவர்கள் மாத்திரம் சிலகாலம் போய்கொண்டிருந்து கோவிலே அழிந்துபோ
விடுமோ என்ற ஸந்தேஹத்தை இந்தசட்டம் ஏற்படுத்துகிறது. ஆகையால் நம்பிக்கையில்லாத சிறுபான்மை
யோர் எவருடைய அட்டஹாஸங்களுக்கும் ஏமாறாமல் நாமெல்லோரும் ஒன்று சேருவோமாக! தம் தம் வர்ண
ச்ரம ஆசாரங்களை ரக்ஷிக்க சேர்ந்து முயல்வோமாக!!

புராணக்கதைகள்

நாரதருக்கும் பர்வதருக்கும் நேர்ந்த சாபமும்.

அதன் நிவர்த்தியும்.

[S.ராமச்சந்த்ர ஹரி:]

உலகத்தில் நாரதர் பர்வதர் என இரண்டு ரிஷிகள் இருந்தனர். அவர்கள் ஒருவர்க்கொருவர் மாமன் மருமான் என்ற பந்துத்வமுள்ளவர்கள். இவர்கள் ஒரு காலத்தில் மனுஷ்ய தேசங்களில் விளையாட விரும்பி தேவலோகத்திலிருந்து இவ்வுலகம் வந்தனர். அவர்கள் பூமியில் சஞ்சரித்து தேவர்களுண்ணத் தக்க நெய் ஹவிஸ் முதலிய பரிசுத்தமான ஆகாரங்களை புஜித்து மானிட போகங்களை அனுபவித்து சஞ்சரித்தார்கள். அவர்கள் ஒருவர்க்கொருவர் சந்தோஷமாய் ஒரு பிரதிக்ஞை செய்துகொண்டார்கள். அதாவது நம் மனதில் உதிக்கும் எண்ணம் நல்லதாயினும் கெட்டதாயினும் ஒருவர்க்கொருவர் தெரிவித்துக்கொள்ள வேண்டும். தவறியவர் சாபத்திற்குள்ளாகவேண்டும் என்பதே.

இவ்வேற்பாட்டுடன் அவர்கள் ஸ்ருஞ்சயன் என்றும் அரசனிடம் சென்று நாங்கள் உனது நன்மையைக்கோறி உன்னிடம் சில காலம் வசிக்க விரும்புகிறோம். நீ எங்களுக்கு அனுகூலமாயிருக்கவேண்டும் என்றனர். அரசன் அவர்கள் எண்ணத்தை அங்கீகரித்து அவர்களை மரியாதைசெய்து உபசரித்து வந்தான்.

பிறகொருக்கால் அவ்வரசன் மஹான்களான அந்த ரிஷிகளை நோக்கிப் ப்ரீதியுடன் தேவ வடிவமுள்ள ஒரே கன்னிகை எனக்கிருக்கிறாள். அவள் பெயர் ஸுகுமாரி. அவள் பெண்களுக்குரிய சிறந்த குணங்களெல்லாம் பொருந்தியவள். இவள் உங்களிருவரையும் உபசரித்துக்கொண்டிருக்க விரும்புகிறேன் என்றான். அவ்விருவரும் அரசனது எண்ணத்துக்குச் சம்மதிக்க அரசன் கன்னிகையை அழைத்து இந்த இரண்டு ரிஷிகளையும் தேவர்களையும் பிதிர்க்களையும் போல உபசரிக்கவேண்டும் என்று கட்டளையிட, அவளும் அப்படியே செய்து வந்தாள். இவ்விதம் நடந்துவருங்காலத்தில் அப் பெண்ணின் உபசாரத்தாலும் லாவண்யத்தாலும் நாரதர் காமபீடிதரானார். அவருடைய அக் காமமானது வளர்பிறைச் சந்திரனைப்போல் ஓங்கி வளர்ந்தது. இந்த விஷயத்தை வெட்கத்தால் பர்வதரிடம் நாரதர் தெரிவிக்கவில்லை. ஆனால் இங்கிதங்களால் பர்வதர் இதைத் தெரிந்துகொண்டார். அவர்கள் செய்துகொண்ட பிரதிக்ஞைக்கு விரோதமாய் நாரதர் நடந்ததால் பர்வதர் நாரதரைப்பார்த்து, ஸுகுமாரி ஸந்தேகமின்றி உமக்கு பார்யையாவாள். ஆனால் மணம் முடிந்தக்ஷணம் முதல் உம்மைக் குரங்குருவமாக அப் பெண்ணும் மற்றவரும் காண்பார்கள் என்று சபித்தார். இதைக் கேட்டு நாரதரும் உனக்கு ஸ்வர்க்கமில்லாமற் போகட்டும் என்று பர்வதற்கு ப்ரதி சாபங் கொடுத்தார்.

பிறகு நாரதர் ஸ்ருஞ்சயனது புத்திரியான ஸுகுமாரியை முறைப்படி மணந்தார். அக் கன்னிகையோ, பர்வதர் சாபப்படி நாரதர் குரங்கு ரூபமாயிருப்பதைக்கண்டும் அவரைச் சற்றும் அவமதியாமல் விதிப்படியே அதிக ப்ரீதியுடன் அவரையே பர்த்தாவாக உபசரித்து வந்தாளேயன்றி வேறு யாரையும் மனத்தாலும் நினைத்தாளில்லை. இப்படி நடந்துவருங்கால் ஒருஸமயம் நாரதரும் பர்வதரும் ஸந்தித்தார்கள். அப்பொழுது இருவருக்கும் கோபம் நீங்கி ஒருவர்க்கொருவர் சாபங்களை விலக்கிக்கொண்டார்கள். அப்போது தேவ வடிவத்துடன் விளங்கும் நாரதரைக்கண்டு பரபுருஷனென்று சந்தேகித்து ஸுகுமாரி விலகத் தொடங்கினாள். அப்போது பர்வதர் அவளது ஸந்தேகத்தை நீக்கி அவளைத் தேற்றினார். அவரது வார்த்தையைக் கேட்டு உண்மையைத் தெரிந்துகொண்டு ஸுகுமாரி முன்போல நாரதரிடம் ஸ்வபாவமாயிருந்தாள். பர்வதர் ஸ்வர்க்கம் சென்றார். நாரதர் வீடுசென்றார்.

தர்மாநுஷ்டானங்கள்.

ஓர் சம்பாஷணை.

(முன் தொடர்ச்சி)

தகப்பனார்—அப்பா, நீங்கள் சொல்வது சரியாய்த்தான் தெரிகிறது. இக்காலத்து மக்கள் ஓர் விதமான படிப்பின் பலனாக, முதியோர்களையும் முதியோர்களின் ஆசாரங்களையும் நன்கு மதியாது, அவ்வாசாரங்களின்கண் ஒழுகப்பின்வாங்குவது மன்றி, 'மூக்கு அறுபட்டவன், மூக்கு முகத்திற்கு அழகில்லை, பாரமென்ற பிரசங்கம் செய்து, அதிகப் பிரசங்கத்தின் பலனாக ஜன சாமானியரையும் பின்பற்றச்செய்கிறார்கள். நிர்வாண தேசத்தில் கோவணம் கட்டியவன் பைத்தியக்காரனல்லவா' என்ன செய்கிறது. என் சிநேகிதர்களை நான் பின்பற்றவேண்டியிருக்கிறது நாளைச்சொல்லுகிறேன்.

தாதா—பையா! கிருஷ்ணனை பிரதி காலையிலும் ஒரு அரை மணி என்னிடம் மதப்படிப்பு கற்க ஏற்பாடு செய். 'பள்ளிக்கணக்கு புள்ளிக்காகா'தென்பது தற்காலப்படிப்புக்கு ஒத்ததென்றே சொல்லலாம். பெரியோர்களிடம் மரியாதை, ஈசுவர பக்தி முதலிய மனதிற் பதியக்கூடிய கதைகளும் கவிகளும் கற்பிக்கவேண்டும்.

தகப்பனார்—அப்படியே செய்யுங்கள். இனி குழந்தை தங்களிடம் வருவான்.

உபநயனம் எப்பொழுது செய்யலாம்? என்ன சிலவாகும்? தயவு செய்து தெரிவியுங்கள்.

தாதா—இது தக்ஷிணாயனம்' மாரி, சீதகாலங்கள் ஏற்றதல்ல. அதிலும் இளவேனிற் காலமாகிய வஸந்தருது உரிய காலம். அதற்குள்ளாக, நீ உன் குமாரனுக்கு உபதேசிக்க வேண்டிய காயத்ரீ மந்திரத்தை நீ தயாரித்து வைத்துக்கொள். 'ஏரியில்ஜலமிருந்தாலல்லது வயலுக்கு ஜலம் கிடையாது. ஏரியில் நிறைய ஜலமிருந்தால், வாய்க்காலின் கண் வேகமாய் வந்து வயலிற் பாயும்'; அதுபோல் சில நாட்கள் போதுமானவளவு உரு ஏற்றிக்கொள். சட்டியிலின்றி, அகப்பைக்கு எதுவும் வராது' என்ற பழமொழி ஞாபகமிருக்கட்டும்.

தகப்பனார்—அப்பா, நீங்கள் சொல்வது யுக்திக்கு மிக பொருத்தமாய்த்தான் இருக்கிறது. ஊரில் அப்படிச்செய்ததாயில்லை. ஆயினும் யான் சொன்னபடி செய்கிறேன் நாளை முதலே. அதற்கு 'அதிகாலை தான் மிக உரித்தான காலம்.

நிற்க, என்ன சிலவு, ஆகும் உபநயனத்திற்கு?

தாதா— பையா! ஏன் பயப்படுகிறாய், அவனவன் அந்தஸ்திற்குத் தகுந்தபடி தான் சிலவு. வீண் ஆடம்பரங்களாகிய காபி, டிபன் கச்சேரிகள் முதலியன மட்டுக்கட்டி, பாபக்ஷயகாமாக அன்னதானமும், பரமேசுவர ப்ரீதியாக வைதிகத்தில் தியாகமும், முறைப்படி செய்தாற் போதும். ரூ 35 சம்பளமுள்ள நீ இதற்கு சிரமப்படுவது மிக அழகு! உபநயனம் என்பது ஓர் ஸம்ஸ்காரமென்றும், அதில் உபதேசிக்கப்படும் காயத்திரி ஜபம், மூளை, தேஜஸ், முதலியவைகளை விருத்தி செய்து, பிரம்ஹத்தின் 'சமீபம்சேர்ப்பிக்கு'மென்றும் என்ற சிரத்தையிருக்குமாயின் இச்சிலவு ஓர் பொருட்டா?

அப்படி சிலவு சிரமமென்று தோற்றினால் விசுவநாதன் சாந்திமுகூர்த்தத்தையும் சேர்த்துசெய்யேன்?

தகப்பனார்:— பேஷ், பேஷ், விசுவநாதன் அவன் சம்ஸாரத்தை ருதுவானவுடன் அழைத்துப்போய் விட்டான். இது உங்களுக்குத்தெரியாதா?

தாதா— மிருகஜாதிகள் தங்கள் ருது காலங்களில் கூடுவது போலா ஏற்பட்டது? மிக அழகு. மிருகப்பிராயமான சந்ததிகள் ஏற்படுமென்பதில் ஐயமுண்டோ? சிற்றின்பத்தின்கண் விழுந்து பன்றிபோல் குழந்தைகளைப் பெற்று, காப்பாற்ற வகையறியாமல் 'கர்ப்பத் தடை, (Birth control) கற்றோமா? என பச்சாத்தாபப்படவா நம் விவாஹம் ஏற்பட்டது? விவாஹம் என்பது முதல் தர்மம், இரண்டாவதாக ப்ரஜோற்பத்தி, ஆகிய இரண்டு நோக்கங்களேற்பட்டது. இந்திரிய நிக்கிரஹத்திற்கு வேண்டிய விதிகளை மனதிற்கொண்டே, அனேக நாட்களை நிஷேகத்திற்கு நிஷேதித்திருக்கிறார்கள். இவ்விதிகளை உபேக்ஷித்தவர்களுக்குப்பலன் அவர்கள் அனுபவித்துக்கொண்டிருப்பினும், அறிவீனத்தினால் சரியான காரணம் உணரார்கள்.

உற்பவிக்கப்போகும் ஜீவன், கர்மகதியால் ஜனனமானாலும், நம்வமிசத்திற் பிறப்பவனாதலால், கர்பபோற்பத்தி முதல் உரிய ஸம்ஸ்காரங்களாகிய கர்ப்பாதானாதிகளை முறைப்படி நடத்தினால் கர்மகதியின் வேகம் சீர்படும் என்ற நோக்கத்துடன் நிகழ்ந்து வந்த ஆசாரம் என்கண்முன்னேயே குன்றி, என் வமிசத்தினரேகளைபோல் காதலித்தார்களே!

தகப்பனார்—இந்த நாள் குழந்தைகளுடன் பேசிப்பிழைக்கவா? விஷயங்களை கிரகிக்கவேண்டிய காலங்களில், வீண்வாதங்களில் தலையிட்டுக்கொள்ளப்பழகுகிறார்கள். முடிவு அநாசாரத்திற்கும் கடுமையான, துராசாரம் தலையெடுக்கிறது.

தாதா—அது இருக்கட்டும்; உனக்குச் சொல்லுகிறேன், கேள், உங்கள் கோர்ட்டில் அநேக சட்டங்கள் உண்டு, அச்சட்டங்களில் கண்ட விஷயங்களை நடத்தும் முறைக்கு (Pro c edue code, manual) உபவிதிகள் அமைந்துள்ளன. அவ்விதிகளில் குறைவு ஏற்படினும் சட்டவிரோதமென்றும் கருதும் லோக வியவஹாரத்தில் ஏற்படும் போது, இஹபரலோக சட்டமாகிய வேதத்திற்கு உபநூலாகிய தர்ம சாஸ்திராதிகளில் சொல்லிய படி நடக்கப்பின்வாங்குகிறவர்களை அறிவினரெனக்கருதலாமோ?

'கழிந்த கலியாணத்திற்கு மேளமென்ன. தாளமென்ன' உன் வேலையை கவனி. உபநயன விஷயமாய் நாளை பேசுவோம்.

A. வெங்கடராமய்யர்.

(தொடரும்)

'ஸௌந்தர்ய லஹரீ.'

காபி ஒன்று விலை ரூ. 1—8—0

தபால் சிலவு பிரத்யேகம்.

கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.

பிரும்மஸ்ரீ அருட்கவி சுப்ரமண்ய அய்யர்,
அவர்கள் எழுதியது.

ஸ்ரீ நகர விமர்சனம்.	0	12	0
ஸ்ரீ குரு விமர்சனம்.	0	5	0
வரிவஸ்யா ரஹஸ்யம்.	1	0	0

கிடைக்குமிடம்:— ஜனார்த்தந அச்சுக்கூடம்,
லிமிடெட், கும்பகோணம்.

மார்சலியே

சுவாஸப்பைகளில் கடமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

தர்மசாஸ்திர ஸந்தேஹம்.

புருஷார்த்தசிந்தாமணி 455,பக்கம்க்ஷௌரவிதி பிரகரணத்தில் பாதவாஜ:, ஸ்வித்தந்திவோமென போஜநாநந்தரஞ்சய:த் க்ஷௌரகரோதிதத்கேஹே, நாஸந்திபிதாஸ்ஸுதா: என்ற வசனமும், சிரார்த்த காண்டம், 74, பக்கம் தசாஹவபநவிதி பிரகரணத்தில் சந்திகர்மாநந்தரம் போஜன கட்வாசயன டபதேசாத் புத்தஸ்ய வபநநிஷேதாத் என்ற வசனமும் இருப்பதால், ஒரு ஸபிண்டஞாதி மரணத்தை ஒரு ஸபிண்டஞாதி, 10 வது நாள் மத்தியான்ன போஜனத்திற்குப்பிறகு கேள்விபட்டால் அன்றையதினம் வபநதர்ப்பணங்கள் செய்யக்கூடாதென்று தோன்றுகிறபடியால், செய்யக்கூடாதா? புருஷார்த்த சிந்தாமணி அதே பிரகரணத்தில், நைமித்திகேக்ஷௌரே நாயம், நிஷேத: க்ஷௌரம் நைமித்திகம் குர்யாத் நிஷித்தே ஸத்யபி த்ருவம், என்றவசனமும், சிராத்த காண்டம் 69. பக்கம் புத்ரஸ்யாபி வபநநிஷேத: என்ற பிரகரணத்தில் ஸந்த்யாராத்ரயோ:தத்க்ஷௌரம் ப்ரேத கார்யம்சநாசரேத், என்ற வசனமும் இருப்பதால், போஜனத்திற்குப்பிறகும் சந்தியாகாலத்திற்குப்பூர்வமும் அன்றைய தினமே வபந தர்ப்பணங்கள் செய்யலாமென்றுதெரிவதால், செய்யலாமா?

இதேபிரகாரம் நிமந்திரண போஜனத்திற்கு பிறகு போக்தாவுக்கும், சிரார்த்தசேஷபோஜனத்திற்கு பிறகு சிரார்த்த கர்தாவுக்கும் அன்றைதினம் ஞாதி மரணநிமித்தமாக வபநதர்ப்பணப்ரஸக்தி ஏற்பட்டால் அதுகள் அன்றையதினமே செய்யலாமா செய்யக்கூடாதா?

இது விஷயங்களை நன்றாக பரிசிலனம் பண்ணி நமது ஆர்யதர்ம பத்திரிகை வாயிலாகவே பிரசுரிக்கவேண்டுமென்று நமது பண்டித மணிகளை பன்முறை பணிந்து பிரார்த்திக்கிறேன்.

நாராயணவாத்தியார்.
ஸத்யமங்கலம்.

நிருட பசுபந்த யாகங்கள்.
கிருஷ்ணாராயபுரம்

மேற்படி கிராமத்தில் தற்சமயம் ராமாயண பிரவசனம் செய்து வரும் பாஷ்யபாவஜ்ஞ ஸ்மிருதி பூஷண வாகூர் பிரம்மஸ்ரீ வெங்கிடராமசாஸ்திரி களவர்களால் சென்ற ஐப்பசி ௴ 19 ௨ சுக்கிர வாரம் தினம் வேத வருஷத்திய சாதுர்ஹோத்திரிய நிருட பசுபந்தயாகமானது அதிவிமர்சையாய் நடந்தேறியது? இதில் கிராம மஹா ஜனங்களுடைய சிரத்தையானது மிகவும் பாராட்டத்தக்கது?

மேற்படி கிராமம் பிரபல மிராசுதாராயும் வேத சாஸ்திரங்களை அப்யஸித்தவராயும் மிகவும் ஆசாரசீலரும் நித்யாக்நிஹோத்ரிகளுமான எம் வி வெங்கிடராமய்யர் அவர்களால் முதல் வருஷத்திய சாவித்ர சயன நிருடபசுபந்தமென்ற கிருதுவானது மிகவும் அதிவிமரிசையாய் செய்யப்பட்டது. ஷை யாருடைய சிரத்தையானது இக்காலத்தில் மிகவும் பாராட்டத்தக்கது. யாகத்தில் மகா-௱-௱-ஸ்ரீ வெங்கிடராம சாஸ்திரிகளவர்களால் யாகத்தில் பசு ஹிம்சை என்ற விஷயமாய் அநேக திருஷ்டாந்தங்களுடன் அவசியம் யாகம் செய்யவேண்டியது என்று அதிவிமரிசையாய் உபன்யஸிக்கப்பட்டது. ஷை யாகங்களுக்கு நெல்விச்சேரி பிரம்மஸ்ரீ ராமநாத சிரௌதிகள் தண்டாங்கோரை பிரம்மஸ்ரீ வைத்தியநாதசாமி தீக்ஷிதர் காலடி பிரம்மஸ்ரீ சங்கரதீக்ஷிதர் (வேதாந்தவித்வான்) இன்னும் அநேக வித்வான்கள் வந்திருந்தார்கள்.

S. ராமசந்திரேஸ்வரன்.

சென்னையில் யாகம்.
பிரபலஸ்தர்களின் ஆதரவு.

விஷ்ணம்பேட்டை பிரம்மஸ்ரீ ராமஸ்வாமி தீக்ஷிதாவர்கள் 4-11-38 முதல் 8-11-38 வரையில் சென்னை மைலாப்பூர் தெற்கு மாடவீதியில் அதி விமர்சையாக நாசிகேத சயனத்துடன் நிரூட பசுபந்தம் என்ற மஹா யக்ஞத்தை நடத்தினர். 4 ல் ஆதானமும் 5ல் பவமான இஷ்டியும், 6ல் பிரக்ருதி இஷ்டியும், சாலாப்ரவேசமும் 7ல் பசுபந்தமும் 8ல் பிருக்ருதி இஷ்டியும் பிராமண போஜனமும் நடைபெற்றது.

ஷை யாகத்தை சென்னையில் மைலாப்பூரில் ப்ரபலமான ஆஸ்திகம் பெற்ற உத்யோகத்திலுள்ள பிரபல கனவான்களும் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதாவர்களும் மேற்படியார்கனிஷ்டர் நாராயண தீக்ஷிதாவர்களும் பக்ஷிதீர்த்தம் யஞ்ஞேச்வர தீக்ஷிதாவர்களும் இன்னும் மற்றுமுள்ள வித்வான்களும் வந்து நடத்தினார்கள். 6-11-38 ஞாயர் மாலை 4மணிக்கு சென்னை பிரபல அட்வகேட் தர்மரக்ஷாமணி K. பாலசுப்ரமண்ய ஐயரவர்கள் தலைமையின் கீழ் சுமார் 1000 பேர்கள் அடங்கிய ஒரு வித்வத் கோஷ்டி சபை கூடிற்று.

உபந்யாஸம் செய்தவர்கள் வேதம் அபௌருஷேயம் என்றும் ஈஸ்வர வாக் என்றும் யக்ஞ கர்மாக்கள் வேதோக்தம் என்றும் ச்ரோத்ரியர்களாய் உள்ள பிராம்மணர்கள் அடிக்கடி யக்ஞகர்மாவை அவசியம் அநுஷ்டிக்கவேண்டுமென்றும் அப்பொழுது தான் அவர்களுக்கு தௌர்ப்ராமண்யம் போகுமென்றும் அபிப்பிராயப்பட்டனர், கே. பாலசுப்பிரமண்ய ஐயரவர்களும் திவான் பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரியாவர்களும் வேதம், புராணங்கள் பாகவதம் உபநிஷத் இவைகளிலிருந்து உதாஹரண வாக்யங்களுடன் யஞ்ஞத்தின் மஹிமையைப் பற்றி உபந்யஸித்தார்கள். ம௱௱ஸ்ரீ T. M. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் பிராமணர்கள் யஞ்ஞமூர்த்தியை ஆராதிக்க வேண்டுமென்றும் சாக்ஷாத் ஷண்முகனே யஞ்ஞமூர்த்தி என்று தக்க ஆதாரங்களுடன் வெகுஎளிய நடையில் விளக்கினர்.

சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதாவர்கள் பேசுகையில்.

பகவதம் யஞ்ஞத்தின் மஹிமையே சொல்லுகிறதென்றும், சித்தசுத்திக்கும் யஞ்ஞாதிகர்மாக்களே அவசியமென்றும், யஞ்ஞம் யக்ஞார்த்தம் பசவ: ஸ்ருஷ்டா: என்ற நியாயப்படி ஜீவஹிம்சை என்று சிலர் சொல்வது சம்மதக்கதில்லை என்றும் கலியில் யஞ்ஞம் செய்யக்கூடாது என்பது தவறுதலான வதந்தி என்றும் கூறினர். பர்த்தாவிற்குபட்டாபிஷேகம் என்றவுடன் பட்டாபிஷிக்தான பிறகு பர்த்தா கிருஷ்ணாஜினத்தை தரித்துக் கொண்டு தீக்ஷிதாய் உட்கார்ந்து கொண்டிருப்பதை தான் பார்க்க ஆவல்படுவதாக சீதா சொன்னாள் என்று "தீக்ஷிதம் வ்ரத ஸம்பன்னம்" என்ற ஸ்லோகத்தால் விளக்கிக்காட்டி வேதரூபமான ராமாயணத்தின் அபிப்ராயமும் யஞ்ஞத்திலேயே என்று முடித்தார்.

திங்கள் காலை பசுஹோமத்தின் பொழுது சுமார் 2000 ஜனங்கள் யஞ்ஞ சாலையில் கூடினார்கள். சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதாவர்கள் பீஷ்மஸ்துதியை உபந்யஸித்தார்.

ஆஸ்திகர்களின் ஆதரவையும் யஞ்ஞம் நடந்த விமர்சையையும் பார்த்தால் சென்னையில் மைலாப்பூருக்குச்சமமான ஆஸ்திக்யம் பெற்ற ஊர் இல்லையென்றும் சொல்லும்படியாக நடந்தது. கலிவந்தகாலத்திலும் பரீக்ஷித்திற்கு பயந்து எப்படி அவன் ராஜ்யத்தினில்லையோ அதேமாதிரி கலிமைலாப்பூரிலில்லாமல் கிருதயுகமாகவே காணப்படுகிறது.

ஒரு நிருபர்

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அருணாசலம்
4 ஸ.
23 46
24-11-1938

215258.

940
940
215258
629

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस்து नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்யஸு கார்த்திகைமீ 9உ 1938ஸு நவம்பர் மீ 24உ | லா 46

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.
விளம்பர விகிதம்
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

ஸ்ரீ ஜவஹர்லால்.

ஸ்ரீமான் ஜவஹர்லால் நேரு 5 மாதங்களாக ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்துவிட்டு 17உயன்று தமது பெண் இந்திராவுடன் பம்பாய் வந்து சேர்ந்தார். பம்பாயில் அவருக்கு விசேஷ உபசரிப்பு நடந்தது. பொதுக்கூட்டத்தில் ஐரோப்பிய நிலைமையைப் பற்றிப் பேசினார்.

மைஸூர் விசாரணைக் கமிட்டி யாதாஸ்து.

விதுராஸ்வத்தம் துப்பாக்கி பிரயோகத்தை விசாரிக்க மைஸூர் ஸர்க்காரால் நியமிக்கப்பட்டிருந்த ராமேசம் கமிட்டியாதாஸ்து வெளிவந்திருக்கிறது. அதில் காங்கிரஸ்காரர்களின் நடத்தை கண்டிக்கப்பட்டிருக்கிறது. துப்பாக்கிப் பிரயோகம் நியாயமென்றும் கூறப்பட்டிருக்கிறது. மைஸூரில் கிரிமினல் திருத்தச் சட்டம் செய்துவைத்துக் கொள்ளும்படியும் யாதாஸ்து சிபார்சு செய்திருக்கிறது.

மிராசுதார் மகஜர்.

தஞ்சை ஜில்லா மிராசுதார் ஸங்கத்தார் மாயவரத்தில் ஜில்லா கலெக்டரை ஸந்தித்து புதிய தண்ணீர் தீர்வை விஷயமாக ஓர் மெமோராண்டத்தைக் கொடுத்தனர். தண்ணீர் தீர்வை விகிதத்தை பலமாக அதில் ஆக்ஷேபித்து தக்க காரணங்களும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

ராஜாங்க ஸபைக்கு வரும்.

சென்னை அஸம்பிளியில் நிறைவேறியுள்ள நீண்டாதார் கஷ்ட நிவாரண மசோதாவானது ராஜாங்க ஸபையில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று டாக்டர் ராஜன் அடுத்த கூட்டத்தில் பிரேரிப்பார், அங்கு அது நிறைவேறியதும் சட்டமாக அமுலுக்கு வரும்.

காந்திஜிக்கு 25 ஆயிரம் ரூபாய்?

ஸமீபத்தில் காந்திஜி பாட்னாவுக்கு வந்து ஸேவாஸதனத்தைத் திறந்து வைக்கும்போது அவருக்கு 25 ஆயிரம் ரூபாய் பணமுடிப்பு அளிக்கப்படுமென்றும், அதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீமான் ராஜேந்திர பிரஸாத் செய்து வருவதாயும் தெரிகிறது. பணம் எதற்கு?

யூதர்களுக்கு ஸ்தானம்.

ஜர்மனி பாலஸ்தீனம் முதலிய விடங்களிலிருந்து துரத்தப்படும் யூதர்களுக்கு பிரிடிஷ் குடியேற்ற நாடாகிய தங்கநீகா முதலிய விடங்களில் குடியேற வசதிசெய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக பிரிடிஷ் முதன் மந்திரி காமன்ஸ் ஸபையில் அறிவித்தார்.

கும்பகோணம் பாங்கி, லிமிடெட்,
(1904-ஆம் ஸ்தாபிக்கப்பட்டது).

ஸேவிங்ஸ் அக்யூமுலேஷன்
அக்கௌண்டு.

பையன்கள் மேற்படிப்புக்கு போவதற்கு முன், கனமாய் கையில் பணம் சேரும்படிக்கும்;
பெண்களுக்கு கலியாண வயது வருவதற்கு முன்னே [illegible]
பெரிய முதல் பண்ணிக்கொள்வதற்கும்;
எதிர்பாராத செலவுகள் வரும்போது எளிதாய் எடுத்துக்கொடுப்பதற்கும்;
ஒருவர் முகத்தைப்பார்த்து கடன் கேட்காமல் எப்போதும் கைக்கு பணம் உதவும்படிக்கும்;

கும்பகோணம் பாங்கியில்
ஸேவிங்ஸ்
அக்யூமுலேஷன் அக்கௌண்ட்
ஆரம்பியுங்கள்.

இதில், இன்ஷியூரன்ஸ் பாலிஸி எடுப்பதைக்காட்டிலும் அதிக வட்டி வருமானம் உண்டு. மாதாந்தரம் பணம் கட்டவேண்டிய முறைகளிலுள்ள நிர்ப்பந்தங்களும் தொந்தரவுகளும் கிடையாது.

கும்பகோணம் பெரியதெரு V. R. ஸ்ரீனிவாஸய்யங்கார் எஸ்டேட்.
ஏல நோட்டீஸ்.

கும்பகோணம் தாலூகா, திருவிடமருதூருக்கு ஸமீபமுள்ள மாங்குடி ஆண்டலாம்பேட்டை கிராமங்களில், ஷை எஸ்டேட்டுக்குச் சொந்தமான சுமார் 120 ஏகர் விஸ்தீர்ணமுள்ள, நஞ்சை, புஞ்சை, தென்னந்தோப்புகள், உயர்ந்த ஜாதி ஒட்டுமாந்தோப்புகள் வாழைக்கொல்லைகள், சவுக்கைத் தோப்புகள் மனைக்கட்டுகள் முதலியவைகளை ஷை எஸ்டேட் டிரஸ்டிகளால் ஷைமாங்குடி கிராமம் அக்கிரஹாரத்தில் (26—11—38) சனிக்கிழமை மாலை 3-மணிக்கு பஹிரங்கமாக ஏலம் போடப்படும்.
ஷை ஏல விபரம் டிரஸ்டிகள் ஆபீஸில் தெரிந்து கொள்ளலாம்.

கும்பகோணம், 15—11—38. } K. R. M. சிங்காரம் செட்டியார்,
S. மஹாலிங்கய்யர்,
டிரஸ்டிகள்.

[illegible] கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோண

அச்வத்த வ்ருக்ஷ மஹிமை.

(இலந்துறை, "ஸமரஸ குடீரம்" ப்ரஹ்மஸ்ரீ சிவாசார்ய கங்கா ஜடேச சர்மா.)

ஆன்றோரால் தொன்றுதொட்டு ஸோம வாரத்துடன் சேர்ந்துவருகிற அமாவாஸ்யை புண்ய காலங்களில் அச்வத்த வ்ருக்ஷத்தை விதிப்படி பூஜித்து

मूलतो ब्रह्मरूपाय मध्यतोविष्णुरूपिणे ।
अग्रतः शिवरूपाय वृक्षराजाय ते नमः ॥

'அடி "ப்ரஹ்ம" ரூபமாகவும், நடு "விஷ்ணு" ரூபமாகவும், முடி "சிவ" ரூபமாகவும் உள்ள அந்த வ்ருக்ஷராஜன் பொருட்டு நமஸ்காரம்' என்று நூற்றெட்டு முறை நியமத்துடன் ப்ரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்து அபீஷ்ட ஸித்திகளையடைந்து இன்புற்று வருவது இந்நாட்டிலுள்ள ஸனாதனி—ஹிந்துக்களது வழக்கமல்லவா? அத்தகைய உத்தமமான புண்யகால மகிமையைச் சிறிது விளக்குவோம்.

यंदृष्ट्वामुच्यतेरोगैः स्पृष्ट्वा पापैः प्रमुच्यते ।
यदाश्रयाच्चिरञ्जीवी तमश्वत्थं नमाम्यहम् ॥

'பார்த்தலால் வ்யாதி நீக்கமும், தொடுவதால் பாவங்களினின்று விடுதலையும், ஆச்ரயித்தலால் தீர்க்காயுஸ்ஸையும் அளிப்பதான அரசை வணங்குகிறேன்.' என்று மஹான்களருளியிருக்கிறார்கள். ஸ்ரீமத் பகவத்கீதையிலும், (10—26.)

अश्वत्थस्सर्व वृक्षाणाम् ।

வ்ருக்ஷங்களில் அச்வத்தமாக இருக்கி [illegible]

அரசமரமானது நம் தேசத்தில் ஆற்றங்கரை, குளக்கரைகளிலும் விசேஷமாக ஒவ்வொரு ஸ்னான கட்டங்களிலும், பல தேவாலயங்களில் ஸ்தல வ்ருக்ஷமாகவும் விளங்குவதைப் பலருங் காணலாம். அதன் பருத்த அடிபாகமும், வெண்மையான செழுங்கிளைகளும், திரண்டுருண்டு ஓங்கி வளர்ந்த கம்பீரமான தோற்றமும், சிவந்த தளிர்களும், பசுமையான இலைகளும், அதனூடே ஸஞ்சரிக்கும் இளங்காற்றின் இனிய ஒலியும், கண், காது, மனம் அனைத்திற்கும் இன்பத்தை யளிக்கும்.

"பூவாதே காய்க்கும் மரமுமுள." என்ற முதுரையின்படி (அத்தி, ஆல், பிலா முதலியவற்றைப் போல்) இதுவும், பூவாதே காய்ப்பதாகும். ஷை மரங்கள் தளிர்விடும்போது அது (மூங்கில் முளைமேல் மூடிக் கொண்டுள்ளது போன்ற) ஓர் நுண்ணிய இதழால் மூடப்பட்டிருக்கும். தளிர் முதிர அது உலர்ந்து உதிர்ந்து விடும். வஸந்த ருதுவாகிய சித்திரை வைகாசி மாதங்களில் இம்மரம் பழய சருகுகளை உதிர்த்து புதிய அழகிய செவ்விய தளிர்களோடு விளங்குங் காட்சி மிக மனோகரமாயிருக்கும்.

இதனிடத்தத் "தாம்ர" ஸத்தும், மின்ஸாரமும் மிகுதியாயுள்ளன. நோயினால் வருந்தி சிறிது தெளிவடைந்து வருவோரும், உடலும், மனமும், மெலிவெய்தியவர்களும் மற்றும் பலரும் காலையில் சுத்தமான ஆறு குளங்களில் நீராடி ஆசார நியமத்துடன் அரச ப்ரதக்ஷிணஞ் செய்வதையும், இதனால் பல வ்யாதிகளும் நீங்கி உடல் தெளிவடைந்து பூர்ண ஸௌக்யமும் அடைந்து மகிழும் பலரையும் நாம் காண்கின்றோம்.

அநுகூலத்திற்குக் காரணம் இந்த உத்தமமான வ்ருக்ஷத்தின் காற்றில் ஸஞ்சரிப்பதே முக்யமானதாகும். மின்ஸாரமானது கூர்மையான முனைகளின் வழியே நன்கு ஒழுகுந் தன்மையுடை[illegible] முனை பொருள்களில் விரைவில் பாவுந் தன்மையுடையதாதலின் அரசமரத்தின் இலைகளின் கூர்மையான நுனிகளின் மூலமாக ஸ்னானஞ்செய்து நியமத்துடன் ப்ரதக்ஷிணஞ் செய்யும் பக்தர்களது சரீரத்தில் சிறிது சிறிதாக வ்யாபித்து பலத்தை வ்ருத்திசெய்யும் என்று ரஸாயன சாஸ்த்ரஜ்ஞர்கள் கூறுவர்.

ஆயினும் அரசுடன் வேப்பும் சேர்ந்திருப்பதால் அதன் சாறும் சேர்ந்து பலவியாதிகளையும், பேய், பலடு விஷகடி முதலியவைகளையும் நீக்குவதற்கேற்ற காரணமாகிறது. அரசஞ் சுள்ளியின் புகையானது சரீரத்தில் நரம்பு தளர்ச்சியை யகற்றி முறுக்கேற்றுந் தன்மையது.

நமது பெரியோர்களும் ஞானிகளுமான மஹரிஷிகள் ப்ரதிதினமும் அக்னி கார்ய—ஹோமங்களில் பலவகை சமித்துக்களுடன் அரச ஸமித்தையுஞ்சேர்த்து ஹோமம் செய்து சரீர வன்மையையும் மனத் தெளிவையும் தீர்க்காயுஸ்ஸையும் பெற்று நெடுங்காலம் சுகமாக வாழ்ந்து வந்தார்கள்.

பதார்த்தகுண சிந்தாமணியில் "அரசமரத்தின் வேர் விரணத்தையாற்றும், விதை சுக்ல ரோகயைப்போக்கும், கொழுந்து தாகம், வெப்பம் இவற்றையும் முத்தோஷங்களையும் போக்கும் தாது விருத்தியாகும்" என்று கூறப்பட்டுள்ளது.

ஸ்தாவரங்களானமரஞ் செடிகள் பகலில் அசுத்த வாயுவை ஏற்றுக்கொண்டு சுத்த வாயுவை வெளிப்படுத்துவதும் இரவில் சுத்த வாயுவை உட்கொண்டு அசுத்த வாயுவை வெளியிடுவதால் ஆசாரக்கோவை என்ற நூலில் "இராமரும்சேரார்" என்று கூறுவதற்கேற்ப இராக்காலங்களில் எந்த மரத்தின் கீழும் செல்லக்கூடாது. காலையில் சுத்த ஜலஸ்னானம் சரீர சுத்தியையும் வேம்பின் நிழல், காற்று வ்யாதி நீக்கத்தையும், அரசின் நிழல், காற்று தாது புஷ்டியையும் அளிக்கும்.

அரசின் அடி, நடு, முடிகள் ப்ரஹ்மா, விஷ்ணு, சிவ ஸ்வரூபமாயிருத்தலால் மும்மூர்த்திகளையும் பூஜித்த பலனுங்கிடைக்கும். அரசவ்ருக்ஷம் ப்ராம்மணச்சிறுவனும், வேம்பு ப்ராமணக்கன்னிகையுமாமெனவும் அரசுவைத்து வளர்ப்பவர் வேம்புவைத்து வளர்த்து அச்வத்தப்ரதிஷ்டையும், உபநயனமும், விவாகமும், சாஸ்த்ரோக்தமாகச்செய்து வைப்பதனால் ஆயுராரோக்ய ஐச்வர்யாதிகளையும் ஸந்தான ஸமர்த்தியையுமடைந்து ஸத்கதி பெறுவார்களென்று பெரியோர் அனுக்ரஹத்துள்ளார்கள்.

मार्गशीर्षे माघमासे वैशाखे कार्तिके तथा ।
विवाहं कारयेदेवं विप्रलक्षमहाफलम् ॥
कोटिविप्र विवाहेन यत्फलं लभते नरः ।
अश्वत्थस्यविवाहेनतत्फलंलभतेभुवि ॥

"மார்கழி, மாசி, வைகாசி, கார்த்திகை மாதங்களில் அரசுக்கு விவாகம் செய்து வைத்தலானது கோடிப்ராம்மணர்க்கு விவாஹம் செய்துவைத்த பலன், ஒரு அரசவ்ருக்ஷ விவாகத்தால் ஸித்திக்குமென்று மஹரிஷிகள் கூறியுள்ளார்கள்.

அமாவாஸ்யையும், ஸோமவாரமும், ஸப்தமியும், ஞாயிற்றுக்கிழமையும், சதுர்த்தியும், செவ்வாய்க்கிழமையும் சேர்ந்தவந்தால் அது விஷ—வத்—புண்யகாலத்திற் கொப்பானதென்றும், அன்று நதி தடாக ஸமுத்ர தீரங்களிலுள்ள த்ரிமூர்த்தி ஸ்வரூபமான அச்வத்த வ்ருக்ஷத்திற்கு ஆவாஹனாதி ஷோடசோபசார பூஜைகளையும், நூற்றெட்டு ப்ரதக்ஷிணங்களையுஞ் செய்து நமஸ்கரித்து அவரவர்கள் அபீஷ்ட ஸித்திகளைப் பெறுவார்களாக!

அச்வத்த பூஜைசெய்து அகமகிழ்ந்தலகோர் வாழ்க!!

போலீஸில் கள்குடி.

பம்பாய் ஸர்க்கார் பதில்.

பம்பாய் போலீஸில் கள்குடியும், மாம்ஸ போஜனமும் கட்டாயமாக இருப்பதாக காந்திஜி கண்டித்ததற்கு அந்த ஸர்க்கார் பதில் விடுத்திருக்கிறார்கள். போலீஸில் மேற்கண்ட மாதிரி நிர்பந்த மெதுவும் கிடையாதென்றும் கறிகாய் உண்ண இஷ்டமுள்ளவர்களுக்கு அவைகளை ஸப்ளைசெய்யவும் ஸர்க்கார் உத்திரவிட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸம்ஸ்தான மந்திரிகள்.

ராஜப்பிரதிநிதி இந்தியா வந்த பிறகு ஸம்ஸ்தான அரசர்கள் ஸமஷ்டி விஷயமாகச் சுறுசுறுகாட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். பம்பாயில் ஸம்ஸ்தான மந்திரிகளின் கூட்டமொன்று நடைபெற்று வருகிறது. ஸமஷ்டி விஷயமாக நெருங்கிய அபிப்பிராயம் வெளிவருமாம்.

சென்னை அஸெம்பிளியில் ஆலயப் பிரவேசம்.

நவம்பர் 28உ முதல் சென்னை ஜனப்பிரதிநிதிக் கூட்டமானது இரண்டுவாரம் தொடர்ந்து நடக்கும். இதில் மலையாள ஆலயப்பிரவேச மசோதாவும், ஸுகாதார மந்திரி கொண்டுவந்துள்ள பொது ஸுகாதார மசோதாவும் ஆலோசனைக்கு வந்து தனிக்கமிட்டி பரிசீலனைக்கு விடப்படுமெனத் தெரிகிறது.

கல்கத்தாவில் வகுப்புக் கலஹம்.

3 மரணங்கள்.

கல்கத்தாவில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து பெரிய அமளிசெய்து வருகிறார்கள். இதனால் ஹிந்து முஸ்லிம் கலஹம் ஏற்பட்டு மூன்று பேர் குத்திக் கொல்லப்பட்டார்கள். இன்னும் நிலைமை சாந்தமாகவில்லை. ஸமாதானக் கமிட்டி ஏற்பட்டிருக்கிறது.

நர்ஸ் சட்டம்,

ஆங்கிலோ இந்தியர் எதிர்ப்பு

சென்னை ஸர்க்கார் நர்ஸுத் தொழில் சட்டத்தைத் திருத்த உத்தேசிக்கிறார்கள். ஆங்கிலோ இந்தியர்கள் கூட்டம்போட்டு இதை பலமாகக் கண்டித்தனர் இந்தப் புதிய சட்டத்தால் தங்கள் ஜாதி ஸ்திரீகளின் பிழைப்புப் போய்விடுமென்றார்கள். கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மத விஷயத்திற்குச் சாராயம்.

திருத்த மசோதா.

சென்னை ஸர்க்கார் நிறைவேற்றியுள்ள மதுவிலக்குச் சட்டத்தில், கிறிஸ்தவர்கள் மதவிஷயமாக உபயோகிக்கும் சாராயத்திற்குச் சில விலக்குகள் ஏற்கனவே செய்யப்பட்டிருந்தன. ஆயினும் கிறிஸ்தவ மதக்குருக்களும், மற்றவர்களும் மதவிஷயமாக உபயோகிக்கும் சாராயத்திற்கு ஸர்க்கார் நிர்பந்தம் குறையவேண்டுமென்ற கிளர்ச்சியை அநுஸரித்து சென்னை ஸர்க்கார் ஒரு புதிய திருத்த மசோதாவைக்கொண்டு வரப்போகிறார்கள்.

ஆலயப்ரவேச எதிர்ப்பு.

ஆழ்வார் திருநகரியில் பொதுக்கூட்டம்.

பண்டிதர்கள் சொற்பொழிவு.

[நமது விசேஷ நிருபர்]

ஆழ்வார் திருநகரி தேவஸ்தான முன் மண்டபத்தில் 15-11-38 மங்களவாரத்தன்றிரவு 8.30 க்கு ஓர் பொதுக்கூட்டம் ஸநாதன தர்ம மஹா ஸபா ஆதரவில் நடைபெற்றது. முக்ய பிரமுகர்களும் ஆண் பெண் யாவர்களும் தீண்டாதாருள்பட திரளாக விஜயமாயிருந்தனர். மைசூர் திருநாராயணபுரம் ஸ்ரீ உ. வே வித்வான் டி. எ. ஸ்ரீநிவாஸாசாரியார் தீண்டாதார் ஆலயப்ரவேச விஷயமாய் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார். அதன் சாரம்.

சர்வேஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்ட எண்பத்தி நான்கு லக்ஷம் ஜீவராசிகளிலும் மானிடராய்ப்பிறத்தல் மிக அரிதாகும். மனித ஜன்மமடைந்த நாம் எதையும் பகுத்தறிவுடனும் நியாயமாயும் செய்ய வேண்டியதே முறையாகும். எந்தெந்த விஷயத்தை எவரெவர் செய்ய வேண்டுமென்பது கவனிக்கத்தக்கதாகும். ஆண்கள் ப்ரஸவிக்க எண்ணங் கொண்டால் அவை முடியாத காரியமாகும். (சிரிப்பு) ஆலயப்ரவேச சட்ட விஷயமாய்ச் சிறிது பேசலாமென முன் வந்திருக்கிறேன்.

ஆலயப்ரவேசச் சட்டம் அதிக்ரமம்.

வைதிக மத சம்பந்தமான சம்ப்ரதாயக் காரியாதிகளைக் கவனிக்க மடாதிபதி ஜீயர்களும் ஆசார்ய புருஷர்களுமிருக்கிறார்கள். கோயில் அர்ச்சகர்களுக்கு மந்திரோபதேசம் செய்யும் அவர்களும் கர்ப்பக்ருகத்துக்குள் செல்லுவதில்லை.

பிராமணர்களும் தீட்டுள்ள சமயங்களில் தீண்டாதார்களாகவே கருதப்படுகிறார்கள். உயர்ந்த ஹிந்துக்களிலும் யார் யார் எவ்வளவு தூரம் செல்லலாமென்ற நியதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆலயத்தில் சான்னித்தியமிருக்குமென்று போதிக்கும் சாஸ்திரம் ஆகம சாஸ்திரம். அந்த சாஸ்திரத்தில் இன்னின்ன விதிப்பிரகாரம் ஆலயத்தை ரக்ஷித்தால் தான் அங்கு ஈசுவர சான்னித்யமிருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் நம்பிக்கையில்லாதார் பிராமணராயினும் ஆலய தர்சனத்திற்கே லாயக்கற்றவனாவன்.

அந்த ஆலய சம்பந்தமான விதிகளில் தீண்டாதார் முதலியோர்களும், செல்லக்கூடாத அநேக பொருள்களும், ஜீவன்களும் இன்னின்ன இடம் தாண்டிச்சென்றால் தெய்வ சாந்நித்தியத்திற்குக்குறைவுண்டாகுமென்று சொல்லப்படுகின்றன. எந்த தீண்டாத ஹரி ஜனங்களும் உண்மையான ஹிந்துமத பக்தனானால் அந்த ஈசுவர சான்னித்தியத்திற்கு குறைவு ஏற்படுத்தி விட்டு தானும் மற்றோரும் அந்த அனுக்ரஹத்தைப் பெறாமல் நஷ்டப்படும்படி செய்ய மாட்டான். உத்ஸவ காலங்களில் வீதியில் எழுந்தருளும் போது தூரவிருந்து தரிசிப்பதினால் பிராமணனை விட அதிகமான பலனை தீண்டாதார் பெறுகிறார்கள். ஆகையால் தீண்டாதாருள்பட ஹிந்து மதத்தில் விசேஷ நம்பிக்கையுள்ள எல்லோரும் சேர்ந்து பகவத் ஸான்னித்யத்தையும் அனுக்ரஹத்தையும் நாசம் செய்யப்புறப்படும் ஆலயப்ரவேச சட்டத்தை எதிர்க்க வேண்டியது கடமையாகும். சட்டசபை, எண்டோன்மெண்ட் போர்டு, கோயில் டிரஸ்டி இவர்கள் நிர்வாஹ சம்பந்தமான சொத்துக்கள் தகராறுகளையே கவனிக்கவேற்பட்டவர்கள், அவர்கள் வைதிக மத சம்பந்தமான காரியாதிகளில் உள்ளதை உள்ளபடி நடத்தி வைக்கவே பொறுப்புள்ள லாயக்குள்ளவர்கள்.

அப்படி அவர்கள் சாஸ்திரத்தை மீறி சட்டமேற்படுத்தினால் சட்டத்தைமீறி பகவதாக்ஞையை நிறைவேற்றுவது மத நம்பிக்கையுள்ளோர் கடமையாகும். நமக்கென்ன என்று ஒருவரும் மௌனமாயிருக்கக்கூடாது. தீண்டாதாருள்பட யாவருக்குமே ஆலயப்ரவேச நடவடிக்கை நாசஹேதுவாகும். ஆகையால் தெய்வத்தின் மீது பலப்ராப்தி பொறுப்பை விட்டு நாமெல்லோரும் சேர்ந்து ஏகோபித்து தீவிரமாகவுழைப்போமாக.

திருவாங்கூரில் ஆலயப்ரவேசம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது முதல் எவ்வகையிலும் ஒருவருக்கும் நிம்மதியின்றி பெருங் குழப்பமாகவே யிருந்து வருவதாயும் கோயிலுக்கு உயர்தர ஹிந்துக்களும் தீண்டாதவர்களும் கூட நேரே செல்லுவதில்லையென்றும் அதனால் தேவாலயங்களில் ஆள் நடமாட்டமே அதிகமின்மையால் உத்யோகஸ்தர்கள் கட்டாயமாய் கோயிலுக்குச்செல்ல சர்க்காரால் வற்புறுத்தப் படுகிறார்களென்றும் சொல்லப்படுகிறது (பெரும் சிரிப்பு) மேலக்கோட்டை திருநாரயணபுரத்தில் மூன்று தினங்கள் தீண்டாத ஹரிஜனங்கள் போவதாய் விளம்பரப்படுத்தப்படுகிறது. அங்கு முன்னால் துவஜஸ்தம்பம் வீதியிலிருந்தது, வாசலிலிருந்தே தர்சிக்க அனுமதிக்கப்படுகிறது. தற்போது துவஜஸ்தம்பத்திற்கு முன்னும் மதிள் எழுப்பப்பட்டிருக்கிறதாயினும் ஸ்தம்பம் வரை மூன்று தினம் ஆன பிறகு ஹரிஜனங்களை அழைத்தாலும் வருவதில்லை. நான்காவது தினம் நடைபெறும் சம்ப்ரோக்ஷணை ப்ராயச்சித்த சடங்குகளை கவனித்தால் தீண்டாதார் கோயில் பிரவேசம் வேண்டாமென்பதற்கு அதுவே உதாரணமாய்த்தோன்றும். ஆகையால் தீண்டாருள்பட நமக்கும், ஆலயங்களுக்கும்; தேச க்ஷேமத்துக்கும் பாதகத்தையே விளைவிக்கும் நிலையிலுள்ள இச்சட்டத்தை யாவரும் ஒன்று சேர்ந்து எதிர்ப்போமாக. எனப் பேசிமுடித்ததும், எட்டையாபுரம் சமஸ்தான வித்வான் ஸ்ரீ உ. வே. வி சாமி ஐயங்காரவர்களும் இது விஷயமாய் மிக ரஸமாக உபன்யஸிக்கப்பட்டது. முடிவில் ஜில்லா சநாதன தர்ம மஹா சபா நிர்வாஹ சபா (டைரக்டர்) மெம்பர் ஸ்ரீமான் அ. தே. ராமானுஜய்யங்காரால் யாவருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு 9.30க்கு கூட்டம் இனிது முடிவெய்தியது.

ஒரு அவஸர விக்ஞாபனம்.

சென்னை சட்டஸபையில் கவர்ன்மெண்டாரால் கொண்டுவரப்பட்டுள்ள "ஆலயப்ரவேச மசோதா"வைப்பற்றி அபிப்ராயம் தெரிவிக்கும்படி அங்காங்குள்ள கோயில் டிரஸ்டிகளை கவர்ன்மெண்டார் கேட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது ஆகவே எல்லோருக்கும், உபயோகப்படும்படி உடனே அடுத்தவாரப் பத்திரிகையிலேயே, ஷை மசோதாவுக்கு விரோதமாயுள்ள ஆகமப் பிரமாணங்களை சுலோக பூர்வமாய் வெளியிடும்படி பத்திராதிபரையும், பண்டிதர்களையும் கேட்டுக்கொள்ளுகிறது. பல டிரஸ்டிகள் மசோதாவைக் கண்டிக்க ஆகம வாக்யங்கள் பிரமாணமாக வேண்டுமென்று அபிப்ராயப்படுகிறபடியால் தவக்கமில்லாமல் வெளியிடும்படி கோரப்படுகிறது.

இந்த மசோதா விஷயத்தில், சென்னை மாகாண வர்ணாசிரம ஸ்வராஜ்ய ஸங்கத்தார் தமிழ் தேசம் பூராவும் சுற்றிப் பிரசாரம் செய்ய செல்வாக்குள்ள ஒரு தூது கோஷ்டியை ஏற்பாடு செய்வதும் சென்னை கவர்னரையும் பேட்டிகண்டு நமது அபிப்ராயத்தை வற்புறுத்த வேண்டியதும் மிகவும் அவச்யமும், அவஸரமுமான விஷயம். இதைக் கவனித்து உடனே ஏற்பாடு செய்யும்படி ஷை சங்கத்தின் அக்ராசனர் மதுரை பிரம்மஸ்ரீ ராவ்ஸாகிப் N. நடேசய்யர் அவர்களையும், காரியதரிசி T. S. ராமஸ்வாமி அய்யர் அவர்களையும், இதர நிர்வாகிகளையும் பிரார்த்திக்கிறேன்.

சென்னை மாகாணத்திலுள்ள பொது ஜனங்களும் மீட்டிங்குகள் கூட்டி கண்டிப்பதுடன் மகஜர்கள் தயார்செய்து ஏமாறாமல் கையெழுத்துகள் வாங்கி கூடியசீக்கிரம் கவர்ன்மெண்டுக்கு போய்ச்சேர ஏற்பாடு செய்யும்படி வணக்கமாய் பிரார்த்திக்கிறேன்.

P. N. நாராயணசாஸ்திரி.

செங்கற்பட்டு.

ராமாயண நவாஹம்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி 4—11—38ல் ஸ்ரீமத் ராமாயண நவாஹம் பட்டாபிஷேகத்துடன் முடிவு பெற்றது. எலெக்ட்ரிக் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ கோதண்டராமர் ஸந்நிதியில் திரளான ஜனக்கூட்டம் பக்தியுடன் கூடியிருந்தது கண்கொள்ளாக் காக்ஷியாயிருந்தது. முன்பு அறிவித்தவர்கள் தவிர விசேஷமாக நித்யாக்னிஹோத்ரிகளான பிரம்மஸ்ரீ திருக்கழுக்குன்றம் யஜ்ஞேச்வர தீக்ஷிதரவர்களும் ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீமான் ஸூப்பராவ் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். பிரம்மஸ்ரீ தீக்ஷிதரவர்கள், ராம, ராவண யுத்தத்தில் ஆதித்யஹ்ருதயத்தின் விசேஷ மஹிமையும், அதனால், பிரத்யக்ஷத்தில் பலன் அடைந்திருக்கும் விசேஷங்களையும் எல்லா ஜாதிகளும் பாராயணம் செய்யவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தி ஸ்ரீமத் ராமாயணத்தினால் உண்டாகும் விசேஷ பலனையும் எடுத்து சொல்லி ஸதாசாரங்களை எல்லோரும் அனுஷ்டிக்கவேண்டிய அவச்யத்தையும் வற்புறுத்திச்சொல்லி உபந்யாஸத்தை முடித்துக் கொண்டார். தமிழ் பாஷையே தெரியாத ஜில்லா ஜட்ஜ் அவர்கள் மிகவும் ஸந்தோஷித்தார்கள். பிறகு ஸ்ரீ ராமபக்தர்களால், பிரம்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுக்கு தக்க ஸன்மானம் செய்யப்பட்டு முடிவுபெற்றது. இது விஷயத்தில் டிரயினிங் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் வெங்கடேச அய்யர், ஷை ஸ்கூல் உபாத்யாயர்கள், ஸ்ரீமான் வெங்கட சுப்ரமண்ய அய்யர், ராமனாத அய்யர், முதலோருடைய சிரத்தையே விசேஷமாய் பாராட்டத்தக்கது.

8-11-38ல் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள், செங்கற்பட்டு, மேல மைலாப்பூர் ஸ்ரீ வித்யோபாஸகர்களும், ரிடையர்டு போஸ்டு மாஸ்டருமான பிரம்மஸ்ரீ, V. விச்வநாத அய்யர் அவர்கள் க்ருஹத்தில் பாதுகாபட்டாபிஷேகம் உபன்யஸித்தார்கள்.

9—11—38, 17—11—38 இந்த இரண்டு தினங்களிலும் பிரம்மஸ்ரீ, அனந்தராம தீக்ஷிதரவர்கள், செங்கற்பட்டு ஈச்வரன், கோயில் கல்யாண, மண்டபத்தில் இவ்வூர், ஸப்-ஜட்ஜ் ஸ்ரீமான், R. S. சுப்பிரமணிய அய்யர் அவர்களுடையவும், டிரயினிங், ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் வெங்கடேசய்யர் அவர்களுடையவும், வேண்டுகோளுக்கிணங்க, ஸந்தியாவந்தனம். என்னும் விஷயத்தை விசேஷ அர்த்தங்களுடனும், மேற்கோள்களுடனும் ஸந்தியாவந்தனம் அவச்யம் அனுஷ்டிக்க வேண்டியதைப்பற்றியும் உபன்யஸித்தார்கள். தீக்ஷிதர் அவர்களின் தர்மப் பிரசாரத்தைக் கொண்டாடாதாரில்லை. மறுபடியும் ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீமத் பகவத்கீதை முதலியவைகளையும், சிரவணம்செய்ய இந்நகர் வாஸிகள் ஏற்பாடுசெய்து கொண்டிருக்கிறார்கள்.

P. N. நாராயண சாஸ்திரி,

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பகுதான்ய ௵ கார்த்திகை ௴ 9௳

ஹிந்து மதத்தின் மஹத்வம்.

சென்னையில் இரண்டு தினங்களுக்கு முன்பு நடந்த ஸர்வமத மஹாநாட்டிலும், கேசவ சந்திரஸேனருடைய தினக்கொண்டாட்டத்திலும் மதத்தின் மேன்மையைப் பற்றி அந்தந்த மதஸ்தர்கள் பேசியிருக்கிறார்கள். அதே ஸமயத்தில் கல்கத்தாவில் ஸர். ராதாகிருஷ்ணனும் மனிதர்களுக்கு மதத்தினால் ஏற்படும் உயர்ந்த நிலைமையைப் பற்றிப் பேசியிருக்கிறார். சில வர்ஷங்களுக்கு முன் நம் தேசத்தில் மதத்தைப்பற்றிப் பேசினால் அது கேலிக்கு இடமாயிருந்து வந்தது. நவீன நாகரிகப் பித்து அதிகரித்து எல்லாம் ஐரோப்பியமயமாக இருந்த அக்காலம் மாறி தற்போது நவீனத்தில் பிரமுகர்களாயிருப்பவர்களே மதத்தைப்பற்றி நினைக்கவும், பேசவும் காலம் வந்திருப்பது ஒருவாறு ஸந்தோஷிக்கக்கூடியதே.

ஆனால் மற்ற மதங்களின் நிலைமைக்கும், தற்காலம் பேசப்படும் ஹிந்து மதத்தின் நிலைமைக்கும் விசேஷ வித்யாஸமிருக்கிறது. பௌத்தம், ஜைனம், பார்ஸி, இஸ்லாம் போன்றவைகளில் நவீன கால புத்திப் போக்கை அநுஸரித்து சீர்திருத்தக்காரர் புகுந்து கலக்கம் செய்யவில்லை. ஹிந்து மதமோ அப்படியில்லை. துரத்ருஷ்டவசமாக சென்ற ஒரு நூற்றாண்டு முதலாக மத பரிஷ்காரம் என்ற வியாஜம் கொண்டு வைதிகமான நமது ஹிந்துமதமானது பற்பல விபரீத வாதிகளால் கலக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆர்ய ஸமாஜம், பிரம்மஸமாஜம், தியஸாபி போன்ற பிரிவுகள், தங்களையும் ஹிந்துமதமென்றே அழைத்துக்கொள்ளுகின்றன. ஆயினும், இந்த நவீன மதங்களுக்கும் அநாதியான வைதிக ஹிந்து மதத்திற்கும் அடிப்படையான அம்சங்களிலேயே பலத்த பேதம் இருப்பதால் எல்லாம் ஹிந்துமதமே என்று சொல்லிவிடமுடியாது. மேற்கண்ட ஸமாஜ மதங்கள் யாவும் ஜைனம், பௌத்தம் கிறிஸ்தவம் முதலிய ஒவ்வொரு மதத்திலிருந்தும் அபிப்ராயங்களை ஒன்று சேர்த்து கல்பித்த கலப்பு மதங்களே என்பதில் தடையில்லை. உண்மையான ஹிந்து வைதிக மதத்திற்கும் இவைகளுக்கும் ஓர் ஸம்பந்தமும் கிடையாது. உண்மையில் வைதிக ஹிந்துமதமென்பது, தற்போது ஹிந்து மத ஆபாஸங்களாகத் தோன்றியுள்ள எந்த மதத்திற்கும் எட்டாத அரிய தத்வங்களுடன் தனியாகவே பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அதை நவீன வாதிகள் இன்னும் உண்மையாக அறியவில்லை. அறிந்து கொள்ளவும் முடியாது. இந்த நிலைமையில் சென்னை ஸர்வமத மஹாநாட்டில் எல்லா மதங்களும் ஒன்றுதானென்றும், எல்லாவற்றையும் கலந்து கொண்டாடவேணுமென்றும் சில புத்திமான்கள் பேசியிருப்பது கார்யத்தில் நடக்கக்கூடியதா? வ்யவஸ்தையும், ஸ்வாபிமானமுமில்லாத நவீன ஹிந்துக்கள் சிலர் இதற்கு இசையலாமாயினும் அங்கு கூடியிருந்த மஹம்மதியர், கிறிஸ்தவர், பௌத்தர் போன்றவர்கள் தங்கள் மதத்திற்கு ஸமமாக ஹிந்து மதத்தை கௌரவிக்க முன்வருவார்களா? கூட்டம் போட்டுக்கொண்டு அர்த்தமில்லாமல் பேசுவதில் பயனென்ன? ஹிந்துமதத்தில் தற்காலத் தேவைகளான பொதுநன்மை, ஸமத்வம், ஸஹோதரத்வம்போன்ற உயர்ந்த தத்வங்கள் வெகு பலமாக வற்புறுத்தப்பட்டிருப்பதை மற்ற மதஸ்தர்கள் அறிய வழியில்லை. ஆதலால் அங்கு பேசிய பலர் ஹிந்துமதத்தை பரிஷ்கரிக்கவேண்டியது அவச்யமென்று சொன்னதில் ஆச்சர்யமில்லை.

ஹிந்து மதத்தின் உண்மையான மேன்மையை மற்றொரு கூட்டத்தில் பேசிய கனம் டாக்டர் ராஜன் சிறிது விளக்கிக் காட்டியுள்ளார். டாக்டர் ராஜன் சீர்திருத்தக்காரராயினும், பிரம்ம ஸமாஜத்தலைவரான கேசவசந்திரஸேனருடைய தினக்கொண்டாட்டத்தில் அவர் ஹிந்து மதத்தின் பெருமையை மனமார வெளியிட்டிருப்பது சிலாகிக்கத்தக்கது. பிரம்ம ஸமாஜிகள் விக்ரஹ ஆராதனத்திற்கு நேர்விரோதிகள். கேசவ சந்திரஸேனரும் அந்த கோஷ்டியில் சேர்ந்தவரே. ஆயினும் அவரைப் புகழப்போன டாக்டர் ராஜன் கேசவ சந்திருடைய கொள்கைகளை ஒப்புக்கொள்ள இசையவில்லையென்று தெரிகிறது. விக்ரஹ ஆராதனத்திலுள்ள அரிய தத்வங்களையும், ஸௌகர்யங்களையும் அவர் விளக்கிவிட்டு இதற்கு மாறாக கேசவசந்திரர் அதை எதிர்த்திருப்பது ஸரியல்லவென்றும், மூட எண்ணத்துடன் விக்ரஹ ஆராதனம் செய்பவரையே கேசவ சந்திரர் தூஷித்திருப்பதாகத் தாம் கருதுவதாயும் டாக்டர் ராஜன் சொன்னார். இத்தகைய அடிப்படையான வித்யாஸமுள்ள பிரம்ம ஸமாஜத்தையும் வைதிக ஹிந்துமதத்தையும் எப்படி ஒன்றாக பாவிப்பது? எல்லா மதங்களையும் ஸமமாக பாவிக்கவேண்டுமென்று ஸர்வமத மஹாநாடு கேட்பதன் கருத்தென்னவென்பது விளங்கவில்லை. கிறிஸ்தவர்கள் அன்னிய மதத்தினரை "ஹீதன்ஸ்" என்றும், மஹம்மதியர்கள் "காபிர்" என்றும், ஹிந்துக்கள் "மிலேச்சர்" என்றும் அழைப்பதை அந்தந்த மதங்கள் நிறுத்திவிட இசையுமா? ஒரு மதத்தில் இல்லாத புதிய அம்சங்களை மற்றொரு மதத்திலிருந்து எடுத்துக்கொள்ளலாமாயினும் உலகில் தற்போது எந்த மதமும் அப்படிப் பிச்சை வாங்கவேண்டிய நிலைமையில் அபூர்ணமாயிருப்பதாக ஒப்புக்கொள்ள முன்வராது. தனது மதத்தில் இல்லாத அம்சமே பாக்கியில்லையென்றே எல்லாம் பெருமை சொல்லிக்கொள்ளுகிறது. ஆகையால் ஸர்வமத மஹாநாட்டுத் தீர்மானத்தால் எந்த மதத்திலும் ஒரு உறுதியில்லாமல் தத்தளிக்கும் ஒரு கூட்டம் ஏற்படவே வழியுண்டாகும். இது மத அபிவிர்த்திக்கு ஏற்றதன்று. ஒவ்வொருவருக்கும் தம் தம் மதத்தில் உறுதி ஏற்படவேண்டுமென்பதே நம் முன்னோர் கருத்து. உறுதியுடன் பின்பற்றுவோர் இல்லாமல் சஞ்சல புத்தியுள்ளவர்களால் மதம் க்ஷீணிக்கவே இடமேற்படும். இதர மதங்களில் த்வேஷம் கூடாதென்ற பிரசாரமே இந்த மஹாநாட்டின் நோக்கமாயிருக்குமானால் அது நல்லதுதான். ஆனால் ஹிந்து மதத்தினருக்கு இந்த உபதேசம் அநாவச்யமானதே. அவர்கள் எந்த மதத்தாருடனும் ஆதிமுதல் சண்டைக்குப்போனவர்களல்ல. அவர்களுடைய மதக்கட்டளையே இதை பலமாக வற்புறுத்துகிறது. மதச் சண்டைகளிலும், மதமாற்றத்திலும் முனைந்து நிற்கும் சில மதங்களுக்கே மேற்கண்ட உபதேசங்கள் தேவையானவை. ஹிந்துமதத்தில், அந்நியரை மதமாற்றம் செய்ய இடமளிக்காததே அதன் கம்பீரமான போக்கையும், பரிசுத்தியையும் நன்கு விளக்கும். ஆதலால் அங்கு தியஸாபி முதலிய சில மதஸ்தர்கள் ஹிந்துமதத்தைப் பரிஷ்கரிக்கவே தாங்கள் உதயமாகியிருப்பதாகப் பெருமைபேசியதில் அர்த்தமில்லை. வைதிக ஹிந்துக்களின் பிரதிநிதி அக்கூட்டத்தில் ஒருவராவது இருந்திருந்தால் இதற்குத் தக்கபதில் கொடுபட்டிருக்கும்.

குறிப்பு.

திருவாங்கூர் கலஹ ரஹஸ்யம் வெளியாகிறது.

திருவாங்கூர் காங்கிரஸ் தலைவர்களெனச் சொல்லப்படும் சிலர் ஒரு தூது கோஷ்டியாக சென்று வார்தாவில் காந்திஜியைக்கண்டு பேசினார்கள். தற்போது அங்கு காங்கிரஸ் பெயரால் சிலர் செய்து வரும் நீதியற்ற கிளர்ச்சிக்கு காந்திஜியின் ஸம்மதியைப் பெறுவதே இந்த தூது கோஷ்டியின் முக்ய நோக்கமாகும். ஆயினும் அவர்களுடைய முயற்சி பலிக்கவில்லையெனத் தெரிகிறது. பத்திரிகைகளில் இவ்விஷயமாக வெளிவந்துள்ள விவரங்களைக் கவனித்தால் ராஜ்யக்கிளர்ச்சி, அல்லது பொறுப்பாட்சி கிளர்ச்சியின் பித்தலாட்டம் நன்கு வெளிப்படக்கூடியதாகும். திருவாங்கூர் போராட்டத்தைப்பற்றி தலைவர்களும், பத்திரிகைகளும் "பொறுப்பாட்சி கிளர்ச்சி" யென்று வர்ணித்து, வரிக் கட்டிக்கொண்டு அதை ஆதரிக்க முற்பட்டது வெறும் ஏமாற்றமென்பது இப்போது தெளிவாகிறது.

தூது கோஷ்டியினருக்கு காந்திஜி சொல்லிய நல்லுபதேசங்களை அவர்கள் ஏற்க மறுத்து விட்டதாகத்தெரிகிறது அந்தப் போராட்டத்திற்குத் தமது ஆதரவு வேண்டுமானால் த்ருடமான அஹிம்ஸைக் கொள்கையைக்கண்டிப்பாக பின் பற்ற வேண்டுமென்று காந்திஜி சொன்னாராம். இந்த உபதேசம் வெறும் அரண்யரோதனம் என்பது ஏற்கனவே நிச்சயப்பட்ட விஷயம். திருவாங்கூர் கிளர்ச்சிக்காரர்கள் பலாத்காரம் அல்லது ஹிம்ஸையைக்கைவிட்டு விட்டால் தங்கள் வேலை பலிக்காதென்று அறிந்தவர்கள். ஆகையால் அவர்கள் இதை ஏற்க முன்வரமாட்டார்கள்.

மற்றொரு விஷயம் முக்யமானது. திருவாங்கூர் கிளர்ச்சியானது ஆதி முதலே திவானுக்கு விரோதமாக ஆரம்பித்த ஓர் விஷமமென்றும், திவானை விலக்கிவிட நினைப்பவர்களின் ஆடம்பரக் கிளர்ச்சியென்றும், இதற்கு "ராஜ்யப் போராட்ட"மென்று பொய்யான மேல்பூச்சு கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் காந்திஜி அறிந்துகொண்டிருக்கிறார். அதனால் அவர் திவான்மீது அந்தக் கிளர்க்காரர்கள் பஹிரங்கமாக கூறியுள்ள அவதூறுகளை வாபீஸ் பெறவேண்டுமென்று வற்புறுத்திவந்தார். இப்போதும் தம்மிடம் வந்த தூதுகோஷ்டியிடம் இதையே அவர் நிர்ப்பந்தமாகக் கேட்டார். ஆனால் தூது கோஷ்டியானது குருவுக்கு மிஞ்சின சிஷ்யனாகி காந்தி உபதேசத்தையே கேட்க மறுத்துவிட்டதாம்.

திவான்மீது கூறிய அவதூறுகளை வாபீஸ் பெற முடியாதென்றும், அப்படிச் செய்தால் திவானை விலக்கிவிடச் செய்து வரும் கிளர்ச்சி பலன் தராமல் போய்விடுமென்றும் காந்திஜியிடம் தூதுகோஷ்டி சொல்லிவிட்டது. இந்தக் கிளர்ச்சியின் அடிப்படையான நோக்கம் திவானுக்கு விரோதமாக ஆரம்பிக்கப்பட்டதென்பதையும், அவரை விலக்கிவிட வேண்டிய வேலையே இதன் முக்யகார்யமென்றும், காந்திஜி ஆலோசனைப்படி நடந்தால் அது நிறைவேறாதென்றும் தூது கோஷ்டியார் பட்டவர்த்தனமாக ஒப்புக்கொண்டு விட்டார்கள். கடைசியாக காந்திஜிக்கும் அவர்களுக்கும் பலத்த அபிப்ராய பேதமேற்பட்டும்,காந்திஜியின் வார்த்தையை லக்ஷ்யம் செய்யாமலும் அவர்கள் திரும்பி விட்டார்கள். காந்திஜியும் இனி திருவாங்கூர் கிளர்ச்சிக்கு ஆதரவளிக்கமாட்டாராம். அவர்களும் காந்திஜி அபிப்ராயத்திற்கு மாறாகவே கிளர்ச்சியை நடத்துவார்களாம். இதிலிருந்து திருவாங்கூர் ராஜ்யக் கிளர்ச்சியின் வேஷம் வெடித்து உலகம் உண்மையை அறிய நேர்ந்திருக்கிறது. தலைவர்கள், பத்திரிகைகள் ஆகியவர்களின் மாயா பிரசாரமும், அதனால் ஜனங்கள் ஏமார்ந்ததும் வெளியாகிவிட்டது. ஸ்வயநலமிகளின் விஷமங்களெல்லாம் ராஜ்யப் போராட்டமாக பிரபலப்பட்டு விடுவதற்கு இது ஓர் ருஜுவாகும்.

சென்னையில் ஹிந்தி எதிர்ப்புக்காரர்களின் பலாத்காரம்.

பத்திரிகை ஆபீஸ்கள் தாக்கப்பட்டன.

சென்னையில் நேற்று முன் தினம் ஹிந்தி எதிர்ப்புக்காரர்கள் பலர் பெருங்கூட்டமாகச் சேர்ந்துகொண்டு, மறியல்காரர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டதை ஸஹியாமல் கோர்ட்டிலிருந்து திரும்பும்போது பெரிய கலவரம் உண்டாக்கினார்கள். அந்தக் கூட்டமானது தாறுமாறாகக் கூச்சலிட்டுக்கொண்டு ஜார்ஜ்டவுன் பக்கம்சென்று 'தினமணி" பத்திரிகை ஆபீஸைத் தாக்க ஆரம்பித்தது. கற்கள் ஏராளமாக வீசப்பட்டன. இதனால் கட்டிடத்தின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. போலீஸ்காரர் வந்து கூட்டத்தைத் துரத்தினர்.

பிறகு கூட்டமானது "ஆனந்த விகடன்" பத்திரிகை ஆபீஸ் சென்று அங்கும் கற்களை வீசியது. அங்கும் பெருத்த சேதமேற்பட்டது சில காப்பிஹோட்டல்களையும் கலஹக்காரர்கள் தாக்கினர். ஆனந்தபோதினி, தமிழ் மணி முதலிய பத்திரிகைகளின் காரியாலயங்களும் தாக்கப்பட்டன. போலீஸார் கூட்டத்தை விரட்டினர். தினமணி, ஆனந்தவிகடன் சொந்தக்காரர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விரு ஆபீஸுக்கும் சேதம் அதிகமென்று தெரிகிறது. சில தனிப்பட்டவர்களின் வீடுகளும் தாக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஜாமீன் விடுதலை.

பிராம்மண நிந்தை, வகுப்பு த்வேஷத்துக் குற்றத்திற்காக 18 மாத தண்டனை அடைந்த முத்துக்குமாரஸாமிப் பாவலர் என்பவரை ஜாமீனில் விடும்படி ஜஸ்டிஸ் வெங்கடரமண ராவ் உத்திரவு செய்தார்.

ஜாமீன் விடுதலையில்லை.

கைது செய்யப்பட்டிருக்கும் திருவாங்கூர் நாஷனல் பாங்கியின் டைரக்டர்கள் நால்வரையும் ஜாமீனில் விடும்படி சென்னை ஸர்க்காரிடம் கொடுக்கப்பட்ட ஜாமீன் மனுவை கவர்ன்மெண்டார் தள்ளிவிட்டனர். இதில் பிரவேசிக்கத் தங்களுக்கு அதிகாரமில்லையென்று சொல்லிவிட்டார்கள்.

தங்கக் கவசத் திருட்டு.

குடந்தையில் சோதனை.

திருவிடைமருதூர் ஸ்ரீ மஹாலிங்க ஸ்வாமியின் தங்கக் கவசத் திருட்டு விஷயமாகக் கும்பகோணத்தில் உளவுகிடைத்து ஒருவன் கைது செய்யப்பட்டபின் அவனிடம் கவசத் தங்கங்கள் கிடைத்தன. அவனுடைய தகவலின்மேல் கும்பகோணத்திலுள்ள அநேக காசுக்கடைகள் சோதனை போடப்பட்டன.

இந்தூரில் அதர்மச் சட்டம்.

இந்தூர் ஸம்ஸ்தானத்தில் விவாக மசோதா சட்டமாகிவிட்டது. பெண்களுக்கு 14-வயதிற்குள்ளாகவும் புருஷர்களுக்கு 18-வயதிற்குள்ளும் விவாஹம்செய்வது குற்றமாகும். விவாஹங்களை ரிஜிஸ்தர் செய்யவேண்டுமென்றும் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆலயப் பிரவேச எதிர்ப்பு.

மலையாளத்திலுள்ள ஜாதி ஹிந்துக்கள் ஆயிரக்கணக்காகக் கையெழுத்திட்டு ஆலயப் பிரவேசத்தை ஆக்ஷேபித்து ஓர் மஹஜரை ஸர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அங்குள்ள கோவில்கள் யாவும் பொதுக்கோவில்களல்லவென்று சொல்லப்பட்டிருக்கிறது திண்டுக்கல் ஹிந்துக்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் மலையாள ஆலயப் பிரவேச ம[illegible]தாவைக் கண்டித்துத் தீர்மானித்தனர்.

தஞ்ஜை ஜில்லா போர்டு தலைவர்.

தஞ்ஜை ஜில்லாபோர்டு இரண்டையும் ஒன்றாக இணைத்த பிறகு அதற்குத் தலைவர் தேர்தல் நடந்தது. ஸ்ரீமான் நாடிமுத்துப்பிள்ளையே ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா)

புதிய ஸர்வதேச சங்கம் !! ஒன்றை ஆரம்பித்து உலக ஸமாதானத்தை நிலைநாட்ட வேண்டுமென்கிறார் லாயிட் ஜார்ஜ்! தனி மனிதனும் தேசமும் உள்ளதைக்கொண்டு ஸந்தோஷமடையுங் குணமிருந்தாலல்லது ஸமாதானமேது ?

யார் சொல்வர் ? தேசிய வாதிகள் தலையில் நாகரீகப் பித்தம் மிக மிக அதிகமாக ஏறியுளது ? படேல் தன் மகளையும் ஏனையோரையும் ராஜ்கோட் ஸத்யாக்ரஹத்திற்கனுப்பினார். இரவில் பெண்மக்கள் போலீஸ் ஆதீனத்திலிருப்பது அருந்ததி பிறந்தநாட்டிற் கழகாமோ ?

முன்னமே செய்திருக்கவேண்டியது !! பிறித்தாளும் தந்திரத்தைப் பிறநாட்டினர் செய்யலாம் ! எந்தக் கக்ஷியாகிலும் ஸரி நம் நாட்டவர் அதிகாரியானால் வகுப்புத்வேஷ விஷ விருக்ஷத்தை முளையிலேயே பிடுங்கி எறியவேண்டும். காதில் கேட்கமுடியாத பேச்சுகளால் பாமரரைக் கிளப்பிவிடுபவர் நன்கு சிக்ஷிக்கத்தக்கவரே! தேசிய அரசாங்க மிதிலிறங்கியது போற்றத்தக்கதே !!

பலாத்காரத்திலு மிறங்குகின்றனர்!! நற்பெயர் பெற சிறிது தேசிய அரசாங்கம் இடமளிக்கவே, கோவை மேலப்பாளயம் முதலிய விடங்களில் பலாத்காரமும் ஹிம்ஸையுந் தோன்றுகின்றன. நன்கு எச்சரிக்கை செய்தபின் தயவு தாக்ஷிண்யமின்றி சிக்ஷிக்க ஆரம்பித்தால் தேச நலமுண்டாம்.

அநியாயவரி! பிரஞ்சிந்தியாவிலுள்ள பிரிடிஷ் இந்தியருக்கு தலைவரி 20 ரூபா விதிக்கப்படுமாம் !! சண்டை ஆரம்பமா ?

சென்னையிலுமாரம்பம் !! கராச்சியில் விமானப்படை தாக்கினால் எப்படி நடப்பதென நகரவாஸிகளுக்குபதேசிக்கப்படுகிறது! சென்னையிலுமிங்ஙனம் போதிக்க ஓர் ஸபை ஏற்பட்டது !

திவான்களது கூட்டம் !! பம்பாயில் கூடிற்று. மிக மோசமான தீர்மானம் செய்ததென தேசிய பத்ரிகைகள் கண்டிக்கின்றன. சுதேச ராஜாக்களை இச்சமயம் தட்டிக்கொடுத்துக் கட்டியணைக்க தேசிய ஸபைக்குத் தெரியவில்லையே என நம் வருத்தம்.

ஈசன் திருவிளையாடலா ? ஓர் ஸமயம் யூதர் உலகை ஆண்டனர். இப்போது அவர் கதி அதோகதியாகிவிட்டது. பிரிடிஷ் அஞ்சாதே நாமிடமளிப்போமென்கிறது ! ஏழை இந்தியாவும் சென்னையுங்கூட கருணை ஆதரவு காட்டுகிறது !

கக்ஷிக்காக ராஜ்யமா ! ராஜ்யத்திற்காக கக்ஷியா ! வங்க மந்திரிஸபை தன் கக்ஷியைப் பலப்படுத்திக்கொள்ள இன்னுமிரு மந்திரிகளை அதிகமாகச் சேர்த்துக்கொண்டது !

பரத்வானில் நற்செய்தி !! காளி ஊர்வலத்தில் ஹிந்து முஸ்லீம் சண்டை ஏற்பட்டு உத்ஸவம் நின்றது. நல்லவேளையாக இரு தரப்பினரும் ஒத்துப்போய் உத்ஸவம் நடந்த[illegible] மற்ற ஊர் இ[illegible]மாகக் கொள்ளுமா ?

விட மனமில்லை!! ஆங்கிலோ இந்திய ஜாதியர் தாதி வேலையையும் ரயில் டிக்கட் சோதகாதி வேலையையும் ஏக போகமாக அனுபவித்தனர். நர்ஸ் வேலைக்கு புருஷரும் தேர்ந்தெடுக்கப்படலாமென்று அரசாங்கம் கூற அவ்வகுப்பினர் ஓரே கத்தலாக இதை எதிர்க்கின்றனர்.

ஜில்லா கல்வி ஸபை! கலைக்கப்பட்டு புதிதாக அமைக்கப்படுவதைப் பலர் ஆக்ஷேபிக்கின்றனர். பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதிஉபாத்தியாயர்களும் பாதி மற்றவரும் கலந்த ஸபை சட்டஸபை போலும் மேலே இப்போது அரசாங்கம் கூறும் ஸபை நிர்வாஹ ஸபையாகவுமிருக்கலாம்.

21-11-38-௵ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

நெல்லு முதல்தரம் வெள்ளைசிறு மணி 48 பட்டணம்படி மூட்டை	4—0—0
ஷை இரண்டாந் தரம் நெல்லூர்சம்பா 48 ஷை உள்ள மூட்டை	3—2—0
அரிசி முதல்தரம் வெள்ளைசிறுமணி 48பவுண்டு உள்ள மூட்டை	9—0—0
ஷை இரண்டாம்தரம் நெல்லூர்சம்பா 48 பவுண்டு உள்ள மூட்டை	7-10-0
தேங்காய் எண்ணை 64 சேர் நிறை	5—0—0

ஸ்ரீ தாசில்தார்.

ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

Nellore.

கடவுளை நம்பியவர் கண்களைப் பெற்றார்.

மத்தியார்ஜுனத்தில் மகாலிங்கஸ்வாமி மகிமை.

ஓர் ஆச்சர்ய சம்பவம்.

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த மத்தியார்ஜுனமென்னும் திருவிடமருதூர் க்ஷேத்திரத்தின் மகிமையை மகா ஜனங்கள் தெரிந்து ஆச்சர்யப்படும்படி ஓர் சம்பவம் சென்ற சில தினங்களுக்கு முன்பு ஏற்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் 22 வயது ஸ்ரீமான் சின்னத்தம்பி என்றவருக்கு இருநேத்திரங்களும் சென்ற 2½-வருடமாய் குருடாகி, வாயும் பேசமுடியாமல் போய்விட்டது. இவருடைய தந்தை சுமார் 3000 ரூபாய் செலவிட்டு பல வைத்தியங்களைச் செய்தும் பயன்படாது போய், களைப்புற்றுப்போய் விட்டார். மனம் நொந்த தந்தை பையனை அழைத்துக்கொண்டு வந்து மேற்படி க்ஷேத்திரத்தில் ஸ்ரீமகாலிங்கஸ்வாமி ஆலயத்தை அடைந்து பலமாதங்களாக பிரதக்ஷணம் செய்துகொண்டு வந்தார். பிரதி தினமும் ஆலய புஷ்கரணியில் நீராடி பிரதக்ஷணம் செய்யச் செய்தார். சில நாட்களுக்கு முன்பு ஒரு செவ்வாய்க்கிழமையில் பிரதக்ஷணம் செய்து ஸ்ரீ மகாலிங்கஸ்வாமி சன்னதியில் நமஸ்காரம் செய்து பிரார்த்தனைசெய்து நிற்கையில் காலை 11-மணிக்கு திடீரென்று இருகண்களும் இமைபிரிந்து வழக்கம் போன்று கண்விழிகள் தெரிந்தன. அச்சமயத்தில் மனம் பூரித்து ஸ்ரீ மகாலிங்க ஸ்வாமியை தோத்திரம் செய்து இப்பையன் மறுபடியும் நமஸ்கரித்து நின்றான். சில வார்த்தைகளையும் அது சமயம் கூறினான். எனினும் அவன் இப்பொழுது பேசவில்லை. கடவுளை நம்பினவருக்குக் கண்களையும் கொடுத்துவிட்டார் என்ற பேச்சாகவே ஜனங்கள் இந்தப் பக்கங்களில் பேசுகிறார்கள். பலர் இப்பையனை வந்தும் பார்க்கிறார்கள். மகா ஜனங்கள் பார்த்து ஆச்சரியப்பட்டு திடுக்கிட்டு விட்டனர். இப் பையனுக்கு கண் தெரிந்த பிறகு தஞ்சையிலுள்ள வீட்டிற்கு தந்தைக்குத் தெரியாமல் ரயிலில் சென்றுவிட்டான் தந்தை எங்கும் தேடி உறவினருக்கெல்லாம் தந்தியும் கொடுத்துப்பிறகு இருப்பிடம் தெரிந்து மறுபடி இங்கு அவனை அழைத்து வந்தார்.

இன்றைய தினம் காலையில் இந்த ஆச்சரியகாமான சம்பவத்தை நான் நேரில் சென்று விசாரித்து மேற்படி பையனையும் பார்த்து கேட்டேன். அவன் பேச முடியவில்லை. அவன் ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் தேர்ச்சி பெற்றவன் ஆகவே கடிதம் எழுதி அவனை சில கேள்விகளை நான் கேட்டதற்கு பதில் எழுதிகாட்ட அவன் என்ன முயன்றும் அவனுக்கு கை ஸ்வாதீனம் ஏற்படவில்லை. ஆகவே அவன் தகப்பனார் தஞ்சை ஸ்ரீமான் தீ நாராயணஸாமி கோனாரை விசாரித்ததில் தன் குமாரன் தஞ்சை ஜில்லா போர்டில் 'பிளான்' எழுதும் இலாகாவில் வேலையிலிருந்ததாயும். தீபாவளிக்கு முதல் நாள் தன் பாதுகாப்பிலிருந்த பையன் கண் தெரிந்துவிட்டதால் தஞ்சைக்கு ரயிலேறிப் போய்விட்டதாயும். கூறினார். இச்சம்மவத்தால் மேற்படி ஆலயத்தின் மகிமை அதிகரித்து பலரைக் கவர்ந்து கடவுளிடத்து நம்பிக்கையும் அதிகமாய் ஏற்பட்டிருக்கிறது என்று 4—11—38 ஸுதேசமித்திரனில் ஒரு நிருபர் எழுதியுள்ளார்.

நாகப்பூரில் தர்மப்ரவசனம்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீல ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளின், திவ்யானுக்ரகம் பிரபாவம் உபமையற்றதாயிருக்கிறது. எந்தெந்த ஊரில் ஷை ஸ்வாமிகள் சென்று, அங்குள்ளோர்களை அனுக்ரஹித்துப்போனார்களோ அந்த ஊரில், இன்னும் மறுபடியும், எப்பொழுது திரும்பி வரப்போகிறார்களென்று எதிர்பார்க்கிறார்கள். போகாதவூரில்வஸிக்கிற ஜனங்கள், இன்னும், இன்னும் வரவில்லையே என்று மிகுந்த அவாக்கொண்டிருக்கிறார்கள். பம்பாய் பக்கம் ஜனங்கள், வரவேண்டுமென்று மிகுந்த பக்தி சிரத்தையுடன், அழைத்து வருகிறார்கள். ஷை ஸ்வாமிகளின் பூர்ணானுக்ரகம் பெற்று வேதாந்த விபூஷணம் என்னும் பிருதமடைந்த அம்மனூர் பிரம்மஸ்ரீ எ. ஆர். வெங்கடராம சாஸ்திரிகள், ஷை பெரியவாள் ஆக்ஞைப்படி நாகப்பூர் முதலிய இடங்களுக்கு சனாதன தர்மப்பிரசாரஞ் செய்யக்கிளம்பி நாகப்பூர் ஸுதாபர்டியிலுள்ள மெட்ராஸி கிளப்பில் புரட்டாசிமீ ஆரம்பித்து ஸ்ரீவால்மீகி ராமாயணப்ரவசனம் அநேக வேதாந்த கல்பங்களுடன், மிக அழகாய், குழந்தைகளும் உணருமாறு செய்து வந்தார்கள். இந்த நவம்பர் 6-11-38ல் ஸ்ரீராம பட்டாபிஷேகம் நடந்தது. முன் அயோத்யா பட்டணத்தில் எப்படி நடந்ததோ அவ்வித விமர்சையுடன் ஷை பட்டாபிஷேக உத்ஸவம் எல்லோருக்கும் மிகசந்தோஷகரமாயிருந்தது இதற்கு மத்தியில், இந்த ஊர் ஸிடியிலுள்ள போஸ்லே வேத சாஸ்திர பாடசாலையில், பாரதீயமஹத்துவம், தேவதோபாஸ்தி, என்கிற விஷயங்களைப்பற்றியும், தக்ஷிணாமூர்த்தி மந்திரத்தில் ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் திருவவதார மகிமையைப்பற்றியும்; அயாசித் மந்திரத்தில், மண்டமிச்ரஸம்வாதத்தைப்பற்றியும், ஸம்ஸ்கிருத பாஷையில் 4 நான்கு உபந்யாஸங்களையும் அழகான சொற்களினால் ஷை பண்டிதர்கள் அவர்கள் செய்து, கனதனவான்கள் வித்வத்மணிகள் எல்லோர்களையும் ஸந்தோஷிக்கச் செய்ததினால் ஷையார்களின், பாண்டித்தியம், ரொம்பவும் சிலாகிக்கக் கூடியதாயிருக்கிறது. ஷையார்கள், ஒவ்வொரு உபந்யாஸ முடிவிலும், எல்லாம், ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்வாமிகள் கருங்குளம், மஹாமஹோபாத்திய பிரம்மஸ்ரீ, K. S. கிருஷ்ணசாஸ்திரிகள், இந்த இருவர்களுடைய அனுக்ரஹமகிமையென்றே சொல்லி வருகிறார்கள். ஷையார்கள் 15 நாளில் பம்பாய்க்கு விஜயஞ் செய்யப்போகிறார்கள். அதுவரையில் இங்குள்ள ஆஸ்திக மணிகளின் பிரார்த்தனை யிணங்கி ஷையூர் தந்தேளியிலிருக்கும், ஸ்ரீ பஜனை மடத்தில் ஸ்ரீ பகவத்கீதை உபநிஷத்து, இவைகளின், பாஷ்யப் பிரவசனஞ்செய்து வருகிறார்கள். அநேகர்கள் சிரதையுடன் சிரவணஞ்செய்து வருகிறார்கள். மேற்படி பஜனமடமும், ஷை ஸ்வாமிகளால் அனுக்கிரகிக்கப்பட்ட மூலதனமேற்படுத்தி, மகா-ள-ள-ஸ்ரீ S. கிருஷ்ண ஸ்வாமி அய்யரவர்கள் முதலிய அபிமானிகளால் நன்று பரிபாலனஞ் செய்யப்பட்டு வருகிறது. சனிகிழமை ஏகாதசி, தினங்களில் பஜனையும், பஞ்சமீதோறும் ஸ்ரீ சங்கராசாரிய பூஜையும் நடத்துவருகின்றன. இந்த மாதிரியே ஷை பரமாசாரியாள் அனுக்கிரகம் செய்து வருகிறார்கள். இக்கலியுள்ள ஜீவாத்மாக்கள் கரையேறும் வழியை ஷை ஆசார்யாள் ஆங்காங்கு உபன்யாஸ ஸுபாஷிதத்தால் நன்று உணர்ந்து வருகிறார்கள் வேதோபதேசம் போலே எண்ணிவருகிறார்கள்.

ஒரு நிருபர்.

ஸ்ரீமத் ஆத்தான் ஸ்வாமிகள் யாத்ராவிஜயம்.

ஆழ்வார் திருநகரி ஸ்ரீவைஷ்ணவ சமயாச்சார்ய குருபீடம் ஸ்ரீஜகத்குரு (ஸ்ரீமத் ஆத்தான் வடக்குத்திருமாளிகை ஆதீனம்) அதிபதியான 26-வது பரம்பரைபட்டம் ஸ்ரீமத் வேங்கடவரதாசார்ய ஸ்வாமிகள் ரக்ஷ்ய கோடிகளின் பிரார்த்தனைக்கிணங்க வடதேச யாத்திரையாய் விஜயமாயிருக்கிறார். தற்போது ஹைதராபாத்பக்கம் எழுந்தருளியிருப்பதாய்த்தெரிகிறது.

ஸ்ரீ ஆதிநாதர் அழகர் தேவஸ்தானம்.

25000க்கு புதிய வாஹனம்.

ஆழ்வார் திருநகரி ஸ்ரீஆதிநாதர் அழகர் தேவஸ்தானத்தில் கோவில் ஸ்தலத்தார்களால் தேவஸ்தான நிதியிலிருந்து சிலவு செய்து சுமார் ரூ 25000ம் பெறுமதிப்புள்ள கெருடவாகனம் சேஷவாகனம் புதியதாக செய்யப்படுகிறதாய்த் தெரிகிறது. இந்த கைங்கர்ய விஷயத்தில் மிகுந்த சிரத்தையுடன் ஊக்கம் செலுத்தும் தேவஸ்தான ஸ்தலத்தார் ஸ்ரீமான் என். ஏ. ராமய்யங்காரின் பக்தி பாராட்டத்தக்கதாம்.

ந. வி. தி.

ஹிந்தி எதிர்ப்புக்காரர்களுக்கு தண்டனை.

சென்னையில் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் தலைமையாயிருந்து மறியல்செய்த, ஸ்ரீமான் ஸி. டி. நாயகம், ஷண்முகானந்தசாமி ஆகியவர்கள்மீது நடந்து வந்த வழக்கில் மேற்படி இருவருக்கும் முறையே ஒரு மாதமும், நான்கு மாதமும் தண்டனை விதிக்கப்பட்டது.

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை.

காளி ஊர்வலத்திற்கு ஸம்மதி.

பாரத்வான் ஜில்லாவில் மஹம்மதியர்கள் மிகப் பெருந்தன்மை காட்டி, மசூதி வழியாகக் காளி ஊர்வலம் செல்ல அநுமதி கொடுத்ததுடன், அச்சமயம் மசூதிகளை மூடி வைக்கவும் ஸம்மதித்தனராம்.

உ

ஜோதிட விளம்பரம்.

திருத்துறைப்பூண்டி தாலூகா, ஆலத்தம்பாடி. கம்பராமாயண பிரசங்காமிர்தம் ஜோதிட சரப வித்வான் ஸ்ரீ ராமசுப்பு முதலியாரவர்களால், பரிசிலனைசெய்து, "ஜோதிடமணி" என்று பெயர் அளிக்கப்பெற்று, மிகவும் அனுபவத்துடன் பிரபல்யமடைந்துவரும்தஞ்சாவூர்-பள்ளியக்ரஹாரம், து. கந்தசாமி செட்டியார் அவர்களால் உங்கள் எதிர்கால பலன்களை அடைய, பிறந்த ஜாதகம், பெயர், பொருத்தம் முதலியவைகளால் பலன் எழுதி கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:—ஸ்ரீ அரியநாயக முதலியார்,
ஸ்ரீ நாராயணதீர்த்த குருசுவாமிகள்,
மடாலய பரிபாலகர், திருப்பூந்துருத்தி.

N. B:—மேல்கண்ட ஜோதிட வருமானத்தை மேற்படி மடாலய ஜீரணோத்தாரண கைங்கர்யத்திற்கு உபயோகிக்கப்படும்.

தேசிகன் தேன் மொழிகள்.

மதவிஷயத்தில் நடுநிலை.

1. அரசன் கடமை

ஸ்ரீ மஹா ஸ்வாமிகளிடம் ஒரு நாள் ஒரு ஸர்க்கார் உத்யோகஸ்தர் வந்து பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னதாவது:—

உ:—அநேகம் பேர்கள் இப்பொழுது காலம் மிகவும் கெட்டிருப்பதாகவும் அதினால் கிரமப்படி தர்மானுஷ்டானம் செய்ய முடியவில்லையென்றும் குறை சொல்லிக் கொள்வதைக் கேட்டிருக்கிறேன். வாஸ்தவத்தில் பிரிட்டிஷ் ஆளுகையிலுள்ள இந்தக் காலம் தர்மானுஷ்டானத்திற்கு மிகவும் அநுகூலமென்றே என் சொந்த அபிப்பிராயம். நாம் அனுஷ்டிக்கவில்லையானால், குற்றம் நம்முடையதே. நடுநிலை வகித்துக்கொண்டிருக்கிற ஸர்க்காரின் பேரில் பழியைச் சுமத்த எவ்வித நியாயமும் இல்லை.

ம:—நடுநிலை என்றால் என்ன?

உ:—நம் மதக் கொள்கைகளிலாவது ஆசாரங்களிலாவது தாங்கள் ஒரு விதத்திலும் தலையிடுகிறதில்லையென்று பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் வாக்குறுதி கொடுத்து அதைப் பரிபாலித்தும், வருகிறார்கள். இதற்கு முன்னிருந்த மகமதியர் ஆளுகையில், மதத்தையும் உயிரையும் காப்பாற்றிக்கொள்ள, ஜனங்கள் வீடு வாசல்களை விட்டு ஓடும்படி குரூரமாக ஹிம்ஸை செய்ததற்கு, இப்பொழுதுள்ள நிலை எவ்வளவோ சிலாக்கியமல்லவா?

ம:—நவீனப் பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுக்கப்படும் பாடப் புஸ்தகங்களிலிருந்து நீங்கள் ஸாராம்சம் கிரஹித்திருப்ப [illegible] வாஸ்தவ அம்சங்களும் சிலது இருக்கலாம்; இருந்தாலும், அநேகமாய் ராஜகீய நோக்கத்தை முன்னிட்டே அப்புஸ்தகங்கள் எழுதப்படுகின்றன. இப்பொழுதுள்ள பிரிட்டிஷ் ஆளுகையில் விசேஷ அநுகூலங்கள் இருப்பதாக மனதில் படவேண்டியதைக் கருதும்போது, இதற்கு விபரீதமாக முன் ராஜாங்கத்தார்கள் இருந்தார்கள் என்று கண்டிக்க அவசியம் ஏற்படுகிறது. நீங்கள் சொன்ன விஷயம் வாஸ்தவமோ, வாஸ்தவமில்லையோ, எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். வாஸ்தவமென்றே வைத்துக்கொண்டாலும், அதினால் என்ன ஏற்படுகிறது?

உ:—வாஸ்தவமாயிருந்தால், மதவிஷயத்தில் நடுநிலை வகித்து அனுமதிக்கிற தற்காலத்திய ஸர்க்கார் முன்னிருந்த மகமதிய அரசாங்கத்தாரைவிட எவ்வளவோ மடங்கு சிலாக்கியமென்று ஏற்படுமல்லவா?

ம:—அப்படியிருக்கவேண்டுமென்று அவசியமில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு. நம் தேசத்தை மகமதியர்கள் ஆக்கிரமித்தவுடன் தங்கள் அரசாக்ஷியை நிலை நிறுத்தினார்கள் என்பது வாஸ்தவம். ஆனால் கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு தங்கள் ஸ்வதேசத்திற்குப் போய்விட வேண்டுமென்று நினைக்காமல், இங்கேயே குடியேறிவிட்டார்கள்; இதையே தங்கள் தேசமாக்கிக் கொண்டார்கள்; தங்களுக்கு வேறு தேசம் ஒன்றிருந்த தென்பதையே அதிசீக்கிரம் மறந்தார்கள்; இங்கேயே தங்கிவிட்டபடியால் பிராசினக் குடிகளின் யோகக்ஷேமமே அவர்களுக்கும் யோகக்ஷேமமாகிவிட்டது; ஜனங்கள் செழிப்பாய்க் கவலையற்றிருந்தால், நாமும் செழிப்பாய் கவலையற்றிருக்கலாமென்று உணர்ந்தார்கள்; ரஸ்தாக்கள் போட ஆரம்பித்தார்கள்; பாலங்கள் கட்டினார்கள்; சாகுபடிக்கு வேண்டிய ஏராளமான ஸௌகர்யங்களைச் செய்து கொடுத்தார்கள்; இவ்விதமாக ஜனங்களின் நன்மையைக் கருதி பல காரியங்களைச் செய்தார்கள். ஜனங்கள் அமைதியாயும் திருப்தியாயும் இருக்க வேண்டி வேறு பலப் பிரயத்தனங்களையும் செய்தார்கள். ஜனங்கள் அமைதியாயும் திருப்தியாயும் இருந்தால் தான் தங்களுக்கும் க்ஷேமம் என்று நன்கு அறிந்தார்கள்.

உ:-அப்படித்தான் இருந்திருக்கவேண்டும்.

ம:—பொதுக் காரியங்களுக்காகவாவது அரசர்களின் சொந்தத்திற்காவது பணம் தேவையிருந்தால் வரி விதித்து வசூலித்துக் கொண்டார்கள். ஆனால் ஜனங்களுடைய மனோபாவம் கோணாமலிருக்கும்படி ஜாக்கிரதையாயிருந்தார்கள். மேலும், இங்கு வசூலிக்கப்படும் பணத்தை அன்னிய தேசத்திற்கு அனுப்பவில்லை. பணத்திற்கோ, செலவில்லாமலிருந்தால் பிரயோஜனமில்லை. ஆகையால் அதை இந்தத் தேசத்திலேயே செலவழிக்கும்படி ஏற்பட்டது. கூலி, சம்பளம் முதலிய ரூபமாக அப்பணம் மறுபடியும் ஜனங்களிடமே திரும்பிவந்தது. நம் தேசத்திய பணம் வற்றடிக்கப்படவில்லை.

உ:—அதற்கு இடமில்லைதான்.

ம:—இப்பொழுது தற்கால நிலைமையைக் கவனியுங்கள். இப்பொழுதுள்ள அரசாங்கத்தாருக்கு இத் தேசத்தைத் தன் தேசமாக்கிக் கொள்ள எக்காலத்திலும் உத்தேசம் இருந்திருப்பதில்லை. உத்தேசமிருந்தாலும், இத்தேசத்தில் இருந்துவரும் கோடிக் கணக்கான ஜனங்களின் மத்தியில் அது ஸாத்தியமும் ஆகாது. ஆகையால் தன் தேசத்திற்கு அனுப்பவேண்டிய பணத்தை வசூலிப்பதற்கு மிகவும் அனுகூலமான ஸ்தலம் இத்தேசம் என்றே பாவித்து வருகிறார்கள். சில வேலைகளில் நல்ல ரஸ்தாக்களும் சாகுபடி ஸௌகர்யங்களும் ஜனங்களுக்குச் செய்துகொடுக்க வேண்டுமென்று அவர்கள் நினைக்கும்போது கூட, தங்கள் நலத்தை மறக்கிறதில்லை. தங்கள் தேசத்திலிருந்து ஸாமான்களை வரவழைத்து இங்கிருந்து பணம் அனுப்ப, இதுவும் ஓர் அனுகூலம் என்று உபயோகித்துக்கொள்கிறார்கள். இங்கு செய்து கொடுக்கும் வேலைகளை சாசுவதமாய் இருக்கக்கூடியதாக செய்துவிட்டால் ஸரியாகாது; அடிக்கடி பழுது பார்க்கும்படியாயும், அடிக்கடி இடித்துக் கட்டும்படியாயும் இருந்தால்தான் ஸாமான்கள் வியாபாரம் செய்ய ஸௌகர்யமாயிருக்கும். இவ்விதமாக இந்தத் தேசத்திற்கு நஷ்டமும் தங்கள் தேசத்திற்கு லாபமும் என்றே கருதி வந்திருக்கிறார்கள்.

உ:-வாஸ்தவம். நம்தேசத்திற்கு இங்கிலீஷ்கார் வந்தது பரோபகாரசிந்தனையின்பேரிலா?

ம:—ஜனங்களுடைய லௌகிக க்ஷேமத்தில் இப்படி. ஆத்யாத்மிக க்ஷேமத்தைக் கவனிப்போம். மகமதியர்களுக்கு தங்கள் மதத்தில் விசேஷ பற்றுதல் இருந்தது. ஈசுவரன் உண்டென்று த்ருடமாய் நம்பினவர்கள். ஜாதி, தேசம் வித்யாஸமன்னியில் ஜகத்திலுள்ள எல்லா மனிதர்களுக்கும் ஈசுவரன் பொதுவானவன் என்று நம்பினார்கள். "தங்களை ஸ்ருஷ்டித்த ஈசுவரனை அடையப் பிரயத்தனம் செய்யவேண்டியது எல்லாருடையவும் கடமையே. நாங்கள் த்ருடமாய் நம்பியிருக்கிற எங்கள் நபி அவ்வீசுவரனைத் தேடியடைய வழி இன்னதென்று உபதேசித்திருக்கிறார். இந்தத் தேசத்திலுள்ள ஜனங்களுடைய யோகக்ஷேமத்தை அவ்வீசுவரனே எங்களிடம் ஒப்புவித்திருக்கிறார். அதில் அவருக்கு ஓர் உத்தேசமிருக்கவேண்டும். அவரையடைய வேண்டிய ஸரியான மார்க்கத்தை நாங்கள் அவர்களுக்குக் கற்பிக்கவேண்டுமென்பதுதான் அவ்வுத்தேசமாயிருக்கும். ஓர் அரசன் தன் பிரஜைகளுடைய லௌகிக க்ஷேமத்தை மாத்திரம் கவனித்தால் போதாது; ஆத்யாத்மிக சிரேயஸ்ஸையும் கவனிக்கக் கடமைப் பட்டவன். ஒன்றைக் கவனித்து மற்றொன்றைக் கவனிக்காமலிருந்துவிட்டால், தன் கடமையிலிருந்து நழுவினவனே யாவான். ஆகையால், இந்த ஜனங்களை ஸாத்யமானால் ஸமாதான முறையிலும், அவசியமானால் நிர்ப்பந்தம் செய்தும், நம் மதத்தில் சேர்த்துக் கொள்வது நம் கடமையை நிறைவேற்றுவதாகும்" என்று இம்மாதிரியாக மனப்பூர்வமாய் த்ருடமான விசுவாஸத்துடன் அவர்கள் ஆலோசித்தார்கள். ஜனங்களை மகமதியாக ஆக்க ஆரம்பித்தார்கள். இம்மனோபாவத்தில் என்ன தவறு?

உ:இவ்விதமாய்க் கவனித்தால் இல்லைதான்

ம:—இப்பொழுதுள்ள அரசாங்கத்தார் 'எங்களுக்கு வரிதான் குறி" லௌகிகத்திலும் ஜனங்களின் நன்மையைவிட எங்கள் நலமே முக்கியமானது. மதவிஷயத்தில் நாங்கள் நடுநிலையிலிருக்கிறோம். அதாவது ஜனங்கள் எப்படிப்போனாலும் எங்களுக்குக்கொஞ்சங்கூட அக்கரையில்லை. அவர்கள் ஸ்வர்க்கத்திற்குப் போனால் என்ன, நரகத்திற்குப்போனால் என்ன? வரியை சரியாய்ச் செலுத்தவேண்டும்; செலுத்தாத போனால், வசூலிக்க எங்களுக்கு சக்தியிருக்கிறது; இது ஒன்று தான் எங்களுக்கு குறி" என்று சொல்கிறார்களல்லவா?

உ.—தாக்ஷிண்யம் இல்லாமல் சொல்கிற பக்ஷத்தில், அப்படித்தான் ஆகிறது. ஆனால் மதவிஷயத்தில் தாங்கள் உதாஸீனமாயிருப்பதாக ஸர்க்கார் ஒப்புக்கொள்கிறதில்லை. எல்லா மதங்களையும் அனுமதிப்பதாகநினைக்கிறார்கள்.

ம:—இந்த அனுமதிக்கும், உதாஸீனத் தன்மைக்கும் அதிக வித்யாஸம் இல்லை. அனுமதியாயிருக்கட்டும், உதாஸீனத்தன்மையாயிருக்கட்டும், பெயர் எப்படியிருந்தாலும், மதவிஷயத்தில் கொஞ்சமேனும் அக்கரை இல்லை என்றுதான் ஆகிறது. ஈசுவரனிடம் கொஞ்சமேனும் நம்பிக்கையிருந்து அவனை அடையவேண்டியது அவசியமென்று நினைத்தால் இம்மனோபாவம் உசிதமாகுமா?

அத்யாத்மயோகம் அல்லது ஆத்மப்பயிற்சி.

குகதாஸ் இயற்றியது. திவான்பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளது முகவுரையுடன் கூடியது. எளிய தமிழ் நடையில் உள்ளது முற்றிலும் அநுபவங்கள் நிறைந்தது. பற்பல ஆதாரங்களுடன் கூடியது. பகவத் விஷயத்தில் ஈடுபட்டுள்ள ஸகோதர-ஸகோதரிகளுக்கு அத்தியாவசியம் உள்ளது. எல்லா மதத்தினர்களுக்கும், கொள்கையினருக்கும் ஓர் துணையாயிருப்பது. காமகோடி ஸ்ரீ ஜகத்குரு, ஸ்ரீ ரமணரிஷி, ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதி முதலிய மஹான்களது அனுக்கிரஹம் அடைந்தது. ஹிந்து, சுதேசமித்திரன், ராமகிருஷ்ண விஜயம், ஆர்யதர்மம், முதலிய பல பத்திரிகைகளாலும், ஸ்ரீமான் A. S. P. அய்யர் I. C. S அட்வகேட் திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர் முதலிய பல வித்தியா நிபுணர்களாலும் போற்றப்பட்டுள்ளது. 15 அத்தியாயங்கள் உள்ளது. 308 பக்கங்கள் கொண்டது. ஐந்து மகான்களினது படங்கள் ஆர்ட்டு பேபரில் உள்ளது.

விலை காலிகோ ரூ. 3—0—0 ராப்பர் ரூ. 2—8—0 தபால்சார்ஜ் தனி.

கிடைக்குமிடம்:— "ஆர்யதர்மம்" ஆபீஸ், கும்பகோணம்.

முத்துலக்ஷ்மி ரெட்டிக்கு சாட்டை.

டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி அம்மாள், தேவாலயங்களில் தேவதாசிகள் பொட்டுக் கட்டுதல் முதலியவைகளை எதிர்த்துச் சட்டம் செய்ய முயன்று வருவதைப் பலரும் அறிந்ததே. இந்தக் கிளர்ச்சியை அவர் நடத்துகையில் தேவதாசி வகுப்பினரைக் கேவலமாகத் தாக்கிப் பத்திரிகைகளில் எழுதிவருகிறார். தேவதாசி வகுப்பினர் இப்போது ஓர் ஸங்கம் அமைத்துக்கொண்டு முத்துலக்ஷ்மியின் உண்மையற்ற பிரசாரத்தையும், ஆதாரமற்ற அவதூறுகளையும் மறுக்கமுன் வந்திருக்கிறார்கள். ஸமீபத்தில் முத்துலக்ஷ்மி ரெட்டி மிகக் கேவலமாக தேவதாசி வகுப்பைத் தாக்கி எழுதியிருந்ததற்கு அவ்வகுப்புச் சங்கத்தலைவி பத்திரிகைகளில் ஓர் தக்க பதில் அளித்திருக்கிறார்.

இத்தச்சண்டையில் நமக்கு சிரத்தையில்லையாயினும் இதிலிருந்து வெளிப்படும் உண்மைகள் பொதுவாக யாவருக்கும் உபயோகப் படக்கூடியவைகளே. பொட்டுக்கட்டுவதால் ஸன்மார்க்கம் அழிந்து விடு மென்று முத்துலக்ஷ்மி சாதிப்பதை தேவதாசி ஸங்கத்தலைவி பலமாக மறுக்கிறார். உலகில் எந்த ஸ்தாபனத்திலும் சிலர் ஸன்மார்க்கம் கெட்டவர்கள் இருப்பது இயற்கை. ஆங்கிலம் கற்ற ஸ்திரீகள் யாவரும் நல்லநடத்தையுடனிருக்கிறார்களாவென்று அவர் முத்துலெக்ஷ்மியைக் கேட்கிறார். மிஸஸ் சுப்பராயன் கொண்டுவந்துள்ள பலதாரத்தடுப்பு மசோதாவின் முகவுரையில் ஆங்கிலம் கற்ற ஸ்திரீகளின் ஸன்மார்க்கம் குறைந்து வருவதாகக் குறிப்பிட்டிருப்பதை அவர் தமது வாதத்திற்கு ஆதாரமாகக்காட்டுகிறார். மேலும் மேற்றிசைகளில் கிறிஸ்தவ கன்யா மடங்களையும், பௌத்த தன்யர் மடங்களையும் அவர் உதாரணமாகக்காட்டியிருக்கிறார். அந்த மடங்களெல்லாம் புனித ஸ்தாபனங்களாயும், அங்கு இருக்கும் பிரம்மசாரிணி ஸ்திரீகள் ஸன்மார்க்கத்திலிருந்து தவறாமல் இருப்பதும் ஸாத்யமானால் ஹிந்து தேவாலய ஊழியர்களான தேவதாசிகளும் ஏன் அப்படியிருக்கக் கூடாது.

மேலும் மேற்றிசை கன்யா மடங்கள் சிலவற்றிலும் ஸன்மார்க்கக்குறைவு இருப்பதாக அபவாதம் வெளிவந்திருக்கிற தென்றும், அதற்காக அவைகளை மூடிவிட வில்லையென்றும் அவர் வாதிக்கிறார். தேவாலயங்களில் தேவதாஸிகள் பகவானுக்குப் புனிதமான ஊழியம்செய்யக் கடமை பெற்றிருப்பதாயும் இதை இழிவாகப் பேசமுடியாதென்றும் அவர் எடுத்துக்காட்டியிருக்கிறார். இதில் உண்மை நிரம்பியிருக்கிறது. சைவ, வைஷ்ணவ ஆகமங்களில்,பகவானுக்கு நித்ய நைமித்திகாதிபூஜைகள், உபசாரங்கள் நடத்தும் போது தேவதாஸிகள் இன்னின்ன ராகம் பாடவேண்டுமென்றும், இன்னின்ன ந்ருத்தம் செய்யவேண்டுமென்றும், அததன் பெயரைக் குறிப்பிட்டு விதிக்கப்பட்டுள்ளது. பூஜை காலத்தில், நர்த்தனமும், ராகமும் இல்லாவிட்டால் ஆகமங்களில் பிராயச்சித்தமும் விதிக்கப்பட்டுள்ளது. இந்த வழியில் பார்த்தால் தேவதாசிகளின் ஊழியமானது மத ஸம்பந்தப்பட்ட ஓர் புனிதமான கடமையென்பது தெளிவாகும். இதை எடுத்துக் காட்டி முத்துலக்ஷ்மி அம்மாளுக்கு தேவதாசி வகுப்பினர் சாட்டை கொடுத்திருப்பது நியாயமானது. இந்த மாதிரியே ஒவ்வொரு வகுப்பாரும் விழித்துக்கொண்டு, தற்காலச் சீர்திருத்த வாதிகளை எதிர்த்து அடக்கமுற்பட்டால் தேசத்தில் அவ்யஸ்தை ஏற்படாமல் தடுக்கலாம்.

புராணக்கதைகள்

ஸ்வர்ணஷ்டீவி சரித்திரம்.

(ராமசந்த்ர ஹரி:)

நாரதரும் அவரது மருமகனான பர்வதரும் மழைக்காலத்தில் ஸ்ருஞ்சயன் என்ற அரசனிடம் சென்று அவனால் விதிப்படி உபசரிக்கப்பட்டு இஷ்டப்போல் வசித்துவந்தார்கள். மழைக்காலஞ் சென்றவுடன் வெளிக்கிளம்ப வேண்டிய சமயத்தில், பர்வதர் 'நாம்' இவ்வளவு நாள் இவ்வரசனால் நன்றாய்ப் பூஜிக்கப் பெற்றோமாகையால் இவனது க்ஷேமத்தைக் கருதி யாதேனும் செய்யவேண்டும், என்று நாரதரிடம் தெரிவித்தார். அப்போது நாரதர் "நம்மிருவரது தவத்தாலும் இவனது எண்ணம் நிறைவேறும்படி இவனுக்கு வேண்டிய வரத்தை நீயே கொடு" என்றார். பர்வதர் அரசனை நோக்கி தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் கேடுவாராதபடி உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றார். அதற்கவ்வரசன் 'நீங்கள் சந்தோஷமுள்ளவர்களாயிருப்பதே எனக்குத் தவபலனைக் கொடுக்கும் பெரிய லாபம்' என்றான்.

இப்படிச் சொன்ன அரசனை நோக்கி பர்வதர் 'நீ இந்திரனுக்கொப்பானவனும் பராக்ரமசாலியும் சிரஞ்சீவியுமான புத்திரனை விரும்புகிறாய். உன் விருப்பம் நிறைவேறும். ஆனால் இந்திரனை அவமதிக்கவேண்டுமென்பது உன் எண்ணமாதலின் அப்புத்திரன் சிரஞ்சீவியாயிருக்கமாட்டான். அவன் ஸுவர்ணத்தைக் கக்குவானாகையால் ஸுவர்ணஷ்டீவி என்றும் சொல்லப்படுவான். அவனை தேவேந்திரனிடமிருந்து காக்கவேண்டும்' என்று சொன்னார். அப்பொழுது ஸ்ருஞ்சயன் 'உங்கள் கவலையால் என் புத்திரன் சிரஞ்சீவியாயிருக்கவேண்டும்' என்ற அனுக்ரஹத்தை வேண்டினான். இந்திரனையுத்தேசித்து பர்வதர் அவனுக்கு யாதொரு மறுமொழியும் கூறாதிருந்தார்.

வருத்தத்துடனிருக்கும் அவ்வரசனைப்பார்த்து நாரதர் அவனைத் தேற்றி நீ அந்த ஸமயம் என்னை நினை யமன் வசம்போனாலும் உன் புத்திரனை நான் உனக்குத் திருப்பக் கொடுக்கிறேன். நீ வருந்தாதே என்றார். பிறகு இருவரும் இஷ்டப்போல் சென்றார்கள். பின்பு இருடிகள் அனுக்ரஹித்தபடி ஸ்ருஞ்சயனுக்கு ஓர் புத்திரனுண்டானான். அவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து ஸ்வர்ணத்தைக் கக்குவதால் ஸ்வர்ணஷ்டீவி என்ற பெயரை அடைந்தான். அது இவ்வுலகத்தில் பெரிய ஆச்சரியமாயிருந்தது. இவ்விஷயங்களையெல்லாம் அறிந்த தேவேந்திரன் தனது குருவின் அபிப்பிராயப்படி எப்போதும் அப்புத்திரனது ஆபத்திற்கிடம் தேடிக்கொண்டேயிருந்தான். ஒரு ஸமயம் தனது திவ்யாஸ்த்ரமாகிய வஜ்ரத்தை நோக்கி ஸ்ருஞ்சயபுத்திரன் என்னை அவமதிக்கும்போது நீ புலிவேஷம்கொண்டு அவனைக் கொல்லவேண்டும் என்று கட்டளையிட்டான். இந்திரனது கட்டளைப்படி வஜ்ரம் ஸமயம் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது ஒருக்கால் கங்கைக் கரையில் ஒருவருமில்லாத ஒரு வனத்தில் விளையாடுவதற்காக அச்சிறுவன் தாதியுடன் சென்றான். அப்போது ஐந்துவயதுள்ள அப்பாலகன் ஒரு புலியாலடிக்கப்பட்டு விழுந்தான். தாதி கூச்சலிட்டாள். மாயப் புலி மறைந்துவிட்டது. தாதியின் கூச்சலைக் கேட்டு அரசன் ஓடிவந்து உதிரமுறிஞ்சப்பட்டு உயிரிழந்து கிடக்கும் குழந்தையைக் கண்டு அவனை மடியிற்போட்டுக்கொண்டு கதறினான். தாய்மார்களும் அழுதார்கள். அப்போது ஸ்ருஞ்சயன் நாரதரை நினைத்தான். நாரதர் அவனுக்கெதிரில் தெரிசனமளித்து இறந்துபோன பதினாறு அரசர்களின் கதைகளை சொல்லி அவனைத்தேற்றி அப்பிள்ளையையும்பிழைக்கச்செய்தார். பிறகு ஸ்வர்ணஷ்டீவியானவன் மிகப் புகழடைந்து தாய் தந்தைகளையும் ஸந்தோஷிப்பித்தான். தகப்பன் ஸ்வர்க்கம் சென்ற பிறகு ஸ்வர்ணஷ்டீவி ஆயிரத்து நூறுவருஷம் அரசாக்ஷி செய்தான். அக்காலத்தில் பெரிய யாகங்கள் செய்து தேவர்கள் பித்ருக்களை திருப்தி செய்தான். வம்சவிருத்திக்காக பல புத்திரர்களை உண்டுபண்ணி வெகுகாலஞ் சென்றபின் பரலோகமடைந்தான்.

பழூர்

கீர்வாணவாணீ பரிஷத்.

இவ்வருஷம் ஐப்பசிமீ 21உ ஞாயிற்றுக் கிழமை மாலை 4மணிக்கு வேதாந்தபாடசாலை வித்யார்த்திகளாலும் ஷை பாடசாலை அத்யாபகர் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்த்ரிகள் வேதபாடசாலை அத்யாபகர் பிரம்மஸ்ரீ காசி கனபாடிகள் முதலியவர்களாலும் "கீர்வாணவாணீ ப்ரிஷத்" என்ற பெயருடன் ஒரு சபை ஆரம்பிக்கப்பட்டது. இச்சபை ஒவ்வொரு பக்ஷத்திலும் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. இச்சபையின் நோக்கம் ஸம்ஸ்கிருத பாஷையை அபிவிருத்தி செய்வதும், தர்ம சாஸ்த்ரங்களின் முக்யமான தத்துவங்களை எல்லோருக்கும் அறிவிப்பதும் ஆகும்.

இச்சபைக்கு P. R. நாகேச்வர சாஸ்திரிகள் காரியதரிசியாகவும், வேதாந்த பாடசாலை அத்யாபகர் பிரம்மஸ்ரீ S. V. சுப்பிரமணிய சாஸ்த்ரிகள் நிரந்தர தலைவராகவும் தேர்தெடுக்கப்பட்டார்கள். வேதபாடசாலை வித்யார்த்தி கோபாலகிருஷ்ணனால் [illegible] மங்களாசரணம் செய்யப்பட்டது. பிறகு ஸபையின் தலைவர் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்த்ரிகள் ஸபையின் நோக்கத்தையும், ஸம்ஸ்கிருத பாஷையின் மேன்மையையும் அதைக்கற்றுக்கொள்ள வேண்டிய ஆவச்யகதையும் குறித்து ஸம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் விஸ்தாரமாகவும் அழகாகவும் எடுத்துரைத்தார்கள். பிறகு வேதபாடசாலை அத்யாபகர் பிரம்மஸ்ரீ காசி கனபாடிகள் வேத மகிமை என்ற விஷயத்தை அநேக கோட்பாடுகளுடன் விஸ்தாரமாக எடுத்துரைத்தார். இச்சபைக்கு உள்ளூரிலிருந்தும் பக்கத்தூர்களிலிருந்தும் அநேக பிரமுகர்கள் வந்திருந்தார்கள். வந்திருந்த பிரமுகர்கள் இச்சபையின் அபிவிருத்தியில் உத்ஸாகமுள்ளவர்களாக இருக்கிறார்கள். கடைசியில் காரியதரிசியால் இச்சபையின் போஷகரான ரிடையர்டு டிப்டி கலெக்டர் பி. ராமச்சந்த்ர அய்யர் அவர்களுக்கும், தலைவருக்கும், வந்திருந்த பிரமுகர்களுக்கும் வந்தனம் தெரிவிக்கப்பட்டது. பிறகு ஸபை கலைந்தது.

K. N. நடேச சர்மா.

K. S. Ramasami Sastrigal, B.A., B.L.

		Rs.	A.	P.
1.	Kalidasa's Heroes	0	6	0
2.	The science of the soul	1	8	0
3.	Manu, the friend of Man	0	8	3
4.	Sandilya Bakthi Sutras	0	4	0
5.	The Gospel of Gita	0	3	0
6.	The future of Brahmin	0	2	0
7.	The Gita ideal of devotion	0	4	0
8.	நாரத பக்தி ஸூத்ரம்	0	2	0

Copies can be had of:—
The Sri Janardana Printing Works, Ltd.
Town High School Road, Kumbakoaum

637

இராமாயணத்தில் யோகசாஸ்திர நிருபணம்

அத்யாயம் 2.

ஸ்ரீ சங்கராசாரியார் ஆத்மபோதமென்னும் கிரந்தத்தில் அடியில்கண்ட சுலோகத்தில் இராமர் இன்னதென்று தத்வார்த்தம் சொல்லி யிருக்கிறார்.

"தீர்த்வா மோஹாடவிம் ஹத்வா ராகத்வேஷாம்ச ராக்ஷஸான், சாந்திஸீதா ஸமாயுக்த:, ஆத்மா, ராமோ விராஜதே" இதில் இராமரை எல்லா சரீரங்களிலும் அந்தர்யாமியாக இருக்கும் ஆத்மாவென்றும் ஸீதையை, சாந்தி என்றும் இராக்ஷஸர்களை சரீரத்திலுள்ள இராகத்வேஷாதிகள் என்றும், இராமர் சென்ற தண்டகாரண்யத்தை மோஹமென்றும் சொல்லி இருப்பதால் இராமாயணத்தில் கண்டவர்களை எல்லாம் சரீரத்திலிருக்கும் தத்வங்களாக அருத்தம் செய்ய இடம் கொடுக்கிறது.

ஸ்ரீ வேதாந்ததேசிகர் அவர்களும் ஸங்கல்ப ஸூர்யோதயம் என்னும் கிரந்தத்தில் இராமாயணத்தை வேறுவிதமாய் அருத்தம் செய்ய அடியில்கண்ட சுலோகம் செய்திருக்கிறார்.

"தர்போதக்ர தசேந்த்ரியானனமனோ
நக்தம் சாநிஷ்டித்தே
தேஹேஸ்மின் பவஸிந்துனாபரிகதே
தீனம் தசாம் ஆஸ்தித:
அத்யத்வே ஹனுமத் ஸமேனகுருணா
ப்ரக்யாபிதார்தஹ புமான்
லங்காருத்த விதேஹராஜதனயா
ந்யாயேன லாலப்யதே"

இதில் இராவணனை பத்து இந்திரியங்களாயும் ஸீதையை ஜீவனாயும் ஹனுமானை அவனுடைய குருவாயும் அவர் ஸீதைக்கு அவளை இந்திரியங்களுக்கு வச்யமாகாதபடி தைர்யம் சொன்னதாக சொல்லி இருப்பதால் இராமாயணத்தை வேறுவிதமாய் அருத்தம்செய்ய இடம் கொடுக்கிறது.

இராமாயணத்தில் பாலகாண்டம் நாலாவது ஸர்கம் 30-வது சுலோகத்தில் "விசித்ரார்த்தபதம், ஸம்யக்" என்று அநேக அர்த்தங்கள் உள்ள பதங்களை உபயோகத்திருப்பதாக சொல்லி இருக்கிறார் மேலும் வால்மீகி அடியில்கண்ட சுலோகத்தில் தான்யோக நிஷ்டையிலிருந்து இராமாயண சரித்திரத்தின் விவரங்களை தெரிந்துகொண்டார் என்று சொல்லி இருக்கிறார்.

தத: புச்யதி தர்மாத்மா
தத்ஸர்வம் யோகமாஸ்தித:"

இதினால் யோகநிஷ்டை செய்யும்போது சரீரத்தில் நடக்கும் மாறுதல்களுக்கும் இராமாயண சரித்திரத்திற்கும் ஸம்பந்தமிருப்பதாக அருத்தம் செய்ய இடம் கொடுக்கிறது. மேலும் வால்மீகியானவர் உத்திரகாண்டத்தில்தான் செய்த இராமாயணத்தை ஸீதையின் பிள்ளைகளாகிற குசன், லவன் இவர்கள் பாடினார்கள் என்று சொல்லி இருக்கிறார். குசனை யோக சாஸ்திரத்தின் முதல் இரண்டு பாதங்களாயும் லவனை மூன்று நான்கு பாதங்களாயும் கீழே விச்வாமித்திரர் இராமரை கூட்டிப்போன கட்டடத்தல் தகுந்த காரணங்களுடன் சொல்லி இருப்பதால் இராமாயணம யோக சாஸ்திர நிருபணம் என்று அருத்தம் செய்ய இடம் கொடுக்கிறது. மேலும் இராமாயணத்தில் முதல் காண்டத்தில் முதல் வார்த்தையையும் உத்திரகாண்டத்தில் கடைசி வார்த்தையும் சேர்த்து பார்த்தால் "தப:ப்ரவர்த்ததாம்' என்று வருகிறது. இதை இராமர் செய்த தபஸ் விருத்தி அடையட்டுமென்று இராமாயணம் வால்மீகி எழுதி இருப்பதாக அருத்தம்செய்ய இடம் கொடுப்பதால் இராமாயணம் யோக சாஸ்திர நிருபணமென்று அருத்தம்செய்யலாமென்று தெரிகிறது. கீதையின் 3 வது அத்யாயம் 37வது சுலோகத்தில் யோக நிஷ்டை செய்யுமுன் காமத்தைப்போக்கவேணுமென்று சொல்லியிருப்பதால் வால்மீகி செய்த முதல் சுலோகம் "மானிஷாத ப்ரதிஷ்டாம் த்வம் அகம: சாச்வதீ ஸமா: யத் க்ரௌஞ்சமிதுனாத் ஏகமவதீ: காமமோஹிதம்" என்பதை தான் நிஷ்டைக்கு முன் காமத்தைப்போக்கினர் என்று அருத்தம் செய்யலாம். தசரதர்செய்த அச்வமேதயாகத்தையும் புத்திரகாம இஷ்டியையும் அடியில் அருத்தம்செய்திருக்கிறது.

தசரதர் செய்த அச்வமேத யாகமும் புத்திர காம இஷ்டியும்.

இராமர் பிறக்குமுன் தசரத சக்கரவர்த்தியானவர் தனக்கு வெகுநாளாய் புத்திரனில்லை என்று அச்வமேத மென்ற யாகத்தையும் புத்திரகாம இஷ்டி என்ற யாகத்தையும் செய்தார். அவை இரண்டும் யோகநிஷ்டையின் அங்கமாக அருத்தம் செய்ய இடம் கொடுக்கிறது. அவைகள் இரண்டையும் நிறைவேற்ற இருஷ்யச்ருங்கர் என்ற ஒரு ரிஷியையும் அவர் பத்தினியான சாந்தையையும் வரவழைக்கவேண்டுமென்று மந்திரியான ஸுமந்திரர் தான் ஸநத்குமார் சொல்லிக் கேட்டிருப்பதாக சொன்னதின்பேரில் அவர்களை தசரதர் அங்கதேசத்திற்குப் போய் ரோமபாத இராஜாவிடம் ஸம்மதம் கேட்டு அவர் சம்மதத்தின்பேரில் அவருடைய பெண்ணாகிற சாந்தையையும் அவள் புருஷனான இருஷ்யச்ருங்கரையும் கூட்டிவந்ததாக சொல்லி இருக்கிறது.

இந்த இரண்டு யாகங்களும் செய்த விவரம் சொல்லுமுன் இருஷ்யச்ருங்கரைப்பற்றி ஒரு கதை சொல்லப்பட்டிருக்கிறது. அவர் விபண்டகர் என்ற இருஷியின் புத்திரனென்றும் அவர் இந்திரிய நிக்ரகம் செய்தவர் என்றும், அப்போது அங்கதேசத்தில் சில வருஷங்களாய் மழையே பெய்யாமலிருந்ததாயும் அந்த தேசத்து ராஜாவான ரோமபாதர் தன் தேசத்திற்கு இருஷ்யச்ருங்கரை வரவழைத்தால் மழைபெய்யுமென்று கேழ்விப்பட்டு அவரை வரவழைத்ததாயும் அவர் வந்த உடனே ஏராளமாக மழைபெய்ததாயும் அதின்பேரில் ரோமபாதர் தன் பெண்ணாகிற சாந்தை என்பவளை அந்த இருஷ்யச்ருங்கருக்கு கல்யாணம் செய்து கொடுத்ததாயும் சொல்லியிருக்கிறது. இந்த சரித்திரம் யோக சாஸ்திர நிருபணமென்று அருத்தம் செய்ய இடம் கொடுக்கிறது. யோக சூடாமணி உபநிஷத்தில் 105-வது சுலோகத்தில் பிராணாயாமத்தின் பாகமாகிற கும்பகம் செய்யும்போது சரீரத்தில் ஜாஸ்தியான வேர்வையும் நடுக்கமும் உண்டாவதாக சொல்லப்பட்டிருக்கிறது. கீதையின் முதலாவது அத்யாயம் 29-வது சுலோகத்தில் அர்ஜுனன் தன் சரீரத்தில் நடுக்கமும் ரோமஹர்ஷம் என்ற மயிர் கூச்சமும் உண்டானதாக சொல்லி இருக்கிறான். அவனுடைய சரித்திரமும் ஒரு யோகியின் சரித்திரமென்று இதின் 6-வது காண்டத்தில் சொல்லி இருக்கிறேன். ஆகையால் யோக நிஷ்டை செய்யும்போது யோகியின் சரீரத்தில் வேர்வையும், நடுக்கமும், ரோமஹர்ஷமும் உண்டாவது ஸகஜமென்று தெரிகிறது. மேலே சொன்ன இருஷ்யச்ருங்கரின் சரித்திரம் யோகசாஸ்திர நிருபணமென்று அர்த்தம் செய்ய இடம் கொடுக்கிறது. இருஷ்யச்ருங்கரின் தகப்பன் பெயர் விபண்டகர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பண்ட என்பதற்கு "ஹர்ஷ" ஸந்தோஷம் என்று அருத்தமாதலால் விபண்டகர் என்றதற்கு ஹர்ஷம் என்று அருத்தம் செய்யலாம். அவர் பிள்ளையாகிற இருஷ்யச்ருங்கரையும் "ஹர்ஷம்" என்று அருத்தம் செய்யலாம். ரோமபாதர் அங்கதேசத்திற்கு ராஜாவாக சொல்லியிருப்பதாலும் அங்கம் என்பதற்கு சரீரம் என்று பெயர் இருப்பதால் அங்கதேசத்து ராஜாவான ரோமபாதரை சரீரத்திலுள்ள ரோமங்கள் அல்லது மயிர்கள் என்று அருத்தம் செய்யலாம். ஆகையால் ஹர்ஷமாகிற இருஷ்யச்ருங்கர் அங்கதேசமாகிற சரீரத்திலுள்ள "ரோமபாதரை சேர்ந்த உடன் அந்த சரீரத்தில் ஏராளமாய் வேர்வை உண்டாவதால் இருஷ்யச்ருங்கர் ரோமபாதரைப் பார்த்த உடனே ஏராளமாய் மழைபெய்வதாக சொல்லப்பட்டிருப்பதாக அருத்தம் செய்ய இடம் கொடுக்கிறது.

பிறகு சாந்தை என்பவளை இருஷ்யசிருங்கர் கல்யாணம் செய்து கொண்டார் என்பதை இந்திரிய நிக்ரஹம் செய்கிற சரீரத்தில் சாந்தியும் உண்டாகும் என்று கீதையின் இரண்டாவது அத்யாயம் 71 வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறது. "விஹாய காமான் யஸ்ஸர்வான் புமான் சரதி நிஸ்ப்ருஹ: நிர்மமோ நிரஹங்கார: ஸசாந்திமதி கச்சதி" ஆகையால் யோகியின் சரீரத்தில் இந்திரிய நிக்ரஹம் செய்யும்போது உண்டாகிற ரோமஹர்ஷம், வேர்வை, சாந்தி இவைகளை இருஷ்யசிங்கருடைய சரித்திரமாக அருத்தம்செய்ய இடமிருக்கிறது. தசரதர்செய்த அச்வமேத யாகத்தையும் அவர்இந்திரியநிக்ரஹம் செய்ததாகசொல்லலாம். அந்த"அச்வமேத"த்தை" "ஹயமேத" மென்று பாலகாண்டம் 8வது ஸர்கம் 8வது சுலோகத்தில் சொல்லியிருப்பதாலும் உபநிஷத்தில் இந்திரியங்களை "ஹயங்கள் என்று சொல்லியிருப்பதினாலும் தசரதர்செய்த அச்வமேதத்தை இந்திரிய நிக்ரஹமாக சொல்லலாம். இந்த ஹயமேத யாகத்திற்கு இருஷ்யசிங்கரையும் சாந்தையையும் ரோமபாதரையும் அவர் அழைத்து வந்தார் என்றதாலும் இந்திரியநிக்ரஹம் செய்கையில் ரோமஹர்ஷமும்சாந்தியும் உண்டாகுமென்று உபநிஷத்திலும் கீதையிலும் சொல்லியிருப்பதாலும் தசரதர் செய்த அச்வமேதம் இந்திரியநிக்ரஹம் என்று அருத்தம்செய்ய இடமிருக்கிறது.

தசரதர் செய்த புத்திரகாமேஷ்டியும் யோகசாஸ்திரப்படி அருத்தம்செய்யலாம். யோக நிஷ்டையில் இந்திரிய நிக்ரஹம் செய்தால் ஆத்மதர்சனம்உண்டாவதாகவும்'ஆத்மாவை புத்திரநாமாஸி' ஆத்மாவே புத்திரன் என்றும் சொல்லி இருப்பதாலும் தசரதர் செய்த இந்திரியநிக்ரஹத்தின் பலனாக அவர் தன் ஆத்மாவாகிற புத்திரனை தர்சனம் செய்ததாய் அருத்தம் செய்ய இடமுண்டு. அந்த ஆத்மாவே பிறகு இராமனாகப் பிறந்ததாகச் சொல்லலாம்.

தசரதர் புத்திரகாம இஷ்டிசெய்து முடிவான உடன் அந்த இஷ்டி செய்த அக்னிகுண்டத்திலிருந்து ஒரு புருஷனுண்டாகி ஒரு தங்கமயமான பாத்திரத்தில் தேவபாயஸத்தை வைத்துக்கொண்டு தசரதரிடம் கொடுத்து அவருடைய பத்னிகளுக்கு கொடுத்து அவர்கள் சாப்பிடும்படி உத்திரவு செய்து அதை சாப்பிட்ட உடன் அவர்கள் கெர்ப்பம் தரிப்பார்கள்என்று சொல்லிவிட்டு மறுபடி அக்னிகுண்டத்தில் மறைந்துவிட்டார். அந்த பாயஸத்தில் பாதியை கௌஸல்யைக்கும் மீதம் பாதியில் பாதியாகிற ¼ பங்கை ஸுமித்திரைக்கும் மீதி ¼ பங்கில் பாதியாகிற ⅛ பாகத்தை கைகேயிக்கும் மீதம், பாதியாகிற ⅛ பாகத்தை மறுபடி ஸுமித்திரைக்கும் தசரதர் கொடுத்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இராமர் விஷ்ணுவின் பாதி அம்சம் என்றும் இலக்குமணர் ¼ அம்சம் என்றும் சத்துருகனர் ⅛ அம்சம் என்றும் பரதன் ⅛ அம்சம் என்றும் தெரிகிறது.

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க).

21525 8

(9-ம் பக்கத் தொடர்ச்சி).

யோக சாஸ்திரப்படி இவர்கள் சரீரத்திலுள்ள தத்வங்கள் என்று அருத்தம்செய்ய வேறு சரியான காரணங்களிருக்கிறது. அதின்படி இராமர் ஆத்மாவென்றும் இலக்குமணர் புத்தி என்றும் பரதன் ஜீவன் என்றும் சத்ருக்னன் சேதனு என்ற சித்தத்திலுள்ள விருத்திகளை அடக்கும் சக்தி என்றும் அறிய இடமிருக்கிறது. இதை அனுஸரித்து அடியில் கண்ட தொன்றுதொட்டுள்ள சுலோகத்தில் இராமரை ஆத்மாவென்றும் ஸீதையை பிரஹ்மவித்தை என்றும் இலக்குமணரை புத்தி என்றும் ஹனுமாரை மனஸ் என்றும் அருத்தம்செய்திருக்கிறது.

"ஆத்மா ராமோ பிரஹ்மவித்யாச ஸீதா
புத்தி: பிராதா மானஸம் வாயுஸூநு:"

இராமாயணத்தில் சொல்லப்பட்ட இராமர் இலக்குமணர் அநுமார் இவர்களின்செய்கைகளும் யோக சாஸ்திரத்தில் ஆத்மா, புத்தி மனஸ் இவைகளுக்கு ஏற்பட்டதாக சொல்லப்பட்ட செய்கைகளுக்கு ஒத்திருக்கிறது.

யோக சாஸ்திப்படி மனஸானது இந்திரியங்களுடன் சேர்ந்து வெளியே இருக்கும் பதார்த்தங்கள் இன்னதென்று அறிந்து அதை சித்தத்தினிடம் தெரியப்படுத்துகிறது. சித்தத்தில் அந்த விஷயங்கள் அலை ரூபமாக புத்தியினிடம் போய்ச்சேருகிறது. புத்தி அவைகளை அறிந்துகொண்டு தன் பக்கத்திலுள்ள ஆத்மாவிடம் அவைகளை தெரியப்படுத்துகிறது. ஆத்மா அதை அறிந்து அதற்கு தகுந்தபடி உத்திரவு கொடுக்கிறது. அவ்வுத்திரவை புத்தியறிந்துகொண்டு சித்தத்திற்கு அலைரூபமாய் அறிவிக்கிறது, அதை சித்தம் மனசுக்குச்சொல்லி மனஸானது அதை அவயவங்களின் உதவியால் நிறைவேற்றுகிறது. இதனால் மனதானது வாசலில் காத்திருந்து வெளியே நடக்கும் ஸங்கதிகளை உள்ளிருக்கும் எஜமானனிடம் அறிவிக்கிற ஒரு தூதனாகவும், புத்தி எஜமானனுக்கு மந்திரி போலும் ஆத்மா எஜமானன் போலும் ஏற்படுவதால் இராமாயணத்தில் சொல்லப்பட்ட இராமர், இலக்குமணர் அநுமார் இவர்களின் செய்கைகளுக்கு ஒத்திருக்கிறது. இனி இராமர் இலக்குமணர் பரதன், சத்ருக்னர் இவர்கள் சரீரத்திலுள்ள தத்வங்கள் என்று அருத்தம் செய்ய இராமாயணத்தில் என்ன ஆதாரமிருக்கிறதென்றப்ர அடியில் விவரிக்கப்படும். அனுமர், ஸீதை, இராவணமுதலானவர்கள் இன்ன தத்வமென்று அவர்கள் சரித்திரங்கள் வரும்போது விவரிக்கப்படும்.

S. அய்யாத்துரை அய்யர்.

பிரும்மஸ்ரீ அருட்கவி சுப்ரமண்ய அய்யர்,
அவர்கள் எழுதியது.

ஸ்ரீ நகர விமர்சனம்.	0	12	0
ஸ்ரீ குரு விமர்சனம்.	0	5	0
வரிவஸ்யா ரஹஸ்யம்.	1	0	0

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
"ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது. தபால் சிலவு வேறு] [விலை அணா 0—8—0 ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு விலை அணா 6.

மேற்கண்ட புதகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

புதுக்கோட்டை.

ஸ்ரீ வைதிக வர்த்தினீ ஸபா.

த்ரிவேத பாராயணம்.

வேத புருஷனான ஸ்ரீ பரமேச்வரனுடைய அவ்யாஜ கருணையால் நமது சமஸ்தானத்தில் க்ஷாம க்ஷேபம் நிவிருத்தியாகி நமது சமஸ்தான மன்னரும், அவரது பிரஜைகளும் அரோக திட காத்திரர்களாக ஸர்வாபீஷ்ட ஸித்தியுடன் ஸுகித்து வாழவேண்டி இச்சபையின் ஆதரவில் சென்ற வருஷங்களைப் போலவே 4-வது வருஷமான இவ்வருஷத்திலும் ரிக், (க்ருஷ்ண) யஜுஸ், (வர்ணக்ரம பாராயணமும், சாகையும்) ஸாம, ஆகிய மூன்று வேதபாராயணமும், டவுன் ஸ்ரீ சாந்தநாத ஸ்வாமி ஸன்னிதானத்தில் நாளது பகுதான்ய ௵ கார்த்திகை ௴ 1௳ (16-11-38) புதன்கிழமை முதல் மார்கழி ௴ (30-12-38) வெள்ளிக்கிழமை முடிய ஒரு மண்டலத்திற்கு பிரதி தினம் மாலை 6-30 மணிமுதல் 7-30 மணிவரை நடத்தப்படும்.

பிரதி தினம் ஷை பாராயணம் முடிந்தவுடன் யஜுர் வேதத்தில் அன்றுடகம் பாராயணம் செய்யப்படும் ப்ரச்னத்தின் அர்த்தத்தையும், அதன் விநியோகம் முதலியதுகளைப்பற்றியும் விஸ்தாரமாக M.N. ராகவசாஸ்திரிகள் அவர்களாலும், குடுமியாமலை பிரும்மஸ்ரீ பஞ்சாபகேச கனபாடிகள் அவர்களாலும், இன்னும் இதர பண்டிதர்களாலும் உபந்யஸிக்கப்படும்.

ஷை பாராயண ஸமாப்தி தினமான (30-12-38) வெள்ளிக்கிழமை அன்று வழக்கப்போல் ஸ்ரீ வேதநாயகி ஸமேத ஸ்ரீ சாந்தநாத ஸ்வாமிக்கு ஸ்ரீ மஹாந்யாஸ ஏகாதச ருத்ரஜப பூர்வமாக சங்காபிஷேக மஹாபிஷேகம் முதலியதும், விசேஷமாக பிராம்மண ஸந்தர்ப்பணையும் நடத்துவதாயுத்தேசித்திருக்கிறது.

ஆஸ்திகர்களனைவரும் பிரதி தினம் வேத கோஷத்தை ச்ரவணம் செய்தும் சென்ற வருஷங்களில் ஷை கைங்கர்யத்திற்கு பிரபுக்கள் அனைவரும் அநேகப்ரகாரங்களாக உதவிபுரிந்த பிரகாரமே இவ்வருஷமும் உதவி செய்வதுடன் தங்கள் தங்களுடைய இஷ்ட மித்திரர்களையும் உதவிபுரியும்படி செய்வதன் மூலமாய் ஸர்வசக்தரான ஸ்ரீ பரமேச்வரனுடைய பூர்ணப் பிரஸாதத்திற்கு பாத்திரர்களாகவேணுமாயும் பிரார்திக்கப்படுகிறது.

காரியதரிசி.

மாயவரம்.

வள்ளலார்கோவில் ஸாமவேதபாராயணம்.

ஸ்ரீவதாண்ய பரமேச்வரருக்கு துலா ௴த்தில் நடந்த பிரம்மோத்சவத்தில் ஸாமவேத பாராயணமானது அர்ப்பசி ௴ 22ந்தேதியில் காலையில் ஆரம்பித்து பத்து பிராம்மணர்களால் வேதபாராயணம் ரொம்பவும் நன்றாக நடைபெற்றது. இந்த ௵ ஞானாம்பிகா சமேத வதான்யபரமேசுவரருக்கு ஸாமவேத பாராயணம் நடக்காது என்று வெகு ஜனங்கள் நினைத்து விட்டார்கள். பரமேசுவரன் திருவிழந்தூர் ஸாமவேத ராமசு சாஸ்திரிகள் மனதில் உதித்து ஷை சாஸ்திரிகள் ரொம்பவும் சிரத்தை எடுத்துக்கொண்டு பிராம்மணர்களிடத்தில் யாசகம்வாங்கி ஷை பாராயணம் 30௳யில் ஸமாப்தி செய்து கார்த்திகை ௴ 1௳ பிராம்மணர்களுக்கு ஸம்பாவனை செய்யப்பட்டது. ஷை சாஸ்திரிகள் இந்த பாராயண விஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொண்டு நடத்தாத பக்ஷத்தில் ஷை பாராயணம் நடைபெற்றிருக்காது. ஷை சாஸ்திரிகள் அடுத்த ௵ முதற்கொண்டு முந்தியே ஏற்பாடு செய்து ஸாமவேத பாராயணத்தை ரொம்ப விமர்சையாக நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நமது நிருபர்.

மாயவரம்.

மயூரநாதஸ்வாமிக்கு துலா மாதத்தில் நடந்த பிர்மோத்ஸவத்தில் சாமவேத பாராயணம் பிரும்மஸ்ரீ மருலூர் சிவராம சாஸ்திரிகளவர்களாலும் ஷையார் மாப்பிள்ளை பிரும்மஸ்ரீ விசுவ தீக்ஷிதரவர்களாலும் அபிராமி அம்பாளுடைய அநுக்ரஹத்தை முன்னிட்டு அநேக ஆஸ்திக பிராம்மணர்களிடமாத்திரம் யாசகம் செய்து ஐப்பசி ௴ 21௳ சாயங்காலத்தில் சாமவேத பாராயணம் ஆரம்பிக்கப்பட்டது. 18 பிராமணோத்தமர்களால் விதிப்பிரகாரம் ஸாமகானம் நடைபற்றது, பிராமண சந்தர்ப்பணத்திற்காக பட்டமங்கலத்தெருவில் பெரியகிரஹத்தில் ஜாகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஷை ஜாகையில் பிரதிதினம் ஸ்வஸ்திவாசன பிராமணர்களோடு இதர ப்ருமணர்களுக்கும் போஜனம் செய்வித்து சாயங்கால வேளைகளில் திப்பிராஜபுரம் பிரம்மஸ்ரீ நாராயணஸாமி சிரௌதிகளவர்களால் வேத மஹிமையைப்பற்றியும் கர்மானுஷ்டானங்களின் அவசியத்தைப்பற்றியும் பிரதிதினமும் உபந்யாஸம் செய்யப்பட்டு கடைசிதினமாகிய 30 தேதி இரவு 9மணிக்கு சாஸ்திரிகளவர்களால் ஸ்வஸ்திவாசக பிராமணர்களுக்குஸம்பாவனை செய்யப்பட்டு பிறகு ஷை பிரம்மஸ்ரீ சிரௌதிகளவர்களால் தர்மத்தையும் தர்ம ஸூக்ஷ்மங்களைப்பற்றியும் சாஸ்திரிகளவர்களுடைய சிரத்தையைப்பற்றியும் அபூர்வஉபந்யாசம் செய்யப்பட்டு பாராயணம் முடிவுபெற்றது.

நமது நிருபர்.

விழுப்புரம்.

தஞ்சாவூர் ஸ்வாமிகள்.

சென்ற 6-11-38 ஞாயிற்றுக்கிழமை தினம் தஞ்சாவூர் ஸ்வாமிகள் இவ்வூருக்கு விஜயம் செய்து ஆஸ்திக மகாஜனங்களுக்கு அருமையான பல தத்வங்களை எடுத்து உபதேசித்தார்கள். 9-11-38 வியாழக்கிழமை தினம் வடகுடியிலிருக்கும் சேங்காலிபுரம் பிர்ம்மஸ்ரீ நாராயண தீக்ஷிதர் அவர்கள் வந்து நான்கு தினங்கள் தங்கி தர்மோபதேசம் செய்தார்கள். ஸ்வதர்மம் என்பதைப்பற்றி உபன்யாசங்கள் செய்தார்கள். அதில் அவரவர்கள் ஸ்வதர்மாசரணம் செய்யவேண்டிய அவசியத்தையும் அதின் பெருமையையும் சில பொதுவிதிகளையும் பற்றி சொல்லிவிட்டு ஆர்யதர்மம் பத்திரிகையை ஆதரிக்கச்சொல்லும்போது தஞ்சாவூர் ஸ்வாமிகளின் ஆதரவின் கீழ் நடந்துவரும் பணையூர் நியமாத்தியாய பாடசாலையின் தர்மகைங்கர்யத்திற்கு எல்லாரும் ஈடுபடவேண்டியது அவசியமென்றும் விரிவாக எடுத்துரைத்தார்கள். மகா-ள-ள-ஸ்ரீ வெங்கடகிருஷ்ணய்யர் கிருஹத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை (13-11-38) குசேலோபாக்யானம் என்னும் விஷயம் வெகு உருக்கமாகவும் விரிவாகவும் உபன்யஸித்தார்கள்.

ந. நி.

உயர்ந்த புஸ்தகம்!
உயர்ந்த புஸ்தகம்!!

ஸ்ரீநகர விமர்சனம்.
ஆர்யாத்விசதி ஸ்ரீ லலிதாஸ்தவ
ரத்னம்.

[பிர்மஸ்ரீ அருட்கவி ந. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் எழுதிய தமிழுரையுடன் கூடியது.]

விலை 0—2—0. தபாற்சிலவு வேறு.

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd , Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram,

1 - DEC 1938 MADRAS

215259

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 23 கும்பகோணம் கலி5040 பஹுதான்ய௵ கார்த்திகை௴ 16௳ 1938௵ டிஸம்பர்௴ 1௳ வ 47

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

ராமஸாமி நாயக்கர்மீது குற்றம்.

கிரிமினல் திருத்தச் சட்ட பிரயோகம்.

சென்னையில் நடந்துவரும் கட்டாய ஹிந்தி எதிர்ப்பு மறியல் இயக்கத்தின் தலைவரான ஈ. வே. ராமசாமி நாயக்கர்மீது சென்னை கவர்ன்மெண்டார் கிரிமினல் திருத்தச்சட்டப்படி குற்றம் சாட்டி போலீஸ் அதிகாரியிடம் தாக்கல் செய்திருக்கிறார்கள்.

சட்டஸபை மெம்பருக்கு தண்டனை.

மதுரை பசுமலை ஆலைவேலை நிறுத்தக் கிளர்ச்சியில் சட்டவிரோதமாக ஸம்பந்தப்பட்டாரென்று ஸ்ரீமான் முத்துராமலிங்கத் தேவர் என்ற காங்கிரஸ் எம். எல். ஏ. க்கு மாஜிஸ்ட்ரேட் 6 மாதகாவல் தண்டனை விதித்தார்.

காங்கிரஸ் உபாஸனைக் கமிட்டிமீது வழக்கு.

பணத்தை துர்விநியோகப்படுத்துவதாக கேஸ் தள்ளப்பட்டது.

இனி நடக்கப்போகிற திரிபுரம் காங்கிரஸை உத்தேசித்து பண வசூல்செய்துவரும் உபசாணைக் கமிட்டியானது தன்னிஷ்டப்படி பணத்தை துர்விநியோகப்படுத்துவதாயும், அதைத் தடைசெய்ய வேண்டுமென்றும் ஸ்ரீமதி அல்லாடி என்பவள் ஜபல்பூர் ஸப் கோர்ட்டில் கொடுத்திருந்த பிராதை ஜட்ஜ் தள்ளிவிட்டார்.

பனியும் தீயும்.

அமெரிக்காவில் சேதம்.

அமெரிக்கா தேசத்தில் பனிமிகக் கடுமையாயிருக்கிறது இதனால் ஜனப்போக்கு வரத்து நின்றுவிட்டது. ரோடுகளில் 6-அடி உயரம் பனிக்கட்டி. பலபேர் கொல்லப்பட்டனர். இத்துடன் அத்தேசத்தில் சில முக்கிய விடங்களில் தீ விபத்தினால் அநேக லக்ஷம் ரூபாய் நஷ்டமேற்பட்டதாம்.

காந்திஜீ ஹிட்லரை தாக்குகிறார்.

யூதர்களுக்குப் பரிவு.

மேற்றிசைகளிலும் பாலஸ்தீனத்திலும் யூதர்களுக்கு தொல்லை அதிகரித்துவிட்டதைக் கண்டு காந்திஜீ வருத்தப்படுகிறார். முக்யமாக ஜர்மனியில் ஹிட்லர் யூதர்கள்மீது பாய்ந்திருப்பதைக் கண்டு காந்திஜீ ஹிட்லரை வெகுவாக வெறுக்கிறார். இந்த அநீதிக்காக ஜர்மனிமீது யுத்தம் தொடங்குவது கூட நியாயமென காந்திஜீ சொல்லுகிறார். யூதர்களை ஸத்யாக்ரஹம் செய்யும்படியும் அவர் யோஜனை சொல்லுகிறார்.

சென்னையில் ஹிந்தி எதிர்ப்பு கலவரம்.

பலர்மீது குற்றச்சாட்டு.

சில தினங்களுக்கு முன் சென்னையில் ஹிந்து எதிர்ப்புக் கிளர்ச்சிச் சூரர்கள் பலர் கூடிக்கொண்டு பல விடங்களில் கலஹம் செய்தும் கல்லெறிந்தும் கட்டிடங்களுக்குச் சேதமுண்டாக்கியும் விஷமம் செய்த குற்றத்திற்காக போலீஸாரால் 11 பேர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

பாபு அரவிந்த கோஷ்.

புதுச்சேரியில் யோகியாகத் தங்கியிருக்கும் ஸ்ரீமான் அரவிந்த கோஷ் வருஷத்தில் மூன்றுநாள்களே வெளிவந்து பொதுஜனங்களை சந்திப்பது வழக்கம். இவ்வருஷம் இவரைப் பார்க்க வெளிநாடுகளிலிருந்தும் இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும் ஹிந்து, மஹம்மதிய ஐரோப்பிய பிரபலஸ்தர்கள் ஏராளமாக புதுச்சேரிவந்து காத்திருந்தனர். ஆனால் சரீர அசௌகர்யம் காரணமாக ஸ்ரீ அரவிந்தர் வெளிவாராததால் யாவரும் ஏமாற்றமடைந்து திரும்பினர்.

பஜாஜ் மான நஷ்ட தாவா.

பத்திராசிரியர்களுக்கு தண்டனை.

நாகபுரியிலும், பம்பாயிலும் இரண்டு பத்திரிகைகள் ஸேத் ஜமன்லால் பஜாஜை, பாப்பரென்றும், சொத்துக்களை பிறர் பேரால் மறைத்து வைத்திருக்கிறாரென்றும், வேறு மாதிரியாகவும் அவதூறு கூறியதற்காக ஸ்ரீமான் பஜாஜினால் தொடரப்பட்டிருந்த மான நஷ்ட வழக்கில் எதிரிகளான பத்திராசிரியர்களுக்கு 6-மாதக் காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

கோவில்களை ஸினிமா படம் பிடித்தல்.

சென்னை ஹிந்து மதஸ்தாபன போர்டார் பிறப்பித்துள்ள ஓர் உத்தரவில், தென்னிந்தியக்கோவில்களின் அழகை மட்டும் பிலிம் பிடிக்க அநுமதிக்கலாமே யன்றி, ஸ்வாமியையும் உத்ஸவ ஊர்வலத்தையும் படம் பிடிக்க இடம் கொடுக்கக்கூடாதென்றும் விக்ரக ஆராதனைக்கு எதிராக உபயோகிக்கும் நோக்கத்துடன் படம் பிடிப்பதற்கும் இடம் கொடுக்கக்கூடாதென்றும் அதில் சொல்லியிருக்கிறார்கள்.

ஷௌகத்அலி மரணம்.

பிரபல முஸ்லீம் தலைவரான மௌலானா ஷௌகத்அலி டில்லியில் 27௳ யன்று இறந்து போனார். இவர் தீவிர தேசியவாதியாகச் சிறிதுகாலம் விளங்கியவர். காந்திஜீயின் வலதுகையாக இருந்து அவரிடம் விசேஷ மதிப்புவைத்து நடந்தவர். பிறகு அந்த நிலைமை மாறி காந்திஜிக்கும் காங்கிரஸுக்கும் விரோதியானார். கடைசி வரையில் தீவிர முஸ்லீம் வகுப்பு வாதியாகவே இருந்தார்.

அஸ்ஸாமில் கலவரம்.

மந்திரி ஸபையைப் பிடித்துக்கொள்ளும் நோக்கத்துடன், காங்கிரஸ் கட்சியாருக்கும், ஸாதுல்லா கட்சியாருக்கும், பெருத்த தகராறு ஏற்பட்டிருக்கிறது. சில தினங்களுக்கு முன் நடந்த பெரிய கலஹமொன்றில் இருகக்ஷியினரும் கைகலந்து சண்டையிட்டனராம். இப்போது காங்கிரஸ் கூட்டுக் கக்ஷி மந்திரி ஸபைக்கு 57 வோட்டுக்கள் இருக்கின்றனவாம். மொத்தம் 108ஸ்தானங்கள்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

1-12-1938
4 23
வ 47
ஆர்யதர்மம்

AN APPEAL.

This appeal goes forth to a Hindu from a Hindu on behalf of 25 crores of fellow-Hindus. These 25 crores now find themselves voiceless. How, when and why they lost it is a puzzle. All the same they are now struggling to regain it. In these days one is recognized as possessing a voice only when one's voice is heard through a popular news paper. The only English weekly and Tamil weekly which help them in this direction are **Dharma Rajya** and **Arya Dharmam** published respectively in Delhi and Kumbakonam the former with the blessings of His Holiness of Jaganatha Puri and the latter with the blessings of His Holiness of Sree Kanchi Kamakoti Peetam. These two weeklies are doing useful spade work amidst Himalayan difficulties. Hindu India feels that with your generous help these papers may become a real power in the country for shaping and moulding public opinion and restoring to its pristine Vedic purity the ancient Hindu Religion, civilization and culture which some of our brethren are out to destroy mainly on account of their ignorance of its greatness. That while other ancient civilizations, Grecian, Roman, Babylonian, Egyptian etc., have all gone the way of time. Hindu civilization is alone surviving, in spite of repeated onslaughts from outside and inside, affords *the best proof that it is great* and deserves to be preserved. Hindu India expects you to do your duty by her and requests you to become a subscriber for both the Weeklies on payment of an annual sum of Rs. 3/— to each of them in advance and thus enable her to come to her own.

Rao Sahib N. Natesa Aiyer.

TEMPLE ENTRY LEGISLATION.

Reply to H. R. E. Board's circular.

There are about 28 Saiva Agamas and 2 Vaishnava Agamas dealing with temple worship, leaving alone the Upa-Agamas. They meticulously prescribe rules, and injunctions regarding the construction of temples, the making of idols and their consecration and worship. The conditions under which the divine presence can be secured and continued in the idols have been laid down therein exhaustively. How the once manifested divinity can be preserved and how and when it will be destroyed has also been fully set out in them. Strict compliance with these rules and injunctions will alone invest the consecrated idols with the divine essence and differentiate them from the ordinary stones and metals out of which they are carved.

For one who has transcended all limitations and restrictions and has realized the essential oneness and divinity in all objects of the Universe there is no need for temples idols of temple worship. He sees the God in himself, in his fellow creatures, in stone, in wood, in bird, beast and reptile. But for persons who have not reached that height (almost all of us belong to this group) and are still far away from the realization of the divinity within and without, these intermediate steps in the shapes of temples, images, idols and temple worship have been enjoined by the Almighty in His infinite mercy and wisdom. They have therefore to conform those rules if they have faith in Him and in the Agamas which are his spoken words. *This is the quint essence of Hinduism.*

To discard the spoken word of the Almighty contained in the Agamas and yet claim to have faith in Him in something which is wholly understandable. How can one accept that portion of the Agamas which lay down the conditions for the manifestation of the Divine in the idols and reject that portion which lays down the conditions under which the manifested divinity will disappear. Accept both or reject both. There is no middle course. One cannot have the cake and eat it too. This is the feat what the protoganists of the Temple Entry movement unblushingly perform. Can God be partly true and partly false, partly perfect and partly imperfect, partly wise and partly stupid.

ANSWER TO THE FIRST QUESTION:- Among the 28 Saiva Agamas and the numerous Upa Agamas, Kamika, Karana, Suprbheda and Vathula occupy a high place. Temple worship is regulated by all of them. Generally the aforesaid four Agamas are mainly referred to when doubts arise but all the Agamas have equal authority in the matter of temple worship in the same way as all the Upanishads have equal authority in the region of Hindu philosophy, in the same way as all Smrities have equal authority in the matter of Dharma Sastras and in the same way as the 18 Puranas and Upa Puranas have equal authority regarding the subjects dealt within them.

When there is conflict among them (the conflict is very rare) the four Agamas mentioned above will resolve it in the same way as Manu Smiriti has a predominant voice.

Among the Vaishnava Agamas, Vaikkanasam and Pancharatram are the principal ones. Some Vishnu temples are governed by the former and some by the latter. In this respect there is a difference between the Vaishnava Agamas and Saiva Agamas. All Saivites owe allegiance to all the Saiva Agamas but follower of Vaikhanasam alone owe allegiance to Vaikhanasam while the followers of Pancharatra alone accept Pancharatram as authority.

ANSWER TO THE 2nd QUESTION:— Most of the temples in South Madras do not possess any useful works touching temples. Individual Bhattars, Gurukkals and Archakas have some manuscripts and printed books but most of them with a few honourable exceptions have no knowledge of their contents. It is eminently desirable to supply the temples with the necessary Literature. More than this it is absolutely necessary to equip the persons officiating at the temples with the necessary knowledge in Sanskrit language and in the Agama Literature in Sanskrit as well as in Vernaculars.

Rao Sahib N. Natesa Aiyer.

வாஸ்கோடிகாமா பதக்கம்!! ஜாமரின் வம்சத்தவருக்கு டீ யர் காணிக்கையாக கொடுத்த ஓர் மாலையிலுள்ள பச்சை மாத்ரம் 2 லக்ஷத்திற்கு மதிக்கப்படுகிறதாம்! அது ஏலத்திற்கு வந்தது தான் வருந்தத்தக்கது!

சனாதன தர்ம வீரர் வெற்றி பெறுக!! நாங்குநேரி பஞ்சாயத்திற்கு தேசிய ஸபை ஆளை நிறுத்த தர்மத்தில் தலையிடாமலிருக்கும் படி தார்மிகர் உறுதி மொழி கேட்க அதை மறுத்தனராம் ஆதலின் தார்மிகர் போட்டி போடுகின்றனர்.

அரிய ஸர்கஸ்! சென்னை நகர ஸபை உபாத்தியாயர் மகாநாடு சென்னையில் நடந்தது. அதில் ஜஸ்டிஸ் கக்ஷியும் தேசியகக்ஷியும் கலந்தது. ஆனால் ஒன்றையொன்று கண்டிக்கத்தயங்கவே இல்லை! எனினும் ஸபை நடந்தது.

அங்குமாரம்பமா? ஜர்மனிக்கு நல்ல காலமிது. அது அமெரிக்க ராஜாங்கத்திலுள்ள தம் ப்ரதிநிதியை வருக்கழைத்து விட்டது! பிரான்சையும் பிரிட்டனையும் போல் அதையும் பல்லை பிடித்துப்பார்க்க ஆரம்பம் போலும்!!

மரணம் பல ஆயிரம் காயம்! கமால் பாஷா ப்ரேத அடக்க காலத்தில் காலால் மிதிபட்டிறந்தவர்!! பல பெண்களும் சிசுக்களும் வைத்யசாலையிலிருக்கின்றனர்.

ஆஹா! மதபார்லிமெண்ட்!! காங்கிரஸ் கட்டிடத்தில் அருண்டேலாரம்பிக்கப்பட்டது! ஏகைகமய்யார்த்தாய!

ஏன் விலகுகிறார்? ஜஸ்டிஸ் கக்ஷியிலிருந்து மீனம்பள்ளி ஜமீன்தார்! வே. ஸே.

ஆகம ஸம்சயம்.

ஆடிப்பூர உத்ஸவம் எப்படி கொண்டாடுவது? பிரம்மோத்ஸவத்தில் வாஹனங்கள் ஓரிடம் போலில்லாமல் பலவிடங்களில் பல மாதிரி இருப்பதேன்? இவை எந்த ஆகமத்தில் விளக்கப்பட்டிருக்கிறது? அந்நூலெங்கு கிடைக்குமென அறிவிக்க வேண்டுகிறேன்.

ஆலயாபிமானி.

பக்ஷபாதமா? பயமா?

சென்னை மதுவிலக்குச் சட்டத்தினால் கிறிஸ்தவர்கள் தங்கள் மதச்சடங்குகளுக்கு சாராயம் உபயோகிப்பதில் தடை யேற்படுவதாயும், அதனால் தங்கள் மத உரிமை பாதிக்கப்படுவதாயும் பெரிய கிளர்ச்சி நடத்தி வருகிறார்கள். இது விஷயமாகச் சென்னை ஸர்க்கார் ஏற்கனவேயே கிறிஸ்தவர்களுக்கு ஸாதகமாக சட்ட ஷரத்துக்களைத் தளர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது அதுவும் போதவில்லையென்ற காரணத்தால் வேறு மாதிரியில் அவர்களுக்கு ஸாதகமாகத் திருத்தம் செய்யப் போவதாகத் தெரிகிறது. மத விஷயங்களில் அந்தந்த மதத்தினரின் உரிமைக்குபங்கம் ஏற்படக்கூடிய எந்தக்காரியத்தையும் செய்வது அநீதி யென்பதே மதாபிமானிகளின் தீர்மானமாகும். இந்த வழியில் பார்த்தால் சென்னை ஸர்க்கார் கிறிஸ்தவர்கள் மத விஷயத்திற்காகச் சாராயம் உபயோகிக்கும் விஷயத்தில் சட்டத்தை ஜாக்கிரதையாக அமுல்நடத்தவோ, அல்லது அவர்கள் விருப்பப்படி திருத்தவோ, முன் வந்திருப்பதில் தவறு இல்லை. ஆனால் மந்திரிகள் காங்கிரஸ்காரர்களென்ற தோரணையில் எல்லா மதங்களுக்கும் இத்தகைய சலுகை காட்டுகிறார்களா வென்பதே கேள்வியாகும். இவ்விஷயத்தில் மந்திரிகள் ஓர் ருஜுவான கொள்கையை அநுசரிப்பதாக நாம் நினைக்கக்கூடவில்லை காரச்சி தீர்மானப்படி ஏற்பட்ட மத நடுநிலைமைக் கொள்கையை, கிறிஸ்தவர், மஹம்மதியர் விஷயத்தில் மட்டும் ஜாக்கிரதையாக அநுஷ்டிக்கிறார்களேயல்லாது ஹிந்துக்களின் மத விஷயத்தில் கிடையாதென்பது பல தடவைகளில் ருஜுவானது. மஹம்மதியர் ப்ரீதிக்காக வந்தேமாதரப்பாட்டைக்கூட மந்திரிகள் பலிகொடுத்திருக்கின்றனரல்லவா?

[illegible]யமானது, [illegible] கிறது. சரீர ஸுகாதாரத்தை நாசமாக்குகிறது. பொதுநலத்தை பாதிக்கிறது. இதனாலேயே சட்டமூலமாக இதைத் தடுக்க ஸர்க்கார் முன்வந்தார்கள். மதஸம்பந்தமான காரியத்திற்குச் சாராயம் உபயோகிப்பதும் மேற்கண்ட தோஷங்களுக்கு இடமளிக்கக்கூடியதே. ஆயினும் அது மத ஸம்பந்தமானதென்கிற காரணத்தாலேயே ஸர்க்கார் அதற்கு விலக்கு அளிக்க முன் வருகிறார்கள். பால்ய விவாஹ விஷயத்திலும் ஆலயப்பிரவேச விஷயத்திலும், பொதுநன்மையே முக்யபிரதானமென்றும், அதற்கு விரோதமாயுள்ள மதத்தை லக்ஷ்யம் செய்ய முடியாதென்றும் ஏடம்பேசி வரும் காங்கிரஸ்காரர்கள் கிறிஸ்தவர் சாராயக் குடி விஷயத்தில் மட்டும் வேறு மாதிரியாக நடக்க முற்படுவது பக்ஷபாதமா, பயமாவென்பது தெரியவில்லை. யாகத்தையும், பால்ய விவாஹத்தையும், தேவாலய சுத்தியையும் பொது நலத்தை உத்தேசித்து விட்டுவிடவேண்டுமென்று வற்புறுத்தும் முதன் மந்திரி கிறிஸ்தவர் விஷயத்திலும் ஏன் இந்த உபதேசத்தைச் செய்யவில்லையோ?

மலையாள ஆலயப் பிரவேசம்.

"கோவில்களின் பரிசுத்தமே மறைந்துவிடும்"

கோல்லங்கோடு ராஜாவின் ஆக்ஷேபம்.

மலையாளம் ஆலயப் பிரவேச மசோதாவைப்பற்றிக் கொல்லங்கோடு ராஜா ஸர் வாஸுதேவ ராஜா எம். எல். ஏ. சென்னை சர்க்கார் உள் நாட்டிலாகாக் காரியதரிசியிடம் ஓர் விக்ஞாபனத்தைச் சமர்ப்பித்திருக்கிறார். அதில் அவர்கூறியிருப்பதன் விவரமாவது:—

சென்னை சட்ட சபையில் இம் மாதம் கொண்டு வரப்போகும் மலையாளம் ஆலயப் பிரவேச மசோதாவைப்பற்றிச் சமர்ப்பிக்கப்படும் இந்த விக்ஞாபனத்தை மே. த. கவர்னரும் சட்ட சபையங்கத்தினர்களும் ஆலோசனை செய்யவேண்டுகிறேன்.

இம்மசோதா கெஜட்டில் வெளியானதிலிருந்து மலையாளத்திலுள்ள ஆலய டிரஸ்டிகளும் வைதிகக் கோஷ்டியாரும் முக்கியமாக ஸ்திரீகளும் விசேஷக் கவலைகொண்டிருக்கின்றனர். திருவாங்கூர் ஆலயப் பிரவேசத்திலிருந்து இவ்விஷயமாக நாங்கள் கவனஞ் செலுத்திவந்திருக்கிறோம். இதைப்பற்றி அபிப்பிராயங்களைத் தெரிந்துகொண்ட பிறகு நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க முற்படுகிறேன். நான் கூறும் அபிப்ராயங்கள் மலையாளத்திலுள்ள ஆலயங்களின் தர்மகர்த்தாக்கள், வைதிகர்கள். ஆலயத்தில் வழிபடுவோர்கள் முதலியவர்களின் அபிப்ராயங்களாகும். விசாரணை செய்தவிருக் [illegible]ணர்களின், அபிப்ராயங்களைத் தெரிந்துகொண்டதிலிருந்தும் நான் மேற்படி மசோதாவை எதிர்த்தாகவேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்.

காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியார் மதவிஷயத்தில் தலையிடுவதில்லையென்று கொடுத்த உறுதிக்கு விரோதமாக சர்க்கார் இம்மசோதாவைக் கொண்டுவர உத்தேசித்திருக்கின்றனர்.

மலையாளத்திலுள்ள ஆலயங்களில் பல ராஜாக்களாலும், ஜென்மிகளாலும் சொந்தமாக ஏற்படுத்தப்பட்டவை. சில கிராமங்களில் குறிப்பிட்ட வகுப்பாரும் ஆலயங்களை ஏற்படுத்தி யிருக்கின்றனர்.

அவ்வாலயங்கள் சொந்தச் செலவில் குறிப்பிட்ட குடும்பங்களுக்காகவும், வகுப்புகளுக்காகவும் நிர்மாணம் செய்யப்பட்டவையாகும் அக்கோயில்களில் எதுவும் பொது மக்களுக்குச் சொந்தமானதல்ல. பக்கத்திலுள்ள அவர்ணர்களும் பல்வேறு ஜாதிக்குத் தகுந்தாற்போல் ஆலயங்களில் அனுமதிக்கப்படுவார்கள். இது உரிமை கொண்டாடும் விஷயமாகாது. ஆனால், 1927-ல் ஹிந்துமத பரிபாலன போர்டார் முதன் முதலாக சில கோயில்களைப் பொதுக் கோயில்கள் என்று அறிவித்தனர். இவ்விஷயம் தர்ம கர்த்தாக்களின் விருப்பத்தைக் கேட்டுச் செய்யவில்லை. இதை டிரஸ்டிகள் ஆட்சேபித்து ஸிவில் கோர்ட்டுகளில் வியாஜ்யமாடினர் ஹிந்துமத பரிபாலன சட்டம் வந்தபிறகு கூட இக்கோயில்களில் அவர்ணர்கள் பிரவேசிக்க முடியாமலேயே இருந்துவந்தது.

பூஜகரே ஸ்வாமியைத் தொட முடியும். ஆலயத்தில் சாதாரண பிராமணர்கள் ஸ்வாமியைத் தொட முடியாது. ஜாதி ஹிந்துக்களல்லாதவர்கள் வெளிபிராகாரத்தோடு நின்றுவிடவேண்டும் ஆனால் கோயிலிலுள்ள ஸ்வாமியை எல்லோரும் தரிசிக்க முடியும். ஆகவே, எல்லா ஹிந்துக்களும் அவரவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களிலிருந்து ஸ்வாமி தரிசனம் செய்யலாம் ஜாதி வழக்கமுறை இல்லாமற்போனால் மேற்கண்ட அனுஷ்டானமும் இல்லாமற்போகும் வித்யாசமேயில்லாமல் ஆலயப் பிரவேசம் செய்ய இடங்கொடுக்கப்படுமானால் வைதிக கோஷ்டி ஆலயத்துக்கே வாராமல்போய் விடுவார்கள். சமூக வாழ்க்கையில் மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் இருக்கத்தானிருக்கிறது. இதற்கெல்லாம் சட்டஞ்செய்து ஒருவரை மற்றொருவரைப்போலாக செய்வது விரும்பத்தக்கதல்ல. ஆலயங்களில் வழிபடும் விஷயத்திலும் அங்ஙனம் செய்வது இன்னும் விரும்பத்தக்கதாகாது.

மலையாளத்திலுள்ள ஆலயங்களை அவர்களுக்குத் திறந்து விடுவதால் ஸவர்ணர்கள் ஆலயத்தில்சென்று வழிபட முடியாமற் போகும். இதனால் எதற்காகக் கோயில்களுக்கு டிரஸ்ட் ஏற்படுத்தப்பட்டதோ அந்த நோக்கம் ஈடேறுமற் போய்விடும்:

இவ்விஷயத்தில் நன்கு அபிப்ராயம் தெரிவிக்கக்கூடியவர்களிடமிருந்து அபிப்ராயம் தெரிந்துகொள்ளப்பட்டது. சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியாரிடம் முதலில் அபிப்பிராயம் கேட்கப்பட்டது. திருவாங்கூர் ஆலயப்பிரவேசம்பற்றிக் குறிப்பிட்டுள்ள இம்மசோதாவின் ஹேதுக்களைப் பற்றியும், ஹேஷயங்களைப்பற்றியும் அவரைக் குறிப்பிட்டுக் கேட்டதற்கு அவர் சமஸ்கிருதத்தில் பதில் எழுதினார். அக்கடிதமும் அதுபோன்ற இதர கடிதங்களும் என்னிடமிருக்கின்றன. தேவையானபோது அவற்றைக் காட்டத் தயாராகவிருக்கிறேன். திருவாங்கூர் ஆலயப் பிரவேசப் பிரகடனம் சம்பந்தமாக அவர் தெரிவிக்கும் அபிப்பிராயமாவது:—

இப்பிரகடனத்தால் சாஸ்திரங்கள், ஸ்மிருதிகள் முதலியவற்றி [illegible]ந்து கொள்ளும் மக்கள் வழி தெரியாமல் கஷ்டங்கள் யனுபவிக்கவேண்டியிருக்கிறது.

சாஸ்திரங்களைப் பிரமாணமாகக் கொண்டு ரிஷிகளும் ஆச்சார்யார்களும் பல கோயில்களைக் கட்டி சிவன், விஷ்ணு முதலிய தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்தார்கள். வேதங்கள் தந்திரங்கள் முதலியவற்றை அடிப்படையாகக்கொண்டு பூஜைசெய்யவேண்டிய கிரமத்தையும் அவர்கள் நிர்ணயம் செய்தார்கள். மதக் கோட்பாடுகள். கிரியைகள் பரிசுத்தச்சடங்குகள் முதலியவை கிரந்தத்திலிருக்கின்றன, சம்புரோக்ஷணச் சடங்குகள் சரிவர நடக்காவிட்டால் கோயில்களின் முக்கியத்துவமும் தெய்வத்தின் பரிசுத்தத் தன்மையும் மறைந்துபோகும்.

தீட்டுக் கலந்த கோயில்களில் சென்று பூஜை வழிபாடுகள் செய்வதால் பயனேதுமிராது என்று நாமறிந்திருக்கிறோம். வர்ணாச்ரம முறைப்படியும் தர்ம சாஸ்திரங்களின் படியும் தங்கள்தங்கள் வீடுகளில் பூஜை, வழிபாடு முதலியவற்றைச் செய்வோருக்குச் சர்வாபீஷ்டங்களும் உண்டாகுமென்பதில் சந்தேகமேயில்லையென்பதையும் நாம் அறிவோம்."

"பொது ஜனவாக்கு ஆட்சேபகரமாகும்"

உத்தேசிக்கப்பட்டுள்ள மசோதாவைப் பற்றிக் கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியாரைக் கேட்டபொழுது அவர் தமது கருத்துக்களைப் பின்கண்ட முறையில் தெரிவித்திருக்கிறார். அவர் செப்டம்பர் 25-ந்தேதியன்று எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:—

மத சம்பந்தமான விஷயங்களில் பொதுஜன வாக்கெடுப்பது ஆட்சேபகரமானதாகும். மதக்கோட்பாடுகளின்படி வழிபடும் விஷயத்தில் இதரர்கள் தலையிடுவது சரியாகாது. கோயில்களை ஏற்படுத்தியவர்களைப் போலவே ஒருவர் ஆகம சாஸ்திரங்களில் நம்பிக்கை கொண்டுள்ள வரையில் கோயில்களை அவர்களுக்காகப் பாதுகாத்துவைத்து, அந்த விஷயத்தில் நம்பிக்கையில்லாதவர்களுக்கு அவர்களின் இஷ்டப்படி தனியான ஸ்தாபனங்களை ஏற்படுத்தவேண்டும்; ஆகவே மலையாள ஆலயப்பிரவேச மசோதாவும், அதில் பொதுஜன வாக்கெடுப்பது பற்றி கூறப்பட்டிருப்பதும் மத பூர்வமாக ஏற்றுக்கொள்ளமுடியாததாகும்."

நமது ஆலயங்களில் கைங்கர்யம் செய்ய வேண்டியவர்களான மலையாளம் தந்திரிகளும் ஸ்ரீசங்கராச்சாரியார்களின் அபிப்பிராயத்தையே தெரிவித்திருக்கின்றனர். கோயில்களில் சாஸ்திரங்கள் படியும், பழக்க வழக்கங்கள் படியும் தற்பொழுது சில வகுப்பாரை அனுமதிக்காமலிருப்பது நீக்கப்படும் நிமிஷத்திலிருந்து தாங்கள் அங்கு பூஜைக்கோ, சடங்குகளுக்கோ வரப்போவதில்லையென்று வைதிகர்களும், படித்த குருக்கள்களும் தெரிவித்துவிட்டார்கள்.

இதைத் தவிர மலையாளத்துக்கு வெளியே சென்ற 1937-ல் சென்னையில் ஓர் மகாநாடு நடைபெற்றது. அதில் நூற்றுக்கணக்கான பண்டிதர்களும், மகாமகோபாத்யாயர்களும், கலந்துகொள்ளும்படி அழைக்கப்பட்டார்கள். ஆலயப்பிரவேச விஷயம் மகாநாட்டில் வெளிப்படையாக விவாதிக்கப்பட்டது. இதுவரையில் ஆகமங்கள், சாஸ்திரங்கள் முதலியவற்றின்படி சில வகுப்பாரை ஆலயத்துக்குள் அனுமதிக்கக் கூடாதென்றிருப்பதை மீறி ஆலயங்களைத் திறக்கக்கூடாதென்று ஏகமனதாகத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள் இந்த விதியை மீறி விட்டால்கோயின் புனிதத் தன்மை கெட்டுப்போய் ஜாதி ஹிந்துக்களால் புறக்கணிக்கப்பட்டு மூடி விட்டதற்குச் சமமாகிவிடுமென்றும் அவர்கள் [illegible] தெரிவித்தார்கள்.

1932-ம் வருஷம் டிசம்பர் மாதம் 27, 28, 29 தேதிகளில் குருவாயூரில் நடைபெற்ற அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தில் இவ்விஷயம் தீவிரமாக ஆலோசிக்கபபட்டு ஆலயப் பிரவேசத்தை எதிர்த்து தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

மசோதா நிறைவேறினால் ஏற்படக்கூடிய தீமைகளையும், கொல்லங்கோடு ராஜா வரிசைக் கிரமமாக எடுத்துரைத்திருக்கிறார்.

வைதிக ஹிந்துக்கள் கோயில்களைப் புறக்கணித்து விடுவார்களென்றும், இம் மசோதாவால் தேசத்தில் கசப்புணர்ச்சி ஏற்படுமென்றும், ஹிந்து வகுப்பிலுள்ள பல்வேறு பிரிவுகளில் அமைதியிராதென்றும், ராஜாக்கள், ஜென்மிகள், ஒதுக்கப்பட்ட ஜாதிகள் முதலியவர்களிடையே சச்சரவுகளேற்படும் என்றும் அநேக குடும்பங்களின் சமூக வாழ்க்கை சரிவர நடக்காது போகுமென்றும் குடும்பங்களில் பிளவுகளேற்பட்டு சண்டை சச்சரவு ஏற்பட்டுவிடுமெனவும், விரிவாக விக்ஞாபனத்தில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

இவையெல்லாம்பற்றி விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஓர் கமிஷனை நியமிப்பது சரியாகவிருக்கும் என்றும் இம்மசோதா ஹிந்து சமூகத்தில் அதிகமான குழப்பத்தை உண்டாக்குமாதலால் அதை சட்டசபையிலேயே கொண்டுவராமல் விட்டுவிடும்படி தாம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதாயும், அப்படியே இம்மசோதாவை அவசியம் கொண்டுவரவேண்டுமென்று சர்க்கார் கருதினால், ஒரு கமிஷனை நியமித்து ஜில்லாவரியாக அனுப்பி தகவல்களையும் அபிப்பிராயங்களையும் தெரிந்துகொள்வது நலமாக விருக்கும் என்றும் சட்டசபை அந்தக் கமிஷனின் ரிப்போர்ட்டு வருமளவும் பொறுத்திருக்க வேண்டும் கூறியுள்ளார். (சு. மி.)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பகுதான்யஹு கார்த்திகைமீ 16வ

தர்மத்தின் தலையில் கை வைக்க வேண்டாம்.

சென்னை சட்ட ஸபையில் மலையாள ஆலயப்பிரவேச மசோதாவானது வியாழக்கிழமை விவாதத்திற்கு வந்து பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்படுமென்பது நிச்சயமாகி விட்டது. இப்போது சட்ட ஸபை [illegible] நிலைமையிலும், மந்திரிகளின் மனப்போக்கிலும் [illegible]சோதா நிறைவேற்றப்படுவது வெகு ஸாதாரண [illegible]. மிக்க [illegible] இக்கார்யத்தைச் செய்ய முற்படுகையில் காங்கிரஸ் கக்ஷியார் இத்தேசத்தின் தர்மத்தையும், ஸமூஹ வியவஸ்தையையும், தர்மாசாரியர்களின் அபிப்பிராயங்களையும், பொதுஜன அபிப்பிராயத்தையும் வெகு பிடிவாதமாக அலக்ஷ்யம் செய்திருப்பது, இது வரையில் நம் தேசத்தில் ஆக்ஷி நடத்திய எந்த மதஸ்தர்களும் செய்யாத அடாத கார்யமாகும். இப்போது காங்கிரஸ் மந்திரிகள் மத உரிமையில் பிரவேசித்து வியவஸ்தா நாசம் செய்ய முயற்சிப்பதைப் போல் இதற்கு முந்தி எக்காலத்திலும் நடந்திருப்பதாக சரித்திரம் கிடையாது. வெள்ளைக்கார ஆக்ஷியின் ஆதிக்யம் இருந்த வரையில் அவர்கள் நமது மத விஷயத்தில் பிரவேசிக்கத் துணிவு கொள்ளாதிருந்தனர். ஆனால் இப்போது நமது ஜனப்பிரதிநிதிகளின் ஆக்ஷி நடைபெறுகையில் தான் அந்நியர்களின் காலத்தில் கூட நடக்காத அநீதியான மதவுரிமை நாசம் ஏற்படுகிறது.

தர்மதத்வம் மிக ஸூக்ஷ்மமானது. பாமர புத்தியுள்ளவர்களுக்கு அது புலப்படாது. தர்மம் நசுக்கப்பட்டால் அது, நசுக்கியவர்களையும், தேசத்தையும் நசுக்கும். அதர்மமானது உடனே பலன் கொடுப்பதில்லை யென்பது உண்மையாயிருக்கலாம். ஆனால் அது மெதுவாகச் சுற்றி வந்து அதார்மிகர்களின் மூலத்தை வேருடன் அறுத்துவிடும். அதர்மத்தினால் க்ஷேமம் உண்டாவது போல் தோன்றலாம். ஆனால் அது உண்மையில் க்ஷேமமன்று. இது கேவலம் வேதாந்த வாதமன்று. உலக அனுபவத்தை யொட்டிய நன்மொழியே. உலகத்தையே விபரீதமாக ஆட்டிவைத்த லௌகிகசக்திகள் பலவும் தர்மதேவதையால் நசுக்கப்பட்டு அதார்மிகர்கள் இருந்தவிடம் தெரியாமல் மறைய நேர்ந்தது சரித்திரப்ரஸித்தம். இது எல்லா தேசத்திலும் ஏற்பட்ட அனுபவம். இந்த தத்வங்கள் தற்கால நாஸ்திக வாதிகளுக்குப் பரிஹாஸபதமாகலாம். ஆயினும் அவர்கள் நற்புத்தியடைந்து திரும்பும் காலத்தை சீக்கிரம் எதிர்பார்க்கலாம்.

ஆலயப்பிரவேச அதிக்ரம விஷயமாக தார்மிகர்கள் எவ்வளவோ வழியில் தங்களது கோரிக்கையை எதிரிகளிடம் வெளியிட்டுச் சொல்லிக்கொண்டு விட்டார்கள். ஆயினும் அது அலக்ஷ்யம் செய்யப்பட்டுவிட்டது. கடைசி பிரயத்னமாக சிலதார்மிகர்கள் கனம் பிரதம மந்திரியைக்கண்டு தங்கள் குறைந்த பக்ஷக்கோரிக்கையையாவது கவனிக்கும்படி கேட்டனர். இதற்கும் பிரதம மந்திரி இணங்கமறுத்துவிட்டார். தார்மிக தூது கோஷ்டியார் தங்கள் மெமோரண்டத்தில் அநேக முக்ய விஷயங்களை எடுத்துரைத்திருக்கிறார்கள். முக்யமாக இவ்விஷயத்தை விசாரிக்க ஒரு கமிஷனை நியமிக்கும்படியாவது கேட்டனர். மலையாளத்திலுள்ள தேவாலயங்களின் நிலைமை வேறு மாதிரியானதென்பதை தக்க ருஜுவுடன் தூது கோஷ்டியாரும், ஸ்ரீவாஸுதேவராஜரவும் விளக்கி இருக்கின்றனர். இதன் உண்மையை பொறுப்புள்ள ஒருகவர்ன்மெண்ட் விசாரிக்கவேண்டியது கடமையல்லவா?

எலெக்ஷன் காலத்தில் ஆலயப்பிரவேச வாக்குறுதி செய்து கொடுத்திருப்பதாக வாதிப்பதும் ஏற்கக்கூடியதல்ல. தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தை வேண்டவில்லை. காங்கிரஸ்காரர்கள் தாங்களாகவே இந்த நன்மையைச்செய்து கொடுக்கப் போவதாகக்கூறி அவர்களுக்கு ஆசை காட்டினர். பிறருடைய ஸொத்தைப் பிடுங்கித் தருவதாக வாக்குறுதி கொடுப்பதும் அதை நிறைவேற்ற வேண்டியது அவச்யமென்று இப்பால் வாதிப்பதும் நேர்மையானதல்ல. ஆதலால் இப்போது ஆலயப்பிரவேசச்சட்டம் செய்யாவிட்டால் [illegible] எதிர்ப்பும் [illegible]மும் அதிகரிக்குமென்று வாதிக்க நியாயமில்லை. இந்த நிலைமையை ஸ்ருஷ்டித்த காங்கிரஸ்காரர்களே இதற்கு ஜவாப்தாரிகள்.

ஆலயப்பிரவேசச்சட்டம் செய்து விடுவது ஸுலபம். ஆனால் எதிர்காலத்தில் அதனால் விளையும் தீங்கை மந்திரிகள் தீர்க்காலோசனை செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் கேவலம் லௌகிக யுக்தியை மட்டும் கொண்டு முடிவு கூற முடியாது. சாஸ்திர திருஷ்டியையே இதில் முக்கியமாகக் கொள்ள வேண்டும். இந்த உண்மையைக்காங்கிரஸ் சிறிதும் கவனிக்க வில்லை. இத்தகைய சட்டத்தால் எதிர்காலத்தில் பெரிய அனர்த்தங்கள் இவர்கள் கண் முன் நேரப்போவதை இவர்கள் அனுபவிக்க நேருமென்பது நிச்சயம்.

குறிப்புகள்.

மத விஷயத்தில் ராஜி உண்டா?

மலையாள ஆலயப்பிரவேச மசோதாவை ஆக்ஷேபித்துப்பொதுஜன அபிப்பிராயத்தை தெரிவிக்க ஜாதி ஹிந்துக்களின் பிரதிநிதிகள் சிலர் கனம் பிரதம மந்திரியைச் சென்னையில் பேட்டி கண்டனர். பொதுவாக ஆலயப்பிரவேசக்கிளர்ச்சியைக்கண்டித்தும்விசேஷமாக மலையாளக்கோவில்களின் நிலைமையை எடுத்துரைத்தும் தூது கோஷ்டியார் மந்திரியிடம் விக்ஞாபித்து, ஒரு கமிஷனை நியமித்து விசாரணைநடத்த வேண்டு மென்றும், அது வரையில் இந்த மசோதாவைத்தள்ளி வைக்க வேண்டு மென்றும் வற்புறுத்தினர். ஆயினும் கனம் ஆசாரியார் பிடிவாதமாகப்பதில் சொல்லி யிருக்கிறார். மசோதா கொண்டு வருவதை தற்போது நிறுத்தி வைக்க முடியாதென்றும், வியவஸ்தையின்றி கோவில் பிரவேசத்தை தார்மிகர்கள் எதிர்த்தபோதிலும் ஏதாவது ஒரு வழியில் ஸமாஸமாகப் போகப்பிரியப்படுகிறார்களா வென்றும் கேட்டார். முக்யமாக குருவாயூர் கோவிலை எல்லோருக்கும் பொதுவாகத்திறந்துவிட ஸநாதனிகள் ஸம்மதிக்கிறார்களாவென்றும் கேட்டார். ஆனால் தூது கோஷ்டியினர் இதைத் தீர்க்காலோசனை செய்தும், மற்றவர்களுடன் கலந்தும் தான் பதில் கூற முடியு மென்று தெரிவித்ததாகத் தெரிகிறது.

இந்த தூது கோஷ்டியினர்,யாரால்,அல்லது எந்தப் பொது ஸபையாரால் அனுப்பப்பட்டனரென்ற விவரம் தெரியவில்லை. எப்படியிருப்பினும் இவர்கள் தார்மிகக் கக்ஷியை எடுத்துக்கூறி விட்டார்கள். ஆனால் கனம் ராஜாஜி ராஜி செய்து கொண்டு விட இசைவார்போல் பேசியதற்கு இவர்கள் உடனே அங்கீகாரம் கொடுக்காமல் ஜாக்கிரதையாயிருந்தது விசேஷமே. ராஜ்ய விஷயத்திலும்மற்றதிலும், பேரம் பேசி வழக்கமுள்ள கனம் பிரதம மந்திரி போன்றவர்கள் மத தர்ம விஷயத்திலும் ராஜிப்பிரஸ்தாபத்தை எடுத்தது அங்கீகரிக்கக்கூடியதல்ல. சாஸ்திர விதிப்படி நடக்க வேண்டிய கார்யங்களில் ராஜி எப்படி செய்வது? “ஸத்யம் பேசு,, “குடிக்காதே,, என்ற விதியை ராஜியாகத் தீர்த்துக்கொள்ள முடியுமா? சிலர் அஸத்ய பேசலாமென்றோ, அல்லது சில காலத்தில் அஸத்யம் பேசலாமென்றோ இரண்டு கக்ஷியார் சேர்ந்து ராஜி செய்து கொள்ளலாமா? காந்திஜியின் உயிரான ஸத்யம், அஹிம்ஸைகளில் ராஜி பேச அவர் ஸம்மதிப்பாரா?

தேவாலய சுத்தி கெட்டு, ராஜ்யாஷ்டாத்திற்கு க்ஷோபம் ஏற்படக்கூடிய ஆபத்தான ஓர் அதர்மத்தில் ராஜி எப்படி ஸாத்யம்? தீண்டாதார் நுழையும் கோவில்களில் ஸான்னித்யம் குறையக்கூடாதென்று நாமாக உடன்படிக்கை செய்[illegible]மா? ஸான்னித்யம் போய்விடாதா?

குருவாயூர் கோவிலை பலியிடத்தயாரா என்று ஸ்ரீமான் ஸி. ஆர். கேட்பதிலிருந்து இதற்கு தார்மிகர்கள் ஸம்மதித்தால் மசோதாவை நிறுத்திக்கொள்ள அவர் ஸம்மதிப்பாரோவென்று ஊகிக்கக்கூடியதாயிருக்கிறது. ராஜிமூலம் மலையாளமசோதாவை தவிர்த்துக்கொள்ள அங்குள்ளவர்கள்இஷ்டப்பட்டால் சிலகோவில்களை விட்டுக்கொடுத்துவிட நேரும். இதை ஏதோ சிலர் மட்டும் சேர்ந்து தீர்மானித்து விடுவது நியாயமில்லை. உபயோகமுமில்லை.மலையாள தேசத்திய தார்மிகர்கள் உடனே பொதுஜனகூட்டத்தையும்,பண்டித பரிஷத்தையும் கூட்டிவைத்து அவைகளின் அபிப்ராயப்படி முடிவு செய்வதே யுக்தமாயிருக்கும். இவ்விஷயமாக தூதுகோஷ்டியார் மேற்கொண்டு என்ன செய்யப்போகிறார்களென்பதை அறியப்பலர் ஆவலுள்ளவர்களாயிருப்பார்கள்.

டிரஸ்டிகளின் அதிகாரமென்ன?

சென்னை ஹிந்து மதஸ்தாபன போர்டார் ஆலய டிரஸ்டிகளுக்கு ஆலயப்பிரவேச விஷயமாக அபிப்பிராயம் தெரிவிக்கும் படி அனுப்பியுள்ள சுற்றுக்கடிதத்தை அநுஸரித்து அநேக தேவாலய டிரஸ்டிகள் தெரிவித்துள்ள அபிப்பிராயங்கள் வெளிப்பட்டிருக்கின்றன. இவைகளில் அநேகடிரஸ்டிகள், சாஸ்திரங்களையும், நீண்டகால வியவஸ்தையையும்தங்களுடையபொறுப்பையும்மதித்து பதில் கூறியிருப்பது ஸந்தோஷிக்கத்தக்கது ஆயினும் சிற்சிலவிடங்களிலுள்ள டிரஸ்டிகள் தங்கள் அதிகாரத்தையும், யோக்யதையையும், பொறுப்பையையும் மறந்து ஸர்க்கார், அல்லது மதஸ்தாபன போர்டின் பிரீதியைப் பெற விரும்பி விபரீத அபிப்பிராயம் கொடுத்திருப்பதாகத்தெரிகிறது. ஆலயப்பிரவேசத்திற்கு ஸாதகமாக அபிப்பிராயம் தெரிவிக்கும் படிசில டிரஸ்டிகளை பயத்தாலும், பயத்தலும் சிலர்தூண்டியிருப்பதாகச்சில விடங்களில்பிரஸ்தாபிக்கப்படுவதை நம்பமுடிய வில்லை. ஆயினும் சில கோவில் டிரஸ்டிகள் என்ன துணிவினால் ஆலயப்பிரவேசத்தை ஆதரித்தார்களென்பது விளங்க வில்லை.

நமக்குத் தெரிந்த வரையில் தென்னிந்தியாவில் பெரும்பாலோரான ஆலய டிரஸ்டிகளுக்குசாஸ்திர ஞானமோ, ஆகம சாஸ்திர பரிசயமோ கிடையாதென்பது நிதர்சனம். அவர்கள் கோயில் பணத்தைப் பாதுகாக்க வேண்டியதொன்றே தாங்கள் கடமை யென்றுநினைத்துக்காலம்தள்ளிவருகிறவர்கள். இவர்கள் ஆலயப்பிரவேசம் போன்ற முற்றிலும் சாஸ்த்ர ஸம்பந்தமான பெரிய விஷயத்தில் தங்கள் இஷ்டப்படி விபரீதம் பேச என்ன அதிகாரமுளது? இவர்கள் அந்தந்த ஸ்தலத்திலுள்ள படித்த பெரியோர்களின் அபிப்பிராயத்தைக்கேட்டுத் தெரிந்து கொண்டனரா? கோவில் டிரஸ்டி பதவி கிடைத்தவுடன் தாம் எதையும் பேசலாமென்ற மமதையுடன் அவர்கள் நடந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது யல்லது நியாயமாக நடந்ததாக எண்ண இடமில்லை. இவர்களுடைய தான்தோனி அபிப்பிராயத்திற்கு ஸர்க்கார் கூட மதிப்பு வைக்கமாட்டார்கள்.

இவர்கள் தங்களுடைய ஸொந்த அபிப்பிராயப்படி நடக்க விரும்பினால் பொது ஜனஸ்தாபனத்தை விட்டு விலகி நின்று பேசுவதே யுக்தமாயிருக்குமே யல்லது வேறில்லை. சாஸ்திரப்படிப்போ, ஆஸ்திக்யமோ, பாபபயமோ, சிறிதும் இல்லாதவர்கள் கூட இத்தகைய பெரிய மத விஷயத்தில் துணிச்சலாக அபிப்பிராயம் கூற முன்வருவது கலியின் விந்தைகள் பல வற்றுள் ஒன்று போ[illegible]. இந்த டிரஸ்டிகள் தங்கள் வீட்டு விஷயத்திலும் தங்கள்பணம் முதலியவை விஷயத்திலும் இவ்வளவு தாராளமான மனப்போக்குக் காட்டினால் நல்லது. அப்படிச் செய்வார்களா?

வாரக்குறிப்புகள்.

ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. சர்மா.

இந்தூரில் இன்னும் மோசம்! சாரதா சட்டத்தைவிட அதிக நிர்ப்பந்தமங்கு. ஒவ்வோர் விவாஹமும் ரிஜிஸ்தர் செய்யப்பட வேண்டுமென்றது. நல்ல மந்திரி ஒருவரங்கில்லையா?

தேசீய ஆக்ஷியிலும் தற்கொலை! திருநெல்வேலியிலே ஓர் தொழிலாளி தினம் இரண்டணா கூலி கூடக் கிடையாமல் மனைவியுடன் தற்கொலை செய்துகொண்டு மாண்டார். நமது தேசதர்மத்தை அநுஸரித்தாலும், தேசிய ஸபை தேர்தல் காலத்தில் பேசிய பேச்சை கவனித்தாலும், இந்த மரணத்திற்காக தேசிய அரசாங்கம் தலைகுனிந்து பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டும்?

முதற்கடமை என்ன? பசியால் இறந்தவர் கிடையாதென நம்நாட்டு பழமொழி! ஒவ்வோர் கிராமாதிகாரி முதல் கலெக்டர் வரையிலுள்ளோரையும் யார்யார் எந்தெந்த தொழிலால் எப்படி ஜீவிக்கின்றனர், யார் உணவின்றி தொழிலின்றி தவிக்கின்றனர், என்று கணக்கெடுத்து சொல்லி பார்த்து பாதி வயிற்றிற்கேனு முணவு கிடைக்கும்படி செய்யவேண்டும்! ஆலய ப்ரவேசாதி ஆவேசத்தைப் பின்னர் கவனிக்கட்டும்?

நான் முஸ்லீமல்ல! ஹிந்துவல்ல! ஆண்டவன் ப்ரதிநிதி! எல்லோருக்கும் நன்மை புரிவதென்கடமை என்று காரைக்குடியில்(?) அவ்வூர் மந்திரி கூறினர். இதைப் பேச்சுடன் நிற்காமல் அனுஷ்டானத்திற்கு ஒவ்வோர் மந்திரியும் கொண்டுவந்தாலல்லவோ நாடு நலம்பெறும்!

நல்லபதில்!! தேவஸ்தான போர்ட் ஆலயப் பிரவேச ப்ரசார ஸபையாகி விட்டது! அது கேட்ட கேள்விக்கு நாங்குனேரி போன்ற சில இடங்களிலிருந்து மிக அழகாக பதில் கிடைத்திருக்கிறது. இங்ஙனம் ஒவ்வோர் தர்மகர்த்தாவும், இது அவசியமல்ல! தர்மமல்ல!! நியாயமுமல்ல! அவஸரமுமல்ல! என பதிலிருத்தல் வேண்டும்.

கோல்லங்கோடு ராஜர் வாழி! அவர் ஸ்ரீ சிங்கேரி ஸ்வாமிகளது அபிப்பிராயத்தையும் சேர்த்து எழுதி பலமாக ஷை மசோதாவை கண்டிக்கிறார். பலர் அவருக்கு ஸஹாயமாக நின்றால் மசோதா ஒழியும்!

யார்கேட்டது? இருப்பிடந் தெரியாதிருந்த தேவஸ்தான போர்ட் தேசிய ஆக்ஷியில் பல உபதேசஞ் செய்ய ஆரம்பித்துவிட்டது!! படக்காக்ஷிக்காரருக்கு படமெடுக்க ஆலயங்களை விடலாமாம்! உத்ஸவ ஸ்வாமிகளைப் படமெடுத்த விடக்கூடாதாம்.

போலீஸ் கவனிக்கவேண்டும்! இளையாங்குடியில் சில மஹம்மதிய துஷ்டர்கள் சந்தைக்கு செல்லும் இந்து ஸ்திரீகளைப் பரிஹாஸமாகப் பேசுவதும் திட்டுவதுமாக இருக்கிறதாம். சந்தையே நடவாமலிருந்து பிறகுஆரம்பிக்கப்பட்டதாம். பலஇடங்களில்உத்ஸவாதிகளில் இத்தகைய கார்யம் நடக்கிறது. எந்த ஜாதியினராயினு மித்தகைய செயலுக்கு இடமளிக்கலாகாது.

பாலக்காட்டில் ஸதஸத்! அஸத்கோஷ்டி, அரசாங்க பலம், கலிபலம், தனபலம், படைபலங்களைக் கொண்டு ஆலய ப்ரவேச அதர்ம ப்ரசாரமாரம்பிக்கிறது. சிஷ்டர்கள் தைவபலம், தர்மபலங்களைக்கொண்டு எதிர்த்து முதன் மந்திரியை பேட்டி காணப்போகின்றனர்! தார்மிகர் வாழி!

ராக்ஷஸ ராஜ்யமா? சென்னையில் பிராமண த்வேஷம் வாயோடிருந்தது. இப்போது அடிதடியிலு மிறங்கிற்று. கலாசாலை மாணவர் முதல் பிராமணச் சிறுவர்களை அடிக்கின்றனரெனில் இனி பிராமணர் கதி என்னாகுமென்று சொல்வதற்கில்லை. பிராமணரும் வரிசெலுத்தும் குடிகளே! மிக கடுமையான சிக்ஷையாலிதை நிறுத்தவேண்டும். ஒவ்வோர் அந்தணருக்கும் தற்காப்பு ஸகாயப்பயிற்சி செய்வித்து கையில் துப்பாக்கிதரவேண்டும்.

சென்னையில் மீண்டும் ஹிந்தி எதிர்ப்புக்கலஹம்.

சென்னை சூளையில் ஹிந்தி எதிர்ப்புக்காரர்கள் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்த முன்வந்தார்கள். ஆனால் கூட்டம் நடக்கவேண்டிய இடத்தில் முன்பாகவே ஹிந்தி ஆதரிப்புக்கூட்டத்தார் கூடியிருந்தனர். இருகக்ஷியினருக்கும் கைகலந்த சண்டை நடந்தது. போலீசார் வந்தனர். கற்கள் வீசியெறியப்பட்டன. சிலபோலீஸ்காரர்களுக்குக் காயம் ஏற்பட்டது. இம்மாதிரி இன்னும் சிலவிடங்களிலும் கலஹம் நடந்ததாகத்தெரிகிறது.

மதாசாரியப்பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.

காங்கிரஸ் தலைவரான மௌலானா அபுல் கலாம் அஸாத்தை மௌல்விப்பதவியிலிருந்து விலக்கிவிட காங்கிரஸ் விரோதிகளான லீக் கக்ஷியார் செய்த விஷமம் பலித்து விட்டது. இவ்வருஷத்திய ரம்ஸான் பண்டிகைத்தொழுகையில் அபுல்கலாம் அஸாத்திற்குப்பதிலாக வேறு ஒருவர் தொழுகை நடத்தினர்.

சென்னையில் முனிஸிபல் பாங்கிகள்.

சென்னையிலுள்ள 40 வார்டுகளிலும் கார்ப்பரேஷன் பாங்கிகளை ஸ்தாபித்து வீடுகட்டும் வேலை முதலியவைகளுக்குப் பணம் கொடுத்து உதவவேண்டுமென்று ஒருவர் கொண்டுவந்த தீர்மானம் கார்ப்பரேஷனில் நிறைவேறியது. இது பரிசீலனைக்கமிட்டிக்கு அனுப்பப்பட்டது.

சென்னை சட்ட ஸபை.

28வயன்று இதன் கூட்டம் ஆரம்பமாகியது. பல கேள்விகளுக்குப்பதில் அளிக்கப்பட்ட பின் கனம் மந்திரி ராஜன் தமது பொது ஸுகாதார மசோதாவை பொறுக்கு கமிட்டி பரிசீலனைக்கு அனுப்பப்பிரேரேபித்தார். இது நிறைவேறியது. பொதுஜன அபிப்ராயமறிய விட வேணு மென்று கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேறவில்லை. ஸபை நடந்து வருகிறது.

ஆலயப்பிரவேசத்தை நிஷேதிக்கும் ஆகம வசனங்கள்.

சென்ற வாரம் ஆர்யதர்மம் பத்திரிகையில் ஓர் நிருபர் ஆலயப்பிரவேசத்திற்கு எதிராக்வுள்ள ஆகம வசனங்களைப் பத்திரிகையில் வெளியிடுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார். எல்லா வசனங்களையும் பத்திரிகைகளில் வெளியிடுதல் ஸாத்யமல்ல. பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் முதலியவர்களால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ள “தர்மப்ரதீபம்” [illegible] புஸ்தகத்தில் மேற்படிவசனங்கள் ஏராளமாக ஓரிடத்தில் சேர்த்து எடுத்து அச்சிடப்பட்டிருக்கின்றன. மேற்படி புஸ்தகம் சென்ற வருஷம் சென்னையில் நடந்த பண்டித பரிஷத் சமயத்தில் தென்னிந்தியப்பண்டிதர் பலருக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆதலால் அங்கங்குள்ள பண்டிதர்கள் அப்புஸ்தகத்திலிருந்து வசனங்களை எடுத்து எழுதி கோவில் டிரஸ்டிகளுக்குக்கொடுத்துஉதவிசெய்யலாம்.

ஒரு நிருபர்.

கீதா டைரீ.

முந்துங்கள்.

1939-ஹு கீதாடைரீ (கோரக்பூர்) வெளியாய் விட்டது. 435 பக்கங்கள் இதில் உண்டு. ஒவ்வொரு தேதிக்கும் ஒவ்வொரு பக்கத்துடன் இரண்டு ச்லோகங்கள் வீதம் அழகான தேவநாகரி லிபியில் அமைக்கப்பெற்றது. ஹிந்தி, ஆங்கிலம் பங்காலி முதலிய பல பாஷைகளிலும் தேதிகள் உண்டு. டைரீ விஷயங்கள் எல்லாம் உண்டு. வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு. அதன் விலை [0-6-0] தபால் பில்லைகள் மூலம் 7-12-39க்குள் அனுப்பி பெயரை பதிவுசெய்து கொள்ளவும். ஸ்வல்பகாபிகளே உண்டு. பாக்கெட் ஸைஸ் [டைரி. அ. 3½. நீ, 6. அ.] 1. தபால் சிலவு தனி.

விலாசம்.

கே. ஆர். வி. சாஸ்திரீ, தஞ்சை ஜில்லா ஸோல் ஏஜண்டு c/o. ஆர்யதர்மம், கும்பகோணம்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Nellore.

திருவிரிஞ்சிபுரம்.

உ மார்க்கபந்து ஈஸ்வரர் ஆலய தலைக்கோபுர திருப்பணியை நடத்தி வைக்க விக்ஞாபனம்!

ஆஸ்திகோத்தமர்காள்!

செந்தமிழ் நாட்டின் கண் இத்திருவிரிஞ்சை ஸ்ரீமார்க்கபந்து தலம் பற்றிய விசேஷ மஹத்வம் யாத்ரீக உலகினர் அறிந்ததே. சுருங்கக் கூறுமிடத்து இத்திவ்யத்தலம் சோழவளமிக்க தொண்டநாட்டை, "முக்கனிச்சாறும் முகில் பொழில்நீரும்" பெருகும் பாலி நதிக்கரையில் ஸ்ரீ சக்தி பஞ்சாக்ஷரி அமைப்புடைய (நதி தலம் காடு, கிரி, மூர்த்தி) பொருத்தமுடைய பாஸ்கரக்ஷேத்திரமாய்த்தெய்வீக சிறப்புத்தோற்றமுடைய "திருவிரிஞ்சை மதிலழகு" என்ற பிரஸித்தியில் "மாகத வல்லிக் கொடியை நிகர்க்கும்" இடையோடு கூடிய ஸ்ரீ மரகதலதாம்பிகை சமேத ஸ்வயம்பு பிரஹத்லிங்காகார ஸ்ரீமார்க்க சகாயர் கோவில் கொண்டுள்ளதும் ஸ்ரீகௌரீ விஷ்ணு ஹரன் விரிஞ்சன் ஈசான்யன் நைருதி முதலாக தேவர்கள் பூஜித்து யுகா யுக மஹத்வம் பற்றிய புராண வாயிலாம் அறியக் கூடியது. முக்யமாக இதத் தலம் யாத்ரீக உலகில் வேதங்கள் போற்றும் காரண காமிகாகம மஹிமையில் பூகைலாயமாய் "அன்னவாகனங்கொண்ட அய்யனும், ஏன வாகனமுடைய அரியும் அருணையம் பதியின் கண்கோதிர் வடிவம் கூட்டி நிற்கும் பாமசிவத்தின் அடிமுடி தரிசனம் காணுவாம் வேண்டி முயன்ற அந்நாளில் அயனார் ஸ்ரீசக்தி பூஜிப்பில் தைப்புத்தலமாகிய இவன் தவயோக யாக முடித்து ஸ்ரீபரமசிவத்தின் ஆக்ஞை[illegible]மன் ஆதிசைவ கிருபாலகனாக அவதரித்து உயர் தோற்றமுடைய ஸ்ரீ மார்க்கசகாய மஹாலிங்கத்தை பூஜிக்க நண்ணுகையில் பாறனுக்கு இறங்கிய பாலகனைத் திருமுடி சாய்வுகாட்டி கடாக்ஷித்த அயிதிகம் கார்த்திகைத் திங்கள் கடை ஞாயிறு நாளில் காக்ஷியளிக்கவிருப்பதும், மற்றும் இதத்திற்கான காம்யமாய் மக்களுள் பீடிக்கவிருக்கும் பேய் பைசாச முனி மோஹினி டாஹினி முதலாக தீக்காற்றுகள் நீங்கவும் புத்திர சந்தான ஐஹிகா முஷ்மிக பலன்களை அடையப்பெறுவதற்கான ஆதர்சனமாய் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாளல் சக்ரப்ரதிஷ்டை ஸ்தாபனமுடைய சிம்ஹ தீர்த்த பொய்கையின் விசேஷத்தாலும் இதத்தலம் பிரக்யாதி கொண்டிருக்கிறது.

ஸ்ரீமதப்பய்ய தீக்ஷிதர் என்ற பெரியவாள் இத்தலத்தே அவதரித்து ஸ்ரீமார்க்கபந்தவையே குலதெய்வ வழிபாட்டில் ஸ்வானுபூதியில் பூஜித்து மடாலயம் ஸ்தாபித்து லீலை புரிந்துள்ள விசேஷத்தாலும் இத்திவ்யத்தல மஹிமை எம்மட்டும் சுருங்க அறியக்கூடாதது என்பதை ஆஸ்திகர்கள் அறியர்ப்பாலது எனவே, இத்யாதி பண்டைய போதாகம புராண சரித்திர பிரக்யாதியுடைய ஸ்ரீமார்க்கபந்து ஈஸ்வரர் ஆலய தலைக்கோபுரம் சுமார் 100அடி உயரம் 7நிலயங்களோடிருந்த புராதன கட்டடம் தக்கமாராமத்து இன்மைக்காரணமாய் சிதைந்து ஆபத்து நிகழாவண்ணம் சர்க்கார் உத்தரவின் கீழ் இடித்து வீழ்த்தப்பட்டிருக்கும் சீர்கேட்டை காணுவோர் மனம் பெரிதும் வருந்தக்கூடிய துன்பம் காரணமாகவே தார்மிக கொடைவள்ளல்கள் கவனித்து திருப்பணி முடித்து வைக்கக் கோரியே ஆஸ்திக சனாதன பிரசார சஞ்சிகையான "ஆரிய தர்மம்" வாயிலாய் இவ்விக்ஞாபனம் வெளியிட்டுக் கொண்டிருக்கிறேன்.

எப்பணியிலும் சிறந்தது தெய்வீகத் திருப்பணி. அதிலும் சிவாலய தலைக்கோபுர திருப்பணி செய்து முடிப்போர் குடும்ப விசேஷபலனை அடையு மென்பதும் உள்ளங்கை, நெல்லிக்கனி போல் அறியக் கூடியது. தானமாய் ஆலயம் தடாகம் சத்திரம் தர்ம நிலயங்கள் ஏற்படுத்தி வைப்பதைக் காட்டிலும் பண்டைய சிற்பங்கள் தர்ம ஸ்தாபனங்கள் பாதுகாத்து வருவதற்கும் சீரழிந்துள்ள கட்டடங்களை செப்பனிட்டு தக்க மாராமத்தில் புதுமை செய்தும் சாஸ்வதக்காலத்திற்கும் பிரத்யக்ஷ சோபையில் இருக்கவேண்டியதுமான இத்திருவிரிஞ்சை ஆலயதலைக்கோபுர திருப்பணி கைங்கரியத்தை நடத்திவைக்க தர்ம பிரபுக்களுக்கு எளியேன் தொண்டன் இவ்விக்ஞாபனம் சமர்ப்பித்துக் கொள்ளுகின்றனம்.

குறிப்பு: தலைக்கோபுரம் இடித்து வீழ்த்தப்பட்டு மூவாண்டுக்கு மேலாகிறது. அடிதளம் கருங்கல் கட்டடம் நீர் ஒழுக்குக்காரணமாய் அதுவும் தளர்ந்து கிடக்கிறது. தேவஸ்தானத்தில் இருப்பு நிதி ஒன்றும் கிடையாது. திருப்பணி முடிப்பிற்கு குறைந்தது ரூபாய் முப்பதினாயிரம் இருந்தால் மாத்திரமே ஒருவாறு ஷை கோபுரத்தை கட்டுவிக்கலாம். தர்மகர்த்தா அவர்கள் சிரத்தையில் ஒருவாறு கீழ்தள கருங்கல் கட்டடம் ஒழுக்கெடுக்காதிருக்க வேண்டி தற்காலிக மாராமத்து செய்யப்பட்டுவருகிறது. எனவே பூரா திருப்பணியையும் முடித்து வைக்க ஸ்ரீமார்க்கசகாயர் யார் யார் உள்ளம் குடிகொண்டு நிறைவேற்றிக்கொள்ள விருப்பதும் அறிகிலோம்! செல்வக்ஞானம் பலன் கொள்ளுமாக:

திருப்பணியில் ஏக்கமுற்றிருக்கும்
தொண்டன்
வி. எம். முனிரத்தினமய்யர்.

ஆலயப்பிரவேச அநீதி.

ஸ்ரீவானமாமலை மடத்தின் ஆக்ஷேபம்.

சென்னை ஹிந்துமத ஸ்தாபன போர்டார் அனுப்பியுள்ள கேள்விகளுக்கு ஸ்ரீவானமாமலை மடம் ஏஜென்டின் மூலம் ஷை மடத்தின் பதில் கீழ்கண்டபடி அனுப்பப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரி முதல் ஹிமய மலை வரை கோடிக்கணக்கான சிஷ்யர்களையும், நூற்றுக்கணக்கான கிளை மடங்களையுமுடையதாய், ஸ்ரீவைஷ்ணவ மடங்களில் தலைமை வகித்து விளங்கி வருகின்ற ஸ்ரீவானமாமலை தோதாத்திரி மடத்தின் பீடாதிபதி யென்ற நிலைமையிலும் அனேகம் கோவில்களுக்கு பரம்பரை டிரஸ்டி யென்ற நிலைமையிலும் தெரிவிக்கிற தீண்டாதார் ஆலயப்பிரவேச மறுப்பாவது:-

இவ்வுலகில் தொன்று தொட்டு விளங்கி வருகின்ற இந்து சாஸ்திரங்களையும் அதையே நம்பி நாளது வரை அதின்படி நடந்து வருகிற மூதவர்களின் ஒழுக்கங்களையும் எவர்கள் உறுதியாய் நம்புகின்றனரோ அவர்களே உண்மையான இந்துக்கள் என்று கருதப்படுபவர்கள். அந்த சாஸ்திரங்களில் கோவில்களின் மஹிமை, அமைப்பு, பிரதிஷ்டை, தொழும் ஸ்தலம் முதலியது விரித்துரைக்கப்பட்டிருக்கின்றன. அதையனுசரித்தே இன்று வரை எல்லா ஜாதியினரும் அவர்களது உரிமைப்படி தொழுது தெய்வ அனுக்ரஹம் பெற்று வருகிறார்கள். கோவில் விஷயத்திலும் தெய்வானுக்ரஹ விஷயத்திலும் மேற்படி சாஸ்திரங்களை நம்பி தொழுகையில் மாத்திரம் தங்கள் மனம்போனபடி இடமாற்றம் செய்யவிரும்புவது வைதிக இந்துக்களுக்கழகல்ல. அவர்கள் உண்மையில் வைதிக இந்துக்களாகவுமாட்டார்கள். அவர்கள் எவ்விதத்திலும் மத விஷயத்திலும் தீர்மானிப்பதற்கு உரியவர்களல்ல. இக்காலத்திலும் மத விஷயங்களில் மாறுதலை விரும்பாதவர்களே மெஜாரிட்டிகளென்பது சீர்திருத்த வாதிகளின் மனதொப்பிய விஷயம். மாறுதலை விரும்புவர்கள் கோவிலுட் புகுந்து வைதிக முறைப்படிதொழுது தெய்வானுக்ரஹத்தைப் பெற விரும்புபவர்களுமல்ல. மற்றப் பொது ஸ்தலங்களில் போல தாங்களும் கோவிலுட் புகுவதற்கு உரிமையுடையவர்களென்பதைக் காண்பிவிக்கவே அவர்கள் போராடுகிறார்கள். தீண்டாதவர்களின் ஆலயப்பிரவேசத்தால் இப்பொழுது கோவில் சென்று தொழுபவரும் வெறுப்படைந்து தெய்வ சான்னியத்யமும் குன்றி கோவிலின் நம்பிக்கையில்லாமல் தாங்களும் நாளடவில் கைவிட்டு கோவில்கள் பாழாகிவகுப்புக்கிளர்ச்சிகளும்பிரஜைகளுக்கு க்ஷேம குறைவும், ராஜீய வாதிகளுக்குள் பிளவும் ஏற்படக்கூடுமாகையால் இந்த ஆலயப்பிரவேச விஷயத்தில் சாஸ்திர விதிக்கும் நேற்று வரை நடந்த வழக்கங்களுக்கும் மாறாக எவ்வித மாறுதலையும் விரும்பாமல் இம்முயற்சியை மிகவும் அழுத்தமாக கண்டித்து எதிர்க்கவும் அவச்யமாயிருக்கிறது.

V. S நாராயண ஐயங்கார் ஏஜண்ட்.

ஆலயப்பிரவேசக் கண்டனம்.

நெரிஞ்சிப்பேட்டை ஸ்ரீ ஸ்வாமிகளின் அபிப்ராயம்.

கோயமுத்தூர் ஜில்லா பவானி தாலூக்கா வைசிய ஜகத்குரு ஸ்ரீ மத் திருவாலங்காடு இம்முடி அகோரதர்ம சிவாசார்ய மடாதிபதி ஸ்ரீஸ்வாமிகள் அவர்கள் ஸன்னிதானத்திலிருந்து—

மதராஸ் இந்து மத ஸம்பந்தமான இனாம்களைப்பொறுத்தபோர்டு ஆபீஸ் பிரஸிடெண்டு அவர்களுக்கு

தங்கள் ஆபீஸ் மெமோர்ரண்டம் நெ. 70 924 A/38 11-10-1938 ல். ஹரி ஜனங்கள் ஆலயப்பிரவேச விஷயமான அபிப்ராயம் கேழ்க்கப்பட்டிருக்கிறது.

ஹரி ஜனங்கள் ஹிந்து தேவாலயங்களில் தற்போது இருக்கும் நிலைமையைவிட மேலான நிலைமையிற் சென்று வணங்க எந்த விதத்திலும் உரிமையும் வழக்கமுமில்லை. ஆனதால் ஆலயப்பிரவேசம் எவ்விதத்திலும் சரியில்லை என்ற எமது அபிப்ராயத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஹரிஜனங்களுக்கு ஏற்பட்ட விதிப்படி கோபுர தர்சனம், உத்ஸவ தர்சனம் இவைகளாலேயே ஈசுவர கிருபை பெறலாம். இவ்விதமே நந்தனர் சிவமயமானர்.

தேவதா ஸான்னித்யத்தில் நம்பிக்கை இல்லாதவர்களே கோவில்களில் ஹரிஜனங்களைப்புகுத்த பிரயத்தனப்படுகிறார்கள். அப்படி அவர்கள் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு உள்ளே போக உத்தேசிக்கும் ஹரிஜனங்களும் அதேமாதிரி நம்பிக்கையற்ற சிறுபான்மையோர்களாகவே இருக்கிறார்கள். இவ்விதம் நம்பிக்கை யில்லாதவர்கள் உலகத்தில் ஸ்வயமரியாதை ஸித்தித்துவிட்டதென்று தீர்மானமான உடன் அவர்களுக்கு கோவில்களில் காரியமில்லாததால் கோவிலுக்குப்போவதை அவர்கள் நிறுத்திவிடலாம். நிஜமாய் சாஸ்திரத்தில் நம்பிக்கை உள்ளவர்களோ சாஸ்திரத்தில் நிஷேதிக்கப்பட்டவர்கள் கோவிலுக்குள் புகுந்துவிட்டதால் அங்கு ஈஸ்வர ஸான்னித்யம் இல்லை என்று தாங்கள் கோவிலுக்குப்போவதையும் நிறுத்திவிடலாம். இப்படிக்ரமமாய் வேடிக்கை பார்ப்பவர்கள் மாத்திரம் சிலகாலம் போய்க்கொண்டிருந்து பிறகு கோவிலே அழிந்து போய்விடுமோ என்ற அபிப்ராயத்தை இம்மசோதா ஸர்ஜிதப்படுத்துகிறது.

தேசிகன் தேன்மொழிகள்.

மதவிஷயத்தில் நடுநிலை.

2 ஸமூஹ பலம்.

உ:—தேசத்தை ஆளுபவர்கள் தன் மதத்தை ஜனங்களுக்கு நிர்பந்தித்தாவது புகட்ட வேண்டுமென்பதா தங்கள் அபிப்பிராயம்?

ம:—அப்படியல்ல மகமதியர்கள் பலாத்காரமாக இதரர்களைத் தங்கள் மதத்தில் சேர்த்துக்கொண்டாலும், அவர்கள் கருத்துப்படி அதில் ஆக்ஷேபிக்கக் கூடிய அம்சமாவது யுக்திக்கு விருத்தமான அம்சமாவது சொல்வதற்கில்லை என்பதை மாத்திரம் எடுத்துக் காட்டினேன். ஈசுவரனிடமும் தங்கள் நபியிடமும் அவர்களுக்கு இருந்த த்ருடமான விசுவாஸமே அவர்களுடைய மனோபாவத்திற்குக் காரணம். அது சிலாக்கியமேயாகும். ஈசுவரனையே மறந்தல்லவா தற்கால அரசாக்ஷி நடக்கிறது?

உ:—மனோபாவம் நல்லதாயிருந்தாலும், அதினால் நம்முன்னோர்களுக்கு எவ்வளவு ஹிம்ஸையும் கெடுதலும் ஏற்பட்டன?

ம:—வாஸ்தவம் ஆனால் அதற்கும் இரண்டு விதத்தில் பிரயோஜனம் இருந்தது. நம் மதத்தில் பற்றுதலும், ஆசாரமும் குறைந்திருந்த ஹிந்துக்களை, அவர்களுக்கு லௌகிகமாகச் சில ஸௌகர்யங்களை ஏற்படுத்திக் கொடுப்பதாகச் சொல்லியோ 'லௌகிகமாகச் சில அஸௌகர்யங்களை ஏற்படுத்திவிடுவதாக பயமுறுத்தியோ, ஸுலபமாக தங்கள் மதத்தில் மகமதியர் சேர்த்துக் கொண்டார்கள். நம் மதத்திலுள்ள அநேக நிர்பந்தங்கள் அங்கு கிடையாது. இவர்களும் மகமதியராகவே ஆகிவிட்டபடியால், நம் ஹிந்து ஜன ஸமூஹத்திலிருந்து வெளிப்பட்டு விட்டார்கள்.

உ,—இதெப்படி நன்மையாகும்? நம் ஸமூஹத்திற்கு நஷ்டமல்லவா?

ம:—இல்லை. நம் ஸமூஹத்தில் துர்பலமாகவும், நோயுற்றதாகவும் இருந்த அம்சங்கள் வெளிப்படுத்தப்பட்டு இனி அதில் மறுபடியும் சேர வழியில்லாமல் ஏற்பட்டு விட்டதால், பாக்கியுள்ளவர்கள் பலத்துடன் நோயற்று இருக்க முடிந்தது. நம் தேஹத்தில் தோன்றும் ஒரு ரத்தக் கட்டியை அறுத்து வெளிப்படுத்தினால், வலிக்கவும் வலிக்கும் நஷ்டமும் உண்டு, என்பது வாஸ்தவம். அதே மாதிரி, நம் ஸமூஹத்திலிருந்து ஒருவனை வெளிப்படுத்தி நம் ஜனத்தொகையைக் குறைத்தால், நம் முன்னோர்கள் மிகவும் சிரமப்பட்டுத்தான் இருப்பார்கள். ஆனால் தேகத்திலுள்ள இதர பாகங்கள் பலமாக ரோகமற்று இருக்கவேண்டுமென்றால், இந்த சிகித்ஸையைச் செய்துதானே ஆகவேண்டும்? கடைசியில் நன்மையைத் தருமல்லவா? தேகத்தில் எப்படியோ, அப்படியே ஜனஸமூஹத்திலும். அதின் பலமும், ஆரோக்கியமும் ஆகிருதியையாவது அங்கங்களின் எண்ணிக்கையையாவது பொறுத்ததல்ல; பிராண சக்தியையும் பலஹீனம் வியாதி இவையில்லாமலிருக்கும் தன்மையையுமே பொருத்தது. நம் மதத்திலுள்ள பற்றுதலை உத்டுடன் நிறுத்தி இதர ஸௌகர்யா ஸௌகர்யங்களைக் கருதாமலிருக்கச் சக்தியற்றவர்கள் நம் ஸமூஹத்தை விட்டு வெளியேறினால் நல்லதே. அவர்கள் வெளிப்பட்டதினால் நமக்கு நஷ்டமே கிடையாது. மதவிஷயமாகப் பொதுவாக ஏதோ அனுமதி இருக்கிறது என்கிறீர்களே. தற்கால ஜன ஸமூஹத்தைக் கவனியுங்கள். தன் மனதிற்குள் மகமதியராகவோ கிருஸ்தவராகவோ இருந்துகொண்டு, அவர்களைப் போல் நடை உடை பாவனைகளை வைத்துக் கொண்டு, ஹிந்து வல்லவென்று தோன்றும்படி ஒருவன் எவ்வளவோ நடந்து வந்தாலும், அவன் இக்காலத்தில் இன்னமும் ஹிந்து என்ற பெயரையே வஹிக்கிறான். அவனை ஹிந்துவல்லவென்று சொல்ல உங்களுக்கு அதிகாரம் கிடையாது. அவ்விதம் சொல்லிவிட்டால், உங்கள் பேரில் நஷ்டத்திற்கு நடவடிக்கையும் அவன் எடுக்கலாம். உங்கள் அடுத்த வீட்டுக்காரரோ, உங்கள் ஸகோதரர்தானோ, உங்கள் ஸம்பிரதாய ஆசாரங்களுக்கு விரோதமாய் நடந்தாலும், கிராமத்திலும் உங்கள் வீட்டிலேயேயும், இவரை நீங்கள் ஸஹித்துத்தான் தீரவேண்டும். உங்கள் ஸம்பிரதாயங்களையும் ஆசாரங்களையும் பார்த்து கொஞ்சமேனும் ஸஹிக்காமல் அவன் பரிஹஸிக்கலாம். நீங்கள் மாத்திரம் அவனுடைய நடத்தைக்கு ஆக்ஷேபிக்கக் கூடாது. ஆக்ஷேபித்தால், நவீன நாகரீகப்படி நீங்களே புத்தியற்ற பிடிவாதக்காரர்கள் ஆவீர்கள். ஆகையால், அவனை உங்கள் மத்தியிலேயே வைத்துக்கொண்டு, அவன் உங்கள் குடும்பத்தையும், குழந்தைகளையும் கெடுக்கிறதை நீங்கள் ஆக்ஷேபிக்காமல் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். இதுதான் நவீன ஸஹனம் என்பது.

உ:— அப்படித்தான் இருக்கிறது. ஆனாலும், இது நம் ஸமூஹத்தின் பலக்குறைவைக் காட்டுகிறதே யொழிய ஸர்க்காரிடம் என்ன தோஷம்?

ம:—ஸர்க்காருடைய உதவியில்லாத பக்ஷத்தில் எந்த ஜனஸமூஹம் தான் பலமாயிருந்து, தன் கட்டுப்பாட்டை மீறுகிறவர்களிடம் தன் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியுமா? போதாததற்கு, ஜன ஸமூஹத்தின் செல்வாக்கையே அடியோடு அறுத்து விடக்கூடிய காரியங்களை ஸர்க்கார் செய்வதாயிருந்தால், என்ன செய்ய முடியும்?

உ:—நம் ஸமூஹத்திற்குத் தாங்கள் சொல்கிறபடி மகமதியர் உதவிசெய்து வந்தார்களா?

ம:—எப்பொழுதும் செய்யவில்லை ஆனாலும் அவர்கள் உத்தேசிக்காமலிருந்தாலும் காரியாம்சத்தில் நம் ஸமூஹம் பலப்பட்டே வந்தது. நம் மதத்திற்கு விரோதிகளென்று பஹிரங்கமாய் அவர்கள் சொல்லிக்கொண்டபடியால், அவர்களை எதிர்க்க நாம் தயாராய் பலப்படுத்திக் கொண்டோம். நமக்குச் சத்துரு இருக்கிறான் என்று தெரிந்து நம் பலன்களை இன்னமும் பலப்படுத்திக் கொண்டோம் எங்கேயேனும் ஏதாவது ஸந்தேஹம் தோன்றினால், உடனே ஜாக்கிரதையாய் இருந்து கொண்டோம். கிராமம், ஜாதி, மதம் இவ்விஷயங்களில் ஸமுதாயசக்தி விழித்துக் கொண்டு ஜாக்கிரதையாய் பலத்துடன் இருந்துவந்தது. எதிர்ப்பு வரும் என்று எதிர்பார்த்தது, காலா காலத்தில் ஸரியானபடி தயார் செய்து கொள்ள முடிந்தது. பஹிரங்கமான யுத்தமானதினால், தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டி பலம் ஏற்பட்டது. இதுவே மகமதியர்கள் ஆளுகையில் ஏற்பட்ட மற்றொரு அனுகூலம்.

உ:—இது எப்படி அனுகூலம் என்றாவது இப்பொழுதுள்ள அமைதியான ஜீவனத்தை விட அது எப்படி சிலாக்கியம் என்றாவது தெரியவில்லை

ம:—ஒரு சத்துரு இருக்கிறான், அவனுடன் கலந்து போராட வேண்டும், என்று தெரிந்தால் அதற்குவேண்டிய ஆயுதங்களைக் கைப்பற்றித்தயாராகலாம். யுத்த களத்தில் நேருக்கு நேர் சத்துருவை எதிர்ப்பது சிரமமில்லை. உங்கள் கூடவேயிருந்து மித்திரனாக வேஷம் போட்டுக்கொண்டிருக்கிற சத்துருவை எதிர்ப்பது தான் மிகவும் சிரமம். நாம் பஹிரங்கமாக எதிர்க்கிற ஒரு புலியுடன் சண்டையிட முடியும்; நமக்குத்தெரியாமல் நம் ரத்தத்தில் கலந்து கொஞ்சம் கொஞ்சமாய் ஆனால் தாக்ஷிண்யமன்னியில், உயிரை குகிற விஷத்துடன் சண்டையிடுவது ஸாத்யமில்லை.

உ:—வாஸ்தவம்.

ம:-அப்படியேமகமதியர்கள் ஆட்சியில்நம் சத்துரு யார் என்று நமக்கு தெரியுமாதலால் எதிர்ப்பை எதிர்பார்த்துத்தயாரித்துக்கொள்ள முடிந்தது. இப்பொழுதோவென்றால், நமக்குச் சத்துரு யார் என்று தெரியாது. நம்மை எதிர்க்கவில்லை யென்று எல்லாரும் சொல்லிக் கொள்கிறார்கள். எதிர்க்கவில்லை யென்பதை நாமும் கேட்டுக்கேட்டு நம் பலத்தை மெல்ல இழந்து நிற்கிறோம். நமக்கு அபாயமேயில்லை யென்ற தவறுதலான எண்ணம் ஏற்பட ஏற்பட, இன்னமும் துர்பலமாகி வருகிறோம். ஹிந்து மத விருத்தமான எண்ணங்களும் ஆசாரங்களும் விஷம் போல் நம் ரத்தத்தில் கலந்து வருகின்றன, இது விஷம் என்று தெரியாமலும் தெரிந்து கொள்ள இஷ்டப்படாமலும் நாம் இருந்து வருவது தான் மிகவும் பரிதபிக்க வேண்டிய விஷயம். இந்நிலை மகமதியர்கள் நாளில் கிடையாது.

உ:—அப்படியானால் தற்கால ஸர்க்காரும் ஹிந்து மதத்திற்கு விரோதி என்று வெளிப்படையாகச் சொல்ல வேண்டு மென்று தங்கள் அபேக்ஷை?

ம:—நம்முடைய நன்மையைக் கருதினால், இப்பொழுது நம்மை க்ஷீணப்படுத்திவரும் "நடுநிலை"யை விட, அவ்விதம் சொல்லிவிட்டாலும் நல்லதேயாகும்.

உ:—அல்லது, இதர மதங்களுக்கு எதிரிடையாயிருந்து ஹிந்து மதத்திற்கு வேண்டிய உதவியைச் செய்யவேண்டுமென்று எண்ணமா?

ம:-இது ஸாத்தியமில்லையென்று தெரியும்.

உ—அரசாங்கத்தார் கிருஸ்துவர்கள்; பிரஜைகளோ பல வகுப்புக்களைச் சேர்ந்தவர்கள்; அவர்களுக்குள் ஒரு குறிப்பிட்ட வகுப்பின் கக்ஷியில் ஸர்க்கார்சேருவது ஸாத்தியப்படுமா?

ம:—இதினால் எல்லா மதங்களுக்கும் ஒரே மாதிரி ஆதரவு அளிக்கக்கூடாது என்று ஆகுமா?

உ:இப்பொழுது அப்படித்தானே செய்கிறார்கள்?

ம:—நீங்கள் நினைப்பது ஸரியல்லவா எல்லாமதங்களுக்கும் ஒரே விதமாய் ஆதரவு அளிக்கவேயில்லை. ஒருக்கால் எல்லா மதங்களுக்கும் ஒரே விதமாய் "அனாதரவு" காட்டுகிறார்கள் என்று வேண்டுமானால் ஆகும். அதையே நடுநிலை என்கிறார்கள்.

உ:—தங்கள் மதமில்லாத வேறு மதத்திற்கு அவர்கள் எப்படி ஆதரவு கொடுக்க முடியும்? தங்கள் மனச்சாக்ஷிக்கு விருத்தமாயல்லவா அவர்களைச் செய்யச் சொல்வதாகும்?

ம:—ஏதேனும் ஒரு மதாபிவிருத்திக்காக ஸர்க்காரிலிருந்து பணம் கொடுக்கவேண்டுமென்றாவது, அந்த மதஸ்தர்கள் க்ரமப்படி நடக்கிறார்களாவென்று பார்க்கவேண்டுமென்றாவது, நான் கொஞ்சமேனும் சொல்ல வரவில்லை.

உ:—வேறு விதத்தில் ஆதரவை எப்படிச் காட்ட முடியும்?

ம:—தாங்கள் மத விஷயங்களில் கொஞ்சமேனும் தலையிடாமலிருந்துகொண்டு அந்தந்த மதவிஷயமாய் அவரவர்களுக்கு பூர்ண ஸ்வாதந்திரியம் கொடுத்துவிடவேண்டும்.

உ:தற்கால ஸர்க்காரும் இதையே செய்யவில்லையா? மதவிஷயங்களில் தலையிடுகிறதில்லை. அவரவர்கள் மதஸ்வாதந்திரியத்தையும் பந்தோபஸ்து செய்தே கொடுக்கிறது.

ம:—பேருக்கு அப்படி யிருக்கலாம். காரியத்தில் இல்லை. விவரித்துச் சொல்கின்றேன் கேளுங்கள்.

(தொடரும்)

மானிடப் பிறவியின் மேன்மையும் மனிதனின் கடமையும்.

(காக்கழனி கிருஷ்ணமூர்த்தி.)

எறும்புகடை யானை முதலாகவுள்ள யாவற்று ஜீவராசிகளிலும் மனிதப் பிறவியே மேன்மையுடையது, ஏனைய ஜீவராசிகள் வாழ்வில் படுங்கஷ்டம் கொஞ்ச நஞ்சமன்று. பறவைகள் வேடன் கையம்பாலடிபட்டு சாகிறது. மீன்கள் வலையன் வலையிலகப்பட்டு மாள்கிறது. எறும்பு முதலான சிறிய ஜந்துக்கள்யாவும் மிதிபட்டும், இடிபட்டும், நசுக்குண்டும் நாசமடைகிறது. மாடு, குதிரை முதலான மிருகங்கள் மனிதர்கள் கையில் சிக்கி, பல பல தொந்திரவுகளையடைந்து, பலகாலும் உழைத்து உயிர் துறக்கிறது. சிறிய சிறிய ஜந்துக்களை அதனிலும் பெரிய பெரிய ஜந்துக்கள் புசித்து விடுகின்றன. பற்பல ஜந்துக்கள் மனிதனுக்கு உணவாகவேயாகின்றன. இவ்விதம் நரகப் பிராப்திக்கு ஹேதுவான திரியக்காதி ஜன்மங்கள் பலவற்றையுங் கடந்து ஒரு ஜீவனுக்கு மானுடப் பிறவி நேருவதென்றால், அது அருமையினும் அருமையேயாம். இதை நமறியவே,

"அண்டஜஞ் சுவேதங்க
ளுற்பிசஞ் சராயுதத்தோ
டெண்டரு நாலெண்பத்து
நான்கு நூறுயிரத்தா
னுண்டு பல்யோனிதோறு
மொழிந்து மானிடத்துதித்தல்
கண்டிடிற் கடலைக் கையினன்
நீந்தினன் காரியங்காண்."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதினால் "அரிதரிது மானிடராய் பிறப்பதரிது" என்றார் பெரியார்.

இயற்கையை சிந்திக்குமிடத்து, மனிதரைக் காட்டிலும் ஏனைய ஜீவராசிகளுக்குப் பல உயர்வான குணங்களிருப்பது வெளியாகும். மிருகங்கள் மனிதரைப்போன்று லச்சைகெட்டு பிச்சை எடுப்பதில்லை. பறவைகளில் ஆண் பெண் இரண்டும் இரை தேடிவரும். மனிதரிலோ ஒருவர் சம்பாதிப்பதை ஒன்பதுபேர் உட்கார்ந்து தின்றழிக்கிறார்கள். பக்ஷி ஜாதிகளிடமுள்ள தாம்பத்ய சுகமும் அன்னியோன்னிய அன்பும் மனிதரிடம் காண்பதரிது. பசுக்களுக்குப் பொறுமையும், குதிரைகளுக்குப் பெருமையும், யானைகளுக்குப் புத்திக் கூர்மையும், நாய்களுக்கு நன்றியறிதலென்ற உத்தமகுணமும், இயற்கையாகவே அமைந்திருக்கிறது. மனிதர்களுக்கோ அக்குணங்கள் கற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. தேனீக்களைப் போன்ற சுறுசுறுப்பும், சிலந்தியைப்போன்ற விடாமுயற்சியும், மனிதர்களிடம் அமைவதேயில்லை. குளவியைப்போலுள்ள ஊஹாபுத்தி ஒரு ஜீவனுமில்லை. அவைகள் கட்டும் கூட்டைப்பார்த்து ஒரு என்ஜினீர் (Engieer) கூட கற்றுக்கொள்ளவேண்டிய அம்சமுண்டு. மிகச் சிறிய ஜீவராசிகளில் கரையானைப் போன்ற பலம் பொருந்தியதாக மற்றொன்று காணப்படவில்லை. அவைகளுக்குப் பசியுமதிகம். அவைகள் பட்டுப்போன கட்டைகளையே பாழாக்கிவிட்டு, மஹாபலத்துடன் பூமிக்குள் பத்துப் பன்னிரண்டடி வரையில் தோண்டி, புற்றுக்களை உண்டாக்கி விடுகின்றன. இன்னும் எவ்வளவோ உயர்வான குணவிசேஷங்கள் பற்பல ஜீவராசிகளிடம் காணப்படுகின்றன. ஆயினும், அவைகளனைத்தையும் அடக்கியாளும் தன்மையை மனிதரடைந்திருப்பதால் மனிதரை உயர்வான ஜந்துவாய் சொல்லப்படுகிறது. அதற்கு மனிதரிடமுள்ள பகுத்தறிவே காரணமாகும்.

மனிதராய்ப் பிறப்பதிலும் கூன், குருடு, ஊமை, செவிடு, சொண்டி, முடம் முதலான அங்கஹீனமில்லாமல் அரோக திருடகாத்திரத்துடன் பிறப்பது அதனிலும் அரிதாம். அவ்விதம் பிறப்பினும், அவனுக்கு அசாச்வதமான போக, போக்கியங்களில் ஆசையற்று, போக சாதனமான பொருளாதிகளைத் தேடுவதில் ஊக்கங்குன்றி, தன் நன்மைக்கான அருளை நாடியடைவதில் சிரத்தை பிறந்து, நல்வழி நடந்து, சார்வ காலமும் சர்வேச்வரனை வழிபடல் அரிதினும் அரிதாம்.

இதை நாமுணரவே,

"மக்களாக்கையிற் பிறத்தலே
யரிது மற்றதினுந்
தக்க கூன்குரு டூமையைத்
துறத்தலு மரிது
நற்குலத்திடை வருதலு
மரிது ஞானத்தான்
முக்கணீசனுக் காட்படல்
முற்றிலு மரிதே"

என்றார் வள்ளலார்.

உலகில் ஒவ்வொரு ஜீவராசிக்கும் துக்கமின்றி சுகமாய் வாழவே இச்சை. மனிதரைத் தவிர ஏனைய ஜீவர்களின் முயற்சிகள் துக்க நிவர்த்தியைத் தேடுவதில் பயன்படா. பகுத்தறிவுள்ள மானிடரே நல்லதிது, கெட்டதிதுவென ஆய்ந்துணர்ந்துகொண்டு, தனக்குள்ள ஸ்வதந்திர முயற்சியால் துக்கத்தினின்றும் விடுபடமுடியும்.

இவ்வுலகவாழ்வில் ஜீவர்கள் அனுபவிப்பது பெரும்பாலும் துக்கமேயொழிய சுகமல்ல. அவிவேக தசையில் ஒருவனுக்கு உலகபோகங்கள் சுகம்போல் தோன்றினும், அதில் ஆசையுடன் அடைந்தனுபவித்த பின்பாவது, அவைகள் யாவும் துக்காஸ்பதமானவைகளெனக் காணும்படி நேரும். ஒரு விஷயத்தில் நமக்குப் பிரியமிருப்பின் அது சுகம்போலக் காண்கிறது. அதே விஷயம் மற்றவருக்கு பிடித்தமில்லாவிடில் அதன் பிராப்தி அவருக்கு துக்க ஹேதுவாகிறது. ஒவ்வொரு விஷயமும் கால, தேசங்களின் பேதத்தால் சுகமாகவும், துக்கமாகவும் மாறி, மாறி தோன்றுவதால், கேவலம் விஷயப் பிராப்தியால் துக்கம் போகவே போகாது. துக்க நிவிர்த்தியை உத்தேசித்து போக போக்கிய சாதனங்களையும், பொருளையும், புகழையும் தேடித்திரிவதில் யாதும் பயனில்லை.

தனம், பத்தினி, புத்திரர்கள், பலம், யசஸ்ஸு, வித்தை, புத்தி, தேகசௌந்தர்யம் முதலான போக சாதனங்கள்யாவும் அஸ்திரமானவைகளாயிருப்பதால், அவைகளின் நாசத்தில், சோகம் என்று முளையுண்டாகி, துக்கம் என்ற விருக்ஷமாய் வளர ஆரம்பிக்கிறது. துக்க நிவிர்த்தி என்பது இப்போக போக்கியங்களை அடையும் நோக்கத்தைப் பின்னிடுவதால் மட்டும் உண்டாகக்கூடியதாயிருப்பதால், விஷயாஸக்தியால் துக்க நிவிர்த்தியை விரும்புவது மோஹமேயொழிய வேறல்ல.

யாவரும் சுகத்தையே விரும்புவதாய் சொல்லிக் கொள்ளும்பொழுது, இவ்வுலகினர் எந்த விருப்பத்தை முன்னிட்டு விஷயப் பிரவிர்த்தி செய்கிறார்களென்று தெரியவில்லை. மனிதர்கள் சுகத்தையே விரும்புவதுண்மையானால், அதை அடைவதற்கு உலகபோக போக்கியங்களை அடைய பாடுபடுவதுதான் வழியோ? எதுவும் ஸ்திரமில்லாமலுள்ள இவ்வுலக ஆடம்பரத்தில் பார்வைக்குமட்டும் இவ்வுலகம் அழியாத தன்மைபோல் பாவிக்கப்படுகிறபடியால், இவ்வுலகை நம்பி, இதை சாச்வதமாய் நினைத்துள்ள ஓர் பிரமையில் சுகத்துக்காக பலபோகங்களையும் அடைய மோஹமானது உண்டாகிறதேயொழிய, உலகினர் செய்யும் காரியங்களை ஊஹிக்குமிடத்து ஒரு குருடனை பின்பற்றி தொடர்ந்து மற்றொரு குருடன் செல்வதுபோலவே அவிசார தசையில் விவகாரங்கள் நிகழ்கின்றன. விஷயப் பிராப்தியால் அழியாத சுகமேற்படுவதுண்மையாயின், ஒரு விஷயத்தை அடைந்தபின், மறுபடியும் வேறு விஷயத்திற்காக பிரவிர்த்தி தோன்றுவானேன்? துக்கம் போகும் வரையில் ஒவ்வொன்றையும் அடைந்தடைந்து, திரும்பவும் திரும்பவும் மற்றொன்றையடைய பிரவிர்த்திக்கச் செய்யும் கர்த்தவ்யம் ஓய்வதில்லை. அடிக்கடி கர்த்தவ்யமுண்டாகிக் கொண்டிருக்கும்பொழுது துக்க நிவிர்த்தியாவது சுகப்பிராப்தியாவது உண்டாகுமென்று கருதமுடியுமா? கர்த்தவ்ய சேஷமே துக்கத்தைத் தரும்வித்தாகும்.

சரீர அத்யாசம் (தேஹமே ஆத்மாவென்ற பாவம்) உள்ளவரையில் கர்த்தவ்யமில்லாமலிருக்க யாருக்கும் சாத்தியமில்லை. சக்கிரவர்த்தியும் தன்னிலையில் கவலைப்படுகிறான். பிச்சைக்காரனும் கவலையோடு திரிகிறான். அரசனும் அந்தப்புரஸ்திரீகள் அன்னியோன்னியமாயிராமல் பிரணய கலகம் செய்கிறார்களேயென்றும், புத்திரனில்லையேயென்றும், புத்திரனுள்ளவர்கள் புத்திரனின் தீர்க்காயுசைப்பற்றியும் அவன் புத்திமானாகி ராஜ்யபாரம் வஹிக்க திறமைசாலியாக வேணுமேயென்றும், இன்னும் சத்துருக்கள் பயம் முதலியதாலும் பல கவலையையடைகிறான். மஹரிஷிகளும் அன்னியோன்னிய சாபானுக்கிரஹ விரோதத்தால் கவலைப்படுகிறார்கள். தேவர்களுங்கூட அசுரர்களின் பிடைக்குப் பயந்து அறபது நாழியும் தூங்காமல் (இமையா நாட்டமுள்ளவர்களாய்) அவரவர்களுக்குள்ள ஜோலிகளை பார்ப்பதற்கும், போக போக்கியங்களை யனுபவிப்பதற்கும் சாவகாசமில்லாமல் சங்கடப்படுகிறார்கள். இன்னும் பாமரனோ, பண்டிதனோ, தரித்திரனோ, ஸ்ரீமானோ, சூரனோ, சோனியோ, அவர்கள் யாராயினும் பசி, பிணி, மூப்பு, துன்பம் இவைகளைக் கண்டஞ்சாமலும், மரணத்தைக்கண்டு நடுங்காமலும் இருக்கமுடியுமா? இவைகளுக்காக அவரவர்கள் ஏதையாவது செய்துதானே தப்பவேணுமென்று அவரவர்களுக்கும் ஏதாவதொரு முயற்சி தோன்றுகிறது. இவ்விதம் முயற்சிக்கும் கர்த்தவ்யம் எப்பொழுது ஓயும்? கர்த்தவ்யமென்ற காலசர்ப்பத்தால் கடியுண்டு, விஷசமானமான விஷயப் பிரவிர்த்தியுண்டானபின், எவ்விதம் சுகமுண்டாகும்? தேகமுழுமையும் வெந்து தவிக்கும்பொழுது காலில்மட்டும் சந்தனம் பூசுவதுபோலும், அம்பு பாய்ந்து அவதிப்படும் மார்பில் அப்ஸரஸ்திரீயின் ஆலிங்கனம் நேருவதுபோலுமுள்ள விஷயானந்தங்களில் அத்யந்தமான துக்க நிவிர்த்தி ஒரு நாளும் உண்டாகமாட்டாது. இதிலிருந்து யாருக்கும் சரீர அத்யாசமுள்ள வரையில் துக்க நிவிர்த்தியில்லையென ஏற்படுவதால், இனி சரீர உற்பத்திக்குக் காரணமான கர்மம் நசிக்கும் வழியைக் காண, பிரபஞ்சத்தை நம்பும் பொய்யறிவை விட்டு, யதார்த்தத்தைக் காணும் மெய்யுணர்வை வளர்ப்பதே மானிட சரீரம் பெற்ற மனிதனின் கடமையாகுமென்பதை நாம் உணருவோமாக.

(தொடரும்)

'ஸௌந்தர்ய லஹரீ.'

காபி ஒன்று விலை ரூ. 1—8—0
தபால் சிலவு பிரத்யேகம்.
கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.

யோகசாஸ்திர நிரூபணம்.

இராமர்:—இராமாயணத்தின் துவக்கத்தில் நாரதர் வால்மீகிக்கு சொன்ன ஸங்க்க்ஷேப இராமாயணத்தில் இராமரை "ரக்ஷி ர ஜீவலோகஸ்ய தர்மஸ்ய பரிரக்ஷிதா" வென்று சொல்லியிருக்கிறார். இதின் அருத் ம் இராமர் எல்லா ஜீவன்களையும ரக்ஷிக்கப் ட்டவர் என்றுகிறது. அப்படியானால் இரா ர் எல்லா ஜீவராசிகளிலும் அந்தர்யாமியாக இருந்துகொண்டு அவைகளை வேலை செய்யும் டி செய்கிற ஆத்மாவென்று அருத்தம் செய்ய இடமுண்டு. மேலேகண்ட இராமா ணச் சுருக்கத்தில் இராமரை ஸாதாரண ஜனங்கள் பார்க்கமுடியாதென்றும் தபஸ் செய்கிற விச்வாமித்திரர் வஸிஷ்டர் முதலியவர்கள்தான் பார்க்கமுடியுமென்றும் அடியில் கண்ட சுலோகங்களால் தெரிகிறது. "இக்ஷ் வாகு வம்சப்ரபவஹ ராமோனாம ஜனைச்ரு தஹ" இதன் அருத்தம் இராமரை ஸாதாரண ஜனங்கள் காதால்தான் கேழ்க்கலாமேயொழிய நேரில் பார்க்கமுடியாது என்றும் அருத்தம் செய்யலாம் விச்வாமித்திரர் தச ரதரிடம் "அஹம்வேத்மி, மஹாத்மானம் ராமம் ஸத்திய பாரக்கிரமம். வஸிஷ்டோபி மஹா தேஜாஹா ஏசேமேதபஸி ஸ்திதாஹா" என்று சொல்லிருக்கிறார் இதின் அருத்தம் இராமர் மஹாத்மாவென்றும் அவரை விச்வாமித்திரர், வஸிஷ்டர் இன்னும் மற்ற தபஸ் செய்கிறவர்கள்தான் பார்க்கமுடியும் என்று இருப்பதால் இராமர் எல்லா ஜீவன்களுக்குள்ளும் அந்தர்யாமியான ஆத்மாவென்று [illegible] இடமிருக்கிறது. மேலும் இராமருடைய தகப்பனாரான தசரதரை [illegible] என்று அருத்தம்செய்ய இடமிருக்கிறது. "தச்" என்றால் பக்ஷியைப்போல் கொத்தக்கூடியது என்று அருத்தம்செய்யலாம். ஆகையால் தசரதர் என்றால் பக்ஷியை ரதமாக உடையவர் என்று அருத்தம்செய்ய இடமிருப்பதால் தசரதரை விஷ்ணு என்று அருத்தம் செய்யலாம். இராமரை விஷ்ணுவின் அம்சமாக இராமாயணத்தில் சொல்லப்பட்டிருப்பதால் அவரை விஷ்ணுவின் அம்சமாகிற ஆத்மாவென்று அருத்தம் செய்வதுடன் அவரும் தசரதரும் ஒன்றுதான் என்றும் அருத்தம் செய்யலாம். மேலும் இராமரை "ரக்ஷிதா ஜீவலோகஸ்ய" என்று சொன்னபடியே தசரதரையும் "பர்தா ஸர்வஸ்ய ஜெகதஹ ஸ்தாவரஸ்ய சரஸ்யச" என்று தசரதரையும் எல்லா ஸதாவரம் ஜெங்கமங்களுக்கும் நாதன் என்று சொல்லி இருப்பதால் தசரதரும் இராமரும் ஒன்று என்று அருத்தம் செய்ய இடம் கொடுக்கிறது. மேலும் தசரதரை ஒரு மனுவைப்போல ஆண்டார் என்று வால்மீகி சொல்லி இருப்பதாலும், ஒரு மன்வந்தரம் என்பது 71 சதுர்யுகம் அல்லது அநேக 71 ஆயிரவருஷங்கள் என்று சொல்லி இருப்பதாலும்; தசரதர் அநேகம் 60000 வருஷங்கள் ஆண்டதாயும் இராமரை அநேகம்11000வருஷங்கள் ஆண்டதாயும் சொல்லி இருப்பதால் அவர்கள் இருவர்களும் ஆண்டுவந்த வருஷங்களைக் கூட்டினால் ஒரு மன்வந்தரமாகிற அநேக 71000 வருஷங்களாவதாலும் அவர்கள் இருவர்களும் ஒருவர்தான் எனது நிச்சயமாகச் சொல்ல இடம் கொடுக்கிறது. மேலும் இலக்குமணரை இராமருடன் காட்டிற்கு அனுப்பும்போது ஸுமித்திரையானவள் இலக்குமணனிடம் "ராமம் தசரதம் விதிதி," என்று சொல்லி இருக்கிறாள். அதினால் இராமரும் தசரதரும் ஒன்று என்ற ரஹஸ்யத்தை இங்கு வால்மீகி வெளியிட்டிருப்பதாய் நினைக்க இடமுண்டு.

இலெக்குமணர்:—ஏற்கனவே மேலே சொல்லியிருக்கும் சுலோகத்தில் இவரை இராமருடைய சரீரத்திலுள்ளபுத்தி என்று அருத்தம் செய்திருக்கிறது. அது ஸரி என்று அருத்தமாகும்படி வால்மீகிஇராமாயணத்தில் அடியில்கண்டபடி சொல்லியிருக்கிறார். பால காண்டத்தில் இலக்குமணரை எப்போதும் இராமருடன் கூட இருப்பதாயும் இராமர் வேட்டைக்கு குதிரை ஏறிப்போகும்போது இலக்குமணர் வில்லுடன் அவர் பின்னால் போவதாயும் சொல்லி இருக்கிறார் "யதாஹி ஹயமாரூடோமிருகயாம்யாதி ராகவஹ ததைனம் ப்ருஷ்டதஹ அப்யேதி ஸதனுஹு பரிபாலயன்" ஆனால் இந்த சுலோகத்தில் இலக்குமணர் வேறு குதிரைமேல் போனார் என்றாவது அல்லது கால் நடையாய் போனாரென்றாவதுசொல்லப்படாததால் அவர்இராமருடைய குதிரையிலேயே ராமருக்குப் பின்னால் உட்கார்ந்து போனார் என்று அருத்தம் பண்ண இடமிருப்பதாலும் அப்படி இரண்டு ராஜகுமாரர்கள் போகவேண்டிய அவசியமாவது வழக்கமாவது இல்லாததால் இலக்குமணர் இராமர் சரீரத்திலிருக்கும் புத்தியாக சொல்ல இடமுண்டு. மேலும் விச்வாமித்திரர் தசரதரிடம் இராமரை மட்டும் கேட்டாலும் இலக்குமணரும் அவர் கூடவே அனுப்பப்பட்டதாலும் இராமருக்கு மட்டும் விச்வாமித்திரர் பல அதிபல என்ற மந்திரங்களையும் அஸ்திர சஸ்திரங்களையும் கொடுத்து அவைகளை உபயோகிக்கும் வழியும் சொல்லிக் கொடுத்தும் அவைகளை இலக்குமணரும் தெரிந்து கொள்ளுகிறார், கங்கைக் கரையில் இராமரும் இலக்குமணரும் தூங்கும்போது விச்வாமித்திரர் மறுநாள் வெடியுமுன் அனுஷ்டானம் செய்ய இராமரை மட்டும் எழுப்பினாலும் இலக்குமணரும் எழுந்துவிருகிறார். இந்த காரணங்களால் இராமரும் இலக்குமணரும் ஒரே சரீரத்திலுள்ள இரண்டு தத்வங்கள் என்று அருத்தம் செய்ய இடமுண்டு. மேலும் யோக சாஸ்திரப்படி புத்தியானது வெளியில் நடக்கும் விஷயங்களை தன்னிடத்தில் அலைரூபமாய் வரும் விருத்திகள் மூலமாக தெரிந்துகொள்வதாக தெரிவதாலும் ஸம்ஸ்கிருத பாஷையில் அலைகளுக்கு "ஊர்மி" என்று பெயருதலாலும் இலக்குமணருடைய பெண்சாதிக்கும் "ஊர்மிளா" என்று பெயர் இருப்பதாலும் இலக்குமணர் புத்திதான் என்று நிச்சயமாகச் சொல்ல இடமுண்டு. மேலும் கடைசியாக இராமர் பிரஹ்மலோகத்திற்குப் போகுமுன் யமதர்மராஜன் இராமரை அவருக்கு இந்த பூமியில் வசிக்க வேண்டிய காலம் ஆகிவிட்டதென்று ஞாபகப்படுத்தவந்தபோது இராமர் இலக்குமணரை, யமன் தன்னுடன் பேசிவிட்டுப் போகும்வரை ஒருவரையும் தானிருக்குமிடத்திற்கு விடாமல் வாசலில் காத்துக்கொண்டிருக்கும்படி உத்திரவு செய்தபோது துர்வாஸஸ் என்ற ரிஷி இராமரைப் பார்க்க வேணுமென்று வந்ததை இராமரிடம் தெரியப்படுத்த இலக்குமணர்போனபோது இராமர் அவரை தன் உத்திரவுக்கு மீறிவந்ததாக கோபித்து அவரை இனி தன் முகத்தில் விழிக்கக்கூடாதென்று வெளியே போகச் சொன்னதானது மிகவும் அநீதி என்று படுமாதலாலும் இராமர் அப்படி செய்யமாட்டார் ஆகையால் இலக்குமணரை புத்தி எனறு அருத்தம் செய்தால்தான் அவரை இராமர் வெளியே போகச்சொன்னது உசிதமாக ஆகும். ஏனென்றால் ஆத்மா சரீரத்தை விட்டு போகுமுன் புத்தி வெளியே பிரிந்து போகிறது. வழக்கமாக இருக்கிறது.

பரதன்:—பரதனை இராமரைப்போல் உருவமிருந்ததாக சொல்லியிருப்பதாலும் ஆத்மாவினுடைய சாயை சித்தத்தில் விழுவது ஜீவனென்று அத்யாத்ம இராமாயணத்தில் சொல்லி இருப்பதாலும் ஆத்மாவின் சாயை ஆத்மாவைப்போல் உருவமுள்ளதாதலாலும் பரதனை ராமர் சரீரத்திலுள்ள ஜீவனாக சொல்லலாம். மேலும் சரீரத்தில் ஆத்மா ஸாக்ஷியாக இருந்துகொண்டு இருப்பதாலும் சரீரம் செய்யவேண்டிய காரியங்களை ஜீவன் நடத்துவதாலும் பரதன் என்ற பெயருக்கு காரியங்களை வகிக்கிறவன் என்று அருத்தம் செயய இடமிருப்பதாலும் பரதனை ஜீவன் என்று அருத்தம்செய்வது உசிதமே மேலும் இராமர் காட்டிற்குப் போனார் என்பதை அவர் அதுமுதல் யோகநிஷ்டையிலிருந்து தபஸ் செய்ததாக அருத்தம் செய்ய இடமிருப்பதால் அந்த காலத்தில் பரதனாகிற ஜீவன் ராஜ்யமாகிற சரீரத்தின் காரியங்களை நடத்தி வந்தான் என்பதும் உசிதமே.

சத்துருகனன்—இவன் இன்ன தத்தவமென்று அறிய இவன் பெயரே இடம் கொடுக்கிறது. சத்துருக்னன் என்ற பதத்திற்கு சத்துருக்களைக்கொல்லுகிறவன்என்று அருத்தம். இவனை வால்மீகி "சத்துருக்னோ நித்ய சத்துருக்னஹ" என்றும் "சத்துருதாபனஹ" என்றும் சொல்லி யிருப்பதாலும் இவன் லவணாஸுரனைக் கொன்று அவன் பட்டணமாகிற மதுபுரியில் 12 வருஷம் ஆண்டான் என்று உத்திர காண்டத்தில் சொல்லியிருப்பதைத்தவிர இவன் வேறு சத்துருக்களைக் கொன்றதாக முதல் ஆறு காண்டங்களிலும் சொல்லப்படாததாலும் இவனை வால்மீகி "நித்யசத்துருக்னஹ" என்று சொன்னது ஸரி அல்லவென்று ஸாதாரண அருத்தத்தில் தோணுகிறது. ஆனால் இராமரை யோகாநுஷ்டானம் செய்ததாக அருத்தம் செய்திருப்பதால் அந்த யோக நிஷ்டைக்கு விருத்திகள் ஸதா சத்துருக்களாக இருப்பதாலும், "யோகஹசித்த விருத்தி நிரோதஹ" என்று முதல் யோகஸூத்திரம் சொல்வதாலும் சத்துருக்னன் சித்த விருத்திகளை அடக்கும் சித்தத்திலுள்ள சக்தியாக அருத்தம்செய்தால் அவனை நித்ய சத்ருக்னஹ" என்று சொன்னது உசிதமாக இருப்பதால் அவனை சித்சக்தியாகிற 'சேதனு' என்று சொல்வது ஸரியாகத்தோன்றுகிறதுமேலும் கீதையின் 13வது அத்யாயம் 7வது சுலோகத்தில் 'சேதனு' என்பதை சரீரத்திலுள்ள ஒரு தத்வமாகவும் சொல்லி இருக்கிறதும் பொருத்தமாக இருக்கிறது. இராமர் காட்டிற்குப் போனதை அவர் யோக நிஷ்டையிலிருந்தார் என்று அருத்தம் செய்தால் அவருடன் கூடப்போன இலக்குமணன்தன் பெண்சாதியான ஊர்மிளையை தன் கூட கூட்டிப்போகாமல் அவளை சத்துருக்னன் இருந்த இடத்தில் விட்டிருந்தார் என்பதும் யோகசாஸ்திரப்படி பொருத்தமாக இருக்கிறது. ஏனென்றால் சத்துருக்னனாகிற சேதனு அலைரூபமான விருத்திகளை சித்தத்திலேயே அடக்கிவிட்டால் அந்த அலைரூபமான விருத்திகள் புத்தியாகிற இலக்குமணன் யிடம் போக இடமில்லை. இது சத்துருக்னன் சேதனுதான் என்பதையும் இலக்குமணர் புத்திதான் என்பதையும் உருதிப்படுத்துகிறது.

இராமாயணத்தில் சொல்லப்படும் மற்றவர்களை சரீரத்திலுள்ள இன்ன தத்வங்கள் என்றும் அதில் சொல்லிய இடங்களை சரீரத்தில் உள்ள இன்னபாகமென்றும் அவர்களை பத்திய சரித்திரம் பின்னால் சொல்லும்போது சொல்லி அதற்கு காரணங்களையும் விபரமாக சொல்லுகிறேன்.

நாமமுடைய சரீரத்திற்கும் இராமாயண சரித்திரம் நடந்த இந்தியாவுக்கும் ஒத்துமை இருப்பதால் இராமாயணத்திற்கு இந்தியாவிலும் சரீரத்திலும் நடந்ததாயும் இருவிதமாய் அருத்தமாகும்படி வால்மீகி எழுதினதற்கு இடம்கொடுத்தது. இந்த ஒத்துமை இருப்பதை அந்தந்த இடங்கள் வரும்போது விவரிக்கப்படும்.

25257


அநாவசியமாக ஏன் - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

மண் பாத்திரத்தின் மேன்மை.

சமையலுக் கேற்றது.

சர்க்கார் அறிக்கை.

சர்க்கார் பின்கண்ட அறிக்கையை நமக்கு அனுப்பியிருக்கிறார்கள்:—

இந்தியக் குடும்பங்களில் (1) பானை, சட்டிகள், மாக்கல் பாண்டங்கள் (2) இனாமல் சாமான்கள் (3) கண்ணாடி சாமான்கள் (4) உலோக சாமான்கள் முதலியவற்றை உபயோகிக்கிறார்கள்.

சட்டி பானைகளும் மாக்கல் சட்டிகளும்.

இந்த சாமான்கள் மிகவும் விலைக்குறைவானதல்லாமல் சுகாதாரத்துக்கும் ஏற்றவை சாப்பாடு சாமான்களை இவை கெடுப்பதில்லை உடைந்துபோகும் என்பதைத் தவிர மற்ற எல்லா விதத்திலும் இவை ஏற்றவை உபயோகித்த பிறகு நன்றாகக் கழுவி காற்றிலும் வெய்யிலிலும் நன்கு காயவைக்க வேண்டும்.

பீங்கான் இனாமல் பாத்திரங்கள்.

இவற்றை அடுப்பில் வைத்து உபயோகிக்க முடியாது. பளபளப்பான சாமான்கள் சில சமயங்களில் விஷக் கலப்புற்றவையாகவிருக்கின்றன. உள்ளும் புறமும் தடவியிருக்கும் வர்ணங்களாலேயே இது ஏற்படுகிறது. முக்கியமாக பல வியாதிகள் ஏற்படலாம்.

கண்ணாடி பாத்திரங்கள்.

நமது நிலைமைக்கு இந்த சாமான்கள் ஏற்றதல்ல. உடைந்துபோனால் இதனால் பல சங்கடங்களேற்படுகின்றன. சிறிது உடைந்துபோன சாமான்களை உபயோகிக்கக் கூடாது உடைந்தால் சிறிய தூள்களை ஜாக்கிரதையாக எடுத்து ஜன நடமாட்டமில்லாத இடத்தில் போடவேண்டும்.

உலோக பாத்திரங்கள்.

உலோகத்தால் செய்யப்பட்ட பாத்திரங்களை சொற்பமாகவே உபயோகிக்கவேண்டும் உலோகபாத்திரங்கள் காற்றினாலும் தண்ணீராலும் பாதிக்கப்படுகின்றன. பாத்திரங்களை நன்றாகத் துலக்குவதாலும், மாவு தடவி அடுப்பில் வைப்பதாலும், புளி தடவி சுத்தி செய்வதாலும் பல கெடுதல்களை நிவர்த்திக்கலாம்.

உலோக பாத்திரங்களில் ஈயபாத்திரங்கள் தான் மிக விஷத்தன்மை பொருந்தியன. ஈயபாத்திரங்களில் ஏற்படும் உப்புவகையறாக்கள் விஷத் தன்மையுள்ளவைகையால் அப்பாத்திரங்களில் சமைக்கப்படும் சாமான்களால் தேக அசௌக்யமேற்படுகிறது. பித்தளை செம்பு பாத்திரங்களில் சமையல் செய்வதும் தேகாரோக்யத்திற்கேற்றதல்ல. அலுமினியப் பாத்திரங்களை பால் காய்ச்சவும் தண்ணீர் கொதிக்க வைக்கவும் உபயோகிக்கலாம்.

பழவூர்.

கீர்வாண வாணி பரிஷத்.

நாளது பஹுதான்யஹு கார்த்திகைமீ 5உ ஞாயிற்றுக்கிழமை (20-11-38) மாலை 3-30 மணிக்கு ஷை ஊர் வேத பாடசாலையில், வேதாந்த பாடசாலை அத்யாபகர் ப்ரம்மஸ்ரீ, S. V. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் "தலைமையில்" கீர்வாண வாணி பரிஷத்தின் 2-வது கூட்டம் நடைபெற்றது. ஷை வேதபாடசாலை மாணவன் 'பரமேச்வரன் என்பவருடைய மங்கள சரணத்திற்குப் பிறகு தலைவர் முன்னுரையில் எல்லோரும் ஸம்ஸ்கிருத பாஷையைக் கற்றுக்கொள்ளவேண்டிய ஆவச்யகத்தையும், ஸம்ஸ்கிருத பாஷை இறந்த பாஷை என்னும் வாதத்தைக் கண்டித்தும், ஸம்ஸ்கிருதத்தில் அழகாக எடுத்துரைத்தார்கள். பிறகு வேத பாடசாலை அத்யாபகர் ப்ரம்மஸ்ரீ. காசி கனபாடிகள் அவர்கள் "தானமகிமை" என்னும் விஷயத்தை அனேக கோட்பாடுகளுடனும், உதாஹரணங்களுடனும், ஸம்ஸ்கிருதத்தில் எடுத்துரைத்தார்கள். பிறகு அல்லூர் வேத பாடசாலை அத்யாபகர் ப்ரம்மஸ்ரீ, L. S. ராமச்சந்திர கனபாடிகள் "கடோபநிஷத்தாத்பர்யம்" என்னும் விஷயத்தை தமிழில் விஸ்தாரமாக எடுத்துரைத்தார்கள் பிறகு ஷை வேதபாடசாலை வித்யார்த்திகளான கிருஷ்ணன், சுப்பிரமணியன் என்பவர்கள் ஸம்ஸ்கிருத பாஷையைக் கற்றுக்கொள்ளவேண்டிய ஆவச்யகத்தைக் குறித்து ஸம்ஸ்கிருத பாஷையில் சிறிய ஸம்பாஷணை செய்தார்கள். பிறகு தலைவர் தன்னுடைய பின்னுரையில் இச்சபையின் நோக்கங்களை வந்திருந்த மகா ஜனங்களுக்கு எடுத்துரைத்துவிட்டு, இப்படியே ஒவ்வொரு சபைக்கும் எல்லோரும் வந்திருந்து சபையை நடத்துபவர்களுக்கு உத்ஸாகத்தை உண்டுபண்ண வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

பிறகு கார்யதரிசியால் வந்திருந்த மகா ஜனங்களுக்கும், உபன்யாஸகர்களுக்கும் வந்தனம் தெரிவிக்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

K. N. நடேசசர்மா. பொக்கிஷதார்.

மதிப்புரை.

தேவி தோத்திர மஞ்சரி.

இப்புஸ்தகம் யாழ்பாணம் பிரம்மஸ்ரீ தி. சதாசிவஅய்யர் அவர்கள் இயற்றிய, தமிழ்உரை, தமிழ் மொழிபெயர்ப்புச் செய்யுள்களுடன் சேர்த்து சென்னை பி. ஜி. பால் & கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்த புஸ்தகத்தில், ஸ்ரீமந்த்ர மாத்ருகா புஷ்பமாலாஸ்தவம், கௌரீதசகம், ஸ்ரீராஜராஜேஸ்வரீ அஷ்டகம், இவைகளின் வடமொழி மூலமும் அடங்கியிருக்கிறது. மேற்கண்ட ஸ்தோத்திரங்கள் ஆஸ்திகர்களால் தினந்தோறும் ஸ்ரீ அம்பாள் அநுக்ரஹத்தை விரும்பி பாராயணம் செய்யப்பட்டு வருகிறவைகள். ஆனால் ஸம்ஸ்கிரு [illegible] வர்களுக்கு மாத்திரம் இவை பிரயோஜனப்பட்டு வந்தன. அந்த பாஷையில் பரிசயம் இல்லாதவர்களும் மேற்படி ஸ்தோத்திரங்களைப் படிக்கவும், அவற்றின் பொருளை நன்கு அறிந்து கொள்ளவும் ஸௌகர்யம் ஏற்படும்படி ஸ்ரீமான் சதாசிவய்யர் அவர்களால் இப்புஸ்தகம் தயார் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ் மாத்திரம் தெரிந்தவர்களும் இவற்றைப்பாராயணம் செய்வதற்கேற்றபடி தமிழ் செய்யுள் நடையாகவும் அவை ஆக்கப்பட்டிருக்கின்றன. கடைசியில் அரும்பத அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது தேவி பக்தர்களுக்கு இப்புஸ்தகம் மிக்க உபயோகமுள்ளது. விலை அணா 6 பி. ஜி. பால் அண்டு கம்பெனி புத்தக வியாபாரிகள் சென்னை என்ற விலாசத்திலும், ஸிலோன் அளவெட்டி ச. முத்துசாமி அய்யரிடமும், மேற்படி தனலெக்ஷ்மி புத்தகசாலையிலும் விலைக்கு கிடைக்கும்.

கும்பகோணம்.

வன போஜனம்.

நமது நகர் யாகசாலைத்தெரு ஸ்ரீ லக்ஷ்மீநாராயண ஸ்வாமி கோயிலில் சென்ற கார்த்திக பகுள பஞ்சமி ஸ்திர வாரத்தன்று பல மாத்வ ப்ரமுகர்களின் நன் முயற்சியால் வன போஜனம் சென்ற வருஷத்தைக்காட்டிலும் அதிக விமரிசையுடன் நடத்தப்பட்டது. விசேஷ பூஜை அலங்காரம், நைவேத்தியத்துடன் சுமார் 800 பேருக்கு பிராம்மண ஸந்தர்ப்பணை செய்யப்பட்டது. இதைப் போலவே இந்த தர்மத்தை பிரதி வருஷமும் நடத்தி ஸ்ரீ கார்த்திகா தாமோதரனின் கிருபைக்குப் பாத்திரர்களாகும் படி ஷை ப்ரமுகர்களையும் பொருளுதவி செய்த கனவான்களையும் அதில் ஈடுபட்டு வினய பக்தர்களையும் வேண்டுகிறோம். எம். ராம ராவ்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd, Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்

4/23 ஸ 48

10-1938

21526

1

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 JAN 1939
MADRAS

215260

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 கும்பகோணம் கலி 5040 பகுதான்யஹு கார்த்திகைமீ 23உ 1938ஹு டிஸம்பர்மீ 8உ ஸ 48

உ
ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தர்யை நம.

விரைவில் வெளிவரும் ! உயர்ந்த புஸ்தகம் ! !

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

மூலம் நாகரத்திலும், தமிழிலும்,

ஸ்ரீமான் G. V. கணேசய்யர், B. A., B. L.,
எழுதிய தமிழுரையுடனும், விசேஷ குறிப்புகளுடனும் கூடியது.

ஸ்ரீ பாஸ்கரராயர் பாஷ்யத்தை அனுஸரித்தது.

டிம்மி $\frac{1}{8}$ அளவில் சுமார் 1000 பக்கங்கள் கொண்டது.
முழு காலிகோ பயின்டு.

ஸ்ரீ அம்பாள், ஸ்ரீ பாஸ்கரராயர்,
ஸ்ரீசக்ரம் படங்களுடன் கூடியது.

விலை ரூ. 4.] [தபால் V.P.P. செலவு 0—12—0 தனி.

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தந ப்ரின்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. ஸீதாராம் டென்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

தேசிகன்! தேன்மொழிகள்.

3. அரசாங்க உதவி.

ம: விதேச அரசாங்கத்தாரும், அவர்களைப்போல் பாவனையை யடைந்திருக்கும் நம்மில் சிலரும், நம் நோக்கம் நம் ஆசாரம் இவை என்னவென்று அறியாதவர்கள். மதம் என்றால் நித்தியப்படியுள்ள காரியங்களுக்கு ஸம்பந்தமன்னியில் வெளிப்பட்டதாய் அஸாதாரணமாய் உள்ள ஏதோ ஒன்று என்று நினைக்கிறார்கள். உண்மையான ஹிந்துக்கோவென்றால், மதமும் நித்திய ஜீவனமும் ஒன்று; எவ்விதமான காரியத்திலும் மதம் கலக்கும். ஸமூஹ விஷயங்கள் வேறு, மத விஷயங்கள் வேறு, என்பது அவன் ஸம்பந்தமாய்க் கிடையாது. மதம் என்பது மனித வாழ்க்கையில் ஒரு சில்லரையான அம்சமே என்று பாவித்து வருகிற ஸர்க்காருக்கு விவாஹம், ஸத்ஸந்ததி, ஸம்வியவஹாரம், தாயபாகம் முதலானவைகளும் மதஸம்பந்தப்பட்டவைதான் என்றால் எப்படி அர்த்தமாகும்? ஆகையால், இவைகள் எல்லாம் மதஸம்பந்த மற்றவையென்று சொல்லி, இவ்விஷயங்களில் தலையிடுகிறார்கள். ஆகையால், மதவிஷயத்தில் நாங்கள் தலையிடுகிறதில்லையென்று அவர்கள் சொல்லிக்கொள்வது வாஸ்தவமில்லை; அதிலும், ஹிந்துக்கள் விஷயமாய்க் கொஞ்சமேனும் வாஸ்தவமில்லை. மகமதியர்கள் ஆளுகை செய்யும் காலத்தில் இவ்விதமாகக் கொஞ்சமேனும் தலையிட்டிருப்பதும் கிடையாது, [illegible] கிடையாது, என்பதை ஞாபகப்படுத்துகிறேன். நம் மதத்தை பந்தோபஸ்து செய்கிறது என்றால், அதற்கு ஒருவிதம் தான் உண்டு. ஒரு மதத்தைச் சேர்ந்த பிரஜைகள் அவரவர்களுக்கு ஏற்பட்ட தர்மங்களை ஸரிவர நடத்திவருகிறார்களாவென்று கவனிக்க வேண்டிய பொறுப்பை வஹிக்கிற மதாசார்யர்களுக்கு ஸர்க்கார் தன் பலத்தைக் கொடுத்து உதவவேண்டும். அதாவது, அந்தந்த மதத்தலைவர்கள் தங்கள் ஆக்ஞையை நிறைவேற்றிக் கொடுக்க ஸர்க்காருடைய லௌகிக பலத்தை அபேக்ஷிக்கும் விஷயத்தில் உடனே உதவவேண்டும்.

உ: அதெப்படி நாம் எதிர்பார்க்கலாம்? ஹிந்துப் பிரஜைகளை ஹிந்துமதப்படி நடத்த வேண்டிய பொறுப்பை ஒரு கிருஸ்துவ அரசாங்கத்தார் வஹிப்பார்களா?

ம: ஏன் கூடாது?

உ: எப்படி யிருந்தாலும் இதுமாதிரி உதவி மகமதிய அரசாங்கத்தார் காலத்தில் ஒருநாளும் கிடைத்திராது.

ம: நீங்கள் நினைப்பது தவறு. உதாஹரணமாக, மைஸூர், ஹைதராபாத் ராஜ்யங்களில் அரசாண்டுவந்திருக்கிற மகமதிய அரசர்கள் ஸ்ரீ சிருங்கேரி மடத்தில் அப்பொழுதுள்ள ஆசார்யார்களுக்கு எழுதியிருக்கும் சில கடிதங்கள் இன்னமும் இருக்கின்றன. அவைகளில் மத விஷயமாக ஆசார்யர்கள் செய்யும் ஆக்ஞைகளைக் கூடவிருந்து ஸரிவர நிறைவேற்றிக்கொடுக்கும்படி தன் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குக் கட்டளையிட்டிருப்பதாகத் தெளிவாகக் காண்கிறது.

[1791-ம் வருஷத்தில் டிப்பு ஸுல்தான் தன் ஸர்தார் ஒருவருக்கு மகம்மதுக்கு அனுப்பிய உத்திரவில் சிருங்கேரிமடத்து ஆசார்யர் "அவர்களுடைய சிஷ்யர்களில் தர்மத்திலிருந்து விலகினவர்கள் விஷயமாய் விசாரணை செய்யவேண்டிய ஸௌகர்யங்களைச் செய்து கொடுக்கவேண்டும்" என்று கண்டிருக்கிறது.

1779 ல் ஹைதராபாத் நைஜாம் பிறப்பித்த உத்திரவில் "ஸ்ரீமடத்து சிஷ்யர்கள் [illegible]லும் ஹரீஸ் அன்னியில் இறந்தால் அவர்கள் சொத்து ஸ்ரீமடத்தையே சேரவேண்டியது" என்றும், "சிஷ்யர்களுடைய தர்மாநுஷ்டானங்கள் விஷயமாகத் தீர்மானிக்க ஸ்ரீ ஸ்வாமிகளே முக்கியாதிகாரி" என்றும் காணப்படுகிறது.

அப்படியே 1843ல் நைஜாம் சிருங்கேரி ஸ்ரீமத் ஆசார்யார் அவர்களுக்கே எழுதியிருக்கும் கடிதத்தில் "பதினெட்டு ஜாதிகளிலும் உள்ள ஸகல ஜாதியார்களும் அவரவர்களுக்கு ஏற்பட்ட தர்மங்களை அனுஷ்டிக்கிறார்களாவென்று விசாரிக்கவும், அவரவர்களை அவ்வவ் வனுஷ்டானங்களில் நிலை நிறுத்தவும் தாங்களே மேலான அதிகாரியாயிருக்கிறீர்கள்" என்றும், "மத விஷயத்தில் ஆசார்யரின் ஆக்ஞைகளை யாரும் மீறக்கூடாது" என்றும், உத்திரவிட்டிருப்பதாகவும் கண்டிருக்கிறது].

உ: இப்படியெல்லாம் இருந்திருக்கமுடியுமென்றே நான் நினைக்கவில்லை.

ம- மகமதிய அரசாங்கத்தார் விஷயமாய் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் மனோபாவனை எல்லாம் ஒரு தலையாய் எழுதப்பட்டிருக்கிற கிரந்தங்கள் மூலமாகவே ஏற்பட்டதல்லவா? இன்னமும் ஜாஸ்தி ஆச்சர்யப்படக் கூடிய விஷயங்களும் இருக்கின்றன. அதே மடத்திற்கு டிப்பு ஸுல்தான் எழுதிய ஒரு கடிதத்தில் "ஸமீபத்தில் ஸம்பவிக்கப்போகும் யுத்தத்தில் ஜயம் ஏற்படவேண்டியதற்காக ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்தில் தன் செலவில் அவசியமான வைதீக காரியங்களைச் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்" என்று ஆசார்யரைக் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

உ: [illegible] தான் இருக்கிறது. மதக்கிறுக்குப் பிடித்தவன், மிகவும் மத மாற்றல் விஷயத்தில் பலாத்காரம் செய்தவன், என்றல்லவா டிப்புவுக்கு பேர் கிளம்பியிருக்கிறது?

ம: நான் முன் சொன்னபடி, இது மாதிரிக் கதைகளில் அதிகமாக நம்பிக்கை வைக்க இடமில்லை. ஸ்ரீமடத்திற்கு அவன் எழுதிய கடிதங்களும், தன் ஆயுள் முடிவுவரை பூர்ணய்யா என்ற பிராஹ்மண மந்திரியையே வைத்துக்கொண்டிருந்தானென்பதும், மறுக்கத் தகாதப் பிரமாணங்களாகும். அநேக விஷயங்களில் அவன் மட்டுக்கு மிஞ்சி நடந்திருக்கலாம். அதிலும் மேலே சொல்லியபடி ஈசுவரனிடத்திலும், அவ்வீசுவரனை அடைய ஒரே ஸாதனமாய் அவனுக்குத் தோன்றின தன் மதத்திலும், அவனுக்கிருந்த த்ருடமான விசுவாஸத்தினால்தான் ஏற்பட்டிருக்கும்.

உ;—மகமதியர்கள் காலத்தில் எப்படியிருந்திருந்தபோதிலும், தாங்கள் அபேக்ஷிக்கிறபடி இப்பொழுதுள்ள ஸர்க்கார் உதவுவார்கள் என்று நினைக்க இடமில்லை.

ம:—அப்படியானால், ஜாஸ்தி ஆதாவும் உதவியும் ஏற்படக்கூடிய ஆட்சிவரும் வரை காத்திருக்க வேண்டியதுதான்.

உ:—ஏன் அப்படி? லௌகிக ஆதரவுக்கு ஏன் இவ்வளவு மஹிமை கொடுக்கிறீர்கள்?

ம:-தேச சரித்திரம் எல்லாம் இப்படியே தெரிவிக்கிறது. இத்தேசத்தில் நம் மதத்தை ரக்ஷித்துப் பரவச் செய்வதற்காக ஈசுவரனே ஸ்ரீசங்கராசார்ய ரூபத்தைத் தரித்து அவதரித்தபோதுகூட, ஸுதன்வா என்றவோர் அரசனுடைய லௌகிக உதவியைத் தேடியடையவில்லையா? ஸர்வக்ஞரான ஸ்ரீமத் வித்யாரண்ய ஸ்வாமிகளும் வைதிக தர்மத்தை முன் நிலைமைக்குக் கொண்டுவரப் பார்த்தபோது, தனக்கு உதவியாயிருக்கும் பொருட்டு விஜயநகரம் என்ற ஹிந்து ஸம்ஸ்தானத்தை ஏற்படுத்திக்கொள்வது அவசியமென்று நினைத்து ஏற்படுத்தவில்லையா? சிருங்கேரியில் பூர்வாசார்யாயிருந்த பெரியார் ஸ்ரீமத் சங்கராசார்யாரின் ஜன்ம பூமியான காலடி க்ஷேத்திரத்தில் அவர் மூர்த்தியை பிரதிஷ்டை செய்யும் காலத்தில், "பரமாசார்யருடைய மேதையையும் ஸாமர்த்தியத்தையும் எனக்குக் கொடுத்தாலும் கூட, ஸுதன்வாபோன்ற அநேக அரசர்களின் ஸஹாயமும் கிடைத்தால்தான் நம் மதத்தைப் பாதுகாக்க என்னால் பிரயத்தனம் செய்ய முடியும்" என்று வியக்தமாய்ச் சொல்லவில்லையா? இப்பொழுதிருக்கும் நிலைமையில் நாங்கள் சக்தியற்றவர்களே.

ஓர் ஸந்தேஹம்.

அச்வத்த விருக்ஷத்திற்கு வேப்பமரத்தை பத்னியாக வைத்து விவாஹம் நடத்துவருகிறது? இது எந்த இடத்தில் கூறப்பட்டிருக்கிறது என ப்ரமாண வசனத்தைப் பெரியார் எழுதும்படி வேண்டுகிறேன்.

ஓர் ஸந்தேஹி.

வகுப்புத்வேஷத்திற்கு 3 வருஷத்தண்டனை

சென்னை பாவலர் என்பவர் ஹிந்தி எதிர்ப்பு பிரசாரியார்ப்பத்தில் வகுப்புத்வேஷத்தையும், வகுப்பு நிந்தையையும் செய்ததாய் விசாரிக்கப்பட்டுவந்த வழக்கில் மாஜிஸ்ட்ரேட் அவருக்கு 3 வருஷக்கடினக்காவல் தண்டனை விதித்தார்.

அத்யாத்மயோகம் அல்லது ஆத்மப்பயிற்சி.

குருதாஸ் இயற்றியது. திவான்பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளது முகவுரையுடன் கூடியது.—எளிய தமிழ் நடையில் உள்ளது. முற்றிலும் அநுபவங்கள் நிறைந்தது. பற்பல ஆதாரங்களுடன் கூடியது. பகவத் விஷயத்தில் ஈடுபட்டுள்ள ஸஹோதர-ஸஹோதரிகளுக்கு அத்தியாவசியம் உள்ளது. எல்லா மதத்தினர்களுக்கும், கொள்கையினருக்கும் ஓர் துணையாயிருப்பது. காமகோடி ஸ்ரீ ஜகத்குரு, ஸ்ரீ ரமணரிஷி, ஸ்ரீ ராமாநந்த ஸ்வாமி முதலிய மஹான்களது அனுக்கிரஹம் அடைந்தது. ஹிந்து, சுதேசமித்திரன், ராமகிருஷ்ண விஜயம், ஆர்யதர்மம், முதலிய பல பத்திரிகைகளாலும், ஸ்ரீமான் A. S. P. அய்யர் I. C. S. அட்வகேட் திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர் முதலிய பல வித்தியா நிபுணர்களாலும் போற்றப்பட்டுள்ளது. 15 அத்தியாயங்கள் உள்ளது. 308 பக்கங்கள் கொண்டது. ஐந்து மகான்களினது படங்கள் ஆர்ட்டு பேபரில் உள்ளது.

விலை காலிகோ ரூ. 3—0—0 ராப்பர் ரூ. 2—8—0 தபால்சார்ஜ் தனி.

கிடைக்குமிடம்:— "ஆர்யதர்மம்" ஆபீஸ், கும்பகோணம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS JAN 1939 MADRAS

மாணவர்களும் ராஜீய விஷயமும்.

ஆபஸ்தம்பர் உபதேசமென்ன?

மஹாகனம் சாஸ்திரியர் வைஸ் சான்ஸலராக இருந்துவரும் அண்ணாமலை கலாசாலையில் மாணவர்கள் கட்டுக்கடங்காமல் நடந்து விட்டனர். அதிகாரிகளின் உத்தரவைமீறி மறியல் செய்தார்கள். புரொபஸர்களோ, அதிகாரிகளோ மாணவர்களை நல்வழிப்படுத்த முடியவில்லை கடைசியாக மாணவர்களின் மறியலை தவிர்ப்பதற்காக சிறிதுகாலம் காலேஜை மூடிவிட்டனர்.

யுனிவர்ஸிடி மாணவர்கள் சிலரை நான் ஸந்தித்துப்பேசினேன். அதனின்றும் அங்கு மாணவர்களிடம் ராஜீய உணர்ச்சி அதிகம் காரணமாகவே அவர்களிடை அடங்காநடத்தை தோன்ற ஆரம்பித்ததென்று நிச்சயமாகத்தெரிகிறது. மாணவர்களிடையில் ஒரு கக்ஷியினர் அபேதத்தை ஆதரிப்பவரென்றும் மற்றொரு கக்ஷியினர் காந்தீயத்தை ஆதரிப்பவர்கள் என்றும் தெரிகிறது. படிப்பு காலத்திலேயே காலேஜைச் சேர்ந்த மாணவர் சிலர்பொது ஜனக்கூட்டங்களில்கலந்து ராஜீய விஷயங்களை உபந்யாஸம் செய்ததாகவும் அறிகிறோம்.

காலேஜ் மூடிவிட்ட செய்தியை பத்திரிகைகளில் படித்ததும் ஆபஸ்தம்ப மஹரிஷியின் உபதேசம் என் மனத்திற்கு வந்தது. ராஜீயங்களில் கலக்காதே என்று பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் காட்டிலிருந்து மாணவர்களை உபதேசித்த மஹர்ஷியின் தீர்க்கதரிசனத்தை நான் உணர்ந்தேன். அவரு [illegible] அவருடைய உபதேசம் உண்மை என்று நிரூபிக்கும் இந்த ஸம்பவத்தை மனப்பூர்வமாக வரவேற்றேன். இந்தஸம்பவத்தில் மகரிஷிகளின் மஹிமை வெளியானதற்கு ஞாபக சின்னம் ஏற்படுத்த வேண்டு மென்பதும் என் கோரிக்கை.

மாணவர்கள் படிப்புங்காலத்தில் தங்கள் கவனத்தை வேறுவிஷயத்தில் செலுத்துவது விரும்பத்தக்கதில்லை. நல்ல அறிவை பெறவே மாணவர்கள் படிக்கிறார்கள். வேறு கவனமின்றிப்படிப்பதால் அறிவு வளரும். மேதாவிகளான மாணவர்களின் பிற்காலமே தான் ஸமூஹத்திற்கு மிகவும் பயன் படும்.

மேலும் மாணவர்கள் படிக்கும் காலம் பால்யகாலம். இச்சமயத்தில் இவர்கள் எதையும் அநுபவபூர்வமாக தீர்கதர்சனத்துடன் சிந்திக்க அவகாசம் கிடைக்காது. இக்காலம் உணர்ச்சிமிகுந்த காலம். உணர்ச்சிமிகுதியால் இவர்கள் எதையும் செய்ய முற்படக்கூடிய காலம். ராஜீய விஷயங்களோ சாவதானமான தீர்க்க தர்சனத்துடன் சிந்திக்கவேண்டியவை. ஆகவே மாணவர்கள் ராஜீய விஷயங்களில் பங்கெடுத்துக்கொள்ள இடமில்லை. இன்றுள்ள உலக ராஜீய சரித்திரமும் மாணவர்கள் ராஜீய விஷயத்தில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாதென்றே போதிக்கிறது. இந்தியாவிலும், ராஜீய உணர்ச்சியின்மிகுதியால், பிற்காலத்தில் தேசவாழ்விற்கும், தனது குடும்பவாழ்விற்கும் விசேஷ உதவியை செய்யக் கூடியதும், மதிப்பு வாய்ந்ததுமான, யௌவன காலத்தில் ராஜீய இயக்கத்தில் ஈடுபட்டு கொலை முதலியவைகளைச் செய்ததாகக்குற்றஞ்சாட்டப்பட்டு, தேசமகாஜனங்களும் தாய், தந்தை, ஸம்சாரம், இவர்களும் கண்ணும் கண்ணீருமாக நிற்க, தூக்குமேடைக்கு அநுப்பப்பட்டும், நீண்ட சிறைவாசத்தண்டனை விதிக்கப்பட்டும், சிறையிலேயே இறந்தும், போன நூற்றுக் கணக்கான வங்காள மாணவர்களின் சரித்திரமும் மாணவர்கள் ராஜீயத்தில் கலப்பதை நிச்சயமாக எச்சரிக்கின்றது.

உலக நாகரீகம் எவ்வளவு முன்னேற்றமடைந்தாலும் ப்ருகிருதியை அது மீறிவிடாது. மாணவர்களுடைய காலம் படிப்பு காலம் என்பதும், தீர்க்கதர்சிகள் சிந்திக்க வேண்டியதே ராஜீய விஷயங்கள் என்பதும் ஸ்வபாவ ஸித்தம். உலகம் எவ்வளவு தூரம் நாகரீகத்தில் ஏறி விழுந்துகொண்டிருந்தாலும் இது மாறி விடாது.

நாகரீகம் இதை மாற்றவும் முடியாது. இவ்வுண்மைகள் தீர்காதர்சனத்துடன் மிகுந்த பொறுப்புடனும் உலகை கவனிக்கும் மஹான்களுக்கே தோன்றும். இதை உணரும் மஹான்கள் ராஜீயத்தில் மாணவர்கள் பங்கெடுக்கக் கூடாதென்றே தடுப்பார்கள்.

ஆபஸ்தம்ப மஹர்ஷி, ப்ராஹ்மசர்ய நியமங்களைச் சொல்லுகையில் "அஜனவாதசீல" என்று சொல்லுகிறார். இதற்கு ப்ராஹ்மசாரி ராஜீயத்தையே கவனிப்பவனாக இருக்கக்கூடாதென்பதே பொருள். ப்ராஹ்சாயம் என்பது இங்கு படிப்புக்காக ஏற்பட்ட காலமே. அந்த சமயத்தில் மாணவர் நடந்து கொள்ள வேண்டிய முறையைச்சொல்லுகையில் மேற்கண்டபடி சொல்லுகிறார். ராஜீயத்தையே எப்பொழுதும் கவனிப்பவனாக இருக்கக் கூடாதென்று கூறினாலும் ராஜீய ஞானம் அவச்யமென்பதை அவர் வெளியிடுகிறார்.

இதனால் மஹர்ஷியின் படிப்புக்கொள்கை மிகவும் முற்போக்கானதென்பது ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது. ராஜீயத்தில் மாணவர்கள் கலப்பதை தடுப்பதால் ஸமூஹத்தின் நன்மையை ஆழ்ந்து கவனித்திருப்பது நன்கு வெளியாகிறது. ஸ்வபாவஸித்தமான விஷயங்களை அடிப்படையாக கொண்டு உபதேசிப்பதால் இவ்வுபதேசத்திற்கு எக்காலத்திலும் மாறுதல் கிடையாது. இது போன்ற உண்மையை அறியும் யாரும் நமது மஹர்ஷிகளைக்கொண்டாடுவார்கள். நமது ஸ்மிருதிகளில் எவ்வளவு முற்போக்கான திட்டங்களிருக்கின்றன வென்பதை உணர்வார்கள். இந்த ஆச்ரமத்தை கவனிக்கும் எந்த மேதாவியும், வர்ணாச்ரம தர்மம், ஏட்டுச்சுரைக்காய் அன்று. வர்ணாச்ரம தர்மத்தின் போரால் மஹர்ஷிகள் ஸ்வப்நம் காணவில்லை, ஏதோ ஒரு காலத்தில் மட்டும் உபயோகிக்கக்கூடியவைகளை அவர்கள் உபதேசிக்கவில்லை. மஹர்ஷிகள் ப்ரயோஜனமற்ற மூடத்தனத்தால் மட்டும் நம்பவேண்டிய காரியங்களை மகான் மீது சுமத்தவில்லை, எல்லா காலங்களுக்கும் பொருந்தக்கூடியதும் மனிதர்கள் வாழ்க்கையில் அவச்யமாக அநுஷ்டிக்க வேண்டியவைகளையுமே மஹான்கள் உபதேசிக்கிறார்கள். என்றுமுடிவு கூறுவான். அண்ணாமலை யுனிவர்ஸிடி ஸம்பவமும் ஆபஸ்தம்ப மஹர்ஷியின் உபதேசம் அநுபவ சாத்யமானதையே சொல்லுகிறது என்று நிதர்சனமாகிவிட்டது. மஹர்ஷியின் திட்டப்படி படிப்பு காலத்தை நடத்திவந்ததால் இக்கலஹத்திற்கு இடமில்லை யென்றும் ஏற்படுகிறது. இது போன்றுள்ள பல தர்மங்களை நாம் அறியாததாலேயே பல சமயங்களில் ஸமூக ராஜீய விஷயங்களில் பல கஷ்டங்களை நாம் அநுபவித்து வருகிறோம். என்பதை இச்சமயம் ஞாபகப்படுத்துகிறோம்.

துரதிருஷ்ட வசமாக இந்திய ராஜீய உலகில் போலி தேசியமே காணப்படுகிறது. தேசிய மதம் கலை இவைகளை மூகராதவர்களே தேசிய இயக்க தலைவர்களாக வருகிறார்கள். தங்களுக்கு தேசிய மதத்தின் உண்மை தெரியாததுடன் அதிகப்பிரஸங்கமாக சில சமயம் தேசிய மதத்தையும் மஹர்ஷிகளையும் உதாஸீனம் செய்து தூஷிக்கவும் முற்படுகிறார்கள். இது ஒரு வெட்கேடான நிலை.

ஜவஹர் தனது சுய சரித்திரத்தில் இந்திய மதங்களைப்பற்றிப் பேசுகையில் வர்ணாச்ரம தர்மங்களைப்பற்றி இலேசாகப்பேசுகிறார். அவைகள் பயனற்றவை என்று நினைத்து உதாசீனம் செய்கிறார். ராஜீயத்தலைவர் பலரும் மேடைகள் மீது வர்ணாச்ரம தர்மத்தைத்தூஷித்து வருகிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள் நமது தர்மத்தின் மேன்மையை ப்ரத்யக்ஷமாக விளக்கி விட்டன. இனியாவது தலைவர்கள் தங்கள் தவறை உணர்வார்களாக.

மேலும் துரதிருஷ்டவசமாகவே இந்தியாவில் தீர்க்கதர்சனம் பொருந்திய தலைவர்கள் கிடையாது. தேசிய மதமான வர்ணாச்ரம தர்மத்தை நன்கு அறிந்தவர்களும் கிடையாது. இதனால் ராஜீயத்தலைவர்கள் பொறுப்பற்ற முறையில் பேசினார்கள். மாணவர்களை ராஜீயத்தில் ச்ரத்தை காட்டும்படி அழைக்காத தலைவரில்லை. எந்த ராஜீயமும் மாணவரிடையேதான் வளருகிறது. பொறுப்பற்ற முறையில் ராஜீயவாதிகள் மாணவர்களிடம் கலஹம் செய்கிறார்கள். இவர்களுடைய பொருப்பற்ற பிரசாரத்தாலேயே வருங்கால இந்தியாவின் பொக்கிஷம் போன்ற மாணவர்களின் வாழ்கை அடியோடு கெட்டுவிடுகிறது. அண்ணாமலை யூனிவர்ஸிடி கலகமும் அரசியல் வாதிகளின் பொறுப்பற்ற நடத்தை காரணமாகவே ஏற்பட்டது. இதுபோன்ற கலஹங்கள் அடிக்கடி நடந்து வந்தால் தேசிய வாழ்வே குலைந்துவிடும.

ஆகவே ஸமூக வாழ்கையின் வருங்கால நன்மையை கவனிப்பவர்கள் மாணவர்கள் ராஜீயத்தில் கலப்பதை பலமாகத்தடுக்க வேண்டும்.

இதனால் ஆச்ரம தர்மமான மேல்சொல்லப்பட்ட தர்மத்தை நன்கு அறிந்த யாரும் மாணவர்களை ராஜீயத்திற்கு அழைக்கமாட்டார்கள். என்று நிச்சயிக்கப்படுகிறது.

ராமானுஜதாதாசாரியர்.

வந்தேமாதரம் பாட்டுத்தகராறு.

ஹிந்து முஸ்லீம் மாணவர் கலஹம்.

ஹைதராபாத் கலாசாலையில் ஹாஸ்டலிலுள்ள ஹிந்து மாணவர்கள் தங்கள் அறையில் கூட வந்தேமாதர கீதத்தைப்பாடுவதை அடுத்த அறைகளிலுள்ள முஸ்லீம் மாணவர்கள் ஆக்ஷேபித்தனர்: இந்த தகராறு முற்றிவிட்டதால் கவர்ன்மெண்டார் ஓர் உத்திரவு பிறப்பித்து ஹிந்து மாணவர்கள் வந்தேமாதரம் பாடுவதைத் தடை செய்துவிட்டார்கள். இதனால் வருத்தமடைந்த 400, ஹிந்து மாணவர்கள் கலாசாலைக்குப்போகாமல் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

கும்பகோணம் பாங்கி லிமிடெட்.
(1904-ஹூம் ஸ்தாபிக்கப்பட்டது)

ஹெட்ஆபீஸ்: 54, பெரியதெரு,
கும்பகோணம்.
லோகல் சப் ஆபீஸ் யானையடி ரோடு.
பிராஞ்சுகள்:— மன்னார்குடி, நாகப்பட்டிணம், நன்னிலம்,
அய்யம்பேட்டை.

ஏற்படுத்தப்பட்ட மூலதனம் } ரூ. 5,00,000
வசூலிக்கப்பட்ட மூலதனம் } ரூ. 2,85,585
காப்பு நிதிகள் ரூ. 2,00,000க்கு மேல்.

ஷை பாங்கி ஆபீஸுகளில் சகலவிதமான பாங்கி வேலைகளும் நடத்தப்படும்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பகுதான்யஹு கார்த்திகைமீ 23உ

மலையாள ஆலயப்பிரவேச மசோதா.

இந்த மசோதாவானது எதிர்பார்த்தபடி பொறுக்குக்கமிட்டி பரிசிலனைக்கு விடப்பட்டது. இந்தப்பரிசிலனையும் வெகு வேகமாக நடந்து முடிந்து விட்டதாகத்தெரிகிறது. ஆகவே சில தினங்களில் இது சட்டமாகி விடத்தடையில்லை. இந்த மசோதா விஷயமான ஆக்ஷேப ஸமாதானங்கள் யாவும் ஏற்கனவே பல தடவைகளில் பலரால் வெளியிடப்பட்டனவாகையால் அவைகளை மீண்டும் விவாதிப்பதில் பயனில்லை. ஆயினும் சட்டஸபையில் கனம் பிரதம மந்திரியும் மற்றவர்களும் பேசியிருப்பதைக் கவனித்தால் தென்னிந்தியாவில் இது வரையில் நடந்திராத ஓர் பெரிய மதப்புரட்சியை ஏற்படுத்தியதில் அவர்கள் சிறிதும் கவலையும், பொறுப்பையும் வகித்ததாகத் தெரியவில்லை. ஏதோ தமாஷாக காங்கிரஸ் கூட்டங்களில் பேசுவது போலவே இந்தப்பெரிய விஷயத்திலும் வெகு அலக்ஷியத்துடன் பேசியிருக்கிறார்கள். மதாபிமானிகளும், மதத்தலைவர்களும் ஆஸ்திகர்களாயுமுள்ள கோடிக்கணக்கான ஜனங்களின் உணர்ச்சியை இவர்கள் சிறிது கூட லக்ஷியம் செய்ததாகத்தெரியவில்லை. சட்டஸபையில் தங்களுக்குள்ள மெஜாரிடி பலச் செல்வாக்கு ஒன்றினாலேயே இறுமாப்பு அடைந்து இவ்வதிக்ரமத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள்.

கனம் பிரதம மந்திரியின் பேச்சை கவனித்தவர்களுக்கு அதிலுள்ள முக்யவிஷயமொன்று புலப்படாமல் போகாது. ஆலயப் பிரவேசமென்பது முற்றிலும் மதஸம்பந்தமான விஷயமென்பதும் அதனால் தைய்வ ஸான்னித்யமும், ஆலய பரிசுத்தியும் குறைந்துவிடுமென்பதே நமது முக்ய வாதமாயிருந்துவருகிறது. இந்த முக்ய விஷயத்தை கனம் மந்திரி பிரஸ்தாபிக்காமலே விட்டுவிட்டார். சாஸ்திர ரீதியில் ஆதரவு கிடைக்காதென்பதை அவர் நன்கு அறிந்திருக்கவேணும். அல்லது அவைகளை அவர் நம்பாதவராக இருக்கவேணும். இல்லையேல் மதப்புரட்சிகரமான மசோதாவைக் கொண்டுவந்தவர், இவ்விஷயத்தில் மதாபிமானிகளின் அபிப்பிராயத்தை அறிந்து ஸமாதானம் சொல்லியிருக்கவேண்டியது நியாயமாயிருக்கும். ஆகையால் அவர் சாஸ்திரவாதத்தை விட்டுவிட்டு ஸாதாரண காங்கிரஸ் தொண்டர்கள் கூடச் சொல்லிவரும் யுக்திவாதம், விதண்டாவாதங்களில் இறங்கி கக்ஷி பேசியிருக்கிறார். ஆலயப்பிரவேசத் தடையானது நீண்டகாலமான பழக்கவழக்கம் காரணமாக ஓர் ஜாதியார் மீது ஏற்பட்ட தடையே யல்லது அதற்கு சாஸ்திரியமாகவோ, நியாயமாகவோ ஆதாரம் கிடையாதென்பது கனம் மந்திரியின் யுக்திப்பேச்சாயிருக்கிறது. மேலும் பொது ஜனங்கள் ஏராளமாக இப்போது இந்தப் பழக்கவழக்கத்தை மாற்றிக்கொள்ள விரும்புவதாகவும் அதுவே இந்த மசோதா நிறைவேறப்போதிய காரணமாகுமென்றும் வாதித்திருக்கிறார். இதுவெறும் அபத்தவாதமென்பது ஏற்கனவே பல தடவை எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

நந்தனர், திருப்பாணர் சரித்திரங்களை இவர் காட்டியிருப்பதும் இவருக்கு விரோதமானதே. அவர்களுடைய சரித்ரங்கள் ஆலயப்பிரவேசம் அசாஸ்திரியமென்பதையே நிரூபிக்கக் கூடியவை.

கனம் மந்திரியார் புதிய கக்ஷியொன்றையும் இப்போது கிளப்பியிருக்கிறார். ஜைனர், பௌத்தர் போன்ற பிறமதஸ்தர்கள் பலர் முன்காலத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்றனரென்றும் அவர்களெல்லாம் இப்போது ஹிந்துக் கோவில்களுள் ஸாதாரணமாக போய் வரவில்லையாவென்றும் கேட்கிறார். இங்கு கனம் பிரதமமந்திரி, மதமாற்றத்திற்கும் ஜாதிமாற்றத்துக்கும் உள்ள வித்யாஸத்தை அறியாமல் பேசியிருக்கிறார். முன்பு ஜைனர்களும் பௌத்தர்களுமாயிருந்தவர்கள், தேவாலயப்பிரவேசத்திற்கு அர்ஹதையில்லாத தீண்டாத ஜாதியிலிருந்து உயர்த்தப்பட்டவர்களென்று சொல்ல என்ன ஆதாரமுள்ளது? பிராம்மண, க்ஷத்ரிய ஜாதியிலுள்ளவர்களே மதம் மாறியிருந்தால் அவர்களை ஸ்வ மதஸ்தர்களாகச் செய்வது மதமாற்றமே யல்லது ஜாதிமாற்றமாகாது. பௌத்தர் ஜைனர் என்பது ஜாதியல்ல. தீண்டாதாருக்கு ஆலயப்பிரவேசமானது பிறப்பு ஜாதி காரணமாகவே தடுக்கப்படுகிறதென்ற முக்ய அம்சத்தை கனம் மந்திரி அறிவது நலம். தீண்டாதார் ஆலயப்பிரவேசத்திற்கு ஆசாரம் அநுமதி கொடுப்பதாக கனம் மந்திரி பேசியிருப்பதும் ஆதாரமற்றது. எந்த கோவிலிலும் இன்றுவரை இந்த அநாசாரம் அநுமதிக்கப்பட்டதாக ருஜு இல்லை. ஸதி, விதவா விவாஹம் முதலியவைகளில் சட்டமியற்றப்பட்டிருப்பதால், அதற்கும் இப்படித்தான் முன்பு எதிர்ப்பு இருந்ததென்றும் பிற்காலத்தில் அது அடங்கிவிட்டதென்றும் கனம் மந்திரி சுட்டிக்காட்டுகிறார் ஒரு குற்றத்திற்கு மற்றொரு குற்றத்தை ஆதாரமாகக் காட்டுவது விவேகமல்ல. ஆயுதபலமும், அதிகாரபலமும் பொருந்திய ஸர்க்கார், ஏதோ சிலரைப் பின்பலமாகக்கொண்டு நிர்பந்தமுறையில் அந்தச் சட்டங்களை செய்திருக்கிறார்கள். ஸதி - அல்லது உடன்கட்டையேறுவதைப்பற்றி பாதிரிகளும் வேறு பலரும் கிளப்பிவிட்ட பொய் மூட்டைகள் அதிகம். நமது சாஸ்திரமோ, ஆசாரமோ, ஸதியை நிர்பந்தமாகக் கட்டாய முறையில் விதிக்கவில்லை. இதை பிரிடிஷ் சட்டத்தால் இப்போது தடுத்துவிட்டதாகக் கூறுவதும் ஸரியல்ல. விதவா விவாஹச் சட்டம் செய்தும் இன்றுவரையில் இந்தியாவில் எந்த வகுப்பாரும் விதவா விவாஹத்தைச் செய்ய முன்வாராதிருக்கிறதே சட்டத்தின் பிரயோஜனமற்ற தன்மையை கனம் மந்திரி உணரவேண்டும். மேலும், ஸதிச்சட்டத்திற்கும், ஆலயப் பிரவேசச் சட்டத்திற்கும் பிரத்யக்ஷமாயுள்ள வித்யாஸத்தைக்கூட கனம் மந்திரி மறக்கப்படுவது ஆச்சர்யமாயிருக்கிறது. இரண்டையும் ஒன்றாக நினைத்துப் பேசுவது முற்றிலும் தவறு.

இம்மாதிரியும் இன்னும் பல வழிகளிலும் கனம் மந்திரியின் பேச்சு பொருத்தமற்றதாயிருப்பதை நாம் நிரூபணம் செய்து கொண்டிருப்பதில் பயனில்லை. இப்போது அவர் காரியத்திலிறங்கி தர்மத்தின் தலையில் கோடரியை வைத்துவிட்டார். வர்ணாச்ரம தத்துவத்தின் முக்கிய அம்சமான ஜாதித்வத்தை நாசமாக்கப்புறப்பட்டு விட்டார். நீண்ட கால உரிமைகளை நசுக்கத்துணிந்து விட்டார். இந்த நிலைமையில் தார்மிகர்கள் செய்யக்கூடியதென்ன? இதுதான் இப்போது யோசிக்க வேண்டிய விஷயம். ஒரு வழியாக ஆலயப் பிரவேச சட்டத்தை நேர்முகமாகச் செய்து இன்றே எல்லா ஆலயங்களையும் திறந்துவிடும்படி செய்திருந்தால் தார்மிகர்கள் தலைமுழுகி விட்டு ஒதுங்கி நின்று விடலாம். ஆனால் கனம் மந்திரி அப்படிச் செய்யவில்லை. இன்னும் நமக்கு நம்பிக்கையிருக்கும்படி செய்திருக்கிறார். பொது ஜனங்களுடன் போராடி நமது நியாயத்தை ஸ்தாபித்துக் கொள்ளும்படி விட்டு விட்டார். ஆகையால் மதாசார்யர்கள் நேரமாக வெளிவந்து ஜனங்களை நமது பக்கமாகத் திருப்ப முயற்சிக்க வேணும். கவர்னருக்கும், [illegible]கோர்ட்டுக்கும் இந்த அநீதியை நிவர்த்திக்கும்படி மனு செய்து கொள்ள வேணும். எந்த வழியிலும் இச்சட்டம் அநுஷ்டானத்திற்கு வராமல் தடுக்கவேண்டிய முயற்சிகளை நம்மவர்கள் உடனே ஒற்றுமையுடன் ஆரம்பிக்க வேணும்.

குறிப்புகள்.

ஸாநிடாரி மசோதாவிலுள்ள குறைபாடு.

சென்னை ஸாநிடாரி மந்திரியால் கொண்டுவரப்பட்டுள்ள ஸாநிடாரி மசோதாவானது பொறுக்குக் கமிட்டியின் ஆலோசனையில் இருந்துவருகிறது. இதைப் பொதுஜன அபிப்பிராய மறியப் பிரசுரிக்கவேண்டுமென்ற திருத்தம் தோல்வியடைந்து விட்டது. இந்த மசோதாவில் பொது ஜனங்களுக்கு அஸௌகர்யம் உண்டாகக்கூடிய பல அம்சங்கள் புகுத்தப்பட்டிருப்பதால் அவைகளை ஜனங்கள் அறிந்து கொண்டு அபிப்ராயம் வெளியிடுவது மிக்க அவச்யமாயிருந்தும் மந்திரிகள் அவஸரமாக இதைச்சட்டமாக்க முயற்சிப்பது அதிருப்திகரமானதாகும். ஸாநிடாரி அபிவிருத்தி ஏற்படுவது விரும்பத்தக்கதாயினும் அதற்காக ஜனங்களுக்கு சிரமத்தை அதிகரிக்கச்செய்வது விரும்பத்தக்கதல்ல.

ஸாநிடாரி அதிகாரிகளுக்கும் சிப்பந்திகளுக்கும் அதிக அதிகாரம் கொடுத்திருப்பது ஆக்ஷேபகரமானது. அந்த அதிகாரிகள் எந்த ஜாதி மதஸ்தராயினும் ஸரி ஒரு வீட்டில் நுழையவேண்டுமானால் அதற்குத் தடையிருக்கக் கூடாதென்று தெரிகிறது. வீட்டிற்குள் தொத்து வியாதி அல்லது ஸாநிடாரிக் குறைவு இருப்பதாக வியாஜம் காட்டி எந்த வீட்டிலும் எந்த ஸந்தர்ப்பத்திலும் முன்னெச்சரிக்கையில்லாமல் புகுவது நியாயமல்ல. இனிமேல் ஸர்க்கார் கொள்கைப்படி தீண்டாத ஜாதியார் ஏராளமாக ஸாநிடாரி இலாகாவில் சிப்பந்திகளாக வரக்கூடுமென்பதும் தெளிவு. இதனால் ஜனங்களுடைய அதிருப்தி அதிகரிக்கும். மேலும், அம்மை குத்திக் கொள்வதில் முன்னைவிட அதிக நிர்ப்பந்தமும், கடுமையும் கட்டாய முறையில் ஏற்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. ஸ்திரீ வியாதியுள்ளவனென்று ஸந்தேஹிக்கப்பட்டவனைப்பற்றிய விதிகளும் வெகு கடுமையானவை. அவன் அயலூர் போனால்கூட அவன் இருப்பிடத்தை அறிவிக்கவும், போலீஸ் கண்காணிப்புக்கு உள்படவும் ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது.

முக்யமாக தேவாலய உத்ஸவகாலத்திய விதியானது கடுமையாயிருக்கிறது. கோவிலுக்கு ஸமீபத்திலுள்ள ஒரு வீட்டை உத்ஸவகாலத்தில் ஸாநிடாரி அதிகாரிகள் தங்களுக்கு வேண்டுமென்று நிர்ப்பந்தமாகக் கேட்கவும், அப்படிக் கேட்டால் வீட்டுக்காரன் எவ்வித ஆக்ஷேபமும் சொல்லாமல் வீட்டை ஒழித்து ஸாநிடாரி அதிகாரி வசம் ஒப்பிக்கவேண்டியும் விதிசெய்திருப்பதாகத் தெரிகிறது. உத்ஸவகாலத்தில் கோவிலுக்கு ஸமீபமுள்ள வீடுகளில் ஏராளமாக பந்து மித்ரர்கள் வந்து கூடுவது இயற்கை. வீட்டுக்காரர்களும், பந்து மித்ரர்களும் நல்ல ஸந்தர்ப்பத்தில் வீட்டை ஒழித்துக்கொடுத்து வேறிடம் போவதென்றால் இலகுவான காரியமா? இந்த கடுமையான அம்சத்தை பொறுக்குக் கமிட்டி கவனிக்குமென்று நம்புகிறோம். இம்மாதிரி அனேக ஆக்ஷேபகரமான அம்சங்களைப் பொது ஜனங்களுக்கு அறிவிக்காமலே சட்டம் செய்வது நியாயமானதல்ல. இதில் மந்திரி ஜாக்ரதை காட்டுவாரென்று நம்புகிறோம்.

கோவில் பூஜகர்களின் கடமை.

சென்னை மாகாணத்தில் ஆலயப்பிரவேசச் சீர்திருத்தத்தைச் செய்து தீருவதென்று காங்கிரஸ் மந்திரிகள் தீர்மானித்துவிட்டனர். இதைத் தடுப்பதற்கு தார்மிகர்கள் செய்யும் முயற்சிகள் பற்பல இருந்தபோதிலும் [illegible] பூஜகர்களின் ஒற்றுமையாலும் [illegible] தகுந்த [illegible]ஹாரம் கிடைக்க வழியிருப்பதாக அனேகர் நினைக்கிறார்களென்று தெரிகிறது. ஆலயப்பிரவேசச் சட்டத்திற்குப் பலியாகும் கோவில்களில் பூஜைசெய்கிறவர்கள், கோவிலின், தெய்வத்தின் சக்தியைக் காப்பாற்றக்கூடியவர்களென்ற முறையில் அவர்களுடைய கடமை தெளிவாக இருக்கிறது. சட்டம் ஏற்பட்டபிறகு கோவில்களில் அவர்கள் எவ்விதம் நடந்துகொள்ளப்போகிறார்களென்பது வெகு முக்ய விஷயம். ஆலயப்பிரவேசச் சட்டம், பலிப்பதும், தோற்பதும், பூஜகர்களின் நடவடிக்கையைப் பொறுத்ததாகவே இருக்கும். அவர்கள் கட்டுப்பாடுடன் ஒரு முறையை அவலம்பிக்கத் தீர்மானித்தால் ஸர்க்காரும், பொது ஜனங்களும் அதை அநுஸரித்து நடக்கவேண்டியவர்களாவார்கள். நித்ய பூஜைகளோ, பிரம்மோத்ஸவாதி வைபவங்களோ நின்று போவதை ஒருவரும் எளிதில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அம்மாதிரி நிலைமை ஏற்பட்டால் ஏதாவது பரிஹாரம் பிறக்கவழி யேற்படக்கூடும்.

ஆதலால் பூஜகர்கள் இந்த ஸமயம் பின் தங்காமல் முன்வந்து தங்கள் கடமையைச் செய்யவேண்டியது அவச்யமாகும். தென்னிந்தியாவில் முக்யமாகத் தமிழ் ஜில்லாக்களிலாவது ஒன்றில் தேவாலய பூஜகர்களின் மஹாநாட்டைக் கூடிய சீக்ரத்தில் கூட்டிவைக்கலாம். அல்லது சென்னை நகரத்திலேயே இதை நடத்தலாம். ஆந்திரம், தமிழ், கேரளம் முதலிய விடங்களிலுள்ள சைவ, வைஷ்ணவ ஆலய பூஜகர்கள் பெருமிதமாக இதற்கு அழைக்கப்பட்டு யோஜனை நடத்தவேண்டும். ஆலயப்பிரவேசச்சட்டத்தினால் ஏற்படக்கூடிய சாஸ்திரியபாதகங்களையும், ஆகமசாஸ்திரத்தின் அபிப்ராயத்தையும் பொது ஜனங்களுக்கும், முக்யமாக தீண்டாதாருக்கும் எடுத்துக்காட்டி, பூஜகர்கள் இவ்விஷயமாக தகுந்த கட்டுப்பாட்டுடன் என்ன செய்ய வேண்டுமென்பதையும் தீர்மானித்துக்கொள்ளவேணும். இந்த மஹாநாட்டைக்கூட்டுவது எளிதல்ல. திரவியச்செலவு அதிகமாகும். ஆயினும் இந்த பளுவை ஸமாளிக்கக்கூடிய திரவிய சக்தி நம்மில் இல்லாமல் போகவில்லை. தனிப்பட்ட ஆஸ்திகர்களும், மதஸ்தாபனங்களும் இதற்கு வேண்டிய உதவிகளைச்செய்துகொடுக்கலாம். இந்த யோஜனையைப்பலர் நமக்குத்தெரிவித்தை அநுஸரித்துநாம் இதை எழுதினோம். யாராவது தார்மிகர் அல்லது தார்மிக சங்கமானது இந்த முயற்சியில் இறங்க முன் வருவதை எதிர்பார்க்கிறோம்.

வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா.)

வாயுக்குப் பூட்டில்லை சாவியுமில்லை! கவிக்கு கட்டில்லை. நீதியுமில்லை! ஓர் ஸங்கீத வித்வானது படத்தைத்திறக்கும் போது ஓரம்மையார் ஸங்கீதமே மோக்ஷமார்க்க மென்கிறாள் மற்றவை! ஆஹா! வியாஸருக்கிது தெரியாதோ!

எனக்கு ஜாதி பேதமில்லை? பரோபகாரம் செய்பவனே ஸத் பிராம்மணன். என சென்னையில் ஓர் பட்டம் பெற்ற அட்வகேட் உபந்யாஸம் செய்கிறார். தான் பிராமணனாக பிறந்ததற்காக வருந்துகிறார் பாவம்! முன் பின் முரணாக பேசுவது! ஓர் அரிய ஸாமர்த்தியம் போலும்!

ஜூஸ் கதி தானோ? சென்னையில் பிராம்மணர் கதி மிக மிக கஷ்டமாயிருக்கிறது. ஓர் சு. ம. தலைவர் பேசிய சொற்படி தமிழ் நாட்டை விட்டு பிராமணரை அகற்றவே! கண்டவிடத்து [illegible]க்கப்படுகிறதாம்! சில இடங்களில் பயங்கரமான செயல் நடக்கிறது! ராஜாங்கமிருக்கிறதா? இல்லையா?

ஓர் மந்திரி மயக்கம்!! பீஹார் மந்திரி ஆண் பெண்கள் ஒரே கலாசாலையில் படிப்பதும் ஆண் பெண் உபாத்யாயர் சேர்ந்து போதிப்பதும் மிகச்சிறந்த வழி எனகண்டு அங்ஙனம் மாகாணம் முழுதும் செய்ய முயற்சிக்கிறார்! என்ன வித்யை வளரும் பார்ப்போம்!!

சிறந்த ஸேவை! பாலக்காடு டாக்டர் சங்கரய்யர் கோஷ்டி மந்திரி, தீர்மானம் தெரிந்திருந்தும் அவரை பேட்டி காண வந்து தர்ம தேவதைக்குத் தொண்டாற்றினார்!! பயன் பகவதீனம்!

வேலையை விடுவாராம்!! ஆலயத்தைக் கெடுத்த பின் மந்திரி வேலையை விடுவதாக முதல் மந்திரி கூறினார்!!

அபூர்வ அறிவு!! நந்தனர் கழக கோஷ்டியில் க்ஷணம் காஷாயம் க்ஷணம் வெள்ளை உடை உடுத்தும் ஓர் பஞ்சம அங்கத்தினர் நமது பரமாசார்யர் ஆலத்தைக்கெடுக்க ஆதரவளிக்கின்றனர், ஆனால் வைதிகருக்குப்பயப்படுகின்றன ரென்கிறார்? பதினாயிரக்கணக்கான பஞ்சமர் இதை எதிர்த்து உணவு கேட்பது இவர் கண்ணில் படவில்லை!!

காக்கையிடையே ஹம்ஸமேது? ஓர் ஸாகேப்தரு ஸநாதனிகூட இதை எதிர்க்கவில்லை என்கிறார்! இதர மதத்தில் தலையிடுபவர் போன்றோரிடையே யார் முன் வருவர்!!

பதில் கூற முடியவில்லை!! ஒரு கனவான் தேர்தல் காலத்தில் எனித்த பிரதான விஷயத்தைக்கூறவில்லை என கேட்டார்! நடு நிலை வகிப்போமென உறுதியும் கூறப்பட்டது!

இது தான் பதிலோ? எனது வாக்காளர் உத்திரவுப்படி இச்சட்டத்தை எதிர்க்கிறேனென்றால் ஜன நாயக தத்துவத்தையும் வாக்காளரையும் மதியாமல், இத்தகையோர் ராஜிநாமா செய்ய வேண்டுமென்கிறார்!

தேசத்திற்கழிவு நாள்! இத்தகைய சட்டத்தால் நாடழியும்! இது ஸத்யம்!!

சந்தாதார்களுக்கு முக்ய அறிவிப்பு.

நமது ஆர்யதர்மம் பத்திரிகையின் 23-வது வருஷம் பூர்த்தியாகிறது. இன்றுடன் 48ஸஞ்சிகைகள் வெளிவந்துவிட்டன. மூன்று ஸஞ்சிகையுடன் இந்த வருஷம் பூர்த்தியாகிவிடுகிறது. ஆதலால் நமது சந்தாதார்கள் இனி வரப்போகிற புதிய வருஷத்திற்கான சந்தாத்துகையை கூடியசீக்கிரத்தில் நமக்கு அனுப்பி, எப்போதும்போல் பத்திரிகையை ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

-மானேஜர்.

கீர்வாணங் கற்கும் துருக்கியர்! இந்துமத ஆராய்ச்சி செய்ய தாகூர் உபதேசப்படி ஓர் துருக்கி வித்வான் ஸமஸ்கிருதம்கற்க காசி வந்தார்-

நல்ல பாடம்!! சொற்ப உடையுடன் இரு பெண்கள் குஸ்திக்குவர - தேசாபிமானி பலரிதை ஆக்ஷேபித்து மறியல் செய்ய, இரண்டே டிகெட் வாங்கப் பட்டதாம்!

ஸர்வகலாசாலை மூடப்பட்டது! அண்ணமலை நகரில் ஓர் மாணவன் பல சகாக்களைக் கொண்டு காந்தி காட்டிய வழி என மறியலிலிறங்கி மகா கனம் சாஸ்திரிகளை யோகலக்க கலாசலை மூடப்பட்டது.

லக்ஷ்மீபுரம்.

மஹாபாரத உபன்யாஸம்!

சென்ற வியாழனன்று பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்களால் பிரும்மஸ்ரீ திவான் பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் தலைமையில் ஷெ உபன்யாஸம் ஆரம்பிக்கப்பட்டது. ஷெயன்று உபன்யாஸத்தில் சுருக்கமாக தர்ம சூக்ஷ்மங்களைக் காட்டி உபன்யஸிக்க ஸ்ரீ வேதவ்யாஸரின் அம்சம் பெற்ற ஸ்ரீ சர்மா அவர்களால் தான் முடியும், அவர் பதினெண் புராணம் ஆராய்ச்சியிலீடுபட்டிருப்பதால் அவர் மூலம் கேட்பது நமது பாக்யம். மற்ற ஸதஸ்ஸை விட பிராமண்யம் நிறைந்த இங்கு கூறுவது அவருக்கு பாக்யமென ஸ்ரீ சாஸ்திரிகள் அழகாக உபன்யஸித்தார்-

மைலாப்பூர், கோபாலபுரம், முதலிய இடங்களிலிருந்து பற்பல உத்யோகஸ்தர்கள் மிக பக்தி ச்ரத்தையுடன் ச்ரவணம் செய்கின்றனர். ஷெ ஸர்சங்கம் பல அரிய கார்யங்களைச் செய்வதுடன் பெண் மக்களுக்கு இத்தகையோர் அன்புக்கு தர்ம ப்ரசாரம் செய்வது சாலவும் சிறந்தது-! ந. தி.

உதவி இந்தியா மந்திரி
சென்னை விஜயம்.

உதவி இந்தியா மந்திரியாகிய கர்னல் மூர்ஹெட் சென்னைக்கு வந்து சேலம், மதுரை, திருச்சி, மஹாபலிபுரம் முதலிய விடங்களைப் பார்வையிடச் சென்றார்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Nellore.

முடிகொண்டான்.

பாடசாலை வருஷபூர்த்தி விழா.

இவ்வூரில் சென்ற 1935-நவம்பர்௴ முதல் உபக்ரமம் செய்து நன்ருய் நடந்து வரும் ஸ்ரீ சங்கரஸ்வயம் பிரகாசாநந்தஸரஸ்வதீஸாம வேத பாடசாலைக்கு 28-11-38க் தேதியோடு பூர்த்தியான மூன்ருவதாண்டு மஹோத்ஸவமானது சிறப்பாய் நடைபெற்றது. அன்று இவ்வூரிலுள்ள விக்னேச்வராலயம் சிவாலயம் விஷ்ணு ஆலயம் முதலான தேவாலயங்களில் விளங்கும் ஸகல தேவதைகளுக்கும் அபிஷேகார்ச்சன பூர்வமாக ஆராதனமும் உபந்யாஸமும் நடந்தன.

அன்று தற்காலம் நம் ஸனாதன தர்மத்திற் கேற்றபட்டிருக்கும் அபிவிருத்திக் குறைவை தம்மாலியன்ற வரையில், பொருளாலும், சரீரத்தாலும் வாக்கினாலும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்கிற இயற்கையான முயற்சியுடன் ஆங்காங்கு தாமாகச்சென்று உபன்யஸிக்கும் திருக்கருகாவூர் ஆஸ்திக சிகாமணியாயும் தர்மப்பிரபுவாகவும் விளங்கும் பிரம்மஸ்ரீ டி. எல். சுப்பய்யாவர்கள் இந்த மாதிரி காரியங்களில் அவர்களுக்கு இருக்கும் சிரத்தையின் மேலீட்டால் காலை 10 மணிக்கே இவ்வூருக்கு விஜய செய்துவிட்டார்கள். அவர்களை இவ்வூர் மகாஜனங்கள் பிரியத்துடன் மாலை 4மணிக்கு ஷை வித்யாசாலைக்கு அழைத்துச் சென்று அங்கு முந்தியே தயாராயிருந்த சுத்தமான வேத்ராஸநத்தில் அமரும்படி செய்தார்கள். அந்த சமயம் அங்கு அவ்வூர் வித்வான்களும் ப்ரபுகளும் ஆஸ்திக மகாஜனங்களும் விஜயஞ் செய்திருந்தார்கள்.

உடனே மகா ா ஸ்ரீ, சுப்பய்யாவர்களும் எம். ராமய்யாவர்களும் சபையின் சார்பாக ஸ்ரீ மடம் ஆஸ்தான வித்வான் மஹோபதேசக கவிரத்னம் ப- பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களை இந்த சபைக்கு அக்ராஸநாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு அவ்விதம் அங்கீகரிப்பதாகச் சொல்லி துவக்கத்தில் ஷை சுப்பய்யர் அவர்களுடைய சிறந்த குணங்களைப் பற்றியும் இந்த மாதிரி வித்யாசாலை அவச்யமிருக்க வேண்டுமென்கிற விஷயத்தைப்பற்றியும் ஸ்வற்பம் கூறி முடித்துக் கொண்டார்கள். பிறகு சேங்காலிபுரம் நாராயணதீக்ஷிதர் அவர்களும் ஸங்கிரகமாக சில விஷயங்களையும் கூறினர்கள். அப்பால் சுப்பய்யாவர்கள் 2 மணி அவகாசம் உபந்யஸித்தார்கள். அதில் சாஸ்திரங்கள் வேதங்கள் முதலானவைகளுக்கு இருக்கும் பெருமையையும் பிராமணர்களுக்கிருக்குக்கும் மகிமையையும், பிறப்பு இறப்பு என்கின்ற கொடிய துக்கத்துடன் கூடிய இந்த சம்சாரத்தில் வந்து கஷ்டப்படாமல் மோக்ஷத்தையடைந்து ஸுகமாயிருப்பதற்கு இவர்கள் முக்யாதிகாரிகளென்றும் ஆகையால் சிறந்த இந்த ப்ராமண ஜன்மாவை நாம் வீணாக்காமல் மோக்ஷத்தைப் பெறுவதற்கு முக்கிய ஸாதனமான நம் வேதசாஸ்திரங்களை நன்கு கற்று ஸனாதன தர்மங்களை நன்கு அனுஷ்டித்து ச்ரேயஸ்ஸை யடையவேண்டுமென்றும் அதுதான் நமது கடமை என்றும், மற்றும் ஸனாதனதர்மானுஷ்டானமே முக்ய மென்பதற்கு பலவிஷயங்களையும் ஸரியான சாஸ்திர ப்ரமாணங்களுடன்தெளிவாய் ஸகலருக்கும் நன்கு விளங்கும்படி உபந்யசித்தார்கள்.

பிறகு இரவு 8 மணிக்கு அக்ராசனர் சில விஷயம் பேசிய பிறகு சுப்பய்யாவர்கள் ஸ்திரீ தர்மங்களை விரிவாகக் கூறி பிராமணர்கள் ஒவ்வொருவரும் தினமும் காலையில் எழுந்திருந்து செய்ய வேண்டிய ஸகல கர்மாக்களையும் அவைகளை யனுஷ்டிப்பதா லேற்படும் படனையும் நன்கு நிரூபித்து முடித்துக் கொண்டார்கள். இதற்குள் மணி 10½ ஆய்விட்டபடியால், அக்ராசனர் வேதாத்யயநம் அவச்ய மென்றும் அதற்காகத் தான் உபநயந ஸம்ஸ்காரம் நடத்தப் படுகிற தென்றும் சுருக்கமாய் கூறினர்கள் பிறகு மகா-ா-ஸ்ரீ எம். ராமய்யர் அவர்கள் உபந்யாஸகருக்கும், அக்ராசனருக்கும் வந்தனம் கூறினர்கள். உடனே சந்தனம் பலம் சர்க்கரை முதலானவைகள் வழங்க மிகவும் சிறப்பாய் ஸபை பூர்த்தி யடைந்தது.

ஒரு நிருபர்

திப்பிராஜபுரம்.

பிரும்மவித்யா ஸபா— 5-11-38 12-11-38 தேதி ஸ்திர வாரங்களில் ப்ரும்மஸ்ரீ மந்த்ரமூர்த்தி கிருஷ்ண சாஸ்திரிகளவர்களால் தேவீபாகவதோக்த ஸ்ரீ சுகருக்கும், வியாஸருக்கும், ஸ்ரீ சுகருடைய உபநயனனந்த்ரம் குருகுல வாஸம் முடிந்த பிறகு விவாஹ விஷயமாக கடவுள் தத்துவத்தைப்பற்றி வெகு விரிவாக உபன்யஸிக்கப்பட்டது.

19-11-38௳ ஸ்திர வாரத்தில் பிரம்மஸ்ரீ நாராயண ச்ரௌதிகள் அவர்கள் கர்மாவை பற்றியும், வைதிக லௌகிக கார்யங்களைப் பற்றியும் சற்று சொல்லி பிறகு பரவக்கரை பிடில் வாத்யகலை அப்யசித்து வரும் சுந்தரேசாவ் பிடில் க்ச்சேரி நடந்தது.

25-11.38௳ முதல் 3-11-38௳ வரையில் ஏழு தினங்களில் ஸ்வயம் ஸனாதன தர்மப் ப்ரசாரகராயும், ப்ரதி கிராமங்களும் சுற்றி ஆங்காங்கு ஜனங்களை கூட்டி ஆஸ்திக்யோபதேச உபன்யாஸங்கள் செய்து வருகிறவராயுமிருக்கிற மதுரை வித்வான ப்ரும்மஸ்ரீ M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்கள் மனுஷ்ய ஜன்மாவின் உயர்வைப்பற்றியும், இவன் கையாள வேண்டிய பரம லக்ஷியத்தைப்பற்றியும், மற்ற மிருகாதி பசு, பக்ஷி ஜந்துக்களாலே விட முடியாத, ஆஹாரம் நித்திரை, பயம், மைதுனம் முதலியவைகளை கூட எப்படி இவன் விட்டு "இஹத்ர பரத்ர" பரமச்ரேயஸ்ஸை அடைந்து நித்தியானந்தத்தை அனுபவிக்கலா மென்பதைப்பற்றியும் நமது மதம், பக்தி, கர்மா, தர்மம், ஸந்தியாவந்தனம் என்கிற விஷயங்களைப் பற்றி தத்வார்த்தங்களை முறையே எடுத்துச்சொல்லியும்; 3-11-38௳ ஸ்திரவாரத்தில் [illegible] "ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாளின்" திவ்ய சரித்திர மஹிமையை பலசரித்திரங்களுடைய கோட்பாடுகளுடன் 'பதஞ்சலி விஜயம்', 'மண்டன மிச்ர சம்வாதம்' இதுகளை விரிவாகவும், அநேக க்ரந்தங்களிலிருந்து ஸரிதமாய் எடுத்துச்சொல்லியும், இப்போது தாண்டவமாடும் நவீன முறைகளை வெகு விரிவாகக் கண்டித்தும், ப்ராசீன பழக்கவழக்கங்களுடைய பெருமையை அழகாக எடுத்துப் போதித்தும்; ரொம்பவும் உருக்கமாயும், ச்லாகிக்க தகுந்த முறையிலும், ஸதஸ்யர்களுக்கு மனதில் வேரூன்றிப் படும் படியாயும் உபன்யசித்தார்.

27—11—38௳ ஞாயிற்றுகிழமையன்று சேங்காலிபுரம் ப்ரும்மஸ்ரீ அப்பாசாமி சாஸ்திரியவர்கள் ஷை உபன்யாஸத்தின் ஸ்தோத்திர பூர்வகமாக ச்ரவண பக்தி, ஸாதுஸமாகமம், ஆஸ்திக்யத்தின் அவசியகம் இதுகளைப் பற்றி சுருக்கமாகச் சொல்லி, ஸ்ரீவேணுகோபாலஸாமி கோவில் லக்ஷார்ச்சனை துவக்கம் பண்ணியிருக்கிற ஸ்திதியில் அர்ச்சனை பத்தியைப் பற்றியும் வெகு அழகாக சொல்லி முடித்தார்.

ஒரு நிருபர்.

சங்காபிஷேக மகோத்ஸவம்.

தேரிழந்தூர்.

தஞ்சை ஜில்லாவில் தேரிழந்தூர் ரயில்வே ஸ்டேஷனுக்குத் தெற்கே 2 மைலுக்குள் உள்ளது. திருஞானசம்பந்தர் பாடிய ஸ்தலம். மகாவிஷ்ணுவும், பரமசிவனும், பார்வதியை மத்யஸ்தமாய் செய்து சொக்கட்டான் ஆடுங்கால் பரமசிவன் தோற்றதாக பார்வதி அறிவிக்கவே, பரமசிவன் கோபங்கொண்டு பார்வதியை கோ வாகவும், விஷ்ணுவை கோவை ரக்ஷிப்பதற்கு கோபனுகவும் ஆகும்படி சபித்துவிட்டு, பூலோகத்தில் பிராம்மணர்களுக்கு சந்தண விருக்ஷத்தினடியில் இருந்து வேதாத்யயனம் சொல்லிவைத்தால் வேதபுரீச்வரர் என்றும் கோ உருவம் நீர்த்தபிறகு அம்பாளுக்கு ஸௌந்தர நாயகி எனவும் நாமகரணமேற்பட்டதென்பது.

க்ஷேத்ரவரலாறு. இம் மஹிமை பொருந்திய க்ஷேத்திரத்தில் ஆஸ்திகர்களால் காளது கார்த்திகை-௴ 1௳ ப்ரானுவாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டு லக்ஷார்ச்சனை ஸ்வாமிக்கும் அம்பாளுக்கும் நடந்துவருகிறது. ஷை அர்ச்சனை 26௳ பானுவாரம் பூர்த்தி அடைந்து அன்று உச்சிகாலத்தில் பகவானுக்கு ஸஹஸ்ர சங்காபிஷேகமும் வழக்கபடி நடைபெறும். இரவு பஞ்சமூர்த்திகள் வீதிபிரதக்ஷிணைக் காக்ஷிகள் ஆலயங்களில் அமைக்கப்பெற்றுவரும் மின்சார திறப்புவிழாவும் அன்று நடைபெறும் என அறிகிரேரும். மேற்படி பகவத் கைங்கர்யத்திற்கு உதவிசெய்பவர்கள், காரியதரிசி, சங்காபிஷேக நிர்வாகசபை, தேரிழந்தூர் என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

தனிப்பட்ட கோவில்களுக்கு விலக்கு.

மலையாள ஆலயப் பிரவேச மசோதாவை ஆலோசித்த பொறுக்குக் கமிட்டியார் அந்த தேசத்திலுள்ள தனிப் பட்டவர்களுக்குச் சொந்தமான கோவில்களை இந்த மசோதாவிலிருந்து விலக்கி விட சிபார்சு செய்திருக்கிறார்கள்.

ஈ. வி. ராமஸாமி நாயகருக்கு தண்டனை.

ஒரு வருஷக்கடுங் காவல்.

சுயமரியாதைக் தலைவரான் ராமஸாமி நாயகர் ஹிந்தி எதிர்ப்புக் காரர்களை, மறியல் முதலிய குற்றம் புரியும் படி தூண்டிய தற்காக குற்றம் சாட்டி விசாரணை நடத்தியதில் எதிரி குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டு அவருக்கு ஒரு-வருஷ கடுங்காவல் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

அபராதம் கட்டத்தவறினல் மேலும் 6 மாஸம் காவல்.

5-12-38-௵ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி 48 பட்டணம்படி மூட்டை	4—0—0
ஷை இரண்டாந் தரம் நெல்லூர்சம்பா 48 ஷை உள்ள மூட்டை	3—2—0
அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 48பவுண்டு உள்ள மூட்டை	9—2—0
ஷை இரண்டாம்தரம் நெல்லூர்சம்பா 48 பவுண்டு உள்ள மூட்டை	7-10—0
தேங்காய் எண்ணை 64 சேர் நிறை	5—0—0

ஈஜு தாசில்தார்.

மானிடப்பிறவியின் மேன்மையும் மனிதனின் கடமையும்.

(காக்கழனி கிருஷ்ணமூர்த்தி)

(முன் தொடர்ச்சி)

மனிதப்பிறவி தவிற, ஏனையப் பிறவிகளுக்கு உடல் வளர்ப்பதொன்றே சாத்தியமானது. பகுத்தறிவுள்ள மனிதப்பிறவியில் மட்டுந்தான் உணர்வை வளர்க்கமுடியும். மெய்யுணர்வைப் பெறுவதே ஞானமெனப் படும். தத்துவ ஞானமான மெய்யறிவைக் காட்டிலும் ஒரு மனுஷ்யனுக்கு அடைய வேண்டிய பேறு யாதுளது? அதினுல்,

> "அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
> ரென்னுடைய ரேனு மிலர்."

என்று மெய்யறிவுடையோரை குறளாசிரியர் குறிப்பிட்டுப் புகழ்ந்தார்.

நாம் மெய்யறிவை அடைவதற்கு நமக்கு முதலில் சித்தசுத்தி அவச்யமானது. சித்தசுத்தி வரும் பொருட்டு, நமது சாஸ்திரங்களில் நிஷ்காம்யகர்மம், பக்தி, யோகம் முதலான பல சாதனங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதினுல் அச் சாதனங்களை முக்திக்கான பரம்பரா சாதனமென கொண்டாடுகிருர்கள். சாச்வதமாய் துக்க நிவர்த்தியைத் தரும் மோக்ஷத்துக்கு ஞானமே முக்கிய சாதனமாயுள்ளது.

நமது ஆசார்யாளும் தாமருளிய ஸ்ரீ விவேக சூடாமணியில் "சாஸ்திரங்கள் அப்யசித்தாலும், தேவபூஜை பண்ணினுலும், கர்மங்கள் அனுஷ்டித்தாலும், தேவதைகளை [illegible]லித்தாலும், இன்னுமென்செய்தாலும் [illegible]த்மைக்ய ஞானத்தாலன்றி சத்கோடி கற்பமாயினும் முக்தி சித்திக்காது" என்று உபதேசித்திருக்கிருர்.

இவ்விதமுள்ள யதார்த்த ஞானமோ குருவினுடைய அனுக்கிரஹமன்றி சித்திப்பதில்லை. குருவைத் தேடும் பரிபாகம் வரவும், சரீர அத்யாசம் நசிக்கவும், ஆத்மானாத்ம விசாரணை தோன்றி, முற்றிலும் விசாரித்தறிந்து மனுஷ்யர் கடைத்தேறவே மனிதருக்குப் பகுத்தறிவும், அவரவர்களின் அதிகாரத்துக்குத் தகுந்தபடி அநேகம் சாதனங்களைச் சொல்லும் ஸத்சாஸ்திரங்களையும், கர்மம் நசித்தவிடத்தில் சரீர அத்யாசமும் நசித்தவிடத்தில் துக்கமும் நிவர்த்தியாவதை ருஜுவாய்க்காட்ட ஜாக்ர, ஸ்வப்ன, சுழுப்தி என்ற மூன்றவஸ்தைகளையும் சர்வேசுவான் சிருஷ்டித்திருக்கிருர்.

ஜாக்கிரத், ஸ்வப்னம் என்ற இரண்டவஸ்தைகளிலும் சுகதுக்க போகப்பிரதானமான கர்மமிருப்பதால் அங்கே சரீரமும் துக்கமும் காணப்படுகிறதென்றும், சுழுப்தி காலத்தில் கர்மமில்லாதபடியால் சரீரமும் துக்கமும் காணப்படவில்லையென்றும், நம்முடைய ஸ்புரணையில் அனுதினமும் ஈசுவரன் நமக்கு ருஜுவிடுகிருர். ஆகந்துகமான துக்கம் தோன்றாத சுழுப்தியில் நமக்கு சுபாவமாயுள்ள சுகமே தோன்றுவதால், நமது யதார்த்த ஸ்வரூபம் சுகமேயென நன்கறியப் படுகிறது. இச் சுழுப்தி யவஸ்தையேயில்லாத தேவர்களுக்கு அவர்களின் சுபாவ சுகமே அறியமுடியாதாகையால், சாதனை புரிவதில் தேவப் பிறவியைக் காட்டிலும் மனிதப்பிறவியே மேலானதாகிறது.

நாமடைந்திருக்கும் உத்தமமான மானிடப் பிறவியின் மேன்மையைப்பற்றியும், அப்பிறவியில் நமது கடமையைப்பற்றியும் நமக்கு நம் பெரியோர்களால் பற்பல சாஸ்திரங்களின் மூலியம் நன்கு போதிக்கப்பட்டிருக்கிறது.

"எவன் நாலு வேதங்களையும், வேதாந்தங்களையும் படித்தும் அதி சூக்ஷ்மமான பிர்ம்மத்தை அறியவில்லையோ அவன் வேதமாகிற சுமையை சுமக்கும் கழுதையாவான்" என்று பாரதத்திலும், "எவன் வேத சாஸ்திரங்களெல்லாம் படித்தும் அதில் சொன்னபடி சாந்தியாதி சத்குணங்களோடு ஆத்மஞானத்தையடையாமல் நான் வித்வான், நான் சர்வகலாவல்லபன் என்று சொல்லிக் கொண்டு, கர்வத்துடன் அஹம்பாவத்தையடைந்து காலங்கழிக்கிருனே அவன் விலையுயர்ந்த கழுதையாவான்" என்று வாஸிஷ்டத்திலும், "எந்த புருஷன் இந்திரியப் பிரீதியாய் அக்ஞானத்தோடமைந்த ஆவரண அந்தகாரத்தால் மூடப்பட்டிருக்கிருனே, அவன் பதினலு லோகங்களுக்கும் சென்று, அங்கங்குள்ள போகங்களை புசித்து, கர்மக்ஷயமானவுடன் திரும்பவும் மனுஷியனுய், ஜனித்து, திரும்பவும் கர்மங்களைச் செய்து அங்குபோய் திரும்பி, இப்படி வண்டிச் சக்கிரம்போல் சுற்றுகிருனே அவன் ஆத்மஹத்தி செய்துகொண்டிருப்பவனுக எண்ணப்படுவனென" ஈசோபநிஷத்திலும், "மனுஷ்யன் தான் இறக்குமுன்பே பிரம்ம சாக்ஷாத்காரத்தை அறியாமற் போனுனேயானல், ஈச்வர சிருஷ்டியிலுள்ள உலகங்களுக்கெல்லாம் சென்று அங்கங்குள்ள துக்கங்களெல்லாம் அநுபவிக்கும்படி நேருமென்று" கடவல்லி உபநிஷத்திலும், "பிராமண ஜன்மத்தையும், சிரவணஞ்செய்ய காதையும், குருநாதனிடம் இந்த சம்சாரபந்தம் எப்படி வந்ததென்று கேட்க வாக்கையும் ஒருவனடைந்திருந்தும் எவன் இந்த சம்சாரத்திலிருந்து கரையேறவில்லையோ அவன் பிர்ம்மஹத்தி பண்ணினவனுவான்" என்று பரமசிவன் பிரஹஸ்பதிக்கு உபதேசித்த சூதசம்ஹிதை ஞானயோக காண்டத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. நமது ஆசார்யாளான ஸ்ரீ பகவத் பாதாளும் விவேக சூடாமணியில் "எத் தவத்தாலோ கிடைத்தற்கரிய மனுஷ்ய தேஹம் பெற்று, சுருதியினர்த்தங்களை அறிவதற்கான புருஷத்துவமடைந்தும், அசத்தான தேஹாதிகளிலபிமானத்தால் தன் மயமான சாசுவத மோக்ஷானந்தத்தை அடைவதற்கு எத்தனஞ்செய்யாத மூடன் ஆத்மஹத்தி (தற்கொலை) செய்தவனுவான்" என்று உபதேசித்திருப்பதால் உத்தமமான மானிடப் பிறவியைப் பெற்றிருக்கும் நாமும் இனியாவது விஷயப் பிரவிர்த்தியினின்றும் விலகி, நமக்குற்ற துக்க நிவிர்த்தியின் பொருட்டு ஆஸ்திக தர்ம மார்க்கத்தில் நடந்து, சித்தசுத்தியைப்பெற்று, தார, தனதிகளான ஈஷணைகளைவிட்டு, நிராசையுற்ற கிருபாசாகரரான சற்குருவைத் தேடியடைந்து, அவருக்கு ஆத்மம், அங்கம், சத்பாவம் எனப்படும் சதுர்வித பணிவிடைகளையுஞ் செய்து, அவரின் அனுக்கிரஹ விசேஷத்தால் ஆத்மானாத்ம விசாரணையில் ஈடுபட்டு, அவருபதேசிக்கும் பொருளில் மனதை நிறுத்தி சந்ததமும் தியானிக்கும் யோகத்தால் அனுபவஞானத்தை அடைந்து ஜனன, மரண, சம்சாரபந்தம் நீங்கி மோக்ஷமடையவே பிரயத்தனம் செய்யவேண்டும்.

ஒரு சமயம் இஜ்ஜன்மத்தில் 'கண்டதே காக்ஷி கொண்டதே கோலம்' என்று நடந்துவிட்டு, இனிவரும் ஜன்மத்தில் நமக்கு வேண்டிய நன்மையை நாம் தேடியடையலாமென நாம் மனப்பால் குடிப்பதானுலும், இஜ்ஜன்மம் போய்விட்டால்பின் நமக்கு மனுஷ்ய ஜன்மம் கிடைப்பதென்பது என்ன நிச்சயம்? மனுஷ்ய ஜன்மத்தைத் தாக்கூடிய ஒரு மிச்ர கர்மமாவது இருந்தால்தானே அது வாய்க்கும்? வேறு இதர ஜன்மங்களில் நாம் பிறந்துவிட்டால், அஜ்ஜன்மாவில் தன்னைத்தானறியும் பகுத்தறிவு ஏது? இவ்வித பயம் நமக்குண்டாகவே ஸ்ரீதாயுமான ஸ்வாமியவர்கள் "இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ ஏதுவருமோ அறிகிலேன்" என்று மொழிந்திருக்கிருர்.

ஆகையால், இப்பிறவியிலேயே நமக்குள்ள கார்யா கார்யம் இன்னதெனத் தெரிந்து கொண்டு, அதாவது, புனாபி ஜனனம், புனாபி மரணம் என்று பல பிறவிகள் எடுத்து படுங் கஷ்டத்திலிருந்து விடுபட முயற்சிப்பதே மனுஷ்யனின் காரியமென்றும், மற்ற ஏனைய கார்யங்கள் எல்லாம் மனுஷியனுக்கு அகார்யமென்றும் அறிந்து, நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக,

> "இளமை கழியும் பிணி மூப்பியையும்
> வளமை வலியிவை வாடு—மூளநாளாற்
> பாடே புரியாது பால்போலுஞ் சொல்லினுய்
> வீடே புரிதல் விதி."

என்றபடி நாம் (மோக்ஷமென்ற) வீட்டையவே கண்ணுங் கருத்துமாய் பாடுபடுவோமாக.

அதர்மங்களை அழித்து தர்மஸ்தாபனம் செய்து, தற்காலத்தில் தோன்றும் நாஸ்திகத்தை நாசமாக்கி ஆஸ்திகத்தை நாமடையும்படி பகவான் அருள்புரிவாருக.

மதருஸ் லாஜர்னல் அச்சுக்கூடம் பிரசுரங்கள்.

From his masters Lips	1	0	0
Hindu Ideal	3	0	0
வால்மீகி ராமாயணம் 7 காண்டம் (தேவநாகரலிபியில்)	ரூ.	அ.	ப.
தின்பேப்பர்	5	0	0
நிக்பேபர்	4	0	0

அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்.

1. திருப்புகழ் பாராயண திருமுறை	1	4	0
2. நால்வர் சரித்திரம் காலிகோ	0	12	0
3. ,, ராப்பர்	0	10	0
4. பாரதசாரம்	1	2	0
5. ஸ்ரீ ராமாயண வினவிடை	1	8	0
6. பஞ்சரத்னம்	0	2	(
7. ஷண்முக விஜயம்,	0	2	0
8. ஸ்ரீபாலஷண்முக விஜயம்	0	8	0
9. ருக்மணி	0	8	0
10, தேசிங்குராஜன்	0	10	0
11. ராஜாதேசிங்கு	0	5	0
12. திருக்குறள் நீதிக்கதைகள்.	0	10	0
13. தசகுமார சரித்ரம்	0	6	0
14. திருப்புகழ் ரத்னமாலை	0	3	0
15. கந்தரலங்காரம்	0	2	0
16. திருஞான சம்பந்தர்	0	2	6
17. விசாரசன்மர்	0	3	0
18. மூர்த்தி நாயனர்	0	3	0
19. திருநாவுக்கரசர்.	0	2	0
20. குகன். .	0	4	0
21. திருவகுப்பு	0	4	0
22. பாராயணதிருப்புகழ்	0	4	0
23. வேல், மயில் விருத்தம்.	0	2	0
24. திருப்புகழ் விருத்தியுரை.	8	0	0

ஸ்ரீமத் பாகவதம்.

அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிருமய்யாவர்களால் தமிழில் மொழிபெயர்ப்பு.

கிளேஸில் பைண்டு செய்தது ரூ 1—4—0

சாதாரண பேபர் ரூ. 1—0—0

7,8,9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது. விலை 8அணு

மேற்கண்ட புதகங்கள் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனர்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்.
டவுன்ஹைஸ்கூல் ரோடு: கும்பகோணம்,

வாய் கொப்பளித்தல்.

இவ்வாசாரம், ஆசாரமாக இப்பூலோகத்தில் இன்னும் எந்த தேசத்திலாவது உண்டோ என்று நினைக்க இடமிருக்கிறது. எங்காவது ஒரு வேளை இருப்பினும் இது அசாதாரணமாய் நம்முடைய மதத்தைச் சார்ந்தவர்களுக்கே ஒரு விசேஷமான ஆசாரமாக சொல்லலாம். இது நியதமாய் செய்யப்படவேண்டுமென்று நியமிக்கப்பட்ட காலங்கள் சில உண்டு. அவையாவன:—ஜலமல விஸர்ஜனங்களுக்குப் போய் சௌசம் பண்ணிக்கொண்டு வந்ததும் வாய் கொப்பளிப்பது அத்யாவச்யமென்று ப்ராசீன விதியும் அனுதியான ஆசாரமும் உண்டு. பன்னிரண்டுதரம் வாய் கொப்பளிக்க வேண்டும். மல விஸர்ஜனத்திற்குப் பிறகு பன்னிரண்டு தரமும், ஜல விஸர்ஜனத்திற்குப்பிறகு ஆறுதரமும் வாய் கொப்பளிப்பது நியமம். இவ்விதம் வாய்கொப்பளிப்பது ஒரு பிள்ளைக்கு உபநயனமாகி, அல்லது ஒரு பெண்ணுக்கு விவாகம் ஆனபிறகே அவச்யம் அனுஷ்டிக்கவேண்டியது என்று ஏற்பட்டிருப்பதால், தத்காலத்தில் ப்ரகஸ்பதிகள் என்று சொல்லப்படும் உபாத்தியாயர்கள் அத்தனை தடவை கொப்பளிக்கச் சொன்னால், தத்கால சிறுவர்கள் செய்யமாட்டார்களென்ற நம்பிக்கையினாலோ, குறைத்து சொன்னாலாவது விடாமல் செய்வார்கள் என்ற ஆசையினாலோ, தன்னுடைய சொந்த அநுஷ்டானத்திற்கு அதிகமாய் சொல்லுவது சரியல்லவென்ற தர்மபுத்தியினாலோ, ஆறுதரமும், மூன்று தரமும் முறையே வாய் கொப்பளித்தால் போதுமென்று தெரிவிக்கிறார்கள். இக்காலங்களில் வாய் கொப்பளிக்க வேண்டியது அவசியம் என்பதற்கு காரணம் விசதம். தேடி அறிய வேண்டியது மன்று. ஜலமலங்கள் விஸர்ஜனம் செய்யும்பொழுது ப்ரதேசம் சுத்தமாயிருந்தபோதிலும், ஒருவிதமான ஆவியும் துர்கந்தமும் வெளிப்பட்டு வருவதால், தத்சம்பந்தப்பட்ட இரண்டு த்வாரம் விலக்கி மனுஷ்யனுடைய சிரஸ்ஸில் ஏற்பட்டிருக்கும் ஏழு த்வாரங்களிலும் இவ்வசுசியான ஆவியுடையவும் துர்கந்தத்தினுடையவும் சம்பந்தம் நேரிடுவது நிச்சயமாகையால் அந்த அசுசியினுடையவும் துர்கந்தத்துடையவும் தோஷத்தை போக்குவதற்கு முகத்தை அலம்பி அல்லது கண், மூக்கு, செவிகள் இருக்குமிடங்களை மாத்திரம் துடைத்து வாய் கொப்பளிப்பது அத்யாவச்யகம். வாயால் நாம் சாப்பிடுவதும் பானம் செய்வதுமேயன்றி வாயிலூறும் எச்சிலையும் சதா உட்கொண்டே இருக்கிறோமாதலாலும் கொஞ்சம் அசுத்தமாயினும் துர்க்கந்தமாயினும் இக்காலங்களில் வாய்க்குள் நமக்குத் தெரியாமலே புகுறக் கூடுமாகையாலும் வாய் கொப்பளிப்பது என்பது தேக சுத்திக்கே ஆஸ்பதமாகிறது. இதுவும் தவிர முகத்தை, வாயை துடைத்தோ, அலம்பியோ, வாய்கொப்பளிப்பது ஒரு ஸ்நானம் எனவே சொல்லலாம். சிலருக்கு ஜலமலவிஸர்ஜனம் செய்தால் முழு ஸ்நானமே செய்யவேண்டியதாய் நியமிக்கப்பட்டிருக்கிறது. அவ்வித ஸ்நானம் லௌகிகர்களுக்கு அஸாத்யமாகையால், கை, கால்களை, அலம்பிக்கொண்டு முகத்தை துடைத்து வாய் கொப்பளிப்பது ஸ்நான துல்யமாகவேகொண்டாடலாம். போஜனம் செய்த பிறகு பதினாறு தடவை கொப்பளிக்கவேண்டுமென்பது விதி. இவை எல்லாம் மத ஸம்பந்தமென்றும் மதத்தில் தத்காலம் ஏற்பட்டிருக்கும் த்வேஷ புத்தியினால் ஆரோக்யத்திற்கும் சரீர சுத்திக்குமென்றே முக்யமாய் ஏற்பட்டிருக்கும் ஆசாரங்களைக் கூட ஆசாரம் என்கிற நாம மாத்திர அஸஹனத்தினாலே, அனுஷ்டிக்காமல் விடுகிறார்கள். புஜிக்கயின் வாயில் ஏந்த மூலையிலாவது சந்தியிலாவது, புஜித்ததின் லேசமாவது அணுவாவது ஒட்டிக்கொண்டிருக்குமாயின் அது அவ்விடத்தில் சுகோஷ்ணமும் ஈரமும் உள்ளவாய் ப்ரதேசத்தில் அதிசீக்கிரத்தில் அசுத்தங்களும், கிருமிகளுங்கூட உண்டாவதற்கு காரணமாகின்றது.

அதனால் வாயில் புண்களும் உண்டாவதேயன்றி முக்யமாய் பல்களுக்கு கெடுதியையும் உண்டாக்குகிறது. வாயை கொப்பளித்தே தெரியாத பாச்சாத்யர்களுக்கு பல் நோயும் சிறுவதிலேயே பல் விழுந்து விடுவதற்கும் இது தான் முக்ய காரணம். காலை தூக்கத்திலிருந்து எழும் போது வாய் அசுத்தமாயிருக்குமாதலால் அப்பொழு வாய் கொப்பளிப்பது உசிதம். அதுவும் தவிர வயிற்றிலிருந்து எதிர்ப்பினாலாவது மூக்கிலிருந்து ச்வாஸத்தினாலாவது கோழையினாலாவது ஏதாவது தோஷம் ஏற்பட்டால் அப்பொழுது வாய் கொப்பளித்தலும் அத்யாவச்யகம் வாய் கொப்பளிக்கும் ரீதியும் சரியாய் அநுஷ்டிக்கப்பட வேண்டும். அநேகர் வாய் நுனி அதாவது வாயின் முன் பாகத்தில் மாத்திரம் உட்கொண்டு உமிழ்ந்து விடுகிறார்கள். அவ்விதம் செய்வது போதாது. உத்தேசிக்கும் பலனையும் கொடுக்கத்தக்கதன்று. வாய் நிறம்ப ஜலம் கொண்டாலும் கார்யகரமாகாது. வாயை முக்கால் வாசி ஜலத்தால் நிறப்பி வாயினுடைய மேல் கீழ் பக்கங்களிலும் நாக்கினாலும் அந்த ஜலத்தை வேகமாய் ஒவ்வொரு சந்தில் புகச்செய்து ஆங்காங்கு இருக்கும் அழுக்குகளையும் பதார்த்த லேசங்களையும் ஜலத்தில் சேரச்செய்து வெளிப்படுத்துவது தான் சரியான மார்க்கம். ஆறு, பன்னிரண்டு, பதினாறு என்று நியமிக்கப்பட்டிருப்பதற்கும் காரணம் அந்தந்த காரியங்களினால் நேரிடக்கூடிய அசுத்தத்தை இத்தனை தரம் கொப்பளித்தால் போக்கலாமென்று அனுபவத்தால் அறிந்து நிர்ணயிக்கப்பட்டதாகும். ஏற்படுத்தப்பட்டிருக்கும் சங்க்யைகள் குறையக்கூடாது. சங்க்யைகளும் குறித்தடவைகள் கொப்பளித்தும் அசுத்த ஆசங்கை இருக்குமேயானால் அதற்கு மேலும் சந்தேகம் தீர்ந்து த்ருப்தியாகும் வரைக்கும் கொப்பளிப்பதே உசிதம் இவை எல்லாம் தீர்க்கமாய் யோசித்து தத்காலத்தவர்கள் ஸ்திரீ புருஷர்கள் யாவரும் வாய் கொப்பளிக்கும் விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் நியமங்கள் வைதிக பிச்சுத்தனம் என்று அவமதிக்காமல் அதனால் ஏற்படக்கூடிய தேகாரோக்யத்தையாவது யோஜித்து இவ்விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் அனுஷ்டானத்தைக்கைவிடாமல் அனுஷ்டிப்பார்களாக. வாய் கொப்பளிப்பதற்கு ஸம்ஸ்கிருதத்தில் கண்டூஷம் எனப்பெயர். இந்த விஷயத்தை தர்ம சாஸ்திரிகளும் ஆயுர்வேத சாஸ்திரிகளும் வெகுவாய் விவரித்திருக்கிறார்கள், அதன் சுருக்கத்தை இங்கு காட்டுகிறோம். மூன்று ஸந்தர்ப்பங்களில் கண்டூஷம் விதிக்கப்பட்டிருக்கிறது (1) மலவிஸர்ஜநம் (2) மூத்திரவிஸர்ஜநம் (3) போஜநம். இதில் மூன்றுவது சொன்னதை முக்கியமான அப்யவஹார ஸமயத்தில் மாத்திரம் என்று எண்ணுவது சரியல்ல: நாம் எந்த சிற்றுணவு உட்கொண்டாலும் அந்தந்த ஸமயத்திலும் கண்டூஷம் செய்யவேண்டியது அவச்யமாகிறது. இவ்விஷயத்தை ஸ்ரீபாராசரர் தெளிவாய் பேசியிருக்கிறார். ஓரிடத்தில் உட்கார்ந்தே கண்டூஷம் செய்யவேணும், தனது இடது பாகத்தில் கண்டூஷத்தை கொப்பளிக்கவேணும், கொப்பளிக்கும்போது ஆள்காட்டி விரலாலோ, மற்ற விரல்களாலோ வாயைத்துவக்கவும், அதனால் முகத்தை சலிப்பிக்கவும் கூடாது. சிலஸ்மிருதிகளில் மூத்திரவிஸர்ஜநத்தில் கண்டூஷம் 4 தடவை, மலவிஸர்ஜநத்தில் 8 தடவை, ஆஹாரம் சாப்பிட்ட பிறகு 12 தடவை தந்ததாவநம் செய்தபிறகு 16 தடவை என்றும் நியமம் கூறப்பட்டிருக்கிறது. வைத்திய சாஸ்திரத்தில் தினசரியில் கண்டூஷம் விதித்திருப்பதுமன்றி, சிற்சில வியாதிகளுக்கு சிகித்ஸையாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அது இங்கு நமக்கு ப்ரக்ருதமல்ல. ஆனாலும் வைத்திய சாஸ்திரத்தில் சொன்ன பொதுவான விதியை மாத்திரம் இங்கு உரைக்கிறோம். கண்டூஷம் செய்வதற்கு சீதோஷ்ணமான ஜலமே நன்று. சீதோஷ்ணமான ஜலத்திற்கே வாயை சுத்தி செய்யும் சக்தி உண்டு. கண்டூஷம் செய்ய தொடங்கும் போது கழுத்தை காற்றுபடாமல் துணியில் மூடி (கழுத்தில் வியர்வை உண்டாவது நல்லது) வாய் நிறைய ஜலத்தை விட்டு, நிமிர்ந்து ஆகாசத்தைநோக்கி அசையாமல் வைத்துக்கொண்டு சிறுநேரம் இருக்கவும். சிறுநேரத்தில் வாயில் உள்ள ஜலத்தில் நெஞ்சிலிருந்து கோழைகள் வந்து கலக்கும். அல்லது மூக்கிலும் கண்ணிலும் நீர்வடிய ஆரம்பிக்கும். அப்போது கொப்பளித்து விடவேண்டும். இதற்கே கண்டூஷம் எனப்பெயர் வைத்திய சாஸ்திரத்தில் வழங்கப்படுகிறது. வாயில் கொஞ்சம் கொஞ்சம் குறைய குறைய ஜலத்தை ஊற்றி பல தடவைகள் கொப்பளிப்பதினால் அடியில் கண்ட வியாதிகள் நீங்கும். கழுத்து வலி, தலைநோய், காதில் வேதனை, நேத்திர வியாதி, மூக்கிலிருந்து நீர் வடிதல், நாக்கு உலர்ந்து போவது ஓஷ்ட துடிப்பு, சோம்பல் அருசி முதலியவைகள். வே. தீ.

உயர்ந்த புஸ்தகம்!
உயர்ந்த புஸ்தகம்!

ஸ்ரீநகர விமர்சனம்.
ஆர்யாத்விசதி ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்னம்.
[பிரம்மஸ்ரீ அருட்கவி க. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் எழுதிய தமிழுரையுடன் கூடியது.]
விலை 0—2—0 தபால்செலவு வேறு
கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

திவான்பகதூர் V. K. ராமாநுஜாசாரியார்.
எழுதப்பட்டது.
யதீந்த்ரமத தீபிகை. 4 0 0

Mr. N. E வேங்கடேச சர்மா, எழுதியது.
ஸம்ஸ்கிருத ஸ்வபோதினி. 1 0 0
ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி. 4 0 0

“கடாக்ஷ சதகம்”
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது
மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
தபால் செலவு வேறு] [விலை அணா 0 8 0
கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

இராமர் யோகநிஷ்டை செய்தார் என்பதற்கு ஆதாரம்.

இராமர் விச்வாமித்திரரிடம் கற்றுக்கொண்ட யோக சாஸ்திரத்தை அனுசரித்து அவர் யோக நிஷ்டைசெய்ததாக வால்மீகி வ்யக்தமாய் சொல்லாவிட்டாலும் அவர் அப்படி அருத்தமாகும்படி அநேக இடங்களில் சொல்லி இருக்கிறார். பாலகாண்டம் முதலாவது ஸர்க்கத்தின் 8வது சுலோகத்தில் இராமனை "வசி" என்றும், 12-வது சுலோகத்தில் "ஸமாதிமான்" என்றும் சொல்லி இருப்பதால் அவர் இந்திரிய நிக்ரகம் செய்தவர் என்றும் ஸமாதி செய்தவர் என்றும் அருத்தம்செய்ய இடமுண்டு. மேலும் ஷை ஸர்கம் 22-வது சுலோகத்தில் இராமனை "விவாஸனம்" செய்யவேணுமென்று தசரதரை, கைகேயி வரன் கேட்டதாயும் அதை அநுஸரித்து இராமர் "விவாஸனம்" செய்யப்பட்டார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. "விவாஸனம்" என்றதற்கு இராஜ்யத்தை விட்டு விரட்டுகிறது என்ற அருத்தமும் அல்லது இராமனை ஆவரணமில்லாமல் செய்கிறது என்று அருத்தமும் செய்யலாம். இராமனை ஆத்மா என்று அருத்தம் செய்திருப்பதால் ஆத்மாவை யோகிகள் பார்க்க முடியாதபடி "விருத்திகளாகிற" ஆவரணம் மறைப்பதால் அந்த விருத்திகளை அடக்கி ஆவரணத்தை நீக்குவதும் "விவாஸனம்" என்றதற்கு அருத்தமாகுமாதலால் இராமனை யோகநிஷ்டை செய்யும்படி தசரதர் சொன்னதாயும் அருத்தம் செய்ய இடமுண்டு. மேலும் வால்மீகி இராமர், இலக்குமணர், பரதர், சத்துருக்னர் [illegible] முனிவேஷத்தை தரிப்பதாக [illegible] பேர்களும் [illegible] திலுள்ள தத்வங்களாதலால் இராமர் முனிவேஷத்தை தரித்ததை வைத்து நால்வரும் தரித்ததாக சொல்ல இடமுண்டு. வால்மீகி, இராமர் யோகநிஷ்டர் என்பதை வெளிப்பட சொல்லாமல் ரஹஸ்யமாக இராமர் சித்திரகூடத்திலிருந்தபோது நடந்ததாக காகாஸுரனைப்பற்றி ஒரு கதை சொன்னதினால் இராமர் சித்திரகூடத்தில் நிஷ்டையிலிருந்தார் என்பதை ஸூசிக்கும்படி சொல்லி இருக்கிறார். அதின் விவரம் பின்னால் இராமர் சித்திரகூடத்திற்குப் போனதை சொல்லும் போது விவரிக்கப்படும்.

மேலும் இராமர் யோக நிஷ்டைசெய்தார் என்பதை உறுதிப்படுத்த அவரைப்பற்றி பின்னால் சொல்லிஇருக்கிற ஒவ்வொரு சரித்திரமும் யோகசாஸ்திர நிரூபணமாக அருத்தமாகும்படி இடம்கொடுக்கிறது.

தாடகா ஸுபாகுவதமும் மாரீசனை ஸமுத்திரத்தில் ஆழ்த்தினதும்

விச்வாமித்திரர் இராமனையும் இலக்குமணனையும் கூட்டிக்கொண்டு கங்கையை தாண்டிப்போனதும் அவ்விடத்திலுள்ள ஸித்தாச்ரமத்தில் முன் பரமசிவன் தபஸ்செய்தபோது காமனை எரித்த கதையை சொல்லுகிறார். பின்னால் நடக்கப்போகிற தாடகாவதக்கதை இராமர் யோகநிஷ்டைக்கு உட்கார்ந்தார் என்று அருத்தம் செய்ய இடமிருப்பதாலும் கீதையின் மூன்றுவது அத்யாயம் 37-வது சுலோகத்தில் யோக நிஷ்டை செய்கிறவர்களுக்கு காமம் சத்துருவாதலால் அதைக் கொன்றுவிட்டுதான் நிஷ்டைக்கு ஆரம்பிக்க வேண்டுமென்ற சொல்லி இருப்பதால் இராமர் தாடகாவதமாகிற யோக நிஷ்டைக்கு ஆரம்பிக்குமுன் பரமசிவன் காமனை எரித்த கதையை இராமருக்கு சொல்லுவது உசிதமாக இருக்கிறது. அவ்விதமே வால்மீகிதான் யோகநிஷ்டையிலிருந்து இராமாயணக் கதையின் விபரம் தெரிந்துகொள்ளும் முன்னும் அவர் காமத்தைப் போக்கினர் என்பதை காட்ட அவர் சொன்ன முதல் சுலோகம் இடம்கொடுக்கிறது. அது பின்வருவதுதான்,

"மாநிஷாத ப்ரதிஷ்டாம் த்வம்
அகம: சாச்வதீ ஸ்ஸமா: "
"எத்க்ரௌஞ்ச மிதுனத் ஏகம்
அவதீ: காமமோஹிதம்."

தாடகை என்பவள் ஒரு யக்ஷி என்றும் அவள் அகஸ்த்யருடைய சாபத்தால் ராக்ஷஸியாக செய்யப்பட்டாள் என்றும் அவள் ரிஷிகள் செய்கிற தபஸை கெடுக்கிறவளாயும் ஸுகேதுவின் புத்திரி என்றும் ஸுந்தனுடைய பெண்சாதி என்றும் அவளுடைய பிள்ளைதான் மாரீசன் என்றும் சொல்லப்படுகிறது. ஆப்தேயினுடைய அகராதியில் அவளை "தாடகை" என்றும் "தாடகை" என்றும் இருவிதமான பாடமிருப்பதாகச் சொல்லி ஸாமான்யமாக விளங்கும் பாடம் "தாடகை" என்றும் ஸூசிபித்திருக்கிறது. "தாட" அடித்துக்கொண்டிருப்பது என்று அருத்தமாதலால்நம்முடைய சரீரத்தில் எப்போதும் அடித்துக்கொண்டிருக்கும் ஒருகருவி இருக்கிறது. அது யோகநிஷ்டைக்கு முக்கிய ஸாதனமான இருவிழிகளின் பார்வையும் ஒன்றுசேர்ந்து புருவங்களின் மத்தியில் விழாதபடி தடுத்துக்கொண்டிருப்பதாக கண்ணின் மேல் "எமை கொட்டுதலே" தாடகையாக சொல்லுவது பொருத்தமாக இருக்கிறது. தாடகையை ஸுகேதுவின் பெண் என்று சொன்னதும் "மேல் இமை" கண்ணுக்கு ஒரு கொடிபோலிருப்பதால் அதை ஸுகேது என்று சொல்லி அதின் கொட்டுதலை அதின் பெண்ணாக சொன்னதும் பொருத்தமாக இருக்கிறது. ஆகையால் இராமர் தாடகையைக் கொன்றார் என்பது அவர் யோக நிஷ்டைக்கு உட்கார்ந்து தன் இமைகொட்டலை கஷ்டப்பட்டு நிறுத்தி தன் இரு கண் பார்வையையும் புருவங்களின் மத்தியில் விழும்படி செய்தார் என்று அருத்தம்செய்ய இடமுண்டு. ஆநந்த இராமாயணத்திலும் ஸ்காந்த புராணத்திலும் காலநேமி என்ற ஒரு இராக்ஷஸன் இருந்ததாயும் அவன் தான் தாடகையாக உருவம் மாறிக்கொண்டு இருந்ததாயும் சொல்லப்படுவதாலும் "நிமி" என்று ஒரு பிள்ளை இக்ஷ்வாகுவுக்கு இருந்ததாயும் அவர் இமைகொட்டுதலில் வசித்தார் என்பதாகசொல்லியிருப்பதாலும் 'நிமி என்றதற்கு இமைகொட்டுதல் என்று அருத்தம் செய்ய இடமிருப்பதாலும், தாடகை என்பது இமை கொட்டல்தான் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஸ்ரீகிருஷ்ண சரித்திரத்திலும் ஸ்ரீ கிருஷ்ணனை கொல்லவந்த காலயவனன் குகையில் தூங்கிக்கொண்டிருந்த முசுகுந்தசக்ரவர்த்தியினால் கொல்லப்பட்டான் என்று சொல்லி இருப்பதாலும் தூங்குகிறவனுக்கு கண் எமைகொட்டுதல் இல்லாமலிருப்பதால் காலஎவனன் வதமும் ஸ்ரீ கிருஷ்ணன் நிஷ்டையிலிருந்து தன்இமை கொட்டுதலை நிறுத்தினென்று அருத்தம் செய்ய இடமுண்டு.

ஸுபாஹு வதமும் மாரீசனை ஸமுத்திரத்தில் ஆழ்த்தினதும்.

மாரீசன் தாடகையின் புத்திரனாக சொல்லி இருப்பதால் இமைகொட்டலை நிறுத்தின உடன் ஒரு மயக்கமும் தலைவலியும் உண்டாகி கண்களும் சிவந்துபோவதால், தலைவலியை ஸுபாஹுவாயும் மயக்கத்தை மாரீசனையும், அந்த வலியை பொறுத்துக்கொண்டு ப்ரஹ்மத்யானம் செய்தால் சற்றுநேரம் கழித்து வலி நின்றுவிடுவதை ஸுபாஹு கொல்லப்பட்டான் என்றும் பிறகு கண்ணில் ஜலம் வந்த உடன் மயக்கமும் தெளிவதால் மாரீசன் ஸமுத்திரத்தில் ஆழ்த்தப்பட்டதாகவும் சொன்னதாக அருத்தம்பண்ண இடமுண்டு. விச்வாமித்திருடைய யாகசாலையில் ஸுபாஹுவும் மாரீசனும் இரத்தத்தை கொட்டினதாக சொன்னதை கண் சிவந்து போனதை குறிப்பதாக சொல்ல இடமுண்டு ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் இரண்டாவது அத்யாயம் மூன்றுவது ப்ராஹ்மணத்தில் விச்வாமித்திரரையும் ஜமதக்னியையும் இரு கண்களாக சொல்லி இருப்பதால், கண்ணை விச்வாமித்திருடைய ஆச்ரமமாயும் அது சிவந்ததை அந்த ஆச்ரமத்தில் இரத்தத்தை ஸுபாகு மாரீசர்கள் கொட்டினார்கள் என்று சொன்னதும் பொருத்தமாக இருக்கிறது.

பரமேச்வரரின் லீலைகள்.

(மகாபாரதம்).

(சிரோமணி கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரி மேலக்காவேரி).

பகவானே அநேகம் ஆயுதங்களிருக்க நீர் பினாகத்தை வைத்துக்கொள்ளக் கருதுவது ஏன்? என பார்வதீ வினவ. பகவான் கூறுவதாவது.

முன்னொரு யுகத்தில் கண்வனென்றும் முனிவர் இருந்தார். அவர் அற்புதமான தவம் செய்யத் தொடங்கினர். அவர் கடும் தவம் செய்யும்போது அவர் தலையில் நாளடைவில் புற்று உண்டாயிற்று அதனால் அவர் தலையில் மூங்கில் முளைத்தது. அவற்றையும் பொருள்படுத்தாது தவம் செய்யவே அவற்றால் ஸந்தோஷமடைந்த பிரும்மதேவர் வரங்கொடுத்தார். பிறகு அம் மூங்கிலைப் பார்த்து அதனால் உலகில் என்ன உபயோகம் என்பதை சிந்தனைசெய்து அதை எடுத்து வில்லாகச் செய்தார். அதை விஷ்ணுவுக்கும் எனக்கும் இரண்டு வில்களாககொடுத்தார். பினாகமென்பது என் வில். சாரங்கமென்பது விஷ்ணுவின் வில். மிகுதியுள்ள வில்லினால் காண்டீபமென்னும் மூன்றுவது வில் உண்டாயிற்று. அதை இந்திரனுக்குக் கொடுத்துவிட்டு பிரும்மா தம் உலகம் சென்றார்.

2. விருஷப வாஹனம் ஏன்?

ஈச்வரரே வேறு வாகனங்கள் அநேகமிருக்கையில் விருஷபம் உமக்கு வாஹனமானதேன்? என பார்வதீ வினவ பகவான் வினா கூறுகிறார்.

முன்பு ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் பசுக்கள் வெள்ளை நிறமாக இருந்தன. அவைகள் தேகக் கட்டுகளும் பலமுள்ளவைகளாய்க் கொழுத்துத் திரிந்தன. அக்காலத்தில் நான் உலக நன்மைக்காக இமயமலையில் ஒற்றைக்காலால் நின்று கையைத் தூக்கிக்கொண்டு தவம் செய்தேன். அப்பொழுது அக் கொழுத்த பசுக்கள் கூட்டமாக என் பக்கத்தில் சுற்றிலும் வந்து நானிருந்த விடத்தை இடித்தன. அதனால் எனக்கு மனக்கலக்கமுண்டாயிற்று. அப்பொழுது கோபத்தினால் பசுக்கள் எரிக்கப்பட்டன. பசுக்களுக்கு அக் கொடிய விசனம் வந்த போது இந்த விருஷபம் என்னிடத்தில் வேண்டிக்கொண்டு கோபத்தை யடக்கிற்று. அதுமுதலேதான் பசுக்கள் அடக்கமுள்ளவையும் பல நிறங்களுள்ளவையுமாயின. இந்த விருஷபம் மட்டும் முதலிலிருந்தபடியே வெண்ணிறமாயிருக்கிறது. அது முதல் எனக்கு வாகனமாகவும் கொடியாகவும்மிருக்கிறது. அதனாலேதான் தேவர்களும் கோக்களும் என்னைப் பசுபதியாகச் செய்தனர். நான் கோபந்தணித்து பசுபதியாகவும் மானேன்.

தொடர்ச்சி 10 பக்கம்

25260

657

பரமேச்வரன் லீலை.

(9-ம் பக்கத் தொடர்ச்சி.)

3. ஈச்வரர் மயானத்தில் வஸிப்பது ஏன்?

உமை—ஈச்வரரே மங்களகரமான அழகிய வீடுகளில் மற்ற பிராணிகளிருக்கையில், மயிர் எலும்பு முதலிய அருவருக்கத்தக்கதும் பயங்கரமான மயானத்தில் நீங்கள் ஸந்தோஷமாயிருப்பது ஏன் என கேட்க பகவான் கூறுவதாவது.—

முன்பு நான் வஸிக்க சுத்தமானவிடத்தைத் தேடி வெகுகாலம் கடந்தும் பரிசுத்தமான இடம் கிடைக்கவில்லை. இந்த சமயத்தில் மனக்கலக்கமுள்ள பிரும்மதேவர் என்னிடம் வந்தார். உலகங்களை நடுங்கச் செய்யும் பூத ஸ்ருஷ்டி அப்பொழுது உண்டாயிற்று. பூதங்கள் பிராணிகளை அதிகமாகக் கொன்று இங்குமங்கும் திரிந்தன. இவ்வாறு உலகம் அழியுங்கால் பிரும்மதேவர் அதற்குப் பரிஹாரம் செய்ய என்னை அவ்வேளையில் நியமித்தார். நான் பூதங்களிடமிருந்து உண்டான அப்பயத்தினின்று காப்பாற்றினேன். மனிதர்களின் ஸஞ்சாரமில்லாமையால் மயானம் மிகப் பரிசுத்தமென்று நினைக்கப்பட்டது. அந்த பூதங்களை நான் மயானத்தில் நிறுத்தினேன். அவ்விடமிருந்துகொண்டு எல்லா ப்ராணிகளின் பயத்தையும் போக்கினேன். எனக்கு பூதங்களை விட்டுப் பிரிய மனமில்லை. மயானத்திலிருப்பதில் எனது மனம் விருப்பமுற்றது. இது வீரர்களுடைய ஸ்தானமாயிருப்பதால் இதையே எனது வாஸஸ்தானமாய் செய்துகொண்டேன். அநேக கபாலங்கள் நிறைந்து பயங்கரமாயிருப்பது அழகாய் இருக்கிறது. பூதங்களாலுண்டான பயத்தைப் போக்குவதற்கு [illegible] முடியாது. நான் அங்கிருந்து ஜனங்களைக் காப்பாற்றுகிறேன். உலக நன்மைக்காக அப்பூதங்களை மயானத்தில் நான் ஸந்தோஷப்படுத்திக்கொண்டிருக்கிறேன் என்றார்.

4. உமை, தேவரே உமது உருவம் செம்மட்டை நிறமும், விகாரமும், பயங்கரமானதும். கோரப்பற்கள், ஜடைகள், கோபங்கொள்ளல் சூலம் பட்டிசமென்றும் ஆயுதங்கள் இப்படிப்பட்ட உருவம் எதற்கு? என வினவ. பகவான் கூறுவதாவது:—உலகில் குளிர்ச்சி வெப்பம் என இரண்டு தன்மை உள்ளன. அவற்றினால் பற்றப்பட்ட இவ்வுலகமனைத்தும் ஸௌம்யம் (சந்திரன்போன்றது) ஆக்னேயம் (அக்னிபோன்றது) என. இரண்டுவிதமானது. ஸௌம்யரூபம் விஷ்ணுவிடத்திலும், ஆக்னேயரூபம் என்னிடத்திலும் ஸ்திரமாயிருக்கின்றது. இந்த தேகத்தினால் எல்லா உலகங்களையும் தாங்குகிறேன். உக்ரவடிவம் விரூபமான கண் சூலபட்டிசங்கள் ஆக்நேயமென்றும் எனது ரூபங்கள் உலக நன்மைக்காக ஏற்பட்டது. இதை விட்டு நான் மாறினால் எல்லா உலகங்களும் தடுமாற்றம் உண்டாகிவிடும் என்றார்.

5. உமா— உங்களது தலையில் சந்திரனது பிறை விளங்குகிறது. எதற்கு என வினவ அவர் கூறுவதாவது.

முன் ஒரு காலத்தில் தக்ஷயாகத்தை கெடுப்பதற்காக பூதங்களால் சூழப்பட்டுக் கோபமுற்றிருந்தேன். அந்த யாகத்தில் ஹவிர்பாகம் வாங்கிக்கொண்ட தேவர்கள் என்னால் அடித்துத் தூரத்தப்பட்டனர். குற்றமில்லாமலிருந்தபோதிலும், கோபங்கொண்ட என்னால் பிடிக்கப்பட்ட சந்திரன் கால் கட்டைவிரலால் உதைக்கப்பட்டும் அவன் என்னை நல்வார்த்தையாகவே வேண்டிக்கொண்டான். பிறகு அதை நினைக்கும்போது வருத்தமுண்டாயிற்று. அதுமுதல் சந்திரனைத் தலையில் வைத்துக்கொண்டிருக்கிறேன். இப்படிச் செய்வதாலேயே எனது பாவம் நீங்குமென்பது எனது எண்ணம். அது என் தலையில் சந்திரன் எப்பொழுதும் காணப்படுகிறான். இதைக்கேட்ட முனிவர்கள் ஆச்சர்யமடைந்து அஞ்சலிவரிசைகளுடன் சிறந்த வாக்குக்களினால் பகவானைத் துதித்தனர்.

மாயவரம்.

ஸ்ரீ ராமாயண பட்டாபிஷேகம்.

பிக்ஷாண்டார் கோவில் ஸ்ரீமத் ராமாயண கதாம்ருத வருஷக பிரசங்கரத்னம் வேதமூர்த்தி பிரம்மஸ்ரீ பாகவத கௌஸ்துபம் கோபால பாகவதர் அவர்களால் மூன்று மாத காலமாக இவ்வூர் மகாதானத்தெருவு அம்பாபாய் சத்திரத்தில் ராமாயண ஸீரியல் நடத்தி 28-11-38 திங்களன்று ஸ்ரீ ராம பட்டாபிஷேக மஹோத்ஸவம் நடைபெற்றது. பல கிராமங்களிலிருந்து ஒவ்வொரு சரித்திரத்திற்கும் ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். நகரில் பிரபல உத்யோகஸ்தர்களும் மற்றுள்ள வித்வான்களும் பட்டாபிஷேகத்தன்று விஜயம் செய்து பாகவதர் அவர்களுக்கும் தக்க ஸன்மானங்களும் செய்தார்கள். பிரம்மஸ்ரீ பாகவதர் அழகிய பிரவசனத்தையும் அன்னவர்களின் குமாரர்களான பாலசுப்பிரமண்யம் பிரதர்ஸ்களுடைய இனிய சங்கீத கானத்தையும் கேட்டு ஆனந்திக்காதவர்களில்லை.

பட்டாபிஷேகம் ஆனதும் கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் முக்யமாக சில வார்த்தைகள் சொன்னதன் சாராம்சமானது:— பிரும்மஸ்ரீ பாகவதர் அவர்களிடம் ஆயிரக்கணக்கான மகா ஜனங்கள் வைத்திருக்கும் அபிமானத்தை அளவிடமுடியாதென்றும் அன்னவரை நாம் தெய்வமென்றே சொல்லவேண்டுமென்றும் தர்மம் குறைந்து தெய்வ நம்பிக்கை இல்லாத இக்காலத்தில் பாகவதர் அவர்களால் கடவுள் இருப்பது சத்தியமென்றும் தர்மம் இன்னும் குறையவில்லை யென்றும் சகல ஜாதி மத ஸ்திரீ புருஷர்கள் இந்த ராமாயணத்திற்கு விஜயம் செய்து கொண்டு வந்ததால் நிதர்சனமாகத்தெரிகிறது என்றும் செல்வர்களாகத்தோன்றியிருக்கும் பாகவதர் அவர்கள் குமாரர்கள் சிரஞ்சீவிகளாக யிருந்துகொண்டு தர்மப்ரசாரம் செய்து வரவேண்டுமென்றும் மேலும் இம்மாதிரி கதாபிரவசனமூலம் ஜனங்களின் ஆஸ்திக்யம் இன்னும் குறையவில்லை யென்றும் இது விஷயத்தில் பாகவதரிடத்தில் ஆஸ்திக சமூகம் நன்றி காட்ட கடமைப்பட்டிருக்கிறதென்றும் மறுமுறை இவ்வூரில் நாம்ஒன்றுபட்டு ராமாயண ஸீரியல் செய்து வைக்க வேண்டுமென்றும் பேசினவுடன் பிரம்மஸ்ரீ பாகவதர் அவர்கள் இந்த ராமாயணத்தை பற்றி உதவி புரிந்த அனைவருக்கும் வந்தனம் கூறி இவர்களுடை முயற்சிகள் பாராட்ட கூடியவை. இதற்கு முக்ய கர்த்தாவாக இருந்து நடத்திய மகா பக்தியிற் சிறந்த ஸ்ரீமான் நீலகண்ட அய்யர் அவர்களால் பல்லாயிரக்கணக்கான மக்கள் சந்தோஷமடையும்படி செய்த அன்னவர் நீண்ட ஆயுளோடு சிரஞ்சீயாக இருந்து கொண்டு புத்ர மித்ராதிகளோடு அஷ்ட ஐசுவர்யங்களும் ஏற்பட்டு இப்படிப்பட்ட தர்ம கார்யங்களை அடிக்கடி செய்துகொண்டு அளவிடமுடியாத புண்யத்தை அடைந்து பரமசௌக்யத்தோடிருப்பதற்கு இது சாக்ஷி பூதமாக ஏற்பட்டது என்றும் பேசி முடித்த பின் எல்லோருக்கும் சந்தன தாம்பூலம் வழங்க கூட்டம் இனிது கலைந்தது.

நேரில் பார்த்தவர்.

நாகையில் பெரியாரின் மரணம்.

நாகப்பட்டிணத்தில் சென்ற கிருத்திகா சோமவாரதினத்தன்று பிரபல வைதிக உபாத்யாயரும் அக்னி உபாசகருமான சேதுராம தீக்ஷிதர் காலம் சென்ற விஷயமானது எல்லோருக்கும் பரம துக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது. வைதீக விருத்தியை அவலம்பித்திருந்தபோதிலும் ஸம்ஸ்கிருத பாஷையில் மிகுதியான வித்வத்தியை சம்பாதித்துக்கொண்டவர்களாக ஸ்ரீமத் ராமாயணம் முதலிய புராண பிரவசனங்கள் பலதடவைகளிலும் செய்திருக்கிறார், ஸங்கீதம் சித்திரம் எழுதுவது முதலிய கலைகளிலும் விசேஷமாய் தேர்ச்சியடைந்திருந்தார். சுமார் 15 வருஷங்களுக்கு முந்தியே ஸ்ரீ ஆச்சார்யஸ பாகாரியதர்ச்சியுடன் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய சாதுர்மாஸ்ய காலத்தில் தரிசனத்திற்காகப் போயிருந்த சமயம் ஸ்ரீஸ்வாமிகள் அவர்களால் அனுக்ரஹ பூர்வமாக ஓர் சால்வையும் அளிக்கப்பெற்றார். பல வருஷங்களாக வைதிக தர்ம ரக்ஷண சபாவின். கார்யதர்சியாக இருந்து அந்த சபையையும் நடத்திவந்திருக்கிறார். பிரதி வருஷமும் ஹிந்து மதாபிமான ஸங்கத்தின் வருஷோத்ஸவ காலங்களில் அரிய உபன்யாசங்கள் செய்து வந்ததுடன் இதர காலங்களிலும் ஸ்ரீசங்கர ஜயந்தி மகோற்சவ காலங்களிலும் ஸநாதன தர்ம சம்பந்தமான விஷயங்களில் பரமசிரத்தையுடன் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். சென்ற புரட்டாசி மாதத்தில் நடந்த வருஷோத்சவத்தில் கூட தேக அசௌக்யத்துடன் உத்சாகத்தினால் ஒரு அரிய உபன்யாசம் திருநெல்வேலி ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணஸாமி அய்யர் அவர்களு[illegible]ராசனத்தில் நடத்தினர்.

அதிபால்யத்திலேயே கர்மானுஷ்டா[illegible]களில் மிகுதியான ஆஸ்தையை அவலம்பி[illegible]தவராக ஸோமயாகம் செய்தும் பிரதி வருஷ[illegible]ளிலும் பசுபந்தம் முதலிய யாகங்களை சிரத்தையாக நடத்தி வந்திருக்கிறார். எந்த சந்தர்பத்திலும் அவருக்குப் பேசுவதற்கு அவகாசம் கிடைத்தால் அக்னி உபாசனத்தையே வற்புறுத்திப் பேசுவார். ஆலயங்களில் பிரம்மோத்சவ காலங்களில் உத்சாகத்துடன் முன் நின்றி வேத பாராயணம் நடத்தி வந்திருக்கிறார்கள். இன்னும் 40 வயது கூட பூர்த்தியாகமலிருக்க அநேக வழிகளில் வியாபகம் அடைந்திருந்த தீக்ஷிதாவர்களுடைய மரணத்தைகேறல் நகர வாசிகள் எல்லோரும் ஒரு பெரிய நஷ்டத்தை அடைந்ததாகவும் கருவியக்தியை அடைய முடியாதென்றும் கருதிவருகிறார்கள்.

N. சாம்பசிவ ஐயர்.

தர்ம சாஸ்திர ஸந்தேகம்.

ஓர் பிராமண குடும்ப ஸ்திரீ குடும்பத்தை விட்டு பிரஷ்டையாய் சுமார் 39 வருஷங்களாகின்றது. அவளுக்குச் சந்ததியில்லை. அவளுடைய பர்த்தா இறந்து 4 வருஷங்களாகின்றது. அந்த பிரஷ்டையான ஸ்திரீயும் 7 மாதங்களுக்கு முன் இறந்துவிட்டாள். அவளுடைய பர்த்தாவின் கனிஷ்ட ப்ராதா ஒருவரும், ப்ராதாவுக்குப் புத்ரன் ஒருவரும் இப்பொழுது ஜீவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இறந்த பிரஷ்டையான ஸ்திரீக்கு யார் கர்மம் செய்ய வேண்டியது? எம்முறையில் எப்பொழுது ஆரம்பம் செய்ய வேண்டியது என்பதை ஸ்ம்ருதி சாஸ்த்ர ஆதாரத்துடன் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

A. சுப்ரமணிய குருக்கள்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

Registered No. M. 2913.

THE ARYA DHARMAM.

ENGLISH SUPPLEMENT.

Vol. 22] KUMBAKONAM, THURSDAY 15th APRIL 1937. [No 15.

OURSELVES.

In announcing with pleasure to our readers that our Journal has come of age,' being in its twenty-second year of publication, we wish to inform, them that from this issue onwards, an English supplement will be one of its *regular* features. There have been, in the past, articles and letters in English occasionally published but the need for a regular supplement in English has been brought repeatedly to our notice by readers and sympathisers all over the country It is hoped that with valuable contributions from its readers, the supplement will enable the Journal to make a wider appeal and have a larger volume of support

The Puri Conference.

Extracts from The Presidential address

(continued)

The Congress President has pointed the finger of scorn at the Sanatanists and closed the door upon us stating "It is difficult to draw a line between social matters and those which have some religions sanction behind them. It seems to me improper to put a ban on such social changes." To the telegram sent by the Madras Sanathana Conference, that the Sanathanists are in entire sympathy with political aspirations and will co-operate with Congress provided Congress gives a pledge not to introduce any Bills opposed to Hindu religion, social or socio-religious practices in the Legislature, and oppose them if brought by others, Pandit Nehruji replied "Congress can give no pledges except these embodied in its resolution and election manifesto."

With how much of glory would the Congress President have covered himself and the Congress had he realised his position as the responsible head of a party claiming to represent the whole of India? His illustrious go-ahead lieutenants declare religion "a petty issue," insist upon the further tighening of the Sarada Act, and paint Sanatanists as reactionaries and enemies of freedom who deserve to be broomed away."

Our Swarajya is an ideal as well as a practical Swarajva and not the Utopian unworkable Sovietism which Mr. Nehru threatens to fling at us.

We declare to all the world that this is our policy: We want to be a full nation, we want freedom to determine for ourselves what is best for us, untrammelled by outside agencies. We want to be politically free, as free as the dominions for the present. We want to be economically free, with nobody to control the distribution of our material resources except ourselves. We want to put an end to this top-heavy administration which leaves nothing for the poor and needy children of the soil. We want to drive out poverty and unemployment and find food, clothing and shelter for the masses. Our aim is peace and happiness here as well as hereafter. Sweet Swarajyam in holy wedlock is sweeter Swadharma. Are we ripe now for anything more? Are we fit for Purna Swaraj? In the absence of the necessary military equipment, when shall we be in the map of the world? Will the plough and the pestle (and these exhaust our armoury) afford us any protection against our own internal dissensions and foreign invaders?

Under the urge of the godless western education, an unenviable class of persons arose, "Indians in blood and colour only, but English in tastes, opinions, morals and intellect." The Neo-Hindu, West-infatuated and West-deluded, began throttling every Dharma which he was unable to understand. He tabooed whatever had not the hall-mark of the West imprinted on it. He refused to see anything except through English glasses Dharma had to conceal itself in Mutts, temples, river banks and among our women. The women full bravely and stoutly resisted this vandalism.

A fussy micoroscopic minority have however succembed. Fired by the labels "Devis, heroines, patriots" they have been befooled into forsaking their parents, husbands, and even infants in arms. At the top of all these men and women, boys and girls with character yet to be formed have begun to huddle themselves in talkies and movies, witnessing skyclad and airclad boys and girls flirting. Malicious-bye plays caricaturing the following of Varnashrama Dharma and holding up it to ridicule are witnessed without shame or revulsion by Hindu audiences The infection is spreading. Passive indifference to Dharma, gradually developed in sneering sarcasm and even degenerated into unreasoned animosity and revengeful hatred.

The term Dharma is untranslatable. Sanatana Dharma is so called, because it has no limitation of time, place or people. Being a Sanskrit term, it is associated with the Hindu and erroneously assumed to be the exclusive property of the Hindu. It is a mistake. It is common to all nations, to all ages and to all climes

समानं त्रिषुलोकेषु सर्वावस्थासु शाश्वतम् ।
सनातमतं सत्यं चीयते नापचीयते ॥

It consists of seven universal principles condensed in seven simple words—Ahimsa, Satyam, Asteyam Shoucham, Indriya, Nigraham Thyaga and Seva, non—injury by thought, word, or deed.

SWADHARMA AND VARNASHARMA DHARMA,

Swadharma means one's own Dharma. Varnashrama Dharma means the Dharma appertaining to Varnas and Ashramas. Varna is untranslatable. Ashrama means a particular order in life of a particular Varna. Varna is often translated as caste. It is a mistake, and has arisen from the confusion of *Jathi* with Varna. The two are not synonymous. There are but four Varnas. There never was and never will be a fifth Varna. नास्ति तु पंचमः । Manu has said "there is no fifth caste." On the contrary he has distinctly stated there can be as many jathis as there can be permumtations and combinations of mixed unions among the Varnas and the offspring of mixed unions. They are bound to be countless in numbers.

The Yajurveda Samhita in the Narmadha Prakarana mentions at least a dozen castes based on birth and not merely on occupation. The Dharma of the four pure Varnas is not the same as the Dharma of the numerous mixed castes. Manu himself deals with them in sufficient detail and later SmrithiKaras amplify them. Similarly there are but four Ashramas and their respective Dharmas have also been meticulously defined.

RELATIONSHIP BETWEEN SWADHARMA, VARNASHRAMA DHARMA AND SANATANA DHARMA:

Is Swadharma the same as Varnashrama Dharma? Varnashrama Dharma as already stated is the Dharma of the four Varnas and the four Ashramas viz., Brahmacharin, Grahasta, Vanaprasta and Sanyasin. It draws in its orbit, as its name implies, the groups answering the terms Varna and Ashrama. It relates exclusively to them. It cannot take in but on the other hand virtually excludes all the other groups outside. It does not govern the groups who consider themselves as having never belonged to the Varnashrama groups such as Christians, Moslems etc.

Time was, when the whole world was inside the Varnashrama group and all were Varnashramites. Immigration into distant lands and the inevitable fading of memories coupled with ignorance, and illusion brought about a total severance from the parent stock. There arose a necessity to distinguish the Dharma of the Varnashrama group from the Dharma of the other groups outside. In consequence, the term Varnashrama Dharma came to be used to indicate the Dharma of the groups inside it, while the term Swadharma was used to indicate the Dharma of not only that group but of every other group outside. Under the term Swadharma will be included the distinct Dharma of each of the innumerable mixed castes as well as of Moslems, Christians and every other caste and creed in the world, while Varnashrama will be confined only to the four Varnas and Ashramas. It is called Dharma in all cases and the central idea is to bring home the truth that the goal is the same for all the groups and each group can reach it by following its own group-Dharma. What a grand, noble and tolerant religion and philosophy!

The principles of Sanatana Dharma enunciated above are common to all the groups aforesaid while Swadharma or Varnashrama Dharma is the special Dharma of each binding on that group only. Swadharma and Varnashrama Dharma are Sanatana Dharma put into action and practice and made applicable to particular groups and orders. A Panchama who faithfully observes his Swadharma is far superior to a Brahmana who is false to his. One special feature may be noted in this connection. The moment that one by one's superior merit transcends Varna and Ashrama, one rises above Traigunyam and stands wholly emancipated from its bondage. The fetters fall away from him of their own accord like the dew off the peacock's feather.

THE PURPOSE OF VARNASHRAMA DHARMA AND SWADHARMA AND THEIR POTENTIALITY.

It may be that Varnashrama Dharma insists upon numerous restraints and shackles and clogs liberty of action such as prohibition of sea-voyage, interdinig and intermarriage and antagonises themodern generation. It may be that it prescribes rituals and formalities which are irksome, uneconomical and enslaving. Is there any disciplinary code which is free from such charge? After all, these rules are primarily intended to school the people into discipline, patience capacity to endure and self-sacriflice from the cradle to the grave. You want that we should become a nation of stalwart warrior. Can there be a more effective training ground than the field of Varnashrama Dharma? Is there any other institution anywhere which combines in itself all the good points in Imperialism, Pacifism, Fascism and Socialism etc, and presents such fine and easy facilities for creating and fostering a spirit of unity, service, self-sacrifice and team work? Remember that these rules have been promulgated by the same sages and saints who have preached and practised the essential one-ness and divinity of the soul in every cretead being.

(To be continued.)

The Godless Movement in the U. S. A.

(*From the Bombay Press Service.*)

An American correspondent of the 'World Service' gives interesting particulars about the Godless movement in the U.S.A. 'In recent times", he says, "Great strides towars Atheism have been taken in the United States. The attack of the Godless movement is directed in a subterranean campaign against the Christian churches. The number of subscribers to the "Militant Atheist" the organ of the Godless Movement, had increased from 1,000 at the beginning of 1933 to over 4 000 at the end of the same year, and since then has continued to increase rapidly. The editor is Julius Haldeman of Kansas, and the paper contains principally articles on Russia. One of the chief Godless associations is the "American Association for the Advancement of Atheism" which aims at removing all laws upon which Christain morals are based. It is also opposed to any form of religious instruction in the schools and demands the removal of all religious expressions from Government speeches and public decrees, such as those on Thanks-giving Day".

"The Youth Group of the Godless Movement, the "Junior Atheist League" accepts children between the ages of 7 and 17, and has prepared a programme for the propagation of atheism.

"Other associations are the "Society of the Godless", which opposes the sale of the Bible, and the "Anti-Bible Society" with the same object There are also the 'World Union of Atheists" the "Sons of Satan" "Damned Souls" etc.

"All these association are guided by the slogan of Carl Mark: "Religion is opium for the people. The suppression of religion is necessary for the recovery of the prosperity of the people".

"The Godless Movement is imported from Russia and its propaganda is growing, as it is supported by huge organisations, and has great financial resources".

Statues of religious leaders as targets in rifle practice

(*From the Bombay Press Service.*)

The home industries in Tachikistan, Russia, are at present engaged in the whole-sale manufacture of life-size statues of Christ, St. Nicholas, the Russian patron Saint, the Holy Father, Moses, Mohamed, Martin Luther and other religious leaders and prophets. The statues are to be used by the Communist youth groups as targets in rifle practice, having been recommended as such by the Godless Organisation "for propaganda purposes."

தமிழ்நாடு வைதிகதர்மசங்கம்.

தஞ்சைஜில்லா கும்பகோணம்.

ஷெ சங்கத்தின் உப காரியதரிசி ரிடையர்டு இஞ்சினீர் எஸ். ஸ்வாமிநாத சாஸ்திரிகள் அகில பாரதீய வர்ணாச்ரம மகாநாட்டிற்கு சங்கத்தின் [Delegate]க்காக சென்ற வாரம் சென்றிருந்தார். புருஷோத்தமக்ஷேத்திரம் என்றும் ஜகன்னாதபுரி என்றும் வழங்குகிற உத்தமக்ஷேத்திரத்தில் சென்ற மார்ச்ச 27, 28, 29 மூன்று தினங்களில் நடந்த விஷ்ணுயக்ஞம், வித்வத்ஸபை, வேதபூஜை, Conference Proceedings, Subject Commitee தீர்மானங்கள் முதலியவைகளில் வைதிக தர்ம ஸங்க சார்பாக பிரும்மஸ்ரீ சாஸ்திரியார் கலந்துகொண்டு Conference பொதுக்கூட்டத்தில் கொச்சி மகாராஜாவுக்கும் திருவனந்தபுரம் பெரிய ராணிக்கும், ஆலய விஷயங்களை ஸநாதன தர்ம முறையினும் ஆகம ரீதிப்படிக்கும் நடத்திவருவதற்காக அகில இந்திய ஆஸ்திக மகாஜனங்கள் நன்றி பாராட்டுவதைத் தெரியப்படுத்துவதற்காக ஒரு தீர்மானத்தை ப்ரேரேபித்து நிறைவேற்றி வைத்தார்.

தமிழ்நாடு வைதிக தர்மசங்கத்தின் தற்கால வேலைகளின் நோக்கங்களைப்பற்றியும் ஆண்டு பத்திரிகை 200-சொந்த செலவில் அச்சிட்டு ஸம்மேளனத்திற்கு வந்திருந்த பிரதிநிதிகளெல்லாருக்கும் கொடுத்து தர்ம சேவைகளில் எல்லோருக்கும் அபிருசி உண்டாகும்படியும் செய்தார்.

இப்படி தர்மச்ரத்தை உள்ளவர்களொவ்வொருவரும் தங்கள் தங்கள் சக்தியானுசாரமிடைவிடாமல் அப்போதைக்கப்போது செய்து வந்தால் வைதிக தர்மம் வெகு சீக்கிரம் ஓங்கி வளரும் என்பதில் ஐயமில்லை.

ஒரு நிருபர்.

ஆலங்குடி.

ஸத்ஸங்க ஸபா,

தாது௵ பங்குனி-மீ 9-ம் உ திங்கட்கிழமை முதல் ஆலங்குடி ஸத்ஸங்க ஸபாவில் ப்ரும்மஸ்ரீ ஸ்வாமிநாதசிவாசாரியார் அவர்களால் பவிஷ்யோத்திர புராணம் க்ஷேத்ரவைபவ கண்டத்திலுள்ள காசியாரண்ய மஹாத்மியமும் ஸ்காந்த புராணத்திலுள்ள காசியாரண்ய மஹாத்மியமும் ஆன இவ்வூர் ஸ்தல புராணமானது ஆரம்பிக்கப்பட்டு தினசரி நடந்து கொண்டு வருகிறது. ஆஸ்திகர்கள் அனைவரும் தவறாமல் வந்து ச்ரவணம் செய்கிறார்கள்.

ஒரு நிருபர்.

புதுமாதிரி கால் செயின், கொலுசு திருகுகள்
குறைந்த கூலிக்கு தயார் செய்யுமிடம்
சந்திரா ஸில்வர் ஒர்க்ஸ்.
Proprietor G. தியாகராஜ முதலியார்,
ஸ்ரீகும்பேஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோணம்.

தீர்த்து விச்வரூபரிடம் விருந்தினராய் சென்று அவரை வாதில் வென்று அனுக்ரஹித்து உபயபாரதியாருடன் வாதிட்டு அவர் சிற்றின்ப விஷயமாய் கேட்ட வினாக்களுக்கு ஒரு மாதத் தவணையில் விடை கூறுவதாய்ச் சொல்லி நீங்கித் தமது மாணாக்கருடன் காட்டிற்குச் சென்று தமது உடலை மாணாக்கர் வசம் ஒப்பித்துவிட்டு வேட்டையாடக் கானகம் வந்த அரசன் தேகத்தில் புகுந்து அரசாண்டு காம கலை பயின்று அநுபவித்து இருந்தனர். அவர் அரசாக இருக்கையில் நாடு மிக வளங்கொண்டிருத்தலைக்குறிப்பாலறிந்துகொண்டு மந்திரிகள் இவர் ஓர் மகா புருஷர் என்று எண்ணித் தனது வேலையாட்களுக்கு எங்கேனும் உயிரிழந்த உடல்காணப்பட்டால் அதனை உடனே தஹிக்கும்படி உத்திரவிட்டனர். இது நிகற, முன் ஆசிரியர் சொல்படி தேஹத்தைக் காத்திருந்த மாணாக்கர் ஆசிரியர் கூறிய தவணையில் வாராதது கண்டு ஆசிரியர் உடலை ஓர் மலையில் போட்டுவிட்டுத் தாம் இசைப் புலவர் வேடம்பூண்டு ஆசிரியரிடம் சென்று தத்வமஸ்யாதி வாக்கியங்களைப் பாடினார்கள். இதனை அறிந்த ஸ்ரீ சங்கரர் அரசன் தேஹத்தைவிட்டுத் தனது தேஹத்தில் செல்ல முயன்றனர். முன் மந்திரியின் கட்டளைப் பெற்ற வேலையாளர்கள் இறந்த உடலைத் தேடுகையில் மலைமீது ஸ்ரீ சங்கரர் உடலைக் கண்டு எடுத்துத் தீமூட்டிச் சென்றனர்.

ஸ்ரீ சங்கரர் எரிந்துகொண்டிருந்த உடலில் புகுந்து ஜ்வாலா நரஸிம்ஹ ஸ்தோத்ரம் செய்ய அத் தீ தணிந்து, பின் காவலம்பம் என ஸ்தோத்ரம் செய்ய ஸ்ரீ பகவான் ஸ்ரீ தேவியுடன் கால் நீத்து கை கொடுத்துத் தூக்கிவிட்டனர். பின்பு நமதாசிரியர் ஆகாச வழியாய்த் தமது சிஷ்யர்களுடன் ஸ்ரீமண்டனமிச்ரர் வீட்டிற்குச் சென்றனர். ஸரஸ்வதியின் அவதாரமான மண்டன மிச்ரரின் துருஹமான சாஸ்திர வாதங்களைக் கேட்டு சுத்தாத்வைத வேதாந்த ஞானமார்க்கமேசிறந்ததென வாதம் செய்து ஜயித்து அவரை சிஷ்யராகச் செய்துகொண்டு யாத்திரையாக வரும் வழியில் தன் தலையைப் பார்த்து ஓர் காபாலிமதத்தினருக்கு அத்தலையைக் கொடுக்கத் துணிந்து சந்தனாசாரியரால் காக்கப்பட்டு ப[illegible]நாபரால் அவன் கொல்லப்பட்டான். [illegible]கால்லூரில் (கோகர்ணம்) இறந்த வேதியரி[illegible] மகனை எழுப்ப ஸ்ரீ மூகாம்பாள் ஸ்தோத்[illegible]த்தை இயற்றி ஸ்ரீவில்லிப்புத்தூரில் பிக்ஷை எடுத்துக்கொண்டிருக்கையில் அங்கிருந்த பி[illegible]ராகரபட்டர் தமக்கு ஒரே குழந்தை வாய்[illegible] கேள்வியுமில்லாமையைக் கண்டு இவர் மு[illegible] விட்டனர். நமது ஆசிரியர் அக்குழந்தை[illegible]ய நீ யாரென வினவ உடனே அது செ[illegible]யுட்களால் பிறப்பின் வரலாறைச் சொல்லி[illegible]து. பிறகு அவனை அவ்விடம்விட்டுவிட்டு துங்காதீரத்தில் சிங்ககிரியில் ஓர் மடம் ஸ்தாபித்து அங்கு தன்னை வந்து அடைந்த ஆனந்தகிரி என்னும் மாணாக்கருக்கு அருள் புரிந்தார். பிறகு திக்விஜயம் செய்துகொண்டே திருப்பதி, சிதம்பரம், ஸ்ரீரங்கம், ஜம்புகேஸ்வரம் முதலிய க்ஷேத்திரங்களை தரிசனம் செய்து[illegible]கொண்டு ஆங்காங்குள்ள துர்மதங்களைக் க[illegible]ண்டித்து அத்வைத மதத்தை ஸ்தாபித்து [illegible]ப்ரசாரம் செய்துகொண்டு சிஷ்யர்களுடன் பூப்ரதக்ஷிணம் செய்துகொண்டு வைதிகமான ஷண்மதங்களை ஸ்தாபித்து பாக்கியுள்ள அவைதிக மதங்களைக் கண்டித்து அநாதியான வேதத்தை ரக்ஷித்தனர். யோகசக்தியால் தாயின் அந்தியகாலத்தை அறிந்து மாத்ரு கடன்களை முடித்தனர். பிறகு கைலாசம் சென்று ஐந்து தேவலிங்கங்களைக் கொண்டுவந்து யோகலிங்கத்தைத் தமது பூஜைக்காகவும் பாக்கியை சிதம்பரம், பதரிகாச்ரமம், நீலகண்டக்ஷேத்திரத்திலும் சிருங்ககிரியிலும் ஸ்தாபித்து சாரதாபீடத்தையும் சிருங்ககிரியில் ஸ்தாபித்து நான்கு சிஷ்யர்களையும் நியமனம் செய்து அபிஷேகம் செய்துவைத்து ஆசாரியாராகச் செய்துவிட்டு தாம் தேவர்கள் புகழச் சமாதியில் இருந்து திருக்கைலையை அடைந்தார்.

குறிப்பு:— ஸ்ரீ ஆசாரியாளின் திக்விஜயம் கேட்டதற்கு பிரயோஜனமாக ஆசாரியாள் சரணாரவிந்தங்களைத் தியானம் செய்ய வேண்டும். பக்தர்கள் யாவரும் கோகுலாஷ்டமி, நவராத்திரி, முதலிய உத்ஸவங்கள் பண்ணுவது போல ஒவ்வொரு வைசாகசுத்த பஞ்சமியில் (14-5-37) குருவாரம் ஸ்ரீ ஆசாரியாள் ஜயந்திக் கொண்டாட்டத்தை ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாட வேண்டும். ஸ்ரீ ஆசார்யபாதுகை பூஜை செய்யவேண்டும், அப்படிச் செய்துவந்தால் ஸ்ரீ ஆசார்யாளுடைய அனுக்ரஹம் கிடைத்து நமக்கு எல்லாவித நன்மைகளும் உண்டாகும். சுபம்!

2.

தீண்டாதார் ஆலயப் பிரவேசக் கண்டனம்.

ஸ்ரீரங்கத்தில் பெருங்கூட்டம்.

திருவனந்தபுரம் மஹாராஜா அவர்களின் தீண்டாதார் ஆலயப்பிரவேச விளம்பரத்தைக் கண்டிக்கவும் ஆஸ்திகர்களின் மனத்தாங்கலை அறிவிக்கவும் ஸ்ரீரெங்கம், திருச்சினாப்பள்ளி முதலிய இடங்களிலுள்ள ஆஸ்திகர்களின் கூட்டமொன்று 30—1—37 சனிவாரம் மாலை ஸ்ரீமான்கள் தேசபூஷண, தர்மகார்யப் ரவீண, ஸாஹித்ய போஷகராவ் ஆர். கே. பிரஸன்ன வேங்கடேச ராவ், ஸ்ரீரங்கம் தேவஸ்தான டிரஸ்டி எம். எஸ். ரகுநாத தாதாசாரியார், டிடையர்டு ஆடிடர் டி. வி. ரங்கநாத ராவ் ஆகியவர்களின் முயற்சியால் ஸ்ரீவியாஸ ராஜ மடத்தில் கூட்டப்பட்டது. ஆரம்பத்தில் ஸ்ரீமான் பிரஸன்ன வெங்கடேச ராயர் அவர்கள் பேசுகையில் அனந்த விரதத்தை கைக்கொண்ட பாத்வர்களுக்கு பிரஸ்தாப விளம்பரத்தைக் கண்டிக்க விசேஷப்பொறுப்பு இருப்பதாயும், வைஷ்ணவர்கள் நிறைந்ததும் ஸ்வயம் வியக்த க்ஷேத்திரங்களில் முதலாவதான ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் இது காறும் கூட்டங்கூட்டப்படாததும், மடாதிபதிகளும் காட்டுக்கோட்டை செட்டிமார்களும் முன்வராததும், பிரதமபாத கலியின் கோலமென்பதாயும் விஸ்தரித்து ஸ்ரீமான் பண்டித மெய்ய அய்யங்கார் ஸ்வாமிகளை தலைமைவகிக்கும்படி வேண்டிக்கொண்டார்.

ஸ்ரீமான் அய்யங்கார் அவர்கள் தலைமை வகித்து திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரத்தைக் கண்டித்தப்பிறகு கும்பகோணம் அக்னிஹோத்ரம் ஸ்ரீமான் ராமாநுஜதாதாசாரியாரைப் பேசும்படி வேண்டினார். அன்னவர் ஸ்ரீமான் மஹாலிங்கையர் பி.ஏ.பி.எல் அவர்கள் சில எதிர்பாராத அசௌகரியங்களால் உபன்யாசத்தில் கலந்து கொள்ள முடிய வில்லையென்றும், ஸநாதனிகள் தற்கால ராஜ்ய நெருக்கடியில் உதாஸீனமாயிருக்கக் கூடாதென்றும், ஏப்ரல் மாதமிருந்து அமுலுக்குவரும் அரசியல் சீர்திருத்தத்தில் திருமண், விபூதி, முதலிய நெற்றியடையாளங்களை அணியக்கூடாது, பூணூலை அறுத்தெறிய வேண்டும் என்றதுபோன்ற மத சீர்திருத்தமும் எளிதில் சட்டங்களாகி அமுலுக்கு வந்துவிட பாத்யதை ஏற்பட்டுவிடுகிறதென்றும் வாக்காளர்கள் சட்டஸபை அபேக்ஷகர்களிடம் ஆலயப்பிரவேச விஷயமாக வற்புறுத்தி உறுதிமொழியை வாங்கவேண்டியதென்றும் இந்த ஆலயப்பிரவேச அறிக்கை சாஸ்திரங்கள், ஆகமங்கள், பரம்பரையான கொள்கைகள் இவற்றிற்கு முரண்பட்டதென்றும் பல பிரமாணங்களுடன் கண்டித்து அடியிற்கண்ட தீர்மானங்களைத் தமிழில் பிரேரேபித்தார்.

பிரம்மஸ்ரீ போலகம் ராமசாஸ்திரிகள் அத்தீர்மானங்களை ஆமோதித்து ஆலயம் தான் நம்மவர்களுக்கு பலத்த கிரோதியென்றும் அனுதமொழித்து அனைவரும் முன்னணியில் நின்றுஉழைக்கவேண்டுமென்றுகூறினார்.

கும்பகோணம் ஸனாதனமகாஸபா ஆசிரியர் ஸ்ரீமான் M. ராமராவ் அவையினை ஆகரித்து ஸமூக வாழ்க்கையிலேயே சண்டாளர்களை ஸ்பரிசிப்பது முதலியவை தோஷமென்றும், கடும் பாபத்தின் பயனாய்ப் பிறந்த சண்டாளர்கள் தங்களுக்கு ஏற்பட்ட வீரன் காட்டேரி முதலிய தெய்வங்களைப்பூஜித்தாலேயே பகவான் அனுக்ரகம் பண்ணுவதாகக் கீதையில் வாக்ஞளித்திருப்பதாயும் பதவிகள் உயர உயர உபாஸனைகளும் ஜாஸ்தியானதால் கடுமையுள்ள பசுவியில் சண்டாளர்கள் சுலபமான உபாயங்களைப்பற்றி பச்சாத்தாபமடைந்தாலே சுத்தியடைவார்கள் என்றும் சமீபத்தில் கும்பகோணத்தில் நடந்த மாதாகோவில் தகராரில் ஜாதிபேதமில்லை என்பவர்களே வற்புறுத்தியிருக்கும் ஜாதிபேதம் கவனிக்கத்தகுந்ததென்றும் முன்பு ஸ்ரீமான் மாளவியா கூறின வசனங்கள்யாவும் அர்த்தவாதங்களென்றும் பேசினர்.

பிறகு கும்பகோணம்மாத்வமித்திரன்பத்திராதிபர்ஸ்ரீமான் பாகவத ரங்கநாதாசாரியார் ஸநாதனியாகவிருந்துவந்த ஸ்ரீமான் புரொபஸர் K. சுந்தரராமையர் தற்சமயம் தமது கொள்கையை மாற்றி ஆலயப்பிரவேசத்தை ஆதரித்துஹிந்து பத்திரிகையில் எழுதியிருப்பதைஅழுத்தமாய்க் கண்டித்தும் புரொபஸரவர்கள் 'சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம்' என்பதின் அடுத்த பாதத்தை (குணகர்மவிபாகச:) மறந்தார்போலும் என்றும் அவருக்கு வர்ணம், ஜாதி இவ்விரண்டின் விஷயமாக குழப்பம் ஏற்பட்டிருக்கிறதென்றும், வேத துல்யமாய் எல்லோருக்கும் தெரிந்ததான ஸ்ரீமத் ராமாயணத்திலே கூறப்பட்ட ஆலயப்பிரவேச விஷயத்தில்அதமமான ஓர் ஜந்துவுக்கு இருந்த அறிவுகூட நம்மிற் பெரும்பான்மையோருக்கு இல்லாதிருப்பது வருந்தத்தக்கதென்றும் மிக உருக்கமாகப் பேசினர்.

மற்றும்இருவர்கள்பேசியபிறகுஅக்ராஸனர், பஞ்சராத்ர ஆகமம் முதலியவைகளிலிருந்தே சண்டாளர்கள் ஆலயப்ரவேசம் செய்வதால் விதிக்கப்பட்ட பிராயச்சித்தங்களிலிருந்தே அவர்கள் அசுத்தர்களென ஸ்பஷ்டமாக ஏற்படுகிறதென்றும், பகவத் ராமாநுஜர் திருநாராயணபுரத்தில் சண்டாளர்களை வருஷத்துக்கொருநாள் ஆலயப்பிரவேசம் செய்ய அனுமதித்ததன் தத்வத்தை விளக்கி அதுமற்றகோயில்களில் அவர்களை அனுமதிக்க ஓர் உதாரணமாகாதென்றும்கூறி ஸ்ரீமான் M. ராமராவை தீர்மானங்களை ஆங்கிலத்திலும் படித்துக்காட்ட வேண்டினர். பின்வரும் தீர்மானங்கள் சபையோரால் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

Resolutions 1 to 6 (except the 4th) published on page 5 of the Arya Dharmam dated 21st January 1937.

No. 6–That this meeting assures its cooperation and Staunch support to the All India Sanatana Dharma conference to the held on or after 6th or 7th of February 1937 by sending their Delegates etc.

தீர்மானங்கள் 1முதல்6 வரையில் (4வது தவிர) ஆர்யதர்மம் பத்திரிகை 5-ம் பக்கத்தில் காண்க. 6வது தீர்மானம்:—

இக்கூட்டமானது பிப்ரவரிமீ 6, 7,உ களிலோ அதற்குப் பிறகோ கூட்டப்படும் அகில இந்திய ஸநாதனதர்ம மகாநாட்டோடு ஒத்துழைப்பதாயும், டெலிகேட் முதலியவர்களை அனுப்பி மேலான ஆதரவை அளிப்பதாயும் உறுதிகூறுகிறது.

கடைசியில் இக்கார்யத்தைக் கூட்டிவைப்பதில் மிகுந்த ஊக்கமும் சிரமமும் எடுத்துக்கொண்டு தர்மம் சீரழியும் காலத்தில் முன்வந்த ஸ்ரீமான் தேசபூஷண ஆர். கே. பிரஸன்ன வேங்கடேசராவ் அவர்களால் தலைவருக்கும் மற்றவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை இனிது கலைந்தது. இங்கு ஸ்ரீமான் ராயர் அவர்களின் அரியஸேவை மிகப் போற்றத்தக்கதென குறிப்பிடத் தகுந்தது.

நமது நிருபர்.

சிருங்கேரியில் கண்டனம்.

சென்னை மாகாண ஸநாதன தர்ம சபையின் பிரதிநிதியாக ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா அவர்கள் வெள்ளி இரவு புறப்பட்டு சிருங்கேரி சென்றார். பெங்களூரில் காலையிலிறங்கி ஸ்ரீ சிருங்கேரி சின்னஸ்வாமிகளை தரிசித்து அங்குள்ள ஸ்ரீ சங்கரவித்யாலயம், ஸ்ரீ மஹாராஜா ஸம்ஸ்க்ருத காலேஜ் வேத மஹா பாடசாலை முதலியவைகளைப் பார்த்துவிட்டு அன்று மாலையில் பாடசாலை வேதசாஸ்திரபர்டசாலை பண்டிதர் ப்ரும்மஸ்ரீ ராமச்சந்திரதீக்ஷிதர் தலைமையில் ஸ்ரீ சர்மா திருவாங்கூர் ஆலயப்ரவேசத்தைக் கண்டித்து ஓர் தீர்மானம் செய்ய ஓர் நீண்ட உபன்யாஸம் செய்தார். மறுநாள் ஸ்ரீ ஜகத்குரு தர்சனம் செய்துகொண்டு செவ்வாய் இரவு சென்னை வருவார்.

ஒரு நிருபர்.

சோடவரத்தில் திருவாங்கூர் ஆலயப்ரவேச அறிக்கைக் கண்டனம்.

நிகழும் ஜனவரிமீ 30உசனிக்கிழமைசாயங்காலம் சுமார்5½ மணிக்குவிசாகப்பட்டணம் ஜில்லாவைச் சேர்ந்த இந்த சோடவரம் நகரத்தின் பொதுஜன வாசகசாலையில், ஓர் பெரிய பொதுக்கூட்டம் நடந்தது. திருவாங்கூர் அரசர் அச்சமஸ்தானத்தின் கோவில்களில் தீண்டாதார் வரலாம் என்று பிரேரித்த அறிக்கையை கண்டிக்க அக்கூட்டம்கூட்டப்பட்டது. மகாஈ-ஸ்ரீ மண்டா சுப்பாராவ் பி.ஏ.பி.எல், அவ்வூரிலுள்ள பிரபலவக்கீல், அக்ராசனம் வகித்து அக்கூட்டத்திற்கு திருவாங்கூர் அறிக்கையையும், அது எப்படி அனந்தபத்மநாபர்கோவில் வைக்கம் கோவில் முதலிய அகில இந்தியா யாத்திரை ஸ்தானங்களை, அசுத்தமாக ஆக்கிவிட்டது என்பதையும் விவரித்துக் கூறினார். பின்பு பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

1. இக்கூட்டம் திருவனந்தபுரம் ராஜாவினால் சமீபத்தில் விடுக்கப்பட்ட அறிக்கை சாஸ்திர விருத்தமென்றும், அது இந்தியாவிலுள்ள ஸகல ஹிந்துக்களையும் பாதிப்பதாகவும் தீர்மானிக்கிறது, ஆகையால் இக்கூட்டம் திருவனந்தபும் மகாராஜாவை மேற்கூறிய அறிக்கையை ரத்துசெய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

2. இக்கூட்டம் மேன்மை தங்கிய இந்தியா வைஸ்ராய் பிரபுவை திருவந்தபுரம் ஆலயபிரவேச அறிக்கையையும், சாரதா சட்டம் எனப்படும் இந்தியா கவர்ன்மெண்டு Child Marriage Restraint சட்டத்தையும் ரத்து செய்ய ஏற்பாடு செய்யும்படிக்கும் வணக்கமாய் கேட்டுக்கொள்கிறது.

3, இக்கூட்டத்தில் இன்று அக்ராஸனம் வகித்தவரை மேலே நிறைவேறிய இரண்டு தீர்மானங்களின் காபிகளை கூட்டத்திற்கு விஜயம் செய்தவர்களின் கையொப்பங்களுடன் மஹஜர் தயார் செய்து மேன்மை தங்கிய வைஸ்ராய் அவர்களுக்கும், திருவனந்தபுரம் மகாராஜாவுக்கும் அனுப்பும்படி, இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

தீர்மானங்கள் நிறைவேறிய பின்னர் ஸ்ரீமான் அ. குப்புஸாமி அய்யர் பி. ஏ. ஸநாதன தர்மத்தை ரக்ஷிக்க வேண்டியது இப்பேர்கொற்ற நெருக்கடியான ஸமயங்களில் அவசியமென்றும் நாம் மௌனமாக இருந்துவிட்டால் சட்ட சபைகளில் உள்ள நாஸ்திகர்கள் மேன்மேலும் உபத்ரவம் செய்யக்கூடுமென்றும் ஆங்கிலத்தில் ஓர் உபன்யாஸம் செய்தார்.

பின்பு திருவண்ணமலை மஹாச்ரமத்தைச் சேர்ந்த ஒருவர் ஹிந்துமத தர்மத்தைப்பற்றியும் அதன் மேன்மையையும் பற்றியும் வெகு தெளிவாக தெலுங்கில் பிரசாரம் செய்தார்.

அக்ராசனருக்கும் மற்றவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறின பின்னர் கூட்டம் கலைந்தது.

வீரபத்திரராவ்.

ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாள்.

(லேக்கரவேரீ K. R. வைத்தியநாத சாஸ்திரிகள்)

சற்றேறக்குறைய 2500 வருஷங்களுக்கு முன் இப்புவியில் தர்மங்கள் குறைந்து அதர்மங்கள் மேலிட்டபடியால் அதைப்போக்கி தர்மத்தை ஸ்தாபனம்செய்யுமாறு அவதரித்த ஸ்ரீ சங்கரரென்ற பெயரால் அலங்கரிக்கப்பட்டு ஓர் பெரியார் பலவிடங்களிலும் பாவியிருக்கும் துர்மதங்களைக் கண்டித்து நல்ல மதங்களையும் நல்ல ஒழுக்கங்களையும் எங்கும் ஸ்தாபித்து அவைகள் நெடுநாள் உலகில் நிலைபெற்றிருக்க வேண்டுமென்று ஆங்காங்கு சிஷ்யர்களையும் மடங்களில் ஸ்தாபனம் செய்து மறைந்தாரென்பதை அறியாதார்கள் யாருமில்லை. இங்ஙனம் நம்போன்ற எல்லா ஜனங்களுக்கும் சகல துக்கங்களுக்குமிருப்பிடமாயிருக்கும் இந்த சம்சாரமென்றபெருங் கடலைத் தாண்டி என்றும் அழிவில்லாத மோக்ஷமென்ற பரமபதத்தையடைய வேண்டி அவர்கள் செய்திருக்கும் ஒப்பற்ற உபகாரத்தாலேயே லோக குருவாக விளங்குகிறார்கள். அப்பேர்ப்பட்ட லோக குருக்களுடைய ஸ்வரூபத்தை நன்கு அறிந்து பக்தி செய்யாவிடில் நாம் பாதகர்களாக ஆவோம். ஆகவே அப்பெரியாருடைய உத்பத்தியையும் ஸ்வரூபத்தையும் நன்கறிந்து தியானிக்க வேண்டி அவைகளைப்பற்றி அவர்களுடைய பல சரித்திரத்திலிருந்து சில முக்ய அம்சங்களை மட்டும் இங்கு கூறுவோம்:—

கோளநாட்டில் ஸ்ரீ சிவகுரு என்றவருக்கு ஆர்யாம்பாளிடம் (கலி 3058-க்குச்சரியான) விக்ரமசகம் 14-வது ஈச்வரஹூ வைகாசி சுத்த பஞ்சமியில் அவதரித்தவர். இவரது குழந்தைப் பருவத்தில் ஒரு நாகம் ஒன்று இவரைச் சுற்றி விளையாடுவதைப் பலரும் காண, அது உடனே விபூதி ருத்ராக்ஷமாயிற்று. இவரிடமிருந்த சில சின்னங்களைக் கண்ட தந்தை முதலியோர் இவருக்குச்சங்கரர் என நாமகரணம் செய்தனர். இவர் பாலனாயிருக்குங்கால் பூஷணிக்காயிலிருந்து வெளிவந்தும், சில சிவ நிர்மால்யங்கள் தம்மீது இருக்கக் காட்டியும் சுழல் காற்றில் ஆகாயத்தில் மறைந்தும் பாடலேசுவரின் திருத்தேர்விழாவில் அவ்விடம் விக்ரஹம் மறைபடாமே அந்த குழந்தையாய் அங்கிருந்தும் இது முதலிய பலவித அற்புதங்களைப் புரிந்து வந்தனர். இவரது தந்தை இறக்க அவரை சிதைமேலிட அது நன்மணம் வீசக் கண்டு தந்தையின் சடங்குகளை முடித்தனர். ஒரு நாள் அயாசித தீக்ஷிதர் வீட்டில் பிக்ஷை கேட்கையில் அந்த வீட்டுப்பெண்மணி நெல்லிக்கனி தந்து வருந்தி நிற்க, இவர் ஸ்ரீதேவி மந்திரத்தால் அதைப் பொன் கனியாக்கியருள் புரிந்தனர். தாயின் பொருட்டு ஓர் நதியை வருவித்தனர். சத்யவ்ரதன் என்ற அரசனுக்குப் புத்திரப்பேறு அருளித்து தாயின் கட்டளைப்படி சந்யாஸம் பெற்றுத் தன் காலை கவ்விய முதலையுருவங்கொண்ட கந்தர்வனுக்கு நாரதரால் நேர்ந்த சாபத்தைப் போக்கி ஸ்ரீ கோவிந்த யோகியரிடம் தீக்ஷை பெற்று வேதியர் பொருட்டு வெள்ளத்தை கமண்டலுத்துள் அடக்கி ஆசிரியர் கடும் வெயிலில் வரக்கண்டு கையிலிருந்த தண்டத்தை ஆகாயத்தில் எறிந்துபற்றுவாரின்றி நிழல் செய்துவரச் செய்து சந்தானுசாரியருக்கு அருள் செய்து ஸ்ரீ காசி சென்று ஸ்ரீ விசுவநாதரை தரிசித்து ஸ்ரீ ஆசாரியாள் உத்திரவுபடி ஸ்ரீ வியாஸபகவானைக் காணப் பதரிகாச்ரமம் சென்று ஸ்ரீ வியாஸாசாரியாரைக் காணாமல் நாகாராயணர் ஆச்ரமம் சென்று நாரயண முனிவரைக் கண்டு பல மதங்களைக் கண்டித்து ஸ்ரீ வியாஸபகவானைக் கண்டு அவரால் அதிக ஆயுள் பெற்று வியாக்யான ஸிம்மாஸநதீச்வரன் ஷட்தர்சன ஸ்தாபநாசாரியார் பூமண்டலாசாரியார், ஸர்வதந்திரஸ்வதந்திரர் எனப் புகழப்பட்டுப் பட்டபாதர் வேக்காடு

ஸநாதனிகளுக்கு ஓர்வேண்டுகோள்.

ப. ரே. திருமலைஐயங்கார்.

ஆர்யதர்மத்தில் அடிக்கடி பல பிரமுகர்களால் வெளியிடப்பட்டு வரும் அறிக்கைகள் வேண்டுகோள் முதலியவற்றை ஸநாதனிகள் அனைவரும் கவனித்திருப்பார். சொல்லுதல் யார்க்கும் எளியவாம். அரியவாம் சொல்லிய வண்ணம் செயல். வரும் முன்னர்க் காப்பவனே உத்தமன். வருங்கால் காப்பவன் மத்யமன். தற்போது பெரிய பிரவாஹம் மட்டின்று ஓடுகின்றது. தருமத்துக்கு இவ்வளவுதான் விபத்துக்கள் வந்திருப்பதாகச் சொல்வது முடியாது. அப்படியிருந்தும் ஸநாதனிகளாகிய நாம் என்ன செய்கிறோம். தன் மனமே தனக்கு சாக்ஷி. முயற்சி திருவினையாக்கும். முயற்றின்மை இன்மை புகுத்திவிடும் என்றும்; தெய்வத்தானாகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும் என்றும், ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர் என்றும் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளினார். தரும சங்கடமான காலத்தில் எவனொருவன் சுத்த வீரனாக நிகழ்கின்றானோ அவனே உண்மைச்சநாதனியாவான். கூழுக்கும் ஆசை மீசைக்குமாசை என்றிருந்தால் ஒன்றும் நிறைவேறாது. கருமமே கண்ணாயினார் மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார், எவ்வெவர் தீமையுமேற்கொள்ளார், செவ்வி அருமையும் பாரார், அவமதிப்புங்கொள்ளார். கற்பவை கசடறக் கற்க வேண்டும். அங்ஙனம் கற்றபின் அதற்குத் தகநிற்றலே ஆன்றோர் கடன். இதுவே தருமம். பிறரை ஏமாற்றுபவன் தன்னையேயேமாற்றிக்கொள்கிறான். இதுநிற்க இவ்வேற்றிலே முக்கியமாக ஒரு விஷயத்தை எடுத்துக்கொள்வோம்.

திருவிதாங்கூர் மஹாராஜன் விடுத்த விளம்பரம் விஷயமாக சமீபத்தில் திருவனந்தபுரம் முதலிய திவ்ய தேசங்களுக்குச் சென்று வந்தசிலர் அங்குள்ள சாத்விகர் தத்தளிப்பு சகிக்க முடியாதென்றும், சுதேசமன்னர் அரசாக்ஷிக்குட்பட்ட நாடானதாலும் மஹாராஜா விளம்பரமாகையாலும் ஒன்றுஞ்செய்யத் தோன்றாது திகைப்பதாயும். அநேகர் தற்போது ஆலயங்கட்குப் போவதில்லையென்றும், பிராசீன அர்ச்சகர்களும் தர்மநெறியை முன்விட்டு இதர லௌகிகங்களைக் கவனிக்காது தத்தம் இல்லங்களுக்குச் சென்றுவிட்டனர் என்றும், பொதுவாக ஆலயங்களில் சாந்நித்யம் இல்லையென்ற கருத்தே மிகுந்திருப்பதாயும் தெரிவிக்கிறார்கள். பத்திரிகைகளிலோ, சாதகமாகக் கூறுபவரே அதிகமாக இருப்பதாகவும் எதிர்ப்பவரே இல்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. எதிர்த்துப்பேசிய ஓரிருவரும் பின்னர் அபிப்ராயத்தை மாற்றிவிட்டனர். கலிகால விபரீதத்தைப் பார்த்தீர்களா? கம்பரும் வாலி வாயில் வைத்து "ராக நின் மாட்டே கலியதுகாலம் வந்து கலந்ததோ கருணைவள்ளால்" என்று பேசுகிறார். ஜாதி சண்டாளனிலும் கருமச் சண்டாளனே மிக பதிதன் என சாத்திரங்கள் முறையிடுகின்றன. அறங்கடைப் பிடித்து ஒழுகலே ஆன்றோர் கடன். அங்குதான் இப்படி என்றால் அதற்குப் புறம்பான பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ளாரும் விளம்பரத்துக்குச் சாதகமாக இருப்பவர்கள் போன்று மௌனமாக இருப்பதன் காரணம் விளங்கவே இல்லை. மனுஷ்யனிலும் எவ்வளவோ மடங்கு பெரிது தேவத்துவம் என்பதை அறிவாளிகளும் மறந்து அயர்ந்திருப்பதைப் பற்றி என் சொல்வது? "புலவீர்காள்! மன்றுமலிசவைப் பாடிப் படைக்கும் பெரும் பொருள் என்னுவது? எத்தனை நாளைக்குப் போதும்? கொள்ளும் பயனில்லைக் குப்பைகிளர்த்தன்ன செல்வத்தை வள்ளல் புகழ்ந்து நும்வாய்மை இழக்கும் புலவீர்காள்!" என வருந்துகிறார் நம்மாழ்வார். எனவே நன்மை கடைப் பிடித்தொழுகலே நனிநலம். நன்மை தருமமே. தருமவழி நடக்க தருமம் மல்கும். தருமவரும் பயனாய திருமகளார் தனிக்கேள்வன் சகல நன்மைகளும் அளிப்பான்.

கொம்பைவிட்டு வாலைப் பிடிக்கும் கணக்கிலே இருக்கிறது நம் நிலை. கடும்போர் துடங்கி விட்டது. நம்மைத் தவிர ஏனையர் அரங்கத்து அணிவகுத்து நிற்கின்றனர். மண்டி எரிகின்ற நெருப்பு நம்மைச் சூழ்ந்து அச்சுறுத்தவும் இடம் பெயராது வெறுமனே நிற்கின்றோம் நாம்! நம்மைப் பரிஹசிப்பவர் பலர்; அவமதிப்பவர் சிலர்; இவரால் ஆவதென்னெனப் பகருபவர் சிலர். உலகம் பலவிதம். நம் நிலைமையை நோக்கி மிக ஜாக்ரதையாக தீவிர முயற்சி செய்தல் வேண்டும். வரும் எலக்ஷனில் நாமும் இருப்பதை நிலைநாட்டவேண்டும். போனால் வராது. ஸநாதனிகட்குத் தக்க தலைவிருப்பதாகக் காணோம். மடாதிபதிகளிற் பெரும்பாலோரும் மௌனமாயிருக்கின்றனர். பலர் அறிக்கை கூட வெளியிட முடியவில்லை. ஸநாதனி காண்டிடேட்டாக தனித்து நிற்கப் போதிய சாதனங்கள் இருக்குமேல் அங்ஙனமே நிற்பதே தான் முதற் கடமை. அதற்கு முடியாவிட்டால் போலிக்கட்சிகளுடன் சேர்ந்து போராடுவது எள்ளளவும் பயன் தராது. நாம் போராடுவதெல்லாம் மதப்பாதுகாப்பே இதனை வற்புறுத்தல் வேண்டும். மத விஷயத்தில் தலையிடமாட்டோம் என்று உறுதிமொழி அளிப்பவருக்கே நாம் ஓட்டுக்கொடுக்கவேண்டும். நாம் வலிமையுடனிருந்தாலன்றி நம் வார்த்தைகளைப் பிறர் கேளார். எனவே நாம் அனைவரும் அதிவிரைவில் சென்னைபோன்ற நகரில் மஹாசபைக் கூட்டி இம்முக்ய பரச்னையைப் பற்றி ஆலோசித்து உடனே தீர்மானித்து அதன்படி நடக்கவேண்டும். இனியும் காமதித்தால் பயனில்லை. ஒன்றுபட்டாலுண்டு வாழ்வோம். இன் சொல்லால் அன்றி இருநீர்வியன் உலகம் வன்சொலால் என்றும் மகிழாது. நம்முள் விசேஷ ஒற்றுமையுடன் உழைத்தால் வினையை வெல்லலாம், ஆண்டவன் அருள் விசேஷமாக உண்டாகும். மனச்சோர்வடைவதற்கு பயனே இல்லை. சோர்வாரும் செத்திறே ஒருநாளைப்பட வாழ். அமலன் அருள் அளிப்பான்.

பஜனை விதிகளைப்பற்றிய புஸ்தகம்.

இந்த பாரததேசத்தில், விசேஷமாய்த் தென்னிந்தியாவில் பாகவதர்கள் அநேகர் கூடிச் சித்திரைமாதத்தில் ஸ்ரீ ராமநவமியையும் ஆவணிமாதத்தில் ஸ்ரீ ஜயந்தி அல்லது கோகுலாஷ்டமியையும், அந்தந்த திதிகளுக்குப் பத்து நாட்கள் முன்னால் ஆரம்பித்து அந்தத் திதிகளில் முடித்து சுப்போத்ஸவமென்றும் அல்லது அந்தந் திதிகளிலாரம்பித்து பின்னால் பத்து நாள் செய்து முடித்து ஜனனோத்ஸவமென்றும் இப்படி இரண்டு விதமாயும் மார்கழிமாதத்தில் ஸ்ரீ ராதாகல்யாண மஹோத்ஸவமென்றும் விசேஷமாய்க் கொண்டாடி ஆனந்திக்கிறார்கள். தவிர, பிரதி ஏகாதசி, சனிக்கிழமை, புனர்வசு, ரோகணி, சிரவணம் முதலிய விசேஷ தினங்களிலும் பஜனை செய்கிறார்கள், இந்த விதமாக பஜனை செய்வதற்கும் காரணம் என்ன? இதற்கு ஆதாரமேதாவதுளதா? இவ்விதம் பஜனை செய்யும்போது தீபத்தை மத்தியில் வைத்து யாவரும் கீர்த்தனத்துடன் பிரதக்ஷிணம் செய்கிறார்களே, இதன் விபரமென்ன? ஸ்ரீ ராமநவமி முதலிய விசேஷ உத்ஸவங்களில் முத்துக்குத்துவது, அதாவது, உரலையும் உலக்கையையும் அலங்கரித்து, உரலில் சேஷாக்ஷதையையும் ஒரு மோதிரத்தையும் போட்டு பக்தர்கள் உலக்கையைப் பிடித்துக்கொண்டு அந்த அக்ஷதையைக் குத்தி அதையெடுத்து பாகவதனுக்கு அர்ப்பணம் செய்வது இப்படி மூன்று தடவை செய்வது, என்று ஒரு ஸம்ப்ரதாயம் அனுஷ்டிக்கிறார்கள். இதன் அபிப்ராயமென்ன?

மேலும் பக்தர்கள் எல்லோரும் சேர்ந்துகொண்டு நாமகீர்த்தனம் செய்வது, அப்போது கையில் ருத்ராக்ஷம் வைத்துக்கொண்டு எண்ணுவது, உஞ்சவிருத்தியில் கிரோலேஷ்டமும், [illegible] ...யால் தம்புரியக்ஷரவையும், லயம்ப்ரமின்றி பரம்பரகமஸ்தானம், போஜனகாலத்தில் "சத்ர்வ ராஜ ப்ரதிமா" சொல்லுதல், நாம் புலகாலத்தில் "ஜயாயகோகுலபால" சொல்லுதல், போஜனமத்தியில் கோவிந்தநாமோச்சாரணம் விசேஷமாக கத சாஸ்த்ர படனம், சிரவணம், பாஷாக்கர கீர்த்தனங்களும், திவ்யநாம கீர்த்தன மத்தியில் தீபநாரணம் முதலிய விஷயங்களைக் குறித்து அநேகருக்குச் சந்தேகங்களிருக்கின்றன.

இவ்விஷயங்களைக் குறித்து சற்றேறக்குறைய 120 வருஷங்களுக்கு முன் சோழ தேசத்திற் சமீபத்திலுள்ள, பிரம்மபுரமென்றும், மருதூர்த்தபுரமென்றும் வழங்கும் மருதாநல்லூரில் வாஸஞ் செய்திருந்த மஹாபுருஷராகிய ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகளும் அவர்களது முக்ய சிஷ்யரான ஒரு பக்தசிரேஷ்டருக்கும் நடந்த ஸம்வாதரூபமான "பக்தி ஸந்தேஹ த்வாந்த பாஸ்கரம்" என்ற கிரந்தத்தை எல்லோருமறியும்படித் தமிழில் மொழி பெயர்க்கவேண்டுமென்பது அடியேன் ஆவல். ஆனால் அடியேன் வடமொழி தென்மொழிகளொன்றிலேனும் வல்லவனல்லன். ஆயினும் இதிலுள்ள விஷயங்களை எல்லோரும் தெரிந்துகொண்டு அனுஷ்டித்து பகவத் க்ருபைக்குப் பாத்திரராகவேண்டுமென்ற ஓர் பேராசை என்னைத் தூண்டியபடியால் இதை எழுத முன்வந்துள்ளேன். ஸ்ரீ பாகவதத்தில் "தத் வாக் விஸர்கோ" என்ற சுலோகத்தில் ஒரு விஷயத்தைக் குறித்து ஒருவன் சொல்வதானால் அவ்விஷயம் பகவத்

(2வது பத்தி பார்க்க.)

குணங்களைக் கொண்டாடுவதாயிருந்தால் அதில் அநேகம் நிறைகளிருப்பினும் ஸாதுக்கள் அதை விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். என்றும், "புஷ்பமாலாநுஷங்கேண ஸூத்ரம் சிரஸி தார்யதே" புஷ்ப ஸம்பந்தத்தால் வாழைநாரும் சிரஸால் வகிக்கப்படுகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறபடியால் அடியேனால் எழுதப்படும் இம்மொழிபெயர்ப்பையும் இது பகவத்குண சம்பந்தமுடையது என்ற ஒரு காரணத்தைப்பற்றியே பெரியோர்கள் அங்கீகரிக்கும்படி பிரார்த்திக்கின்றேன்.

இதனைக் கண்ணுறும் மகான்கள் நீரைத் தள்ளி பாலை கிரஹிக்கும் ஹம்ஸம்போல் குற்றத்தைத் தள்ளி குணத்தை கிரஹித்து குழந்தையின் மழலையைக் கேட்டுக்களிக்கும் தாய்போல் களித்து அடியேனுக்கு பகவத் சரணாரவிந்தங்களில் அசஞ்சலமான ப்ரேம பக்தியுண்டாகும்படி அநுக்ரஹிக்க வேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

ராமசந்த்ரன்.

புதுமாதிரி கால் செயின், கொலுசு நகைகள்
குறைந்த கூலிக்கு தயார் செய்யுமிடம் .
சந்த்ரா ஸில்வர் ஒர்க்ஸ்.
Proprietor C. தியாகராஜ முதலியார்,
ஸ்ரீகும்பேஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோணம்.

ஆர்யதர்மம்
ஸ 49
4/23
15-12-1938

3 JAN 1939
MADRAS
215261
621

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

கும்பகோணம் கலி5040 பகுதான்யஹு கார்த்திகைமீ 30உ 1938ஹு டிஸம்பர்மீ 15உ

வா
49

உ
ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

வெளிவந்து விட்டது! உயர்ந்த புஸ்தகம்!!

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

மூலம் நாகரத்திலும், தமிழிலும்,

ஸ்ரீமான் **G. V. கணேசய்யர்,** B. A., B. L.,
எழுதிய தமிழுரையுடனும், விசேஷ குறிப்புகளுடனும் கூடியது.

ஸ்ரீ பாஸ்கரராயர் பாஷ்யத்தை அனுஸரித்தது.

டிம்மி $\frac{1}{8}$ அளவில் சுமார் 1000 பக்கங்கள் கொண்டது.
முழு காலிகோ பயிண்டு.

ஸ்ரீஅம்பாள், ஸ்ரீபாஸ்கரராயர்,
ஸ்ரீசக்ரம் படங்களுடன் கூடியது.

விலை ரூ. 4.] [தபால் V.P.P. சிலவு 0—12—0 தனி.

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தந ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோண

679

தேசிகன் தேன் மொழிகள்.

மத விஷயத்தில் நடு நிலை.

மதஸ்வாதந்திரியம்.

உ: தாங்கள் சொல்கிற மாதிரியில், அரசாட்சி மாற வேண்டு மென்று கேட்கிற இப்பொழுதுள்ள தேசியக் கக்ஷிக்காரருடைய அபிப்ராயத்திற்கும் தங்கள் அபிப்ராயத்திற்கும் அதிக வித்யாஸம் தெரியவில்லை.

ம: அப்படியல்ல. ஸர்க்காரே மாறவேண்டுமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். ஸர்க்காரின் மனோபாவம் மாறவேண்டு மென்பது தான் என் கருத்து. மேலும், தேசியம் என்றுசொல்லிக்கொள்கிற கக்ஷியை முன் நின்று நடத்துகிறவர்களையும் அவர்கள் உபயோகிக்கும் வழிகளையும் கவனித்தால், அரசாங்க அதிகாரம் அவர்கள் கையில் சிக்கிக்கொள்ளும் விஷயத்தில் நம் மதத்திற்கு அதை விட வேறு ஆபத்துக்கிடையாதென்றே தோன்றுகிறது. அவர்கள் யாருக்கும் நம்மதத்தில் பற்றுதலேயிருப்பதாகத் தெரிய வில்லை. பற்றுதலிருப்பதாகச் சொல்லிக்கொள்கிறவர்களுக்கும் வாய்ப்பேச்சுடன் ஸரி. "தேசிய" தன்மை என்று அவர்கள் எதைக்கருதுகிறார்களோ அதற்கு விரோதமாக மதம் தென்பட்டால், அந்தப்பேச்சு பற்றுதலும் உலர்ந்து விடும். ஆனதால், இந்த "தேசியர்கள்" வசத்தில் அகப்படுவதை விட, தத்கால ராஜாங்கத்தாரர் ஆளுகையிலிருப்பதே மிகவும் ஸிலாக்கியம். அவர்கள் இயக்கமும் நடவடிக்கைகளும் எனக்குக் கொஞ்சமேனும் திருப்தியைக் கொடுக்கவில்லை.

உ: இருந்தாலும், ஸர்க்காரை தாங்கள் கண்டிப்பது அவர்களின் கண்டிப்பை விட எவ்விதத்திலும் குறைந்ததாகத் தெரிய வில்லையே?

ம: அதிருக்கலாம். ஆனால், ராஜாங்கத்தார் விதேசஸ்தர்கள் என்றிருப்பதாலும், அதிகாரங்களைத் தாங்கள் கைவசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்கிற எண்ணத்தினாலும், அவர்கள் ஸர்க்காரைக் கண்டிக்கிறார்கள். ராஜாங்க அதிகாரம் விதேசஸ்தர்களிடமிருந்தாலும் ஸ்வதேசஸ்தர்களிட மிருந்தாலும், அது எனக்கு ஒரு விஷயமில்லை. ஆளுகிறவன் யார், எந்த தேசத்தவன், என்ன மதத்தைச் சேர்ந்தவன், என்பதில் எனக்கு விசேஷ அக்கரையில்லை. பிராஹ்மணன் பிராஹ்மணனாக இருந்து காலத்தைக் கழிக்கும் படியாயும், பொதுவாக ஹிந்து ஹிந்துவாகவும், மகமதியர் மகமதியாகவும், பார்ஸி பார்ஸியாகவும் அப்படியே இதரர்களும், தங்கள் தங்கள் வாழ்நாளைக் கழிக்கும் படியாயும் வேண்டிய ஸௌகர்யங்களையும் ஆதரவையும் அளிக்க வேண்டு மென்பதில் தான் எனக்குக்கவலை. மத விஷயத்தில் நடு நிலை, பொது அனுமதி, என்றால் அர்த்தமே யில்லை. மேலே சொன்ன ரீதியாக, மதங்கள் விஷயமாக ஸமமான பாவனை இருக்க வேண்டும். இன்னொருவனால் தொந்தரவு ஏற்படாமல், இன்னொருவனால் தடுக்கப்படாமல், அவனவன் தன் தன் கொள்கைகளை வைத்துக்கொள்ளவும், அவனவனுடைய மதஸம்பந்தமான அனுஷ்டானங்களை அனுஷ்டிக்கவும், வேண்டிய ஸௌகர்யங்களைச்செய்து கொடுக்க வேண்டும். அப்படிக்கன்றியில், எல்லா ஜனங்களையும் ஏகரூபமாக மத மற்றவர்களாகவோ நாஸ்திகர்களாகவோ செய்து விடுவது நடு நிலையாகுமா? மதத்தையே அழித்ததாகத் தான் ஆகும். மத விஷயத்தில் ஸ்வதந்திரிகளாக இருந்து, சாந்தமாய்த் திருப்தியுடன் காலம் கழித்து வாழ நினைக்கும் பிரஜைகளை வைத்துத்தான் அரசாங்கத்தாருக்கு க்ஷேமம் என்றும், புதிதாயுதித்ததாக குதூஹலத்தை நீதிதேடி கண்டபடியெல்லாம் கொள்கையும் நடத்தையும் ஏவித்துக்கொண்டு மனம் போனபடி போய்க்கொண்டு உலகத்தில் ஆர்ப்பாட்டம் செய்து வருகிற சிலர்களால் அரசாங்கத்திற்கு எப்பொழுதும் க்ஷேமம் கிடையாதென்றும், கூடிய சீக்கிரத்தில் ஸர்க்காரே உணர்வார்களென்று நினைக்கிறேன். நம் மதத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை பகவானே வஹிக்கிறார் என்று திருடமான நம்பிக்கையிருப்பதால், இப்பொழுது அதைத்தாக்க எவ்விதக்கிளர்ச்சிகள் தோன்றின போதிலும், என்ன நடக்கிறதென்று விசாரமற்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கலாமென்று தோன்றுகிறது.

[மேலே சொல்லிய விஷயங்களில் சிலவற்றைச் சிலர்கள் ஸரியானபடி அர்த்தம் செய்துகொள்ளாமலிருந்து விடக் கூடாதென்று உத்தேசித்து சில அம்சங்களைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. மதப் பாதுகாப்பின் அவச்யத்தை வற்புறுத்துவதே இதன் முக்ய தாத்பர்யம். எந்த மதமும், அந்த மதஸ்தர்களின் அனுஷ்டானத்திற்குஇடைஞ்சல் ஏற்பட்டுக்கொண்டே யிருந்தால், வளுத்துச்செழிப்பாய் இருக்க முடியாது. அதிலும், பொதுவாகவே ஸ்வபாவத்தினாலும் பயிற்சியினாலும் கொள்கையினாலும் சாந்தமாய் ராஜ விசுவாஸத்துடன் இருந்து வரும் ப்ரஜைகளில், வைதிக ஹிந்துக்களைத்தவிர மேலாக யாரையும் உலகத்தில் கண்டதுமில்லை. காணப்போகிறதுமில்லை. ராஜகீய வியவஹாரத்தில் தலையிடும் எண்ணமே அவர்களுக்கு மிகவும் குறைவு. இங்கிலீஷ் வாசித்து விட்டு ஆர்ப்பாட்டம் செய்து வருகிற சிலர்கள் ராஜகீயத்தில் தலையிட்டுக்கொள்ளட்டுமென்று இதுவரை இவர்கள் சும்மா இருந்து விட்டார்கள். அந்த சிலர் சட்ட ஸபை முதலான ஸ்தாபனங்களில் ஸ்தானம் கிடைத்திருக்கும் ஆஸ்பதத்தை வைத்து, ஸர்க்காரின் காரியங்களை மாற்றுரு வித ஸ்வாதந்திரியம் பெற்றிருப்பதால் ஹிந்துக்களில் பெரும்பாலோரின் அக்கரைக் குவிருத்தமாக, ஸர்க்காரை நடந்து கொள்ளுபடிசெய்ய அவர்களுக்கு அவகாசம் கிடைத்ததை அவ்விதம் துர்விநியோகம் செய்து வருகிறார்களென்பது இப்பொழுது தான் புலப்பட ஆரம்பிக்கிறது. இதுபுலப்பட்டதின் பேரில் தான் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் முதலிய ஸங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. "பிரிட்டிஷார் ஸம்பந்தத்தை ஒழித்துவிடவேண்டும்" என்றாவது, "பூர்ண ஸ்வராஜ்யம்" என்ற ஆகாசப்பந்தலாவது, இவர்களின் நோக்கத்தில் சேரவில்லை. வைதிக ஹிந்துக்களின் மத விஷயமான ஸ்வாதந்திரியத்தைப் பாதுகாக்க வேண்டு மென்பது தான் நோக்கம். மேலே சொல்லியபடி மதங்கள் விஷயமாய் ஸமமான பாவனை இருக்க வேண்டும். இன்னொருவனால் தொந்தரவும் தடையும் ஏற்பட இடமன்னியில் அவனவன் தன் தன் கொள்கைகளை வைத்துக்கொள்ளவும், தன் தன் மத ஸம்பந்தமான அனுஷ்டானங்களை அனுஷ்டிக்கவும் வேண்டிய ஸௌகர்யங்களையும் செய்து கொடுக்க வேண்டும். இவ்விதமான எண்ணத்துடன் தான் நம் பிராசீன ஹிந்து ராஜாக்கள் இத்தேசத்தில் பார்ஸிகள், கிறிஸ்துவர்கள் முதலான இதர மதஸ்தர்களுக்கும் குடியேற ஸௌகர்யம்செய்து கொடுத்தார்களென்பது சரித்திரம் வாசிப்போர் நன்கு அறிவார்கள். இதே எண்ணத்துடன் தான் தத்காலத்திய அரசாங்கத்தாரும் இருந்து வந்திருக்கிறார்கள். இருந்தாலும் சில ஸமயங்களில் நம் இனத்தாரில் சிலர்கள் சீர்திருத்தம் அவச்யமென்று ஸர்க்காரையும் நம்பும் படி செய்து விட்டதால் தவறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. தத்காலத்திய வைதிகர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் இயக்கமே இனிமேலாவது இது மாதிரி தவறுதல்கள் ஏற்படாமலிருக்கும்படி, வாஸ்தவ ஸ்திதியை ஸர்க்காருக்குத் தெரியப்படுத்துவதற்காகத் தான். முன் சொன்னபடி, ஸர்க்காரின் க்ஷேமம் ஆர்ப்பாட்டம் செய்யும் சிலர்களிடம் இல்லை; சாந்தமாய், திருப்தியாய், மத விஷயத்தில் ஸ்வதந்திரர்களாய், காலம் கழிக்க நினைக்கும் ஆஸ்திகப்பிரஜைகளையே பொறுத்திருக்கிறது.

ஆகையால் எந்த மதத்தினராயிருந்தாலும் அதில் பற்றுள்ள ஆஸ்திகர்கள் எல்லாரும் தங்களுக்கு மதவிஷயமான ஸ்வாதந்திரியம் இருக்கவேண்டுமென்று வாஸ்தவமாய் நினைத்தால், மதவிஷயத்தில் தலையிடாமலிருக்க வேண்டுமென்று ஸர்க்கார் மனப்பூர்வமாய் நினைக்கிறபடியே, அவ்விதம் நடக்கும்படி செய்யவேண்டிய பக்கபலங்களைக் கொடுத்து அக்நிலையிலிருந்து ஸர்க்காரை நழுவும்படிச் செய்ய சிலர்கள் செய்யும் பிரயத்தனத்தை தடுக்கவும் வேண்டியது இவர்கள் கடமையாகும்.

இன்னும் ஒரு விஷயம். பலாத்காரமான மதமாற்றலைப்பற்றி மேலே சொல்லியது மகமதிய அரசாங்கத்தாரின் நிலையிலிருந்து சொல்லப்பட்டதே தவிர, தர்மாதர்ம விவேசன நிலையிலிருந்து சொல்லப்படவில்லை. மதப்பிடிவாதமுள்ள மகமதிய ராஜாங்கத்தாருக்கும் தற்காலத்தில் நடுநிலை வஹிக்கும் ராஜாங்கத்தாருக்கும் உள்ள தாரதம்யத்தையும்மகமதியர் நிலையிலிருந்தே சொல்லப்பட்டதால், ஒருதலைப் பக்ஷமாகவே தோன்றும். "அரசாங்கத்தார் தங்கள் மதத்தை நிர்ப்பந்தமாக ஜனங்களுக்குப் புகட்டவேண்டுமென்பதா தங்கள் அபிப்ராயம்? என்று கேட்டதற்கு "இல்லவே இல்லை" என்று பதில் சொன்னதிலிருந்தே, பலாத்கார மதமாற்றம் உசிதம் தான் என்று சொல்லப்படவில்லையென்பது தெளிவாகும். எந்த மதத்தில் ஒருவன் ஜனிக்கிறானோ அதுவே அவனுக்கு பரமமான சிரேயஸ் ஸாதனம் என்று நம்புகிற ஹிந்து எவ்விதமான மதமாற்றலையும் ஒப்பான்; இதர மதத்திலிருந்து ஹிந்துவாகக்கூட ஸம்மதியான். அப்படியிருக்க பலாத்கார மதமாற்றலை எப்படி ஒப்புவான்?]

"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது மூலம் ஸம்ஸ்க்ருதத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
தபால் செலவு வேறு] [விலை அணா 0 8 0

'ஸௌந்தர்ய லஹரீ.'
காபி ஒன்று விலை ரூ. 1—8—0
தபால் செலவு பிரத்யேகம்.

ஸ்ரீ லலிதாத்ரிசதி.
நாகரலிபியில் மூலமும்.
நாமாவளியும்
விலை 0—3—0
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு
விலை அணா 0—2—0.
கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 3 JAN 1939 MADRAS

673

பிராணாயாமம்

அல்லது

ச்வாஸவ்யாயாமம்.

(A. S. தேசிகன், கோடம்பாக்கம்)

பிராணாயாமம் என்கிற பெயரைக் கொண்டே, இது எவ்வளவு முக்கியமான வியாயாமம் என்று உணரக்கூடும். பிராணன் என்பது சரீரம் உயிருடன் இருப்பதற்கு இன்றியமையாத வாயு. அவ்வாயுவைச் சரீரத்தினுள் ஸாத்தியமானவரையில் செலுத்தி, அதனாலடையக்கூடிய முழுப்பயனையும் பெறுவதற்காகச் செய்யப்படும் ச்வாஸநிரோத வேலையே "பிராணாயாமம்" எனப்படுகிறது. பிராணவாயுவை கூடுமான வரையில் அதிகமாக நாசியினால் ச்வாஸாசயத்தினுள் இழுத்துச் செலுத்தி நிரப்புவது 'பூரகம்' என்று வழங்கப்படுகிறது. இதையே "உச்சுவாஸம்" என்பார்கள். இவ்விதமே உள்ளுக்கு இழுத்த பிராணவாயுவை உடனே சிறிதும் தாமதமின்றி வெளியில் விட்டுவிட்டால் அதனால் விசேஷ இலாபம் சரீரத்திற்கேற்படாது. ஆகவே உச்வஸித்த பிராணவாயுவை சிறிது நேரம் ச்வாஸாசயத்தினுள் அடக்கிவைக்கவேண்டும். அவ்விதம் அடக்கிவைக்கப்படும் வேலைக்கு "கும்பகம்" என்று பெயர். இதை "ஸ்தம்பனம்" என்றும் கூறலாம். இப்பொழுதுதான் இப்பிராணவாயு ஜீவதாதுக்களுடன் கலந்து உள்ளே சோஷணம் செய்யப்படுகிறது. கச்மலமான தோஷங்கள் அடங்கிய வாயு நிச்வாஸரூபமாய் மெதுவாக வெளிப்படுத்த வேண்டும். இது தோஷங்களை வெளிப்படுத்தும் வேலையாதலால், ரேசகம் என்று கூறப்படும். இதையே நிச்வாஸ வேலை அல்லது நிச்வாஸம் என்று கூறலாம். இம்மூன்று வேலைகளும் ஒருமிக்கப் "பிராணாயாமம்" என்று வழங்கப்படுகிறது.

எந்த வியாயாமமும் பிராணாயாமத்திற்குச் சமானமாக ஆகமாட்டாதெனக்கருதியே ஸர்வஜ்ஞர்களும் ஸூக்ஷ்மதர்சிகளுமாயிருந்த நமது பூர்வ பிதாமஹர்கள் ஸாதாரணமாய் மூன்று ஸந்திகளிலும் விசேஷமாக இதர ஸமயங்களிலும் பலமுறை பிராணாயாமம் செய்யவேண்டும் என்று நிர்பந்தமான நியமம் ஏற்படுத்தினார்கள். தினந்தோறும் நிறைவேற்ற வேண்டிய முக்கியமான கடமையாய் அமைந்த சடங்குகளில் பிராணாயாம வேலையையும் ஒன்றாக பாவித்து, முறைப்படி அதைச் செய்துவந்த நமது முதாதைகள் சரீரதிடனிலும், ஆயுளின் அபிவ்ருத்தியிலும், மனோவன்மையிலும், புத்திப் ப்ரபாவத்திலும், சம—தம—காருண்யாதி சிறந்த குணங்களிலும் இணையற்றவர்களாகவே விளங்கிவந்தார்கள். பிராணாயாமத்தை முறை தவறாமல் அனுஷ்டித்தால் மார்பு, கண்டம் முதலியவற்றிலுள்ள மாம்ஸபேசிகள் விசேஷ வலிவடைந்து வெளியவயங்கள் பலம் பெறுவதோடு, ச்வாஸாசயமும் மிக்க வன்மையுறுவதோடு, இரத்த சுத்தி மனச்சுத்தி முதலியதும் ஏற்பட்டு, ஸாத்விக குணாபிவ்ருத்தியையும் மனிதன் மிகுதியாகப் பெறுகிறான்.

இந்துக்களில் த்விஜத் தன்மையை அடைய வேண்டுமானால், முதலில் பிராணாயாமம் செய்வதற்கு அப்யாஸம் செய்யவேண்டியது இன்றியமையாத கடமையென விதியேற்பட்டிருக்கிறது. பிராணாயாமத்தை நன்கு நிறைவேற்றுவதற்கான விதிகள் சிறு குழந்தைகளால் அனுஷ்டிக்க முடியாதவைகள் ஆகையால் எட்டாவது வயதில் அதைச் செய்யும் சக்தி ஏற்படுகிறதென்கிற தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு, பிராணாயாமத்தையும் அதற்கு அவசியமான காயத்ரீ மந்திராப்யாஸத்தையும் எட்டாவது வயதில் ஆரம்பிக்கும்படி வேதவிதி ஏற்பட்டது. அவ்விதம் இதை அப்யஸிப்பதற்கான யுக்த வயது ஏற்பட்டு, குருமூலமாக இதன் அனுஷ்டானோபதேசம் கிடைத்தது முதற்கொண்டு, தினந்தோறும் மூன்று ஸந்திகளிலும், இடையிலேற்படும் விசேஷ ஸமயங்களிலும், பிராயாணம விதி ஒவ்வொரு த்விஜனுக்கும் இன்றியமையாக் கடமையாகப் பிராப்தமாயுளது.

ஆனால் பிராணாயாமத்திற்கு இஹபரஸாதகமான உத்தம பயன்களை இக்காலத்திய சிற்றறிஞர்கள் தெரிந்து கொள்ளாமல், அதை முறைப்படி அனுஷ்டியாமல், அக்கடமையையே புறக்கணிக்கலானார்கள். கால் பந்து விளையாட்டும், டென்னிஸ் முதலிய கைப்பந்து விளையாட்டுகளும், ஸந்தியாவந்தனப் பிராணாயாமாதிகளைக் காட்டிலும் வெகு முக்கியமாகக் கருதப்பட்டு, வேத-விதிகளினும் மேலாக அக்கார்யங்களில் சிரத்தையும் ஏற்பட்டுவிட்டது. இதற்குக் காரணம் என்னவென்றால், மேனாட்டார் எதைச் செய்கிறார்களோ, அதுவே நவீன நாகரீகத்துக்கும் தேஹாரோக்கியத்துக்கும் ஏற்ற கருமம் என்று பிரமித்து, அதையெல்லாம் அவிவேகத்தினால் நம்மவர் அவலம்பித்து வருகிறார்கள் என்பதேயாம். நமது தேசத்திற் பண்டைக்காலமுதல் அனுஷ்டானத்திலிருந்து வருபவையும், நமது வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் ஏற்கனவே கூறப்பட்டுள்ளவையுமான அருமையான தத்துவங்களையும் காரியங்களையும் நமது ஜனங்களே வரவர ஊக்கக் குறைவினால் கைவிட்டு வருகிறார்கள், ஆனால் அதே விஷயங்களை மேனாட்டு சாஸ்திரஜ்ஞர் எவரேனும் நூதனமாகத் தெரிந்துகொண்டதாகச் சொல்லி வெளியிட்டால் அப்பொழுது, அந்த மேனாட்டு சாஸ்திரஜ்ஞரின் புத்தி மேன்மை அஸாதாரணமானதென்று கொண்டாடிக் கூத்தாடும் அம்மேனாட்டாரின் கூக்குரலை நம்மவரும் எதிரொலியைப்போல உத்கோஷித்து ஆதரிப்பதை நாம் பல தடவைகளிலும் பார்த்திருக்கிறோம்.

உதாரணமாகப் பிரக்ருத விஷயமான பிராணாயாமத்தின் உபயோகத்தை நம்மவரில்பெரும்பாலோர் புறக்கணித்து வர டமினியன் மெடிகல் மந்த்லி (Dominion Medical monthly) என்கிற வைத்யபத்திரிகை அடியில் வருமாறு இந்த ச்வாஸ வியாயாமத்தைப் புகழ்ந்து எழுதுகின்றது:—

"உயிருடன் உள்ள சரீரமாகிற சலன ஜீவ யந்திரத்திற்கு முறை தவறாத ச்வாஸ வேலையே மூல ஸூத்திரமாகும். ச்வாஸ வேலையானது நமது உடல் உயிர்த்திருப்பதற்கு முற்றிலும் ஏற்ற ஸாதனமாகவும் இலக்ஷணமாகவும் இருப்பதால் அவ்விஷயத்தில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டியதவசியமென்று நாம் சொல்லாமலே விளங்கும் இந்த ச்வாஸ வேலையில் உச்சுவாஸம் ('ns-piration) கும்பகம் (the pause) நிச்வாஸம் (Expiration) என்று மூன்று நிலைமைகள் உண்டு. அதாவது ச்வாஸ வேலையென்பது இம்மூன்று விதமான செயல்களும் சேர்ந்ததற்கே ஒரு பொதுப்பெயராக வழங்கப்படுகிறது. இந்த ச்வாஸ வேலையை அப்யஸிக்க வேண்டியதில் சில நியமம் உண்டு. அந்த நியமப்படி தினந்தோறும் சில வேலைகளில் தொடர்ந்து அப்யஸித்து வந்தால், அது சிறந்த வியாயாமமாகும். வாயை மூடிக்கொண்டு, வாயுவை நாசித்வாரங்களால் இழுத்து உட்கொண்டு மீண்டும் நாசித்வாரங்களாலேயே வாயுவை வெளியில் விடவேண்டும். இயற்கையமைப்புக்குள்ள வேலையை நாம் மாற்ற முடியாது. நமது பிரயத்தனமில்லாமலே பூரகம், கும்பகம், ரேசகம் என்கிற மூன்று வேலைகளும் இடைவிடாமல் நடந்தேறி வருகின்றன. ஆனால் வாயால் உச்சுவாஸ நிச்வாஸங்களைச் செய்யக்கூடாதென்றும், உச்சுவாஸத்தை நிச்சுவாசத்தினும் அதிகமாக நீட்டிச்செய்ய வேண்டும் என்றும், ஆக இவை முதலிய சில நியமங்களை நாம் ஏற்படுத்துகிறோம். இந்த நியமப்படி இயற்கையில் ச்வாஸ வேலை அநேகமாய் நடப்பதில்லை. பூரகவேலை அவர் அவரது சக்திக்கு இயன்றளவு நாசி முனையில் நோக்கம் வைத்து தீர்க்கமாக செய்யப்பட வேண்டும். நிச்வாஸ வாயுவை வெளியிட அதில் முக்காற் பங்கு நேரம் போதுமானது. இவ்விரு வேலைகளும் சீராக லயம் கட்டி நடத்தப்படவேண்டும். நாம் உட்கொள்ளும் பிராண வாயு எவ்வளவு அதிகமாக இருக்கக்கூடுமோ, அவ்வளவு அதிகமாகவும் நாம் அதை க்ரஹித்துக் கொண்டு உள்ளே அது நன்கு பரவுவதற்கும் சிறிது அவகாசம் கொடுக்கவேண்டும், ஆகவே பூரக ரேசகங்கள் என்கிற இரண்டுக்கும் நடுவில் கும்பகம் என்னும் ஸ்தம்பன வேலையும் அவசியம் சிறிது நேரம் நடந்தேற வேண்டும். இந்த வேலைகள் மூன்றையும் ஒழுங்காக நடத்துவதற்கு ஒரு உபாயம் செய்யலாம். முதலில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று எண்ணிக்கொண்டே அக்கால அளவில் பூரகத்தையும், ஒன்று இரண்டு என்று எண்ணிக்கொண்டே ரேசகத்தையும் செய்வோமானால், ஒவ்வொரு ச்வாஸவேலையிலும் இம் மூன்று அம்சங்களும் ஒழுங்கான லயத்தில் நடைபெறும். இந்த வேலை ச்வாஸ வியாயாமம் எனப்படுகிறது. வீட்டுக்குள்ளிருந்து கொண்டு செய்வதை விட, இந்த வியாயாமத்தை காற்றோட்டமுள்ள ரமணீயமான வெளிப் பிரதேசங்களில் நடத்துவது சிலாக்கியமாய் இருக்கும். பிரதி தினமும் மூன்று தடவைக்குக் குறையாமல் நான்கு அல்லது ஐந்து தடவைக்கு அதிகப்படாமல் இந்த வியாயாமத்தைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு தடவையிலும் குறைந்தது பத்து நிமிஷநேரமாவது இதை அனுஷ்டிக்கவேண்டும். வெளிப் பிரதேசங்களுக்குச் செல்ல முடியாமற்போனால், வீட்டுக்குள்ளேயே ஒரு ஜன்னலுக்கு எதிரில் இருந்து கொண்டு செய்யலாம். நேர்மையாக நின்றவாறோ உட்கார்ந்துகொண்டோ இவ்வியாயாமத்தை நிறைவேற்றவேண்டும். இடுப்பும் தலையும் நன்கு நிமிர்ந்து நிற்கவேண்டும். தோள்கள் இரண்டும் அகன்று முதுகு பக்கமாய் சாய்ந்தாற்போல் அமர்த்தப்படவேண்டும். கண்களின் நோக்கம் நாசி முனையில் இருக்கவேண்டும். இந்த நியமங்களைப் பின்பற்றி தினந்தோறும் ச்வாஸ வியாயாமம் நிறைவேறப்பட்டு வந்தால் வியாதி இல்லாதவர் திடகாத்திரர்களாகவும் தீர்காயுளைப் பெற்றவர்களாகவும் ஆவதோடு ச்வாஸம், காஸம், மார்சளி, மார்பறைச் சுருக்கம், க்ஷயம் இக்கோளாறுகளால் வருந்துபவர் பலர் அவ்வியாதிகளினின்றும் மீட்சி பெறுவர்."

(தொடரும்)

சாராய விளம்பரம் கூடாது.

பம்பாய் ஸர்க்கார் உத்திரவு.

பம்பாய் கவர்ன்மெண்டார், பத்திரிகைகளிலோ, புஸ்தகங்களிலோ, ஸஞ்சிகைகளிலோ கள், சாராய விஷயமான விளம்பரங்களை பிரசுரிக்கக்கூடாதென்றும், வியாசம் எழுதக்கூடாதென்றும் தடுத்து ஓர் உத்தரவு பிறப்பித்துள்ளார். மீறினால் 100. ரூபா அபராதமாம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பகுதான்யஹு கார்த்திகைமீ 30உ

ஜனநாயக ஆக்ஷியின் அனர்த்தம்.

சென்னை மாகாணத்தில் ஜனநாயக ஆட்சியின் அனர்த்தத்தால் பெரிய மதப்புரட்சிகரங்களான இரண்டு மசோதாக்கள் ஜனங்களின் பெயரால் சட்டமாகிவிட்டன.

ஸொத்துரிமையை அபஹரிக்கக்கூடிய ஜமீன்தாரிமுறை ஒழிப்பு மசோதாவும், வேறு பல புரட்சிகரங்களான மசோதாக்களும் கர்ப்பத்தில் இருக்கின்றன. அவைகளும் சீக்கிரத்தில் சட்டமாகிவிடுமென்பதில் தடையில்லை. இப்போது ஜனங்கள், ஏற்கனவே நடந்துவந்த கவர்ன்மெண்டிற்கும், தற்போது ஜனங்கள் பெயரால் நடைபெறும் கவர்ன்மெண்டிற்குமுள்ள வித்யாஸத்தை நன்கு அறியமுடியும். ஏற்கனவே மதவிஷயமாக ஒரு சட்டம் செய்வதாயிருந்தால் முதலில் கவர்னர்கள், வைஸ்ராய் ஆகியவர்களின் முன்னனுமதி அதற்கு வேண்டியிருந்தது. சட்டமான பிறகும் அதை மாற்றவோ ரத்துசெய்யவோ விசேஷ அதிகாரம்பெற்ற அதிகாரி இருந்தனர். இவ்வளவு பந்தோபஸ்த்திற்கிடையில் மதவிருத்தமான சட்டம்செய்வது சிரமஸாத்யமாயிருந்தது. இப்போதிய மாகாண ஸ்வய ஆக்ஷியென்ற ஜனநாயக அரசியல் திட்டத்தில் மேற்கண்ட ஜீவாதார உரிமைகளுக்கு எவ்விதப் பாதுகாப்புமில்லாமல் அநாதரையாகி விட்டதை நாம் அனுபவிக்கிறோம். ஆதலால், மத, ஸமூஹ, ஸொத்து உரிமையை விரும்பும் பிரஜைகள் இந்த ஜனநாயகத்தை க்ஷேமகரமென்று நினைக்க இடமில்லை. சென்னை சட்டஸபையில் நிறைவேற்றப்பட்ட ஆலயப்பிரவேச சட்டத்திற்கு உண்மையில் ஜன ஆதரவு அதிகமாக இருக்கிறதா? நிச்சயமாக இல்லையென்றே சொல்லலாம். ஆயினுமென்ன? ஜனப்பிரதிநிதிகளாக விளங்கும் மெம்பர்களும், மந்திரிகளும் தாங்கள் ஜனப் பிரதிநிதிகளென்ற துணிவு கொண்டு ஜனங்கள் விரும்பாத சட்டத்தையும் ஜனங்கள் பெயரால் செய்துவிட இந்த ஆட்சிமுறை இடமளிக்கிறது. இது பெரிய அனர்த்தமாகும். நமது பிராசீன மேதாவிகள் அரசியலுக்கும் மதத்திற்கும், ஸமூஹவ்யவஸ்தைகளுக்கும் ஸ்திரமான, அல்லது சாச்வதமான ஆதாரத்தையே அஸ்திவாரமாகக் கொண்டிருந்தார்கள். இப்போதோவென்றால் ஜனநாயகமுறைக்கு எவ்விதசாச்வதமான ஸ்திதியுமில்லாமல் அது மனம் போனபடி க்ஷணத்திற்கு க்ஷணம் மனித புத்திக்கு ஏற்றபடி மாறிக்கொண்டே நிற்கிறது. ஸ்திரமான ஆதாரமிருந்தாலல்லவோ அதை மீறி நடக்கக்கூடாதென்ற நியமம் ஏற்படும். மேற்றிசைகளில் நடைபெறும் ஜனநாயக முறைகளில் இக்குழப்பத்தை தினமும் பிரதி க்ஷணமும் கண்டு வருகிறோம். கக்ஷி முறையில் ஏற்படும் ஜனநாயகத்தில் அவ்வப்போது பலம் பெற்று ஆக்ஷிநடத்தும் கக்ஷியின் கொள்கையே பிரதானமாக இருக்கிறதேயல்லது சாச்வத வியவஸ்தை எதுவும் ஆதாரமாக இருக்கவில்லை.

ஆதலால் ஒரு நாள் இருந்த கக்ஷியாக்ஷி மறுநாள் மாறிவிடுகிறது. தினமும் இதே வேலை தான். முதலில் ஆக்ஷி நடத்திய கக்ஷியார், அடுத்து வரும் கக்ஷியாரால் வெறுக்கப்படுகிறார்கள். தூஷிக்கப்படுகிறார்கள். மந்திரிகளாயும், வேறு பிரதான நிர்வாஹிகளாயுமிருந்தவர்கள் மற்றொரு கக்ஷியார் காலத்தில் சிறைக்கும், தூக்குமேடைக்கும் கூட அனுப்பப்படுவதை தினமும் பார்த்துவிடுகிறோம். பல விடங்களில் ஜநநாயக மந்திரிகள் ஜனங்களாலேயே கோரமாகச்சுட்டுத்தள்ளப்படுகிறார்கள். சிறை வைக்கப்படுகிறார்கள். இதற்கு பிரான்ஸ், ரஷ்யா போன்ற அநேக தேசங்களில் உதாஹரணத்தைக் காணலாம். இதற்கு காரணம் சாச்வதமான அஸ்திவாரம் ஒன்றை ஒப்புக்கொண்டு அதற்கு மீறி ராஜ்யநிர்வாஹம் நடத்தக்கூடாதென்ற வியவஸ்தையில்லாததேயாகும். அந்தந்த ஸமயத்தில் ஜனங்கள் விருப்பும் வண்ணம் மனம் போனபடி ராஜ்ய ஸமூஹ அமைப்புகளை குலைப்பது அமைதியான ஆக்ஷிக்கு ஒருநாளும் இடமளிக்காது.

மத, ஸமூஹ நியமங்களில் நம் முன்னோர்கள் தீவ்ர வ்யவஸ்தை ஏற்படுத்தி, எத்தகைய அரசியல் அமைப்பு ஏற்பட்டாலும் அந்த வியவஸ்தைக்கு பங்கம் ஏற்படக்கூடாதென்ற கண்டிப்பான ஏற்பாடு செய்தார்கள். இப்போது ராஜ்யம் நிர்வஹிப்பவர்களுக்கு இந்த நியமத்தில் சிரத்தையில்லை. அதனால் ஜன அபிப்பிராயமென்கிற மாயாவாதத்தைச் சொல்லி ஸமூஹ அமைப்பைக் கெடுக்கிறார்கள்.

இந்த அவ்யவஸ்தையை சிலகாலமாக இவர்கள் போதித்தன் விபரீத பலனை இவர்களே அநுபவிக்க நேரிட்டிருக்கிறது. காங்கிரஸ்காரர்களுக்கு, அபேதவாதிகள், தொழிலாளிகள், கிருஷிகர், சுயமரியாதைக்காரரென்ற அநேக விரோதிகள் தோன்றி பலம் பெற்று வருகிறார்கள். உலகத்தையே ஆட்டிவைத்த பெரிய கக்ஷித்தலைவர்களும், கக்ஷிகளும் இன்று இருப்பிடம் தெரியாமல் மறைந்துவிட்டனர். அவர்களுடைய கொள்கைகளும், செய்கைகளும் உருவற்று மாறிவிட்டன.

இன்று நமது மந்திரிகள் ஜனங்கள் பெயரால் மத ஸமூஹப் புரட்சிச்சட்டங்களை இயற்றினாலும் நாளை வேறு ஒரு கக்ஷியார் தோன்றி இவர்களுடைய கொள்கைகளையும் காரியங்களையும் மாற்றக்கூடியவர்கள் ஏன் தோன்றக்கூடாது? ஜனநாயகம் வளர்ந்திருந்த ஐரோப்பாவில் ஹிட்லரும், முஸோலினியும் தோன்றுவார்களென்று யார் நினைத்தார்கள்? காலசக்ரம் எப்படி மாறிப்போகிறதோ, யார் கண்டார்கள்? ஆகலால் எந்தக்கக்ஷியும் சாச்வதமான சில கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டு ஜன உரிமையை காப்பாற்றும் தோரணையில் நிர்வாகம் நடத்தினாலல்லது அது நீடித்திருக்க வழியில்லை.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Nellore.

வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா.)

ஸ்ரீ மீனாக்ஷி ஆலயம் காக்ஷி சாலையாம்!! வடநாட்டிலிருந்து ஓர் கோடீஸ்வர வியாபாரி தென்னாட்டில் சுற்றுகிறார். அவருக்கு திராவிடர் ஆசாரப்படி உபசாரப்பத்திரமளிக்க, அவர் பல பேசி முடிவில் நமது கலைகளை சித்ரங்களை ஸ்ரீ மீனாக்ஷி கோவில் காக்ஷிசாலையாயிருந்து காக்கிறது. ஆதலால் அதை ரக்ஷிக்க வேண்டுமென்கிறார். தைவீக சிந்தை கிடையாது!!

குருக்களே கூறுகிறாராம்!! அருணாசலத்தில் ஆசாரமுள்ள பஞ்சமரை ஆலயத்தில் விடலாமென ஓர் குருக்கள் பேசியதாக பத்திரிகை கூற்று. இது தேசிய வாதிகளின் சப்பை மாயாவித்தையில் ஒன்று. என நினைக்கிறோம்! வாஸ்தவமாகவே அப்படி ஒருவர் கூறின் இதை விட தற்கொலை வேறில்லை.

பேய் ஆக்ஷி!! ஜர்மனியில் ஹிட்லர் யூதரை நடத்தும் மிகக்ரூரமான ஆக்ஷியைப்பார்த்துக்கொண்டு வல்லரசுகள் வாளாய் நிற்கின்றன. சிறுபான்மையோரை பெரும்பான்மையோர் இப்படி நடத்த இது ஓர் வழிகாட்டியாகும்! நாளைக்கு இக்கதி எவருக்கோ! யார் கண்டார்? இஃதோ மேனாட்டு நாகரீகம்!! ராஜ்ய தந்த்ரம்!!

தொத்து நோய்!! மாணவர் மறியல் நோய் பண்டித மாளவ்யாவிடமும் சென்று சிறிது அடங்கியதாகத்தெரிகிறது! நல்ல மருந்தில்லையா?

சிறந்த வைத்யர்! நோய் வருவதற்குமுன் தடுப்பதே சிறந்த முறை! ஆந்த்ர ஸர்வகலாசாலைதலைவர் இங்ஙனம் மறியல் வேலை நடத்தும் செய்வோர் 10ஆண்டு படிக்க முடியாது நீக்கப்படுவர் என மிகத்திறமையாக மாணவர்களுக்கு எச்சரிக்கிறார்!

பரவாது தடுக்க வேண்டும்!! சமூஹத்தை கெடுக்கும் இந்த நோயை உண்டுபண்ணிய காந்திஜி அந்தராத்மா நிச்சயம் வருந்தும்! அதன் தோஷத்தை உணர்ந்து இனி மறியல் கூடாதென்றாலும் நிற்காது! இது தற்கொலை குற்றமென மிகக் கடுமையாக சிக்ஷித்தால் நிற்கும்.

இஃதோர் தொத்து!! பஞ்சமோத்தாரணத்திற்கு சரியான வழியிலிறங்காமல் கோவிலைத்திற என்பது போல் பல மேதாவிகள் பயனற்ற வேலையில் பணத்தைப்பாழாக்கினர் திருநெல்வேலி ஜில்லாசபை பஞ்சமருக்கோர் ஸத்ரம் கொடுத்தது! அவர்கள் பிராண யாத்ரை (ஜீவனத்திற்கு) கே நடமாடும் போது க்ஷேத்ர யாத்ரை எங்கே செய்வது?

இது வேண்டாம்!! காரணமின்றி ப்ரும்ம த்வேஷத்தை வளர்க்க ஒன்றுமறியா ஏழைகள் வாயிலும் புகும்படி ஆங்காங்கு பார்ப்பனீயம் ஒழிக! என்ற சத்தம் கிளம்புவதை யோசிக்க சென்னையில் ஓர் ஸபை கூடிற்று! அதில் ஓர் யுவர் ஷை ப்ரசாரமாரம்பித்தாலாவது அடங்குமென்றார்! பலரிப்படி நினைத்தாலும் இது வீண்சண்டையை வளர்க்கும நீதியுடன் நேராய் எதிர்ப்பதே அழகாம்!!

இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவதா? திருவாங்கூர் சண்டையில்ஸ்வாரஜ்யசண்டையை விட ஹிந்து கிறிஸ்தவ சண்டை பாகமே அதிகமாகும். திருவாங்கூர் விஷயமாக ஓர் "தியாஸபிஸ்ட்" சென்னையில் பேச நேர்ந்தவர்கள் வைதிக ஹிந்துவல்லாத அவரையே பேச விடாமல் தடுத்தனர். பாதிரிகளுக்கு இடங்கொடுத்ததால் வந்த தீமை இதே?

ஸஞ்சரிக்கும் வைத்யசாலை!! நம்மாகாணம் தவிர மற்ற மந்திரிகள் ஏதேனும் குடிகளுக்குபயோகமான காரியத்திலீடுபடுகின்றனர். ஐக்ய மாகாண மந்திரி கிராமம் கிராமமாக வைத்யரும் மருந்தும் போகும்படி செய்கிறார். நமதுமந்திரியோ ஆலயத்தை அழிக்கலாமா? கடனை—? பார்க்கிறார்.

காந்தி ஹிட்லர் போர்? ஹரிஜனப்பத்ரிகையில் ஹிட்லரைக்கண்டித்து ஸத்யாக்ரஹ யோசனை கூற, ஜர்மன் பத்ரிகை இந்தியரையே சண்டைக்கிழுக்கிறது!

சோதனை காலமாம்!! நமது தர்மத்தை அழிக்க கங்கணங்கட்டிக்கொண்டு ஆலயத்தை அழிக்க அஸ்திவாரம் போட்ட போது பிரதம மந்திரி நமது தர்மத்திற்கு சோதனை காலமிது என்றார். யாருக்கு? எதற்கு? என்பதன் பதில் நமக்குத்தான் போலும்!

காரியம் முக்யம்! கௌரவமில்லை!! என்று கபர்கான் கூறி இவ்வாண்டு காங்கிரஸ் தலைமை பதவி வேண்டாமென மறுத்தார். இத்தகையோர் எத்தனை பேரிருப்பார்?

ஏனெதிர்க்கவில்லை? ஓர் மஹம்மதியர் முஸ்லீம் மதச்சட்டம் கொண்டு வர இந்து மதத்தைக்கெடுக்க ஏறி ஏறிக்குதிக்கும் கூட்டத்திலிருந்து ஒருவர் கூட எழுந்திருக்கவில்லை! என்ன காரணம்? அவரவர் உயிர் பிரியமல்லவா? உயிரை விட மதத்தை பிரியமாகக் கருதும் மஹம்மதியரிடம் அச்சமே!

மயக்கம் தெளியாதவர்? குருவாயூரில் அதர்ம கூட்டத்தில் 70 வயதான ஓர் பண்டிதர் மறுநாவில் நாலு ஜாதிதானிருக்கிறதென்று பேசினாராம்!

ஸ்ரீ வேதாந்த தேசிகர் செய்த தத்வடீகை.

புதிய பதிப்பில் சில விமர்சங்கள். போதாயனரும் உபவர்ஷரும் ஒன்றா?

ஒரு மஹாமஹோபாத்யாயர் எழுதுகிறார்.

32 வருஷங்களுக்கு முன்பு ஸ்ரீ காஞ்சிபுரத்திலிருந்த ஒரு மஹா வித்வான், 4, 5, கோசங்களை வைத்துக்கொண்டு முடிந்தவரை பரிசோதித்து கிடைத்த பாகத்தைத் தெலுங்கு லிபியில் அச்சியற்றி வெளியிட்டிருக்கிறார். தக்காலம் இந்த தத்வடீகை நாகரலிபியில் அச்சடிக்கப்பெற்று சென்னையிலிருந்து வெளிவந்திருக்கிறது. சோதனம் முதலியவற்றில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு பல விதத்திலும் நல்ல பரிஷ்காரத்தை இந்தப் பதிப்பு பெற்றிருக்கிறது.

இந்த உயர்ந்த கிரந்தத்தைப்பதிப்பிக்கும் ஆசிரியரிடமிருந்து ஆங்காங்கு கடினஸ்தலங்களில் அழகிய குறிப்புக்களையும் (டிப்பணி) கிரந்தத்திலுள்ள விஷயங்களைச் சுருக்கத்தில் அறிவிக்கும் முன்னுரையையும் பொதுவாக எவரும் எதிர்பார்த்தேயிருப்பார்கள். இந்தக் கிரந்தமொன்றுக்கு வியாக்யான ரூபமாயிருந்தாலும் இதில் அடங்கியிருக்கும் முக்கியமான ஸித்தாந்த விஷயத்தை ஒருவாறு ஸங்கிரஹமாக எழுதுவது முடியாத காரியமல்ல.

இப்பொழுது வெளிவந்துள்ள பதிப்பிலோ முகவுரையும் டிப்பணியும் வேறு ஒரு வழியில் இறங்கியிருக்கின்றன. டிப்பணியோ பல ஆவச்யக ஸ்தலங்களை விட்டும், அபேக்ஷிதஸ்தலங்களில் ஏற்பட்டும், சில விடங்களில் விபரீதமாயுமிருப்பதாக நமது அபிப்பிராயம். இதை மேலே நிரூபிப்போம்.

முதலில் முகவுரையை எடுத்துக்கொள்ளுவோம்.

उत्प्रेक्ष्यते बुधजनैः

என்கிற சுலோகம் ஸ்ரீ ஸ்வாமியின் ஸாக்ஷாத் ஸூக்தியாகையாலே, உத்ப்ரேக்ஷையை ப்ரஸித்தமான ஸம்பாவனையாகக் கொள்வது தான் உசிதமென்று தோன்றுகிறது. ஸ்ரீ ஸ்வாமி தமது திருவாக்கால் அவ்வளவுதான் சொல்வது உசிதமும் ஸம்பாவிதமுமாகும்.

43 வருஷங்களுக்குமுன் திருவஹீந்திரபுரம் ஸ்ரீ தேவநாதாசார் ஸ்வாமி தயாசதக வ்யாக்யானத்தின் முகவுரையில் காட்டிய இந்த அநுமான ரீதியில் அன்று முதலே நமக்கு விப்ரதிபத்தி உண்டு.

निखिलनिगम என்கிற பத்யத்தில் जयध्वजपट्टिका என்பதில் निगीर्याध्यवसानம் சொல்லி रूपकातिशयोक्तिः என்று எழுதப்பட்டிருக்கிறது. முதல் பாதத்தில் சொல்லிய விசேஷணம் ஜய்த்வஜ பட்டிகைக்குச் சேருமா என்பதையும்,

इयम् उत्पलेन वीक्षते

என்று பிரயோகிக்கலாமா என்பதையும், ஏதாவது ஒரு வழியில் ஸமர்த்திக்கப்புறப்படும்போது, பரிணாமாலங்காரத்தையும் ஆங்காங்கு காணும் ரூபகோபமாலங்கார ஸாதக பாதக விசாரத்தையும் கவனிக்கவேணும் என்பதையும், தெரிவித்துக்கொள்ளுகிறோம். உண்மையில்இங்கு என்ன அலங்காரம்?சேஷபூரணாதிகள் இல்லாமலேயே'நிபுணமனஸாம்' என்பது எங்கே எப்படி அன்வயிக்கிறது? "யதாச்ருத" "யதாச்ருதி" என்கிற பாடங்களுள் எது ஸ்வாரஸ்யமாயுள்ளது? ஸாரசாஸ்திரத்திலுள்ள சுலோகத்தில் ரூபகாதிசயோக்தி எப்படி பொருந்துகிறது? இவை முதலிய விஷயங்களை விஸ்தாரமாக விசாரித்து "நிகில நிகம" பத்யத்துக்கு ஒரு வியாக்யானம் வெளியிட விரும்பியிருக்கிறோம்.

(3) ஏகவிஷயகமல்லாத குமாரிலவார்த்திகத்துக்கும் நமது தத்வடீகைக்கும் வியாக்யான சைலியில் தாரதம்ய விசாரம் செய்யவேண்டியது தானா?

पौरुषेयेषु वाक्येषु........बुधैः

(38வதுகாரிகை) என்று ஸ்ரீஸ்வாமியே கல்பிதார்த்தங்களுக்கு ஸ்வரூபமோ ப்ரயத்னமோ கிடையாதென்று தெளிவிக்கிறார்.

संप्रचक्षते

என்று குமாரிலரே, இது ஒரு பெரிய விஷயமன்று என்று காட்டியிருக்கிறார். குமாரிலருக்கு முன்பே, ஸ்ரீ போதாயன உபவர்ஷ பவதாஸாதிகளுடைய வ்ருத்திகள் மீமாம்ஸா ஸூத்ரங்களுக்கு இருந்தன வென்றும் தெரிய வருகிறது. இந்த ஸமயத்தில் அடியில் காட்டும் வாக்யங்களையும் பண்டிதர்கள் கவனிக்க வேணும்.

लोके येष्वर्थेष्वित्यादेराद्यस्य भाष्यस्य वार्तिककारैरेकत्र दशार्थाः संभावितत्वेनोक्ताः........तथान्यत्र षडर्थाः ....गुरुः सप्तदशमर्थमाह

என்று ந்யாயரத்ன கோசத்தில்காணுகிறது (3வது ஓரியண்டல் கான்பரன்ஸ் புக்- 474-ம் பக்கம்)

4 சாபர பாஷ்ய வைலக்ஷண்யம் சொல்ல வேண்டியதுதானோ? ப்ரஸ்தானமே வெவ்வேறன்றோ? அது ஸூத்ர பாஷ்யம். இது பாஷ்ய வ்யாக்யானம். தேவதா விஷயத்தில் கேவலகர்மமீமாம்ஸகர் அபிப்பிராயப்படி சபரர் போகிறார். ஸ்ரீ விசிஷ்டாத்வைதமீமாம்ஸகரான நம் ஸ்வாமி நம்ம வேதாந்த ஸித்தாந்தப்படி தேவதாதிகரண ஸூத்ரங்களை அழகாக வ்யாக்யானம் செய்து காட்டியருளினார். ஆர்ஷவித்யாஸ்தான ஸூத்ரங்களுக்குள் பரஸ்பரம் விரோதமே கிடையாதென்ற சிறந்த கொள்கையையே, ஸ்ரீந்யாய பரிசுத்தியிலும் கௌதம ஸூத்ரங்கள் சிலவற்றுக்கு வியாக்கியானம் செய்து காட்டி ஸ்தாபித்திருக்கிறார். டீகையிலும் "सूत्रेषु (215, 216 காரிகைகள்) என்று நிரூபித்திருக்கிறார். ஆகையால் சாபரவைலக்ஷண்யம் சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும் வேறொரு ஸ்தலத்தை எடுத்திருக்கலாம் (5) ஐகசாஸ்த்ர்யம் ஸ்ரீ சங்கராசாரியாருக்கும் அபிமதமென்பதை ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் முதல் பலரும் நிரூபித்திருக்கிறார்கள். இது புதிய விஷயமல்ல.

6. உபவர்ஷரும் போதாயனரும் ஒருவர்தானா என்கிற விசாரத்தை 13வருஷங்களுக்கு முன்பு மஹாமஹோபாத்யாய ஸ்ரீ குப்புஸ்வாமிசாஸ்திரிகள் தாம் முதன் முதலாக வெளியிட்டார்கள். தத்வடீகையில் (நாகர எடிஷன் 434 பக்கம்) காணும்

अत्र शाबरम्........उपवर्षः इति । वृत्तिकारस्य बोधायनस्यैव हि उपवर्ष इति स्यात् नाम

என்கிற வாக்யம இந்த விசாரத்துக்கு மூலம், இதன் மீது, ஸ்ரீ. ரங்கஸ்வாமி ஸரஸ்வதீ, டாக்டர் S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், V. ராமஸ்வாமி சாஸ்திரிகள் டாக்டர் சிந்தாமணி இவர்கள் ஸாதகமாயும் பாதகமாயும் எழுதியிருக்கிறார்கள். இவர்களுடைய விசாரத்தின் போக்கு அதிகமும், க்ருதகோடி பாஷ்யம், மணிமேகலை இவைகளைப்பற்றியதாகவே காணப்படுகிறது.ஸ்ரீ தேசிகன் ஸ்ரீஸூக்தியாக நினைக்கப்படும் இந்த வாக்யத்துக்கு, அந்த இடத்தில் பொருத்தம் உண்டா? பூர்வோத்தர வாக்யங்கள் என்ன? அந்த வாக்யத்தில் காணும் हि என்பதும் स्यात् என்பதும் ஒன்றோடொன்று முரண்படவில்லையா? இது வேறொருவரின் குறிப்பாக இருக்கலாமா? ஸ்ரீ ஸ்வாமியே ஓர் ஆக்ஷேபத்தை மனத்தில் வைத்துக்கொண்டு, தமது வாக்யத்துக்குத் தாமே ஓர் உபஷ்டம்பகம் எழுதியதாகக் கொள்வதானால் "स्यात्" என்று சொல்வது உசிதமா? இவ் விஷயங்களை விமர்சகர்கள் ஆராயவேண்டும். ஸ்ரீ போதாயனரும் மீமாம்ஸையின் 20 அத்யாயங்களுக்கும் விருத்தி எழுதியிருப்பதாக மீமாம்ஸா பாதுகாபரித்ராணத்தில் காணப்படுகிறது.உபவர்ஷர் 20க்கும் விருத்தியெழுதியிருப்பதாகவோ எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

இதுவரை பாராசர்ய விஜயத்தில் காணும் (காஞ்சிபுரம் பதிப்பு 109—110 பக்கம்)

उपदेशशतात् भगवतो वेदाचार्यस्य एकव्यवहितशिष्यो भगवान् बोधायनः परमर्षिः ....संहितमेतत् शारीरकम्....विंशतिलक्षणी (१) वृत्तिकारो भगवान् उपवर्षोऽपि

என்கிற வாக்யத்தை ஒரு விமர்சகரும் கையாண்டதாகத் தெரியவில்லை. இதன் கர்த்தா மஹாசார்யரோ ஸ்ரீ தேசிகன் கிரந்தங்களில் நித்யபரிசயமுள்ளவர். இவர் தத்வடீகையில் அந்த வாக்யமிருந்தால் ஸ்ரீதேசிகாபிப்ராய விருத்தமாக, போதாயனர் வேறு, உபவர்ஷர் வேறு என்று எழுதத்துணிவாரா? இது விஷயமாக நாம் எழுதி வருவதை சீக்கிரத்தில் வெளிப்படுத்துவோம்.

7.டீகைக்கும் ப்ரகாசிகைக்கும் உள்ள வாசியைப்பற்றி மனத்தால் நினைக்கக்கூட நாம் அஞ்சுகிறோம். ஆகையால் பூமிகையில் காட்டிய தாரதம்ய விவேசக விஷயத்தை விமர்சிக்க நாம் கருதவில்லை. ஸூபுத்தாருக்கு மற்றக்ரந்தங்களை விட ப்ரகாசிகையில் விசேஷ ஆதரம் என்பதைப் பயத்துடன் தெரிவிக்கிறோம்.

8.பூமிகையில் வார்த்திக வியாக்யானம் தந்த்ரரத்னம் என்று குறிப்பிடப்பட்டு அதிலிருந்து வாக்யங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. வார்த்திக வியாக்யானத்தின் பெயர் "ந்யாய ரத்நாகரம்" என்று காணப்படுகிறது "தந்த்ரரத்னம்" என்பது த்வாதசாத்யாயிவ்யாக்யான ரூபமான வேறு க்ரந்தம் என்று தெரிய வருகிறது

இனி டிப்பணியைப்பற்றி அடுத்த ஸஞ்சிகையில் எழுதத்துடங்குவோம்.

கிருஷ்ணராயபுரம்.

அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்

ஷை கிராமத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் கிராமதேவதையுமான ஸ்ரீ மஹாகாளி (அழகு நாச்சியம்மன்) கோயில் பழுதாயிருந்தபடியாலும் கிராம மஹாஜனங்கள் நன்முயற்சியால் ஷை கோயிலை நன்றாய் அநேக சிற்பவேலைகளுடன் அழகாக கட்டி முடித்து சென்ற கார்த்திகைமீ 24௳ வெள்ளிக்கிழமை காலை 7½-மணிக்கு மஹா கும்பாபிஷேகம் மிகவும் அதிவிமரிசையாய் நடைபெற்றது, உடனே மஹாபிஷேகமும் நடைபெற்றது. அன்று இரவு அம்மன் முத்து பல்லக்கில் திருவுலாகாக்ஷியும் அதிவிமரிசையாய் நடைபெற்றது. உள்ளூர் வைதிக சிரேஷ்டர்களால் வேதபாராயணம் செய்ததானது மிகவும் சிலாகிக்க தக்கது. ஷை தினம் மின்சார விழா ஆரம்பம் கோவிலுக்கு இனாமாக அளிக்கப்பட்டது.

ஸ்ரீ ராமாயண பட்டாபிஷேகம்.

ஷை கிராமத்தில் பாஷ்ய பாவக்ஞ ஸ்மிருதிபூஷண வாகூர் பிரம்மஸ்ரீ வெங்கடராம சாஸ்திரிகளவர்களால் பிரவசனம் செய்யப்பட்டு வந்த ஸ்ரீ ராமாயணத்தில் சென்ற கார்த்திகைமீ 19௳ பானுவாரம் ஸ்ரீ ராமாயண பட்டாபிஷேகமானது மிகவும் அதிவிமரிசையாய் நடந்தேறியது. பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளுடைய பிரவசன சக்தியைப்பற்றி அதிகம் எழுத வேண்டியதில்லை. பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளவர்களுடைய பிரவசனத்தை கேட்டால் பாமரனும் ஞானத்தை அடைவான். ஸ்ரீ ராமர் படத்துக்கு புஷ்ப பந்தல்களாலும் புஷ்ப ஹாரங்களாலும் மிகவும் அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பிரவசனம் முடிவானதும் பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளவர்களுக்கு உள்ளூர் மஹா ஜனங்களால் சம்பாவனை முதலியது கள் செய்யப்பட்டு பிரசாத விநியோகத்துடன் இனிது நடந்தேறியது ஷை கைங்கர்யத்தில் ஈடுபட்ட உள்ளூர் மிராசுதார் மகா-ள-ள-ஸ்ரீ ராமரத்தினமய்யர் அவர்களுடைய சிரத்தை பாராட்டத்தக்கது.

பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் தலைஞாயர் என்ற என்ற ஊருக்கு அன்று இரவு புறப்பட்டு விட்டார்கள்.

S. ராமசந்திரேஸ்வரன்.

திண்டுக்கல்.

ஹிந்துமத சங்கம்.

சென்ற 4—12—38 ஞாயிற்றுக்கிழமை திண்டுக்கல் "ஹிந்து மத சங்க"த்தின் ஆதரவில் ஸ்ரீ ஜகத்குருமடத்தில் வியாகரண சிரோமணி ப்ரஹ்மஸ்ரீ மீனாக்ஷிஸுந்தர சாஸ்திரிகளவர்கள் (மேல்மங்கலம்) "ஜீவாத்மதத்வம்" என்னும் விஷயம்பற்றி ஓர் உபன்யாஸம் செய்தார்கள்.

உபன்யாஸகாவர்கள் ஆத்மஸ்வரூபத்தைப் பற்றியும் ப்ரஹ்மஸ்வரூபத்தையும் விரிவாக எடுத்துக் கூறி இவ்விரண்டிற்கும் உள்ள ஸம்பந்தத்தையும் விளக்கி கடைசியில் ஸர்வகதமான ப்ரம்ஹமானது உபாதிபேதத்தால் ஜீவன்களாகத் தோன்றுகிறுகையால் ஜீவப்ரம்ஹைக்யமே ச்ருதிகளின் பரம தாத்பர்யம் என்று உபன்யஸித்தார்கள்.

வந்தனோபசாரத்துடன் சபை இனிது கலைந்தது.

கார்யதர்சி.

பழூர்.

கீர்வாண வாணீ பரிஷத்.

இச்சபையின் 3 வது கூட்டம் ஷை யூர் வேதபாடசாலையில் 11-12-38 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு பிரம்மஸ்ரீ எஸ். வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் தலைமையில் நடந்தது. அவ்வமயம் உள்ளூரிலிருந்தும் பக்கத்து ஊர்களிலிருந்தும் சுமார் 50 பேர்களுக்கு மேல் ஜனங்கள் வந்திருந்தார்கள். ஆரம்பத்தில் வேதபாடசாலை மாணவன் சுப்பிரமணியன் என்பவனால் மங்களாசரணம் செய்யப்பட்டது, பிறகு நாகேஸ்வா சர்மா அவர்களால் "ஸம்ஸ்க்ருத ஸாஹித்யமும் காளிதாஸனும்" என்ற விஷயம் அதிவிமர்சையாக உபன்யசிக்கப்பட்டது. பிறகு K.N நடேச சர்மா அவர்களால் "விவாஹ காலம் என்ற விஷயம் ஸ்மிருதிகளுடைய ஆதாரங்களுடன் விஸ்தாரமாக விமரிசனம் செய்யப்பட்டது. பிறகு பாசுராம சர்மா அவர்களாலும் விச்வநாதசாஸ்த்ரி அவர்களாலும் தீண்டாதார் ஆலயப்பிரவேச கண்டனம் என்ற விஷயத்தைக்குறித்து விஸ்தாரமாக ஸம்ஸ்கிருதத்தில் சம்பாஷணை செய்யப்பட்டது. பிறகு பாடசாலை மாணவர்கள் சேதுராமன் யக்ஞேச்வரன், என்பவர்களால் "வித்யாப்யாசம்" என்ற விஷயமாக சிறு சம்பாஷணை செய்யப்பட்டது. பிறகு பிரம்மஸ்ரீ காசி கனபாடிகள் அவர்களால் வந்திருந்த ஆஸ்திகர்களுக்கும் உபன்யாஸகர்களுக்கும் சபையின் சம்பந்தமாக வந்தனம்தெரிவிக்கப்பட்டு குதூஹலத்தோடு கூட்டம் கலைந்தது.

K. N, நடேச சர்மா.

ரயித்வாரி நில உரிமை

அபஹரிக்கும் உத்தேசமில்லையாம்.

சென்னை சட்ட ஸபையில், ஜமீன்தாரி பிரதேச விஷயம் போல் ரயத்வாரி பிரதேசங்களிலும் குடிகளுக்கு பாத்யதை உண்டாக்கும் சட்டம் செய்ய ஸர்க்காருக்கு உத்தேசமுண்டாவென்று ஒருமெம்பர் கேட்டதற்கு ரெவின்யூ மந்திரி அத்தகைய உத்தேசம் ஸர்க்காருக்கு இல்லையென்றும் அப்படிச் செய்வது ரயித்வாரி நிலச்சுவான்தார்களின் உரிமையைப் பற்றியதாகுமென்றும் பதில் கூறினர். இந்த அபிப்பிராயம் உறுதியாயிருக்குமா ?

திருவாங்கூரில் வைஸ்ராய் விஜய பஹிஷ்காரம் ?

ஸம்ஸ்தானக் காங்கிரஸின் முடிவு.

திருவாங்கூர் ஸமஸ்தான காங்கிரஸ் நிர்வாகக்கமிட்டிக்கூட்டம் நடந்தது. திவான் மீது கூறியுள்ள பழியை வாபீஸ் பெறும் விஷயமான ஆலோசனை ஒத்திவைக்கப்பட்டது.

வைஸ்ராய் திருவாங்கூருக்கு ஸமீபத்தில் விஜயம் செய்யும்போது சிறிய ஆர்பாட்டங்கள் நடத்தி அவர் விஜயத்தை பஹிஷ்கரிப்பதாகக் காட்டவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதாம்.

ராஜாங்க ஸபையிலும் தேறிவிட்டது.

சென்னை ராஜாங்க சபையில் தீண்டாதார் ஸமூஹக்கஷ்ட நிவாரண மசோதாவும், மலையாள ஆலயப்பிரவேச மசோதாவும் அதிக விவாதமின்றி நிறைவேறிவிட்டன.

திருவாங்கூர் ஆலய நிலைமை.

திருவாங்கூரில் ஆலயப்பிரவேசம் ஆரம்பித்த பிறகு கோயில்களின் நிலைமையைப் பற்றி ஸர் பன்னீர் செல்வம் சென்னை சட்ட சபையில் ஒரு விவரத்தை வெளியிட்டார். தீண்டாதார் வரும் காரணமாக ஜாதி ஹிந்துக்கள் கோவிலுக்குப்போவதை நிறுத்தி விட்டதாயும், இப்போது தீண்டாதாரும் அங்கு போவதை நிறுத்தி விட்டதாயும் ஆதலால் இரு பிரிவினரும் கோவிலை விட்டு விட்டதாயும் அவர் குறிப்பிட்டார். இதன் உண்மை எப்படியோ ?

அண்ணாமலை ஸர்வகலாசாலை மூடப்பட்டது.

மாணவர்களின் மூர்க்கத்தனம்.

சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலையிலுள்ள சில மாணாக்கர்கள் ஒழுங்காக நடக்காதநினால் ஸஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். இதனால் கோபமடைந்த மாணவர்கள் கார்யதர்சியை அடித்துத் துன்பப்படுத்தினர் இதர மாணவர்களும் சேர்ந்துகொண்டு வேலை நிறுத்தம், மறியல் முதலிய விபரீத கார்யங்களில் இறங்கி அமைதியின்மையை உண்டாக்கியதால் கலாசாலை அதிகாரிகள் ஆலோசித்து ஜனவரி 15௳ வரையில் கலாசாலையை மூடிவிட்டார்கள்.

ஸுபாஷ்போஸ் மூர்ஹெட் ஸந்திப்பு.

காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் ஸுபாஷ் சந்திரபோஸ் இந்திய உதவி மந்திரியான கனம் மூர்ஹெட்டின் அழைப்பின்மேல் கல்கத்தாவில் அவரை ஸந்தித்துப் பேசினர். ஸமஷ்டியைப்பற்றி காங்கிரஸ் கொள்கையில் போஸ் அறிவித்தார். அதே ஸமயத்தில் ஸ்ரீ போஸ் வங்காள கவர்னருடனும் 1-மணி நேரம் பேசினர்.

ஸர். ஏ. ராமஸாமி முதலியாருக்கு புதிய பதவி.

இந்திய மந்திரி ஸபையில் மெம்பாக இருக்கும் ஸர். ஏ. ராமஸாமி முதலியார் வைஸ்ராய் நிர்வாஹ ஸபையில் வியாபார மெம்பாக நியமிக்கப்படுவாரென்று வதந்தி பரவியிருக்கிறது.

பிராம்மணர்களுக்கு தடை நீக்கம்.

புனவில் பல வருஷங்களுக்கு முன் நடந்த ராஜீயக் கொலை, சதியாலோசனைகளில் சித்பவன் பிராம்மண ஸமூஹம் ஸம்பந்தப்பட்டிருந்ததென்ற காரணத்தால் அந்த ஸமூஹத்தாரை தபால் இலாகாவில் உத்யோகத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடாதென்று பல வருஷங்களாக அமுலிலிருந்து உத்திரவை தற்போதிய கவர்ன்மெண்டார் ரத்துசெய்து விட்டார்கள்.

ராஜத்வேஷ வழக்கு.

திருவாங்கூர் ராஜீயத்தலைவர்கள் அனுப்பிய மஹஜரில் கண்ட அவதூறுகளை அவர்கள் வாபீஸ் பெறாததால் அவர்கள் மீது ராஜத்வேஷ வழக்குத்தொடரப்பட்டது.

வீர முழக்கம் செய்க.

சொன்னால் விரோதமிது; ஆகிலும் சொல்லுவன்' என்ற கணக்கிலே இங்கு கூறப்போகும் சில முக்கிய விஷயங்களை ஆஸ்திகர் அனைவரும் நன்கு பராமர்சித்து உடனே நமது தர்ம இயக்கம் வேண்டிய வலுப்பெற்று ஜயம் அடையுமாறு செய்வார்களாக. இனி வாளாயிருப்பதில் எள்ளளவும் பயனில்லை. சொல்லளவில் நிற்றலும் தகுதியல்ல. போர் முழக்கமே வெற்றி பயக்கும். அடிமை புத்தியை அறவே அகற்றி, ஆண்மையை மேற்கொண்டு, அரலன் அடிபணிந்து, இயக்கத்தைப் பலப்படுத்த, முயற்சி திருவினையாக் குமாதலின் வெற்றி நம்மதே.

பல்லாயிர ரூபாய்ச் செலவில் அகில பாரதவர்ஷீய சநாதனிகள் ஓரிடத்தில் ஓராண்டின் முடிவில் ஒரு வாரம் பெரிய ஆரவாரத்துடன் கூடி வேண்டியதற்கு மேலாகவே வெறும் தீர்மானங்களை நிறைவேற்றி விட்டு அவரவரிடங்கட்குச் சென்று, பாக்கி ஐம்பத்தொரு வாரங்கள் படுத்துகிடப்பது பரிஹாஸத்துக்கே தான் இடமாகும். கோரிய பயன் கிட்டவே கிட்டாது. விடாமுயற்சியே வேண்டற்பாலது. அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்.

ஸ்ரீ ஆதி சங்கரைப்பயந்த மலையாள ராஜ்யத்தில் தீண்டாதார் ஆலயப்பிரவேச விஷப்பரீக்ஷை நடத்த ஏற்பாடாகி வருகிறது உலகறிந்த விஷயம். ஏற்கனவே தார்மிகப்ரமுகர்கள் அதை தடுக்க தீவிர முயற்சி செய்து வருவது மிகவும் சிலாகிக்கத்தக்கதே. தற்போது மலையாளத்துக்கு அயல் பிரதேசங்களிலுள்ளார் நமக்கென்ன என்றிராமல் அவர்கட்கு பக்க பலமாய் நின்று போராட வேண்டும். வருகிற டிஸம்பர் மாதக்கடைசியில் மலையாளத்தின் பிரதான நகரில் சென்னை மாகாண சநாதன தர்மமஹாநாடு நடத்தி நமது எதிர்ப்பை உலகறியகாட்டினால்நன்மை. இதை சரிவர நடத்தற்குரியார் ராவ்ஸாஹேப் ஸ்ரீ. என். நடேசய்யாவர்கள்தான். அவர்கள் தொண்டு மிகவும் சிறியது. நிமிஷம் தாமதியாது அவர்கள் இதனை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இனிமேலாவது வருட முழுதும் ஊராய் உழைக்கக்கூடிய கமிட்டியைத் தேர்ந்தெடுத்து தக்க பிரசாரம் செய்தல் அத்யாவசியகம்.

சாத்விகப்போர் தொடங்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. தருமந்தான் வெல்லும். அதர்மிகளுக்குக் கொஞ்சமும் அஞ்ச வேண்டியதில்லை. நமது தேசந்தான் உலகுக்கு நாயகமாய் நின்று ஆட்சி செய்யப்போகின்றது. ஹிட்லர் போன்ற வீரர் நமக்குத் தலைவராய் இருத்தல் வேண்டும். அப்பொழுது தான் நம்மைப்பிறர் கௌரவிப்பர். கோழைத்தனத்தை அடியோடு அகற்றல் வேண்டும். தர்ம வீரராய்த் திகழவேண்டும்.

சோம்பலை ஒழித்து வேண்டிய பிரசாரம் துவக்கி, ஆர்யதர்மத்தை நன்கு பலப்படுத்தி உத்ஸாகத்துடன் உழைப்பின் உம்பர்கோன் அநுக்ரஹம் அருளி நமது எண்ணத்தை சபலமாக்குவான்.

ப. ரெ. திருமலை அய்யங்கார்.

திருவாங்கூரில் வெடி குண்டு.

மத்ய திருவாங்கூர் நாட்டில் சில விடங்களில் ஸர்க்காருக்கு விரோதமான சதியாலோசனை நடப்பதாயும், நூறு காங்கிரஸ் தொண்டர்களுக்கு வெடி குண்டுப் பயிற்சி ரஹஸ்யமாகச் செய்து வைக்கப் படுகிறதாயும் மாஜி ராணுவ உத்யோகஸ்தர் ஒருவர் வெளியிட்டிருக்கிறார்.

புராணக்கதைகள்.

பரசுராமர் வரலாறு.

(ராமசந்த்ர ஹரி:)

ஜஹ்நுவின் புத்திரரான அஜருக்குப்பலாகாச்வர் என்ற புத்திரர் ஒருவரிருந்தார். அவருடைய புத்திரர் குசிகரென்பவர். அக்குசிகர் யாவராலும் ஜயிக்கத்தகாத ஒரு புத்திரனை அடைய விரும்பிப் பெருந்தவம் செய்தார். அவருக்கு இந்திரனே குமாரனாகப்பிறந்தான், குசிகர் அக்குமாரனுக்குக்காதி என்று பெயரிட்டார். அக்காதிக்கு ஸத்யவதி என்று ஒரு பெண் பிறந்தாள். அவளைப்ருகுவின் புத்திரரான ரிசீகர் மணம் புரிந்தார். ரிசீகரிடம் ஸத்யவதி புத்திரனை வேண்ட அவர் காதிக்கும் தனக்கும் புத்திரனுண்டாகக்கருதி இரண்டு சருவைத்தயார் செய்து அதை தன் பார்யையிடம் கொடுத்து இதை நீயும் உன் தாயும் உட்கொள்ள வேண்டுமென்று விவரம் சொல்லிக்கொடுத்து இதனால் உன் தாய்க்கு ஒரு க்ஷத்ரிய சிரேஷ்டனும் உனக்கு ஓர் அந்தணனும் உண்டாவார்கள் என்று சொல்லி விட்டு தவம் செய்ய காட்டுக்குச் சென்றார்.

இந்த ஸமயத்தில் காதியும் தன்மனைவியுடன் தீர்த்த யாத்திரை செய்துகொண்டு ரிசீகாச்ரமம் வந்து சேர்ந்தார். அப்பொழுது ஸத்யவதி ஸந்தோஷமாய்த் தாயிடம் சென்று விஷயத்தைத்தெரிவித்தார். ஸத்யவதியின் தாயார் தனக்கேற்பட்ட சருவை ஸத்யவதிக்குக் கொடுத்து அவளதைத் தான் உட்கொண்டாள். இதுவஞ்சனையாய்ச்செய்த காரியம். இவ்விஷயத்தை த்யானக்கண்ணால் அறிந்தரிசீகர் ஸத்யவதியை நோக்கி நீ உன் தாயால் வஞ்சிக்கப்பட்டபடியால் உன்னிடம் க்ஷத்ரியனும் உன் மாதாவிடம் அந்தணனும் உண்டாகப் போகிறார்கள் என்றார். ஸத்யவதி இதைக்கேட்டு நடுங்கி இதை மாற்றும்படி தன் கணவனை வேண்டினாள் அதற்கு ரிசீகர் இதை மாற்றுவது முடியாத காரியம் என்றும் காதியின் குலம் பிராம்மண குலமாகு மென்பது தனக்கு முன்னமே தவ வலிமையால் தெரிந்தது தான் என்றும் கூறினார். ஸத்யவதி மறுபடியும் தங்களிஷ்டம் போல் பௌத்திரன் உண்டாகட்டும். சாந்த குணமுள்ள புத்திரனையே அடைய வேண்டுகிறேன் என்று சொல்ல ரிசீகர் உன்னிஷ்டப்படியே உண்டாகட்டும் என்றார்.

பிறகு ஸத்யவதியிடம் ஜமதக்கினியும் காதியிடம் விசுவாமித்திரரும் உண்டானார்கள். ரிசீகபுத்திரரான ஜமதக்னி கல்விமானும் தனுர்வேதத்தைத கரை கண்டு க்ஷத்ரியர்களைக் கொல்லத்தக்க பயங்கா ரூபமான பாசுராமரைப் பெற்றார். அவர் கந்தமாதன பர்வதத்தில் பரமசிவனைக் குறித்துத் தவம் செய்து அவரிடமிருந்து அதிக தேஜஸ்ஸுள்ள கோடாலியையும் அஸ்த்ரங்களையும் வரமாகப் பெற்றார். அக்கோடாலியானது அக்னி போல் விளங்குவது. மழுங்காத முனையுள்ளது. சொல்லமுடியாத சக்தியுள்ளது. அக்கோடாலியால் பாசுராமர் உலகத்தில் ஒப்பற்றவராய் விளங்குகிறார்.

(தொடரும்)

ஸமஷ்டிப் பற்றி வைஸ்ராய் பேச்சு.

இங்கிலாந்து சென்று வந்த பிறகு ஸமஷ்டி விஷயமாக ஸர்க்காரின் மனப்போக்கையும், செய்யப் போகும் வேலை விவரத்தையும் குறித்து கனம் வைஸ்ராய் அவர்கள் 19௳ யன்று கல்கத்தாவில் ஓர் முக்ய பிரஸங்கம் செய்வாரென்று ராஜீயவாதிகளால் ஆவலுடன் எதிர்பார்க்கப் படுகிறது.

பண்டித சிரேஷ்டர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்.

தற்காலம் நமது பாதகண்டத்தில் தலையோங்கி வளரும் தர்ம விரோதமான பிரசாரங்களையும் சட்டதிட்டங்களையும் அடியுடன் தொலைக்கவேண்டுமேயானால் அப்பொறுப்பு பண்டிதர்களின் வசமே உள்ளது. நம் நாட்டிலுள்ள பல ஜனங்களுக்கு ஸநாதன தர்மமும் அதன் உண்மையான நோக்கமும் அதன் பெருமையும் இவ்வாரென்று சரிவர தெரியாமல் இருப்பதே நம் நாட்டிற்கு நஷ்டமும் கஷ்டமும் ஏற்பட்டு இருக்கின்றது. புலி பசுவின் வேஷம் கொண்டதுபோல் பல பிறமதஸ்தர்கள் புனிதமான ஹிந்துமத வேஷங்கொண்டு பாமரமக்களை ஏமாற்றி அதர்மமென்னும் படுகுழியில் தள்ள முயற்சிக்கின்றனர். நம் பண்டிதர்கள் குறிப்பிட்ட இடங்களில் தர்ம பிரசாரம் செய்து வந்த போதிலும் பாமரஜனங்கள் கேழ்க்குமாறு போதுமான ஏற்பாடு செய்ததாகத் தெரியவில்லை. பாமர ஜனங்களுக்கு பண்டிதர்களின் உபன்யாசத்தை தேடி வந்து கேட்கப்போதுமான ஆற்றலும் இல்லை. ஆதலால் நம் ஸநாதன தர்மாபிமானிகள் கிராமங்கள்தோறும் நகரங்கள்தோறும் பல ஜனங்கள் கூடுமிடத்தில் ஸநாதன தர்ம தத்வத்தை எடுத்து உபதேசிக்கவேண்டும் என்பதே நம்போன்றவர்களின் உண்மையான நோக்கம். தெருத்தெருவாக நின்று உபன்னியசிப்பதைக் குறித்து பலர் மாறுதலாக நினைக்கலாம். நம் தர்மாபிவிருத்தியின் நிமித்தம் தர்மா விரோதமான எச்செயலையும் துணிந்து செய்யவேண்டும் என்பதை ஒவ்வொரு சநாதனிகளிடமும் மன்றாடிக் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்விஷயமாக ஸ்ரீ இராமேஸ்வர வாசிகளினிடையே பல விசாரணைகள் நடந்து கடைசியாக இவ்வூர் ஸ்ரீ இராமநாத சுவாமி சாஸ்திர பாடசாலை உபாத்தியாயர் K. N. சுப்பிரமண்ணிய சாஸ்திரிகள் அவர்கள் தன் மனதை ஒருவாறு தீர்மானித்துக்கொண்டு யார் அபிப்பிராயம் எவ்விதமிருந்தாலும் எனது அபிப்பிராயம் தெருக்களில் நின்று தர்மப் பிரசாரம் செய்வது மிகவும் அவசியம் என்று, அதன்படியே நடக்கவும் செய்தது. ஒரே தினத்தில் குறுகிய நேரத்தில் நடந்த உபன்யாசத்தால் சிறிது மாறுதல் ஏற்பட்டிருக்கின்றது. என்று கூறத்தகும். பண்டித தாஸன்,

V. K. கணபதி சர்மா, இராமேஸ்வரம்.

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி.

டாக்டர் நாயுடுவின் வேண்டுகோள்.

ஹிந்தி எதிர்ப்பு கிளர்ச்சியானது வகுப்புத் வேஷத்தை மூலமாகக்கொண்டிருப்பது வெளியாகி விட்டபடியால் கனம் பிரதம மந்திரி தமது கொள்கையை இனி மாற்றிக்கொள்ள வேண்டியது அவச்யமென்று பழைய தேசியவாதியாக விளங்கிய டாக்டர் நாயுடு அபிப்பிராயம் வெளியிடுகிறார். கனம் மந்திரி இப்படிச்செய்யாவிட்டால்............?

ஒழுங்கு நடவடிக்கை.

சட்டஸபை மெம்பர்கள் மீது குற்றம்.

சென்னை சட்ட ஸபையில் காங்கிரஸ் மெம்பர்களாயிருப்பவர்கள் சிலர் காங்கிரஸுக்கு விரோதமான கார்யங்களைச் செய்ததாக வந்துள்ள புகார்களை விசாரிக்க சட்ட ஸபை காங்கிரஸ் கக்ஷிக் கூட்டத்தில் ஓர் கமிட்டி நியமிக்கப்பட்டது. கனம் சுப்பராயன், கனம் பிரகாசம், கனம் ராமநாதன், மரக்காயர் வேதரத்னம் ஆகியவர்கள் மேற்படி க்மிட்டி மெம்பர்களாம்.

வெளியூர்ச் செய்திகள்.

இராமேஸ்வரம்.

ஸ்ரீ ஆதி சங்கராசார்ய ஸ்வாமிகள் லக்ஷார்ச்சனை வைபவச்சிறப்பு.

இவ்வூர் கீழ ரத வீதியில் அமைக்கப்பெற்ற ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஆதி சங்கராசார்யஸ்வாமிகள் மடத்தில் ஸ்ரீ சங்கர பகவத் பாதாளவர்களுக்கு சிஷ்ய கோடிகளனைவரும் ஒன்று சேர்ந்து (24-11-38௳) வியாழக்கிழமை முதல் லக்ஷார்ச்சனையென்னும் மாபெரும் கைங்கர்யத்தை ஆரம்பம் செய்து 3-12-38டன் மிகவும் சிறப்பாகவும் பக்தி சிரத்தையுடனும் பூர்த்தி செய்தார்கள். ஒவ்வொரு நாளும் மஹன்னியாஸ பூர்வகமாக பல வைதிகசிரேஷ்டர்கள் பதினோரு தடவை ஸ்ரீ ருத்ர ஜபமும் உபனிஷத் பாராயணங்களும் மற்றுமுள்ள அனேக பாராயணங்களும் செய்து பால் முதலிய பல அபிஷேகங்கள் செய்து ஸ்ரீ ருத்திர கும்பாபிஷேகமும் விமர்சையாய் நடைபெற்றது. பிறகு சாத்துபடி ஆனதும் ஐந்து பேர்கள் அர்ச்சனை செய்பவர் ஸ்ரீ ருத்திர திரிசதியை நாமாவளியாக ஸ்வரத்துடன் சொல்ல பார்ப்போர் கேழ்ப்போர் பேரானந்தமடையுமாறு காலை மாலைகளில் அர்ச்சனைகள் நடைபெற்றன. பிறகு தினம் ஒன்றுக்கு 4 படி அரிசிக்கு குறையாமல் வர்கான்னம் செய்து மஹா நிவேதனம் தீபாராதனைகளும் இவ்வூர் சாஸ்திர பாடசாலை உபாத்யாயரால் இயற்றப்பட்ட புஷ்பாஞ்சலி கட்டியம் ஸ்தோத்திர பாடம் கீர்த்தனைகள் முதலியன முறையே நடைபெற்று தர்சனத்திற்கு வந்து ஆனந்தமடைந்த பக்தசிஷ்ய கோடிகளனைவருக்கும் பிரஸாத விநியோகமும் நடந்தேறியது.

பதினோராவது தினமான 4—12—38ல் மஹாபிஷேகமும் பிராமண ஸந்தர்ப்பணையும் 5-12-38௳ காலை 10 மணிக்கு ஸ்ரீ மதாசார்ய பாதாள் படத்தை இவ்வூர் தேவஸ்தானம் பெரிய யானையின் பேரில் ஆரோகணித்து லக்ஷார்ச்சனை நிர்மால்யத்தை பக்தர்கள் கையில் தாங்கிச்செல்ல வேதபாராயண கோஷ்டிகளும் பின் தொடர வேதத்வனியும் பஜனை நாதமும் பக்தர்களின் சங்கர பகவத் பாதமூர்த்திக்கு ஜே! இது போன்ற பல ஜயகோஷங்களும் மேளவாத்யத்தின் ஓசையும் ஆகாயத்தை அளாவிச் செல்ல, திரள் திரளாக பக்த ஜனங்கள் சூழ, மிகுந்த கோலாஹலத்துடனும் உத்ஸாஹத்துடனும், குடைகள் சுருட்டிகள் குதிரைகள் முதலிய பிருதுகளுடன் ஸ்ரீ மடத்தில் நின்றும் ஊர்வலமாக புறப்பட்டு தெற்கு ரதவீதியின் மேற்கு மூலையில் (நேருச்சவுக்கையின் அருகாமையில்) வந்து சேர்ந்தன. அவ்விடத்தில் தயாராக இருந்த ஆசனத்தின்மீது ஏறி நின்றுகொண்டு பல மாணவர்களின் சங்கீதத்தின் பிறகு மாபெரும் கூட்டத்தினிடையே பிர்ம்மஸ்ரீ K. N. சுப்பிரமண்ணிய சாஸ்திரிகள் அவர்கள் சுமார் 30 நிமிஷம் கேழ்ப்போர் மனம் பரவசமாக மிக இனிமையாகவும் உருக்கமாகவும் பேசினார்கள்.

ஒரு நிருபர்.

ப்ரும்மஸ்ரீ குகதாஸ் S. V நடராஜய்யர் பிரசுரங்கள்.

அத்யாத்மயோகம் or ஆத்மபயிற்சிப்பர்	2	8	0
நாலிகே	3	0	0
சுப்ரமண்ய ப்ரஸன்ன மாலாமந்த்ரம்	0	2	0

கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட், கும்பகோணம்.

இலந்துறை.

ஸ்கந்த மண்டல பூஜை:— திருவருள் விளக்கியபடி ஈச்வர கிருபையை முன்னிட்டு உலகத்தின் ஸகல துர்பிக்ஷங்களும், துராசாரங்களும் விலகி ஸதாசாரமும், ஸுபிக்ஷமும் ஓங்கி ஸனாதன வைதிக தர்மம் செழித்து வளர்வதற்காக சென்ற ஐப்பசி மீ அமாவாஸ்யை யன்று இவ்வூர் பெரியகோவில் வஸந்தமண்டபத்தில் ஸ்ரீ வள்ளி தேவஸேனா சமேத ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய மூர்த்தி உத்ஸவ விக்ரஹத்தை எழுந்தருளப்பண்ணிவைத்து ஒரு மண்டலம் விசேஷ ஜப பூஜா பாராயணாதிகளுடன் உத்ஸவம் நன்கு நடைபெற்று ப்ரதிதினமும் பகல் 2 மணி முதல் 5 மணி வரையில் ஸ்ரீ ஸ்காந்த புராணம், சங்கர ஸம்ஹிதை, சிவரஹஸ்ய கண்டம் ஸப்த காண்டங்களும் பிரம்மஸ்ரீ சிவசார்ய கங்கா ஜடேச சர்மா அவர்களால் ப்ரவசனம் செய்யப்பட்டு வந்து நாளது கார்த்திகை மீ 21௳ செவ்வாய்க்கிழமை கிருத்திகா நக்ஷத்திர தீப தர்சனபுண்ய காலத்தில் பாராயணம், மண்டல பூஜை முதலிய பூர்த்தியும் ராத்திரி அதி சுந்திரமான மயில் வாஹனனுடாக ஸ்ரீ ஸுப்ரமண்யஸ்வாமி திவ்யாலங்காரங்களுடன் வீதி வலம் வந்து உத்ஸவம் பூர்த்தியாயிற்று.

வெகு காலமாய் மழையில்லாமல் பயிர்கள் தீய்ந்து வயல்களெல்லாம் வெடித்து இந்த ஹு மிகவும் க்ஷாமம் வந்து விடுமென்று சமஸ்த ஜனங்களும் தவித்துக்கொண்டிருக்கையில் இந்த மண்டல பூஜை ஆரம்பித்த மறுதினமே மழைபெய்யத்தொடங்கி ஸ்கந்த பஞ்சமி, ஸ்கந்த ஷஷ்டி இந்த இரண்டு தினங்களிலும் ஏராளமான மழை போதியவளவு வர்ஷித்து ஸமஸ்த நஞ்சை, புஞ்சை பயிர்களும் தென்னை, வாழை முதலிய தோப்பு, தோட்டங்களும் செழித்து எல்லா ஜனங்களுடைய மனமும் குளிர்ந்தது.

மண்டல பூஜையை தர்சித்தும் சிவரஹஸ்ய கண்டம் ச்ரவணம் செய்துமுள்ள இவ்வூர் அசேஷ மகா ஜனங்களும் எல்லா க்ஷேமத்திற்கும் காரணம் ஸ்ரீ சரவணபவன் கிருபை தானென்று கொண்டாடுகிறார்கள்.

சிவாசார்ய கங்கா ஜடேச சர்மா.

ஆலங்குடி.

கிராம ஸபை.

நாகப்பட்டணம் தாலூகா ஆலங்குடியில் இதன் முதல் வருஷ பூர்த்திக்கொண்டாட்டம் நேற்று நடைபெற்றது. இவ்வூராரும் இராதமங்கலம், தெற்காலத்தூர் முதலிய ஊர்களிலிருந்து வந்திருந்த சிலபிரமுகர்களும் கூடிய சபைக்கு, ஞானம், வயசு, சீலம், லோகானுபவம் எல்லாவற்றிலும் பெரியவரான இராதமங்கலம் மகா-ா-ா-ஸ்ரீ R. நாராயணஸ்வாமி ஐயரவர்கள் தலைமை வகித்து அழகாக நடத்திவைத்தார்கள். கடவுள் வாழ்த்தும், தலைவரவர்களின் முன்னுரையும், அதனையொட்டிய பேச்சுக்கள் சிலவும், தலைவரவர்களின் தொகுப்புரையும், முறையே அழகாக நடைபெற்றன. இதற்கு ஐந்து பேர் கொண்ட நிர்வாகஸபை ஒன்றும் அமைக்கப்பெற்றிருக்கிறது. இதில் இதுவரையில் 28 பேர் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். இச்சபையின் முக்கிய நோக்கம் கிராம முன்னேற்றம். அதற்கனுகூலமாக இவ்வூரிலுள்ள அறிவாளிகள் அனைவரும் ஒத்துழைத்து வருவது பாராட்டத்தக்கது. இச்சபை நீடூழி வாழவேண்டுமென்று ஈஸ்வரனை பிரார்த்திக்கின்றேன்.

காரியதரிசி.

திருவாரூர்.

விஜயபுரம்.

ஒரு மகா பெரியார் ஸித்தியானார்.

திருவாரூர் ஜங்ஷன் விஜயபுரம் அக்கிரஹாரத்தில் வசித்து வந்த பெரியார் பிர்ம்மஸ்ரீ செய்யானம் ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்கள் 82 வயதில் 4-12-38 தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில் சித்தியானார்கள் (காலமானார்கள்.)

அவர் வட மொழியிலும் தமிழிலும் நன்கு பயின்றவர். நான்கு வேதங்களையும் ஆராய்ச்சி செய்து, தர்க்கம், வியாகரணம், மீமாம்ஸா வேதாந்த சாஸ்திரங்களில் நிபுணராகி தென்னிந்தியாவில் பகவன்நாம சாம்ராஜ்யம் என்கிற விதையை ஊன்றி பயிராக்கி வளர்ச்செய்து பழத்தை சகலரும் அனுபவிக்கும்படியாக செய்த மகான்களில் ஒருவராய் விளங்கிவந்தார் என்பது எல்லாரும் அறிந்த விஷயம்.

சென்ற 50 வருஷ காலங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு ஸ்ரீ ராமாயணம், பாகவதம், பாரதம், இன்னும் பலபுராணங்களை இன்னிசையுடன் தென்னிந்தியாவில் பலவிடங்களில் பிரஸங்கம் செய்து வந்தனர். அவர்களை "வால்மீகி" அவதாரம் என்றே பலர்கள் சொல்லுவதுண்டு. ஒன்பது வருஷகாலமாக அவர்கள் துறவி வாழ்க்கையை யடைந்து எல்லோருக்கும் தன்னுடைய அருளை அளித்தார்கள். இரண்டு வாரங்களாக அவர்களது தேக நிலைமை அசௌகரியமாய் இருந்து சென்ற ஞாயிற்றுகிழமை பலஹீனம் அதிகரித்து அவர்கள் காலமாயிற்று.

அன்று அவர்கள் குமாரர் ஸ்ரீ லெக்ஷ்மி நரஸிம்மய்யர் வேதங்களில் சொல்லியவாறு பெரியாரை விஜயபுரம் ஓடம்போக்கி யாற்றின் தென்கரையில் அடக்கம் செய்து பூஜைகள் வேதோக்தமாய் செய்தார். அதற்குதவியாக சேங்காலிபுரம் (வடகுடி) பிரம்மஸ்ரீ நாராயண தீக்ஷிதர் அவர்கள் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ ஐயா தீக்ஷிதர், சுப்பராம தீக்ஷிதர் மற்றும் தீக்ஷிதர் கூடஸ்தர்களும் திருவாரூர் பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் கூடஸ்தர்களும் கூட இருந்து பூஜையை கிரமப்படி நடத்தி வைத்தார்கள். பெரியாரை வேத கோஷ்டியுடனும், மேளவாத்தியம் பஜனை கோஷ்டியுடனும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் கூடவந்து பெரியாரை எழுந்தருளப் பண்ணி அடக்கம் செய்தார்கள். அடக்கம் செய்த இடத்தில் சுமார் 500, 600 பேர்கள் ஜாதிபேதமன்னியில் பூஜை முடிகிறவரையில் இருந்து பெரியாரின் சமாதியை வணங்கி பிரசாதம் பெற்று அவபிருத ஸ்நானமும் செய்துசென்றார்கள்.

இந்த மகத்தான விஷயத்தில் பெரியாரின் சிஷ்ய கோடிகளும் மற்றுமுள்ளவர்களும் நன்கு அறியவேண்டியது அவசியமாகும். 4-12-38 முதல் டை சமாதியில் கிரமப்படி பூஜை நடந்து வருகிறது. மகா பூஜை தினம் (13-12-38) செவ்வாய்க்கிழமை; பெரியாரின் பிரஸாதத்துக்கு எல்லாரும் பார்த்திராளாக வேணும்.

சிவனாண்டார் கோவில் மகா-ா-ா-ஸ்ரீ ஆர் ராமய்யர் அவர்கள் ஷியார் தம்பி மகா-ா-ா-ஸ்ரீ ஆர். வெங்கிட்டராமய்யர் அவர்கள் விஜயபுரம் அக்கிரஹார வாஸிகளான பிராம்மணாள் சக குடும்பஸ்தர்கள் ஆண், பெண், குழந்தைகள் கூட இருந்து அடக்கத்தை சிரத்தையுடன் நடத்தி வைத்தார்கள். இது மிகவும் பாராட்டத்தக்கது.

ஒரு நிருபர்.

தசரதர் இராமருக்கு பட்டம் கட்ட முயன்றதும் அதை கூனி தடுத்ததும்.

பரசுராமர் இராமரால் பங்கப்பட்டு மகேந்திரகிரிக்கு தபசுக்குப் போன பிறகு எல்லோரும் அயோத்தி போய்ச்சேர்ந்து கொஞ்சகாலம் சுகமாகயிருந்தார்கள். அப்படியிருக்கையில் ஒருநாள் தசரதர் இராமருக்கு இராஜ்யபாரத்தை ஒப்பிவிக்க நினைத்து அவருக்கு பட்டம் கட்ட முயன்றார். அப்போது தசரதரின் மூன்றாவது மஹிஷியான கைகேயி இடம் வேலைக்காரியான "மந்தரை" என்ற கூனியானவள் பரதனுக்குப் பட்டம் கட்டும்படிக்கும் இராமரை காட்டிற்கு போகும்படிக்கும் கைகேயினிடம் துர்போதனை செய்தும் அவளைக் கொண்டு தசரதரை அவ்விதம் கேழ்க்கும் படி தூண்டினதாயும் அந்தப்படி கைகேயி தசரதரைக்கேட்டுக்கொண்டதாயும் அவளுடைய வேண்டுகோளுக்குக் கட்டுப்பட்டு அந்தப்படியே தசரதர் உத்திரவு செய்ததாயும் சொல்லப் பட்டிருக்கிறது. கூனி என்பவள் "த்ரிவக்ரா" மூன்று கோணல் உள்ளவள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. நம்முடைய சரீரத்திலும் மூன்று கோணல்களிருப்பதாயும் அவைகளை நேராக நிறுத்தி யோக நிஷ்டை செய்யும்படி கீதையிலும் ச்வேதாச்வதார உபநிஷத்திலும் சொல்லப் பட்டிருக்கிறது. கீதையின் ஆறுவது அத்யாயம் 13வது சுலோகத்தில் "ஸமம் காயசிரோக்ரீவோ தாரயன் அசலம் ஸ்திர:" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ச்வேதாச்வதர உபநிஷத்திலும் "த்ரிருன்னதம் ஸ்தாப்யஸமம் சரீரம்" என்று சொல்லியிருப்பதால் கூனி என்பது நம்முடைய சரீரத்திலுள்ள சிரசு, கழுத்து, மார்பு இவைகள் மூன்றும் கோணலாயிருப்பது தான் என்று அருத்தம் செய்ய இடமுண்டு. கூனியினுடைய கூனல் நிமிர வேண்டுமானால் இராமரை காட்டிற்கனுப்பி யோக நிஷ்டை செய்ய சொல்லவேண்டும். அவள் கூனல் நிமிர்த்தப் பட்டதாக அருத்தமாகும்படி ஒரு கதையும் இராமர் யோக நிஷ்டை சித்திரகூடத்தில் செய்தார் என்று அருத்தமாகும்படி ஒரு கதையும் வால்மீகி சொல்லியிருக்கிறார். இராமர் சித்திரகூடம் வந்த உடன் தசரதர் இறந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "சித்திரகூடம் கதே ராமே புத்திரசோகாதுராஸ்ததா ராஜா தசரதஸ்வர்கம் ஜகாமவிலபன்ஸுதம்" தசரதர் இறந்தபிறகு பரதனும் சத்ருக்னனும பரதனுடைய மாமன் வீட்டிலிருந்து வரவழைக்கப்பட்டவுடன் கூனியினது தூண்டுதலின் பேரில் இராமர் காட்டிற்கு அனுப்பப்பட்டார் என்ற கோபத்தினால் சத்துருகனன் கூனியின் தலை மயிரைப் பிடித்து அரண்மனையில் இழுத்துப்போனான் என்பதாயும, பரதன் அவளை விட்டுவிடும்படி சொன்ன பிறகு அவளை விட்டு விட்டதாயும் சொல்லியிருப்பதால் அவள் கூனல் நிமிர்த்தப்பட்டது என்று எண்ண இடமுண்டு. சித்திரகூடத்தில் இராமர் யோக நிஷ்டை செய்ததாக அவர் அவ்விடத்திலிருக்கும் போது கதை சொல்லப் படாவிட்டாலும் அவிடத்தில் நடந்ததாக அருத்தமாகும்படி ஒரு கதை ஸீதை இலங்கையிலிருக்கையில் அனுமார் மூலம் இரகஸ்யமாக இராமரிடம் சொல்லும் படி சொல்லியனுப்பியிருக்கிறாள். அந்தக்கதையானது ஸீதைக்கு காகாஸுரன் செய்த துன்பம். அந்தக்கதையின் சுருக்கம என்னவென்றால் சித்திரகூடத்தில் இராமர் ஸீதையின் மடியில் படுத்து நித்திரை செய்த போது இந்திரனுடைய பிள்ளையாகிற காகாஸுரன் வந்து ஸீதையை தன் மூக்கினால் கொத்தி துன்பப்படுத்தினதாயும் இராமர் விழித்துப் பார்த்து காகாஸுரன் பேரில் கோபங்கொண்டு ஒரு தர்ப்பத்தை எடுத்து பிரஹ்மாஸ்திரத்தை ஜபித்து அவன் பேரில் விட்டதாயும் அது அவனை விரட்டிப்போனதாயும் அவன் இந்திர லோகமெல்லாம் சுற்றியும் அவன் இரக்ஷிக்கப்படாமல் இராமரையே சரணம் அடைந்ததாயும் அவர் இரக்கப்பட்டு பிரஹ்மாஸ்திரத்திற்கு இரையாக ஒரு கண்ணைக் கொடுக்கும்படி செய்து அவனை ஒரு கண்ணுடன் போகும்படி விட்டு விட்டதாயும் சொல்லியிருக்கிறது. இதன் தாத்பர்யம் இருகண்களின் பார்வையும் ஒன்றாக ஆனது என்று அருத்தம் செய்யலாம். யோக நிஷ்டைக்கு உட்கார்ந்தவுடன் இரு விழிகளின் பார்வையும் ஒன்று சேர்ந்து இரு புருவங்களின் மத்தியில் விழவேண்டுமென்று யோக சாஸ்திரத்தில் சொல்லி யிருக்கிறதினாலும் சித்திரகூடம் என்பது இரு புருவங்களின் மத்தி என்று அருத்தம் செய்ய இடமிருப்பதாலும் இராமர் யோகநிஷ்டைக்கு உட்கார்ந்தார் என்று அருத்தம் செய்ய இடமிருக்கிறது. ஆகையால் கூனியின் தூண்டுதலின் பேரில் இராமர் காட்டிற்கு விரட்டப்பட்டார் என்பது யோக சாஸ்திர நிரூபணம் என்று சொல்லலாம்.

இராமரை காட்டிற்குப் போகும்படி தசரதர் உத்திரவு செய்யவும் இராமர் ஸீதை இலக்குமணர் இவர்கள் மூவரும் அயோத்தியிலிருந்து கங்கைக்கரைக்கு வந்து கங்கையை குகனுடைய படகில் ஏறி தாண்டி பரத்வாஜாச்ரமம் போய் அந்த ரிஷியின் அனுமதி பெற்று சித்திரகூடத்திற்குப்போய் பிறகு அதிலிருந்து தண்டகாருண்யத்திற்குப் போனதாக சொல்லப்பட்டிருக்கிறது. இராமர் யோக நிஷ்டை செய்தார் என்று அருத்தம் செய்தால் அவர் மேலேகண்ட ஒவ்வொரு இடத்திற்கும் போனார் என்று அருத்தம் செய்யவேண்டிய அவசியமில்லை. அவர் ஓரே இடத்திலிருந்து அவர் போனதாக சொல்லப்பட்ட இடங்களுக்கு ஒத்திருக்கபட்ட சரீரத்தின் பாகங்களைக்குறித்து ஸம்யமம் செய்தார் என்று அர்த்தம் செய்யலாம். ஸம்யமம் என்பது தாரணம், தியானம், ஸமாதி இவை சேர்ந்ததுதான். கீதையின் 13-வது அத்தியாயம் 33-வது சுலோகத்தில் ஆத்மாசரீரத்தில் எல்லாபாகத்திலுமிருப்பதாக சொல்லியிருப்பதால் இராமர் அந்த எல்லா இடங்களுக்கும் போனார் என்று அருத்தம் செய்தாலும் பாதகமில்லை,

இராமர் கங்கையை தாண்டினதும் பரத்வாஜாச்ரமம் போய் அவர் அனுமதி பெற்று சித்திரக்கூடம் போனதும்.

சரீரத்தில் முதுகு எலும்பின் த்வாரத்திற்குள் இருக்கிற இடை ஸுஷும்னை பிங்களை என்ற மூன்று நாம்புகளையும் கங்கை, யமுனை ஸரஸ்வதி என்று ஷட்சக்கரநிரூபணத்தில் சொல்லி இருக்கிறது. இந்த நாடிகள் மூலாதாரத்தில் ஆரம்பித்து சிரஸிலுள்ள மூளைவரையில் போய் மூளையுடன் சேராமல் அதற்கு கீழே உள்ள ஒரு ஜலம் போலுள்ள பதார்த்தத்தில் ஒரு(பல்பு) பந்து வடிவமாக மிதக்கிறது. அந்த இடை நாடியை கங்கை என்றும் அந்த பந்துபோலிருப்பதை குஹனுடைய படகென்றும் சொல்ல இடமுண்டு. அந்த இடத்தை குறித்து ஸம்யமம் செய்ததை அதை தாண்டினதாக சொல்லியதாக அருத்தம் செய்யஇடமுண்டு. அதற்குப் பிறகு பரத்வாஜ ஆச்ரமத்திற்குப் போனதாக சொல்லுவது அதற்கு கீழே உள்ள ஸோமசக்ரமாக சொல்லலாம்.

"பரத்வாஜ" பதத்திற்கு "வாஜ" ஆஹாரத்தை "பரத்" வைத்திருப்பது என்று அருத்தமாவதாலும் "ஸோம" என்பதற்கு அமிருதம் என்று அருத்தமிருப்பதாலும் பரத்வாஜ ஆச்ரமத்தை ஸோமசக்ரம் என்று அருத்தம் செய்யலாம். இராமருக்கு பரத்வாஜ ஆச்ரமத்தில் விருந்து அளிக்கப்பட்டது என்றது மேலேசொன்ன அருத்தத்தை உறுதி படுத்துகிறது. ஆகையால் இராமர் பரத்வாஜ ஆச்ரமத்திற்குப்போனார் என்பதை அவர் ஸோமசக்ரத்தைக் குறித்து ஸம்யமம் செய்தார் என்று அருத்தம் செய்ய இடமுண்டு. பிறகு இராமர் சித்திரக்கூடத்திற்குப் போனதாக சொல்லி இருக்கிறது. அயோத்தியா காண்டம் 54 வது ஸர்க்கம் 29 வது சுலோகத்தில் சித்திரகூடமென்பது 'கந்தமாதன"த்திற்கு ஸதிருசமாக இருப்பதாகசொல்லியிருக்கிறது "கந்தமாதன" என்று சொல்லி யிருப்பது வாஸனையை அறியக்கூடிய மூக்காக அருத்தம் செய்ய இடமிருக்கிறது. சித்திரகூடத்தில் இராமர் யோகநிஷ்டை செய்தார் என்று மேலே சொல்லியிருப்பதாலும் யோக நிஷ்டை செய்கையில் இரு விழிகளின் பார்வையும் மூக்கின் நுனியில் விழ வேண்டியது என்று ஒரு இடத்திலும் புருவங்களின் மத்தியில் என்று வேறு இடத்திலும் சொல்லி இருப்பதால் மூக்கின் நுனி புருவங்களின் மத்தியிலுமிருப்பதால் சித்திரகூடமென்பது புருவங்களின் மத்தி என்று அருத்தம் செய்வதுடன் அவிடத்தில் இராமர் யோக நிஷ்டை செய்தார் என்று அருத்தம் செய்ய இடமுண்டு. சித்திரகூடமென்பது ஒரு மலை என்று சொல்லப்படுகிறது. புருவங்களும் மூக்கும் சேருமிடம் ஒரு மலையின் கொடிமுடி போலிருப்பதால் அதை சித்திரகூடம் என்பது புருவங்களின் மத்திக்குப் பொருத்தமாயிருக்கிறது. அவ்விடத்தில் இராமர் யோக நிஷ்டை செய்தார் என்றதற்கு முன் சொன்ன காகாசுரன் சரித்திரத்தைக்காட்டிலும் வேறு காரணமுமிருக்கிறது. சித்திரகூடம் போனதும் தசரதருடைய ச்வாஸம் அடங்கிப்போய் அவர் இறந்தார் என்று சொல்லியிருப்பதானது [illegible] யோக நிஷ்டையிலிருந்து பிராணாயாமத்தால் தன் ச்வாஸத்தை அடக்கினதை தசரதருடைய ச்வாஸம் போச்சு என்று சொல்லி யிருப்பதாக நினைக்க இடமுண்டு. இதினாலும் இராமரும் தசரதரும் ஒன்று என்றதை வால்மீகி வெளியிட்டதாயும் நினைக்கலாம். இல்லாவிட்டால் அடங்கின ச்வாஸம் பிறகு ஜடாயு என்று பெயர் கொண்டு திரும்பி வந்ததை தசரதருடைய ஸகா என்று கூப்பிட இடமிருது. அதை விபரமாய் கீழே சொல்லுகிறேன்.

சித்திரகூடத்தில் பரதன் வந்து இராமரை அயோத்திக்கு வந்து இராஜ்யத்தை ஒப்புக்கொள்ளும்படி கூப்பிட்டதற்கு இராமர் இணங்காமலிருக்கக்கண்டு பரதன் அவருடைய பாதுகைகளை கேட்டு வாங்கிப்போய் நந்திக்கிராமத்தில் இராஜ்யத்தை நடத்தி வந்தான் என்பது ஏற்கனவே பரதன் ஜீவன் என்று சொல்லியபடி உசிதமே. ஆத்மாவாகிய இராமர் யோக நிஷ்டை செய்கையில் ஜீவனாகியபரதன் எல்லா கார்யங்களையும் பார்த்தான் என்பது ஸரியாக இருக்கிறது.

அய்யாத்துரை அய்யர்.

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
" ஆர்யா சதகம் "

Mr. G. V. கணேசய்யர், B A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது.

தபால் சிலவு வேறு] [விலை அணா 0—8—0
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு விலை அணா 6.
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

மார்கழியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

மதிப்புரை:

(1) நாரத பக்தி ஸூத்ரம் (2) பஜகோவிந்தம் (3) ஆத்மாநு ஸந்தானக் கிரமம்—இம்மூன்று கிரந்தங்களும் வரப்பெற்றோம். இவைகள் நாகரத்தில் மூலமும், எளிய நடையுள்ள தமிழ் மொழிபெயர்ப்பாகவும் அச்சிடப்பட்டுள்ளன. நாகர லிபி அறியாத பக்தர்களின் நிமித்தம் கிரந்தம், தமிழ் பாஷைகளில் மூலமும் இந்நூலில் சேர்க்கப்பட்டிருப்பது நமக்குத் திருப்தியாக இருக்கிறது. இந்நூல்கள் ஒருவாறு அளவில் சிறியதாக இருந்தாலும் அநுபவங்களில் குவியலாக இருக்கின்றன.

1-வது "நாரத பக்தி ஸூத்ர"த்தில் பக்தியினது அவசியம்; மஹான்களினது சங்கம், ஜீவன்கள் கைக்கொள்ளவேண்டிய முறைகள், பகவானது அருள் பிரவாகம் முதலிய பல விஷயங்களும், 2-வது "பஜகோவிந்தம்" எனும் கிரந்தத்தில் பிரபஞ்ச அஸாரத்தன்மை, ஆச்சார்ய பக்தி, பகவானைச் சரணம் புகல் முதலான பல நுட்ப தத்துவங்களும் கோஷிக்கப்பட்டுள்ளன. 3-வதான "ஆத்மாநு ஸந்தானக் கிரமத்தில் ஸகுண - நிர்க்குண வாயிலாக அத்யாத்ம நிலையை எட்ட ஓர் அநுதாபத்துடன் இருக்கிறவர்களுக்காகவும், அத்யாத்ம யாத்திரையில் சஞ்சரிக்கின்றவர்களுக்காகவும் ஓர் முறையாக உபநிஷத்துகள், பக்தி நூல்கள் முதலிய பல கிரந்தங்களினின்று பல அநுபவப் பொருள்கள் ஸ்ரீ குகதாஸ் அவர்களினால் கோர்க்கப்பட்டிருக்கின்றன. இவ்வநுபவ வாக்கியங்களினது உதவியினால் ஜீவயாத்திரையில் அழையா விருந்தினங்களாகச் சம்பவிக்கின்ற த்வந்த்வப் போராட்டங்களில் ஜீவன் வெற்றிபெற்று சாசுவத ஆனந்தத்தை அடையலாமென்பது நமது துணிபு.

இம்மூன்று நூல்களும் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குருவினது ஸ்ரீமுகமும், ஸ்ரீரமண மஹரிஷியினது அநுக்கிரகமும், திவான்பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளினது முகவுரையும் பெற்றிருக்கின்றன. ஆகையினால் இக்கிரந்தங்களினது அருமை பற்றி நாம் அதிகம் விரிக்கத் தேவையில்லை.

ஸ்ரீ குகதாஸ் பிரபஞ்ச க்ஷேமார்த்தம் தமது உடல், பொருள், ஆவி இம்மூன்றினது உதவியைக் கொண்டு அத்யாத்மப் பயிற்சி, சங்கீதம், பஜனை விஷயமாக பறந்த உலகின்கண் பாடுபட்டு வருவதும், தமது பலவித சிரமங்களைச் சற்றும் கவனியாது பற்பல அநுபவ நூல்களை வெளிக் கொண்டு வந்திருப்பதும் பலரறிந்ததே. ஆகையினால் அவரது பிரசுரங்கள் எல்லா ஜாதியினர்களுக்கும், கொள்கையினர்களுக்கும், உபாஸனையில் ஈடுபட்டவர்களுக்கும் ஓர்நற்றுணையாக இருக்குமென்றும் நமது அபிப்பிராயம். இவரது அநுபவ நூல்கள் எல்லாத் தமிழர்கள் வீட்டிலும், வாசகசாலைகளிலும் இருக்க வேண்டுமென்றும் எல்லோரும் ஸ்ரீ குகதாஸரது அநுபவங்களைக் கூடியவரையில் பின்பற்றி இக - பர க்ஷேமங்களை அடையவேண்டுமென்பதும் நமது அவா ஆகும்.

மேற்கண்ட நூல்கள் ஒரே வெளியீடாகக் கும்பகோணம் ஸ்ரீ ஜனார்த்தன பிரஸில் உயர்ந்த காகிதத்தில் ரொம்பவும் அழகாக அச்சிடப்பட்டுள்ளன. 124-பக்கங்கள்கொண்ட இந்நூல்களின் விலை அணா 12. தபால் சார்ஜு தனி. கிடைக்குமிடம்.—(1) காரியதரிசி "குகாலயம்" செம்மங்குடி P. O. (தஞ்சை ஜில்லா) (2) மானேஜர், ஸ்ரீ ஜனார்த்தன பிரஸ், டவுன் ஹைஸ்கூல் ரோட், கும்பகோணம்.

2

"பக்தி ஸந்தேஹ த்வாந்த பாஸ்கரம்"

எனும் நூல் வரப்பெற்றோம். பரமபதமடைந்த பிரம்மஸ்ரீ அபிநவசுக, தருவை லக்ஷ்மீநாராயண சாஸ்திரிகள் ஞாபகார்த்தமாக இந்நூல் பரம பக்தர் ஸ்ரீராமச்சந்திர ஹரிஹரியால் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்நூல் அளவிற் சிறியதாயினும் விஷயங்களில் மஹத்தாக இருக்கின்றது. இந்நூலில் "பஜனையினது தத்வம், அதன் அங்கங்களான தீபப்ரதக்ஷிணம், லீலாநுகரணம், உஞ்சவ்ருத்தி, ஜாலராவினது உபயோகம்" முதலிய பல விஷயங்கள் பற்றி ரொம்பவும் அழகாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இஃது மதனூர்த்தகபுர (மருதாநல்லூர்)த்தில் அவதரித்த ஸ்ரீ ஸத்குருநாதனுக்கும், ஓர் உத்தம பக்தருக்கும் நடந்த ஸம்வாதக் கிரந்தமாகையால், பஜனையில் ஈடுபட்டுள்ள, ஈடுபட அநுதபிக்கின்ற பக்தர்களுக்கு அவசியம் தேவை உள்ளதென்பது நமது அபிப்ராயம். இந்நூலினது முடிவில் ஸ்ரீ அபிநவசுக, தருவை மஹானது சரித்திரம் சுருக்கமாக பிரம்மஸ்ரீ பண்டித வெ. ஸோம தேவசர்மா அவர்களால் தெரிவிக்கப்பட்டிருப்பது இந்நூலுக்கு ஓர் அலங்காரமாக இருக்கின்றது. விலை அணா 4.

கிடைக்குமிடம்:—1 மானேஜர், பஜனை சபை, பஞ்சல சுப்பிரமணியன் ரோட் கிழ்மாம்பலம். 2 ஜனார்த்தன பிரஸ், டவுன் ஹைஸ்கூல் ரோட், கும்பகோணம். G. D.

சென்னை.

"ஸ்ரீவித்யோல்லாஸினீ ஸபா"

சென்னை நாராயணமுதலி வீதி ஸம்ஸ்கிரு
கலாசாலையில் சென்ற பதினோராண்டு களா
ஸ்தாபிக்கப்பட்டு. மாதமிருமுறை நடந்
வரும் மேற்படி ஸபையின் சாதாரணக்கூட்ட
மொன்று (9-12-38)வெள்ளிக் கிழமை
மாலை நான்கு மணிக்கு நடை பெற்றது.

பலஸம்ஸ்கிருத அபிமானிகளும் இதர
பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர்
மேற்படி கலாசாலை உதவியாசிரியர் (வியாக
ரண பண்டிட்) ஸ்ரீமான் உ. வே, இராகவாச்சா
ரியார் தலைமை வகித்தார், தெய்வ வழிபாடு
நடந்தபின் ஸபைக்காரியதரிசி டி. வி. ஸ்ரீநி
வாஸன் சென்ற கூட்டத்தின் [illegible]
யைப்படித்தார், பின்பு வி. இராஜமணி என்
னும் மாணவனால் "ஸத்புத்திரன்" என்ற விஷ
யம் வடமொழியில் உபந்யஸிக்கப்பட்டது
அதே விஷயத்தைப்பற்றி ஸம்ஸ்கிருதபாஷை
யில் மாணவர்கள் பேசினர். பிறகு ஸபையின்
பிரஸிடெண்டு ஸ்ரீமான் உ. வே. T. S ஸ்ரீநி
வாஸ அய்யங்கார் (ந்யாய சிரோமணி) அவ்
விஷயத்தைத்தக்க மேற்கோளுடன் எளிய
நடையில் தெளிய விரித்துரைத்தார்.

முடிவாக அக்ராஸநாதிபதியவர்கள் ஸத்புத்
திரர்களைப் பெறுவதற்குரிய சாதனங்களுள்
முதன்மையானது ஸவர்ண விவாஹமே
யாகுமென்றும் கலப்பு விவாஹத்தால் ஸத்
புத்திரர்களைப்பெற முடியாதென்றும் இன்
னும் தன் தாய் தந்தையருக்கு எவன் நன்
மையை விளைவிக்கிறானோ அவனே ஸத்புத்தி
ரனென்றும், இந்த விஷயம் தைத்திரீய கிரு
ஷ்ண யஜுர்ப்ராம்மணத்தில் காடகம் இரண்
டாவது ப்ரச்னத்தில் சொல்லப்பட்ட நசிகே
தோபாக்யானத்தால் நன்கு விளங்குகிறதெ
ன்றும் பின்னும் மாணவர்கட்குரிய நீதி
போதனைகளையும் குறிப்பிட்டு ஓர் சொற்
பொழிவாற்றினார். பின் காரியதரிசி வந்த
னங் கூறவும் மங்கள வாழ்த்துடன் சபை
இனிது கலைந்தது. ஒரு நிருபர்.

மதராஸ் லாஜர்னல் அச்சுக்கூடம்
பிரசுரங்கள்.

	ரூ.	அ.	ப.
From his masters Lips	1	0	0
Hindu Ideal	3	0	0
வால்மீகி ராமாயணம் 7 காண்டம் (தேவநாகரிலிபியில்)			
தின்பேப்பர்	5	0	0
நிஸ்பேபர்	4	0	0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd, Town High School Road, Kumbakonam;
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

சங்கீதம்

ஸ
50

H
23

22-12-1938.

215262

3

OFFICE OF THE REGISTRAR
3rd JAN 1939
MADRAS

215262

685

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 | கும்பகோணம் கலி5040 பஹுதான்ய-ஸு மார்கழி-மீ 7உ 1938-ஸு டிஸம்பர்-மீ 22உ | ஸ 50

உ
ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

வெளிவந்து விட்டது ! உயர்ந்த புஸ்தகம் !!

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

மூலம் நாகரத்திலும், தமிழிலும்,

ஸ்ரீமான் **G. V. கணேசய்யர்,** B. A., B. L.,
எழுதிய தமிழுரையுடனும், விசேஷ குறிப்புகளுடனும் கூடியது.

இதில் அடங்கியுள்ள விஷயங்கள்:—1. ஸ்ரீவித்யை. 2. ஸ்ரீபாஸ்கரராயரும் அவருடைய மஹிமையும். 3. ந்ருஸிம்ஹாநந்தநாதர் பரிபாஷாச்லோகங்கள். 4. பெயர் குறிக்கப்பட்ட க்ரந்தங்கள். 5. பிழை திருத்தம். 6. ஸஹஸ்ரநாம பாஷ்யம் (பூர்வபாகம்). 7. ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம். 8. ஸஹஸ்ரநாமம் உத்தரபாகம் (பலச்ருதி). 9. அகராதி வரிசை. 10. ஸஹஸ்ரநாமம்—நாகரத்தில் மூலம்.

◆

டிம்மி $\frac{1}{8}$ அளவில் சுமார் 1000 பக்கங்கள் கொண்டது.
முழு காலிகோ பயின்டு.

ஸ்ரீஅம்பாள், ஸ்ரீபாஸ்கரராயர்,
ஸ்ரீசக்ரம் படங்களுடன் கூடியது.

விலை ரூ. 4.] [தபால் V.P.P. செலவு 0—14—0 தனி.

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தந ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

ல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. ஸீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

தேசிகன் தேன்மொழிகள்.

மதப் பிரசாரம்.

1. அக்ஞானம் சரணமாகுமா?

லௌகிக ரீதியாய் தக்க அந்தஸ்துள்ள ஒருவர் ஒருநாள் ஸ்ரீ மஹா ஸ்வாமிகளிடம் சொன்னதாவது.

அ:—பால்யம் முதல் லௌகிகமான வித்யையே அப்யஸித்து வந்திருக்கிற என்னைப் போலுள்ளவர்களுக்கு தர்ம விஷயமான விதி நிஷேதங்கள் தெரியாததினால் தவறுதல் ஸம்பவித்தால் ஸமாதானமுண்டு. அவ்வித ஸமாதானம் சொல்லிக் கொள்வதற்கிடமன்னியில் இருக்கிற பண்டிதர்கள் தவறினால், ஜாஸ்தியான தோஷமில்லையா?

ம:—ஒரு விதத்தில் வாஸ்தவம்தான். நீங்கள் தெரியாத்தனத்தினால் தவறுகிறீர்கள். அவர்கள் தெரிந்திருந்தும் தவறுகிறார்கள். அவர்கள் குற்றமேதான் ஜாஸ்தியாய்த் தெரிகிறது. இருந்தாலும், மற்றொரு விதத்திலும் இதை கவனிக்கவேண்டியதுண்டென்பதை மறந்துவிடக் கூடாது.

அ:—அதென்ன?

ம.—செய்யவேண்டிய கார்யம் என்னவென்று அவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவில்லையென்று மாத்திரம் ஏற்படுகிறது. நீங்கள் தெரிந்துகொள்ளவும் இல்லை, அனுஷ்டிக்கவும் இல்லை. அவர்களிடம் அனுஷ்டிக்கவில்லையென்ற ஒரு தோஷமிருக்க, உங்களிடம் தெரிந்துகொள்ளவில்லை, அனுஷ்டிக்கவில்லை என்ற இரண்டு தோஷங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் வாஸ்தவத் [illegible] தோன்றுகிறது.

அ:—அக்ஞானமே தோஷம் என்றிருந்தால்தானே, தாங்கள் சொல்கிறபடியாகும்?

ம:—வெறும் அக்ஞானம் குற்றமாகாது. தெரிந்துகொள்ள வேண்டியகடமையிருக்கும் இடத்தில் அக்ஞானம் தோஷமேயாகும்.

அ:—அதெப்படி?

ம—மிருகாதிகளுக்கும் சிறு குழந்தைகளுக்கும் இதுஸரி, இதுபிசகு என்ற ஞானம் கிடையாது; அந்த ஞானத்தை ஸம்பாதித்துக்கொள்ள வேண்டிய சக்தியும் கிடையாது; அவர்கள் விஷயத்தில் அக்ஞானம் இருந்தேதீரும்; ஆகையால் அது தோஷமாகாது. குழந்தை பையனாக, இது ஸரி இது பிசகு என்று அறியக்கூடிய சக்தியேற்பட்ட பிறகு தன்னுடைய கர்மாவுக்கு ஜவாப்தாரியாகிறான், பிசகான கார்யத்தைச் செய்தால் தோஷியாகிறான்.

அ:— வாஸ்தவம். அப்பொழுது, தான் செய்கிற கர்யம் பிசகு என்று அவனுக்குத் தெரிகிறபடியால்.

ம:—தான் செய்கிற கார்யம் பிசகு என்று அவனுக்குத் தெரிகிறபடியால் தோஷம் என்று நான் சொல்லவில்லை. பிசகு என்று தெரிந்து கொள்ளக் கூடிய சக்தி ஏற்பட்டிருந்தால் போதும். உங்கள் லௌகிக சிக்ஷா சட்டங்களையே பார்ப்போம். ஒருவன் குற்றம் செய்யும் காலத்தில் அது குற்றமென்று அவனுக்குத் தெரியாதென்று வியக்தமாய் ஏற்பட்டாலும் கூட, குற்றம் செய்தவனை குற்றவாளியல்லவென்று விட்டு விடுகிறார்களா?

அ:— இவை மனிதனால் செய்யப்பட்ட சட்டமாய் இருப்பதால், ஒருவித கட்டுப்பாடு வைத்துக் கொள்ளத் தான் வேண்டியிருக்கிறது. சட்டம் தெரியாதென்பதும் ஒரு ஸமாதானமாகும் என்று வைத்துவிட்டால், எல்லோருமே இதைச் சொல்ல ஆரம்பிப்பார்கள், யாரையுமே தண்டிப்பது அஸாத்தியமாகும். ஆகையால், தெரிந்து குற்றம் செய்கிறவனையும் ஒரே தரத்தில் தான் வைக்கவேண்டியிருக்கிறது. ஆனாலும் ஸாதாரணமாய், தெரியாதவன் விஷயத்தில் தண்டனையை மாத்திரம் குறைப்பதுண்டு. ஈசுவரனால் செய்யப்பட்டிருக்கிற சட்டமாகிய தர்ம விஷயத்தில், இது பாபம் இது புண்யம் என்று தீர்மானிக்கிற அதிகாரத்தை அவரே வஹிக்கிறபடியால், இவன் இந்தக் கார்யத்தைத் தெரிந்து வேண்டுமென்று செய்தான், இவன் இந்தக் கார்யத்தைத் தெரியாமல் அக்ஞானத்தினால் செய்தான், என்று அவருக்கு நன்றாகத்தெரியுமல்லவா?

ம:—தெரியும். அதற்காக அவர் என்ன செய்யவேண்டுமென்று சொல்கிறீர்கள்?

அ:—தெரிந்து பாபம் செய்கிறவர்களை மாத்திரம் சிக்ஷை செய்யவேண்டும். இது பாபம் என்றே தெரியாமல் செய்கிறவர்களைத் தண்டிக்கக் கூடாது.

ம:—நெருப்பு சுடும் என்று தெரியாமலே ஒரு குழந்தை நெருப்பைத் தொட்டால், நெருப்பு சுடமாட்டேன் என்றிருக்குமா?

அ:—அசேதனமாயிருக்கிற நெருப்புக்கு இது குழந்தை, இவன் வயதானவன் என்று பகுத்து அறிய முடியுமா? அசேதனத்திற்குள்ள நியாயத்தை ஸர்வக்ஞனான ஈசுவரனிடத்தில் உபயோகப்படுத்தலாமா?

ம:—"நெருப்பு சுடும்" என்பது புதிதாக ஏற்படுத்தப்பட்ட சட்டமல்ல, ஈசுவரனாலேயே ஏற்படுத்தப்பட்டது என்பதை மறந்து பேசுகிறீர்கள்.

அ:—ஈசுவரனால் செய்யப்பட்டிருந்த போதிலும், அதை நிறைவேற்றும் பொறுப்பு அசேதனத்தில் அல்லவா இருக்கிறது?

ம:—ஈசுவரன் ஸர்வ[illegible] தள்ளியிருந்து கொண்டா?

அ:—அப்படித் தான் தோன்றுகிறது.

ம:—அப்படி ஒரு நாளும் கிடையாது. ஈசுவரன் எக்காலத்திலும் அவ்விதம் ஒதுங்கவும் முடியாது, தான் அன்னியிலும் இருக்கமுடியாது, தான் தெரிந்துகொள்ளாமலும் இருக்க முடியாது. குழந்தை சுடப்படும் ஸமயத்திலும் அங்கேயும் தான் இருந்து, தன் சட்டத்தைத்தானே நிறைவேற்றுகிறார். அக்குழந்தை முன்னொரு ஜன்மத்தில் பெரியவனாயிருந்த தருணத்தில் ஏதோ ஒரு பாபம் செய்திருப்பான், அதன் பலனை இப்பொழுது சுடுபடவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

அ:—அசேதன ஸம்பந்தமான சட்டங்களைப்போலவே தர்மமென்ற சட்டமும் ஈசுவரனால் செய்யப்பட்டிருக்கிறபடியால், நிர்தாக்ஷிண்யமாகத்தானிருக்கும் என்றால், அக்ஞானம் சரணமாகாது என்பது ஸரியே ஆனால் ஒரு சிறுகுழந்தை தப்பிதம் செய்தால் அதற்குப் பாபம் கிடையாதென்று ஆரம்பத்தில் சொன்னீர்களே? அதெப்படி? தெரியாத்தனத்தினால் தொட்டபோதிலும் நெருப்பு குழந்தையைச் சுட்டேதீரும் என்பது போல, தெரியாத்தனத்தினால் செய்யப்படும் அதர்மமும் அக்குழந்தையைப் பாதித்துத் தானே தீரவேண்டும்?

ம:—பாதிக்கத்தான் பாதிக்கும். ஆகையால்தான் குழந்தைப் பருவத்திலேயே அதற்கு சுத்தியேற்படும்படியாக அநேக ஸம்ஸ்காரங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அக்குழந்தையின் அத்யாத்ம சிரேயஸ்ஸைப் பாதுகாப்பதற்காகவே பலவிதமான பொறுப்பு பெற்றோர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது, தானாக ஆதாரம் எடுத்துக் கொள்ள முடியாமலிருக்கிற குழந்தைக்கு எப்படி பெற்றோர்கள் ஆதாரம் கொடுக்கவேண்டுமோ, அதேமாதிரி தன் சிரேயஸ்ஸை தானே கவனித்துக் கொள்ளவேண்டிய பொறுப்பும் பெற்றோர்களைச் சேர்ந்தது. பெற்றோர்கள் இப்பொறுப்பை வஹிக்கத் தவறினால் அவர்களுக்குப் பாபம் உண்டு, குழந்தையும் பலஹீனமாயும் வியாதிக்ரஸ்தமாயும் ஏற்படும். அத்யாத்ம சிரேயஸ்ஸை பெற்றோர்கள் கவனிக்காமலிருந்து விட்டால், அதிலும் பாபம் அவர்களைச் சேரும்; குழந்தைக்கும் க்ஷேமக் குறைவு ஏற்படும். ஆகையால் அதர்மமும் குழந்தையை பாதிக்கவே பாதிக்கும்.

ம:—ஆனால், தாங்கள் முன் சொன்ன போது, குழந்தை அக்ஞான தசையிலிருப்பதால், அதற்கு தோஷம் கிடையாது என்று சொன்னீர்களே?

ம:—அப்படிச் சொல்லவில்லை. தெரிந்து கொள்ளச் சக்தியற்றிருப்பதால், பாபம் இல்லை. யென்று சொன்னேன்!

அ:—எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். குழந்தைக்குப் பாபம் இல்லை, ஆனால் பாதகம் மாத்திரம் உண்டு, என்று தானே ஆகிறது. இதற்கு அர்த்தமென்ன? பாபம் கிடையாதென்றால் அதினால் ஏற்படுகிற பாதகம் மாத்திரம் எப்படியிருக்கலாம்?

ம:—வாஸ்தவம். இப்பொழுது ஏற்படும் பாதகம் இப்பொழுது செய்யப்படும் பிசகின் பலன் என்று நான் சொல்லவேயில்லையே! இப்பேர்ப்பட்ட பெற்றோர்களுக்குக் குழந்தையாய்ப் பிறக்கும்படி ஏற்பட்ட மஹத்தான கர்மாவினுடைய அவாந்தர பலன்களில் இந்தப் பாதகமும் என்று இப்பொழுது பெற்றோர்கள் கவனிக்காமலிருந்தது இந்த துக்கானுபவத்திற்கு ஒரு நிமித்தமே தவிர, ஹேதுவல்ல. எப்படி நெருப்புக்கு ஸமீபத்தில் போவது என்பது சுடுவதற்கு நிமித்தமே தவிர, அத்துக்கத்திற்கு காரணரூபமான கர்மா ஆகாதோ, அதே மாதிரி தெரியாத்தனமாய் நெருப்பைத் தொடுவது காரணம், என்று மறியாக் குழந்தையின் கையில் சூடு என்பது பலன் என்றாவது, பெற்றோர்களின் அஜாக்கிரதை காரணம், யாது மறியாத குழந்தையின் கையில் சூடு என்பது பலன் என்றாவது, பெற்றோர்களின் அஜாக்கிரதை காரணம், யாது மறியாத குழந்தைக்கு வரும் பாதகம் பலன் என்றாவது காரண கார்ய ஸம்பந்தத்தை நாம் கல்பித்தோமேயானால், ஈசுவரனுக்கு கொஞ்சம் கூட எது நியாயம் எது நியாயமல்லவென்ற ஞானமே கிடையாதென்றும், வேண்டுமென்று அவன் க்ரூரனாகவிருக்கக் கூடியவனென்றும் ஏற்படும்.

அ:—வாஸ்தவம் குழந்தைக்கு ஞானமில்லாததினால் இப்பொழுது அதினால் செய்யப்படும் கர்மாவினால் ஏற்படும் பாபம் அதனிடத்தில் ஸம்பந்திக்காது என்றால், முன் ஜன்மங்களில் செய்யப்பட்டிருக்கும் பாபங்களின் பலன்களும் குழந்தைப் பருவத்தில் ஸம்பந்திக்காமலே இருக்கவேண்டியது நியாயமாகாதா?

ம:—அது அவசியமில்லை. பாபம் செய்வதற்கு, இது ஸரி இது பிசகு என்று பகுத்தறியும் சக்தி வேண்டும். பிறந்து சில வருஷங்கள் சென்ற பிறகுதான் அந்த சக்தி ஏற்படுகிறது. பாபத்தின் பலனை அநுபவிக்க, அநுபவிக்கிற சக்தி மாத்திரம் போதும். ஸுக துக்கானுபவ விஷயமான சக்தி குழந்தைக்கு எப்பொழுதுமே உண்டு, கர்ப்பத்திலிருக்கும்போதே உண்டு. அத்துடன் பகுத்தறியக்கூடிய சக்தியும் ஏற்பட்டவுடன், தன் கர்மாக்களுக்குப் பொறுப்பு வஹிக்கும் தன்மையையும் ஏற்பட்டுவிடுகிறது. இந்த சக்தியை உபயோகிக்காமலே அக்ஞானத்தில் இருப்பேன் என்றால் பொறுப்பு நீங்கிவிடாது.

(தொடர்ச்சி 3-பக்கம் பார்க்க).

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 JAN 1939
MADRAS

போதாயனரும் உபவர்ஷரும் ஒருவரா?

(ஒரு மஹாமஹோபாத்யாயர் எழுதுகிறார்)

முன் ஸஞ்சிகையில் நாம் விவரித்தபடி இந்த விசாரத்துக்கு மூலம் தத்வடீகையிலுள்ள வாக்யமே. தத்வடீகையில்

वृत्तिकारोपज्ञं स्वमत (पद) माह—शब्दस्येति। अपिर्दूषण समुच्चयार्थः। अत्र शाबरम्—"गौरित्यत्र कः शब्दः, गकारौकारविसर्जनीया इति भगवानुपवर्षः" इति। वृत्तिकारस्य बोधायनस्यैव हि उपवर्ष इति स्यान्नाम। तदिह पातञ्जलादिप्रोक्तं प्रामाणिकमिति न भ्रमितव्यम्; तेषां बाह्यप्रतिक्षेपार्थं वैभवोक्तेरपि स्यात्, युक्तिविरोधाच्च। स्फोटवादस्यानपेक्षत्वमाह—गकारादेः इति। என்று

நாகா எடிஷன் 431-ம் பக்கத்தில் வாக்யம் இருக்கிறது. தெலுங்குலிபிப்பதிப்பிலும் இதே வாக்யம் தான். ஆனால் स्वपद (मत) माह என்பதே அதில் பாடம். இங்கு "வைபவோக்தேரபி ஸ்யாத்" என்பதில் பஞ்சமீ பொருந்துகிறதா? யுக்தி விரோதத்தை "அயம் பாவ:" என்று மேலே நிரூபிக்கப் போகிறபடியால் "யுக்தி விரோதாச்ச ஸ்ப்போடவாதஸ்ய" என்று அன்வயிப்பது உசிதமல்லவா? "அநபேக்ஷத்வ" மா? "அநபேக்ஷ்யத்வ"மா? இவற்றைக் கவனிக்கும்படி சாஸ்த்ரீய வாக்யசைலி விஜ்ஞர்களை வேண்டிக்கொள்கிறோம்.

நம்ம ஸித்தாந்தத்துக்கு அநுகூலாகக் காட்டப்படும் வ்ருத்திகாரர் போதாயனரன்றோ? [illegible] சொல்லிவிட்டு "உபவர்ஷ:" என்று முடித்தது ஸரியா என்று ஸந்தேஹித்த வித்யார்த்தி, தானாகவோ குருபதேச மூலமாகவோ எழுதிய ஒரு டிப்பணியாயிருக்கலாம் "வ்ருத்திகாரஸ்ய போதாயனஸ்யைவ ஹி உபவர்ஷ இதி ஸ்யாந்நாம" என்கிற வாக்யம். பழைய காலத்தில் ஓலையில் அந்தந்த வரிக்கு மேலேயே டிப்பணி எழுதுவது வழக்கம், பிறகு காலக்ரமத்தில் எழுதுவோரின் பாமர்சக் குறைவால் டிப்பணியும் க்ரந்தத்தில் சேர்த்து விடுவதுண்டு. இதற்கு எவ்வளவோ உதாரணங்களைக் காட்டலாம். இங்கும் இதே மாதிரி டிப்பணி, கிரந்தத்தில் சேர்ந்திருக்கலாமென்று ஊஹிப்பது மிகையாகாது. வித்யார்த்தி சங்கையை ஸ்ரீஸ்வாமியே ஏற்றுக்கொண்டு இந்த வாக்யம் எழுதினதாகக் கொள்வது திருப்திகரமானதா? முதலிலேயே "போதாயனோபஜ்ஞம்" என்றோ "உபவர்ஷோபஜ்ஞம்" என்றோ சொல்லிவிடலாமே! ஸ்ரீஸ்வாமியே கிளப்பிய சங்கைக்குத் தாமே ஸமாதானம் எழுதுவதானால் "ஸ்யாத்" பதத்தை ப்ரயோகிக்கலாமோ? அதை விட்டன்றோ வாக்யம் இருக்கவேண்டும். "ஹி" என்று தொடங்கி "ஸ்யாத்" என்று முடியலாமோ?

ஸ்ரீ பாஷ்யத்தில் "வ்ருத்திகாரர்" என்று வ்யவஹரிக்கப்படுகிறவர் போதாயனரே. மற்றுள்ளோரோ உபவர்ஷரையும் வ்ருத்திகாரர் என்று வ்யவஹரிப்பதுண்டு.

एक आत्मनः शरीरे भावात् என்கிற ஸூத்ரத்தின் ஸ்ரீசங்கர பாஷ்யத்தில் अत एव च भगवतोपवर्षेण प्रथमे तन्त्रे आत्मास्तित्वाभिधानप्रसक्तौ शारीरके वक्ष्याम इत्युद्धारः कृतः" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதே ஸூத்ரத்தின் ச்ருதப்ரகாசிகையில் பாமதகண்டன ப்ரகரணத்தில்

"शारीरके वक्ष्याम इति वृत्तिकारोक्तिस्तु न देहातिरेकमात्राभिप्राया......."

என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில்

" वृत्तिकारोक्तिरिति। शरीरातिरिक्तात्मास्तित्वप्रसक्तौ शारीरके वक्ष्याम इत्युपवर्षवृत्तिकृत उक्तिरित्यर्थः "

என்று பாவப்ரகாசிகையில் காணப்படுகிறது. போதாயனர் ஒருவரே வ்ருத்திகாரர் என்றும், போதாயனரும் உபவர்ஷரும் ஒருவரே என்றும் ஏற்பட்டிருந்தால், பாவப்ரகாசிகை இப்படி வ்யாக்யானம் செய்யவேண்டியதில்லையல்லவா? நாம் கீழே சொல்லியபடி வித்யார்த்திக்கு ஏற்படும் சங்கையையன்றோ இந்த வ்யாக்யானம் நீக்குகிறது. இந்த ச்ருதப்ரகாசிகையைப் போலவே ஸ்ரீஸ்வாமியும், உபவர்ஷரை மனத்தில் வைத்துக்கொண்டு "வ்ருத்திகாரோபஜ்ஞம்." என்று எழுதியிருக்கலாமல்லவா?

" बादरायण आचार्यो मीमांसां शारीरकस्य प्रणिनाय। तस्या उपवर्षाद्याचार्यविनिर्मिता अनेका वृत्तयः सन्ति। तत्राद्वैतपरत्वं न सम्यक् प्रत्यपादि इति मत्वा शंकरभगवत्पूज्यपादाः........... भाष्यं प्राणेषुः "

என்கிற ஸர்வதர்சன கௌமுதியின் வாக்யத்தை (113ம்பக்கம்) கவனித்தால் உபவர்ஷர் அத்வைத பக்ஷபாதி என்று நினைக்க இடம் ஏற்படுகிறது.

இந்த ஸமயத்தில்

" यद्यपि भगवता बादरायणेन इदमर्थान्येव सूत्राणि प्रणीतानि। विवृतानि च तानि परिमितगम्भीरभाषिणा भाष्यकृता। विस्तृतानि च तानि गम्भीरन्यायसागरभाषिणा भगवता श्रीवत्साङ्कमिश्रेणापि तथापि आचार्य टङ्क भर्तृप्रपञ्च भर्तृमित्र भर्तृहरि ब्रह्मदत्त शंकर श्रीवत्साङ्क भास्करादि....

என்கிற வித்யத்ரய வாக்யத்தில் போதாயனரோ உபவர்ஷரோ காணப்படவில்லை என்பதையும், விமர்சகர்கள் ஆலோசிக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறோம்.

"तस्य विंशत्यध्यायनिबद्धस्य मीमांसाशास्त्रस्य कृतकोटिनामधेयं भाष्यं बोधायनेन कृतम्। तत् ग्रन्थबाहुल्यभयादुपेक्ष्य किंचित्संक्षिप्तम् उपवर्षेण कृतम्" என்று ப்ரபஞ்சஹ்ருதயத்தின் 39ம் பக்கத்தில் காணும் வாக்யத்தையும் ஆலோசிக்கவும்.

ஆழ்வார் திருநகரில் ஸநாதனிஸ்ட் அபேக்ஷகர் வெற்றி.

ஸ்ரீ. எம். ஆர். பக்ஷிராஜய்யங்கார் தலைவரானார்.

(நமது விசேஷ நிருபர்).

ஆழ்வார் திருநகரி பஞ்சாயத்து போர்ட் தேர்தலில் மெம்பர் எலக்ஷனிருந்தே விசேஷ போட்டியாரம்பித்துவிட்டது. தேர்தல் தினத்தன்று போலீஸ் பந்தோபஸ்தும் இருந்தது, சம்திங் இன்றி போலிங் ஆபீஸ் வரும் ஓட்டர்களே மிகக் குறைவெனவே சொல்லப்படுவதுடன் பிரபல நவீன தேசிய வாதிகள் சம்பந்தப்பட்டுள்ள வார்டுகளிலேயே பேரும்பணம் விசேஷமாய் நடமாட்டமாயிருப்பதாய்ச் சொல்லப்படுவதும் குறிப்பிடத்தக்கதாம். 10-12-38ல் பிரஸிடெண்ட் தேர்தல் நடைபெற்றது. அங்கத்தினர்கள் பலரும் எங்கெங்கோமாயமாயிருந்து திடீரென மோட்டாரில் ப்ரஸன்னமாயினர். பெரும் போட்டியிருந்தும் ஸ்ரீமான் எம். ஆர். பக்ஷிராஜய்யங்கார் (ஸ தனிஸ்ட்) போட்டியின்றியாவாராலும் ஏ மனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். கோயில் மணியம் போர்ட் பிரஸிடெண்டாய் ஸ்ரீ பட்சிராஜய்யங்கார் வெற்றிபெற்றது பாராட்டத் தக்கதாம்.

கார்யக்கமிட்டிக்கூட்டம்.

மறுபடியும் நூல் சந்தா.

காங்கிரஸ் கார்யக்கமிட்டிக்கூட்டம் வார்தாவில் நடந்தது. அநேக முக்ய விஷயங்கள் யோஜிக்கப்பட்டன.

முக்யமாக காங்கிரஸில் அநேக வேஷதாரிகள் சேர்ந்து சுயநலத்திற்காக பாடுபடுவது அதிகரித்தும் அதன் மூலம் லஞ்சம் முதலான அபாஸங்களும் காங்கிரஸில் பெருகி அதன் மதிப்பு குறைந்து வருவதை முன்னிட்டு காந்திஜி காங்கிரஸ் மெம்பர்களுக்கும் நிர்வாஹிகளுக்கும் அதிக கடுமையான நிபந்தனை விதிக்கும் தீர்மானத்தை செய்யும்படி சிபார்சு செய்தார்.

நிரந்தரமாகக் கதர் உடுத்துகிறவர்களும், 3 வருஷங்கள் காங்கிரஸில் ஸ்தானம் வகித்தவர்களும், நூல் சந்தா, மாகாணக்கமிட்டி குறிப்பிடும் ஊழியம் செய்தவர்களுமே மெம்பாரகவும் நிர்வாஹிகளாயும் இனி இருக்க முடியும்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

அ—அப்படியானால், தெரியாமல் பிசகு செய்கிறவனுக்கும் தெரிந்து பிசகு செய்கிறவனுக்கும் வித்தியாஸமே கிடையாதா?

ம:—உண்டு. ஆனால் அவ்வித்தியாஸத்தை தெரிந்து பிசகு செய்கிறவன் கவனிக்கவேண்டியதே தவிர, அதினால் தெரியாமல் பிசகு செய்கிறவனுக்கு எவ்வித அநுகூலமும் கிடையாது. தெரிந்து பிசகு செய்கிறவனே அதிகக் குற்றவாளி. இதற்காக, தெரிந்து கொள்ளாமலே இருந்துகொண்டு பிசகு செய்கிறவனுக்கு இது ஸமாதானமும் ஆகாது, இதனால் திருப்தியடைந்து விடவும் இடம் இல்லை.

அ:—வேண்டுமென்று ஒருவன் தெரிந்து கொள்ளாமல் இருப்பானா? வேண்டுமென்று தப்பிதம் செய்வானா?

ம.—அப்படி நினைப்பதற்கில்லை. தெரிந்து கொள்ள சக்தி இருந்து, ஞான ஸாதனங்களும் கிட்டக் கூடியதாகவே இருந்து, சொல்லிக் கொடுக்கக் கூடியவர்களும் கிடைக்கக் கூடியதாக இருந்து ஒருவன் தெரிந்து கொள்ளவில்லையானால், அவன் வேண்டுமென்றே ஞான ரஹிதனாக இருக்கிறான் என்பதில் என்ன ஸந்தேஹம்?

அ:—பொதுவாக இது ஸரியே. தர்ம விஷயம் இவ்வளவு ஸுலபமாய் அறியக் கூடியதா?

ம:—ஏன் இல்லை? தீர்க்கதர்சிகளும் மஹரிஷிகளும் இருந்து வந்த பாரம்பரையில் ஜன்மம் எடுத்திருப்பதால், அதிஸூக்ஷ்மமான விஷயங்களைக்கூட க்ரஹிக்க யோக்யதை பெற்று, உங்கள் புத்தி இன்னும் தீக்ஷ்ணமாக இருந்துவருகிறது. இன்னமும் உங்கள் பெற்றோர்கள் உங்களுக்கு உபநயனாதி ஸம்ஸ்காரங்களைச் செய்து வைக்கிறார்கள். பலவிதமாகத் தர்மத்தைப் போதிக்கக் கூடிய கணக்கிலடங்காத கிரந்தங்கள் இன்னமும் பிரசாரத்தில் இருக்கின்றன. நீங்கள் வாயைத் திறந்து கேட்டால், உடனே சொல்லிக் கொடுக்கக்கூடிய யோக்யதை பெற்ற அநேகம் வித்வான்கள் இன்னமும் ஸித்தமாக இருக்கிறார்கள். இவ்வளவெல்லாம் இருக்கும்போது, நான் தெரிந்துகொள்ளாமலே இருப்பேன் என்றால் இது யாருடைய குற்றம்?

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பகுதான்யஸு மார்கழிமீ 7வ

நிலவரித் தீர்மானம்.

சென்ற 14வ நடந்த சென்னை ராஜாங்க ஸபைக்கூட்டத்தில், இம்மாகாணத்தின் முக்ய பிரச்னையாக இருந்துவரும் நிலவரிக் குறைவைப்பற்றி ஓர் பிரேரேபணை கொண்டுவரப்பட்டது. நிலவரியில் 33 சதவீதம் சாச்வதமாகக் குறைத்துவிட வேண்டுமென்று அந்த பிரேரேபணையில் சொல்லப்பட்டிருந்தது, ஆயினும் காங்கிரஸ் கவர்ன்மெண்டார் தங்களது மெஜாரிடி பலத்தால் அந்தத் தீர்மானத்தைக் கவிழ்த்துவிட்டது மிகவும் வருந்தத் தக்கது. தாங்கள் நிலவரி விஷயத்தைப் பற்றி யோஜனைசெய்துவருவதாயும், கூடிய சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கு வரக்கூடுமென்றும் இதற்கிடையில் இந்தத் தீர்மானத்தை ஏற்க முடியாதென்றும் ஸர்க்கார் தரப்பில் காரணம் கூறப்பட்டது.

இது காங்கிரஸ்காரர் நிர்வாஹம் ஏற்ற பிறகு அடிக்கடி சொல்லிவரும் ஒரு பல்லவியேயல்லது வேறல்ல. கேள்வி மூலம் பல தடவைகளில் இந்தப் பிரச்னை எழுப்பப்பட்ட காலங்களிலெல்லாம் இந்தமாதிரியே மந்திரிகள் பதில் சொல்லி வந்திருக்கிறார்கள். இந்த விஷயத்தைப்பற்றி தங்களுடைய நிச்சயமான எண்ணத்தை வெளியிட்டு வியவஸாயிகளின் நீண்டகாலத் துயரத்தை நீக்க நேர்ந்த ஒரு நல்ல ஸந்தர்ப்பத்தையும் இப்போது மெஜாரிடி பலத்தால் கவிழ்த்துவிட்டதிலிருந்து ஜனங்களுக்கு அதிருப்தி அதிகரிக்கவே இடமுண்டாகிவிட்டது. லக்ஷக்கணக்கான மக்களை பாதிக்கும் இந்த முக்ய விஷயத்தில் சென்ற 18-மாதங்களாக எவ்வித நடவடிக்கையும் காங்கிரஸ் மந்திரிகள் எடுக்காதது நியாயமாகுமா? இன்னும் பொறுத்திருக்கும்படி அவர்களைக் கேட்பது எவ்வளவு நேர்மை? காங்கிரஸ் வாதிகள் வெளியில் இருக்கும்போது இம்மாகாணத்தில் நிலவரி பிரச்னைதான் வெகு முக்யமானதென்றும், முதல் முதலாகத் தீர்க்கப்படவேண்டிய விஷயமென்றும் மிராசுதார்களிடம் பசப்பு வார்த்தை சொல்லி வந்தார்கள். முன்னிருந்த நிர்வாஹிகள் இதில் தவறிவிட்டதாக ஆகாயமளாவ எங்குபோனாலும் குற்றம்கூறி ஆர்ப்பாட்டம்செய்து வந்தார்கள். தங்களை சட்ட ஸபைக்கு அனுப்பினால் உடனே இந்த விஷயத்தையே கவனித்து முடிவுசெய்வோமென்று எலெக்ஷன் அறிக்கையிலும், பிரசாரங்களிலும் உறுதி கூறியிருக்கிறார்கள். இந்த நிலைமையில் அதிகாரம் ஏற்ற பிறகு இதை முடிவுசெய்யாமல் மழுப்பிக்கொண்டே வருவது எவ்வளவு தூரம் நியாயமென்று புலப்படவில்லை.

மிராசுதார்களின் நிலைமை நாளுக்கு நாள் கேவலப்பட்டு வருவது பிரத்யக்ஷமானது. அக விலை இறக்கத்தினாலும், விளைவுக்குறைவாலும், அன்னிய தேசப்போட்டியாலும் வியவஸாயத்தொழில் மிகக் கேவலமான நிலைமைக்கு வந்து விட்டது. வயலில் விளைந்ததை விற்று ஸர்க்காருக்கு வரி கட்டி விட்டு சாப்பாட்டுக்குப்பலர் திண்டாடுகிறார்கள். வேறு சிலருக்கு விளையும் நெல் ஸர்க்கார் வரிக்கே போதாமல் கடன் வாங்கி கட்டவேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் எவ்வளவு சீக்கிரத்தில் இந்தக்கஷ்டத்தை நிவர்த்தி செய்ய முடியுமோ அதற்குள் செய்ய வேண்டியது எந்த கவர்ன்மெண்டினுடையவும் கடமையாயிருக்கிறது. பொது ஜன ஆதரவு மிகுந்ததாகப் பெருமை சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் கவர்ன்மெண்டின் கடமையைப்பற்றிக் கேட்பானேன்?

ராஜாங்க ஸபையில் ஸர்க்காருக்குப் பரிந்து பேசிய சில கனவான்கள், மதுவிலக்குத் திட்டத்தால் ஸர்காருக்கு நேரிட்ட நஷ்டத்தைக் குறிப்பிட்டு, இப்போது நிலவரியைக் குறைப்பது ஸாத்தியமில்லையென்று சொன்னார்கள் மதுவிலக்கைவிட நிலவரி விஷயம் இரண்டாம் பக்ஷமென்று அவர்கள் கருதியது அவர்களுடைய கல்நெஞ்சத்தனத்தையே காட்டுகிறது. ஆயினும் மதுவிலக்குக் காரணமாக நிலவரி விஷயத்தைத் தாங்கள் கவனிக்காமல் விட்டுவிடப்போவதில்லை யென்று கனம் ரவின்யூ மந்திரி சொல்லியது சிறிது ஆறுதலைக்கொடுக்கக்கூடியது. நிலவரி பிரச்னை மிக முக்யமாக இருக்கையில் மதுவிலக்குத்திட்டத்தில் இறங்கியதே ஸர்க்காரின் பெரிய தவறுதலாகும். அப்படியிருக்கையில் சேலத்தில் அதை அமலுக்குக் கொண்டு வந்ததுடன் நிற்காமல் வேறு இரண்டு ஜில்லாக்களிலும் அமுலுக்கு கொண்டுவந்து அதிக நஷ்டத்திற்கிடம் பண்ணிக்கொண்டது மந்திரிகளின் தீர்க்காலோசனை யற்ற காரியமே. இதற்காக, பிராணனை இழக்கும் தருவாயிலுள்ள வியவஸாயிகள் பொறுத்துக்காத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று கேட்பது தர்மமா? மது விலக்கு திட்டத்திற்காக நிலவரி விஷயம் காத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று ஏற்பட்டால் இந்த யுகம் முடியும் வரையில் மிராசுதார்களுக்கு விமோசனம் ஏற்பட வழியில்லை.

கனம் ரவின்யூ மந்திரி பேசியதில் கூடிய சீக்கிரத்திலேயே நிலவரி விஷயமாகச்சட்டம் செய்யப்படுமென்று சொல்லியிருக்கிறார். "கூடிய சீக்கிரம்,, என்ற அடைமொழி ஸர்க்காரின் பதில்களில் ஸாதாரணமாகக்காணப்படும் ஒரு வார்த்தையே. அதற்கு ஸர்க்காரின் அகராதியில் ஸங்கேதமான அர்த்தமுமுண்டென்பதை அறியாதவரில்லை. இன்னும் பல வருஷங்களுக்குப் பிறகும் இதைப்பற்றி யோஜித்து வருவதாகச் சொல்லிக்கொள்ள இது இடமளிக்கும். இந்த ஸந்தர்ப்பத்தில் கனம் மந்திரி இன்னும் தெளிவாயும் உறுதியாயும் பேசியிருக்கவேண்டியது அவசியம்.

மேலும் அவர்கள் செய்ய உத்தேசித்துள்ள காரியமென்ன வென்பதையாவது வெளியிட்டிருக்கலாம். முன்னாடியே அதைத் தெரிவித்திருந்தால் பொது ஜனங்கள் அதன் பலாபலனைச் சிந்தித்து அபிப்பிராயம் வெளியிட ஸௌகர்யமாயிருக்கும். இதன்றி சில நாட்கழித்து ஒரு திட்டத்தை வெளிப்படுத்தவும், அதன்மீது நிபுணர் விசாரணை நடத்தவும், அதன்மேல் பொதுஜன அபிப்பிராயம் அறியவும் அவகாசம் கொடுத்துக் காலஹரணம் செய்ய வழிதேடுவது மிகுந்த அபாயமாகும். இவ்வருஷம் உள்ள நிலைமை மிகவும் பயங்கரமாகக் காணப்படுகிறது. ஆகையால் ஸர்க்கார் மற்ற எல்லாக் காரியங்களையும் ஒதுக்கிவைத்து விட்டு இந்த ஒரு முக்ய விஷயத்தையே அடுத்த கிஸ்தி காலத்திற்குள் தாராள மனப்போக்குடன் முடிவுசெய்ய வேண்டியது மிக்க அவசரமாகும்.

குறிப்புகள்.

தண்டனையும், விடுதலையும்.

சென்னை ஸர்க்காரின் பற்பல விநோதக் கொள்கைகளில் மேற்கண்ட விஷயமும் ஒன்றுபோலும். சட்டப்படி குற்றவாளியென்று கோர்ட்டில் விசாரணையில் தீர்மானித்து தண்டனை விதித்த சில நாட்களுக்குள்ளேயே மந்திரிகள் அவர்களை மன்னித்து விடுதலை செய்வது வழக்கமாகிவிட்டது. ஆகவே காங்கிரஸ் ஸர்க்காரில் அரஸ்ட் செய்வதும், கேஸ் நடத்துவதும், தண்டனைவிதிப்பதும், உடனே மன்னித்து விடுதலை செய்வதும் ஒரு தமாஷ் வேடிக்கையாக ஆகிவிட்டதென்று ஜனங்கள் நினைக்க இடமுண்டாகிறது. இதில் ஜனங்களுக்கு ஓர் மதிப்பு ஏற்படாமல் அவக்ஞை ஏற்படவே இடமுண்டாகும். சட்ட, ஸமாதானத்தை நிலைநிறுத்தவும், அதை மீறுவோரைத் தண்டிக்கவும் காங்கிரஸ் ஸர்க்கார் பின் வாங்கமாட்டார்களென்பது உண்மையானால் இம்மாதிரி குற்றவாளிகளை விடுதலை செய்வது நகைப்புக்கு இடமாகும். ஏற்கனவே பாட்லிவாலா போன்ற அநேக அபேத வாதிகளைக் கைது செய்து நியாயஸ்தலத்தில் தண்டித்தும்பிறகு மந்திரிகள் அவர்களை விட்டுவிட்டனர்.

பசுமலை வேலை நிறுத்தத்தில் பலாத்காரத்தில் இறங்கியவர்களையும் தூண்டியவர்களையும்கவர்ன்மெண்டார் கோர்டில் தண்டனைக்குள்ளாக்கினார்கள்: ஆயினும் சில தினங்களுக்குள்ளாகவே அவர்கள் பெரும்பாலும் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் குற்றவாளிகளென்று ருஜுவாகியிருக்கையிலும் அவர்களை விடுவிப்பது நியாயநீதிக்கு ஏற்றதா? இந்த விசித்ரக் கொள்கையின் அர்த்தமென்னவென்று தெரியவில்லை. இம்மாதிரி செய்து கொண்டிருந்தால் குற்றம் புரிவோருக்கு தைர்யமுண்டாகிவிடாதா? சட்டத்தில் அலக்ஷ்ய புத்தி தோன்றாதா? கோர்ட்களில், நீதிபதிகளாயிருந்து தங்கள் கடமையைச் செய்துவருவோருக்கும் இது அதிருப்தியைக் கொடுக்காதா? ஜட்ஜுகள் தண்டனை விதிப்பும், மந்திரிகள் மன்னித்து விடுதலை செய்வதுமாயிருந்தால் ஜட்ஜுகளின் வேலைக்கு மதிப்பு என்ன?

இப்போது ஜீவானந்தம் என்ற அபேதவாதி விடுதலையாகியிருக்கிறார். ஈ. வெ. ராமஸாமி நாயகரை விடுதலை செய்யும் விஷயம் யோஜிக்கப்படுமென்று சட்டஸபையில் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸர்க்காருக்கு மன்னிப்பு அதிகாரமிருப்பது உண்மையே. ஆயினும் அதை எல்லா விஷயத்திலும் உபயோகித்துக்கொண்டிருந்தால் சட்டத்தையும், அமைதியையும், ஸர்க்காரின் மதிப்பையும் நிலைநிறுத்திக்கொள்ளுவது ஸாத்யமாகுமா? அப்படியாகில் ஸாதாரண சட்டப்படி அபராத தண்டனையோ, சரீர தண்டனையோ விதிக்கப்பட்டவர்களையும் ஏன் விடுதலை செய்யக்கூடாது?

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Nellore.

கோள தர்மஸ்தாபன ஸபையின் கேள்விகள்.

ஸமஸ்த மடாதிபதிகளுக்கும் விக்ஞாபநம்.

கோளத்தில் தர்மஸ்தாபனஸபை அங்கத்தினர்கள் கீழ் குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதில் தெரிவிக்குமாறு ஸகல தர்மாசாரியர்களையும் பிரார்த்திக்கிறார்கள்:—

1. வஞ்சிநாட்டில் ஆலயப்பிரவேசம் ஏற்பட்டபிறகு, அந்த தேவாலயங்களில், பதிதர், சண்டாளர், முதலியவர்களுடைய பிரவேசத்தினால் அசுத்தமானது ஏற்பட்டிருப்பதால் அங்கு ஸ்வேச்சையாக பூஜை ஆராதனம், போஜனம் முதலியவை செய்து வரும் யதிகளுக்கு பிராயச்சித்தம் உண்டா? இல்லையா?

2. பிராயச்சித்த முண்டானால் எவ்வளவு காலத்திற்கு முன்பு அதைச் செய்துகொள்ள வேணும்?

3. பிராயச்சித்தம் செய்து கொள்ளும் வரையில் அவர்கள் நிலை யென்ன?

4. ஏற்கனவே அப்படி யிருந்து வருகிறவர்களிடமிருந்து ஸந்யாஸம் பெற்றவர்களின் நிலை யென்ன?

5. மேற்படி தேவாலயங்களில் பூஜை செய்கிறவர்களுக்கு அந்தந்த ஆச்ரமப்படி பிராயசித்த பேதம் உண்டா?

6. பிராயச்சித்த முண்டானால் தோஷத்துடன் பூஜை செய்யப்பட்ட கோவில்களுக்கு எதுவரையில் பிராயச்சித்தம் செய்வது?

7. மேலே சொல்லப்பட்ட ஸன்யாஸிகளுடன் போஜனாதிகள் செய்யுமவர்களுக்கும் சிஷ்யர்கள் முதலியவர்களுக்கும் நிஷ்க்ருதி என்ன?

மேற்கண்ட கேள்விகளுக்கு தயைசெய்து பதில் எழுதவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்?

பிரம்மஸ்ரீ தன்னிப்பள்ளி பரமேசுவரன் நம்பூதிரி, P-O கொடகாரா கொச்சி.

ஹிந்திக் கட்டாயத்துடன் சமபோஜனக் கட்டாயமும் ஆடர்கிறது.

நிர்வாகஸ்தர்கள் அதிக்ரமச் செய்கை.
(நமது விசேஷ நிருபர்).

சென்னை கவர்மெண்டார் கட்டாயஹிந்திபாடம் ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள். அங்கு படிக்கச்செல்லும் மாணவர்களுக்கு ஜாதிமதபேதமின்றி சாப்பாட்டு பாடமும் கற்பிக்கப் படுவதாய் சொல்லப்படுகிறது. கோயம்புத்தூர் ஹிந்தி ட்ரயினிங் ஸ்கூலில் மாணவராய் சென்ற திருச்சி பண்டிட் சிரோமணி அங்குள்ள அதிக்ரமச் செயலைப் பொறுக்கமாட்டால் தமக்கும் ஸ்கூல் நிர்வாகஸ்தருக்கும் நடந்த வாக்குவாதத்தை ஆர்ய தர்மத்தில் பிரசுரித்ததுடன் ஹிந்திப் படிப்பு தேவையில்லையென விடு திரும்பிய விபரத்தையும் குறிப்பிட்டிருந்தது யாவரும் அறிந்ததாகும். ஆழ்வார்திருநகரி ஸ்ரீ என். சுதர்சன ராமாநுஜம் பி. ஏ. ஹிந்தியுடன் ஹாஸ்டல் கட்டாய சமபந்திச் சாப்பாட்டு விபரமும் அறிவிக்கப்பட்டதன் மேல் படிப்புக்குச் செல்லாமல் நின்றுவிட்டதாய் தெரிகிறது. பிரதமமந்திரி இவைகளைக் கவனித்து ஒழுங்குமுறை செய்யாவிடில் காங்கிரஸ் சர்க்காருக்கே குறைவென சொல்லப்படுகிறது.

தமிழ் மாஹாண மஹாநாடு.

டிஸம்பர் 30, 31 தேதிகளில் ராஜபாளையத்தில் தமிழ் மஹாண மஹாநாடு நடத்த நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது அக்கூட்டத்தை ஸ்ரீமான் ஸுபாஸ் சந்திரபோஸ் திறந்துவைப்பாரென்று சொல்லப்படுகிறது.

கடன் நிவாரணச் சட்டமும்.

புரோ நோட்டும்.

சென்னை கடன் நிவாரணச் சட்டத்திற்கு புரோ நோட்டுகள் உள்படக் கூடுமா என்ற சட்ட ஸந்தேஹம் தோன்றியிருப்பதால் ஹைகோர்ட் புல் பெஞ்ச் இதை விசாரித்து வருகிறது. ஸ்ரீமான் டி ஆர் வெங்கடராம சாஸ்திரியார் மேற்படிச் சட்டம் புரோ நோட்டு விஷயத்தில் செல்லுபடியுள்ள தல்லவென்றுவாதித்தார். அட்வகெட் ஜனரல் ஸர்க்கார் தரப்பில் வாதித்தார். பாக்கி வாதமும், தீர்ப்பும் கிறிஸ்த்மஸ் லீவுக்குப் பிறகு வெளியாகும்.

திருவாங்கூர் காங்கிரஸுக்குத் தடை

பலர் மீது ராஜத் வேஷ வழக்கு.

திருவாங்கூருக்கு வைஸ்ராய் வரும் போது ஆர்ப்பபாட்டம் செய்யவும், வேறு கிளர்ச்சி செய்யவும் காங்கிரஸ் முயற்சித்ததால் 2 மாதங்களுக்கு அங்கு அந்தக் கூட்டம் நடத்தக்கூடாதென்று 144வது பிரிவுப்படி உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பலர்மீது ராஜத் வேஷ வழக்கும் நடக்கிறது.

காந்தி மனைவியும் சேருவார்.

ராஜ்கோட்டில் நடக்கும் ராஜீய ஸத்யாக்ரக்கிளர்ச்சியில் காந்திஜியின் மனைவியான கஸ்தூரிபாயும் சேர்ந்து கொள்ளத் தயாராயிருப்பதாக அவர் அறிவித்துள்ளார்.

கடன் ஸமரஸ போர்டுகள்.

சென்னை மாகாணக் கடன் நிவாரணச் சட்டப்படி வரும் வழக்குகளை முடிவு செய்ய இந்த மாகாணத்திலுள்ள ஒவ்வொரு ரவின்யூடிவிஷனிலும் கடன் ஸமரஸ போர்டை அமைக்க ஸர்க்கார் தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சென்னை ராஜீய மஹாநாடு.

முக்யத் தீர்மானங்கள்.

சென்னையில் ஸ்ரீமதி ஸரோஜினியின் தலைமையில் நடந்த ராஜீய மஹாநாட்டில் வழக்கமான சில தீர்மானங்களைத் தவிர வேறு சில முக்யத்தீர்மானங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

பழைய வைஸ்ராயாகிய லார்டு வில்லங்டனின் உருவச்சிலையை அப்புறப்படுத்தவேண்டுமென்றும், கடன் தவணை ஒத்திவைப்பு மசோதாவைக் கொண்டு வந்து 2 வருஷகாலம் கடன் தவணை ஏற்படுத்தும்படியும் ஸர்க்காரைக் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் செய்யப்பட்டன.

சட்ட ஸபையா? சீர்திருத்தக் கூட்டமா?

பம்பாய் சட்ட ஸபையில் மத ஸமூஹ விஷயமான அநேக மசோதாக்கள் கொண்டு வரப்பட்டு அவை கெஜட்டில் பிரசுரமாகியிருக்கின்றன. மறுமணவிவாகத்தடை மசோதா, வயதான புருஷனின் விவாஹத்தடை மசோதா, ஜாதிப் பிரஷ்டத்தடை மசோதா, விவாஹரத்து மசோதா, வரதக்ஷிணைத்தடை மசோதா, மரணச்சடங்குகளில் விருந்து நடத்துவதைத்தடை செய்யும் மசோதா, போன்ற பல சீர்திருத்த மசோதாக்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றனவாம்!

சந்தாதார்களுக்கு முக்ய அறிவிப்பு.

நமது ஆர்யதர்மம் பத்திரிகையின் 23-வது வருஷம் பூர்த்தியாகிறது. இன்றுடன் 48ஸஞ்சிகைகள் வெளிவந்துவிட்டன. அடுத்த ஸஞ்சிகையுடன் இந்த வருஷம் பூர்த்தியாகிவிடுகிறது. ஆதலால் நமது சந்தாதார்கள் இனி வரப்போகிற புதிய வருஷத்திற்கான சந்தாத்துகையை கூடியசீக்கிரத்தில் நமக்கு அனுப்பி, எப்போதும்போல் பத்திரிகையை ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.

அகில இந்திய ஆயுர்வேத மகாநாடு.

28 வது அகில இந்திய ஆயுர்வேத மகாநாடு நாளது 1938ஸு டிஸம்பர்மீ 28, 29, 30, 31 இந்த நான்கு தேதிகளிலும் பம்பாய் நகரத்தில் மிகவும் சிறப்புடன் நடைபெறும். மேற்படி மகா நாட்டிற்கு ஸ்ரீமான் ஆயுர்வேத ஆசாரிய பண்டிட் சிவசர்மா அவர்கள் தலைமை வகிப்பார். இத்துடன் நடக்கும் ஆயுர்வேத அத்யாபக ஸம்மேளனத்திற்கு ஸ்ரீமான் மகாமகோபாத்யாயகணநாத்ஸேன் ஸரஸ்வதி எம், எ. எல். எம். எஸ் அவர்கள் தலைமை வகிப்பார்.

மேற்படி ஆயுர்வேத மகா நாட்டை ஸ்ரீமான் மகாகனம் பொருந்திய பாலகங்காதர கேர பம்பாய் கவர்மெண்ட் பிரதம்ந்திரி அவர்கள் திறந்து வைப்பார். ஆயுர்வேத அத்யாபகஸம்மேளத்தை ஸ்ரீமான் கனம் பொருந்திய கன்யாலால் எம் முன்ஷி, ஹோம் மினிஸ்டர் அவர்கள் திறந்து வைப்பார். இத்துடன் ஆயுர்வேத ஔஷதிகளின் பொருட் காக்ஷி Ehibitionனும் நடைபெறும். எல்லா ஆயுர்வேத வைத்தியர்களையும் ஆயுர்வேதஸம்மேளனத்திற்கு வந்து ஆதரிக்குமாறு பிரார்த்திக்கப்படுகிறது. இதை அகில இந்திய ஆயுர்வேத மகா மண்டலத்தின் உத்திரவுபடி பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க மஹாநாடு.

காசியில் நடைபெறும்.

அகில இந்திய வர்ணாசிரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் 11வது மஹா நாடு காசியில் டிஸம்பர் 27, 28, 29 தேதிகளில் நடைபெறும். இந்திய சட்ட ஸபை மெம்பரான ஸ்ரீமான் பஜோரியா அவர்கள் தலைமை வஹிப்பார். அதையொட்டி வித்வத் பரிஷத்தும் நடைபெறும். பலவிடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் எதிர்பார்க்கப்படுகிறார்களென்று அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்

நாகரலிபியில் மூலமும்,
நாமாவளியும். விலை அணா 0—5—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு
விலை அணா 0—4—0.
தபால்செலவு அணா 0—1—0

வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா.)

யுத்தத்திற்கு தயார்! என்று அமெரிக்கா காங்க்ரஸ் தலைவர் யுத்த தளவாடங்களை விருத்தி செய்து உத்கோஷிக்கிறார். உலக யுத்தம் வந்து அவரவர் நிமிர் அடங்கினாலன்றி சாந்தி இல்லை போலும்!

இரண்டு அதர்மச்சட்டம்!! சமூஹ கஷ்ட நிவாரணமென்ற பெயரால் தார்மிகரை சிக்ஷிக்கவும் ஆலயத்தைக்கெடுக்கவும் இரண்டு சட்டம் செய்து சென்னை மந்திரி ஸந்தோஷிக்கலாம். ஆனால் தார்மிகர் தாபம் வீணாகாது! ஏழை கண்ணீர் கூறியவாளாகும்!!

ஏனலக்ஷியம்? டில்லி சிவாலய ஸத்யாக்ரஹத்தில் ஓர் பெண் கைதி செய்யப்பட்ட அவளா விஷயத்தைக்கவனிக்க இந்திய சட்ட ஸபையை இடங்கேட்ட போது தலைவர் மறுத்தார்! மதாபிமானிகளான ஸபை அங்கத்தினர் மிகக்குறைவென அவரறிவார்!

திறந்த வீடு மதம்! யாரும் எதையும் பேசலாம்! சீர்திருத்துவதாகக் கூறி அதைச் சிதைக்கலாம்! என்ற நிலைக்கு வந்துவிட்டது நமது மதம்! கௌட்யமடத்தில் ஓர் நீதிபதி மதம் தனிப்பட்டவரிஷ்டம்! அது வாதத்திற்கேற்றதில்லை! என்கிறார்!!

மந்த்ர பரீக்ஷை கூடாதா? சுகாதார மசோதாவில் பாம்பு கடிக்கு பரிஹாரமில்லை! பாம்பு கொல்ல சட்டமா? என மந்திரி கேளி செய்கிறார். ப்ரத்யக்ஷமாக மந்த்ர சக்தியாலதை பரிஹரிக்கும் ஸாதுக்களை அழைத்து தக்கவஸதி செய்தல் இந்தியருக்கு, ப்ராமணனுக்குத்தோற்றாதேன்!

கெட்ட வழி காட்டாதீர்; ஐதாபாத்தில் ஸத்யாக்ரஹப்பட்டால் 500 மாணவர்கள் கலாசாலையை விட்டு நீக்கப்பட்டனர். மேனாட்டு நாகரீக மோஹமுள்ளவரை கக்ஷி சண்டை ஓயப்போவதில்லை! பின் வரும் கக்ஷிபாருக்கும் துர்மார்க்கங்களைக் கற்பிக்கும் வகையில் தேசிய ஸபை பல வேலை செய்கிறது!

பெண் புத்தி!! கான்பூர் பெண் ஸபை 35 வயதிற்கு மேல் ஆண்கள் மணம் செய்து கொள்ளக்கூடாது! பெண்களுக்கு எப்போதும் விவாஹ ரத்து செய்து மறுமணம் புரிய அதிகாரம் வேண்டுமென தீர்மானித்தது? ஏனோ?

விருந்து மறியல்! பூனாவில் ஜைனர் மரணவிருந்து கூடாதென ஓர் வீட்டில் மறியல் செய்து பலருக்கு பாகமான பொருளை பாழாக்கினர்!!

ஆஸ்பத்ரி மறியல்! பொள்ளாச்சியில் வைத்யரை நீக்காவிடில் மறியலாம்!

சட்ட மறுப்பு! காசி ராஜாவுக்கு குடிகள் பொறுப்பாக்ஷி கொடாவிடில் சட்ட மறுப்பு துவக்குவோமென அறிவித்திருக்கின்றனர்! அடுத்தபடி?

ஓர் பிரதிக்ஞை! ஐக்ய மாகாண மந்திரி ஓராண்டில் ஒரு வயதானவருக்காவது கல்வி கற்பிப்பதாக ஒவ்வொருவரையும் ப்ரதிக்ஞை செய்யச்சொல்கிறார்! முதலில் சட்ட ஸபை அங்கத்தினர் செய்யட்டும்!

சென்னை 300 வது பிறந்த நாள்!! இதற்கு ஆத்ர ஸம்பந்தி வரமாட்டாராம்!

மாதா கோவில் கூடவா? குஷ்டரோக ஆஸ்பத்ரிக்கும் பணம் நம்முடையது! நிர்வாஹம் பாதிரிமாரது! ஸ்தோத்ர ஹாலங்குமேது வாக கட்டினர். மாதா கோவிலுக்கும் அடிகோலுகின்றனர். நல்ல வேளையாக அருகிலுள்ள ஊர் ஆஸ்திகர் அதை மறுக்கின்றனர்

போதும் கருணை! ஜர்மனியிலிருந்து துரத்தப்பட்ட யூத வைத்யருக்கு உத்யோகந்தர வேண்டுமென தலைவர் கூடி ஐக்ய மாகாண வைத்யர் பலருக்கிடமளித்து பாழானோம்! போதுமன்யர் கொள்ளை என்கின்றனர்.

மந்திரி பதவியே பஞ்சம முன்னேற்றம்! முதற்படியென லக்ஷ்மணபுரி பஞ்சமர் ஒவ்வோர் மாகாணத்திலும் எல்லா மந்திரி பதவியையும் ஏன் தங்களுக்கு கொடுக்கக்கூடாதென கேட்கின்றனர்.

பெற்றோருத்திரவின்றி மணம் கூடாது! என ஸ்காட்லாந்து ஜனங்களுக்காக பார்லிமெண்டில் ஓர் சட்டம் செய்யப்பட்டது. நம்நாடு?

கோயில்நிலக் கொள்ளையா? லக்ஷ்மணபுரியில் கோயில் நிலத்தில் ஒரு பங்களா கட்டப்படுகிறது! அதை ஆக்ஷேபித்து ஸாதுக்கள் ஸத்யாக்ரஹம் செய்கின்றனர்!

அஸாமில் நரபலியாம்! நாகர் எனும் ஜாதியார் 600ரூ விலை கொடுத்து ஓர் அடிமையை வாங்கி நரபலியிடக்கருதுகிறார்கள்.

ஓர் பெரியாரின் ஷஷ்டியப்தபூர்த்தி.

தென்னார்காடு ஜில்லாவில் பிறந்து சீர்காழி தாலுகா குன்னத்தில் வசிக்கும் பிரும்மஸ்ரீ கோதண்டராமய்யர் அவர்கள் அறுபதாமாண்டுப் பூர்த்தியை மிக அபூர்வமான வகையில் நடத்திக்கொண்டார். அவர் பிறந்த நக்ஷத்ரத்தில் அந்த நக்ஷத்ர தேவதை இஷ்டியை விதிப்படி செய்தார். பிரும்மஸ்ரீ ச்ரௌதாதத்தம் ராமனாததீக்ஷிதர் அத்வர்யுவாக இருந்து நடத்தி வைத்தார். அக்னிஹோத்ரம் எப்படி அரிதோ அதேபோல் இந்த முறையும் மிக அபூர்வமாக இருந்தது! உள்ளூர்வாசிகளனைவரும் வந்திருந்தனர். பிரும்மஸ்ரீ வால்மீகிதாஸ, ஜயராம சாஸ்திரிகள் ஸீதாகல்யாண காலக்ஷேபம் செய்தார்.

க. கி.

கும்பகோணம்
ஸ்ரீ சக்ரபாணிஸ்வாமி கோவில்

மின்சாரவிளக்கு விழா.

நமது நகர் ஸ்ரீ சக்ரபாணிஸ்வாமி கோவிலில் ஸ்ரீ விஜயவல்லித் தாயார் ஸன்னிதியில் புதிதாக மின்சார விளக்கேற்றும் விழாவானது ஸ்ரீமான் V. K ருமானுஜாசாரியார் (திவான்பகதூர்) அவர்களின் தலைமையில் நடந்து 17-12-38 இரவு 9மணிக்குஸ்ரீமான் வாதிராஜபாகவதர் B. A. அவர்களால் மீர்தாஸ் என்னும் ஹரிகதா காலக்ஷேபம் நடைபெற்றது. பாகவதர் அவர்களின் கற்பனா சக்தியையும் அகில இந்திய யாத்திரையினால் இப்பால் ஏற்பட்ட பாஷா ஞானத்தையும் அனைவரும் கொண்டாடினர். முடிவில் ஸ்ரீ ஆதி கும்பேசுவரஸ்வாமி கோவில் துரையப்பா குருக்களவர்கள் ஷை பாகவதரும் காலஞ்சென்ற பஞ்சாபகேச பாகவதர், மாங்குடி சிதம்பர பாகவதர் முதலியோரின் எல்லாத்திறமையும் ஒருங்கே இவரிடம் குடிகொண்டிருக்கின்றனவென்றும் ஆகவே வரும் தை மாதத்தில் அவரால் ஸ்ரீவால்மீகி ராமாயண ஸீரிஸ் மகா ஜனங்களின் பேருதவியினாலும் ஒத்துழைப்பினாலும் ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டு வருவதாயும் தெரிவித்தார். ஸ்ரீமான் எம். ராமராவ் ஆபோதித்து மாஸானாம் மார்க்கசீர்ஷோஹம் என்றபடி பகவத் ஸான்னித்யமுள்ள மாதத்திலும் யஸ்யாம் நிசி விஹாதே தேவீ த்ருஷ்டிமந்த்வ நியா என்றபடி லக்ஷ்மியின் முன்னிலையிலும் ஹரி கதை நடந்ததால் பாகவதருக்கு லக்ஷ்மீகடாக்ஷம் நித்தமென்றும் ஹிரண்யகசிபு தன் ஸபாஸ்தம்பத்தில் பகவான் இல்லை என்ற (Negative) ஐயும் ப்ரஹ்லாதன் பகவான் இருக்கிறான் என்ற (Positive) ஐயும் சேர்த்ததால் ஸ்ரீ நரஸிம்மாவதாரம் என்ற எலெக்ட்ரிக் விளக்கு கோடி ஸூர்யப்ரகாசமாய் விளங்கியதினால் மின்சார தத்வம் அக்காலத்திலேயே ப்ரஸித்தமென்றும் கூறினார். இதில் ஈடுபட்ட ஸ்ரீமான் குப்புசாமி ஐயர், தேசிகாசாரியார் முதலியோரின் அரிய ஸேவை பாராட்டத்தக்கது. ஆரம்பத்தில் பிரம்மஸ்ரீ மகாமஹோபாத்யாய காபே ராமச்சந்திராசாரியார் அவர்களின் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு ஷை ஆலயத்தின் திருத்தேரை இழுக்கும் விஷயத்தைப் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

நமது நிருபர்.

கும்பகோணம்.

ஸ்ரீ பாகவத உபந்யாசம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு, ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் மடத்தில் 10-மாத காலமாக விக்கிரவாண்டியம் ப்ரம்மஸ்ரீ கோபால சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீமத் பாகவதம் மிகவும் அழகாயும் கானத்தோடும் உபந்யாஸம் செய்து வருவதை ஜனங்கள் உத்ஸாகத்துடன் வந்து கேட்டு ஆநந்தம் அடைந்து வருகிறார்கள். ஷை பாகவத உபந்யாஸத்தில் சென்ற இரண்டுமாதமாய் தசமஸ்கந்தம் ஆரம்பித்து ரொம்பவும் அத்புதமாயும் கேட்க கேட்க திகட்டாமலும் இருக்கும்படி ஸ்ரீ கோபாலனுடைய அத்புதலீலைகளை உபந்யஸித்து வருவதில் 10-12-38 தினம் ஸ்ரீ கிருஷ்ணன் ராஸக்ரீடை என்னும் கட்டத்தை நன்றாய் உபந்யஸித்து அதன் தத்வார்த்தை சொல்லி அதில் ஏற்படும் சந்தேகம் நன்றாய் நிவர்த்தி அடையும்படி பண்டித பாமர ஜனங்கள் அறியுமாறு உபந்யாஸம் செய்தார்கள்.

அதைக்கேட்டு ஷை பக்த ஜனங்களால் தங்கள் ப்ரீதியை தெரிவித்துக்கொள்வதற்கு அறிகுறியாக 1-பவுன் மெடல் செய்து ஸ்ரீமடம் ஏஜெண்டு / காரியம் மகா-ா-ா-ஸ்ரீ குப்புஸ்வாமி அய்யரவர்கள் மூலமாக பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

அச்சமயத்தில் C. S. தீக்ஷிதர் அவர்கள் ஷை சாஸ்திரிகளுடைய குணநிசயங்களையும் அவர்கள் சொல்திறமையையும் தன்னுடைய அநுபவத்தோடும் கானத்தோடும் சொல்வதைக்கேட்டு ஆநந்தப்பட்டு அதைப் பாராட்டாதவர் யாருமில்லை எனவும் சொல்லி மகா-ா-ா-ஸ்ரீ குப்புஸ்வாமி அய்யர் அவர்களுடைய குணநிசயங்களையும் ஷை அய்யரவர்கள் அரிய பெரிய ஸ்ரீமடம் தர்ம கைங்கர்யத்தில் ஈடுபட்டு இருக்கிறவர்கள் என்றும் அவர்களுடைய தர்ம சிந்தனையைப் பற்றியும் மிகவும் பெருமையில் பேசி அவ்விதம் குணம் பொருந்திய அவர்களால் ஷை சாஸ்திரிகள் அவர்களுக்கு தங்கப் பதக்கம் கொடுத்தது ரொம்ப பொருத்தமென்றும் பேசினதைக் கேட்டு ஜனங்கள் ஏகமனதுடன் கரகோஷத்தோடு தங்கள் திருப்தியைத் தெரிவித்தார்கள்.

ஸ்ரீ ருக்மிணி கல்யாண கட்டம் சமீபத்தில் வருகிறபடியால் ஷை கல்யாண மஹோத்ஸவமானது ஸ்ரீ ஜகத்குரு பரமாசார்யாளின் பரிபூர்ண அநுக்ரஹத்தாலும் பொது ஜனங்களின் உதவியாலும் மிகவும் மேன்மையாகவும் விமர்சையாகவும் நடைபெறவேணுமென்றும் ஸ்ரீமத் ப்ரம்மஸ்ரீ சாஸ்திரிகள், அவர்கள் இவ்விதமே ப்ரவசனம் செய்து வருமாறு அவர்களுக்கு சரீரவலிமையையும் உத்ஸாகத்தையும் அளிக்கவேணுமாய் ஸ்ரீ கோபாலகிருஷ்ணனைப் பிரார்த்திக்கிறோம்.

S. P. வெங்கடராமய்யர்.

ப்ராணயாமம்
அல்லது
ச்வாஸவ்யாயாமம்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

(A. S. தேசிகன், கோடம்பாக்கம்)

நமது வைதிக மார்க்கத்தை அநுஸரித்த ப்ராணயாம நியமங்களுடையவும் தத்துவங்களுடையவும் விவரங்களைத் தெரிந்துகொண்டுள்ள எவரும் இந்த மேனாட்டு வைத்தியப் பத்திரிகை கூறும் இவ்விஷயங்கள் நமக்குப் புதிதானவை என்று நினைக்கமாட்டார்.

இனி இந்த ச்வாஸ வியாயாமத்தினால் எப்படி க்ஷயம் என்ற மிகக் கொடுமையான வியாதியை ஒழிக்கலாம் என்பதைபற்றி சிறிது விசாரிப்போம். திறந்த வெளிகளில், தாராளமான சுத்த வாயு ஸஞ்சாரமுள்ள ப்ரதேசங்களில் வெகுநேரம் வஸித்து, ப்ராணயாமம் முதலிய சிறந்த நியமங்களை அநுஸரித்து ஸாத்தியமானவரையில் இழுத்து ச்வஸித்து உச்வாஸ நிச்வாஸ வேலைகளை ஒழுங்காக நடத்துவதால் க்ஷயரோகிகளுக்கு நன்மையுண்டாகும் என்று அனேக நூற்றாண்டுகளாகச் சாஸ்திரஞ்ஞரால் கருதப்பட்டு வருகிறது. இக்கொள்கைக்குக் காரணம், ப்ராணவாயுவை மிகுதியாகப்பெற சுத்த ஆகாயம் ச்வாசயங்களிற்சென்று, முக்கியமாய் க்ஷயதோஷத்தினால் தாக்கப்பெற்ற அவ்வவயவங்களுக்கும் பொதுவாக அவ்வியாதியால் ஒருவாறு வாட்டப்பட்ட தேஹமுழுதுக்கும் பரிஹார மூண்டுபண்ணுமென்பதேயாம். தற்காலத்திய வைத்திய சாஸ்திரவல்லோர் பலவேறு ஸபைகளில் ஆராய்ச்சிகளைச் செய்து பேசியும், பரிசீலனைகள் செய்து வியாஸங்களாக எழுதியும் இவ்வபிப்ராயத்தைத் தான் முடிவாக வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இப்பொழுது ச்வாஸாசயங்களில் இரத்த ஓட்டம் விசேஷமாக ஏற்படுவதும், ப்ராணவாயு ஏராளமாக ச்வாஸத்தின் மூலமாய் உட்செல்லுவதும் உண்மையில் பலன் தரக்கூடியவைதானோவென்று ஐயமுற்று டாக்டர் லி. லேன், எம். டி. என்கிற மேனாட்டு வைத்திய நிபுணர் ஒருவர் "நியூயார்க் மெடிகல் ஜர்னல்" என்னும் வைத்தியப் பத்திரிகையில் ஒரு வியாஸம் வெளியிட்டிருக்கிறார். அவர் கூறுவது பின்வருமாறு:—

"ப்ராண வாயுவின் (Oxygen) அதிகரிப்பானது க்ஷயரோக நுண்ணுயிர்கள் செழித்தோங்குவதற்கு அநுகூலமான நிலைமையை உண்டாக்குகின்றது. அல்லாமலும் இழுத்து பலமாக ச்வஸிப்பதால் ச்வாஸாசயத்தினுள் விருத்தி அடைந்த ரத்த ஓட்டமானது, க்ஷயரோகக் கிருமிகளிலிருந்து உண்டாகும் கழிவுப் பொருட்கள் அந்த ரத்தவேகத்தினால் எளிதில் உறிஞ்சப்பட்டு உடலெங்கும் தாராளமாகப் பரவுவதற்குப் போதிய ஸௌகர்யத்தையும் உண்டு பண்ணுகிறது. இதனால் ஏற்கனவே, ஆங்காங்கு ஆறியிருந்த சில பாகங்கள் மீண்டும் அழுன்றுபோய் நன்மைக்குப் பதிலாய் தீமை உண்டாக்கப்படுகிறது. வலுக்கட்டாயத்தின்மீது மாம்ஸ பேசிகளை பலமாகத் தூண்டி இழுத்து ச்வாஸ வேலையைச் செய்த பிறகு உடம்பில் சிறிது அதிகமாய் எழும்பும் உஷ்ணமானது கழிவுப் பொருட்கள் அங்ஙனம் உறிஞ்சப்படுவதைக் குறிப்பிடும் முக்கிய லக்ஷணமாம். பலமாய் இழுத்து ச்வஸிப்பதால், புப்புஸாவரண கலையில் இருந்து (Plena) கசிவுநீர் அதிகமாய் உண்டாய், ச்வாஸாசயங்களின் போஷணை அதனால் குறைக்கப்பட்டுவிடுவதோடு, க்ஷயக் கிருமிகளின் கழிவுப்பொருள்கள் தாதுக்களால் உறிஞ்சப்படுவதும் அதிகரிக்கின்றது. க்ஷயரோகப் பற்றுகள் ஈந்த அவயவமும் [illegible] வியாயாம வேலையைச் செய்வதற்கு, அதிலும் வலுக்கட்டாயமான கஸரத்துக்கு யோக்கியமானதல்லவென்றும், இதுவரையிலும் சஸ்திர சிகித்ஸா நிபுணர் அனைவரும் க்ஷயரோகப் பற்றுள்ள அவயவத்திற்கு வேலை யெதுவும் இல்லாமல் அமைதி அவசியம் என்று கூறுகிறார்கள் என்றும் டாக்டர் கார்லெட் என்பவர் ஒரு ஸமயம் விளக்கியிருக்கிறார். இந்த தத்துவம் புப்புஸங்கள் (Lungs) என்கிற இவ்வயவங்களுக்கும் முற்றிலும்ஏற்றதென்பதில் ஐயமில்லை. வலுக்கட்டாயமாய் இழுத்துச் செய்யப்படும் ச்வாஸமும், அவ்விதமான மாம்ஸ பேசிகளின் கஸரத்தும் புப்புஸத்தில் க்ஷயரோக நுண்ணுயிர்களால் உண்டான கழிவுப் பொருள்கள் தாதுக்களில் துரிதமாக ஊறுவதற்குக் காரணமாகின்றன. மேலும் பலாத்காரமாக திடீர் திடீரென்று நீண்ட ச்வாஸத்தை உள்ளுக்கு இழுக்கும்போது, க்ஷயதோஷ ஸம்பந்தமான கபம், புப்புஸத்தினுள் வியாதிப்பற்றில்லாத பாகங்களிலும் செலுத்தப்பட்டு, காலக்கிரமத்தில் ச்வாஸாசயம் முடியவும் வியாதி பரவி, மேன்மேலும் புதிய துர்குணங்கள் செழித்தோங்க அவகாசமுண்டாகும்.

க்ஷயரோகத்தில் ச்வாஸவேலையில், நிச்வாஸத்தின் தோற்றமானது, உச்சுவாஸத்தின் தோற்றத்தினும் நீடித்த வேகமுள்ளதாய் இருக்கும். ச்வாஸவேலை இதற்கு மாறான நிலைமையைப் பெற்றால், அதற்கு முன்பு ச்வாஸாசயத்தினுள் கர்கர் என்று செவிக்குத் தோன்றிய சப்தம் மறைந்து ஆரோக்கிய நிலைமையில் உள்ள அவயவம் போல் அதில் ஓசை முதலியவை தோன்றும், ஏன் எனில் இந்த நிலைமையில் வாயு உள்ளே ஆழமாகச் செல்லுவதில்லை. அதாவது—கபம் முதலியது அடைபட்டுள்ள ப்ரதேசத்திற்குள் அவ்வளவாகப் ப்ரவேசிப்பதில்லை.

ஆகவே கபமுள்ள ப்ரதேசத்தில் வாயு ப்ரவேசிப்பதால் உண்டாகக் கூடிய கர் கர் சப்தம் தோன்றுவதில்லை. ஆகையால் இவையெல்லாம் க்ருத்ரிம ச்வாஸமேயாம். ச்வாஸ வியாமம் என்றால் இயற்கைக்கு மாறாகாத ச்வாஸமேயாம். அதுதான் சிறந்த ச்வாஸ வியாயாமம் ஆகும். இயற்கையான ச்வாஸ க்ரமத்தில் மார்பறை முதலியவற்றின் மாம்ஸ பேசிகளுக்கு அதிக சிரமம் அன்றி தனக்குத்தானே உச்சுவாஸம் சிறிது நீடித்து ச்வாஸ உருப்புக்களின் சொற்ப முயற்சியின் மேல் நடைபெறுவதோடு, நிச்வாஸ வேலை எந்த அவயவத்திற்கும் எவ்வித சிரமமும் அன்றி தானாகவே நடைபெறும். மூச்சு வாங்குவதற்கு நமது பேசிகளின் முயற்சி அவச்யமே. தவிர மூச்சை வெளிவிடுவதற்கு நமது முயற்சி அவசியமில்லையென்பதை ச்வாஸ வியாயாமத்தில் நோக்கமுள்ளவர் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

இருமல் என்பது வெகு பலமான நிச்வாஸ வேலையேயாம். சில ஸமயங்களில் மட்டும் ஒருவாறு உச்சுவாஸ வேலையை நீடித்தும், நிச்வாஸ வேலையை குறுக்கியும் இருமலை நடைபெறச் செய்யலாம். வைத்தியர்கள் வியாதிக்ரஸ்தர்களுக்கு சுபாவத்தை மீறி பலமாக மூச்சுவிடவேண்டிய அவச்யமில்லையென்றும், ஆனால் முக்கியமாக உச்சுவாஸத்தைச் சிறிது நீடித்துச் செய்வதில் மட்டும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும் என்றும், பொதுவில் ச்வாஸ வேலை எவ்விதத்திலும் படபடப்பின்றி பதமையான நிலைமையில் நடைபெறுவது நலம் என்றும் உபதேசித்து வந்தால், ச்வாஸாசயக் கழலையில் (Palmonery Tuber culosis) புப்புஸங்களிற் கண்டுள்ள வியாதி நிதானக் குறிகளைக் கிரமமாக ஆரோக்கிய குறிகளாக மாறக்கூடும். இங்கு குறிப்பிட்டுள்ள வகையில் பிணியாளிகள் தமது ச்வாஸச் செயலை நிலைநிறுத்திச் செய்து வருங்கால், அதாவது ச்வாஸத்திற்காக அவர்கள் பெரும் முயற்சி செய்வதாகப் பிறருக்குத் தோன்றாதபடி அமைதியாக மூச்சுவிட்டு வரும்போது, புப்புஸ தாதுக்களில் இயற்கையில் நடைபெறும் தஹனச் செயல் முதலியவற்றின் மூலமாய் வியாதிக்கு எதிரிடையான காரியங்கள் தோன்ற, அவற்றால் ரோகி மிகவும் பலனடைகின்றான். "தகாத விதமான ச்வாஸ முறைகளை அநுஷ்டித்து வந்தால், பலருடைய ச்வாஸாசயங்களில் அதற்குமுன் உண்டாகாதிருந்த புதிய விஷக் கிருமிகள் ஸம்பந்தித்து, அவற்றின் மூலமாய் அவ்வவயவங்கள் மிகவும் சிதைவுற்றுப் போனதுண்டு. ஆகவே தேஹத்தை ஒழுங்கான நிலைமையில் நிறுத்தி, அமைதியாக ச்வாஸ வியாயாமத்தை நடைபெறச் செய்வதுதான் விவேகமாகும். வியாதிக்ரஸ்தன் நிமிர்ந்துட்கார்ந்து இவ்வியாயாமத்தைச் செய்வதாய் இருந்தால், நல்ல காற்றோட்டமுள்ள ப்ரதேசத்தில் உட்கார்ந்துகொண்டு, காலை போஜனத்திற்குப் பிறகு அரைமணி ஸாவகாசம் கழித்தும், இரவில் படுக்கைக்குப் போவதற்குச் சற்று முன்பும் அதை அநுஷ்டிக்கலாம். படுக்கையிலேயே சயனித்தவாறே ச்வாஸ வியாயாமத்தைச் செய்வதும் உசிதம். அப்பொழுது பிணியாளி தலையணிகளை எல்லாம் எடுத்துவிட்டு மல்லாந்து, கால்முதல் தலைவரையில் உடம்பெல்லாம் ஒரு ஸமமாய் அமர்ந்திருக்குமாறு படுத்துக்கொண்டு இதைச் செய்யவேண்டும்" என்று டாக்டர்லேன் அபிப்ராயப்படுகிறார்.

G. V. கணேச அய்யர், B. A., B. L.,
மொழிபெயர்த்த புஸ்தகங்கள்.

'ஸௌந்தர்ய லஹரீ.'

காபி ஒன்று விலை ரூ. 1—8—0
தபால் சிலவு பிரத்யேகம்.

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
"ஆர்யா சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.
மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால் சிலவு வேறு] [விலை அணு 0—8—0
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு விலை அணு 6.

"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.
மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
தபால் சிலவு வேறு] [விலை அணு 0 8 0

பிரும்மஸ்ரீ அருட்கவி ந. சுப்ரமண்ய அய்யர்,
அவர்கள் எழுதியது.

ஸ்ரீ நகர விமர்சனம்.	0	12	0
ஸ்ரீ குரு விமர்சனம்.	0	5	0
வரிவஸ்யா ரஹஸ்யம்.	1	0	0
ஸ்ரீ லலிதாத்ரிசதீ பாஷ்யம்	1	0	0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தந ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல்ரோடு,
கும்பகோணம்.

யோகசாஸ்திர நிருபணம்.

தசரதர் இராமருக்கு பட்டம்கட்ட முயன்றதும் அதை கூனி தடுத்ததும்.

சித்திர கூடத்திலிருந்து இராமர் இலங்கை வரை போனபோது வழியில் உள்ள சிலமுக்யமான இடங்களுக்கு இந்தியாவிலுள்ள சில இடங்களின் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகள் சரீரத்தில் சிரஸ் முதல் மூலாதாரம் வரையிலுள்ள பாகங்களுக்கு ஒத்துமையாக இருக்கிறது. சிலவிடங்களில் பெயர் ஒத்துமையாக இல்லாவிட்டாலும் அந்த விடங்களைப்பத்திய விபரங்கள் சொல்லி இருப்பது இரண்டிற்கும் பொருத்தமாக இருக்கிறது. உதாரணமாக இராமாயணத்தில் விந்திய பர்வதம் தெற்கு ஸமுத்திரத்திற்கு ஸமீபத்திலிருப்பதாக சொல்லியிருக்கிறது. "விந்திய" என்ற பதத்திற்கு "ஒத்திருக்கிறது" என்று அருத்தமிருப்பதால் "விந்திய பர்வதம்" என்பது சரீரத்தில் மலைக்கு ஒத்திருக்கும் உயரமான பாகத்திற்கும் அந்தப் பெயர் பொருந்தும். ஆகையால் சரீரத்தில் "ஹிருதயம்" உயரமான பாகமாக இருப்பதிலும் விந்திய பர்வதத்தின் ஒரு குகையில் "ஸம்பாதி" என்ற ச்வர்ஸத்தின் சந்திரகலை இருந்ததாகவும் அதற்கு சமீபத்திலுள்ள வேறு குகையில் "ஸ்வயம்பிரபை" என்றவளிருந்ததாகவும் சொல்லியிருப்பதாலும் யோகசாஸ்திரப்படி ஹிருதயத்திலிருக்கிறதாக சொல்லப்பட்ட ஜ்யோதிஸ்ஸு ஸ்வயம்பிரபை என்றதற்கும் ஒத்திருப்பதாலும் விந்தயபர்வத மென்பது ஹிருதய மென்று சொல்ல இடமிருக்கிறது. அதேவிதமாய் கோதாவரிக் கரையில் பஞ்சவடி என்ற ஒரு இடமிருப்பதாயும் அதில் இராமர் சிலகாலம் வஸித்தார் என்றும் சொல்லியிருக்கிறது.

ஆனால் பஞ்சவடி என்பதற்கு வெகுதூரம் தெற்கே விந்தியபர்வதமிருப்பதாக இராமாயணத்தில் சொல்லி இருக்கிறது. ஏனென்றால் பஞ்சவடியில் காணாமல்போன ஸீதையை தேற்கே தேடிப்போன ஹநுமார் முதலானவர்கள் வெகுதூரம் தெற்கேபோய் ஸமுத்திரக்கரைக்கு ஸமீபத்தில் விந்திய பர்வதமிருந்ததாயும் அதின் ஒரு குகையில் ஸம்பாதி இருந்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறது ஆனால் இந்தியாவில் விந்தியபர்வதம் மத்திய இந்தியாவிலும் பஞ்சவடிக்கு சமீபத்திலுள்ள கோதாவரி தெற்கு இந்தியாவிலுமிருக்கிறது. ஆகிலும் விந்தியபர்வதம் என்பதற்கு உயரமான ஹிருதயமென்றும், கோதாவரி என்பது "கோ" கண்ணிலிருந்து "தா" வருகிற "வாரி" ஜலம் என்றும் "பஞ்சவடி" என்பது யோகசாஸ்திரத்தில் சொல்லியபடி ஐந்து விதமான விருத்திகள் உண்டாகிற இடமாகிய சிரசில் கண்களுக்கு சமீபத்திலுள்ள "மனஸ்" சக்கரமாக அருத்தம் பண்ணினால் பஞ்சவடி கோதாவரிக்கு ஸமீபத்திலிருப்பதாக சொன்னதும் பஞ்சவடியில் நடந்ததாக சொல்லிய சரித்திரத்திற்கும் ஒத்திருக்கிறதும் தவிர அதற்கு தெற்கே விந்தியபர்வதமாகிற ஹிருதயமும் அதிலுள்ள ஸ்வயம்பிரபையாகிற "ஜோதிசு"இருப்பதும் சரியாக இருக்கிறது. ஆகையால் இராமாயணத்தில் சொல்லிய இடங்களின் பெயர்களின் அருத்தம்சரீரத்தில் எந்த பாகத்திற்கு பொருத்தமாக இருக்கிறதோ அந்த பாகத்திற்கு இராமாயணத்தில் அந்த இடத்தில் நடந்ததாக சொல்லிய விபரங்களும் ஒத்திருக்கிறது. அதே விதமாக சித்திரகூடத்திற்கு இராமாயணத்தில் சொல்லிய விபரங்கள் புருவங்களின் மத்திக்கு பொருத்தமாக இருக்கிறது.

விராதன்வதம்

சித்ரகூடத்திலிருந்து தண்டகாருண்யத்திற்கு இராமர் ஸீதை இலக்குமணன் மூவரும் போனார்கள் என்றும் வழியில் விருதன் என்ற ராக்ஷஸன் ஸீதையை தூக்கிப்போனதாயும் அவளை விடுவிக்கும்படி இராமரும் இலக்குமணரும் விருதன்பேரில் பாணங்களை போடவும் அவன் ஸீதையை விட்டு விட்டு இராமர் இலக்குமணர் இவர்களை தூக்கிப்போனதும் அவர்கள் அவனை வதம் செய்ததாயும் அவனுக்குப்பின்னும் உயிர் போகாமலிருந்தது கண்டு அவனை குழி வெட்டி புதைத்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறது. "விரோதன்" என்றபதம் "விருதன்" என்று மாற்றப்பட்டிருக்கிறது. விரோதன் யென்பதால் யோக நிஷ்டையை தடை செய்கிற சித்தத்தில் உண்டாகிற கெட்ட விருத்தி என்று அருத்தம் செய்யலாம். மேலும் விருதன் "ஜய" சதஹ்ரதா இவர்களின் புத்திரனாக சொல்லியிருக்கிறது. ஜயா என்றால் தடை என்று அருத்தம். சதஹ்ராதா என்றால் மின்னல் என்று அருத்தம். மின்னல் வெளிச்சமாகிற ஆத்மாவின் ஜோதியை விருத்திமறைப்பதால் விருதனைவிருத்திதானென்று சொல்லலாம். மேலும் விருத்திகளை அமுக்கிவைக்கலாமேயொழிய அதைக் கொல்ல முடியாதாகையால் விருதனை குழியில் புதைத்ததாக சொன்னதும் பொருத்தமாக இருக்கிறது. இராமர் இலக்குமணர் ஸீதை இவர்கள் அத்திரி, சரபங்கர், ஸுதீக்ஷ்ணர் மாண்டுகர்ணி இவர்களின் ஆச்ரமங்களுக்கு போனார்கள் என்பது இராமர் தன் நிஷ்டைக்குத்தடையான கெட்ட விருத்திகளை நான்கு ரிஷி ஆச்ரமங்களாகிற நல்ல நாலு விதமான விருத்திகளால் தடை செய்தார் என்று அருத்தம் செய்யலாம். யோகசாஸ்திரம் முதலாவது பாதம் 33வது ஸூத்திரத்தில் நல்லவிருத்திகளை நாலாக சொல்லியிருக்கிறது அவை மைத்ரி, கருணை, முதிதா. உபேக்ஷா இந்த நல்ல விருத்திகளை பற்றி நினைத்தால் சித்தத்திலிருக்கும் கெட்ட விருத்தியை தடுத்து விடலாம். உதாரணமாக நாம் கோபமாயிருக்கும் போது நமக்கு பிரியமான ஒரு குழந்தை வந்தால் நம்முடைய கோபம் போய்விடுகிறது. கெட்ட விருத்தி போன உடன் நல்ல விருத்தியை நாம் லெகுவாக தடுத்து விடலாம். ஆகையால் விருதனைப் போல உள்ள கெட்ட விருத்திகளை தடுக்க நான்கு நல்ல விருத்திகளாகிற நான்கு ரிஷி ஆச்ரமங்களுக்குப்போனதாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ரிஷி ஆச்ரமங்கள் இந்தியாவிலிருந்தது போல சரீரத்திலுமிருப்பதாக சொல்லலாம். நவகிருகங்கள் ஆகாசத்திலிருப்பது போல சரீரத்திலும் அவைகளுக்கு ஏற்பட்ட பாகங்களிலிருப்பதாக ஜோதிஸ் சாஸ்திரம் சொல்வது போல் ரிஷிகளின் ஆச்ரமங்களும் இந்தியாவிலும் சரீரத்திலும் இருப்பதாக சொன்னது ஸரியே. மேலும் மேலே சொன்னபடி பிருகதாரண்ய உபநிஷத்தில் காது, கண், மூக்கு வாய், இவைகள் ஸப்த ரிஷிகளாக சொல்லப் பட்டிருக்கிறது. என்னுடைய அருத்தத்திற்கு ஆதாரமாக இருக்கிறது.

பிறகு இராமர் அகஸ்த்யர் அகஸத்ய பிருதா இவைகளின் ஆச்ரமங்களுக்குப் போனதும் அகஸ்தியரிடமிருந்து வில்லும் அம்புகளும் வாங்கிக்கொண்டதும்.

அகஸ்தியரை வலது கண்ணும் அவர் பிராதாவை இடது கண்ணும் வைக்க இடமுண்டு. கண்ணை வில்லாகவும் அதன் பார்வையை அம்பாயும் வைத்தால் கண் பார்வை புருவங்களின் மத்தியில் பட்டவுடன் பிராஹ்மத்யானம் ஸித்திப்பதாலும் அப்படி ஸித்திப்பதால் பாபங்கள் அழிக்கப்படுவதாலும் அந்த பாபங்களாகிற இராக்ஷஸர்களை அகஸ்தியருடைய வில்லாகிற கண்ணிலிருந்து வரும் பார்வையாகிற பாணங்களால் இராமர் கொல்ல இடமாகி இருக்கிறது. மேலும் அகஸ்தியரை கண்ணாகச் சொல்ல அடியில் கண்ட காரணங்களிருக்கின்றன. அகஸ்தியர் குடத்திலிருந்து உண்டானதுபோல் கண்ணிருக்கும் குழியும் குடம்போலிருக்கிறது. அகஸ்தியருக்கு இரண்டு ஆச்ரமங்கள் வடக்கே ஒன்றும் அதற்கு தெற்கே ஒன்றுமிருக்கிறதாகச் சொல்லி இருக்கிறபடி கண் பார்வைக்கு வேண்டிய இரண்டு ஸ்தானங்களிருக்கின்றன. ஒன்று இரண்டு கண்களிருக்கும் ஸ்தானம்.மற்றொன்று மூளையில் பார்வை நரம்பு (Optic nerve) போய் சேருமிடம். இவை இரண்டு இடங்களும் நல்ல ஸ்திதியிலிருந்தால்தான் பார்வைக்கு கெடுதல் இராது. மேலும் கண்கள் இரண்டு இருப்பதுபோல் அகஸ்தியர், அகஸ்திய பிருதாவென்று இரண்டுபேர்களிருப்பதாக இராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அகஸ்தியர் வாதாபி என்ற அரக்கனை கொன்றதாக சொல்லி இருக்கிறது. அந்த சரித்திரம் யோகநிஷ்டை செய்யும்போது கண் செய்யும் வேலைக்கு ஒத்திருக்கிறது. வாதாபி இல்வலன் என்று இரு அரக்கர்கள் இருந்ததாயும், அவர்களில் இல்வலன் வாதாபி என்றவனை நறுக்கி கரியாக சமைத்து பிராமணர்களுக்கு விருந்துபண்ணி வைத்து வந்ததாயும், அந்த பிராமணர்கள் சாப்பிட்டஉடன் இல்வன் தன் ஸகோதரனை வாதாபியை வாவென்று அழைத்த உடன் அவன் அந்த பிராமணர்களின் வயிற்றை கிழித்துக் கொண்டு வெளியே வந்ததாயும் அதினால் அநேகம் பிராமணர்கள் கொல்லப்பட்டதாயும். அதேவிதமாய் அகஸ்தியருக்கு விருந்துசெய்த உடன் வாதாபியை அகஸ்தியர் ஜீர்ணம்செய்து கொன்றுவிட்டதாக சொல்லி இருக்கிறது.

வாதாபி என்றது பிருணயாமம் செய்யும் போது சரீரத்திற்குள் போகும் காற்று. பிருணயாமம் கண்ணின் உதவியால் சரியாகச் செய்தால் உள்ளே போகும் காற்று கெடுதல் செய்கிறதில்லை, அப்படிச்செய்யாமல் பிருணயாமம் செய்தால் அது கொன்று விடும். வாதாபியால்அநேகம் பிருமணர்கள் கொல்லப்பட்டார்கள்என்பது பிருணயாமம் சரியாகச் செய்யாமல் இறந்த பிருமணர்களைக்குறிக்கிறது. அகஸ்தியர் வாதாபியைக்கொன்றதாக சொல்லியிருப்பது உசிதமாக இருக்கிறது. பிருணயாமம் செய்யும் பொழுது கண்களின் பார்வை ஒன்று சேர்ந்து புருவங்களின் மத்தியில் விழும்படி செய்து பிருணயாமம் செய்தால் அப்போது உள்ளே போகும் காற்று கெடுதல் செய்கிறதில்லை. அதனால் கண்ணாகிற அகஸ்த்யர் வாதாபியை கொன்றுவிட்டதாக சொல்லியிருப்பது உசிதமாயிருக்கிறது.

S. அய்யாத்துரை அய்யர்.

வே. ஸோ. சர்மவின் பிரசுரங்கள்.

	ரூ.	அ.	ப.
சங்கரோபதேசம்.	2	0	0
பத்ம புராணம்.	0	12	0
மார்கண்டேயபுராணம்	0	6	0
வாமன புராணம்.	0	6	0
வைகுண்ட ஏகாதசி	0	0	6
ஸ்ரீ ஸ்துதிகுஸுமாஞ்சலி	0	1	0
ப்ரஹ்மவைவர்த்தபுராணம்	0	12	0
கூர்மபுராணம்	0	6	0
ப்ரஹ்ம புராணம்	0	12	0

ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

"மாத்வமித்திரன்" ஏகாதசி நிர்ணயம்.

இப்பத்திரிகையின் வால்யூம் 11-செம்பர் 5-பக்கம் 145-முதல் 149-களில் வெளியிடப்பட்ட அபூர்வ ஸம்பாஷணையின் விகடத் திறமையைக் கவனிக்கும்போது ஆனந்த விகடன், பிரசண்ட விகடன் முதலிய சிறந்த பத்திரிகைகளையும் தோற்கடிக்கக்கூடிய ஓர் விகடன் பத்திரிகையையும் திறமையுடன் நடத்தும் சக்தி நமது நண்பர் தேவதத்தனிடம் பூர்ணமாயிருக்கிற தென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. அச்சம்பாஷணை 3-11-38-ல் குடந்தையில் ஸ்ரீ வியாஸராஜமடத்துச் சீடர்களில் 100-க்கு 97-பேர்களால் அனுஷ்டிக்கப்பட்ட ஏகாதசியையும் அதை யொட்டிய ஸம்பவங்களையுமே மறைபொருளாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது 3-11-38 காலை 9-மணி வரையில் எல்லா வியாஸராஜமடத்துச் சீடர்களும் அபிப்பிராய பேதமின்றி பாரம்பரையான ஏகாதசி நிர்ணய ரிகார்டை ஆதாரமாகக்கொண்டு அன்றுதான் ஏகாதசி என நிர்ணயம் செய்திருந்தார்கள். முதல் தபாலில் அவர்களில்ஒருவருக்கு ஸ்ரீரங்கத்திலிருந்து ஒருவரால் தனிப்பட்ட ஹோதாவில் 4-11-38ல் ஏகாதசி என ஓர் கடிதம் வந்ததின்பேரில் அதைப் பரிசீலனைசெய்து அக்கடிதம் கடைசி நிமிஷத்தில் வந்ததாலும் 4-11-38ல் அனுஷ்டிக்கயாதொரு பிரமாணமும் அதில் இல்லாததாலும் அது ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞை யென நிரூபிக்க யாதொரு ருஜுவும் இல்லையாதலாலும் அதைப் பின்பற்றினால் பரம்பரையான ரிகார்டை புறக்கணிக்கவேண்டி வருவதாலும் பெரும்பான்மையோர் 3—11—38லேயே ஏகாதசி செய்தார்கள். கடிதம் பெற்றவர் மாத்திரம் 4—11—38ல் செய்தார். அதைப் பின்பற்றி ஒருவர் அல்லது இருவர் இருக்கலாம். இச்சம்பவம் முழுவதும் ஷை பத்திராதிபருக்கு நேரில் தெரிந்திருந்தும் இச் சம்பாஷணையைப் பிரசுரித்ததிலிருந்து ஸ்ரீ. வியாஸராஜ மடத்து ஸ்ரீ ஸ்வாமிகளிடமும் அம்மடத்துச் சீடர்களிடமும் பொதுவாக வைதிகர்களிடமும் அவர் கொண்டுள்ள மனப்பான்மை நன்கு வெளியாகிறது. ஸ்ரீ வியாஸராஜமடம் ஸ்வாமிகள் "யத்ராதிகா ஸா மதா" என்ற வாக்யத்திற்கு எந்த பஞ்சாங்கத்திலாவது தசமி அதிக நேரம் இருந்துவிட்டால் தசமி வேதம் அனுஷ்டிக்கவேண்டும் என்று கடைசி நிமிஷத்தில் கண்டுகொண்டதாக தேவதத்தன் கூறுவது ஷை ஸ்வாமிகள் வெள்ளிக்கிழமைக்கு ஏகாதசியை மாற்றியதைக் கொண்டு ஊகித்து அறிந்தா, அல்லது அவ்வாறுதான் அர்த்தம்என ஷை ஸ்வாமிகளிடமிருந்து கிடைத்திருக்கும் ஆதாரத்திலிருந்தா என்று கேட்கவேண்டும். ஊகித்து அறிந்திருக்கிறார் என்பதே எனது துணிவு. ஷை வாக்யத்திற்கு குடந்தையில் பிரஸித்திபெற்ற வியாஸராஜமடம் வித்வானான காலம்சென்ற நதீரம் ஆசாரியாரின் புதல்வர் அவரவர் வசிக்கும் ஊரில் பிரசாரத்திலிருக்கும் எந்த ஸித்தாந்த பஞ்சாங்கத்தில் தசமி அதிகமாயிருக்கிறதோ அந்த தசமியை ஏற்க வேண்டும் என்பதே ஸம்பிரதாயமான அர்த்தம் என்கிறார். தேவதத்தன் வியாஸராஜ மடத்துச் சீடரல்ல. என்பது சம்பாஷணையிலிருந்தே வெட்ட வெளிச்சமானதால் பிறருடைய ஸம்பிரதாய அர்த்தத்தையும் வழக்கத்தையும் எப்படி அறிவார்?

அவருடைய அர்த்தத்தின்படி உலகம் முழுவதும் பிரசுரிக்கப்படும் பஞ்சாங்கங்களை வரவழைத்து ஏகாதசி நிர்ணயம் செய்ய வேண்டிவரும். அது ஸாத்யமா? அப்படித்தான் அர்த்தம் என்று ஸ்ரீ ஸ்வாமிகள் சொல்லிவிட்டால் எல்லா சீடர்களும் அதைச் சிரஸால் வகிக்கத் தயார். அம்மாதிரி அவர்கள் ஓர் ஆக்ஞையை பிறப்பிக்கவே தேவதத்தன் நல்லெண்ணத்துடன் எங்கள் ஸ்வாமிகள் ஒன்றையும் காதிற்போட்டுக் கொள்வதில்லை எனக்கூறி யிருக்கிறார் என்றாலும் தேவதத்தன் இவ்வளவு தூரம்வாதத்தில் ஈடுபடவும் இறங்க வேண்டுமா? இது போகட்டும். பத்திராதிபர் குறிப்பில் வியாஸராஜமடத்தார் பலர் ஸ்ரீ ஸ்வாமிகளின் அனுஷ்டானத்தை அறிந்தும்கூட வியாழனன்று உபவாஸம் செய்தனர் என்று சொல்கிறார். அது முற்றிலும் தவறு. ஏனெனில் அவ்வாறு அறிந்துகொள்ளச் சாதனமாயுள்ளது, மேலே பிரஸ்தாபித்த 3—11—38ல் ஒருவருக்கு வந்த கடிதத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அக்கடிதத்தின் ஆதாரத்தைப்பற்றி மேலே விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பாஷ்யதீபிகாசாரியார் முதலிய மூன்று பிருந்தாவனங்கள் வெகு காலமாக நதீரம் ஸம்பிரதாயத்தார்களின் மேற்பார்வையிலேயே இருந்து வருவதால் அந்த சம்பிரதாயமே ஷை பிருந்தாவனங்களுக்கும் 3—11—38ல் அனுஷ்டித்ததுபற்றி இவையெல்லாம் அறிந்த பத்திராதிபர் வருத்தமுறும் காரணம் தெரியவில்லை. இன்னும் அச்சம்பாஷணையில் மறைபொருளாகக் கூறப்பட்ட பல அவதூறுகளை நான் வியாக்யானம் செய்யப்போவதில்லை. இது நிற்க, உத்தாதி மடத்தார்களில்தான் அனேகம் என்று போற்றப்படும் ஆத்யம் போன்ற சுயம் ஆசாரிய புருஷ வகுப்பினரைக் குருவின் அனுஷ்டானத்திற்கு வித்தியாசமாகவும் செய்யலாம் என்று அனுமதி கொடுத்ததாகக் கூறப்படுகிறதே ஒழிய அதே வகுப்பினரில் ஒரு சிலர் 3-11-38லும் மற்றும் சிலர் 4-11-38லும் ஏகாதசி செய்யலாம் என்று அனுமதி தந்ததாக இல்லை. அப்படியிருந்தும் அவர்கள்ஒருவர்க்கொருவர் வித்தியாசமாக அதே ஏகாதசியைக் கொண்டாடினதை நமது தேவதத்தன் இச் சம்பாஷணையில் சொல்லாதது பரோபதேசே பாண்டித்யமா அல்லது அதைப்பற்றி சம்பாஷணையை அடுத்த ஸஞ்சிகையில் வெளியிடுவதற்கா? தெரியவில்லை.

எது எப்படியாயினும் நமது ஸநாதனதர்மமும் பிராம்மண்யமும் ஆலயப் பிரவேசமசோதா முதலியவைகளால் அழிந்துவிடும் போல் இருக்கும் சமயத்தில் பிராமணர்களில் ஒரு வகுப்பினராகிய மாத்வர்களில் ஒரு சாரார், ஓர் ஆதாரத்தைக்கொண்டு செய்ததை அனுவசியமாகக் குறைகூறி, கட்சிப்பிரதி கட்சிகளை வலுப்படுத்தி ஒற்றுமையைக் கெடுக்க தேவதத்தன் எழுதுவதும் ஓர் பொறுப்புள்ள பத்திராதிபர் அதை ஆமோதிப்பதும் அழகல்லவென்றும் இதனை முடிக்கிறேன்.

குறிப்பு:— யத்ராதிகா ஸா மதா என்ற பிரமாணத்தின் ஆனுபூர்வியைச் சரியாகத் தெரிந்து ஸந்தர்ப்பத்தையும் விளக்க வேண்டியதும் அவசியமிருக்கிறது.

ஓர் வியாஸராஜமடத்தார்.

சட்ட ஸபை மெம்பர் விடுதலை.

மதுரை பசுமலை ஆலைவேலை நிறுத்த விஷயமாக ஆறு மாத தண்டனை அடைந்திருந்த சட்ட சபை மெம்பரான ஸ்ரீமான் முத்துராமலிங்கத்தேவர் என்பவரை ஸர்க்கார் விடுதலை செய்து விட்டார்கள்.

அஸ்ஸாம் மந்திரி ஸபை தப்பிப் பிழைத்தது.

அஸ்ஸாமில் காங்கிரஸ் தலைவரின் தலைமையில் ஏற்பட்டுள்ள கூட்டுக்கக்ஷி மந்திரி ஸபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்கொண்டுவரப்பட்டது. ஆனால் அது தோற்றது. நான்கு வோட்டுகள் மந்திரிகளுக்கு அதிகமாக கிடைத்தன. இதைப்பற்றி சிறிது நாளாக அதிகப் பேச்சு நடந்துவந்தது.

"ஹரிஜன்" பெயருக்கு ஆக்ஷேபம்.

சென்னை ராஜாங்க ஸபையில் ஸமூஹக்கஷ்ட நிவாரண மசோதா விவாத காலத்தில் தீண்டாத ஜாதித்தலைவரான திவான்பகதூர் ஆர். ஸ்ரீநிவாஸன் என்பவர், ஷை மசோதாவில் "ஹரிஜன" என்ற வார்த்தையை எடுத்துவிட்டு அதற்குப்பதிலாக "ஆதித்ராவிட" என்ற பதத்தைச் சேர்க்க வேண்டுமென்றும் பிரேரேபித்துப் பேசுகையில், ஹரிஜன் என்று தங்களை அழைப்பது அர்த்தமற்றதென்றும், ஒரு வகுப்பார் "கடவுள் குழந்தை" என்றால் மற்ற வகுப்பார் "சைத்தான் பிள்ளைகளாவென்றும்" ஆதித்திராவிடப் பெயரே சரித்திர மூலகமென்றும் சொன்னார். பிரேரணை தோற்றது.

டெல்லி சிவாலயத் தகராறு.

போலீஸ் கொடுமை. நகரில் ஹர்த்தால்.

டெல்லி சிவாலயத் தகராறு விஷயமாக நடந்துவரும் ஸத்யாக்ரஹத்தை முன்னிட்டு ஆக்ரா ஹிந்து ஸபைக் கார்யதரிசி உபவாஸ ஹடம்செய்து வருகிறார். அவரைப் போலீஸார் எங்கேயோ அப்புறப்படுத்தி ரஹஸ்யமாக வைத்திருக்கிறார்கள்.

இதனால் கோபமடைந்த ஹிந்துக்கள் கடைகளை மூடி ஹர்த்தால் அனுஷ்டிக்கின்றனர். ஷையாரிடன் மனைவியும் இப்போது உபவாஸ விரதத்திலிறங்கி யிருக்கிறாள்.

ஷை ஸத்யாக்ரஹத்தில் மஹம்மதிய ஸ்திரீ போலீஸார், ஹிந்து ஸத்யாக்ரஹஸ்திரீகளை கொடுமையாக நடத்துவதை ஆக்ஷேபித்து இந்தியா சட்ட ஸபையில் பாய் பரமானந்தர் கொண்டுவந்த பிரேரணையை சட்டஸபைத் தலைவர் அனுமதிக்கவில்லை.

ஈ. வி. ரா. விடுதலை?

மறியல் செய்யத் தூண்டிய குற்றத்திற்காக ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட ராமஸாமி நாயகருக்கு "ஏ" வகுப்பு கொடுக்கப்பட்டதாம். கடுங்காவல் வெறுங்காவலாயிற்று. மேலும் அவரை விடுதலை செய்யவும் ஸர்க்கார் யோஜிப்பார்களாம்!

560 ஹிந்து மாணக்கர்கள் தள்ளப்பட்டனர்.

வந்தேமாதர கீதத்தின் விளைவு.

ஹைதராபாத் ஊஸ்மேனியா காலேஜில் உள்ள ஹிந்து மாணவர்கள வந்தேமாதரம் கீதம் பாடக்கூடாதென்ற அதிகாரிகள் செய்த தடையை மீறிய குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று அதிகாரிகள் வற்புறுத்தினர். மாணவர்கள் இதற்கு இணங்காததால் 560 ஹிந்து மாணவர்கள் கலாசாலையிலிருந்து தள்ளப்பட்டு விட்டனர்.

215262

வெளியூர்ச் செய்திகள்.

ஸ்ரீ ரமண ஜயந்தி மஹோத்ஸவம்.

நாளது வெகுதான்ய௵ மார்கழி௴ 22 தேதிக்குச் சரியான 1939௵ ஜனவரி௴ 6௳ வெள்ளிக்கிழமை புனர்வசு நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்தில் வழக்கம் போல் பக்தர்களால் கொண்டாடப்பெறும் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளுடைய ஜயந்தி மஹோத்ஸவ வைபவங்களில் ஸகல அன்பர்களும் கலந்து ஸ்ரீ பகவத் பிரசாதமடைந்தானந்திக்கும் படி வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

நிரஞ்ஜனானந்த ஸ்வாமிகள்.

நாகூர்.

ஸ்ரீ ராதாகல்யாண மகோத்ஸவம்.

நாகபட்டினத்திற்கு சமீபத்திலுள்ள புந்நாகவனம் என்னும் திவ்விய க்ஷேத்திரமாகிய நாகூரில் பெருமாள்கோவில் மேலவீதி மேல அக்கிரகாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ பஜனை மடத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுக்கு ஸ்ரீ ராதா தேவியின் விவாகத்தை பிருந்தாவனத்தில் காந்தர்வ விதியினால் நடத்தின திவ்ய ராதா கல்யாண மகோத்ஸவத்தை பகவத் கிருபையை முன்னிட்டு பகுதான்ய நாம ஸம்வத்ஸரம் தனுர்-௴ 15௳ முதல் 18௳ வரையில் நடத்துவதாய் நிச்சயித்திருக்கிறது. பிராம்மணாஸங்க கட்டிடத்தில் ஷை கல்யாணம் 15௳ நடைபெறும்.

ராம. து. வீராசாமி அய்யன்.

அ. பா. ஸாது ஸம்மேளனம்.

ஸ்ரீ புரி ஜகத்குரு ஸ்வாமிகள் தலைமை வஹிப்பார்கள்.

(ஸ்ரீ மஹந்த் ஸ்ரீ ஸந்த் சான்ஜீ எழுதுகிறார்:-)

அகில பாரதீய ஸாது ஸம்மேளனத்தின் வருஷாந்தர உத்ஸவம் ஸ்ரீ காசியில் 1939௵ ஜனவரி௴ 1, 2, 3 தேதிகளில் நடைபெறும். ஸ்ரீ கோவர்த்தன பீடாதீச்வர ஸ்ரீமத் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமி ஸ்ரீ பாரதீ கிருஷ்ண தீர்த்த ஸ்வாமிகள் தலைமை வஹிப்பார்கள். மற்ற விபரங்களுக்கு வரவேற்பு கமிட்டி காரியதரிசிக்கு எழுதவும்.

சீர்காழி.

ஸீதா கல்யாணம்.

இவ்வூர் நிரஞ்சன வீதி மகா-ள-ள-ஸ்ரீ வக்கீல் ச. வேதாரண்ய அய்யர் அவர்கள் கிருஹத்தில் பிக்ஷாண்டார் கோவில் ஸ்ரீமத் ராமாயண கதாமிருத வர்ஷக பிரசங்க ரத்னம் வேதமூர்த்தி பிரும்மஸ்ரீ பாகவத கௌஸ்துபம் கோபால பாகவதர் அவர்களால் ஸ்ரீமத் ராமாயண ஸீரியல் கதாகாலக்ஷேபம் 14-12-38 புதன்கிழமை முதல் ஆரம்பம் செய்து நடத்தப்பட்டு வருகிறதில் 18-12-38 ஞாயறன்று ஸீதா கல்யாணம் கதை விமர்சையாக நடத்தப்பட்டது. நகரில் உள்ள பிரபல உத்யோகஸ்தர்களும் மற்றுமுள்ள பெரிய மனுஷ்யர்களும் விஜயம் செய்து பெருமையாக ஷை கட்டத்தை நடத்தி வைத்தார்கள். ஷை பாகவதர் அவர்கள் குமாரர்கள் இனிய சங்கீத கானத்தால் யாவரையும் பரவசமடையச்செய்தார்கள். இவ்வூரில் பாகவதர் அவர்களுக்கு ரொம்பவும் நல்ல மதிப்பு ஒரு தினம் விட்டு மறுதினம் கதைகள் நடைபெறும். நமது நிருபர்.

இலந்துறை.

உத்ஸவம்:—இந்த க்ஷேத்ரத்தில் புராண ப்ரஸித்தமாய் வெகு காலமாய் நடந்து வருகிற கார்த்திகைச் செவ்வாய்க் கிழமை உத்ஸவம் இவ்வாண்டிலும் கார்த்திகை௴ 28௳ செவ்வாய்க்கிழமை யன்று மிகவும் சிறப்பாக வழக்கம்போல கோனேரிராஜபுரத்திலிருந்து வந்திருந்த ஸ்வஸ்திவாசன ப்ராம்ஹணர்களின் வேத கோஷத்துடனும், விசேஷமாக உத்ஸவத்திற்காக வரவழைக்கப் பட்டிருந்த திருவீழிமிழலை மேள வாத்யங்களின் இன்னிசை நிறைந்த கச்சேரிகளுடனும், காலையில் ஸ்ரீ விநாயகாதி பஞ்ச மூர்த்திகளும் தத்தம் வாஹனங்களில் திவ்யாலங்காரங்களுடனும் ஆரோஹணித்து வீதியுலாவும், தீர்த்த வாரியும் நடந்தேறிற்று. இரண்டு காலங்களிலும் பஞ்ச மூர்த்திகள் புறப்பாடும், ப்ராஹ்மண ஸந்தர்ப்பணையும் நன்கு நடைபெற்றது.

ஸாயங்காலம் பூஜை ஆனதும் ஸ்ரீ அபிராமி அம்பிகை சந்நிதியில் திப்பிராஜபுரம், ப்ரஹ்ம ஸ்ரீ நாராயண ஸ்வாமி ச்ரௌதிகளால் "தப்ர பக்தோபாக்யானம்" அதாவது சிறுத்தொண்ட நாயனார் சரித்ரம் தகுந்த ஸம்ஸ்கிருத உபமானங்களுடனும் பல தர்ம ஸூக்ஷ்மங்களுடனும் நன்கு விளக்கிக்கேட்டோர் மனம் பகவத் பக்தியிலீடுபடுமாறு மிக அழகாக உபன்யஸிக்கப்பட்டது. உடனே உள்ளூர் பிரம்மஸ்ரீ கங்கா ஜடேச சர்மா அவர்கள் சுருக்கமாக ப்ரஹ்மஸ்ரீ ச்ரௌதிகளது உபன்யாஸத்தை சிலாகித்து விபூதி குங்கும ப்ரஸாதங்களையளித்து மாலை போட்டு ஸ்ரீ ச்ரௌதிகளை உபசரித்தார்கள்.

ஸ்ரீ அபிராமி அம்பிகைக்கு ப்ரம்மஸ்ரீ சர்மா அவர்கள் ப்ரதி வர்ஷத்திலும் இந்த கார்த்திகைச்செவ்வாய் புண்ய காலத்தில் தவறாது ஈச்வர க்ருபையால் நடத்தி வருகிற சந்தனாலங்கார கைங்கர்யத்தை மெச்சாதவர்களில்லை. இத்தகைய திவ்யாலங்காரத்தை எங்கும் கண்டதில்லையென்று ஸேவார்த்திகளனைவரும் கொண்டாடுகிறார்கள். இந்த ஆலய நிர்வாகத்தைக்குறைவற நடத்தி வரும் கோனேரிராஜபுரம் (காலஞ்சென்ற ஸ்ரீமான் எஸ். ராமஸ்வாமி அய்யாவர்கள் பார்யை) மாதுஸ்ரீ ஜானகி அம்மாள் கும்பகோணம் ஸ்ரீமான் வெ. சக்ரபாணி அய்யாவர்களது இடையறு முயற்சி பாராட்டத்தக்கது.

ஆனந்த பரிதன்.

அச்வத்த விவாஹம்.

பவிஷ்யோத்தர புராணத்திய அச்வத்தரூபி பகவான்வடரூபீ ஸதாசிவ: அஷ்டமூர்த்தி: மஹாதேவ: ஸ்தாணு: மிருத்யும் [ஜய: சிவ:

நித்யமச்வத்தரூபேண பூஜ்யதே காங்க்ஷித [பிரத:

என்று இவ்வாறாக அச்வத்தத்தை ஸாக்ஷாத் சிவஸ்வரூபமாக சொல்லி பிறகு ஹரபில்வ: சிவ: நிம்ப: துளஸீ ஸ்யாத்ஸ்ஸரஸ்வதீ என்றதால் நிம்பவிருக்ஷமான வேப்பமரத்தை சிவரூபமாகவும் அதாவது பார்வதி ரூபமாகவும் சொல்லியிருப்பதால் பார்வதி பரமேச்வரனைப்போல் அச்வத்த விருக்ஷத்திற்கும் (பரமசிவனுக்கும்) நிம்பவிருக்ஷமான வேப்பமரத்திற்கும் (பார்வதிக்கும்) உலகத்தில் விவாஹம் செய்துவரும் வழக்கமானது ரொம்பவும் பொருத்தமாகவும் புராண பிரதிபாத்யமாகவுமிருக்கின்றது.

வித்வான் எச். ஸுப்ரம்மண்ய சாஸ்திரி,
ஸ்ரீ சங்கரமடம், கோபி.

சேங்காலிபுரம்.

உபந்யாஸம்.

13-12-38 முதல் 15-12-38 வரையில் இவ்வூர் மகா-ள-ள-ஸ்ரீ கே. என். வெங்கட்டரமணி, மதுரை பிரும்மஸ்ரீ M. N. சுப்பிரமண்ய சாஸ்திரிகள் அவர்கள். பக்தி, கர்ம, தர்மம் இவைகளைப்பற்றி எளிதில் யாவரும் அறிந்து கொள்ளும் படி மூன்று தினங்கள் உபன்யஸித்து வந்தனர். கடைசி தினம் பிரஸங்கபானு கே. வைத்தியநாத சாஸ்திரிகள் அவர்களால் சபையோர்கள் சார்பாக உபந்யாஸருக்கு வந்தனோபசாரம் செலுத்தப்பட்டது. பிறகு 16-12-38 தினம் மகா-ள-ள-ஸ்ரீ வி. பஞ்சாபகேசய்யர் கிரகத்தில் தற்கால நிலைமைபற்றி விவரித்து கூறுகையில் "ஸீர்திருத்தக்காரர்கள் நமது ஸனாதன வர் சிரம தர்மம் யாவற்றையும் அழிக்கவே விரும்புகிறார்கள். அவர்களின் சூழ்ச்சியில் அகப்படாமல் தப்ப பிராம்மணர்கள் முதலானவர்கள் இயன்றளவு ஸனாதன தர்மத்தை உண்மையாக அவலம்பிக்க வேண்டும். தவி நமது தேசத்தை யழிக்கக்கூடிய காப் என்ற கொடிய அரக்கனை அறவே ஒழித்த வேண்டும்" என யாவரும் மெச்சும்படி கூ னார்கள். இம்மாதிரி கிராமங்கள், நகரங்க தோறும் ஸ்வானுஷ்டானத்துடன் கூடி பெரியோர்களை அழைத்துவந்து ஸனாத தர்மங்களை உபந்யஸிக்கும்படி செய்வதுட அனுஷ்டித்தும் வருவோமானால் கூடி சீக்கிரத்தில் யாவரும் ஆஸ்திகோத்தமர்கள வோம். இதில் ஐயமில்லை. நம் தேசமும் சுபிக்ஷமடையும்.

S பாலகிருஷ்ணபட்டாசாரியன்

ஒரு நல்ல பாடம்.

இப்பொழுது வெளி வந்த ஸ்ரீ ராமானு ஸித்தாந்தவைஜயந்தியில், சேட்லூர் ஸ்வா மியின் ஸ்தோத்ரரத்ன பாஷ்ய மொழி பெ யர்ப்பில் இரண்டு ஸ்தலங்களில் தவறுத கள் காட்டப்பட்டிருக்கின்றன. இவை சேட் லூரின் தவறுதல்களே. ஸந்தேஹமே யில்லை "ஸாதம்ய போக" என்று தான் இருக்கவேண்டும். "அப்ருத்தாஸ் ஸர்வக்லேச........" என்பது தான் பாடம். இந்த இரண்டு ஸ்த லங்களிலுள்ள தவறுதல்களையெடுத்துக்காட்டி ஸரியான பாடங்களுக்கு அழகாக வ்யாக் யானமும் செய்து வெளியிட்டிருக்கும் விஷ யத்தில் ஸ்ரீ அண்ணங்கராசாரியாரைப் பா ராட்டுகிறேன். இரண்டாவது ஸ்தலத்தைக்க வனிக்கும் போது "ஸ்வபாவதோ நிரஸ்த லதோஷ:" என்ற ஸ்ரீபாஷ்யத்திற்கு ச்ருதப் ரகாசிகையும் தத்வடீகையும் செய்திருக்கும் வியாக்யான ரீதியையும் பார்க்கும் படி பண்டிதர்களை வேண்டிக்கொள்கிறேன்.

ஒரு ப்ராமாணிக பண்டிதன்.

12-12-38-௵ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

செல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி 48 பட்டணம்படி மூட்டை	3—14-0
ஷை இரண்டாம்தரம் செல்லூர்சம்பா 48 ஷை உள்ள மூட்டை	3—12—0
அரிசி முதல்தரம் வெள்ளைசிறுமணி 48பவுண்டு உள்ள மூட்டை	9—2—0
ஷை இரண்டாம்தரம் செல்லூர்சம்பா 48 பவுண்டு உள்ள மூட்டை	7-12—0
தேங்காய் எண்ணெய் 64 சேர் நிறை	6—0—0

ஷை தாசில்தார்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works Ltd , Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆரியதர்மம்

4 ஸ
23 51

29-12-1938

215263

3rd JAN 1939
MADRAS
215263
674

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்ய-ஞு மார்கழி-மீ 14உ 1938-ஞு டிஸம்பர்-மீ 29உ | ஸ 51

உ

ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

வெளிவந்து விட்டது ! உயர்ந்த புஸ்தகம் !!

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

மூலம் நாகரத்திலும், தமிழிலும்,

ஸ்ரீமான் G. V. கணேசய்யர், B. A., B. L.,
எழுதிய தமிழுரையுடனும், விசேஷ குறிப்புகளுடனும் கூடியது

இதில் அடங்கியுள்ள விஷயங்கள்:—1. ஸ்ரீவித்யை. 2. ஸ்ரீபாஸ்கரராயரும் அவருடைய மஹிமையும். 3. ந்ருஸிம்ஹாநந்தநாதர் பரிபாஷாச்லோகங்கள். 4. பெயர் குறிக்கப்பட்ட க்ரந்தங்கள். 5. பிழை திருத்தம். 6. ஸஹஸ்ரநாம பாஷ்யம் (பூர்வபாகம்). 7. ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம். 8. ஸஹஸ்ரநாமம் உத்தரபாகம் (பலச்ருதி). 9. அகராதி வரிசை. 10. ஸஹஸ்ரநாமம்—நாகரத்தில் மூலம்.

டிம்மி $\frac{1}{8}$ அளவில் சுமார் 1000 பக்கங்கள் கொண்டது
முழு காலிகோ பயிண்டு

ஸ்ரீ அம்பாள், ஸ்ரீ பாஸ்கரராயர்,
ஸ்ரீ சக்ரம் படங்களுடன் கூடியது.

விலை ரூ. 4.] [தபால் V.P.P. சிலவு 0—14—0 தனி.

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனர்தந ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டென்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

தேசிகன் தேன்மொழிகள்.

மதப்பிரசாரம்.

2. சாசுவதமான ஸங்கம்.

அ:—தர்ம விஷயமாக கற்றுக்கொள்ள வேண்டுமென்ற கடமையை மாத்திரம் கவனித்தால் தாங்கள் சொல்வது வாஸ்தவமே. அதேமாதிரி, தெரிந்தவர்களுக்கும் தாங்கள் மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்ற கடமை கிடையாதா?

ம:—அவசியமில்லை. தனக்குத் தெரியவில்லையே என்று உணர்ந்து, தெரிந்துகொள்ளவேண்டுமென்று கேட்கிறவர்களுக்கு மாத்திரம் தான், தெரிந்தவர்கள் சொல்லிக்கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். அக்ஞானமே நல்லதென்று நினைத்துக்கொண்டிருக்கிறவர்களுடைய அக்ஞானத்தைப் போக்கப் பிரயத்னம் செய்யாதது தெரிந்தவர்களின் குற்றமேயாகாது.

அ:—அக்ஞானமே நல்லதென்று எல்லாரும் இருக்கமாட்டார்கள். தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் இருக்கின்றனவென்றே தெரியாத அநேகர்களும் இருக்கிறார்கள். உதாஹரணமாக, அக்னிஹோத்ரம் என்றால் என்ன, ஸோமயாகம் என்றால் என்ன, என்று எத்தனைபேர் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்? இந்த பெயர்களையே காதில் கேட்காதவர்களும் அநேகர் இருக்கிறார்கள். பிராஹ்மணர்களால் செய்யப்படவேண்டியதாய் இதுமாதிரி கர்மாக்கள் உண்டு என்பதையாவது போதிக்கவேண்டியது வைதிகர்களின் கடமையில்லையா?

ம:—நாம் பிராஹ்மண கோஷ்டியில் பிறந்திருக்கிறோமே, நமக்கு ஏற்பட்டிருக்கிற கர்மாக்கள் எவை, என்று தெரிந்துகொள்ள எப்பொழுதாவது இவர்கள் அக்கறைப்பட்டிருப்பது உண்டா? தாங்களும் பிராஹ்மணர் என்று மாத்திரம் சொல்லிக்கொண்டு, தங்கள் பிராஹ்மண தர்மம் என்னவென்று வேறு பிராஹ்மணர்கள் தங்களுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டு மென்றல்லவா இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்? தெரிந்துகொள்ள கொஞ்சமேனும் பிரயத்னம் செய்யாமலிருந்துகொண்டு இவ்விதம் எதிர்பார்ப்பது என்ன நியாயம்? அக்னிஹோத்ரம் முதலிய விசேஷ கர்மாக்களைத் தூரவையுங்கள். வெறும் மூடனுக்குக்கூட, பொய் சொன்னால் பாபம் என்று தெரியுமல்லவா? இதையும் சொல்லிக்கொடுக்க ஓர் ஆசார்யர் வேண்டுமா?

அ:—வேண்டாம்.

ம:—பொய் சொல்வது பாபம் என்று தெரிந்து கொண்டிருக்கிறவர்கள் யாரும் பொய் சொல்கிறதில்லை என்று ஏதேனும் நியமம் உண்டா?

அ:—அப்படிச் சொல்வதற்கில்லை தான்

ம:—பொய் சொலவது பாபம் என்று தெரிந்திருந்தும், ஜனங்கள் பொய் சொல்லிக்கொண்டே யிருக்கிறார்களல்லவா?

அ.—ஆம். அநேகம் பேர் அப்படித்தான் இருக்கிறார்கள்.

ம:—அவர்கள் பொய் சொல்வதற்குக் காரணம், பொய் சொல்வது பாபம் என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்ல மனுஷியர்கள் இல்லை யென்பது இல்லை. ஏனென்றால் இவ்விஷயம் அவர்களுக்கே தெரிந்தது.

அ:—வாஸ்தவம்.

ம:—இவ்விதம், தான் செய்கிறது பாபம் என்று தெரிந்திருந்தும் மனப்பூர்வமாய் அப்பாபத்தைச் செய்யத் துணிந்திருக்கும் ஜனங்களுக்கு, அவர்கள் செய்யும் இன்னம் அநேக கார்யங்களும் பாபமே என்று மற்றவர்கள் சொல்லிக்கொடுக்கவில்லையே யென்கிறீர்கள். இதையும் சொல்லிக் கொடுத்துவிட்டதற்காக, அவர்கள் தங்கள் நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ளப் போகிறதில்லை. இப்பொழுது தெரியாமல் பாபம் செய்கிறார்கள், அப்புறம் தெரிந்து பாபம் செய்வார்கள். இதுதான் வித்யாஸம்.

அ:—ஆகையால் அவர்கள் தெரிந்துகொள்ளாமலிருப்பதே க்ஷேமம் என்று கருதுகிறீர்கள்?

ம:—அப்படியல்ல. முன் சொன்னபடி தெரிந்துகொள்ளவேண்டிய கடமை அவர்களையே சேர்ந்தது. வேறு யாரோ சொல்லிக்கொடுக்கவில்லை, ஆகையால் நான் அக்ஞானியாயிருக்கிறேன், என்ற ஸமாதானத்திற்கு இடமில்லை.

அ:—எப்படியும், இத் தேசத்தில் இப்பொழுது தர்ம விஷயமாயுள்ள அக்ஞானத்தைப் போக்கடிக்க, தக்க ஏற்பாட்டுடன் ஒரு பிரசாரம் செய்யவேண்டியது அவசியமென்றே தோன்றுகிறது.

ம:—ஏற்பாட்டுடன் பிரசாரம் என்றால் என்ன?

அ:—மத விஷயமான அறிவு பரவுவதற்காக ஒரு ஸங்கம் ஏற்படுத்தியும், எல்லா முக்கியமான நகரங்களிலும், கிராமங்களிலும் வேலை செய்யக்கூடிய கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்தியும், அங்கங்கே வேலை செய்வதற்குத் தக்க மனிதர்களை நியமித்தும் பிரசாரம் செய்யலாம்.

ம:—மேற்பார்வைக்கு ஒரு நிர்வாஹ ஸபை, அங்கத்தினர் செலுத்த வேண்டிய சந்தா விபரம், அவர்களுக்குள் அபிப்பிராய பேதம் வந்தால் தீர்மானிக்கிற வழி, அபிப்பிராயம் கொடுக்கிறவர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு ஒரு தீர்மானத்திற்கு வருதல், முதலான அம்சங்கள் எல்லாம் இருக்கத்தானே வேண்டும்?

அ:—ஸங்கம் என்றால் எல்லா அம்சங்களும் அவசியம் தானே?

ம:—ஸங்கத்தில் புதிதாகச் சேரவிரும்புகிறவர்களைச்சேர்க்கவா, வேண்டாமாவென்ற அதிகாரம் ஸங்கத்தைத் தொடங்கிய மனுஷியர்களைச் சேர்ந்தது. ஸங்கத்தையே நடத்திவைக்க யோக்கியதை பெற்றவராயிருந்தாலும் சந்தாத்தொகை கொடுக்க சக்தியற்றிருந்தால் அவரை ஸங்கத்தில் சேர்த்துக்கொள்ள முடியாதென்றும் வரும் அல்லவா?

அ:—அவ்வித யோக்கியதை பெற்றவர்களுக்கு சந்தா இல்லையென்று வைத்து விடலாம்?

ம:—வைக்கலாம். ஆனாலும் அவர்கள் ஸங்கத்தில் சேருவது இதரர்களின் அனுமதியின் பேரிலேயே பொறுத்த, அவர்களுடைய யோக்கியதையை மாத்திரம் பொறுத்ததல்ல.

அ:—அது அப்படித்தான்.

ம:—இது இப்படியிருக்கட்டும். யோக்கியதையுள்ளவர்கள், மற்றது எதையும் எதிர்பாராமல், தன் யோக்கியதையின் பலத்தினாலேயே, ஏற்கனவே அங்கத்தினராயிருப்பவர்களின் அனுமதியை அபேக்ஷிக்காமலே, அங்கத்தினராகக் கூடியதாயும், உள்ளே பிரவேசம் யோக்கியதையையே வைத்தே தவிர பிரவேசக் கட்டணத்தைப் பொறுத்திராமலும், யாரும் சந்தாத் தொகை செலுத்த வேண்டிய அவசியமில்லாமலும், எக்கார்யமும் ஸரி அல்லது தப்பு என்று தர்மம் என்ற ஒரே கலப்பற்ற மாற்றத்தகாத நிலையிலிருந்தே தீர்மானிக்கப்படுமே தவிர அந்தந்தக் காலத்திலுள்ள அங்கத்தினர்கள் எவ்வளவு நல்ல எண்ணத்துடனிருந்தாலும் மாறக்கூடியதான அவர்களுடைய மனோபாவங்களைக் கணக்கிட்டு எண்ணிக்கை ஜாஸ்தியை வைத்துத் தீர்மானிக்கப்படாமலும், எந்தக் காரணத்தையிட்டும் யாராலும் உலைத்துவிடவாவது முடித்துவிடவாவது ஸாத்தியப்படாமலும், ஒரு ஸங்கம் இருக்குமேயானால் அந்த ஸங்கம் நீங்கள் சொல்லும் ஸங்கத்தைவிட ஸ்வாபாவிகமாயும், ஸ்தாயியாயும், உபயோகமுள்ளதாயும், நடக்கக் கூடியதாயும், இருக்குமல்லவா?

அ:—இருக்கும்தான். ஆனால் அப்படி ஒரு ஸங்கம் மனிதனால் கற்பித்துக்கொள்ளலாமே தவிர கார்யத்தில் காணமுடியுமா?

ம:—நிச்சயமாய் முடியும். நம் பிராஹ்மண ஸமூஹம் என்பது நான் சொல்லிவந்த ஸங்க லக்ஷணம் பொருந்தியதல்லவா? வாஸ்தவத்தில், நம் தேசத்திலுள்ள ஒவ்வொரு ஜாதி ஸமூஹங்களும் இவ்விதமாய்த் தங்கள் தங்கள்கார்யங்களைப் பாதுகாத்துக்கொள்ளக் கூடிய அடக்கமான ஸங்கங்களேயாகும். இந்த ஜாதி ஸமூஹங்களையெல்லாம் தனக்கு அம்சங்களாக அல்லது கிளைகளாக உடைய பெரிய ஸங்கமே ஹிந்துக்களின் ஜாதிக்கட்டுப்பாடு ஆகும். அந்த ஸங்கங்களில் பிரவேசிப்பது யாரோ ஒருவனுடைய அபிப்பிராயத்தைப் பொருத்ததல்ல. முன் ஜன்மங்களில் ஸம்பாதிக்கப்பட்ட யோக்கியதைகளுக்குத் தக்கபடி அந்தந்த ஸமூஹத்தில் ஜனனம் கொடுத்து ஸர்வக்ஞனான ஈசுவரனே ஸமூஹத்தில் பிரவேசம் செய்துவைக்கும் பொறுப்பை வஹிக்கிறார். ஸங்கத்திற்குள்ள சட்ட திட்டங்கள் ஏற்கனவே அனாதிஸித்தமாக ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் ஸந்தேஹத்திற்காவது மாறுதலுக்காவது இடமில்லை. மனிதனால் கற்பிக்கப்பட்டவைகளான ஸங்கங்களிலல்லவா சட்டதிட்டங்கள் பிரதிநிமிஷம் மாறிக்கொண்டேயிருக்கும்?

அ:—உதாஹரணமாக நம் பிராஹ்மண ஸமூஹத்தையே எடுத்துப் பார்த்தாலும், தாங்கள் சொல்லுகிறபடி அதையும் ஒரு ஸங்கமென்று பாவித்தால், கட்டுப்பாடுள்ள ஸங்கம் செய்யவேண்டிய பொதுக் கார்யங்களை அதுகொண்டு செலுத்த சக்தியற்று நிற்கிறதே, அதற்கு என்ன காரணம்?

ம:—உங்கள் நவீன ஸங்கங்களையே கவனிப்போம். அதிலுள்ள அங்கத்தினர் தன் ஸ்வயநலத்தை மாத்திரம் கருதி, அதற்கே பிரதான்யம் கொடுத்து, அதற்கு விரோதமாய் ஸங்கவிதிகள் இருந்தாலும் இருப்பதாய்த்தோன்றினாலும் அவைகளைமீறி நடக்க ஸித்தமாய் இருந்தால், எந்த ஸங்கமாவது எவ்விதப் பிரயோஜனமுள்ள கார்யத்தையாவது செய்ய முடியுமா?

அ:—எப்படி முடியும்? இப்படி அங்கத்தினர் ஆரம்பித்துவிட்டால் ஸங்கமே அஸ்திவாரத்தில் இல்லாமல் போய்விடும்.

ம:—வாஸ்தவம். அதேமாதிரி, ஒவ்வொரு பிராஹ்மணரும் பொதுவாக ஒவ்வொரு மனிதனும் தன் தன் சொந்த மனோபாவங்களையும் நோக்கங்களையும் உள்ளடக்கிக்கொண்டு, பிராஹ்மணர் அல்லது வேறு ஸமூஹத்தார் என்ற முறையில் தனக்குள்ள கடமைகளைச் செலுத்தவேண்டுமென்று உணர்ந்தால் தான் ஸமூஹத்திற்கு உபயோகப் படுவார்கள். ஆகையால் நம் தேசம் தற்காலம் கஷ்டப்படுவது கட்டுப்பாடுள்ள ஸங்கங்கள் இல்லாததினால் அல்ல. நம் ஸங்கத்தைவிட சிலாக்கியமான ஸங்கம் ஒன்றை மனிதனால் கூட கற்பிக்க முடியாது. அதன் விதிகளின்படி நடக்கத் தயாராயிருக்கிற அங்கத்தினர்கள் குறை. அவ்வங்கத்தினர்களின் ஸங்க்யையை ஜாஸ்திப்படுத்த பிரயத்னம் செய்யுங்கள். ஸமூஹம் வர வர பலப்படும். யாராலும் தாக்கமுடியாமலிருக்கும். உங்கள் பிரயத்னம் எல்லாம் இவ்வழியில் செல்லவேண்டும். புதிதாக நிலையற்ற ஸங்கங்களை ஏற்படுத்த அவசியமுமில்லை. உங்கள் உத்தேசத்தை அவை நிறைவேற்றிக் கொடுக்கவும் பிரயோஜனப்படா. (தொடரும்)

OFFICE 3rd JAN 1939 MADRAS

नीतिनिबन्धने (द्वितीयं दलं)

(by T. S. Vaidyanatha Sastrial)

கொன்றைவேந்தன்.

காப்பு

கொன்றை வேந்தன் செல்வன்
அடியிணை என்றும்
ஏத்தித் தொழுவோம் யாமே.

शम्याक कुसुमशेखरशङ्कर सर्वस्वसंपदः सततं ।
कुञ्जरवदनस्य नुमः पङ्कज सब्रह्मचारि चरणयुगं ॥

Let us worship forever the Lotus-like et of Lord Ganesa, the elephant faced od, the worthy son of Lord Sankara lorned with 'Samyaka' (கொன்றை) flowers

1 அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்
2 ஆலயம் தொழுவது சாலவும் நன்று
3 இல்லறம் அல்லது நல்லறம் அன்று
4 ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்

प्रथमं वेद्यौ पितरौ देवौ
आलयसेवा नितरां श्लाघ्या ।
नान्यो धर्मो गृहिणो धर्माद्
अर्थं मदातुः दस्युर्भुङ्क्ते ॥

Parents should be Primarily considered as Gods.

Temple worship is most beneficial.

No other walk of life is better than married life.

Miser's property will be stolen away by thieves.

5 உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு.
6 ஊருடன் பகைக்கின்வேருடன் கெடும்.
7 எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
8 ஏவாமக்கள் மூவா மருந்து.

भोजन संहतिरबलाभरणं
जनता वैरे मूलाघातः ।
गणितं व्याकरणं नेत्रयुगं
पुत्रोऽमृतमिह पितुरनुकूलः ॥

Moderation in eating is an ornament to woman.

He spoils himself wholly who creates enmity with the Public.

Arithmetic and grammar are considered to be two eyes.

Unguided children are the Nector to their parents.

9 ஐயம் புகினும் செய்வன செய்.
10 ஒருவனைப்பற்றி ஓரகத்திரு.
11 ஓதலின் நன்றே வேதியர்க்கொழுக்கம்.
12 ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கழிவு.

याच्ञायामपि विहितं कार्यं
देशे वस सन्मित्रालम्बी ।
शीलं श्रेयो वेदाध्ययनात्
ईर्ष्यावादे द्रव्यविनाशः ॥

Do your duty though you are begging.

Choose a good friend and live there with him.

Conduct is better than knowledge of scriptures.

Jealousy in speech decays wealth.

13 அஃகமும் காசும் சிக்கெனத்தேடு.
14 கற்பெனப்படுவது சொற்திறம்பாமை.
15 காவல் தானே பாவையர்க்கழகு.
16 கிட்டாதாயின் வெட்டெனமற.

धनधान्यं संचिनुयात्त्वरितं
पातिव्रत्यं पति वाक्करणं ।
रक्षा भूषा कुलवनितानां
लभ्यं नो यदि विस्मर्तव्यं ॥

தர்மரக்ஷணம்.

காலம் விசேஷமாக மாறிவருகின்றது. ஒவ்வொரு ஸ்தாபகமும் எதற்காக ஆதியில் ஏற்படுத்தப் பெற்றதோ அக்கொள்கையை இடைவிடாது நிறைவேற்றி வந்தாலன்றி நாடு நலம் உறுதல் எளிதன்று. தர்மமும் குன்றுதல் வியப்பல்ல. இச்செந்தமிழ்நாடு பழைய உன்னத நிலையை மறுபடி அடைய வேண்டுமாயின் இங்குள்ள பல்வேறு மடாதிபதிகள் முன்போல வேண்டிய முயற்சி எடுத்துக்கொண்டு அவரவரிடம் பணிந்து நிற்கும் சிஷ்ய வர்க்கங்களுக்கு வேண்டிய ஹிதோபதேசம் செய்து நாட்டை உய்விக்க வேண்டியது மிகவும் அத்யாவசியகம் என்னத்தட்டில்லை இதனால் அப்பெரியோர்களை எள்ளளவேனும் குறைகூறியதாக நினைக்கலாகாது. கவர்ன்மெண்டார் மடங்கள் முதலிய ஸ்தாபனங்களை இல்லாமற் செய்ய வேண்டிய ஏற்பாடு செய்யுமுன் இவர்களே விழித்தெழுந்து முன் ஜாக்ரதையுடன் நல்லுதவி செய்யின் நனிநலம். இன்றேல் பின்னர் வருந்துவதிற்பயனில்லை. சிஷ்யர்கள் பலருக்கு விசேஷ அதிருப்தி உண்டாகக் கூடிய நிலையில் நடந்துவருவதில் அல்லல்தான் அநேகம். ஆசார்யப்ரதிபத்தி முற்றும் கெடாமுன் சீர்திருத்தத்தைத் தாங்களே செய்து கொண்டு தர்ம ரக்ஷணம்செய்வரேல் எவராலும் எவ்வித் தீங்கும் இழைக்க இயலாது. தற்போது மடங்களின் லௌகிக வைதிக வ்யாபார நிலை அவ்வளவு சிறப்பாயில்லை என்பதை ஒருவரும் அபலாபம் செய்யமுடியாதென்பதைம் திண்ணம். நாட்டின் முன்னேற்றத்துக்கு நல்லுடையார் நன்கு உழைப்பாராக.

பரோ திருமலை அய்யங்கார்.

மதமே சகல நன்மைகளையும் கொடுக்கக்கூடியது.

ஆசிரியர் ராதாகிருஷ்ணன் வார்தாவில் கல்வியைப்பற்றிப்பேசுகையில், மதமே சகல க்ஷேமங்களுக்கும் மூலமென்று, கல்வி, அரசியல், பொருளாதாரம், ஆகிய எல்லா க்ஷேமங்களுக்கும் மதமே அடிப்படையென்றும், மத மூலமாகவே உலகத்தில் மிருகபலத்தின் சக்தி ஒழியுமென்றும் சொன்னார்.

டாக்டர் ரவீந்திர நாதர் பேசுகையில், மேற்றிசைகளில் தோன்றியிருக்கும் யூதர் துன்பமானது, மனித ஸமூஹத்தினிடம் காட்ட வேண்டிய அன்புஇல்லாத காரணத்தாலேயே ஏற்பட்டதென்றும்,மத விச்வாஸம்இருந்தால் தான் அந்த அன்பு ஏற்படு மென்றும், மதம் தான் ஸரியான வரையறைகளை ஏற்படுத்தக் கூடியதென்றும் சொன்னார். மத விரோதிகள் இதை கவனிக்கட்டும்.

வந்தேமாதரத்தகராறு.

டாக்காவில் விவாதம்.

டாக்கர் வைத்ய கலாசாலையின் வருஷ விழாவில் ஹிந்து மாணவர்கள் வந்தேமாதா கீதத்தைப்பாடினார்கள். முஸ்லீம் மாணவர்கள் இதை ஆக்ஷேபித்து கூச்சல் போட்டார்கள். அதிகாரிகள் தலையிட்டு வந்தேமாதரம் கூடாதென்றனர். ஆனால் ஹிந்து மாணவர்கள் அதற்கு உள்பட முடியாதென்று கூறி வந்தேமாதா கீதத்துடன்வெளியேறிச்சென்றார்கள்.

Earn quickly grain and wealth

Chastity is but implicit obedience to her husband's words.

Beauty to woman is her capacity to to protect her own morality.

Aspire not what you cannot get.

அகில இந்திய வர்ணாச்ரம மஹாநாடு.

காசியில்குதூஹலத்துடன் ஆரம்பம்.

3 மைல் நீண்ட ஊர்வலம்.

, காசி டிஸம்பர் 27உ

ஸ்ரீமான் வி. வி. ராமன் தந்திமூலம் அறிவிக்கிறார்.

11 வது வர்ணாச்ரம சபைக் கூட்டம் இன்று சாயங்காலம் ஆரம்பம் ஆகிறது. சபைத் தலைவர், விஜயனுத் பெஜ்யோர்யாவும், கார்யத் தலைவர் ராவ்சாஹிப் நடேசய்யரும், 16 குதிரைகள் பூட்டிய ரதத்தில், 8 யானைகள் 100 குதிரைகள் புடை சூழ அதிவிமரிசையாய் ஊர்வலமாய் அழைத்துச் செல்லப் பட்டனர். ஊர்வலம் மூன்று மைல் தூரம் சென்றது. லக்ஷக்கணக்கான ஜனங்கள் குதூகலமாய் வரவேற்றார்கள்.

11வது வர்ணாச்ரமசபைக்கூட்டம் டிஸம்பர் 27உ அன்று மாலை 2-30 மணிக்கு ஆரம்பமாகியது. அதற்கென்று ஸ்பெஷலாகப்போடப்பட்டிருந்த பந்தலில் பதினாயிரம் ஜனங்களுக்குமேல் கூடியிருந்தனர். பந்தல் வெகு விமரிசையாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. கூடியிருந்த ஜனங்களின் உற்சாகத்தையும், பக்தியையும் பற்றி எழுதஇயலாது. பிரார்த்தனை மிகவும் பக்தி நிறைந்ததாயும், உற்சாகத்தை அளிக்கக்கூடியதாயும் இருந்தது.

வரவேற்பு கமிட்டித்தலைவர் மிஸ்ராசாஸ்த்ரி சபையில் பேசினார். அவர் பேச்சு ரொம்பவும் கம்பீரமாக இருந்தது. மடாதிபதிகளும், மண்டலேச்வரர்களும் ஆசீர்வாதம் செய்தார்கள். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் [illegible] சார்யாருடைய [illegible] திலுடையதுமான ஸ்ரீமுகங்கள் கிடைத்தன.

ஸ்ரீபெஜோரியா பிரசிடெண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டார். பன்னிரண்டு பேர்கள் வெவ்வேறு மாகாணப்பிரதிநிதியாக பேசுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிரசிடெண்ட் குதூகல ஆரவாரத்தின் நடுவில் தன் ஆசனத்தில் அமர்ந்தார். அவர்தன் தலைமைப்பிரசங்கத்தை வெகு அழகாய் நிகழ்த்தினார். பிரசங்கம் ஒரு மணிக்கு மேல் நடந்தது.

பொறுக்குக்கமிட்டி மீட்டிங் நாளை காலை எட்டுமணிக்கு நடைபெறும். மறுபடியும் சபை நாளை மாலை 2 மணிக்கு ஆரம்பம்.

அல்லயன்ஸ் கம்பெனி பிரசுராங்கள்.

1. திருப்புகழ் பாராயண திருமுறை	1	4	0
2. நால்வர் சரித்திரம் காவிகோ	0	12	0
3. ,, ராப்பர்	0	10	0
4. பாரதசாரம்	1	2	0
5. ஸ்ரீ ராமாயண வினவிடை	1	8	0
6. பஞ்சாத்னம்	0	12	0
7. ஷண்முக விஜயம்,	0	12	0
8. ஸ்ரீபாலஷண்முக விஜயம்	0	8	0
9. ருக்மணி	0	8	0
10, தேசிங்குராஜன்	0	10	0
11. ராஜாதேசிங்கு	0	5	0
12. திருக்குறள் நீதிக்கதைகள்.	0	10	0
13. தசகுமார சரித்திரம்	0	6	0
14. திருப்புகழ் ரத்னமாலை	0	3	0
15. கந்தாலங்காரம்	0	2	0
16. திருஞான சம்பந்தர்	0	2	6
17. விசாரசன்மர்	0	3	0
18. மூர்த்தி நாயனார்	0	3	0
19. திருநாவுக்கரசர்.	0	2	0
20. குகன்.	0	4	0
21. திருவகுப்பு	0	4	0

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்தன ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்
பகுதான்யஸூ மார்கழிமீ 14உ

மலையாளத்தில் பிரசாரம்.

சென்னை மந்திரிகள் மெஜாரிடி பலத்தைக் கொண்டு ஆலயப்பிரவேச அநுமதிச் சட்டம் செய்ததை கவர்னரும் அங்கீகரித்து விட்டதாகத் தெரிகிறது. ஆதலால் ஸர்க்கார் மேற்கொண்டு செய்யவேண்டிய காரியங்கள் த்வரிதமாக ஆரம்பமாகிவிடும். இச்சமயத்தில்தான் தார்மிகர்களின் கடமை மிகப் பெரிதாக இருக்கிறது. ஆலயப்பிரவேசம், நடக்குமா, இல்லையாவென்பது பொதுஜன அபிப்பிராயத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. தார்மிக ஸமூஹமானது, ஏற்கனவே ஆலயப்பிரவேசக் கிளர்ச்சி நடந்த காலத்தில் காட்டிய எதிர்ப்பு உணர்ச்சியை இப்போது காட்டிக்கொள்வதாக நினைக்கமுடியவில்லை. எதிர்ப்புக் கூட்டங்களும் எதிர் அபிப்பிராயங்களும் மிகமிகக் குறைவாகவே இருக்கின்றன. காங்கிரஸ் மந்திரிகளுக்கு பூர்ண மெஜாரிடி பலமிருப்பதாலும், எவ்வளவு கண்டனம் செய்தாலும் அதைப் பொருள் படுத்தாமல் ஆலயப்பிரவேச் சட்டம் செய்துவிட அவர்கள் பிடிவாதம் கொண்டிருப்பதாலும், வீண் கண்டனங்கள் செய்வதில் பலனில்லையென்று தார்மிகர்கள் ஒழிவு அடைந்துவிட்டதாக நினைக்கவேண்டியிருக்கிறது. இது ஸரியன்று.

முன்னைவிட இப்போது நமது கக்ஷியைப் பொதுஜனங்களிடையில் வற்புறுத்தி வெற்றியடைய ஸௌகர்யமிருக்கிறது. இதற்காக ஜனங்களிடம் நாம் தகுந்த முறையில் பிரசாரம் ஆரம்பிக்கவேண்டும். மிகுந்த கட்டுப்பாட்டுடனும் உறுதியுடனும் மலையாளத்தில் தார்மிகர்கள் பிரசாரம் நடத்தினால் இந்த ஆபத்தைத் தவிர்த்துவிடலாமென்று அங்குள்ள தலைவர்கள் எண்ணுகிறார்கள். இதற்குப் பல விதத்திலும் உதவியளிக்கவேண்டியதே மற்ற ஜில்லா வாஸிகளின் பெருங்கடனாக இருக்கிறது.

தர்ம ஸம்ரக்ஷணத்திற்கென்றே அவதரித்துள்ள நமது ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகள் இவ்விஷயமாகத் தற்போது ஆரம்பித்துள்ள காரியமானது ஆஸ்திக உலகத்திற்கு தைர்யமூட்டுவதாயிருக்கிறது. மலையாள தேசத்தில் ஜனங்களிடையில் தீவ்ரப்பிரசாரம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பிரம்மஸ்ரீ தேநியூர் ஸுப்பிரமண்ய சாஸ்திரிகளையும், ஸ்ரீமான் காட்டே நாராயணராவ் அவர்களையும் கொண்டு அங்கு ஆலயப்பிரவேசத்திற்கு எதிராக பிரசாரம் ஆரம்பமாகிவிட்டது. இதுவரையில் அங்கு நடந்துள்ள பிரசாரத்திலிருந்து நமக்கு விசேஷ ஆதரவு ஏற்படுமென்று நம்பப்படுகிறது. ஸ்ரீஸ்வாமிகள் காட்டிய வழியை அநுஸரித்து அங்கு இன்னும் அநேக பிரசாரகர்கள் உதவி புரியப் போகவேண்டும். கேரளத்திலுள்ள நமது தலைவர்கள் ஸ்ரீயுத ஸர் கொல்லங்கோடு ராஜா, ஜாமொரின், டாக்டர் சங்கரநாராயண அய்யர் முதலியவர்களும் தீவ்ரமாகப்பாடுபட முன்வந்திருக்கிறார்கள். இச்சமயம் தென்னிந்தியாவிலுள்ள மற்ற தர்மாசாரியர்களும், ஆஸ்திக பிரபுக்களும் தங்கள் கடமையை உணர்ந்து பலவழிகளிலும் ஆதரவு புரிய வேண்டியது அவசியமாகும். காசியில் நடைபெறும் அகில இந்திய வர்ணாச்ரமமேளனத்திலும் இவ்விஷயம் கவனிக்கப்படுமென்று அறிகிறோம். வர்ணாச்ரம ஸங்கத்தாரால் நல்ல பிரசாரகோஷ்டியொன்றை நியமித்து கேரளம்முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்ய ஏற்பாடு நடக்குமென்றும் தெரிகிறது. ஸாத்யமானால் ஸ்ரீ புரி ஸ்வாமிகளையும் கேரளத்தில் சில மாதங்கள் தங்கும்படி பிரார்த்தித்து அழைக்கவேண்டுமென்று பலருடைய அபிப்பிராயம். இதை வர்ணாச்ரம ஸங்கத்தார் கவனிப்பார்களென்று நம்புகிறோம். மலையாளத்தின் ஜயாபஜயத்தைப் பொறுத்தே மற்ற ஜில்லாக்களின் கதி இருப்பதால் அங்கு தார்மிகர்களுடைய முழு பலத்தையும் காட்டி இந்த அதர்மம் தலையெடுக்க வொட்டாதபடி செய்யவேண்டியது மிக்க அவசியமானது.

இச்சமயத்தில் காங்கிரஸ் காரர்களுக்கு நாம் ஒரு எச்சரிக்கை செய்யவேண்டியது அவசியமாகிறது. மந்திரிகளின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் பாமிடீ என்பவர் கேரளத்தில் இந்தச் சட்டத்திற்கு ஆதரவாகப் பொது ஜனங்களிடம் பிரசாரம் செய்வதாகத் தெரிகிறது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது. விஷயத்தைப் பொதுஜனங்களின் முடிவுக்கு விட்டுவிட்ட பிறகு ஸர்க்கார் இதில் நடுநிலைமை வஹிக்கவேண்டியதே நீதியாகும். எல்லா வகுப்பாருக்கும் பொதுவாக இருக்கும் ஸர்க்கார் ஒருதரப்பாருடைய கக்ஷியை மட்டும் பிரசாரம் செய்ய என்ன நியாயம்? இப்போது ஒரு ஸர்க்கார் காரியதரிசி பொது ஜனப் பணத்திலிருந்து படிவாங்கிக்கொண்டு ஆலயப்பிரவேச பிரசாரம் நடத்துவதுபோல் இனிமேல் மற்ற காரியதரிசிகளும் மந்திரிகளும்கூட பிரசாரம் செய்ய முன்வரக்கூடும். இது முற்றிலும் ஆக்ஷேபிக்கத்தக்கது. ஸர்க்கார் மசோதாவைக் கரையேற்றவேண்டிய கடமை ஸர்க்காருக்கு இருப்பதாக வாதிக்க இவ் விஷயத்தில் இடமில்லை. மந்திரிகள் ஆலயப்பிரவேச பக்ஷபாதமுள்ளவர்களாயினும், அதிகாரச் சலுகையாலும், நிர்ப்பந்தத்தாலும் பொதுஜன அபிப்பிராயத்தை மாற்ற முற்படுவதாக நினைக்க இடம் கொடுக்கக்கூடாது. மேலும் ஏற்கனவே குருவாயூர் ரெபரெண்டம் எடுத்தகாலத்தில் காங்கிரஸ் தொண்டர்கள் பற்பல விஷமங்களைச் செய்ததாகப் புகார் ஏற்பட்டிருக்கிறது. இப்போது இரு கக்ஷியாரும் அங்கு பிரசாரம் நடத்துவதால் விஷமம் அதிகரிக்கவும் கலஹங்கள் ஏற்படவும் வழியுண்டு. இவ்விஷயத்திலும் ஸர்க்கார் பக்ஷபாதமின்றி தக்கப் பாதுகாப்புகளை ஏற்படுத்தவேண்டியது அவசியமாகும்.

காங்கிரஸுக்கு தேசத்தில் எதிர்ப்பு அதிகரித்து வருகிறது. எல்லா மாகாணங்களிலும் காங்கிரஸ் மந்திரிஸபையிடம் அதிருப்தி தோன்ற ஆரம்பித்துவிட்டது. முஸ்லிம்கள் காங்கிரஸை த்வேஷிக்கிறார்கள். மிதவாதிகள் முணுமுணுக்கிறார்கள். ஜஸ்டிஸ் கக்ஷியார் அதை வெறுக்கிறார்கள். தீண்டாதார் திட்டுகிறார்கள். ஹிந்து மஹாஸபையும் எதிர்க்கிறது. ஆர்யஸமாஜிகள் ஆதரிக்க மறுக்கிறார்கள். தார்மிகர்கள் அதைர்யமடைந்து நிற்கிறார்கள். அபேதவாதிகள் அமுக்கப் பார்க்கிறார்கள். எங்குபார்த்தாலும் காங்கிரஸ் த்வேஷம். எங்கும் ஒரே கண்டன மயம். இத்தகைய விபரீத ஸந்தர்ப்பத்தில் பிடிவாதமும் அஹம்பாவமும் அற்று தீர்க்காலோசனையுடன் தேச நன்மையை கவனிக்கவேண்டியதே காங்கிரஸ்காரர்களின் கடமையாகும்.

ஆகவே மலையாளத்தில் மந்திரிகளோ, மந்திரிக் கக்ஷியினரோ பிரசாரம் நடத்தக்கூடாது. தீண்டாதாருக்கு ஆலயப்பிரவேசத்தில் அதிக ஆதரவு ஏற்பட்டுவிட்டதாயும் அவர்கள் விழித்துக்கொண்டுவிட்டதாயும் கனம் பிரதமமந்திரி சொன்னார். இது உண்மையாயின் அங்குள்ள தீண்டாதார், பொது ஜனங்களிடையில் சென்று தங்களுக்கு ஆதரவளிக்கும்படி பிரசாரம் நடத்தட்டும். அதுவே முறை. தீண்டாதாரும், தார்மிகர்களுமே இதில் நேரில் ஸம்பந்தப்பட்டவர்கள். காங்கிரஸ் மந்திரிகள் நடுநிலைமை வஹிக்கவேண்டியவர்களே.

குறிப்புகள்.

மந்திரிகளின் நடுக்கம்.

சென்னை சட்ட ஸபையில் முஸ்லிம்களின் மதஸ்தாபனங்களைச் சீர்திருத்தும் நோக்கத்துடன் ஒரு மஹம்மதிய மெம்பர் ஓர் மசோதாவைக் கொண்டுவந்தார். முஸ்லிம்களின் அபிப்பிராயம் இதற்கு ஸாதகமாயிருக்கும் பக்ஷத்தில் இதை ஆதரிப்பதாக மந்திரிகள் சொன்னார்கள். அதன் மீது பொது அபிப்பிராயம் வாங்கப்பட்டதாகத் தெரிகிறது.

சில தினங்களுக்கு முன் இந்த மசோதா விவாதம் வந்த போது நமது மந்திரிகள் நடுங்கி விட்டார்கள். இதைச் சட்டமாக்க முடியாதென்றும், ஜன அபிப்பிராயம் இதற்கெதிராக இருப்பதாயும் சொல்லிக்கழித்து விட்டார்கள். மேலும் கவர்ன்மெண்டார் முஸ்லிம்களின் மத விஷயத்தில் பிரவேசிப்பது மனக்கசப்புக்கு இடமளிக்குமென்றும் சொல்லி விட்டார்கள். கடைசியாக இந்த மசோதா நிராகரிக்கப்பட்டு விட்டது.

ஏற்கனவே கிறிஸ்தவர்கள் மத விஷயமாக மதுவை உபயோகிக்க அநுமதிகொடுத்து ஸர்க்கார் விலக்குச் செய்ததையும் குறிப்பிட்டுள்ளோம்.

இம்மாதிரி சென்னை சட்டஸபையானது கிறிஸ்தவர் மஹம்மதியர் மத விஷயத்தில் பிரவேசிக்கவும், மத உரிமையைப்பறிக்கவும் நடுங்கி வருகையில் ஹிந்து மத விஷயத்தில் மட்டும் மிக்க தைர்யத்துடன் புகுந்து அதைச் சட்டமூலமாகக் குலைப்பது பிரத்யக்ஷமான பக்ஷபாதமல்லவா?

கனம் பிரதம மந்திரி ஆலயப்பிரவேச விவாதத்தின் போது பேசுகையில் ஸர்க்கார் கட்டாயமாக மதத்தில் பிரவேசித்துத் திருவார்களென்று பிரலாபம் செய்தார். அது அழுமூஞ்சிகளான ஹிந்துக்களைப்பற்றிய பிரவாதம்தான் போலும்! மஹம்மதியர், கிறிஸ்தவர் விஷயத்தில் இந்தகர்ஜனையைக் காணோமே? பலிக்காதென்பது நிச்சயமாகிவிட்டதே! இந்தப்படிப்பினையை நமது ஸமூஹம் உணரவேணும். நாமும் மற்ற மதஸ்தர்கள்போல் உயிரையும் விட மதத்தைப் பெரிதாக நினைக்கும் தீரர்களாயிருந்தால் நம்மிடமும் அவர்கள் பயப்படுவார்களன்றோ?

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Nellore.

ஆலயப்பிரவேசத்தைப்பற்றி ஸ்ரீ ஸரோஜனி

சென்னையில் நடந்த ராஜீய மஹா நாட்டில் தலைமை வஹித்த ஸ்ரீமதி ஸரோஜினி தமது அக்ராஸனப்பிரஸங்கத்தில் தீண்டாதார் ஆலயப்பிரவேசச் சட்டத்தைப்பற்றித் தெரிவித்துள்ள அபிப்பிராயம் கவனிக்கத்தக்கது.

> “தீண்டாதார் முன்னேற்றத்திற்காகச் சட்டம் இயற்றுவதில் பயனில்லை. உயர் ஜாதியாருக்கு மனமாற்றம் ஏற்பட வேண்டியதே முக்யம். திருவாங்கூரில் ஆலயப்பிரவேச உரிமை அளிக்கப்பட்டது. ஆயினும் அது என்னவாயிற்று? த்விஜர்களின் மனம் மாறி விட்டதா? ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனின் மனம் மாறும் வரையில் ஆலயப்ரவேசாதி சட்டத்தால் அபாயம் ஏற்படுமேயல்லது நன்மை கிடையாது,,

இவ்வாறு ஸரோஜினியார் பேசியதாகப் பத்திரிகைகளில் காணப்படுகிறது. இது உண்மையாயிருந்தால் ஆலயப்பிரவேசச் சட்டத்திற்கு இவர் எதிரி யென்றே நினைக்கக்கூடியதாயிருக்கிறது. தீண்டாமை விஷயமாக மனமாற்றம் அவசியம் ஏற்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்தப் பேச்சு வெளிவந்ததாகத்தெரிகிறதேயல்லாது, ஆலயப்பிரவேசத்தை எதிர்த்து வந்ததல்லவென்று சிலர் நினைக்கலாமாயினும், இவருடைய வார்த்தையை நன்கு ஊன்றி கவனித்தால் ஆலயப்பிரவேசச்சட்டமியற்றுவது அவஸரப்பட்ட செய்கையென்றே இவர் கருதுகிறாரென்பது தெளிவாகிறது. பக்குவ காலம் வருமுன்பே நிர்ப்பந்தச் சட்டம் செய்வது அபாயமென்று இவர் தெளிவாகத் தமது வார்த்தையில் குறிப்பிட்டிருக்கிறாரல்லவா? மேலும் திருவாங்கூர் ஆலயப்பிரவேசத்தினால், உத்தேசிக்கப்பட்ட நன்மை கிட்டவில்லையென்றும் அவர் சுட்டிக் காட்டுகிறார். ஸவர்ணர்களின் மனதில் மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. ஆகவே தீண்டாமை விலக்கு ஏற்பட்டு விடுமென்கிற மனோரதம் அங்கு பலிக்கவில்லையென்று ஸரோஜினி எடுத்துக் காட்டுகிறார். தீண்டாதார் கோவிலில் நுழைந்ததுடன் ஸவர்ணர்கள் கோவிலுக்குப்போவதைக்குறைத்துக் கொண்டு விட்டார்கள். இதனால் அங்கு தீண்டாமை வர்ஜிதப்பட ஹேதுவாகியதேயல்லது, அது விலகவில்லை.

இந்த நிலைமை எங்கும் ஏற்படக்கூடியதே. ரெபரண்டம் எடுத்து தீண்டாதார் பிரவேசத்திற்கு மெஜாரிடி கிடைத்து விட்டாலும், ஆயிரக்கணக்கான ஸவர்ண ஹிந்துக்கள் கோவில்களை பஹிஷ்கரித்து விலகி விடுவதை இது தடுக்காது. அப்போது தீண்டாமை விலக்கென்பது பகற்கனவாகவே இருக்கும். பெரும்பாலோரான ஸவர்ணர்கள் கோவிலை இழந்தாலும் இழப்பார்களேயல்லது தீண்டாமையை விலக்கஸம்மதிக்கப்போவதில்லை. இந்த அநுபவம் திருவாங்கூர் கோவிலிலிருந்து காங்கிரஸ் காரர்களுக்கு உண்டாயிருக்க வேண்டும். ஆதலால் சட்ட நிர்ப்பந்தத்தால் ஆலயங்களைத்திறந்து விட்டாலும், பலவிடங்களில் பூஜகர்கள் பூஜை செய்ய மறுக்கலாம். உத்ஸவங்களுக்கு உபயம் செய்கிறவர்கள் அதை நிறுத்திவிடலாம். ஸேவார்த்திகள் வருவது நின்றுவிடலாம். ஸ்வஸ்திவாசனம் முதலிய வைதிக காரியங்கள் செய்கிறவர் ஒதுங்கிவிடலாம். இவ்வாறாகப் பல வழியிலும் தேவாலயங்களின் நிலைமை பாழாகிவிடலாம். இதனால் தீண்டாமை ஓடிப்போய் விடுமா? காங்கிரஸ் மனோராஜ்யம் நிறைவேறுமா? ஒன்றுமில்லை. ஆதலால் தான் காந்திஜி உண்மையானமனமாறுதல் ஏற்படவேண்டுமென்றார். ஸரோஜினியும் இதையே சொன்னார். மந்திரிகளின் அவஸரச் செய்கையால் அபாயமே ஏற்படுமென்று ஸரோஜினி சொல்லியதன் உண்மை சீக்கிரத்தில் வெளியாகுமென்பதில் தடையில்லை.

நாஸ்திகனுக்குத் தமிழபிமானம் பொருந்துமா ?

கட்டாய ஹிந்தியை எதிர்த்து நமது மாகாணத்தில் நடக்கும் கிளர்ச்சியின் உள்நோக்கத்தை அறியாதவர் ஒருவருமில்லையெனலாம். ஹிந்தி எதிர்ப்புக்கு ராஜீய காரணமே உண்மையாயிருந்தும், தமிழ் பாஷைக்கு ஆபத்து வந்துவிட்டதாக ஜாலக் கண்ணீர் விட்டுப் பாமரர்களைக் கிளப்பிவிடுவது அக் கக்ஷியாரின் வேலையாயிருந்து வருகிறது. தமிழின் கௌரவமும் தமிழரின் நாகரிகமும் ஆங்கிலத்தால் அழிக்கப்பட்டு விட்டது அசைக்கமுடியாத விஷயமாகும். தமிழர் வீட்டின் சமையலறையில்கூட ஆங்கிலத்திலே பேசும் வழக்கத்தை இன்றும் கைகொண்டு தமிழைக் குழிதோண்டிப் புதைத்து வருகிறவர்களுக்கு திடீரெனத் தமிழபிமானமுண்டாகிவிட்டதென்றால் யார்தான் இதை நம்புவார்கள்? அதுவும் ஹிந்தியால் அது அழிந்துவிடுமென்பதும் குழந்தைகள் பேச்சாகவே இருக்கிறது. ஆதலால் இதில் ராஜீயக்காரணமே முக்யமென்பது வெட்டவெளிச்சமானது.

ஹிந்தி எதிர்ப்பு இயக்கத்தை நடத்துகிறவர்கள் சு. ம. கக்ஷியினரே. இவர்கள் அளவற்ற தமிழபிமானத்தைக்காட்டி ஹிந்தியை எதிர்ப்பதாக பாவனை செய்கிறார்களல்லவா? சு. ம. கக்ஷியார் தமிழ் பாஷையில் அபிமானம் காட்டுவது பொருத்தமாவென்ற கேள்வியொன்று இப்போது பிறந்திருக்கிறது.

சென்னையில் நடந்த அரசியல் மஹாநாட்டில் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை கண்டித்துச் செய்யப்பட்ட தீர்மானத்தை ஆதரித்த ஒருவர், தமிழ் பாஷையானது ஆஸ்திகர்களுக்கே சொந்தமென்றும், நாஸ்திக வாதிகளுக்கு அந்த பாஷையில் எவ்வித ஸம்பந்தமும் கிடையாதென்றும், ஆதலால் அவர்கள் தமிழுக்குப் பரிந்துபேச பாத்யமற்றவர்களென்றும் பேசியதாகத் தெரிகிறது. இந்த வார்த்தையில் சிறிது உண்மையிருப்பதாகவே நினைக்கவேண்டியிருக்கிறது.

பாஷையென்பது தனித்து நிற்கக்கூடியதல்ல. இப்போது நமது தேசத்தில் காணப்படும் உயர்ந்த தமிழ் நூல்கள் யாவற்றும் மத ஸம்பந்தமானவைகளே. மதம், கடவுள், பாப புண்யம் பரலோகம் இவையில்லாத தமிழ் நூலே இல்லையெனலாம். திருக்குறள், கம்பராமாயணம், பாரதம் போன்ற, தமிழுக்கு உயிரூட்டும் கிரந்தங்கள் யாவற்றும் மதஸம்பந்தமுள்ளவைகளே. தமிழை உயிரினும் பெரிதாக மதித்த நாயன்மார்கள், ஆழ்வார்கள், போன்றவர்களின் கிரந்தங்களும் ஆஸ்திக மதத்தையே போதிக்கின்றன. மதமின்றித் தமிழில்லை. ஆதலால் மதத்தையும் தெய்வத்தையும் வெறுப்பவர்கள் தமிழ்பாஷையைஎங்ஙனம் கொண்டாடுவது? நாஸ்திகவாதிகளின் தமிழபிமானம உண்மையானால் அவர்கள் மதத்தையும் கடவுளையும் ஒப்பாமல் எப்படி முடியும்? நாஸ்திகர் விரும்பாத, மதத்தையும், தெய்வத்தையும்பற்றிப் பேசும் தமிழ் இருந்தாலென்ன? இறந்தாலென்ன? தமிழில் நாஸ்திகருக்கு என்ன ஸம்பந்தம்? நாஸ்திகமதத்தைப் போதிக்கும் நூல்கள் தமிழில் உண்டா? மதத்தை எதிர்ப்பதும், தமிழை ஆதரிப்பதும் பரஸ்பரம் ஒவ்வாத கொள்கையல்லவா?

ஓர் தமிழன்.

கும்பகோணம்.

மண்டலேச்வர மடாதிபதி விஜயம்.

ஹரித்வாரத்திலுள்ள ஷடி ஸ்வாமிகள் தமது சிஷ்ய பரிவாரங்களுடன் சென்ற ஞாயிற்றுக்கிழமை கும்பகோணம் விஜயம் செய்து மஹாமஹக்குளம் அரமனை ஸத்திரத்தில் தங்கியிருந்தார்கள். இவ்வூர் பிரபல ஷராப் வியாபாரி ஸ்ரீமான் கனகஸபை செட்டியாரவர்கள் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு வேண்டிய ஸகல ஸௌகர்யங்களையும்செய்து கொடுத்ததுடன் ஒருநாள் பிக்ஷையும் நடத்திவைத்தார். ஜவளிக்கடை ஸ்ரீமான் ஸுப்ரமண்ய செட்டியாரும் ஒருநாள் பிக்ஷை செய்துவைத்தார்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் பெயர் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய, தார்சனிக ஸார்வபௌம, வித்யாநிதி, நியாயமார்த்தாண்ட, வேதாந்த வாகீச, பிரம்மநிஷ்ட, ஸ்ரீ ஸ்வாமீ மஹேச்வரானந்தஜீ என்பதாம். ஸ்வாமிகள் நல்ல பாண்டித்யம் பெற்றவர். அத்வைதத்தில் மஹாநிபுணர். ஸநாதனதர்ம அபிமானி. ஸ்வாமிகளுடன் சுமார் 40ஸன்னியாஸிகள் இருக்கிறார்கள். தினமும் பூஜைகளும், அத்வைத வேதாந்தமாகிற பாமதீ கிரந்த பாடமும் நடக்கிறது. ஸ்வாமிகளை தர்சிக்க எல்லா ஜாதியினரும் ஏராளமாக வந்துபோனார்கள். உள்ளூரிலுள்ள பிரபல கனவான்களும், பெரிய பண்டிதர்களும் வந்து ஸ்ரீ ஸ்வாமிகளுடன் அநேக விஷயங்களைப்பற்றி சர்ச்சை செய்தார்கள். ஸ்வாமிகள், தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தை பலமாக எதிர்க்கிறார். சண்டாள ஜாதியென்பது கர்மாவினாலும், ஜன்மத்தினாலும் ஏற்பட்டதென்பதை வற்புறுத்தினார். ஸ்வாமிகள் இவ்வூரிலுள்ள தேவாலயங்களில் ஸ்வாமிதர்சனம் செய்து கொண்டு ஸ்வாமிமலைக்குப் போய்விட்டு பாபநாசம் சென்றார். ராமேச்வர யாத்திரையாகப் போகிறார்.

ஒரு நிருபர்.

முஸ்லீம் லீக்கின் பயமுறுத்தல்.

காங்கிரஸுக்கு எச்சரிக்கை.

பாட்னாவில் ஜனாப்ஜின்னாவின் தலைமையில் முஸ்லீம் லீக் மஹாநாடு நடைபெற்றது. ஜின்னாவின் பிரஸங்கத்தில் வழக்கம்போல் ஹிந்துக்களையும், காங்கிரஸையும் பயமுறுத்திப் பேசப்பட்டது. காங்கிரஸானது ஹிந்துக்களின் ராஜ்யத்தை ஸ்தாபிக்க முயற்சிப்பதாயும் முஸ்லீம்களை அழித்துவிட நினைப்பதாயும் அவர் தாபம்போட்டுப் பேசினார்.

பஞ்சாப், வங்காள பிரதமமந்திரிகளும் மேற்படி தோரணையில் அங்கு பேசினார்கள்.

முஸ்லீம்களின் நன்மைக்கு விரோதமாகக் காரியம் நடத்தும் மாகாணங்களில் சட்ட மறுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டது.

வங்காள பிரதமமந்திரி இதற்கு தாம் முன்னிற்பதாக உறுதி கூறினார்.

ஸுபாஷ் போஸ் வரவில்லை.

காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் ஸுபாஷ் சந்திரபோஸ் வார்தாவில் காந்திஜியுடன் பேசச் சென்றார். அங்கு அவருக்கு ஜுரம் ஏற்பட்டு விட்டபடியால் தமிழ் தேசச்சுற்றுப்பிரயாணம் நிறுத்தப்பட்டு விட்டது.

யோக சாஸ்திர நிருபணம்.

இராமர் பஞ்சவடிக்கு போனது.

பஞ்சவடி யென்றால் ஐந்து ஆலமரங்கள் உள்ளவிடமாக ஏற்படுகிறது. அது கோதாவரிக்குச் சமீபத்திலிருப்பதாயும் சொல்லப்படுகிறது. அந்தப்பஞ்சவடியானது கோதாவரி தீரத்திலுள்ள நாஸிக் யென்பதாக சொல்லுகிறார்கள். ஆனால் அது இராமாயணத்தில் சொல்லியிருக்கிற விடத்திற்குப் பொருத்தமாக இல்லை. பஞ்சவடியில் காணாமல் போன ஸீதையை ஹநுமார் முதலானவர்கள் தெற்கே தேடிக்கொண்டு வெகு தூரம் போன பிறகு விந்தியமலைக்குப்போனதாயும் அங்கே ஸம்பாதியைக்கண்டதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் பஞ்சவடியானது விந்தியமலைக்கு வடக்கே வெகு தூரத்திலிருக்கவேண்டும். நாஸிக்கும் கோதாவரி நதியும் விந்திய பர்வதத்திற்கு வெகு தூரம் தெற்கே தள்ளியிருப்பதால் அவை இராமாயணத்தில் சொல்லிய பஞ்சவடிக்கும் கோதாவரிக்கும் பொருத்தமில்லை. கண்களுக்கு மேலிருக்கும் மனஸ் சக்கிரம் என்பதாக அர்த்தம் செய்தால் பொருத்தமாக இருக்கிறது. அந்த மனஸ் சக்கிரம் தான் சித்தமிருக்குமிடம். அதில் தான் விருத்திகள் உண்டாகிறது. அந்த விருத்திகள் யோக சாஸ்திரத்தில் 5 விதங்களாகச் சொல்லப் பட்டிருக்கிறது. "பஞ்சதய்யா விருத்தயஹ" என்றும் அவைகள் (1) பிரமாணவிருத்திகள் (2) விகல்ப விருத்திகள் (3) விபர்ய்ய விருத்திகள் (4) நித்ராயாகிற விருத்தி (5) ஸ்மிருதி என்ற விருத்தி என்றும் சொல்லப்படுவதால் ஐந்து வகை விருத்திகளை உடைய மனஸ் சக்கிரமே பஞ்சவடி. அதற்கு சமீபத்தில் கண் பிருப்பதால் கண்ணிலிருந்து வரும் ஜலம் கோதாவரி— "கோ" என்றால் கண் "தா" வென்றால் கொடுக்கிறது, வாரி யென்றால் ஜலம்— கோதாவரி யென்றால் கண் ஜலம் அதைத்தான் கோதாவரிநதியாகச்சொல்லப்பட்டிருக்கிறது, இந்த மனஸ்சக்கிரமாகிறபஞ்சவடியானது கண்களுக்கு மேலே யிருப்பதால் அகஸ்த்யர் இராமருக்கு பஞ்சவடிக்குப்போகும்வழி காட்டும்போது கண்ணாகிற தன் ஆச்ரமத்திலிருந்து பஞ்சவடிக்கு வடக்கு முகமாக போக வேணுமென்று சொன்னதும்பொருத்தமாகயிருக்கிறது.

பஞ்சவடியில் சூர்பனகை வந்ததும் இராமர் இராக்கதர்களைக் கோன்றதும்.

சூர்பனகையை வால்மீகி "காம ரூபிணீ" யென்று சொல்லி யிருக்கிறார். ஆகையால் அவள் காம விருத்தி. அது சித்தமாகிற பஞ்சவடிக்கு வரவும் யோக நிஷ்டை கலைத்து விட்டது. உடனே கெட்ட விருத்திகள் சித்தத்திற்கு வர ஆரம்பித்து விட்டது. அந்த கெட்ட விருத்திகள் யோக சாஸ்த்ரம் 1வது பாகம் 30, 31 சூத்திரங்களில் 14 ஆக சொல்லியிருக்கிறது சூர்பனகை தன்னை அவமானம் செய்ததை கரனிடம் சொல்லவும் அவன் முதலில் 14 இராக்கதர்களை அனுப்பியிருப்பதாக சொல்லப்பட்டது. அது 14 கெட்ட விருத்திகளுக்கு பொருத்தமாகயிருக்கிறது.

அந்த ஒவ்வொரு விருத்திக்கும் உட்பிரிவு ஆயிரம் விருத்திகளுண்டு. ஆகையால் பிறகு கரன் தூஷணன் திரிசிரஸ் இவர்கள் 14000 இராக்கதர்களுடன் யுத்தத்திற்கு வந்ததாகச் சொல்லியிருப்பது அந்த அநேக 14விதமான விருத்திகள் தான். அந்த விருத்திகளை இராமர் அடக்கினதை 14000 இராக்கதர்களைக் கொன்றதாக சொல்லப்பட்டிருக்கிறது.

இராவணன் மாரீசனுடன் பஞ்சவடிக்கு வந்து ஸீதையை இலங்கைக்குத் தூக்கிப்போனது.

மாரீசனாகிற மாயை "அது சித்தமாகிற பஞ்சவடிக்கு வரவும் ஞானமாகிற ஸீதை இராவணனாகிற இந்திரியங்களால் அபகரிக்கப்பட்டு மறைந்துபோனாள் இது "மாயயா அபஹ்ருத ஞாநஹ" மாயையால் ஞானம் அபகரிக்கப்படும் யென்றகீதா வாக்யத்திற்கு ஒத்திருக்கிறது. சித்தத்தில் ஏற்படுகிற விருத்திகளெல்லாம் மூலாதாரத்தில் போய் தங்கியிருந்து நினைத்தபோது சித்தத்திற்கு வருவதாக யோகிகள் சொல்லுகிறார்கள். அதற்கு ருஜுவாக ஒருவன் ஒருவிஷயத்தைப் பற்றி கவனமாய் வாசித்தபிறகு அவனுக்கு மூலத்தில் சூடு உண்டாவதாகச் சொல்லப்படுகிறது. அதன் காரணம் வாசித்த விஷயமான விருத்தியானது சித்தத்திலிருந்து மூலாதாரத்திற்குப் போயிருப்பதால் தான் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் சித்தமாகிற பஞ்சவடியில் காணாமல்போன ஸீதையாகிற பிரஹ்மவித்யை மூலாதாரமாகிற இலங்கையிலிருப்பது உசிதமே.

இராவணன்

இவன் 24 தத்வங்களில் எதுவென்று அறியவேண்டுமானால் இராவணனுடைய பரம்பரை தெரியவேண்டும். அது உத்திரகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் பிரஹ்மாவுக்கு புலஸ்தயன் என்று ஒரு பிள்ளை இருந்ததாயும் அவர் திருணபிந்து பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டதாயும் அவர்களுக்கு விச்ரவஸ் என்று ஒரு பிள்ளை பிறந்தது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பிள்ளை வேதம் படிக்கும்பொழுது பிறந்ததால் விச்ரவஸ் யென்று பெயர் என்று சொல்லப்படுகிறது. அவருக்கு மூத்த தாரத்திற்கு பிறந்த பிள்ளை வைச்ரவணனாகிய குபேரன். அந்த விச்ரவஸின் இரண்டாவது ஸ்திரீயாகிய கைகேசிக்கு இராவணன், கும்பகர்ணன், விபீஷணன் என்று மூன்று புத்திரர்கள் பிறந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. புல என்ற பதத்திற்கு "மஹத்" யென்று அர்த்தமானதால், புலஸ்த்யர் யென்பது மஹத்தத்வம். அவர்பெண்சாதி த்ருணபிந்து அது மஹத்தை தன்மாத்திரையாக மாற்றக் கூடிய வஸ்து. அதனால் அவர்கள் பிள்ளை விச்ரவசை தன்மாத்திரையாகச் சொல்லலாம் தன்மாத்திரை அதிக நுட்பமானதால் அதைப் பார்க்கமுடியாது அது யிருப்பதாக கேழ்விப்படலாம் ஆகையால் அதற்கு விச்ரவஸ் யென்று பெயர்தரும். தன்மாத்திரை ஸத்வ, இரஜஸ் தமஸ் யென்று மூன்று குணங்களுடன் கூடியதால் அவைகளை விச்ரவஸுக்கு மூன்று புத்திரர்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸத்வகுணம் விபீஷணர், இரஜோகுணம் இராவணன், தமோகுணம் கும்பகர்ணன். இராவணனை இரஜோகுணத்தோடுகூடிய பத்து இந்திரியங்களாயும் சொல்ல இடமிருக்கிறது. அத்யாத்ம இராமாயணத்தில் விபீஷணர் இராமரிடம் இராவணனுடைய உயிர்நிலை அவன் தொப்பிளில் யிருப்பதாகச் சொன்னதாக சொல்லப்பட்டிருக்கிறது. தொப்பிளிலிருப்பது மணிபூரகசக்ரம்.

மேலும் இராவணனுடைய பத்னிக்கு மந்த உதரி யென்று பெயர் ஆனதால் அதுவும் உதரத்திலுள்ள ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம் என்ற சக்ரங்களை குறிக்கிறது. அந்த இரண்டு சக்கிரங்களிலும் கெட்டவிருத்திகள் உண்டாகிறதாக ஷட்சக்ர நிருபணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த கெட்ட விருத்திகளெல்லாம் தங்குமிடம் மூலாதாரம். ஆனதால்தான் மூலாதாரமாகிற இலங்கையில் இராவணனிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இராவணனுக்கும் இந்திரியங்களுக்கும் ஸம்பந்தமிருப்பதாக மாரீசன் ஸூசிபிக்கிறான். அவனை இராவணன் ஸீதையை அபஹரிக்க ஸஹாயத்திற்கு கூப்பிடும்பொழுது அவன் இராவணனை கடிவாளத்திற்கு கட்டுப்படாத குதிரைகளைப்போல இருப்பதாக சொல்லுகிறான். —உபநிஷத்தில் மனதை கடிவாளமாயும் இந்திரியங்களை குதிரைகளாயும் சொல்லி இருப்பதால் இராவணனை மனதுக்குக் கட்டுப்படாத இந்திரியங்களைப்போல,அவன் மந்திரிகளுக்குக் கட்டுப்படாமலிருப்பதாகச் சொல்லி அவனைத் திட்டுகிறான். ஆகையால்தான் இராவணனை இரஜோகுணத்தோடு கூடிய இந்திரியங்களாயும் சொல்லலாம். அப்படி பின்வரும் சுலோகத்தில் சொல்லி இருக்கிறது. "விஷமே துரகா யிகா: மந்த ஸாரத யோயதா" இராவணன் இந்திரியங்களை ஜெயித்ததாக யுத்தகாண்டம் 114-வது ஸர்கம் 17-வது சுலோகத்தில் அவன் பெண்சாதி மண்டோதரி சொல்லி இருக்கிறாள். "இந்திரியாணி புரா ஜித்வா ஜிதம் | த்ருபுவனம் த்வயா" ஆகையால் இராவணன் இந்திரியங்களும் ரஜோகுணமும் என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

அய்யாத்துரை அய்யர்,

தர்மசாஸ்த்ர ஸந்தேஹம்.

பரிஸம்ஸ்கார விஷயத்தில் தெலுங்கு ஜாதியில் பிறந்த ஸந்யாஸிக்கு பந்துக்கள் யாருமில்லாததால் ஷடி ஸந்யாஸியிடம் மந்த்ரோபதேசம் பெற்றுக்கொண்ட தமிழ்ஜாதி சிஷ்யனைக்கொண்டு 13 நாளும் பரிஸம்ஸ்காரமும் மஹாபூஜையும் நாராயணபலியும் ஸ்ரார்த்தமும் ஆருதியையும் மாஸ ஆருதிகளும் நடந்துவருகிறதுகள். வருஷாந்தத்திலும் ப்ரதிவருஷங்களிலும் ஸ்ரார்த்தம் செய்துதான் ஆருதியை செய்யவேண்டுமா, அல்லது ஆருதியை மாத்திரம் செய்தால் போதுமா என்ற ஸந்தேஹம். சாஸ்த்ரஞ்ஞர்கள் தயவுசெய்து வாக்யத்துடன் ஸந்தேஹமற தர்மபரிபாலனைத்தை இந்த ஆர்யதர்ம பத்திரிகை மூலமாய் உபதேசிக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

மந்திரமூர்த்தி கிருஷ்ண சாஸ்திரிகள்.

கூட்டுத் தொகுதி வேண்டாம்.

சிவராஜின் கோபம்.

சென்னை தீண்டாதார் தலைவரான ஸ்ரீமான் சிவராஜ் என்பவர் ஹைதராபாத்தில் பேசகையில், இனிமேல் தீண்டாதாருக்குக் கூட்டுத் தொகுதி வேண்டாமென்றும், அதனால் அந்த ஸமூஹத்திற்கு கெடுதி அதிகரித்து வருவதாயும், தனித் தொகுதியே வேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறினாராம். புனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இவரே அதை இப்போது எதிர்க்கிறார்,

ஓர் அறிவிப்பு.

திருப்பூந்துருத்தி ஸ்ரீ நாராயண தீர்த்த குருஸ்வாமிகள் சரித்திரம் சென்ற ஏப்ரல்மீ மெது ஆர்யதர்மம் பத்ரிகையில் தொடர்ந்து நான்கு தினங்கள் பிரசுரிக்கப்பட்டதை வாசகர்கள் அறிந்திருக்கலாம். அந்நூலை பகவதடியார்கள் யாவரும் வாசித்து இன்புற வேண்டுமென ஓர் பிரார்த்தனையுடன் திருவாளர் அரியனூபக முதலியார் ஒரு புஸ்தகரூபமாக வெளியிடப்பட்டிருப்பதை அறிய நாம் சந்தோஷிக்கிறோம்.

புஸ்தகம் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ நாராயண தீர்த்த குருஸ்வாமிகள்
ஆஸ்ரமம் திருப்பூந்துருத்தி.

திண்டுக்கல்.

ஸ்ரீ பரசுராம ஜயந்தி.

ஷடி ஜயந்தி சென்ற 8-12-38 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீ ஜகத்குரு மடத்தில் விமரிசையாய் நடைபெற்றது. பூஜைக்குப் பிறகு ப்ரம்ஹஸ்ரீ K. தியாகராஜ தீக்ஷிதரவர்கள், B.A., L.T, "பரசுராமாவதார வைபவம்" என்பதைப்பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். உபன்யாஸகாரவர்கள் ஷடி அவதாரத்தின் காலத்தைப்பற்றியும் அக்காலத்திலுள்ள க்ஷத்ரியர்களாலேற்பட்ட உபத்ரவங்களைப்பற்றியும் எடுத்துரைத்து பிதுர் வாக்ய பரிபாலன தர்மத்தின் மேன்மையையும் அவர் செய்த கார்தவீர்யார்ஜுன ஸம்ஹாரத்தையும்பற்றி வெகு விரிவாகவும் அழகாகவும் உபன்யஸித்தார்கள்.

ப்ரம்ஹஸ்ரீ R. பாலஸுப்ரம்ஹண்ய ஐயரவர்கள் பகவான் நாராயணனின் அநேக அவதாரங்களில் தசாவதாரங்கள் விசேஷங்களென்றும், அவைகளில் ஸ்ரீ பரசுராமாவதாரமே "ப்ராம்ஹணஸ்ய ப்ராம்ஹணோ கதி:" என்ற பிரகாரம் ப்ராம்ஹணர்கள் எல்லோரையும் காப்பாற்றுவதற்காகவே அத்யாபி ஸஹ்யாத்ரிமலையின்மேல் பரசுவோடு தபஸ் செய்கிறார் என்றும், தான் தன்னுடைய தபஸ் சக்தியாலுண்டாக்கிய கேரளதேசத்தையும் தன்னால் ஸ்தாபிக்கப்பட்ட சிவ விஷ்ணவாதி தேவாலயங்களையும் ப்ராம்ஹண ச்ரேஷ்டர்களையும் ரக்ஷிக்கவே அவ்விடம் தபஸ் செய்கிறாரென்றும் விரித்துரைத்து, ஸ்ரீ ஸ்காந்த மஹா புராணாந்தர்கதமான ஸனத்குமார ஸம்ஹிதையிலுள்ள "ஸ்ரீ ஸஹ்யாத்ரிகண்ட"த்தில் கேரளதேச ப்ராம்ஹணர்களுக்கு "உங்களுக்கு எப்பொழுது கெடுதல்கள் நேருகிறதோ அப்பொழுது நீங்கள் எல்லோரும் என் பெயரை உரக்கக் கூப்பிடுங்கள். யான் அச்சமயமே என் பரசுவோடு வந்து உங்களுடைய கஷ்டங்களை நீக்குகிறேன்" என்ற 'ப்ரதிக்ஞை' செய்திருக்கிறார் என்றும், ஆகையால் தற்பொழுது கேரளராஜ்யத்திற்கு வந்துள்ள ஆலயப்ரவேச மசோதாவினின்றும் தப்பித்துக்கொள்ள எல்லோரும் பரசுராமனையே ஸ்மரிக்கவேண்டுமென்றும், ஆலயத்திலுள்ள பூஜகர்களும் தந்திரிகளும் பட்டர்களும் லோக க்ஷேமத்திற்காக தேவாலயங்களிலுள்ள தேவதைகளை "கலாகர்ஷணம்" செய்து பரிசுத்தமான மடம் முதலிய இடங்களில் ஸ்தாபித்து பூஜைசெய்வதே மேன்மையென்றும், பின்பு எவர்கள் வேணுமானாலும் ஆலயப்ரவேசம் செய்யட்டுமென்றும் நீண்டதோர் உபன்யாஸம் செய்தார்கள்.

விராட பர்வ ப்ரவசனம்.

இவ்வருஷம் ஸம்பவித்திருக்கும் அநாவிருஷ்டியின் உபத்ரவ நிவிருத்திக்காக இவ்வூர் மஹா ஜனங்களால் "விராட பர்வ ப்ரவசனம்" செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சென்ற ஒரு வாரமாக ஸ்ரீபெரும்புதூர் ப்ரம்ஹ ஸ்ரீவேங்கடேசாச்சார்ய ஸ்வாமிகளவர்கள் ஷடி ப்ரவனத்தை ஸ்ரீ அபிராமியம்மன் கோவிலில் செய்து வருகிறார்கள். ஆஸ்திகர்களனைவரும் சிரவணானந்தம் செய்து வருகிறார்கள்.

R. பாலசுப்ரஹ்மண்யன்.

பழுவூர்.

கீர்வாணவாணி பரிஷத்.

இச்சபையின் 4வது கூட்டம் 25-12-38 ஞாயிறு மாலை 3-30 மணிக்கு வேதபாடசாலைக் கட்டிடத்தில் ப்ரம்மஸ்ரீ S. V. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் உள்ளூரிலிருந்தும் பக்கத்து ஊர்களிலிருந்தும் அநேக ஆஸ்திக மகாஜனங்கள் வந்திருந்து கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். சபையின் ஆரம்பத்தில் வேதபாடசாலை மாணவன் யக்ஞேச்வரனுடைய மங்களாசரணத்திற்குப் பிறகு தலைவர் S. V. சுப்பிரமணிய சாஸ்த்ரிகள் சபையின் அபிவிருத்தியைக் குறித்து எடுத்துரைத்தார்கள். பிறகு கல்லிடைக்குறிச்சி K. S. வெங்கட்டராம சர்மா அவர்கள் "ஈச்வராஸ்தித்வம்" என்ற விஷயத்தை ஸம்ஸ்க்ருதத்திலும், தமிழிலும் எடுத்துரைத்தார்கள். பிறகு பழுவூர் முன்ஸிப் P. R. வெங்கட்டராம அய்யர் அவர்களால் "ஸத்ய மகிமை" என்னும் விஷயம் தமிழில் உபன்யஸிக்கப்பட்டது. பிறகு E. V. பரசுராம சர்மா அவர்களால் "உபநயனத்தின் முக்ய காலம்" என்ற விஷயம் விமர்சனம் செய்யப்பட்டது. பிறகு கந்தசாமி, சந்தானகோபால கிருஷ்ணன் என்ற இரு மாணவர்களால் சந்தியாவந்தனத்தின் ஆவச்யகத்தைக் குறித்து சிறு சம்பாஷணை செய்யப்பட்டது. பிறகு உள்ளூர் சிதம்பர அய்யர் ஸம்ஸ்க்ருத பாஷையை எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டும், என்ற உத்தேசத்துடன் "ஸம்ஸ்க்ருத பாஷையின் மேன்மை" என்னும் வியாஸத்தை உபன்யஸித்தார்கள். பிறகு காரியதரிசி P. R. நாகேச்வர சாஸ்த்ரிகளால் தலைவருக்கும் ஆஸ்திக மகாஜனங்களுக்கும் வந்தனம் தெரிவிக்கப்பட்டு கூட்டம் ஆனந்தத்துடன் கலைந்தது.

K. N நடேசசர்மா,

ஆஸ்த்மா வியாதி சிகித்ஸை.

நான் இருபது வருஷ காலமாய் ஆஸ்த்மா வியாதியால் கஷ்டப்பட்டு வருகிறேன். அதில் நான் அடைந்த அநுபவத்தை இந்த பத்திரிக்கை மூலமாய் அதே வியாதியால் கஷ்டப்படும் நேயர்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன். என் சிநேகிதர் ஒருவர் கருவேலன்பட்டை ரஸத்தை உட்கொள்ளும்படி சொன்னார். நானும் அப்படியே செய்ய எனக்கு மிகுந்த சௌகர்யம் கிடைத்தது. அதைச்சாப்பிடும் விதம் பின் வருமாறு:—

ஐந்து அல்லது ஆறு தோலாக்கள் கருவேலன் பட்டை('Acacia Arabica bark'தெலுங்கில் 'நல்லதும்மபட்டா', ஹிந்தியில் 'பாபுல்', குஜராத்தில் 'பாவல்') யை ஐந்து அவுன்ஸ் ஜலத்துடன் சேர்த்து நன்றாய் நசுக்கி அதின் சாரை எடுத்துக்கொள்ளவும். அதை சாதாரணத்துணியில் வடிக்கட்டி ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு தரம் ஒரு தடவைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் சாப்பிடவும். அந்த ரஸத்தை சூடு பண்ணக்கூடாது. நான் இதே வழியைக் கடைப்பிடித்து குணமடைந்தேன். பேசும்பொழுது ஏற்படும் கொரகொரப்பு சப்தம், தொண்டையில் ஏற்படும் துவைப்பு மூச்சு விடும் போது ஏற்படும் கஷ்டம் முதலான எல்லா தொந்திரவுகளும் இரண்டு அல்லது மூன்று தடவைகள் நான்கு நாட்கள் சாப்பிட்டவுடன் மறைந்து விட்டன. எனக்கு இராக்காலங்களில் அயர்ந்த தூக்கம் உண்டாயிற்று. இந்த ரஸம் வழக்கமாக சாப்பிட்டால் வியாதிஸ்தர்களுக்கு ஸ்திரமான குணம் ஏற்படுமென்று நம்புகிறேன். நான் வியாதிஸ்தர்களை எலுமிச்சம் பழம், புளி, மோர், தயிர், இவைகள் போன்ற துவப்பு பதார்த்தங்களை சேர்க்காமலிருக்கவேண்டுமென்று எச்சரிக்கின்கிறேன். நான் நிச்சயமாய் மேற்கண்ட முறை பலருக்கும் பயனளிக்குமென்று நம்புகிறேன்.

கோவிந்ததாஸ் சதுர்புஜதாஸ்
திவான்பகதூர்.

கும்பகோணம்.

ஸ்ரீ சக்கிரபாணி ஸ்வாமி கோவில்

நாளது வெகுதான்யஹு மார்கழிமீ 14 தேதி (29—12—38) வியாழக்கிழமை, ஸ்ரீ சக்ரபாணிஸ்வாமி கோவிலில் நடந்து வரும் பகல்பத்து 4-ம் திருநாள் உத்ஸவத்தைமுன்னிட்டு வழக்கம் போல் கே. தேசிகாசாரியர் உபயத்தில் ஸ்ரீ சக்ரபாணி ஸ்வாமிக்கு மோகனாவதார அலங்காரம் நடைபெறும். காலை 10-மணிக்கு திருமஞ்சனம். மாலை 6மணிக்கு ப்ரகாரப் பிரமணம். இரவு 8½ மணிக்கு மேல் பிரம்மஸ்ரீ T. N. ரகுநாத பாகவதர் அவர்களால் 'விபீஷண சரணாகதி' ஹரிகதா காலக்ஷேபம் என்று டிரஸ்டிகள் அறிவிக்கிறார்கள்

ஸம்ஸ்தானங்களில் கிளர்ச்சி.

நல்ல புத்தி உதயம்.

ஹைதராபாத்தில் ஹிந்துக்களும், ஆர்ய ஸமாஜிகளும் சேர்ந்து நடத்தி வந்த ஸத்யாக்ரஹமானது நிறுத்தப்பட்டு விட்டது. காங்கிரஸ் கார்யக்கமிட்டி செய்த தீர்மானத்தை அநுஸரித்தே இப்படிச் செய்யப்பட்டதாம்.

திருவாங்கூரில் வாபீஸ்.

அரசருக்கு அனுப்பிய மஹஜரில் திவானை அவதூறு கூறியவர்களின் மீது ராஜத்வேஷ வழக்கு ஆரம்பித்ததும், அதில் கையெழுத்திட்டவர்கள், காந்திஜி ஆலோசனையை அநுஸரித்து தாங்கள் அவதூறை வாபீஸ் வாங்கிக்கொள்வதாக முடிவு செய்து விட்டார்கள். சட்டமறுப்பையே நிறுத்திவிடும்படி காந்திஜி யோஜனை கூறியிருக்கிறார். இதை அநுஸரித்துத் திருவாங்கூரிலும் அமைதி யேற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மது விலக்கும் காந்திஜியின் அவஸரமும்.

ஸ்ரீமான் காந்தி தமது பத்திரிகையில் மது விலக்கைப்பற்றி ஓர் வியாஸம் எழுதியிருக்கிறார். மது விலக்கு விஷயமாக காங்கிரஸ் கவர்ன்மெண்ட் ஏற்பட்டும் கூட நல்ல முன்னேற்றமேற்படவில்லை யென்றும், காங்கிரஸ் மந்திரிகள் இதில் சரியாக சிரத்தை காட்டவில்லை யென்றும், மதுவின் மூலம் கிடைக்கும் பண வருமானத்தை காங்கிரஸ் ஸர்க்கார் கைவிடப்பயப் படுவதாயும் வேறு வழியில் வரி விதித்தாவது, வருமானத்தை ஸம்பாதித்துக்கொண்டு இந்தியா முழுவதும் ஒரே நாளில் மது விலக்கை நிறைவேற்ற வேண்டியது அவச்யமென்றும் காந்திஜி அவஸரப்படுகிறார்.

ராஜ்கோட்டில் வெற்றியாம்.

ராஜ்கோட் ஸம்ஸ்தானத்தில் நடந்து வந்த ராஜீயக்கிளர்ச்சியும் நிறுத்தப்படுமாம். அங்கு ஜனங்களின் விருப்பப்படி சீர்திருத்தங்களை வழங்க அரசர் ஸம்மதித்து விட்டார். ஸ்ரீ படேலும், திவானும் நீண்ட நேரம் பேசி இந்த ராஜீயை உண்டு பண்ணினார்கள்.

கள் குத்தகைக்கு மரம் விட மறுப்பு.

மதுரை ஜில்லா போர்டுக்கு உள்பட தென்னை மரங்களை கள் குத்தகைக்கு விடக்கூடாதென்று மேற்படி போர்டார் தீர்மானித்தார்கள். இதனால் போர்டுக்கு வருஷம் 5 ஆயிரம் ரூபாய் நஷ்டமேற்படுமாம்.

தத்துவ டீகையின் டிப்பணி.

ஒரு பெரிய தவறு.

(ஒரு மஹா மஹோபாத்யாயர் எழுதுகிறார்,)

நமது முதல் லேகனத்தில் டிப்பணியைப் பற்றி மூன்று விஷயங்களைச் சொல்லியிருக்கிறோம். இப்பொழுது சிலவற்றை எடுத்துக் காட்டுகிறோம்.

நாகரலிபி தத்வடீகை புதிய பதிப்பின் 66ம் பக்கத்தில்

मीमांसा इति । "माङ् माने" इत्यत्र सन्नन्तत्वं निपात्य वा, "मान पूजायाम्" इत्यत्र वा "मान्बध" इत्यादिना अनिच्छासन्नन्तोऽयं शब्दः । .... भाक्तो मीमांसाशब्दः என்று வாக்கியம் இருக்கிறது. தெலுங்குலிபிப் புஸ்தகத்திலும், கோடம் பாக்கம் நாகரப் பதிப்பிலும் இவ்வாறே வாக்யம் காணப்படுகிறது. மூன்று பதிப்பிலும் பெரிய பெரிய வ்யாகரண பண்டிதர்களுடைய ஸம்பந்தம் உண்டு. மேலே காட்டிய வாக்கியத்துக்கு அர்த்தம் என்ன? வாக்கியம் சுத்தமானதுதானா? "ஸன்னந்தத்வம் நிபாத்யவா" என்று இருந்தால் பிறகு "அநிச்சாஸன்னந்தோயம்" என்பது சேருமா? என்பதை ஒரு பதிப்பாசிரியரும் ஆராய்ந்து பார்த்ததாகத் தெரியவில்லை. இந்தப் பாடம் அசுத்தம் என்று தோன்றினால், அதனைத் தெரிவித்து ஒரு டிப்பணியோ, சுத்தபாடமாகக் கருதினால் இந்தக் கடினஸ்தலத்தில் வாக்யார்த்தத்தைத் தெரிவிக்கும் ஒரு டிப்பணியோ எழுதவேண்டாமா? அல்லது இது வெகு ஸுலபமான இடம் என்று நினைக்கப்படுகிறதா? சென்னை நாகர புதிய பதிப்பின் 6ம் பக்கத்தில் "ஒரு சகாரம் இருப்பது உசிதம்" என்று மிகவும் ஸூக்ஷ்மமாக ஆராய்ந்து பாட நிச்சயம் செய்ய டிப்பணி எழுதிய பதிப்பாசிரியர் இங்கு மௌனமாயிருந்தது ஏனோ?

உண்மையில், முன் காட்டிய டீகையின் வாக்யத்தில் "ஸன்னந்தத்வம்" என்பது அசுத்தம். "நாந்தத்வம்" என்று இருக்க வேணும். இந்த வாக்கியம் அடியில் காட்டப்படும் பாமதியைப் பின் பற்றியது. ஸ்ரீ வாசஸ்பதிமிச்ரருடைய வாக்யத்தின் கருத்தை "கல்பதரு" "பரிமளம்" "ருஜு ப்ரகாசிகை" இவைகளிலிருந்து அறிந்துகொள்ள வேணும். ஸ்ரீபட்டோஜிதீக்ஷிதர் இந்த பாமதியின் கருத்தை சப்தகௌஸ்துபத்தில் (சௌகாம்பா எடிஷன் 776ம் பக்கம்) வேறு விதத்தில் வெளியிட்டிருக்கிறார். இந்த ஆவச்யக ஸ்தலத்துக்கு டிப்பணி எழுதாமல்விட்டது பெரும் குறையே.

பாமதியில் காணும் வாக்யமாவது—

नान्तत्वं निपात्य "माङ् माने" इत्यस्माद्वा "मान पूजायाम्" इत्यस्माद्वा धातोः "मान्बध" इत्यादिना अनिच्छार्थे सनि व्युत्पादितस्य मीमांसाशब्दस्य पूजितविचारवचनत्वात्, ज्ञानेच्छावाचकत्वात् जिज्ञासापदस्य । प्रवर्तिका हि मीमांसायां जिज्ञासा स्यात् ॥

தத்வடீகையில் (66ம் பக்கம்) ஸ்ரீ ஸ்வாமி எடுத்திருக்கிற "மீமாம்ஸாஸம்ஜ்ஞிதஸ்தர்க:" என்றதுக்கு மேலுள்ள உத்தரார்த்தத்தையும், இந்த சுலோகத்தின் கருத்தையும், ஸ்ரீவாசஸ்பதிமிச்ரருடைய தாத்பர்ய டீகையிலிருந்து (விஜயநகரம் ஸீரீஸ் எடிஷன் 42ம் பக்கம்) தெரிந்து கொண்டால், கோடம்பாக்கம் புஸ்தகத்தில் 70வது பக்கத்தில் காணும் பாடத்தின் தவறுதலும், இந்த சுலோக விஷயமாக கொஞ்சகாலம் முன்பு பத்திரிகைகளில் நடந்த கோலாஹலத்தின் வீணை போக்கும் எளிதில் புலப்படும்.

புதிய பதிப்பில் 6வது பக்கத்தில்

"अत्र इतेरनन्तरं चकार उचितः'

என்று ஒரு டிப்பணி காணப்படுகிறது. விஷயமோ, க்ரந்தமோ, ஸ்தலமோ, வெவ்வேறாகவிருந்தால், அதை எடுக்கும்பொழுது, தனித்தனியாகவே எடுத்து, தனித்தனியாகவே இதிகரணம் செய்வதுண்டு. ஸ்ரீஸ்வாமி எடுத்திருக்கும் ந்யாயஸுதர்சன சுலோகமும், மேல்வாக்யமும் ஒரே இடத்தில் சேர்ந்தே இருக்கின்றன. (கோடம்பாக்கம் எடிஷன் 31-ம் பக்கம் பார்க்க.)

विशिष्टा अत्र दीतिः विदीतिः निर्णयः । स तु विचारतः। यथाहुः "धर्मे.... पूरयिष्यति,, इति। उक्तं च न्यायसुदर्शनेह "ज्ञायमाने तु ....क्रियते" इति

என்பது தத்வடீகை. தாம் சொன்ன விஷயத்துக்கு உபஷ்டம்பகமாக "தர்மேப்ரமீயமாணே..............என்பதையும் ஸுதர்சனத்தையும் ஸ்ரீஸ்வாமி காட்டியருளினார். முதல் சுலோகத்தின் கர்த்தா வேறாகையால் அந்த சுலோகம் முடிந்தவுடன் "இதி" என்று சேர்த்துச் சொல்ல வேண்டியதுதான். ஸுதர்சனத்தின் சுலோகமும் வாக்யமும் ஒரே இடத்தில் சேர்ந்திருப்பதாலும்; இரண்டும் சேர்ந்து முன் கூறிய விஷயத்துக்கு உபஷ்டம்பகப்ரமாணமாவதாலும், ந்யாயஸுதர்சன சுலோகம் முடிந்தவுடன் "இதி" என்பது எதற்கு? ஆவச்யகமேயன்று. சுலோகம் முடிந்ததும் இதிகரணம் செய்வது வழக்கமாகையாலும், முதல் சுலோகம் முடிந்தவுடன் இதிகரணம் செய்திருப்பதைப் பார்த்தும் லேககர்கள் இரண்டாம் சுலோகம் முடிந்ததும் ஒரு இதியைச் சேர்த்திருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆராய்ந்து பார்த்து இப்படி ஒரு டிப்பணி எழுதினால் உசிதமாயிராதா?

இந்த டிப்பணியை அநுஸரித்தோ என்னவோ கோடம்பாக்கம் பதிப்பில் (31-ம் பக்கம்) "இதி ச" என்றே பாடம் போடப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

கும்பகோணம்.

ஓர் ஹரி கதா காலக்ஷேபம்.

21--12--38 மாலை 6 மணிக்கு நமது நகர் ஸ்ரீஜகத் குரு சங்கராசாரிய ஸ்வாமிகள் ஸ்ரீமடத்தில் ஸ்ரீமான் எஸ் குப்புசாமி ஐயர் அவர்களின் ஆதரவில் பிர்மஸ்ரீ வாதி ராஜ பாகவதர் அவர்களால் "லக்ஷ்மண சக்தி" என்ற ஹரி கதை பக்கவாத்தியங்களுடன் செய்யப்பட்டது. அன்னார் மைசூர், கத்வால் முதலிய ஸமஸ்தானங்களில் ஸன்மானமும் மெடல்களும் பெற்று ரேடியோமூலமும் இருமுறை ஹரிகதை செய்திருக்கிறார். ஜனங்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர். பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர். ஸங்கீதமும் பேசும் திறமையும் தற்கால நாகரீகத்திற்கேற்றவாறு அமைந்திருக்கிறதென்றும் கொண்டாடப்பட்டது. ஆருத்ரா தரிசனத்தன்று ஸ்ரீஆதிகும்பேசுவரர் ஆலயத்தில் ஷை பாகவதர் அவர்களைக் கொண்டு "நந்தனார்" ஹரிகதை நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நிருபர்.

டி. ராமகிருஷ்ணய்யங்கார் எழுதியது.
ஆண்டாள் திருமணம். 0 8 0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ. வெ. னோ. சர்மா.)

இனிமையான சொல்! சென்னை முடிசூடா மன்னராய் விளங்கிய ஸ்ரீ S. சீனிவாஸய்யங்காரை ராஜ்ய உலகிற் கிழுக்க பலத்த முயற்சி நடக்கிறது. அவர் அரசியல் வாதிக்குறிய போராசை கண்டிப்பு கிருத்ரிமம் இம் மூன்றுமென்னிடமில்லை என்கிறார்!!

மாளவ்யாவையும் மதிக்கவில்லை! பல முறை கூறியும் மாணவர்மறியல் வேலையிலிறங்கினாராம்! இதற்கு முழுப்பொறுப்பாளி காந்திஜி!

இரண்டு லக்ஷம் தர்மம்! நாகூரில் ஓர் தனிகர் வைத்யசாலை கட்ட ஷை உதவினார். தர்மத்தை கேட்டாலும் கண்டாலும் போற்றினாலும் புண்யம்!

புதுச்சேரி கொலை! மிக தர்மிஷ்டரான ஓர் வியாபாரியை கவர்னரைப் பார்த்துவிட்டு வரும்போது ஒரு சிறுவன் சுட்டுக் கொன்று தானும் சுட்டுக்கொண்டான்! கவர்னர் முதல் எவருமே கண்ணீர் விடாதவரில்லை. அவர் மிக்க தர்மிஷ்டராம்! தனிகராம்!!

பிராமணவேஷ திருடன்!! ஓர் துலுக்கன் மன்னார்குடியில் பிராமண வேஷம் பூண்டு கடைத் தெருவில் திரிந்தானாம்! அவன் பல முறை திருடி சிக்ஷை அடைந்தவனாம்! அதிதி பூஜை செய்வோருக்கு எச்சரிக்கை!!

சிறிது பயம் வேண்டாமா? தஞ்சை கல்வி அதிகாரி உபாத்யாயர் மாணவரை பிரம்பாலடிக்கக் கூடாது! பெஞ்சுமீது ஏற்றக் கூடாது! வெளியில் நிறுத்தக்கூடாதென உத்திரவிட்டிருக்கிறார்!!

கடவுளுக் கடித்தபடியே கலி! விக்ரான (லைசென்ஸ்) மகாநாட்டில் ஓர் வெள்ளையர் கூறிய சொல்லிது! இந்தியரே?

நல்ல உத்திரவு! ஜின்னா, லீக்மெம்பர்கள் காங்கிரஸை ஆமோதிக்கும் அனைத்தன்பரோடு பேசக்கூடாதென உத்திரவிடுகிறார்!

பெண் போலீஸ்! ஸர். ஸி. பி. ஆளுகையில் திருவாங்கூரில் 12 பெண் மக்கள் போலீஸ் காரியாக நியமிக்கப்பட்டார்கள்!

ஸ்ரீ வரதரின் அரிய சொல்! ஜஸ்டிஸ் வரதாசாரியார் கடலூரில் ஓர் ஸபையில் (காபிக் கடையல்ல!) பெண்களைத் தனியே வீட்டில் விட்டுப் போகாதே? வேண்டுமானால் அவளுடன் அங்குபோ என்றார்!

அர்த்தத்தை கொல்லாதே! அரியக்குடி ஸ்ரீ ராமாநுஜம் புதுக்கோட்டை ஸங்கீத ஸபையில் பாடகருக்குச் செய்த உபதேசமிது!

தொத்துநோய் வாரம்! இம்மாதக் கடைசியில் ஆங்காங்கு பற்பல பேர் ஊரில்லாத ஸபைகள் மகாநாடு கூடும்! வேடிக்கை!!

மூன்று ஜதை சண்டை கர்ஜனை! பிரன்ஸ பணியாரிடில் இடாலி படையெடுப் போமென்கிறது! அமெரிக்கா ஜர்மனியிடம் மன்னிப்பு கேட்கமாட்டேனென்கிறது! ருஷ்யாவும் ஜப்பானும் உறுமுகிறது!

பாபமே காரணம்!! சென்னைமுதல் கடலூர்வரை ஆங்காங்கு காலமழை இல்லாமல் பூமி வரண்டு பயிர் கருகி குடிதண்ணி இல்லாமல் குடிகள் தவிக்கின்றனர். ராஜா குடிகள் அனைவரும் அதர்மத்திலிறங்கியதே காரணமென தார்மிகர் கூற்று!

N. ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள். பிரசுரங்கள்.

சிவநிர்மாலா.	0	4	0
ராமாஷ்டோத்தரம்.	0	1	0
சங்கரபகவத்பாதாள்.	0	8	0
தமிழ் சேக்ரோக	0	4	0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம்
லிமிடெட், கும்பகோணம்.

புராணக் கதைகள்.

பரசுராமர் வரலாறு.

(முன் தொடர்ச்சி.)

ஹேஹய தேசத்தரசனான க்ருதவீர்யனுக்கு அர்ஜுனன் என்ற குமாரன் ஒருவன் இருந்தான். அவன் மிகுந்த பராக்ரமசாலி. தத்தாத்ரேயரின் அநுக்ரஹத்தால் அவன் ஆயிரங்கைகளை யடைந்து பெரிய சக்ரவர்த்தியாயிருந்து அச்வமேதமென்னும் யாகம் செய்தான். அந்த யாகத்தில் ஏழு த்வீபங்களுடன் கூடிய பூமியை பிராமணர்களுக்குத் தானம் செய்தான். ஒரு ஸமயம் அக்னி பகவான் அதிக தாகத்தால் அர்ஜுனனை யாசித்தார். அர்ஜுனன் அக்னிபகவானுக்குப் பல ராஜ்யங்கள் பட்டணங்கள் கிராமங்களைப் பிக்ஷையாகக் கொடுத்தான். அக்னி பகவான் ராஜாவின் ப்ரபாவத்தால் தனக்குக் கிடைத்தவைகளை தஹிக்கத் தொடங்கினார்.

அப்போது மஹாத்மாவான வஸிஷ்டமஹரிஷியின் ஆச்ரமும் எரிக்கப்பட்டு விட்டது. வஸிஷ்டர் கோபங்கொண்டு இதற்கு மூல காரணமான அர்ஜுனனை அவன் கைகள் பரசுராமரால் அறுக்கப்படும் என்று சபித்தார். அர்ஜுனன் வஸிஷ்டரது இந்த சாபத்தைப் பொருட்படுத்தாமலிருந்தான். இச்சாபம் காரணமாக அர்ஜுனனது புத்திரர்கள் தந்தையின் வதத்திற்கு மூலமானார்கள். அவர்கள் தகப்பனுக்குத் தெரியாமல் ஜமதக்னி ரிஷியின் ஆச்ரமத்திலிருந்த பசுவின் கன்றை ஓட்டிவந்து விட்டார்கள். அக்காரணத்தால் ஜமதக்னியின் குமாரரான பரசுராமருக்கும் அர்ஜுனனுக்கும் சேர்ந்த பெரிய யுத்தத்தில் அர்ஜு[illegible] பரசுராமர் அறுத்துவிட்டார்.

பிறகு பரசுராமர் அர்ஜுனனது அந்தப்புரத்திலிருந்த கன்றுக்குட்டியைத் தன் ஆச்ரமத்துக்கு ஓட்டிவந்தார். அப்போது அர்ஜுனனது புத்திரர்கள் ஒன்றுகூடி பரசுராமர் ஸமித்தும் குசமும் கொண்டுவருவதற்காக வெளியே போயிருந்த ஸமயத்தில் ஜமதக்னியின் பாரியை பார்த்துக்கொண்டிருக்கும் போதே, அவர் தலையை அறுத்துத் தள்ளினார்கள்.

தநுர் வேதத்தில் வல்லவரான பரசுராமர் அந்தச் செயலைக் கேட்டு பிரளயகாலாக்னியின் தன்மையுள்ள கோபத்துடன் 'பூமியை க்ஷத்திரிய ஜாதி அற்றதாகச் செய்கிறேன்' என்று சபித்துத் தன் ஆயுதமான பரசுவைக் கையிலெடுத்து பூமியை க்ஷத்திரியஜாதியற்றதாகச் செய்து வனம் சென்றார்.

பின்னொருக்கால் யயாதிபதனம் என்னும் க்ஷேத்திரத்தில் ஒரு யாகம் நடந்தது. அதில் விச்வாமித்திரர் போன்ற பராவஸு, பரசுராமர் முதலியவர்கள் கூடினர். அப்போது பராவஸு என்பவர் பரசுராமரை நோக்கி 'பொய்யான சபதஞ்செய்த நீர் உம்மைப் புகழ்ந்து பேசுகிறீர். இப்போது இங்குள்ளவர்களில் ப்ரதர்தனன் முதலியவர்கள் க்ஷத்திரியர்கள் என்று உமக்குத் தோன்றவில்லையா? நூற்றுக்கணக்கான க்ஷத்திரியர்கள் இப்பூமியில் நிரம்பவும் நிறைந்திருக்கிறார்கள். இவர்களுக்குப் பயந்து நீர் மலையில் குடிபுகுந்திருக்கிறீர். என்று இழிவாய்ப் பேசினார். பராவஸுவின் வார்த்தையைக் கேட்டதும் பரசுராமர் மறுபடி க்ஷத்ரியநாசம் செய்தார். கர்ப்பத்திலிருந்த க்ஷத்ரியர்களால் மறுபடி பூமி நிறைந்தது. மறுபடியும் அழித்தார். இவ்விதம் இருபத்தொரு முறை க்ஷத்ரியர்களை அழித்து முடிவில் அச்வமேத யாகம் செய்து யாகாந்தத்தில் இந்தப் பூமியைக் கச்யபருக்குத் தக்ஷிணையாகக்கொடுத்தார். கச்யபர் தக்ஷிணையைப் பெற்றுக்கொண்டு மீதியான க்ஷத்ரியர்களைக் காக்க வெண்ணங்கொண்டு நீர் தென்கடற்கரையை நோக்கிச் செல்லவேண்டும். எனது தேசத்தில் நீர் இருப்பது நியாயமன்று. இப்பூமியை நீர் எனக்குத் தக்ஷிணையாகக் கொடுத்துவிட்டதால் இதை மறுபடி நீர் பெற அதிகாரமுள்ளவரல்ல" என்று சொன்னார். பரசுராமர் உடனே அவ்விடம் விட்டுச் செல்ல ஸமுத்திரராஜன் அவரிடம் பயந்து மேற்றிசையில் சூர்ப்பாகரம் என்னும் ஒரு தேசத்தை உண்டுபண்ணி அவருக்குக் கொடுத்தான். கச்யபர் தானமாகப் பெற்ற பூமியைப் பிராமணர்களுக்குக் கொடுத்துவிட்டுத் தான் வனம் சென்றார்.

S. இராமசந்திரஹரி:

வெளியூர்ச் செய்திகள்.

மேல்மங்கலம்.

வருணஜபம்.

ஷை கிராம மஹாஜனங்களால் பஹுதான்ய-௵ கார்த்திகை-௴ 26௳ ஞாயிற்றுக் கிழமை முதல் மார்கழி-௴ 6௳ புதன் கிழமை முடிய 11 தினங்களிலும் தேசக்ஷேமார்த்தமாக பிருஹந்நாயகி ஸமேத ஸ்ரீ மாயாபாண்டேச்வரர் கோவிலில் சித கும்பம், மஹந்யாஸபூர்வமாக அபிஷேகம் நதியில் வருண ஜபம் முதலியவைகளும் ஸ்ரீ ரங்கநாதர் கோவிலில் ஷை 11 நாட்களிலும் ருக், யஜுஸ், ஸாமவேத பாராயணங்களும் கடைசிதினம் பிராம்மண ஸந்தர்ப்பணம் ஸ்வாமி புறப்பாடும் சிரத்தாபக்தியுடன் நடத்தப்பெற்றது.

மார்கழி-௴ 6௳ புதன்கிழமை மாலை 3-30 மணிக்கு ஆஸ்திக மஹாஜனசாரியத் தலைவர் பிரும்ம-ஸ்ரீ பிலாஞ்சேரி சுப்ரமணிய அய்யர் அவர்கள் தலைமையின்கீழ் சபை கூடிற்று. அக்கிராசனர் வேதபாராயண மஹிமையைப் பற்றியும் பிரம்ம-ஸ்ரீ கோமடம் சங்கரகனபாடிகள் ஆலயமஹிமைப்பற்றியும் பிரம்மஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் தெய்வ ஸான்னித்யம் பற்றியும் விரிவுரை நிகழ்த்தினார்கள். சபையில் மலையாள ஆலயப்ரவேச மசோதாவைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சபை காரியதரிசியால் வந்தனம் கூறப்பட்டு மாலை 5-30 மணிக்கு சபை இனிது நிறைவெய்தியது. கிராமத்தில் பிரம்ம-ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகளால் ஸ்ரீமத் ராமாயணம் பிரதிதினம் மாலை 3 மணிமுதல் 5-மணிவரை பிரவசனம் செய்யப்பட்டு வருகிறது.

சிவராம கனபாடிகள்.

காளையார்கோவில்.

ஸநாதன பிரசங்கம்.

15—12—38 வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு காளையார் கோவிலில் ஸந்நிதித் தெருவில் ஸநாதனதர்ம ஸபை கூடிற்று. பிர்ம-ஸ்ரீ ராமசேஷு தீக்ஷிதர் அவர்கள் அக்கிராஸநம் வகித்தார். வீரபாண்டி K. R. ஸதாசிவபிர்மம் அவர்கள் "ஸத்தியவிருதம்" என்கிற விஷயத்தைப் பற்றி மிகவும் விமரிசையாய் உபந்நியாஸம் செய்தார்கள். அநேக ஜனங்களும், அநேக வித்யார்த்திகளும் வந்திருந்து கேட்டு மிகவும் பரமானந்தத்தை அடைந்தார்கள். மாலை 6 மணிக்கு சபை முடிந்தது.

ஷை மகா-ள-ஸ்ரீ K. R. சதாசிவப்பிர்மம் அவர்கள் கிராமங்கள் தோறும் விளம்பரங்களை பிரசுரப்படுத்தி உபந்நியாஸம் செய்து வருவது ஜனங்கள் எல்லோராலும் மிகவும் கொண்டாடத்தக்கது.

ஒரு நிருபர்.

சென்னை.

அத்யாத்ம ராமாயண பட்டாபிஷேகம்.

சென்னை எழும்பூர் போஸ்டல் ஆடிட் ஆபீஸ் கொமாராக்ஷி சுப்ரமணிய அய்யரவர்கள் கிருஹத்தில் சென்றவாரம் ஸ்ரீ அத்யாத்ம ராமாயண பட்டாபிஷேகம் பூர்த்தியாயிற்று. ஷை ராமாயண பிரசங்கம் சென்ற இருபது மாதங்களாக தினந்தோறும் வெகு அழகாய் திருவசநல்லூர் இராமமூர்த்தி சாஸ்திரிகள், பி. ஏ. (ஹைகோர்ட் உத்யோகம்) உபன்யாசம் செய்து வந்தார்கள். தினந்தோறும் 2 மணிக்கு குறையாமலும் உபன்யாஸங்கள் நடைபெற்றன. கேட்டவர்கள் மனதை அபஹரிக்கும் தன்மையாயும் பக்தி ரஸத்தை ஊட்டுவதாயும் இருந்த உபன்யாசங்களின் மேன்மையை எடுத்துரைப்பது சாத்யமன்று. அத்யாத்ம ராமாயணத்துக்கும் வால்மீகி ராமாயணத்துக்கும் பேதங்களிருப்பன போல் தோன்றும் என்றும், வால்மீகத்தில் அத்யாத்ம ராமாயணத்துக்கு த்வனி இருப்பது என்றும் நம் சாஸ்திரிகள் கொள்கை. இதற்காக இவ்விரு கிரந்தங்களையும் வெகு விரிவாக எடுத்துக் காட்டினார். வால்மீகியின் பூர்வாச்ரம சரிதம், மாயா சீதையின் உத்பத்தி, ராவணன் பக்தியின் பொருட்டே சீதையைத் தூக்கினான் என்பதும் ராமேச்வரத்தில் சிவபூஜை ராமர் செய்தார் என்பதும் போன்ற மற்ற வித்யாசங்களும் வால்மீகியின் சம்மதம் என்றும் பல மேற்கோள்களோடு அபூர்வமாக உபந்யாஸம் செய்தார். ராமரிடம் பக்தியை உண்டுபண்ணுவதற்கு அத்யாத்மத்தைத் தவிர வேறு கிரந்தம் இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம் என்பதே நமது உபன்யாஸகரது துணிபு. இராம ஹ்ருதயம், ராம கீதை என்ற இரண்டு சர்கங்களுக்கு அநேக வியாக்கியானங்கள் உள்ளன. வடநாட்டில் அத்யாத்ம ராமாயணப் பதிப்புகள் பல உள. தமிழ் நாட்டில் இனி அத்யாத்ம ராமாயணத்தை பரவச் செய்வதே தன் ஆயுசின் கடமையென்று கைக்கொண்டுள்ள நம் உபந்யாஸகர் நீடூழி வாழவேண்டும். பட்டாபிஷேகம் வெகு விமர்சையாய் நடைபெற்றது.

எ. எஸ். நடராஜ அய்யர்.

துகிலி.

விராட பர்வ கதா ப்ரவசனம்.

சென்ற 25 நாட்களாக இவ்வூர் அக்ரஹாரத்தில் ஆர்யவித்யா ப்ரபோதினி சம்ஸ்க்ருத பாடசாலை உபாத்யாயர் ப்ரஹ்மஸ்ரீ "வியாகரண சிரோமணி" K. S. வெங்கடராம சாஸ்திரிகளைக்கொண்டு விராடபர்வ கதா ப்ரவசனம் செய்யப்பட்டு நேற்றைய மார்கழி-௴ 8௳ வெள்ளிக்கிழமை உத்திராபிமன்யு விவாஹமும் நடைபெற்று ஷை சாஸ்திரிகளுக்கு தகுந்த மரியாதை செய்யப்பட்டு இனிது முடிவுபெற்றது.

சு. ராமஸ்வாமி அய்யர்.

Books by Mr. S. Aiyadurai Iyer.

	R.	A.	P.
Advaida Siddhantham	0	8	0
Ramayana as an illustration of Yoga Sastra	0	8	0
Bharatham & Bhagavatham in the light of Yoga Sastra	0	4	0
போதமதபோதினி	0	4	0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தன ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல்ரோடு,
கும்பகோணம்.

215263

அநாவசியமாக ஏன் - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

முடிகொண்டானில் ஸநாதனதர்ம பிரஸங்கம்.

சென்ற 5—12—38 ஸோமவாரம் முதல் 11—12—38 பானுவாரம் வரையில், ஏழு தினங்களாய், இவ்வூரில் உள்ள "ஸ்வயம் பிரகாசானந்த ஸரஸ்வதி" பாடசாலையில் ஆஸ்திக மஹா ஜனங்களின் ஆதரவில் ஸநாதன தர்மத்தில் விசேஷ ஆஸக்தியுள்ளவர்களும், தமது ஆயுட்காலத்தை முழுதும், ஸநாதனதர்ம பிரசாரத்தில் செலவு செய்யக் கருதி, சென்ற சில வருஷங்களாய் ஊர் ஊராய் அழையாமலே சென்று, ஸபை கூட்டி, பாமர ஜனங்களை ஆஸ்திக்யத்தில் திருப்ப இயன்றவரை முயற்சிப்பவரும், மதுரை ஸேதுபதி ஹைஸ்கூலில் ஸம்ஸ்க்ருத பண்டிதராகவுமிருந்த, வித்வான் பிரும்மஸ்ரீ மதுரை M. N. சுப்ரமணிய சாஸ்திரிகள் அவர்கள் தினந்தோறும் மாலை 3–30 முதல் 5–30 மணிவரையில் ஸநாதனதர்மங்களைப் பற்றி அழகாக உபந்யஸித்தார்கள்.

அன்னார் பிரஸங்கத்தின் ஸாராம்சமாவது:—

இப் பூமியில் ஸர்வேச்வரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஸமஸ்த ஜீவராசிகளில் முக்யமாய் மானிடப்பிறப்பின் ஔன்னத்யத்தையும், அதிலும் விசேஷித்து நான்குவித வர்ணங்களில் முதலாவதாகிய பிராம்மண ஜன்மமடைந்தவர்களின் பெருமையையும், இவ்வுத்தம ஜன்மாவை நாம் அடைந்து, நம் இஹலோக, பரலோக ஸுகானுபவங்களுக்கும், பிராம்மணோத்தமர்களை துன்பங்களின்று காப்பாற்றுவதற்கும், முக்ய ஸாதனீபூதமான தர்மாசரணங்களுக்கு மூலகாரணங்களாய் விளங்குபவைகளும், ஆதியந்தமில்லாதவைகளும், அழிவில்லாதவைகளும், ஆதிமூலத்தையே தொடர்ந்து நிற்பவைகளுமான, நம் வேதங்களை ஸர்வேச்வரன், பாச்சாத்திய முதலான இதர தேசத்தவர்களுக்கு கிடைக்கக்கூடாததாய், இப் பாரத பூமியில் ஜனித்த பிராம்மணோத்தமர்களிடத்தில் மூலதனமாய் ஒப்படைத்த பெருமையையும், அவ்வித உத்தமமான மூலதனமாகிய வேதத்திற்குள், பரமோத்க்ருஷ்டமான காயத்ரியாதி மஹா மந்திரங்களான மதிப்பிடத்தகாத ரத்னங்களின் உயர்வையும், பின்னும், என்னதான் பிராம்மணனாய்ப் பிறந்தாலும் जन्मना जायते शूद्रः என்றபடி காயத்ரீ உபதேசத்திற்குப் பிறகே பிராம்மணனாகிறான் என்பதையும், இவ்வளவு பெருமையையும் வகித்த வேதத்தை த்விஜனாய் ஜனித்த ஒவ்வொருவரும் அத்யயனம் செய்யவேண்டிய ஆவச்யகத்தையும், வேதங்களில் ஸ்தூலங்களாய் சொல்லப்பட்ட தர்மங்களையே, சுருதி ஸ்ம்ருதிகளும் புராண இதிஹாஸங்களும் விரிவாய் கூறுகின்றனவென்றும், நமது ஸ்ம்ருதிகள் ஒன்றே, நம்மை தூங்கி எழுந்தது முதல் ஆகாராதி நித்ரைபோகும்வரையில் நாம் செய்யவேண்டிய ஒவ்வொரு காரியங்களுக்கும் "நீ இன்னின்ன விதமாய்த்தான் செய்யவேண்டியது" என்று நம்மை பலவந்தமாய் நம் ஸௌகர்யா ஸௌகர்யங்களையும் கொஞ்சமாவது நினையாமல், அதற்கு வேண்டிய விதிகளை ஏற்படுத்தி, அவ்வித ஆசாரங்களின்படி அனுஷ்டிப்பவர்களுக்கு இகலோக பரலோக ஸாதனங்களைப் போலவே, ஆயுர்வேததத்வங்களுக்கனுஸரணையாக ஸுகஜீவியாய் நீண்ட ஆயுளுடன் வஸிப்பதற்குண்டான மார்க்க ரஹஸ்யங்களை கூறுவதுபற்றியும், மேல்கண்ட ஸ்ம்ருத்யாசாரப்படி நாம் அனைவரும் கர்மடர்களாய் இருந்துகொண்டு, ஸ்நான ஸந்தி ஜப ஹோமாதிகள் செய்து ஈச்வரானுக்ரஹமடைந்து, நமது ஜன்மாவை மோக்ஷஸாதனமாக செய்துகொள்ளவேண்டியது அவச்யமென்றும், பேசினார்.

மேலும், இவற்றை நாம் இக்காலத்தில் ஸரிவரச் செய்யாததினாலேதான் பாபம் மேலிட்டு, நம்முடைய தர்மத்திற்கே இப்போது பெரிய ஹானி ஏற்பட்டுவருகிறதென்றும், ஸமூகத்தை முன்னுக்குக் கொண்டுவருகிறதாக சொல்லும் முற்போக்குக்காரர்கள், அதிலும் பிராம்மணர்களே, நமது மதத்திற்குக் கோடரிக்காம்பாக ஏற்பட்டு, தர்மத்தை அடியோடு வீழ்த்துகிறார்கள் என்றும், நம்முடைய தர்மங்களில் முக்யமாய் சொல்வது ஸ்த்ரீதர்மம் என்றும், புருஷர்களுக்கு உபநயன ஸம்ஸ்காரம் எப்படியோ, அதுபோல் ஸ்திரீகளுக்கு விவாஹமென்றும், அதைக்கெடுக்க சட்டஸபைகளில் மெஜாரிட்டி பலத்தைக்கொண்டு "சாரதாசட்டம்" "புனர்விவாஹம்" "விவாகரத்து", "விதவா விவாஹம்" முதலிய மத ஸம்பந்த விஷயங்களில் சட்டம் ஏற்படுத்தும் அக்ரமங்களைப்பற்றியும், இது போதாதென்று இப்போது நடைபெறும் காங்கிரஸ் ராஜ்யத்தில், ஆலயங்களைப் புனிதமாகச் செய்யவேண்டுமென்று அஹோராத்ரமாய் அரும்பாடுபட்டு மலையாளம் ஜில்லாவில் தற்சமயம் ஆலயப்பிரவேச மசோதா, சட்டசபையில் நிறைவேற்றியதுபற்றி மிகவும் கண்டித்தும், மேலும், ஆலயப்பிரவேசமானது ஆகமசாஸ்திரங்களில் இன்னின்னவர்கள், இன்னின்னவிடங்களில் இருந்துகொண்டுதான், ஸ்வாமி தெர்சனம் செய்யவேண்டுமென்றும், இன்னவர்கள்தான் பூஜை செய்யவேண்டுமென்றும், இவர்களே தான் ஸ்வாமியின் அருகே போகலாமென்றும், மற்றவர்கள் போகக்கூடாதென்றும், ஆனால் பூஜை செய்கிறவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்களல்லவென்றும் ஆனதால் எல்லாக்காரியங்களுக்கும் ஆசாரப்படி வரைமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும், மெஜாரிட்டி பலத்தைக்கொண்டு தனக்குத் தோன்றிய யுக்திப்படி மத ஸம்பந்தங்களில் சட்டம் செய்வது நியாயமற்றதென்றும், தவிர

இவ்வித அநாசாரங்கள் மேலிட்டு இருக்கும் இக்காலத்திலும், ஸநாதனியான ஒரு பிராம்மணன் ஸ்வகர்மானுஷ்டத்தில் ஈடுபட்டு ஆநுபூர்வமாய் "இப்படி தர்மத்திற்கு லோபம் ஏற்பட்டு விட்டதே" என்று மனதார ஈச்வரனை துதித்தால் கடவுளுடைய கிருபை நமக்கு கண்டிப்பாய் ஏற்படாமல் போகாதென்றும், ஆனதால் அனைவரும் ஸ்வகர்மானுஷ்டானங்கள்செய்துகொண்டு ஈச்வரனை அனவரதம் பூஜிக்கவேண்டுமென்றும்,

பின்னும். நமது மனஸ் சுத்திக்குக் காரணம் ஆஹாரநியமமென்றும், அவ்வித ஆஹாராதிகளில் சாஸ்திரங்களில் நிஷேதித்தவைகளை விலக்கி, கால நியமங்களையும் கைக்கொண்டு, ஆயுர்வேதசாஸ்திரிகளும், உயர்ந்த டாக்டர்களும் சரீரத்திற்கு மிகவும் கெடுதல் என்றே கூறும் "காபி" "டீ" முதலிய லாகிரி கொடுக்கக்கூடியதான பானங்களை கூடுமானவரையில் விலக்கிக்கொள்ளவேண்டுமென்றும், இதனால் சரீர ஸௌக்யம் ஏற்படுவதும் தவிர, குடும்பச் செலவும் பெரும்பாதிக்குமேல் குறைந்து குடும்பங்கள் முன்னுக்கு வருமென்றும்,

முடிவாய் நமது கிராமங்களில் பிராம்மணர்கள் ஒற்றுமையாய் இருக்கவேண்டியது அவசியமென்றும், விவாஹாதிகள், வியவஹாரங்கள் இதுகளில் செலவை ரொம்பக் குறைக்கவேண்டுமென்றும், கிராமங்களில் அடிக்கடி தர்மப்ரவசனங்கள் செய்யும்படி முயற்சிக்கவேண்டுமென்றும், புராணச்ரவணங்களில்தான் தருமம் வேரூன்றி நிற்குமென்றும், இதே மாதிரி இன்னும் பல தர்மங்களையும் விரிவாய் எடுத்துக் கூறி सर्वे जनास्सुखिनो भवन्तु, என்பதற்கிணங்க ஈச்வரானுக்ரஹத்தினால் ஸமஸ்த ஜனங்களும், கெட்ட மார்க்கங்களில் ப்ரவிர்த்தியன்றியில் ஸுகஜீவிகளாகயிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு, மங்களகரமாய் உபந்யாஸத்தை முடித்தார்கள்.

ஆஸ்திகர்கள் அனைவரும் அன்னவரை மிகவும் ஆதரித்தும், அன்னவரின் குணாதிசயங்களைப் பாராட்டியும், முடிவில் வந்தனோபசாரங்கள் கூறியும் கொண்டாடினார்கள்.

இவ்வித தர்ம கைங்கர்யங்களில் ஈடுபட்டு விளங்கா நிற்கும் நமது புண்ய புருஷர் அநேக திருடகாத்ரராய் நீடூழி வாழ பராசக்தியான மீனாக்ஷி கடாக்ஷ விசேஷத்திற்கு துதிப்போமாக. ஒரு நிருபர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd, Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.